செம்மொழி இலக்கியங்களில் பல்துறை அறிவியல் சிந்தனைகள்

பயிலரங்கப் பயிற்சி உரைகளின் கட்டுரைத் தொகுப்பு

2018 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 முதல் பிப்ரவரி 10 வரை

ஒருங்கிணைப்பாளர்

முனைவர் மு.பழனியப்பன்

தமிழ்த்துறைத்தலைவர்,அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

திருவாடானை

நிகழிடம்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை, 623407

இராமநாதபுர மாவட்டம்

தமிழும் அறிவியலும்

முனைவர் மு.பாண்டி,தமிழ்த்துறைத் தலைவர்,அழகப்பா பல்கலைக்கழகம்,காரைக்குடி

தமிழ்மொழி தொன்மை வாய்ந்த மொழி. அதனுள் பல்வகை, பல்வேறு இலக்கியங்கள் எழுந்துள்ளன. இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கால அளவில் வளர்ந்துவரும் தமிழ்மொழியில் அதன் இலக்கியங்களில் பல்வேறு பதிவுகள் காணப்படுகின்றன. மொழியியல், இலக்கணவியல், இலக்கியவியல், அழகியல், அறவியல், பண்பாட்டியல், அறிவியல் போன்ற பல்துறை சார் பதிவுகள் தமிழ் இலக்கியங்களில் பதிவு செய்யப்பெற்றுள்ளன. குறிப்பாக செம்மொழி இலக்கியங்கள் காலத்தாலும், கருப்பொருளாலும், வெளிப்பாட்டுத் தன்மையாலும், பல்துறை இயல் சார் அறிவின் பதிவுகளாலும் தனித்திறம் பெற்று விளங்குகின்றன.

‘‘முதலாவதாகத் தமிழ்மொழி மிகுந்த பழமைச் சிறப்பு வாய்ந்த மொழி. ஏனைய தற்கால இந்திய மொழிகளின் இலக்கியங்களுக்கெல்லாம் காலத்தால் மிகவும் முற்பட்ட, ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் முற்பட்ட பேரிலக்கியங்களைக் கொண்டது தமிழ்மொழி. தமிழில் மிகப் பழம்பெரும் நூல் தொல்காப்பியம். தொன்மைக்காலக் கல்வெட்டுக்களிலிருந்து இந்நூலின் பகுதிகள் காலத்தால் மிக முற்பட்டவை எனவும், ஏறத்தாழ கி.மு. 200க்கு முன்பே இந்நூல் எழுந்துள்ளது எனவும் தெரிகிறது. பழந்தமிழரின் பேரிலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் ஆகும். அவை பத்துப்பாட்டும் எட்டுத்தொகை நூல்களும் பிறவும் ஆகும். அவை ஏறத்தாழ கி.பி. முதல் இரு நூற்றாண்டுகளில் எழுந்தவை எனக் கொள்ளலாம். அவை வடமொழியில் காளிதாசரின் பேரிலக்கியங்கள் தோன்றுவதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்னமே தோன்றிவிட்டன. மதச் சார்பற்ற இந்தியாவில் முதன் முதலில் எழுந்த மதச் சார்பற்ற பெருங்கவிதைத் தொகுப்பு சங்கஇலக்கியங்கள் என்றால் அது மிகையாகாது”[1] என்ற ஜார்ஜ் எல். ஹார்டுவின் கருத்துத் தமிழ்ச்செம்மொழி இலக்கியங்களின் தன்மையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

தமிழுக்கும் அறிவியலுக்குமான தொடர்பினை ‘‘திருவள்ளுவர் காலத்திற்குச் சில ஆயிரம் ஆண்டுகள் முன்னர் தொடங்கி, கிழக்கிந்திய கம்பெனி நம்நாட்டில் காலூன்றிய காலம் வரை தமிழர் பல துறைகளிலும் சிறந்தோங்கித் தனி ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். ... நதிகளின் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும், பாசன முறை, நெருப்பை உண்டாக்கிக் கட்டுப்பத்திப் பயன்படுத்தும் திறன், விலங்குகளை அடக்கியாண்டு அவற்றைப் பணிகளுக்குப் பயன்படுத்தும் நுட்பம், உலோகங்களைப் பிரித்தெடுத்துப் பயன்படுத்துதல். உழவு, உழவுக் கருவிகள்,

---

[1] ஜார்ஸ், எல். ஹார்டு, தமிழின் செம்மொழித் தகுதி பற்றிய அறிக்கை, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு மலர், ப.43

பயணங்களுக்குச் சக்கரங்கள் கொண்ட வண்டிகளை உருவாக்குதல், நெசவு, மண்பாண்டம் வனைதல், போர்த்துறை நுட்பங்கள், கட்டிடக் கலைகள், நகரமைப்பு, அரசாட்சி முறை, நாவாய் அமைத்தல், செலுத்துதல், மொழியியில், மருத்துவம், காலநிலை அறிதல், வானவியல் போன்ற துறைகளிலும் இன்னபிற துறைகளிலும் நம் முன்னோர் ஆளுமை செலுத்தி வந்ததை அகழ்வாய்வுகள் வாயிலாகவும், இலக்கியங்களின் வாயிலாகவும் அறியலாம் "[1] என்ற கருத்து தமிழின் செம்மொழி இலக்கியங்களில் காணப்படும் அறிவியல் கூறுகளை எடுத்துரைப்பதாக உள்ளது.

எனவே செம்மொழி இலக்கியங்கள் அறிவியல் கண் கொண்டு நோக்கத்தக்கனவாக விளங்குகின்றன. செம்மொழி இலக்கியங்களில் பல்துறை சார் அறிவியல் செய்திகள் காணப்படுகின்றன.

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரும் பூவின்
இதழகத் தனைய தெருவும், இதழகத்து
அரும் பொகுட்டனைத்தே அண்ணல் கோவில்"

என்ற பரிபாடல் அடிகளில் தமிழர் கட்டடக் கலையின் நுணுக்கம் பெறப்படுகிறது. தாமரைப் பூவைப் போல மதுரை மாநகர் அமைந்திருந்தது என்பது இவ்வியலக்கியம் காட்டும் பதிவாகும்.

தாமரைப் பூவின் இதழ்கள் போல தெருக்கள் அமைந்திருந்தனவாம். அதாவது ஊரின் மையப்பகுதியில் ஆலயம் அமைந்திருக்க அது பூவின் பொகுட்டாக அமைய, அதனை மையப்படுத்தி நெருக்கமாகத் தெருக்கள் அமைந்திருந்தன என்பது இதன்வழி பெறப்படும் நகரக் கட்டமைப்பாகும்.

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப் புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து"2

என்ற அகநானூற்றுக் குறிப்பின்படி, செங்கற் கோயில் சங்க காலத்தில் கட்டப்பட்டிருந்தது என்பதை அறியமுடிகிறது. இவ்வாறு இன்றைக்கு நவீனமாக வளர்ந்துள்ள கட்டடக் கலையின் உயரத்திற்குத் தமிழர்கள் அன்றே அடிக்கல் நாட்டியுள்ளனர் என்பதை உணரமுடிகின்றது.

பதிற்றுப்பத்து நூலில் ஒரு மருத்துவக் குறிப்பு காணப்படுகிறது.

---

[1] ப. ஐயம் பெருமாள், தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள், உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டு மலர், ப. 965

[2] மா. சந்திரமூர்த்தி, கட்டக்கலை, உலகத்தமிழ்செம்மொழி மாநாட்டு மலர், ப. 158

‘‘மீன்தேர் கொட்பின் பணிக்கயம் மூழ்கிச்

சிரல் பெயர்ந்தன்ன நெடுவள் ஊசி

நெடுவசி பரந்த வடுவாழ் மார்பு ”

என்ற பதிற்றுப் பத்து அடிகளில் மீன்கொத்திப் பறவை நீரில் விழுந்து விரைந்து எழுந்து செல்வதைப் போல கிழிந்த தோல் பகுதியானது ஊசி கொண்டு தைக்கப்பெற்றநிலை காட்டப்பெறுகிறது. இவ்வகையில் அறுவைச் சிகிச்சையின் முன்னோடியாகத் தமிழர் விளங்கினார் என்பது தெரியவரும்.

சங்க இலக்கியங்களில் வானவியல் செய்திகள் பெருமளவில் காணப்படுகின்றன. ‘நெடுநல்வாடை போன்ற சங்க இலக்கியங்களில் ஆடு போல தோற்றம் கொண்ட மேட உடுக்கணமே முதலாவதாகச் சுட்டப்படுகிறது. ஆடு என்ற பொருள் தரும் ஏறு என்னும் பழந்தமிழ்ச் சொல்லே ஏரீஸ் என்றானது”1 என்று தமிழர் வானவியல் திறத்தைக் குறிக்கிறார்.

‘‘பங்குனி உயர அழுவத்துத்

தலைநாள் மீன் நிலை திரிய

நிலைநாள் மீன் அதன் எதிர் ஏர்தர

தொல்நாள்மீன் துறைபடிய”2

என்ற பாடல் நட்சத்திரங்களின் இயக்கங்கள் பற்றிக் குறிக்கிறது. தலைநாள் மீன், நிலைநாள்மீன், தொல் நாள்மீன் என்று தமிழர்கள் விண்மீன்களுக்குப் பெயர் சூட்டியுள்ளனர்.

‘‘விசும்பு நீத்தம் இறந்த ஞாயிற்று

பசுங்கதிர் மழுகிய விந்து வாங்கு அந்தி”3

என்ற பாடலில் அந்திமாலையின் வருகை அறிவியல் கண் கொண்டுப் பதிவு செய்யப்பெற்றுள்ளது. இவ்வாறு பல்வேறு வானியல் செய்திகள் செம்மொழித்தமிழ் இலக்கியங்களில் பதிவாக்கம் பெற்றுள்ளன.

நாடு உருவாக்கப்பெற்ற நிலையை

‘‘காடு கொன்று நாடு ஆக்கி

குளந்தொட்டு வளம் பெருக்கிப்

---

[1] நெல்லை சு. முத்து, சிந்துவெளித் திராவிடர்களின் வானவியற் சிந்தனைகள், உலகத்தமிழ்ச் செம்மொழி மாநட்டு மலர், ப.571

[2] கூடலூர்க் கிழார், புறநானூறு, பாடல்எண். 229

[3] புறத்திணை நன்னாகனார், புறநானூறு, பாடல்எண். 376

பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கிக்

கோயிலோடு குடிநிறீஇ

வாயலோடு புழை அமைத்து

ஞாயில் தொறும் புதை நிறீஇப்”1

என்ற நிலையில் நாடு ஆக்கிய நன்முறை காட்டப்படுகிறது. இன்றைய நகரமைப்புத் திட்டங்களுக்குத் தமிழன் போட்டுத் தந்த முந்தையத் திட்டம் இதுவாகும். இவ்வகையில் நகர் அமைப்பு அறிவியலும் தமிழர் கொடையாக விளங்குகிறது.

உணவியலும் தமிழர்க்கு உரியதாக இருந்துள்ளது.

‘‘ முள்ளரித்து இயற்றிய வெள்ளரி வெண் சோறு

வண்டுபடக் கமழும் தேம்பாய் கண்ணித்”2

என்ற நிலையில் மருத நில உணவினைக் காட்டுகிறது மலைபடுகடாம்.

பொறிகள் பலவற்றையும் தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

‘‘வினைபுனனம் நிழத்தலின் கேழல் அஞ்சிப்

புழைதொறும் மாட்டிய இருங்கல் அரும்பொறி

உடைய ஆறே நள்ளிருள் அலரி

விரிந்த விடியல வைகினிர் கழமின்”3 என்ற பாடலடிகள் பன்றியை விரட்ட கற்பொறியைப் பயன்படுத்திய திறத்தைக் காட்டுகிறது.

விலங்குகள், பறவைகள் போன்றவற்றின் இயல்புகளைக் காட்டும் விலங்கறிவியல் இன்றுவளர்ந்துள்ளது. தமிழர்கள் அன்றே விலங்குகள், பறவைகள் ஆகியவை குறித்து அறிந்து அவற்றின் இன்றியமையாமையைத் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளனர்.

‘‘மடநடை ஆமான், கயமுனிக் குழவி

ஊமை எண்கின் குடா அடிக் குருளை

மீமிசை கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்

வரைவாழ் வருடை வன்தலை மாத்தகர்

அரவுக்குறும்பு எறிந்த சிறுகண் தீர்வை

அளைச் செறி உழுவை கோள்உற வெறுத்த

---

[1] கடியலூர் உருத்திரங்கண்ணனார், பட்டினப்பாலை, அடிகள் 283-289

[2] இரணியூர் முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார், மலைபடுகடாம், 465-470

[3] இரணியூர் முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார், மலைபடுகடாம் 193-196

மடக்கண் மரையான் பெருஞ்செவி குழவி
அரகு விரிந்தன்ன செந்நில மருங்கின்
பரற்ற வழ் உடும்பின் கொடுந்தாள் ஏற்றை"[1]

என்ற நிலையில் விலங்குகளின் குட்டிகளை வகைப்படுத்தி, அவற்றின் வரிசையை அமைத்துக் காட்டுகிறது மலைபடுகடாம்.

இவ்வாறு பல்வேறு அறிவியல் துறைகளின் முன்னோடி இலக்கியங்களாக செம்மொழி இலக்கியங்கள் விளங்குகின்றன என்பதை உணரமுடிகின்றது. இவ்விலக்கியங்கள் காட்டும் அறிவியல் செய்திகளை தமிழரின் அறிவியல் சிந்தனைகள் என்பதாகவும், மனித குலத்தின் ஆரம்ப கால அறிவியல் பங்களிப்புகள் என்பதாகவும் உலகம் ஏற்றுப் போற்றும் அளவிற்கு முன்னிறுத்துவது என்பது தற்போதைய தேவையாகும்.

தனிமனித உளவியல்

முனைவர் க.முருகேசன், தமிழ்த்துறைத்தலைவர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641 029.

முகவுரை

இலக்கியங்கள் அறத்தையும் பொருளையும் ஒருங்கே வலியுறுத்துவன. வாழ்வில்வளம்பெற வேண்டுமெனில் அஃது பொருளால் மட்டும் நிறைவு பெறாது. அப்பொருளுடன்அறமும் இணைந்த பின்பே நிறைவுபெற்று நிலைநிற்பதென அறிவுறுத்துவன. சான்றோர்கள்கூறிய அறநெறி வாழ்வை மேற்கொள்ளத் தலைவன் தலைவியை விடுத்து வினைவயிற் போன்றபிரிவு நிகழ்த்தினும் தலைவிக்கு ஆதார ஊற்றாகவும், வாழ்வின் பிடிப்பாகவும், பல்லோர்அவளைப் போற்றும் தன்மையுடையவளாகவும் விளங்கச் செய்பவன் தலைவனே ஆவான்.சங்கப் பாடல்களில் தலைவன் கூற்றுக்களை விட, தலைவி உள்ளிட்ட பெண்களின்கூற்றுக்களே மிகுதியாக இருப்பினும் அவர்களை இயங்கச் செய்யும் இயங்கு சக்தியாகஇருப்பவன் தலைவனே. இதனால்தான் அப்பெண் மாந்தர்களின் கூற்றுக்கள் அனைத்தும்தலைவனை மையமிட்டதாகவே அமைந்திருக்கின்றன. எனவே, சங்க மாந்தர்களை நகர்த்திச்செல்லும் மையப்புள்ளியாகத்

[1] இரணியூர் முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார், மலைபடுகடாம் 500-508

தலைவன் திகழ்கின்றான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.களவு, கற்பு வாழ்க்கையில் தலைவியை விடுத்துத் தலைவன் பிரிந்துறையும் போது பிறமாந்தர்களின் கூற்றுக்களில் அவன் அன்பின்மையைப் பற்றியும், குணநலன்களைக் குறித்தும் இடம்பெற்றிருப்பதை உணரமுடியும். அப்படிப்பட்ட ஆளுமைத் தன்மை உடைய தலைவன் புணர்ந்து பிரிந்த காலத்திலும், கற்புக்காலத்தில் பிரிந்த போதிலும், மீண்டு வந்து தலைவியோடு இணைந்த காலத்திலும் தலைவனுக்கு ஏற்பட்ட உள்ள மாறுதல்களை உளவியல் கூறுகள் வழி இக்கட்டுரை ஆராய்கின்றது.

<u>தலைவனின் பண்பு நலன்கள்</u>

தலைவனின் பண்பு நலனைக் கூறும்போது தொல்காப்பியர், "பெருமையும் வலிமையும் ஆடவர் இயல்பு" என்பர். இது உலகம் முழுவதும் பொருந்தும் என்பதை, "பெருமையும் உரனும் ஆடூஉ மேன" (தொல்., களவு., நூ.1044) என்ற நூற்பாவில் கூறிச் செல்கின்றார். தலைவன் பிறரால் போற்றப்பட வேண்டுமெனில் பொருளை ஈட்டும் இயல்புடையவனாக இருக்க வேண்டும். அவ்வாறு பொருளீட்டப் பிரியும்போது தலைவி கலங்குவாளாயின் அவள் மனம் சமாதானம் அடையும் வரை காத்திருந்து பின்னர் தன் பயணத்தை மேற்கொள்ளும் வலியுடையவன் என்பதை,

"செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே

வன்புறை குறித்த தவிர்ச்சி ஆகும்" (தொல்., கற்பு., நூ. 1131)

எனக் குறித்துள்ளார் தொல்காப்பியர்.

உறவினரின் துன்பத்தைப் போக்கவும், சுற்றத்தாரெல்லாம் கூடியிருந்து உண்ணவும், அயலார் எல்லாம் அன்புடன் இருக்கவும் ஆகிய நோக்கங்களுடன் பொருள் தேடச்சென்றதை,

"கேள்கேடு ஊன்றவும் கிளைஞர் ஆரவும்;

கேள்அல் கேளிர் கெழீஇயனர் ஒழுகவும்

ஆள்வினைக்கு எதிரிய ஊக்கமொடு புகல்சிறந்து;

ஆரங் கண்ணி அடுபோர்ச் சோழர்

அறம்கெழு நல்அவை உறந்தை அன்ன,

பெறல்அரும் நன்கலம் எய்தி, நாடும்

செல் அரு¨ செய்வினை முற்றினம்" (அகம்., பா.93:5-7)

என்னும் பாடல் வரிகள் மெய்ப்பிக்கின்றன. இப்பாடலின் மூலம் தலைவன் பிறர் துன்பத்தைப் போக்கும் பண்புடையவனாக இருந்தான் என்பது வெள்ளிடைமலை. அதோடு, "நட்டோர் இன்மையும், கேளிர் துன்பமும் ஒட்டாது உறையுநர் பெருக்கமும், காணூஉ, ஒருபதி வாழ்தல் ஆற்றுப தில்ல" (அகம்., பா.279 :1-3) என்னும் மனவோட்டத்தால் தன்னைச் சார்ந்தோரின் துன்பத்தைப் போக்க தலைவனுள் ஏற்பட்ட விருப்பமாகிய கனல் இரவு பகலாகக் கனன்று கனன்று முயற்சி என்ற தண்ணீரால் அந்நெருப்பை அனைத்துப் பொருள்ஈட்டும் பண்பைக் கொண்டவனாக விளங்குகின்றான்.

அகப்பாடல்களில் தலைவன்

"தலைவியை நினையாது போரில் ஈடுபட்ட தலைவனின் மன உணர்வுகள் புறத்திலும், காதலுக்குச் சிறப்பிடம் தந்து காதலியை நினைத்துருகும் தலைவனின் மன உணர்வுகள் அகத்திலும் இடம் பெறுகின்றன" என்பார் ஆ.இராமகிரு¯ணன். (அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப.182). "வினைமேற் செல்ல எண்ணிய நிலையிலிருந்து வினை நிறைவு அடையும் வரை ஆற்றாமையே தலைவனிடம் பொதுப் பண்பாக அமைந்திருத்தல் தெளிவுறும். எல்லாத் தனிமொழிப் பாடல்களிலும் இப்பண்பு உணர்ச்சியொழுக உருப்பெறுதல் உணரத்தகும்" என்பார் மு.இராசமாணிக்கம் (உள்ளத்தின் விந்தைகள். ப.32). எனவே, வினையை விரும்பினும் அதனினும் தலைவியை விரும்பும் பண்புடையவன் தலைவன்.

தலைவி மீது தலைவனுக்குள்ள ஆறாக் காதல், தலைவி இல்லாது வாழ இயலாத தலைவனின் மனநிலை, இல்வாழ்வின் செம்மைக்கு இயற்ற வேண்டிய கடமை என்னும் தலைவனின் உளவியலை அறிதற்குத் தலைவன் கூற்றுப் பாடல்களே சான்றுகளாக அமைகின்றன. அகப்பாடல்களில் காதல் உணர்வும், வினை உணர்வும் கொண்டு அவ்விரு உணர்வைத் தவிர்க்க முடியாதவனாகி தன்னுள்ளம் பெறும் உளமாற்றத்தைச் சங்கப்பாடல்களில் வடித்துச் சிறப்பிடம் பெறுகிறான் தலைவன்.

தலைவன் கூற்று நிகழும் இடங்கள்

தலைவன் தன் நெஞ்சோடு கிளத்தும் தனிமொழிப் பாடல்களே சங்கப் பாடல்களில் மிகுதியாக உள்ளன. காரணம் என்னவெனில் தலைவிக்குத் தோழி தக்க துணையாக அமைந்தது போலத் தலைவனுக்குப் பாங்கன் உள்ளங்கலந்த உறவுடையவனாக அமையாமையே காரணமாகும். எனவே தலைவன் கூற்றுக்கள் அவன்தன் நெஞ்சிடமே மிகுதியும் நிகழ்கின்றன.

<u>உள்ளமுறிவு - விளக்கம்</u>

"ஓர் அழுத்தமான தேவையும் அதனை எய்தி நிறைவுற இயலாத உணர்வும் உடனியையும் போது நேரும் அனுபவமே உள்ள முறிவு" என்று பிரித்தானியக் கலைக்களஞ்சியம் வரையறுக்கின்றது. வளமான வாழ்வு வாழப்பொருள் தேவை. ஆனால் பொருள் ஈட்டப்புக நினைப்பின்தலைவியைப் பிரிய வேண்டும். இவ்விரண்டையும் வேண்டி நிற்கும் தலைவன், ஆறலைக்கள்வர்கள் இருக்கும் பாலை வழியை எளிதில் கடந்து விடலாம். ஆனால் காதலைக் கடந்து செல்லவும் அவளின் தோளில் துயிலப் பெறுவதை விடமுடியாது என்பதை, "பெருந்தோள் இன்துயில் கைவிடு கலனே" (அகம்., பா.193: 14) எனக் கூறித்தன் பயணத்தைத் தவிர்க்கின்றான்.

தலைவனின் ஆசை நிறைவேறாததற்குத் தடையாக இருப்பது மனமே, ஏனெனில் தலைவியுடன் உறைய நினைப்பினும் மனமோ பொருள்கருதிப் பிரிய நினைக்கின்றது. இதனால் பிரிவை ஏற்க முடியாத தலைவன், 'உறுதியில்லாத நெஞ்சே, தலைவியைப் பிரியின் தக்கதா? நீ செல்லும் வழி கானல் நீர் நிறைந்து, பாறைகள் பொருந்தியிருக்கும் இடங்களுக்கு நீ சென்றால் தலைவியை நினைக்காது நீ எம்மையும் மறந்து போவாயா?' (அகம்., பா.327) என உள்ளமுறிவு அடைகின்றான். மனமானது, நாளது செலவினையும், மூப்பினது வரவையும், அரிது பெரிது சிறப்பினர் காமத்து இயற்கையையும் அறியாது. இதனால் தலைவன் தன்மனதிடம் மனமே, நீ பொருளை விரும்பினாலும் கூட, "நம்மொடு நன்மொழி நவிலும்,பொம்மல் ஓதிப் புனையிழை குணனே" (அகம்., பா.353:22-23) என்னும் அகநாþற்று வரிகளில் தலைவியின் இனிய மொழியையும், நற்குணத்தையும் நினைத்து இருக்கின்றாய். எனவே பொருளை விட்டுவிடு என உரைத்து உள்ளமுறிவடைகின்றான்.

நிறைவுறாத உணர்வு

"தலைவன் பாங்கனுக்குக் கூறும் பாடல்களுள் இடித்துரைக்கும் பாங்கனுக்குப் புகல்பவையாகவே உள்ளன. இதனால் தலைவன் தன் எண்ணங்களுக்கு வடிகாலாக, தன்உணர்வுகளைப் பங்கிட்டுக் கொள்வதற்கு உறுதுணையாகத் தன் நெஞ்சினையேகொள்கிறான்" என்பர் ஆ. இராதாகிருஷ்ணன் (அகத் திணை மாந்தர் ஓர் ஆய்வு. ப.169).

எனினும் இங்கு, தலைவி அருங்கடிக் காப்பினள், சொல் எதிர் கொள்ளாள், இளையள், அணையோள். எனவே, அவளை உள்ளல் கூடாது எனப் பாங்கன் இடித்துரைப்பினும் தலைவன் தன் பாங்கனிடமே, 'காற்று மோதி அடிப்பினும், மழை விரைந்து பெய்யினும், முழக்கத்துடன் இடியிடிப்பினும்' இவை போன்ற இயற்கைப் பேரழிவு ஏற்பட்டு உலகமே சினப்பினும், "போதல் ஒல்லாள் என்நெஞ்சத் தானே" (நற்., பா.201:12) என்ற வரியில் நினைவிலிருந்து நீங்காதவள் என்று அவளைப் பெறமுடியாத சூழலில் விளம்புகின்றான்.

தலைவன் தன் பாங்கனிடம் அவள் கிளியை குளிர் எனும் இசைக் கருவியால் விரட்ட, அவ்வொலி கேட்டு வேறிடம் செல்லாததைக் கண்ட தலைவி வருந்தி, "அதுபுலந்து அழுதகண்" (குறுந்., பா.291:5) உடையவளாக இருக்கக் காணும் போது அவள் கண்கள் குவளை போன்று இருந்தது என்று கூறுகின்றான். சங்கப்பாடல்களின் அமைப்புக் குறித்து .ஆர்.மார்க்கபந்து கூறும்போது "அகப் பாடல்கள் பெரும்பாலும் நிகழ்ந்த ஒன்றை ஒருவர் மற்றொருவருக்குக் கூறுவது போல் அமைந்துள்ளன; நிகழ்வை நம்மையே நேரில் காணச் செய்கின்றன. இதனால் இவை நாடகங்களின் அமைப்பு முறையைத் தழுவி இயன்ற சின்னஞ்சிறு நாடகங்களாகவே ஆகிவிடுகின்றன" எனும் கூற்று உண்மையே என்பர். (குறிஞ்சிக்கலி . வழித்துணை விளக்கம், முன்னுரை, ப.20) தலைவியும் தன்னை விரும்ப வேண்டும் என்ற வேட்கையுடன் உள்ளான் தலைவன். இதனால் வருந்தியிருக்கும் தலைவனைக் கண்டு அவள் நகைக்க, இதைக் கண்ட தலைவன் நீ வேறு வகையாகச் சிரித்த செய்தியைக் கூறின் என் நெஞ்சம் தாங்காது என்று கூறி, "என் பைதல் நெஞ்சம் உய்யு மாறே" (நற்., பா.75:10) எனும் வரியில் எனக்கு நன்மொழி கூறுவாயாக! என்று உளமுறிவால் வினவுகின்றான் தலைவன்.

தலைவியை விரும்பிய தலைவன் அவள்மீது கொண்ட அன்பினை அவள் உணர்ந்து ஏற்கும் பொருட்டு ஊரார்க்குத் தெரியும்படி 'மடலூர்வேன்' என்கின்றான். இவ்வாறு செயலைச் செய்யும்

போது, அனைவரும் அறியும்படியான ஆற்றின் நீர்ச்சுழியில் அகப்பட்டவனைக் கண்டு கரையில் உள்ளோர் பயங்கொள்ளாதே என்றதும் ஒருவாறு ஆறுதல் பெறுவான். ஆனால் இவ்வூரோ,"செறிந்தஏர் முறுவலாள் செய்த இக் காமம் அறிந்தும், அறியாது, இவ்வூர்" (கலி., பா.140:27-28) என்று கூறித் தலைவியை அடைய இவ்வூர் உதவி செய்யாத நிலையாலும் உள்ள முறிவு பெறுகின்றான். "களவு ஒழுக்கத்தில் தலைவன் தன் சுற்றத்தாருக்கோ, ஊரார்க்கோ அஞ்சாதவனாக உள்ளான்" என்கிறார் ஆ.அமிர்தகௌரி (சங்க இலக்கியத்தில் உரையாடல்,ப.87). தலைவியுடன் இனிது உரையவேண்டும் என நினைப்பினும் பொருளின் தேவை கருதிப்பாலை வழிச்செல்லும் பொழுதும் தலைவி தன்னை விரும்பாவிடின் என்செய்வது என்று துன்புறும் நிலையிலும் தலைவியை அடைய மடலூர்வேன் எனக்கூறியும் தனக்கு உதவி செய்யாத ஊரினைக் கண்டும் தலைவன் உள்ளமுறிவடைகின்றான்.

<u>உள்ளப்போராட்டம் - விளக்கம்</u>

"ஒரே நேரத்தில் ஒன்றிற்கும் மேற்பட்ட விருப்பங்கள் உடனிகழ்வாய்த் தோன்றுமாயின் எதனை ஏற்பது எதனை விடுப்பது என்னும் ஐயம் தோன்றும், இதன் அடிப்படையில் முடிவெடுக்க இயலா நிலையும் செயற்படஇயலா நிலையும் தோன்றும். இத்தகைய நிலையே 'உள்ளப்போராட்டம்' எனப்படும்" என்பர் து.சிவரா÷ (சங்க இலக்கியத்தில் உளவியல், ப. 16). வினையும் மனையும் தலைவன் பொருளீட்டப் பிரிய நினைக்கின்றான். ஆனால் மனமோ தலைவியா? பொருளா? என மனப்போராட்டம் நிகழ்த்துகின்றது. அப்பொழுது மனதிடம், "நெஞ்சே நீ தலைவியை விரும்புகிறாயா? பொருளை விரும்புகிறாயா?" இரண்டில் ஏதேனும் ஒன்றை மட்டும் கூறுக. ஏனெனில், "புணரின் புணராது பொருளே; பொருள்வயின் பிரியின் புணராது புணர்வே" (நற்., பா.16:1-2) என்னும் வரிகளில் தலைவியோடு உறைய விரும்பினால் பொருள்பெற இயலாது. பொருளைப் பெற விரும்பினால் தலைவியோடு உறையமுடியாது எனக்கூறி "நெஞ்சே, நீ பொருளுக்காகச் செல்வாயாயினும் செல்க, அல்லது இல்லத்தே தங்குவதாய் ஆயினும் தங்குக" என முடிவெடுக்காது போராடுகின்றான். இதுபோன்று "மாந்தரின் உள்ளப் போராட்டத்தை விளக்க, சேக்சுபியர் தனிமொழியைப் பயன்படுத்தினார்" என்பர். ஒரு முடிவெடுக்காது அலைபாயும் மனதுடன் தலைவன் வருந்தி அதனிடம் பொருளை விரும்பிப் பாலையில் செல்வதா? அல்லது தலைவியைக் காண ஊர்திரும்புவதா? எனத் தெரியவில்லை. ஆகவே மனமே, "ஆள்வினைக்கு அகல்வாம் எனினும்,மீள்வாம் எனினும் நீதுணிந் ததுவே" (நற்., பா.103:10-11) என விளித்து இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்குமாறு கூறுகின்றான் தலைவன்.

அகநாநூற்றுத் தலைவனோ, தன் மனதிடம் நீ குன்றைக் கடந்து பொருளீட்டியும் வரவில்லை. நம் தலைவியைத் தழுவி இல்லத்தில் வாழ்ந்தாலும் வறுமை வரும் என அஞ்சுகின்றாய். எனவே நீ ஒரு முடிவுக்கு வராது, "பெருங்கடல் ஓதம் போல,ஒன்றில் கொள்ளாய், சென்று தரு பொருட்கே" (அகம்., பா.123:13-14) என்றவாறு போராடும் மனமே முடிவெடுக்கட்டும் என விட்டுவிடுகின்றான். ஆண்மை என்பது யாரிடமும் பொருளை யாசிக்காது தான் ஈட்டி வந்த பொருட்களைப் பிறர்க்கு ஈயும் குணத்திலே நிற்கும். இது ஆண்மை கொண்ட அனைவர்க்கும் பொருந்தும். அகத்தலைவனும் தன் ஆள்வினைத் தன்மையானது பொருளீட்டத் தலைவியைவிட்டுப் பிரிய நினைக்கின்றது. மனமோ அவள்மீது கொண்ட காதலால் தலைவனைப் போகவிடாது தடுக்கின்றது. இதனால் தலைவனின் உள்ளமானது, "இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி ஒருதலைப் படாஅ உறவி போன்றனம்" (அகம்., பா.339:9-10) என அகநாþறு உரைப்பது போல் புலம்பி ஒருநிலை காணா உள்எறும்பு போலத் துயரடைகின்றான் தலைவன்.

கனவில் தோன்றி மறையும் காட்சி போலப் பொருள் நிலையில்லாதது. எனவே மனமே! நீ

பொருளை நாடாதே. நாடின் தலைவி அழகு கெடும். இது தெரிந்தும் பொருள்பெற நீ வற்புறுத்துகின்றாய். அப்படிச் செல்வாயாயின், "இரங்குவை அல்லையோ, உரம்கெட மெலிந்தே"

(அகம்., பா.379:27) எனத் தன்சொல் கேளாத மனதால் போராட்டம் அடைகின்றான் தலைவன். இதற்குக் காரணம் மனை வாழ்க்கையைப் பிறர் பழிப்பின்றி நடத்த வேண்டும் என்பதே அவனின் குறிக்கோளாகும். அக்குறிக்கோள் ஈடேறுவதற்கு வினைவயிற் பிரிகின்றான். "வினைவயிற் பிரியுங்காலத்துத் தலைவனுக்குக் காதல் உணர்வுகள் தோன்றி மனதைத் துன்புறுத்தினாலும் உணர்ச்சித் தோல்விகளை அவன் மனம்உறுவதில்லை" என்பர் மு.இராசமாணிக்கம் (உள்ளத்தின் விந்தைகள். ப.18) எனவே பொருளுக்கும் அன்பிற்கும் இடையில் ஊசலாடுகின்றான் தலைவன்.

தலைவியைப் பிரிந்த துயர் தலைவன் சென்ற இடத்திலும் வருத்த, பொருள் முடியானாகி மனம் சோர்கின்றான். மனச்சோர்வு நீங்கத் தலைவியைச் சென்று காண்போம் என மனம் நினைக்க, அறிவோ வினைமுடியாது செல்லின் இகழ்ச்சியைத் தரும் என்று கருத, இவ்வுள்ளத்திற்கும் அறிவிற்கும் இடையில், "தேய்புரிப் பழங்கயிறு போல,வீவதுகொல் என் வருந்திய உடம்பே" (நற்., பா.284:10-11) என இரண்டிற்கும் இடையில் போராட்டம் அடைகின்றான்.

தலைவன், தலைவி, தோழி எனும் முக்கோணச் செய்தியாகக் களவு விளங்கும்போது தலைவன் அதுபற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனால் களவு வெளிப்பட்டு அலராக மாறி ஊராரின் பழிச்சொல்லுக்குத் தலைவி ஆட்படும் போது அஞ்சுகின்றான். சமுதாய உணர்விற்கு மதிப்பளிக்க வேண்டியதால் தலைவன் களவுச் செய்தியையும், மடல்ஊர்தலையும் தவிர்க்கின்றான். குறுந்தொகைத் தலைவன் காதலைப் பெற ஊருக்கு அஞ்சி மடலேறாமலும், மடலூர்தலை மறுத்தால் உயிருடன் வாழமுடியாத் துன்பத்திலும் போராட்டம் அடைந்து, "வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே" (குறுந்., பா.32:6) என்கின்றான். தலைவன் போர்க்களத்தில் வினையில் ஈடுபட்டிருக்கும்போது தலைவி பற்றிப் பேச மாட்டான். வெற்றி பெற்றபோது தலைவி பற்றி நினைப்பான் என்பதை,

"கிழவி நிலையே வினையிடத்து உரையார்

வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்" (கற்., நூ.1132)

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவர். தொல்காப்பியர் கூற்றுப்படித் தலைவன் போர்மேற்சென்று

வெற்றி பெற்றுப் பாசறையில் தங்கியிருக்கிறான். ஆனால் மன்னன் தன் நாட்டிற்குச் செல்லாது

பாசறையில் தங்கியிருக்கத் தலைவனோ, வெற்றி பெற்ற மன்னன் போர்த் தொழிலைக் கைவிடின், "காண்குவெம் தில்ல அவள் கவின்பெறு சுடர்நுதல்" (ஐங்., பா.443:3) என்று தலைவியின் அழகுநலம் குறித்துச் சென்ற தன் மனதிடமும், அவள் மீதுள்ள ஆர்வத்திற்கும் இடையில் போராட்டம் அடைகின்றான் தலைவன்.

<u>இல்லாமையின் இரக்கம்</u>

"மனிதன் இன்பமயமான வாழ்க்கையை எய்தும் பொருட்டுச் சில குறிக் கோள்களை அமைத்துக் கொள்கின்றான். அக்குறிக்கோள்கள், அவனுக்கு மறைமெய்ம்மைகளாக, உள்ளிருந்து அவனைச் செய்யும்படி தூண்டுகின்றன" என்று கூறுவர் மு.இராசமாணிக்கம் (உள்ளத்தின் விந்தைகள், ப.32). எனினும் அக்குறிக் கோள்கள் தலைவியுடன் உறையும் போதே பிறக்கும். பிரியின் குறிக்கோளை மறந்து ஏங்குவான். தலைவன் பொருள்தேடத் தலைவியைப் பிரிந்தபோது எவ்வித நினைப்பும் இன்றி மனமே! நீ என்னுடன் வந்தாய், வந்த நீ இடைவெளியில் அவளை நினைத்து வருந்துகின்றாய். எனவே,

“செல்இனி, சிறக்கநின் உள்ளம்! வல்லே

மறவல் ஓம்புமதி” (அகம்., பா.19 : 8-9)

என்னும் அகநாþற்று வரிகளில் பாலைவழிப் பயணம் மேற்கொள்வதா? வேண்டாமா? என உள்ளப்போராட்டம் மேற்கொள்கின்றான். முன்பு நிகழ்ந்ததைப் பின்பு நினைத்தற்குக்காரணங்களும் அமையும் என்பதை, “நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்” தொல்.அகத்.நூ.989) என்பார் தொல்காப்பியர். தலைவனும் பாலைவழிச் செல்லும் போது அவ்வழியின் கொடுமைக்கும், தலைவியின் குணநலன்களுக்கும் இடையில் அவன் உள்ளம் தடுமாற, போராட்டம் மீதுர, “இன்னா மன்ற சுரமே; இனிய மன்ற, யான் ஒழிந்தோள் பண்பே!” (ஐங்., பா.326:4-5) எனக் கூறுகின்றான். மனம் குரங்காட்டம் போட்டு, ஒரு நிலையாய் நிற்காதது.

பொருளீட்டவும் மனதிற்கு ஆசை தோன்றித், தலைவியுடனும் தங்கியிருக்க விரும்புகின்றது. ஆனால் இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றையே பெறமுடியும். இஃதறிந்தும் மனம் ஆசைப்படுவதைக் கண்டு, “ஒருதிறம்,பற்றாய் வாழி, எம் நெஞ்சே!” (நற்., பா.298:7-8) எனத் தன்நெஞ்சினை இகழ்ச்சியாகக் கூறியும், வாழ்த்திக் கூறியும், அடைய வேண்டுவது பொருளா? தலைவியா? என மனப் போராட்டம் அடைகின்றான். தலைவன் தலைவியை விரும்பும் தூய அன்பை எவ்வகையில் தெரிவிப்பது எனக் குழப்பம் அடைந்து உளப்போராட்டம் அடைகின்றான். அப்போராட்டத்தை, “கூறுவம் கொல்லோ? கூறலம் கொல்? எனக்,கரந்த காமம் கைந்நிறுக் கல்லாது” (அகம்., பா.198:1-2) என்ற அகநாþற்றுத் தலைவனின் கூற்றிலிருந்து மனம் தடுமாறிப் போனதைத் தன்னுடைய திகழ்வை பின்னோக்கு உத்திமூலம் பாகனிடம் தெரிவிக்கின்றான். மற்றொரு தலைவனோ, தன் துணிவில்லாத நெஞ்சிடம், பொருளீட்டத் தலைவியை விடுத்துப் பாலை வழியில் செல்லும்போது அவளைச் சிறிதேனும் நினைப்பாயா? பாலை வழியில் நான்செல்வது தகுமா? என்பதைச் சிந்தனை செய்து கூறு (அகம்., பா.327) கூறாது விட்டுவிடாதே என்ற பாடல் கருத்தால் பாலை வழிக்கும், தலைவியின் அன்புக்கும் இடையில் போராட்டம் நிகழ்த்துகின்றான். பொருள், போர் போன்ற காரணங்களால் தலைவியைத் தலைவன் பிரிய நேர்ந்தாலும் அவளின் அன்பினையே மையமாகக் கொண்டு அவனது எண்ணமும் செயலும் கொண்டு இப்போராட்ட உணர்வுகள் அமைகின்றனான். பாலைவழிச் சென்று தலைவன் பொருளீட்ட நினைக்கையில் தலைவியா? பொருளா? எனச்சிந்திக்கும் வேளையிலும் பொருள்வயிற் பிரிவை தலைவியிடம் கூறுவதா? வேண்டாமா? என்ற நிலையிலும் தலைவியைப் பெற மடலூர்ந்தாலும் பழியாகும் அதை மறுத்து பிரிந்து உயிருடன் வாழ்ந்தாலும் பழியாகும் என்ன செய்வது என்ற குழப்பமான

நிலையிலும் தலைவியிடம் தன் அன்பைக் கூறுவதா வேண்டாமா என்ற தயக்க நிலையிலும் தலைவன் உள்ளப்போராட்டம் அடைகின்றான்.

<u>உள்ள இறுக்கம் - விளக்கம்</u>

"எவ்வகைத் தீர்வும் இன்றி உளமுறிவு தொடருமானால் மன விறைப்பு நிலை தோன்றும்.இவ்வுள்ள இறுக்கத்தால் அச்சம், பெருந்துயரம், நாணம், குற்ற உணர்வு, ஆர்வக் கிளர்ச்சி ஆகிய பல்வேறு அடிப்படை உணர்வுகளின் இணைப்பு அல்லது தொகுப்பமைப்பு எனும் வகையில் கலவையால் உளஇறுக்கம் ஏற்படுகின்றது".

துயரால் உள இறுக்கம்

தலைவியுடன் எப்பொழுதும் இணைந்திருக்க வேண்டும்; அதோடு பொருளையும் கைவரப் பெற்றிருக்க வேண்டும் என இரண்டையும் வேண்டுதல் தலைவனின் அடிப்படை உணர்வு. ஆனால் இவ்வடிப்படை உணர்வுகள் ஒன்றையொன்று பெறாது சிக்கல் கொண்டதாக விளங்கி உள்ள இறுக்கம் பெறுகின்றான் தலைவன். அவன் தன்னுடைய நெஞ்சிடம், "அஞ்சில் ஓதி அரும்படர் உறவே" (நற்., பா.105:10) என்னும் வரியில் "மனமே நீ நீண்ட தொலைவு வந்து விட்டாய். இத் தொலைவு வந்தபின்பும் மீண்டும் தலைவியை எண்ணிச் செல்லக் கருதுவாய் எனில் உன் முயற்சி நன்றாகும்" என வெறுப்புற்றுக் கூறுகின்றான். அவ்வாறு விருப்புற்றுச் செல்லினும் நெஞ்சம் பிழைக்குமாறு தலைவியின் பார்வை அமைய வேண்டும். இல்லையெனில், "உடையும் என் உள்ளம்" (நற்., பா.75:5) எனத் துயரால் இறுக்கம் அடைகின்றான். தலைவியை அடைய வேண்டும் என்ற ஆசை நிறைவேறாது பல நாட்களாகத் தொடர்ந்தால் தலைவனுக்கு உள்ளமுறிவு ஏற்படும். மலைநாட்டுத் தலைவியின் சூழ்ச்சியில் சிக்கி இன்னும் உயிர் நீங்காது அடங்காத நோயுடன் அன்பும், துன்பமும் அளவு கடந்து பெருகச் செயலாற்ற முடியாமல் தலைவன் வருந்துகின்றான். அதோடு அவளுடன் கூட்டம் செய்யாது இருப்பின் அது என் ஊழ்வினையால் வந்தது எனக் (நற்., பா.185) கூறி பிறரைப் பழிதூற்றாது புள்ளையும், பொழுதையும் பழிக்கும் சான்றோர் போல நடந்து கொள்கின்றான். சான்றோன் போல் நடப்பினும் தடுமாறும் மனதை அடக்க இயலாது தலைவி மீது எண்ணம் கொண்டு, "குன்றக் குறவனொடு குறுநொடி பயிற்றும் துணைநன்கு உடையள், மடந்தை" (நற்., பா.341:5-6) என்ற வரிகளில் தலைவியின் நற்பண்புடன் வீற்றிருக்க தலைவனோ பாசறையில் மழைக்கால வாடையால் துன்புறுத்தப்பட்டுத் தனிமையில்

துன்புறும் செயலால் உள இறுக்கம் அடைகின்றான். தொல்காப்பியர் கூற்றுக்கு மாறுபட்டுத் தலைவன் புலம்புவதை நற்றிணைப் பாடலில் காணமுடிகின்றது.

“கிழவி நிலையே வினையிடத்து உரையார்

வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்” (தொல்., கற்., நூ.1132)

என்ற நூற்பாவின்படி தலைவன் போர்க்களத்தில் வினையில் ஈடுபட்டிருக்கும்போது தலைவி பற்றிப் பேசமாட்டான். வெற்றி பெற்ற போது தலைவி பற்றி நினைப்பான் என உரைப்பினும் உளஇறுக்கத்தால் பாசறையில் புலம்புகின்றான் தலைவன். எண்ணத்திற்கு ஏற்றவாறு எல்லாம் நடந்து விடுவதில்லை. அப்படி நடந்தால் உள்ளம் என்பதும் அவற்றுள் உணர்வு என்பதும் இல்லாது போய்விடும். தலைவனும் தலைவியை நினைத்துத் தன்நெஞ்சிடம், விருப்பத்திற்கு எட்டாத தொலைவில் உள்ளவளும், அடைதற்கு அரியவளுமான தலைவியை அடைய நீ, “அயிரைஆர் இரைக்கு அவைத் தாஅங்கு” (குறுந்., பா.128:3) போலப் பார்த்துத் துன்பம் அடைகின்றாய். அதோடு நான் கூறும் நல்அறிவுரைகளைக் கேளாது பச்சைமட்பாண்டம் போல,

“உள்ளம் தங்கா வெள்ளம் நீந்தி

அரிது அவாவுற்றனை நெஞ்சே” (குறுந்., பா.29:3-4)

எனத் தன்சொல் கேளாது அவாவுறும் நெஞ்சினால் துன்பம் அடைகின்றான். வினை முடியாது

கார்காலம் வந்துற்றதை அறிந்த தலைவன், “யாம்உறு துயரம் அவள் அறியினோ நன்றே” (ஐங்.,

பா.441:4) என்று பிரிவுத் துயரடைகின்றான். இதனால் கார்கால வருகை தலைவிக்கு மட்டுமல்ல குறித்த காலத்தில் வராதிருக்கும் தலைவனுக்கும் உண்டென்பது தெளிவாகின்றது. போராட்டங்களை மறைத்து அடக்குவதால் கவலை தோன்றும் என்பார் சிக்மண்ட் ஃப்ராய்ட். தோழியருடன் தலைவி மனையரசியாக விளையாடுவது கண்டு தலைவன் எம்மில்லத்தில் மனையரசியாகத் தலைவி நடப்பின் நல்லது எனக்கூற அவள் நாணத்தால் தலைகவிழ்ந்தாள். இக்காட்சியைக் கண்ணுற்று நீங்கி “பெரிய எவ்வம் யாம்இவண் உறவே” (அகம்.,பா.230:16) என்ற வரிகளில் மனையரசியாக வரும் தலைவியை நாம் அடைய இயலாது என்கின்றான். தெய்வ இயல்புடையள், எட்டாக் கனி என எண்ணாது பல வழிகளைக் கடக்கச் செய்யும் நெஞ்சே, உன் செருக்கு அழிவதோடு, “எஃகம் நிறுத்துச் சென்று அழுந்தக்,கூர்மதன் அழியரோ-நெஞ்சமே”

(அகம்., பா.212:20-21) எனத் தலைவியை இடையறாது நினையும் தன்மார்பில் வேல்பாயட்டும் எனத் துன்பத்தால் இறுக்கம் அடைகின்றான். ஊராருக்கு வள்ளலாகவும் தலைவிக்கு அன்புக் கணவனாகவும் திகழவேண்டும் எனில் அது சிரமம் தான். வள்ளலாக வேண்டுமெனில் பொருளீட்டப் பிரிய வேண்டும். தலைவியுடன் இருப்பின் அஃது நடைபெறாது போய்விடும். எனினும் 'வினையே ஆடவர்க்கு உயிரே' எனும் வழித் தலைவியைப் பிரிந்து சுரத்தில் துன்பத்தை அனுபவிக்கும் தலைவன், தம் தலைவியும் இளவேனிற் காலத்தில் வருந்துவதோடு, "படர் உழத்து, யாங்குஆ குவள்கொல் தானே" (அகம்., பா.279:10) என்றவாறு அவளின் துயரத்தையும் நினைந்து உளஇறுக்கம் பெறுகின்றான். கலித்தொகைத் தலைவனும், "நாண்எழில் முற்றி உடைத்து உள்அழித்தரும் மாணிழை மாதராள்" (கலி., பா.139:21-22) எனக்கூறி "அழகுநலம் வாய்ந்த அப்படிப்பட்ட தலைவியை அடைய மடலையே தெப்பமாகக் கொண்டு கரையேற முயல்வதற்குச் சான்றோர்களே! நீங்கள் எனக்கு உதவுவதே கடனாகும்" எனக்கூறி தலைவியை அடைய முடியாத சூழலில் மனப்போராட்டம் முற்றி உளஇறுக்கம் அடைகின்றான்.

<u>பார்வையும் குற்ற உணர்வும்</u>

பெண்ணுக்கு இயல்பு நாணம். அதுவும் தான்விரும்பும் தலைவன் எதிர்ப்பட்டு மொழியும் பொழுது அவள் முகம் காணாதும், பேசாதும் நாணத்தால் தலை கவிழ்ந்து நிற்பாள்.அந்நிலையில் அவளைக் காணும்போது அன்பு மிகுதியாகிக் கைகடந்து செல்லும்போது அதைத்தாங்குவதற்கு, இயலாத நிலையில் அவள்மீது கொண்ட ஆர்வக் கிளர்ச்சியால், "காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ?" (நற்., பா.39:3) எனக்கூறி, அவளின் பார்வையும் தோளும் தன்னை விரும்பச் செய்வதாகக் கூறுகின்றான். அவ்வாறு விரும்பினும் அவ்விருப்பம் நிறைவேறாது போய்விடுமோ எனும் ஏக்கத்தாலும் அவளுடன் இணையவேண்டும் எனும் விருப்பாலும் தன்னுடைய தோழனிடம்,

"ஒருநாள் புணரப் புணரின்,

அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே" (குறுந்., பா.280:4-5)

எனும் வரிகளில் தலைவியின் மீதுள்ள ஆர்வத்தால் அவன் எமக்கு இல்லையெனில் அரைநாள்வாழ்க்கை கூட வேண்டாம் என உளஇறுக்கம் அடைகின்றான்."துன்பத்தில் தோன்றும் இன்பம், இன்பத்தில் தோன்றும் இன்பத்திலும் இனிமை மிக்கது என்ற ஆங்கிலப் புலவர் செல்லி 'கவிதைக் காப்பு' எனும் நூலில் இலக்கியச் சுவையின் நுண்ணிய மனப் பாங்கினை விளக்க முயல்வர்." இங்கு தலைவனும் தலைவியைக் காணாது, காணவேண்டும் என்ற ஆர்வத்தால்

வருந்தியிருக்க அவனின் எண்ணத்தை, வலிமையை இழக்கச் செய்யும் அச்சாயல், "தீஓ ரன்னஎன் உரன்அவித் தன்றே" (குறுந்., பா.95:5) என்று தன்வலிமை கெட்டழிவதைக் கூறுகின்றான். மற்றொரு தலைவனோ, அவள் கண்களோ, "ஏ ஒத்து, எல்லோரும் அறிய நோய்செய் தனவே" (குறுந்., பா.72:2) எனக் கவல்கின்றான். தலைவனின் வலிமையும், நெஞ்சுரமும் தலைவியைக் காணாத பொழுது அழிகின்றது என உளஇறுக்கம் கொள்கின்றான். "பல காரணங்களால் தலைவியைத் தலைவன் பிரிய நேரினும் அவளது அன்பினையே மையப் புள்ளியாகக் கொண்டு அவனது எண்ணமும் செயலும் அமைகின்றன" என்ற கருத்திற்கு இணங்க பொருளீட்டுவதற்காகப் பலநாட்கள் பிரிந்து பின்னர் தலைவியைக் காண விரைகின்றான். அவள் இருக்கும் இடமோ வெகு தொலைவு. அவளை உடனடியாகக் காணமுடியாத சூழலில் அவனின் ஆர்வமும் வழித்தொலைவும் ஒன்றொன்று போரிட்டு நிறைவேறா நிலையில், "ஈஈரம்பட்ட செவ்விப் பைம்புனத்து ஓரேர் உழவன் போல" (குறுந்., பா.131:4-5) என்ற வரிகள் சுட்டுவதைப் போல அவளைக் காணச் சிலநாட்களாகும் எனத் தலைவன் மனம் உழன்று இறுக்கமடைகின்றான். தலைவியைக் காணத் தலைவன் அல்ல குறிப்பட்டு நிற்கின்றான். அவளை உடனே காணவேண்டும், ஆனால் உடனே தலைவியைக்காண முடியாமல் போனதே எனும் அவத்தைக் கொண்ட நெஞ்சிடம், "ஒறுப்ப ஓவலை, நிறுப்ப நில்லலை,புணர்ந்தோர் போலப் போற்றுமதி" (அகம். 342, 1-2) என்று கட்டறுத்துப் பாயும் தன் நெஞ்சிடம் சமாதானம் கூறி உளஇறுக்கம் அடைகின்றான்.

"தலைமேல் வெம்மை, காற்கீழ் வெம்மை, நெஞ்சத்துள் வெம்மை, இந்நிலையில் பாலைச்

செல்னர் பெரும் பாழான தோற்றத்தைக் காண்கின்றனர் என்று விளக்குவார் தனிநாயகர்."

தலைவன் பொருளீட்டச் சென்ற பாலையில் தன்துயரையே பெரிதெனக் கருதும் உயிர்களிடையே தன்னோடு தன் தலைவியின் நினைவையும் மறக்க முடியாது, அவள்மீது கொண்ட ஆர்வத்தால், அன்பால்,

"சுடர்தெற வருந்திய அருஞ்சுரம் இறந்து, ஆங்கு,

உள்ளினை - வாழிய நெஞ்சே" (அகம்., பா.291:21-22)

என்ற வரிகளில் தன் நெஞ்சினை விளித்து அவள்மீது கொண்ட ஆர்வத்தாலும் அதை நிறைவேறாத பொழுதானும் தலைவன் மனஇறுக்கம் கொள்கின்றான். தலைவி மெல்லிய இயல்பு

கொண்டவள். சிறு சிறு செயல்களுக்குக் கூட மனந்தாங்காது அழும் இயல்பு கொண்டவள். இத்தகைய பண்புகளைக் கொண்ட தலைவியிடம், தான் வினை காரணமாகப் பிரிந்து செல்வதைக் கூறியவுடன், “ஆடுவரி அலவன் ஒடுவயின் ஆற்றாது” (நற்., பா.106:3) அழும் தலைவி, பதில் ஏதும் கூறாது "ஞாழல் இதழைப் பிய்த்துப் பிசைந்தவள் ஆனாள். அந்நிலையைப் பாணனே! அறிந்தாயா? எனும் கேள்வியால் அவளைத் தனியே விடுத்துப் பிரிந்த குற்ற உணர்வால் இறுக்கமுற்று வினவுகின்றான் தலைவன். தலைவன் சிலநேரம் பயணத்தைத் தவிர்த்துச் செலவழுங்குதல் அவள் மீது கொண்ட அன்பாலும் தான் குற்றமுடையவனாக இருக்காது திகழவேண்டும் என்ற காரணத்தாலும் அம்முடிவினை எடுக்கின்றான். சிலபோது பொருளீட்டும் அவசியம் ஏற்பட்டவுடன் தலைவியிடம் இப்பிரிவை நீ பொறுத்திருக்க முடியுமா? எனக் குற்றவுணர்வுடன் அவளைக் கேட்பதற்கு முன்பாகவே, அவள் கண்கள், “நில்லாஆகி, நீர்விலங்கு அழுதல்” (குறுந்., பா.256:7) எனும் இந்நிலையால் தலைவன் தன் பயணத்தைத் தவிர்த்தொழுகினான். தலைவனின் அணைப்பு நெகிழ்ந்தாலும் வருந்தும் இயல்புடையவள் தலைவி. எனவே அவள் தலைவனையும், அவன் பிரிவையும் நினைந்து வருந்தாத நேரம் இருக்காது. தலைவனின் வருகையை நினைத்து, “நாள்முறை இழைத்த திண்சுவர் நோக்கியும்” (அகம்.,பா.289:9-10) என்ற பாடல் வரிகளில் சுவரில் பல்லி ஒலிப்பின் தெய்வத்தை வணங்கி நற்குறி சொல்வாயாக என வேண்டும் தன்மை கொண்டவள். அவள் மாலைக் காலத்தில் எவ்வாறு ஆற்றியிருப்பாளோ? எனத் தலைவியைப் பிரிந்த குற்ற உணர்வால் தலைவன் உளஇறுக்கம் அடைகின்றான். தலைவியை அடையவேண்டும் என்ற ஓர் அழுத்தமான தேவையிருப்பினும் அதனை அடைய முடியாதபடி உள்ளம் பொருளீட்ட விழையும்போது தலைவனுக்கு உளமுறிவு ஏற்படுகின்றது. உலகில் உள்ள இன்பங்களுள் தலைவியால் பெறும் நுகர்வு இன்பமே சிறந்தது எனக் கொள்ளினும் பொருளை விரும்பும் மனதோடு தலைவியைப் பிரிய, “அழல்எழு தித்தியம் அடுத்த யாமை நிழலுடை நெடுங்கயம் புகல்வேட் டாஅங்கு” (அகம்., பா.361:11-12) என்ற வரிகளில் விரும்புதல் போலக் குற்றமுடைய நெஞ்சமே, நீ மீண்டும் அவளிடம் சேர முயற்சிக்காதே என்று தலைவன் பொருள்கடைக் கூட்டிய நெஞ்சை விளித்து அடக்க முயல்கின்றான். விரும்பியவர்கள் எவ்விதத் துன்பமும் அடையக் கூடாதென விரும்பித் தொழுதல் அன்புடையாரின் இயல்பு. தலைவியும் பிறையைத் தொழுது பிரிந்திருப்பாள். அந்நிலையில் தலைவன் பொருளை விரும்பி அவளை விடுத்து, மனமின்றி, “மன்றும் தோன்றாது, மரனும் மாயும்” (அகம்., பா.239:2) என்றவாறு திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு செல்கின்றான். அங்ஙனம் செல்கையில், ‘நீர் பொருளீட்டப் பிரிந்து காலம் தாழ்த்தி வருவீர்’ எனக் கோபத்துடனும் ஆற்றாமையுடனும் கூறிய

கூற்றை நினைந்து குற்ற உணர்வோடும் உள இறுக்கத்தோடும் செல்கின்றான். நம்மை விரும்பும் அருள் கொண்டோரை விடுத்து நிலையில்லாப் பொருளை நச்சிச் செல்லும்போது, அச்செயல் குறித்தும் சிறுமை குறித்தும் நாணம் பிறக்கும், பொருளை விரும்பும் நெஞ்சிற்கு அதன் செயலை, தகாததை உணர்த்தி நாணம் பிறப்பிக்க எண்ணி, எம் தலைவியை விடுத்து யாம், "மணத்தலும் தணத்தலும் இலமே,பிரியின் வாழ்தல் அதனினும் இலமே" (குறுந்.,பா.168:6-7) எனக் கூறி எமக்குத் தலைவியின் உயிர்தான் தேவை, பொருளல்ல எனத் தன் மனதை இடித்துரைக்கின்றான். நம் நலனை விரும்பும் இயல்புடையோர் நலம்பெற நாமும் விரும்புவோம். இதுவே உள்ளத்தின் இயல்பும் கூட. ஆனால் தலைவனோ தலைவியின் மீது நாட்டம் கொள்ளாது, பொருள்நலனையே குறிக்கோளாகக் கொண்டு அவளை மறந்து பிரிந்தனன். ஆனால் நாணும்படி தலைவன் பாலை வழியில் எவ்விதத் துன்பமும் இல்லாதிருக்கும் பொருட்டுத்,

"தொடிஅணி முன்கைத் தொகுவிரல் குவைஇ,

படிவ நெஞ்சமொடு பகல்துணை ஆக,

நோம்கொல்? அளியளி தானே" (அகம்., பா.287:1-3)

என்ற வரிகளில் தலைவி மீது தன் அருளில்லா நெஞ்சம் குறித்துத் தலைவன் நாணி உளஇறுக்கம் பெறுகின்றான். தலைவியைச் சந்தித்து மகிழ நினைத்த தலைவன், அவ்வெண்ணத்தைச் செயல்படுத்த இரவுக்குறியில் வருகின்றான். அப்படி வரும்பொழுது வழியின் அருமைப்பாடும், காவல் மிகுதியால் உளதாகும் அச்சமும், விலங்குகளால் ஏற்படும் அழிவும், துன்பமும், பிறவும்

நினைத்துக் கவலை கொள்வதில்லை. இதைத் தொல்காப்பியர், "ஆற்றினது அருமையும், அழிவும், அச்சமும், ஊறும் உளப்பட அதனோரன்ன" (தொல்., களவு., நூ.1082) என்பர். ஆனால் தலைவியைச் சந்திக்க இயலாது அல்லகுறிப்பட்டுச் செல்லும் தலைவன், தன்னுடைய நெஞ்சிடம், 'தலைவியைக் காணாத நீ அவள் மீதுள்ள அன்பின் மிகுதியால் வருந்துவாயோ? அல்லது அடிபட்ட பாம்பைப் போல் வாழ்வாயோ? எனக்கேட்டு, அவளைக் காணமுடியாத பெருவெறுப்பால், "புகல்அரும் பொதியில் போலப் பெறல்அருங் குரையள் எம் அணங்கி யோளே" (அகம்., பா.322:14-15) என்றவாறு தன்னிலை குறித்து வெட்கம் அடைகின்றான். அல்லகுறிப்பட்டுத் தலைவன் பல நாட்கள் தன் இல்லம் போய்ச் சேரும்போதுத் தலைவியைக் காண முடியாமையால் அவளை வெறுப்பதில்லை. இதுவே தலைவனின் சான்றாண்மைக்கு உதாரணம். எனினும் அவளைக் காணாத வெறுப்பால் தன் நெஞ்சிடம், வேளிரின் பொன்னைப்

பெரினும் அவளைப்பெற இயலாது. எனினும் பாம்புகள் திரியும் சிறுவழியில் இரவில் பார்க்கச் செல்கின்றாய். இதனால் உனை நினைக்க, நினைக்க எனக்கு ஏளனச் சிரிப்பு உண்டாகின்றது. என் சொல் கேளாத நெஞ்சே என விளித்து,

“மாய இருள்அளை மாய்கல் போல,

மாய்கதில்” (அகம்., பா.258:7-8)

என்ற அடிகளில் மனமே! நீ இறந்துபோ! எனச் சாபம் விடுகின்றான். எனினும் தலைவியை

வெறுத்து ஒதுக்குவதில்லை என்பதை அறியமுடிகின்றது. தன்னைப் பிரிந்திருக்கும் தலைவியின் அவள் வருத்தத்திற்குத் தானே காரணம் எனக் குற்ற உணர்வு ஏற்பட்டு வருந்துவான் தலைவன். இக்குற்ற உணர்வு தலைவன் தலைவியின் அன்புறு வாழ்க்கையை மேம்படுத்தவேயாகும். இதனைப் பெத்தரண் சலார், “கொண்டானுக்கும் கொண்டாளுக்கும் உடல், மன நிலையில் ஒத்த மதிப்பீடு இருப்பின் இல்லறம் சிறக்கும்” என்பர். (ஆயசசயைபந யனே ஆடிசயடளஇ ஞ.115) மேலும், தலைவனை நினைத்து நீண்டநேரம் ஒரே இடத்திலேயே இருந்து மாலையிலும் வருந்துவாள். அவளுக்கு ஆறுதல் கூற யாரும் இருக்கமாட்டார்கள். அந்நிலையில், “பெருந்தோள் நெகிழ்த்த செல்லலொடு வருந்துமால், அளியள், திருந்திழை தானே” (அகம்., பா.169:13-14) எனத் தலைவி அடையும் துயர்குறித்துத் தலைவன் துன்பம் அடைகின்றான். தலைவன் குறித்துச் சென்ற கார்காலம் வந்துற்றது. அதோடு தலைவியின் துயரும் தொடங்கியது.

இந்நிலையில் தலைவன்,

“அருள்கண் மாறலோ மாறுக – அந்தில் அறன் அஞ்சலரே, ஆயிழை, நமர்” (அகம்., பா.144:6-7)

என்றவாறு பாகனிடம் உரையாடுகின்றான். “அப்பொழுது நம் போரின் வெற்றிப் பெருமிதத்தை அவள் சுற்றத்தவர் கூறக்கேட்ட பின்பு நம்மைத் தழுவினாற் போல் மகிழ்வாள்” எனக்கூறி மகிழ்கின்றான். அவளைக் குறிப்பிட்ட காலத்துள் சந்திக்க முடியவில்லையே எனக் குற்ற உணர்வு ஏற்பட்டாலும் அவள் செயல் குறித்துப் பாகனுக்குக் கூறுகின்றான். “வினை முடிந்து தலைவன் பாகனிடம் பேசும்போது தலைவன் மீதுள்ள மதிப்பால் இடையிட்டுப் பேசுவதில்லை.

காரணம் தேரை விரைவாகச் செலுத்துதலே தலைவனுக்குத் தரும் தக்க மறுமொழி என்பதுபோலப் பாகன் செயல்படுகின்றான்” என்பர் ஆ.அமிர்தகௌரி (சங்க இலக்கியத்தில் உரையாடல், ப.19).

இவ்வாறு பேசாத பாகனிடம் தன்மன உணர்ச்சிகளைக் கூறி அவன்மீதுள்ள அன்பை வெளிப்படுத்துகின்றான் தலைவன்.

<u>தொகுப்புரை</u>

☐ உணர்வுகள் மிகையாகும் போது பிரிதலும் புணர்தலுமாகிய இவ்விரண்டு உணர்வுகளுமே தலைவனைப் பெரிதும் ஆட்கொள்வன. எனவேதான் இவ்விரண்டு உணர்வுக்காலங்களிலும் தலைவன் தனிமொழி பேசித் தன்னுள்ளத்தைப் பாதுகாத்துக்கொள்வதுடன், தவறு செய்தல், அதனை மறைத்தல், அ¨சாது பொய் கூறுதல், இரந்து பின்நிற்றல் ஆகியவற்றால் உளமாறுபாடடைந்து கூற்றினை நிகழ்த்துகின்றான்.

☐ பலகாரணங்களால் தலைவியைத் தலைவன் பிரிய நேர்ந்தாலும் அவளது அன்பினையே மையப்புள்ளியாகக் கொண்டு தலைவன் உளக்கூற்றுகள் நிகழ்த்துகின்றான். தலைவன் தன் காதலியை நினைத்துருகும் மனஉணர்வுகள் அகத்தில் இடம்பெற்று அவனின் நிலையை தெற்றென விளக்குகின்றன. வினைமேற் செல்லும் தலைவனின் மனப்போராட்டம் இடைச்சுரவழியில் நீண்டு இரக்க உணர்வைத் தோற்றுவிக்கின்றது.

☐ உணர்வுகள் மிகையாகும்போது தலைவன் அதனை நெ¨சொடு பகிர்ந்து கொண்டு வேண்டாத உணர்வை உள்ளத்திலிருந்து மீட்டுப் புலம்பித் தன்னைத் தற்காத்துக் கொள்கின்றான். தலைவனின் மனக்குறையைத் தோழி மறுக்கும்போதும், தலைவி ஊடல் தணியாமையின்போதும், இடைச்சுரத் துன்பத்திலும், இரவுக்குறி மறுக்கப்பட்ட நிலையிலும், அல்லகுறிப்பட்டுச் செல்லும்போதும், வரைவு மறுக்கப்பட்டமையிடத்தும் உள்ளத்துயரடைகின்றான் தலைவன். ☐ தலைவியின் உறவை விரும்புவதையும், அவள் துய ரடைவதையும் குறித்தே தலைவனின் மனநிலை விளங்குகின்றது. தலைவனின் உள்ளத்தில் எழும் கனவுகளுக்குக் காதல், அதனைச் செயற்படுத்துதல், தற்காப்பு ஆகிய உணர்ச்சிகள் காரணிகளாகின்றன.

☐ தலைவி மீது கொண்ட காதல் உணர்வில் பேசும் தலைவனின் தனிமொழிகள் அவர்களின் மனப்போராட்டத்தைப் பிரதிபலிக்கின்றன.

செவ்வியல் இலக்கியங்களில் எதிர்காலவியல்

-முனைவர் கரு. முருகன், உதவிப் பேராசிரியர், -ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கலைக்கல்லூரி, தேவகோட்டை

உலகை எதிர்காலவியல் எனும் சொல்லுக்குள் அடக்கியவை தமிழ்மொழியாகும். தமிழ்மொழியின் உச்சமாகக் கருதப்படுகிற செவ்வியல் இலக்கியங்கள் இப்பொருண்மையை உணர்த்திநிற்கிறது. கணினிவழி கண்டுபிடிப்பில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளெல்லாம் தன்கணிப்பில் கண்டுபிடித்தவர்கள் தொன்மைத்தமிழர்கள் ஆவார்கள். கி.மு.4 ஆம்நூற்றாண்டுக்கு முந்தையமொழி என தொல்லியல் ஆய்வுகள் உறுதிப்படுத்தும் அளவிற்கு சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அச்சான்றுகளுள் ஆலைகள், வீட்டுக்கழிவுகள் எல்லாம் கடத்தி வெளியேற்றிய பாங்குதமிழர்களுடைய எதிர்காலச் சிந்தனைகளை அடுத்தடுத்த தலைமுறைக்கு உணர்த்திச் சென்றிருக்கின்றன. இவற்றோடு படைக்கப்பட்ட படைப்புக்கள் எல்லாம் இதை உள்வாங்கி சரியாகவே செய்திருக்கிறது.

தொல்காப்பியம்

தமிழில் தோன்றிய தொன்மையான இலக்கணநூல் எத்தனை இருந்தாலும் சான்றாகக் கிடைக்கப் பெற்றவை தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியத்தில் மொழியின் இலக்கணத்தை மட்டும் கூறாமல் எதிர்கால விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படைச் சிந்தனையினையும் படைத்திருக்கிறார் .பூகோளத்தில் உள்ள உயிர்களின்நிலை, மானுடத்தத்துவம் ஆகியவற்றினையும் கூறியுள்ளார்.இதனை, பன்னீருயிரும் தந்நிலைதிரியா

மிடற்றுப்பிறந்தவளியின்இசைக்கும் (தொல். எழு. 84)

எனத் தொல்காப்பியர் கூறிய வரிகள் கி.மு.க்கு முற்பட்டவையாகும். இதில் மிடற்றில் பிறந்தவளி என்ற தொடரின்வழியாக பன்னிரு உயிர்களின் பிறப்பிடத்தை குறிப்பிடுகிறார். ஆனால்கி.பி.19ஆம்நூற்றாண்டில்தான் மொழியியல்அறிஞர்கள் எழுத்துக்களின்பிறப்பிடத்தை ஆய்வின்வழியாக அறிவித்தனர்.இவ்வறிஞர்கள் ஆய்வின்வழியாக வெளிப்படுத்தும்முன்பே எழுத்துக்களின் பிறப்பிடத்தை மொழியியல் இலக்கணமாகவும் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

தொல்காப்பிய அறிவியல் பாகுபாடு அறிவியலில் உயிர்களை வகைப்படுத்தும் முறையினை அரிஸ்டாடில் (கி.மு.384-322) தொடங்கிவைத்தார். இவரது வகைப்பாட்டினை மேலும் மேம்படுத்தியவர் கார்ல் லின்னேயஸ்(1707-1778). அறிவியலில் “தொகுதி, வகுப்பு, வரிசை, இனம், சிறப்பினம்” என்ற வகைப்பாட்டினை வைத்து உயிர்களை பிரித்துள்ளனர். தொகுதி என்பது ஒரு பெரிய தொகுப்பாகும் அதாவது இதனை பொதுப்பெயர் என்று கூறலாம்.

இத்தொகுப்பில் உள்ளதனைப் பகுத்து ஆராய்ந்து என்ன வகுப்பு, வரிசை, இனமென்று உயிர்களை உள்ளார்ந்து ஆய்ந்து கூறுவதே பாகுபாடு ஆகும். எ.கா. பூச்சிகள் 29 வகை இருக்கின்றன அவற்றை வரிசை (Classification), பண்பு, உதாரணம், ஏடீரோ

இறக்கைகளில்லை புத்தகப்பூச்சி தொல்காப்பிய மரபியல் நூற்பா உயிர்களின் அறிவினைக் கொண்டு பிரிக்கும் பாகுபாடு என்பது இன்றைய அறிவியல் வளர்ச்சியின் அடிப்படை விதையாகும். ஓர் அறிவு முதல் ஆறு அறிவு வரை உயிர்களின் பகுப்பை தொல்காப்பியர்,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மன்னே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே" (தொல்.மரபு.27)

"தொடு உணர்வு, நா, மூக்கு, கண், செவி, மனம்" என்ற உறுப்பினைக் கொண்டு, அறிவின் அடிப்படையில் உயிர்களைப் பிரித்துள்ளார். அறிவியலில் கூறப்பட்டது போலவே தொகுதி, இனம்., என்று பிரிக்காமல் ஓர் அறிவு, ஈர் அறிவு., எனப் பகுத்துள்ளார் இரண்டும் ஒன்றின் கீழ் அமையும். மேலே கூறியது மேலை நாட்டவரின்உயிரியல் ஆராய்ச்சிக்கு முன்னரே இந்த உலக மனித இனத்திற்கு அறிமுகப்படுத்தியது தமிழனின் எதிர்கால அறிவியல்பண்பேயாகும்.

ஓரறிவு – புல், மரம்.(தொல்.மரபு.28)தொடு உணர்ச்சி.

ஈரறிவு - நந்தும் முரளும்.(தொல்.மரபு.29) மெய், வாயினைஉடையது.

மூவறிவு - சிதலும் எறும்பும்.(தொல்.மரபு.30)தொடு உணர்வு, நா, மூக்குகொண்டது.

நாலறிவுயிர் - வண்டும் தும்பியும்.(தொல்.மரபு.31)'தொடு உணர்வு, நா, மூக்கு, கண்முதலானஉறுப்புக்கள்உள்ளன.

ஐந்தறிவுயிர் - மாவும் மாக்களும்.(தொல்.மரபு.32) விலங்கு, பறவைகளை ஐந்தறிவு கொண்டதாகஇருக்கிறது.

ஆறறிவுயிர் – மக்கள்.(தொல்.மரபு.33).

தமிழ் மொழியின் முதல் இலக்கண ஆசிரியரான தொல்காப்பியர் உடலின் அமைப்பினை வைத்து உயிர்களைப் பகுத்திருக்கிறார். ஒவ்வொரு உயிர்களையும் ஆராய்ந்து அதனை வகைப்படுத்தி உள்ளார்.

ஆழிப்பேரலை

இயற்கையோடு வாழ்ந்த தமிழன் இயற்கையின் உட்கூறுகளை அறிந்திருந்தான். இயற்கையின் விளை பொருட்களை அறிந்ததோடு மட்டுமல்லாமல் கண்ணுக்குப் புலப்படா இடத்தில் நடக்கும் மாற்றங்களை பதிவு செய்திருக்கின்றனர். தற்காலத்தில் சுனாமி என்கிற ஆழிப்பேரலை உலக கடற்கரையோர எல்லைகளை மாற்றி அமைக்கிறது. ஆனால் அதற்கான காரணம் கடலுக்கு அடியிலே ஏற்படுகிற நில அதிர்வு அலைகள். இதனால் எல்லையும் சுனாமியின் பிறப்பிடத்தையும்.

நிலம்புடை பெயரினும், நீர்த்தீப் பிறழினும்

இலங்குதிரைப் பெருங்கடற் எல்லை தோன்றினும் (குறு. 373)

என்ற குறுந்தொகைப் பாடல் ஊரில் எழுந்த அலரால் தலைவி வருத்தம் அடைய அவள் வருத்தத்தைப் போக்க 'இவ்வுலகில் நிலம் பெயர்ந்தாலும் நீரும் தீயும் தன் இயல்பில் இருந்து மாறினாலும் எல்லையே இல்லாத பெருங்கடலுக்கு எல்லை தோன்றினாலும் பிறரது பழிச்சொல்லால் தலைவன் மீது நீ கொண்ட காதல் என்றும் மாறாது என்ற கூற்றின் வழியாக சுனாமிக்கான விளக்கம் உலகிற்கு தந்த மொழி நம் தமிழ். இக்கூற்றினை தமிழகத்து தினசரி நாளிதழான தி இந்து என்னும் பதிப்பில் 08. 03. 2015 வெளியானதில் 'நம் நாட்டிற்கு மிக அருகில் உள்ள மாலத்தீவு எனும் நாடு 2040ல் முழுவது கடலில் மூழ்கி விடும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்' என குறுந்தொகைப் பாடலில் உறுதிப்படுத்தி இருக்கிறது.

திணைப்பகுப்பில் மருத்துவம்

போருக்குச் செல்லும் வீரன் தான் சூடிக்கொள்ளும் பூக்கள் எல்லாம் போருக்கான ஆயத்தப் படிநிலை என்பது மட்டும் பொருளல்ல. இதில் போருக்குச் செல்லும் போது ஏற்படுகின்ற காயம் மற்றும் உடல் நலக் குறைபாடு இவற்றைத் தீர்க்கும் அரும்மருந்தாக பயன்பட்டது. இதற்காகவே இப்பூ சூடப்பட்டது. அன்பின் ஐந்திணை கைக்கிளை, பெருந்திணை இவற்றிற்கான புறனாக வரையறை செய்யப்பட்ட பூக்கள் எல்லாம் அந்த ஒழுக்கம் சார்ந்த நிலைகளில் ஏற்படும் உடல் நலக் குறைபாட்டைத் தீர்க்கும் அரும்மருந்தாக சங்கப் புலவர்கள் அறிவியல் சார்ந்த இலக்கியத்தை எதிர்காலத் தலை முறைக்குக் கூறினர்.

சூடிக்கொள்ளும்பூக்களும்தன்மைகளும்

1. வெட்சி – குறிஞ்சி (அகத்திணை – புணர்தலும்புணர்தல்நிமித்தமும்) ;

ஆ நிரைகவர்தல்(புறத்திணை)

மருத்துவகுணங்கள்– உடல்சூடு, தாகம், மூட்டுவலி.

2. வஞ்சி – முல்லை (அகத்திணை – இருத்தலும் இருத்தல் நிமித்தமும்);

மருத்துவகுணங்கள்–வஞ்சியில் கொடியும்உண்டு மரமும்உண்டு

3. தும்பை –மருதம் (அகத்திணை – ஊடலும் ஊடல்நிமித்தமும்)

மருத்துவ குணங்கள்–குடலில் ஏற்படும் கட்டி, வீக்கம் குணமாக, மயக்கம்

தெளிவிக்க உதவும்.

4. வாகை – நெய்தல் (அகத்திணை–இரங்கலும்இரங்கல்நிமித்தமும்)

மருத்துவகுணங்கள்–வீக்கம், கொப்புளம்உடைந்துவடிதலுக்குமருந்தாகப்

பயன்படுகிறது.உடல்சூட்டினைத்தணிக்கக்கூடியது.

5. காஞ்சி–பாலை (அகத்திணை – பிரிதலும்பிரிதல்நிமித்தமும்)

மருத்துவ குணங்கள்- திடீர் தாக்குதலாகத்தடதடவென அரிப்பு வந்ததனைநீக்க,

ரத்தத்தில் உள்ள எதிர்ப்புசக்தி அணுக்கள் அதிகரிக்க உதவும்

வாகை. தும்பை ஆகிய பூக்களைப் போர்க்களத்திற்குச் சூடிச்சென்றுள்ளுனர். இப்பூக்கள் அவசரகாலத்தில் அவர்களது சிகிச்சைக்கு உதவுவதாக இருந்துள்ளது. சங்ககால மனிதன் தாங்கள் தினமும் உபயோகப்படுத்தும் ஒவ்வொரு பொருளிலும் மருத்துவம் மற்றும் பிற பயன்கள் இருப்பதனை அறிந்து அதனைப் பயன்படுத்தியுள்ளான். தற்காலத்தில் நாட்டுமருத்துவம் என்றவடிவத்தில் தொடர்கின்றது. பூக்கள் மருத்துவத்தில் இருந்தாலும் பிறயாவும் வேறு ஏதேனும் ஒன்றின்மூலம் இன்றும் இருந்துவருகின்றது.

<u>சூரியக்குடும்பம்</u>

சூரியகுடும்பத்தின் இருக்கும் ஒரு கிரகத்தில் இருந்துவந்தவர்கள் தான்மக்கள். என்பதனை சங்கப்பாடல்கள் உணர்த்துகின்றன.

“சென்றகாலமும்வரூஉம்அமயமும்

இன்றுஇவண்தோன்றியஒழுக்கமொடுநன்குஉணர்ந்து

வானமும்நிலனும்தாம்முழுதுணரும்” (மதுரை. 477-479)

என்னும் பாடல் சூரியனிடம் இருந்து வந்தவர்கள் என்பதனைக் காட்டுகின்றது. சூரியகுடும்பத்திற்குப் போய்வரத் தெரிந்தவர்கள் இருந்ததாகவும் இப்பாடல்குறிபிடுகிறது. தற்காலத்தில் பிறகோல்களுக்குச் சென்றுஆராய்ச்சி நடத்தி வருவது போன்று, சங்ககாலத்திலும்

வேறுகோல்களுக்குச் சென்றுவரும் திறம்படைத்திருந்தனர் என்பதனை இப்பாடல்வழி அறியமுடிகிறது.வானவூர்தி போன்று வானத்தில் சென்று வந்ததாகவும் புறநானூற்றில் (புறம். 27) குறிப்பு உள்ளது.

புறநானூற்றில் உலகஆக்கம்

உலக உருண்டையின் உருவாக்கத்தினை இன்றைய அறிவியல் ஆய்வினைத் தொடர்ந்து கொண்டுஇருக்கிறது. எவ்வித அறிவியல் தொழில்நுட்பமும் இல்லாத காலத்தில் தொல்காப்பிய இலக்கண நூலில் கூறியதோடு மட்டுமல்லாமல் 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய புறநானூறாம் எதிர்காலவியலுக்கு உறுதிப்படுத்தியதை,

“மண்திணிந்த நிலனும்
நிலம்ஏந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணியநீரும், என்றாங்கு
ஐம்பெரும்பூதத்து இயற்கைபோலப்” (புறம். 02)

இவ்வுலகமானது பஞ்சபூதம் எனக் கூறப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என ஆனது.என்பதை மட்டும் கூறாமல் இவை ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தது, ஒன்றில் இருந்து ஒன்று பிறக்கிறது என்ற உலகமானுடவியல் தத்துவத்தை அறிவியலோடு அறவியலையும் புலப்படுத்துகிறது.

தமிழ்மொழியினுடைய எதிர்காலவியல் என்பதுதனிமனிதச் சிந்தனை மட்டுமல்லாமல் ‘யாதும்ஊரேயாவரும்கேளிர்’ என்கிற பொதுஉடமைச் சித்தாந்தத்தை உள்ளடக்கி எதிர்காலவியலைச் சிந்திக்கவைக்கிறது. செவ்வியலாகக் கருதப்படும் 41 நூல்களின் 26,350 அடிகளும் மனிதனின் எதிர்காலச்சிந்தனைக்கு விதையாகவே வித்திடுகிறது.

திருக்குறளில் நுண்பொருள் அறிவியல்

ரெ.சந்திரமோகன்,முதல்வர், - சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை

"நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணற்கால்
கண்ணல்லது இல்லைபிற"

இது குறிப்பறிதல் அதிகாரத்தில் அமைச்சர் அறிவுறுத்தும் நுட்பமான செய்திகளை மன்னன் அறிய கண்ணைத்தான் பயன்படுத்துகின்றான் என்பதை மேலெழுந்தவாரியாகப் பொருள் கூறுவர் பெருமக்கள்.

ஆயினும் திருக்குறட்பாக்கள் வெளிப்படையாக தலைப்புக்காக தரும் பொருளை விட நுட்பமான செய்திகளைத் தேடுபவர்களுக்கு நுண்பொருள்களை உருக்கி வைத்திருப்பதற்காகவே வள்ளுவர் திருக்குறளை இயற்றியுள்ளார் என்பதை வெளிக்கொணுற்வதே. இக்கட்டுரையின் நோக்கம், இக்குறட்பாவில் கூட என்னைப்போன்ற அறிவியற் காதலர்க்கு, கண்ணைக்கடந்து ஒரு உலகம் உள்ளது. அதன் மூலம் உயிர் அற்ற பொருள்களில் குறிப்புக்களைக் கண்டு உணர, நுண்ணோக்கிகள் தேவை. அவற்றை வடிவமை என்று சொல்லியிருப்பதாகவே தோன்றுகின்றது.

காதலர்க்கு, காதலி அல்லது காதலன் செயல்கள் பல்வேறு பொருட்களை உணர்த்துவது போல, அவர்அவர்கள் கண்களுக்கு மட்டும் விளங்கக்கூடிய நுண்பொருள்கள் நிறைந்தது திருக்குறள். மேலும் தேடுவோம்.

மூலக்கூறுகளின் அறிவு:-

வஞ்சமனத்தான் படிற்று ஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்
இலம் என்று அசையி இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்பான் நகும்.

நிலம் நகும், பூதங்கள் ஐந்தும் நகும் என்று வள்ளுவர் உயிர்ப்பொருளுக்கான பண்பினை, சடப்பொருள்களுக்கு இருப்பதாக 'நகும்" எனும் சொல்லால் குறிப்பிடுகின்றார்.

நிலம், மூலக்கூறுகளின் தொகுதியாகும். மூலக்கூறுகள் அடர் அடர்த்தியிலிருந்து குறை அடர்வு இடம் நோக்கி நகரும். இது பறவைகள் மற்றும் விலங்குகள் வலசையை ஒத்து இருக்கிறது. எனவே உயிரற்ற பொருள்களுக்கும் அறிவு இருக்கிறதாகக் கருதும் இயற்பியலார் அவர்களின் கருத்துக்களுடன் ஒத்திருக்கின்றது. வளி மண்டலம், கோள்கள், விண்மீன்கள் அனைத்தும் விண்ணில் மிதக்கின்றது.

எனவே அவைகள் ஒன்றனுக்கொன்று முரண்படாமல் இயற்கை விதிகளோடு நடந்துகொள்வதும் இக்கூற்றுக்கு வலு சேர்க்கின்றது.

திருவள்ளுவர் குறட்பாக்களில் ஐன்ஸ்டீன் கண்டுபிடிப்புகள்

திருக்குறளில் "எல்லாப் பொருளும் உள" என்பது ஆன்ற அறிஞர்களின் கூற்றாகும். அங்ஙனமாயின் அதில் தற்கால அறிவியில் கண்டுபிடிப்புக்களும் அடங்கி இருக்கக்கூடும் என்று ஆய்ந்தோர் எண்ணற்றோர். 1970க்குப் பின் கண்டுபிடிக்கப்பட்ட இயற்பியல் கூறான "நானோ தொழில் நுட்பத்தின்" அடிப்படைகள் திருக்குறளில் மலிந்துள்ளது என்பதை பல குறட்பாக்களின் மூலம் நிறுவப்பட்டுள்ளது செம்மொழி மாநாட்டுக் கட்டுரைகள் . தவத்திரு குன்றக்குடி தெய்வசிகாமணி அடிகளார் அவர்களின் உரை ஆழம், கூர்மையும் செறிவும் மிக்கது என்று அந்த உரையின் வாயிலாகத் தாம் கண்ட அரசியல் கருத்துக்களை ஒரு ஆய்வாளர் தொகுத்திருந்தார். (மு.பத்மா, திருக்குறள் பன்னாட்டு ஆய்வுக் கோவை, 2016, தொகுதி 2 பக்கம் 453) . இக்கட்டுரையில் 1945 உலகப் போரில் கிட்லர் படை தோற்ற நிகழ்வை அடிகளார்.

"சிறுபடையான் சொல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்துவிடும்" 497

என்ற குறள் கொண்டு நிறுவியதும், ஜெர்மனியின் வெற்றியை

"கேடுஅறியாக் கெட்ட இடத்தும் வளம்குன்றா
நாடு என்பநாட்டின் தலை" 736

என்ற குறள் கொண்டு நிறுவியதும் நுட்பமாகவும் என் சிந்தனையைத் தூண்டும் வண்ணம் இருந்தது.

1945ல் நடைபெற்ற உலகப் போருக்கு உரிய செய்திகள் 2000 ஆண்டுகளுக்கு முன் என் ஐயன் திருவள்ளுவர் கூறியுள்ளார் என்பது எனக்குள் பெருமை விதைத்தது. அதுபோன்று நோபல் பரிசுகள் பெற்ற சில கண்டுபிடிப்புக்கள் அல்லது அதன் சாரம் குறட்பாக்களில் மறைபொருளாக இருக்கின்றதா என்று ஆராயமுற்பட்டேன். அதில் கிடைத்த சில அற்புத இயற்பியல் தத்துவங்களையும், அதன் அடிப்படை புதைந்துள்ள குறட்பாக்களையும் இக்கட்டுரையில் தந்துள்ளேன். அனைவருக்கும் தெரிந்த குறட்பாக்களில் பெரும்பான்மைச் செய்திகள் அடங்கியுள்ளன என்பது மு.வ.,கலைஞர் உரை மற்றும் தவக்திருஅடிகளார் கட்டுரைகள் கொண்டு இங்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

சார்பியல் தத்துவம்

ஐன்ஸ்டீனின் சார்பியல் தத்துவம் 20ம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு. அதற்கான நோபல் பரிசு 1905ல் வழங்கப்பட்டுள்ளது. ஐன்ஸ்டீன் இந்தக் கோட்பாட்டை நிறுவுவதற்கு மிகவும் உறுதுணையான இரண்டு செய்திகள் பின்வருமாறு அமைந்துள்ளது.

1. இட நிலையாமை
2. காலநிலையாமை

ஐன்ஸ்டீனின் சார்பியல் கொள்கையின்படி அனைத்து இயற்கை விதிகளும் எல்லா இடத்திலும் பொருந்தும். நியூட்டனின் புவியீர்ப்பு விசை போன்று நிலவும், சூரியனும் அது அதற்கான ஈர்ப்புவிசை கொண்டுள்ளது. ஒளியின் திசைவேகம் மாறிலி. ஒளியின் திசைவேகமே உலகில் மிக அதிகம். அதன் வேகம் ஒத்த வேகங்களில் செல்லும் பொருட்களில் நீளம் நகராத் தன்மையின் நீளத்தை விடக் குறைவாகத் தெரியும். அதன் நிறை அதிகரிக்கும். நேரம் மாறும் என்ற கண்டுபிடிப்புக்கள் சிறப்பானவையாகக் கருதப்படுகின்றது.

இனிநாம் அன்றாடம் பயன்படுத்தும் குறட்பாக்களில் இச்செய்தி எவ்வாறு அமைந்துள்ளது என்பதை நாம் காண்போம்.

“கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல”

இக்குறளில் கண்ணால் காட்சியைக் காணப் பயன்படுத்தப்படும் ஒளிப் பரிமாற்றம், கண்ணொடு கண்ணினை நோக்குதல் இது மிகவிரைவில் அமையும். ஒரு நொடிக்கு 3,00,000 கி.மீ வரை பயணிக்கும் ஒளி அலையைப் பயன்படுத்தும் போது வாய்ச்சொற்கள், அதாவது ஒலி அலைகளால் உருவான “வாய்ச் சொற்கள்” என்ன பயனும் இல. இன்றைய ஆப்டிக்கல் தொடர்புகளுக்கு அடித்தளம் தரும் வகையில் ஒளியின் வேகத்தோடு செய்தி பரிமாற்றத்தில் ஒலி அலைகளோ, வேறுவகையான மின், எலக்ட்ரான் பரிமாற்றமோ போட்டி போட இயலாது. ஒளியின் வேகமே அதிவேகம் என்ற செய்திகள் அடங்கியுள்ளது உள்ளங்கை நெல்லிக் கனி. கண்ணொடு கண் செய்த வேலையை ஒலி அலைகள் சுமக்கும் சொற்கள் செய்தது போல் நினைப்பது அறியாமையே ஆகும். அதனால் தான்

“வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னன்
கோல்நோக்கி வாழும் குடி” (544)

மன்னனின் கடைக்கண் மூலம் குடிமக்களுட்கு பல இன்பம் தரப்படலாம் அதுபோன்று வானத்தை நோக்கி வாழும் மக்களுட்கு மழை போன்றதாகுமாம். எனவே நோக்கி என்பதற்கு ஒளியைப்

பயன்படுத்துதல் என்று நாம் கொண்டால் பல நுண்ணிய தகவல்கள் கிடைக்கும். உயிரினங்கள் வான் தரும் மழை நோக்கி வாழுகின்றன. ஒளியைப் பயன்படுத்துகின்றன.

"பொருள் கருவிகாலம் வினைஇடனொரு ஐந்தும்

இருள்தீர எண்ணிச் செயல்" (675)

அதாவது ஒரு காரியத்தைத் துவக்கும் போது 1 . பொருள் 2 . கருவி 3. காலம் 4. வினை 5 . இடம் என்ற 5 காரணிகளை ஒரு சேர நினைந்து தொடங்க வேண்டும். இக்குறட்பாவில் கைப்பொருள், வசதிவாய்ப்புக்கள், அதைச் செய்யும் கருவியாக யாரை நியமிக்கலாம், தகுந்த காலம் தானா? இதனைச் செய்யமுடியுமா? இதைவிடச் சிறப்பான இடம் உண்டா? என்று ஆய்ந்து செய்தல் வேண்டும் என்பது ஆன்றோர் தரும் விளக்கம். ஆயின் பொருள் என்பதை பருப்பொருள் என்றும் கருவி என்பது அதனை அளக்கும் கருவி, எதனை அளக்கின்றோமோ அதை வினை என்று கொண்டு காலம், நேரம் , இடம் என்று கொண்டு ஒரு சோதனை செய்வோமானால் பிழை-இருள், தெளிவான விடை தீர வழி கண்டு செய்தல் வேண்டும்.

காலம் அளக்கும் போது அதில் இடத்தால் பிழை வரும். இடத்தை அளக்கும் போது காலத்தால் பிழை வரும்

$$\Delta x.\Delta t = \frac{h}{2\pi}$$

$$\Delta y.\Delta t = \frac{h}{2\pi}$$

$$\Delta z.\Delta t = \frac{h}{2\pi}$$

என்ற ஹைசன்பர்க் கண்டுபிடிப்பு இக்குறட்பாவில் ஒளிந்துள்ளது துள்ளியமாய் தெரிகின்றது.

"எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பதறிவு"

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்ற குறட்பாக்கள் "இடன்" என்பதை ஒஇ லஇ ண என்பதை அளக்கும் போது அதன் உண்மை அளவினைக் கண்டுபிடித்தல் அறிவு என்ற செய்தி ஒளிந்துள்ளது.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்

கோடாமை சான்றோர்க்கு அணி"

"மிக்கமிகு புகழ் தாங்குபவோதற் சேர்ந்தார்

ஓற்கம் கடைப்பிடியா தார்”

என்ற ஐந்திணை ஐம்பது பாடல் வரிகளில் கூறியது போல் தளர்ச்சிகளை ∆,∆வக் கண்டுகளைய முற்படுதலே மெய்ப்பொருள் காணும் வழி. இதனை நிலையின்மைக் கொள்கை என்று இயற்பியலில் பகர்வர். அதன் வழியிலேயே சார்பியல் காணப்பெற்று, ஐன்ஸ்டீன் நோபல் பரிசு பெற்றார். எனின் வள்ளுவருக்கு அன்றோ அத்தகைய பரிசு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். நம் குறை நீக்கிய ஆன்மா “மகாத்மா”ஆக மாறுவது போல் குறைகளைந்து நிறை செய்யும் நல்லாசிரியராய் வள்ளுவர் திகழ்கின்றார்.

Will the **Next War** Be Fought Over **Water**? As soon as 2025, large parts of the **world** could experience perrennial **water** shortages, says Dr. Upmanu Lall, director of the Columbia **Water** Center and a leading expert on hydroclimatology, climate change adaptation, and risk analysis

இந்தியாவைப் பொறுத்தமட்டில் மே மாதம் வந்துவிட்டால் பல பாகங்களில் நீர்த்தேவை. சுமை ஊர்திகளில் பல கிராமங்களுக்கு குடிநீர் எடுத்துச் செல்ல வேண்டிய நிலைமை. மழைநீர் சேகரிப்பு, சுத்தமான குடிநீர், போன்ற திட்டங்கள் நீர் மேலாண்மையின் இன்றியமையாமையை குறிக்கின்றன. அதிகப்படியான நிலத்தடி நீர் உபயோகத்தினால் பூமிக்கடியில் உள்ள நீரின் அளவுகளில் மாற்றம் ஏற்பட்டு, நீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு உள்ளதாக இன்றைய விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். ஆனால் இந்த முடிவினை தங்களின் அறிவியல் தேடல்கள், சோதனைகள், கணினிகள் மூலம் ஆய்வுசெய்து கூறியுள்ளனர். நம் திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன் இக்கருத்தை எப்படிக்கூறுகிறார் என்று பாருங்கள்.

“வான்நின்று உலகம் வழங்கி வருதலால்

தான் அமிழ்தம் என்றுணரற்பாற்று.”

வானிலிருந்து பெய்யும் மழையினால் தான் உலகம் நிலைபெற்று உள்ளது. அதனால் அவ்வானத்து நீரே அமிழ்தமாகக் கருதப்படுகின்றது.

“அமிழ்தம்” சாவா மருந்து. அதற்கு ஒப்பானது நீர். அது வானத்திலிருந்து பூமிக்கு வந்தது. அதனை அமிழ்தம் போல் சேமித்து அணைவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். உயிர்கள் இந்த பூமியில் நீடித்து வாழ நீர் அவசியம் என்பதும் அதனை அமிர்தமாய் போற்றுவது உயிரின்கடமை என்கிறார் வள்ளுவர்.

நெடுங்கடலும் தன் நீர்மைகுன்றும் தடிந்தெழிலி

தான் நல்காதாகி விடின்.

மேகமானது மழையாகப் பொழிந்து நீரைக் கடலில் கொட்டாவிட்டால் பெரிய கடலும் நீர்வற்றிப்போகும். இங்கே ஒரு ஐயம். கடல் நீர் ஆவியாகி மேகமாகிறது. மேகம் தன்னுடைய

செறிவினைப் பெருக்கி தடித்து ஒரு குறிப்பிட்ட அளவு பெருகியபின் மழையாய் கொட்டுகிறது. இப்பொழுது நாம் அதிகப்படியான நீரை சில இடங்களில் செலவு செய்தோமாயின், அந்த இடங்களில் இருந்து ஆவியாகும் நீர் குறிப்பிட்ட தடிமனுக்கு பெருகுவது இல்லை. நிலத்தடி நீரை அதிகமாகப் பயன்படுத்தினால் மேகம் தடிக்காது. அத்தகைய நிலையில் அழகிய மேகம் மழையாவது இல்லை. அப்படி தன்னைத்தானே பெருக்கிக் கொள்ளும் வேலையை மேகங்கள் செய்துகொள்ள வாய்ப்பு இன்றிப் போனால் என்ன நடக்கும். வுpவசாயம் செய்ய இயலாது போகும். பசிபிணி கொடுமை அதிகரிக்கும். ஊயிரின ஒழுக்கம் மாறுபடும். உலகம் இத்துன்பங்களால் உயிர்கள் மாயும்.

"நீரின்றி அமையாது உலகெனில் யார்யார்க்கும்

வானின்று அமையாது ஒழுங்கு"

ஒழுக்கம் விழுப்பந் தரும். எனவே மனிதன் நீரைப்போற்றி பயன்செய்தல் வேண்டும். அதில் தான் உலக ஒழுங்கு அமைந்துள்ளது. எனவே நீரை சேமிப்பீர் என்று திருவள்ளுவன் அன்றே கூறியுள்ளார் அழகாக. திருக்குறளில் மிகச்சிறந்த இயற்பியல் கருத்துக்களை திருவள்ளுவன வழங்கியுள்ளார் என்றால் மிகையாகாது.

முடிவுரை:-

"நீர் வான்நின்றது, பின்னர் பூமி வந்தது"

அதன் வரவால்தான் உயிர்கள் உருவாயின. பூமியைப் புணர்ந்து உயிரைக் கொணர்ந்தது நீர். பூமிக்கு உயிர் கொடுத்த நீரும் ஒரு நாள் மரணிக்கும் என்ற நுண்ணிய செய்தி நெடுங்கடலும் "தன் நீர்மை குன்றும்" என்ற குறட்பாவில் மறைந்துள்ளது. பூமியின் மையப்பகுதி வெப்பமும், சூரியனின் வெப்பமும் சேர்ந்து கடல்நீர் ஆவியாகி மழை பொழியும் வாய்ப்பு உருவாகிறது என்று தற்கால அறிவியலார் கண்டறிந்துள்ளனர். பூமியின் இரக்ககுணத்தால்தான் கடல் இன்றும் இருந்து உயிர்காக்கின்றது என்பது குறள்காட்டும் நுண்பொருள். நிலமகள் நகும் என்ற சொற்கள் மூலம் மூலக்கூறுகள் அறிவுடையன என்ற செய்தியை வள்ளுவர் தருகிறார்.

எனவே குறள்நெறி வாழ்ந்து, மானுட ஒழுக்கத்தால் தமிழ் மண்ணொழுக்கம்போற்றுவோம். உலகைக்காப்போம்.

நிலவியல் அடிப்படையில் பறம்புமலை

சொ. அருணன், தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், சித்தர் சிவஞானி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொம்மையபாளையம், விழுப்புரம் மாவட்டம்.

தமிழ் மொழி மட்டுமன்று. வரலாற்றுக் கண்ணாடியும் கூட. காலத்தைத் தன் மடியில் இருத்தி அவை வடித்துத் தந்த இலக்கியங்கள் இன்னும் பழமை பேசுகின்றன. மனித குலத்திற்கு மட்டுமின்றி, உயிர்க்குலத்துக்கும் உலகியலுக்கும் கூடத் தமிழ் தெளிந்த வரலாறு கூறுகிறது. நிலமும் பொழுதுமாகப் பகுபடும் அதன் வகைமைகளில் உயிர்ப் பொருள்களோடு இயைந்த உயிரல் பொருள்களும் இடம் பெற்றுள்ளன. அவை இன்றும் காலத்தின் சாட்சியங்களாக விளங்குகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது பாரியாண்ட பறம்புமலை ஆகும். நிலவியல் அடிப்படையில் அதன் அமைவிடம் குறித்து இக்கட்டுரை அமைகிறது.

நிலவியல் ஒரு சிறு விளக்கம்

ஒரு குறிப்பிட்ட ஒன்றின் கூட்டமைவு, கட்டமைப்பு, இயற்பியல் இயல்புகள், வரலாறு, மற்றும் அதனை உருவாக்கிய வழிமுறைகள் என்பவை தொடர்பான அறிவியலும், அவை பற்றிய ஆய்வும் நிலவியல் எனப்படும். இது புவி அறிவியலில் ஒரு பிரிவாகும். நிலவியல் அறிவானது, புவியியல், நிலநெய், நிலக்கரி மற்றும், இரும்பு, செம்பு, உரேனியம் போன்ற உலோகங்கள் ஆகிய இயற்கை வளங்கள் இருக்கும் இடங்களை அடையாளம் காண உதவுகின்றது. மேலும், விலையுயர்ந்த இரத்தினக் கற்கள் மற்றும் கல்நார், மைக்கா, பொஸ்பேற்றுகள், களிமண், படிகக்கல், சிலிக்கா போன்ற கனிமப் பொருட்களைப் பூமியிலிருந்து பெற்றுப் பயனடைவதற்கும் நிலவியல் உதவுகின்றது. பழங்கால வரலாறுகள் கிடைக்கவும் இவை வழிவகை செய்கின்றன.[1] இது இயற்பியலின் ஒரு பிரிவு ஆகும். இவ்வகை நோக்கில் பறம்புமலையைக் குறித்து ஆராய்வது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பாரியது பறம்பு

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலத்திற்குத் தனித்த – முதல் இடம் உண்டு. எட்டுத்தொகையும் பத்துப் பாட்டுமாகப் பரந்து விரிந்திருக்கும் அக்கால மன்னர்களின் செம்மார்ந்த ஆட்சியும் தமிழ்ப்புலவர்களின் உலகளாவிய சிந்தனைகளும் தெரிய வருகின்றன. போர் வீரத்தையும் காதல் நுண்மையையும் மட்டும் சங்க இலக்கியங்கள் பாடவில்லை. பெருங்கொடைக் குணமுடைய வள்ளன்மைப் பண்பினையும் உயிரிரக்கக் கொள்கையையும் அவை முன்னிலைப்படுத்தின.

[1] https://ta.wikipedia.org/wiki/நிலவியல்

இதனை, தமிழிலக்கியம் நமக்குப் பழங்காலத்தில் வாழ்ந்த தமிழரின் வாழ்க்கைச் சூழல்களை மட்டுமின்றி, இந்தியாவின் பிற பகுதிகளில் வாழ்ந்த மற்ற மக்களினங்களின் சூழ்நிலைகளையும், விளக்கமாக எடுத்துக் காட்டுகிறது. பண்டைத் தமிழிலக்கியம் அகல்பெரும் பரப்புடையது. அதேசமயம் அது முன்னால் வேறு எவர் காலடியும் படாத ஒரு புதுநிலப்பரப்புப் போன்ற இயல்புடையதாகவும் இலங்குகின்றது[1] என்னும் குறிப்பினால் உணரலாம்.

அவ்வகையில் சங்க இலக்கியங்கள் முதல், கடை, இடை என மூன்று காலங்களில் எழுவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இதில் கடைச்சங்க வள்ளலாகிய எழுவருள் முன்னிற்பவர் வேள் பாரியே ஆவார். கடையெழுவருள் இவர் முன்னவராகவும் முதல்வராகவும் முன்னிறுத்தப் பெறுகிறார். இவர்களுக்கு ஒரு தனித்த சிறப்புமுண்டு. இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மலை, ஒரு புலவர் என்னும் அமைப்பு இருந்துள்ளது.

சோழநாட்டுக்கு வடக்கே திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு 'மலையமான்கள்' ஒரு சிறு நிலப்பகுதியை ஆண்டு வந்தனர். தகடூரைத் தலைநகராகக் கொண்டு கொங்கு நாட்டின் ஒரு பகுதியை 'அதியமான்கள்' ஆண்டு வந்தனர். இவ்வாறே கொங்குநாட்டில் ஓரி, குமணன் முதலிய சிற்றரசர்கள் சிறு நிலப்பகுதிகளை ஆண்டு வந்தனர். பறம்புமலைநாட்டைப் 'பாரி' ஆண்டு வந்தான். பழநிமலைப் பகுதியை 'வேள் ஆவி' ஆண்டு வந்தான். பொதியமலை நாட்டை 'வேள் ஆய்' ஆண்டு வந்தான்.[2] இவ்வாறு தமிழகத்திலிருந்த சிற்றரசர்கள் பலராவர்.

பாரியின் அவைக்களப் புலவராகவும் உற்ற தோழனாகவும் விளங்கியவர் கபிலர். பாரியாண்ட பகுதியாகப் பறம்பு நாடும் அந்நாட்டின் தலைமையிடமாகப் பறம்பு மலையும் விளங்கியது. பாரியின் கொடைக்குரிய வளமையெல்லாம் தன்னுள் நிறைத்ததாகவும் கபிலர்தம் கவிப் பெருக்குக்குக் கருப்பொருளாகவும் உரிப்பொருளாகவும் விளங்கியது பறம்பு மலையே ஆகும்.

<u>பறம்புமலையின் அமைவிடம்</u>

பாரியின் பறம்புமலை தற்காலத்தில் சிவகங்கை மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் திருப்புத்தூர் வட்டம், சிங்கம்புணரி ஒன்றியத்தில் அமைந்துள்ளது. சிவகங்கை மாவட்டத்தின் முக்கியச் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகவும் இது விளங்குகிறது.

எவ்வியின் உறவினனான வேள்பாரி பறம்பு என்ற ஒரு சிறுநிலப்பகுதியின் தலைவன். ஆனால் புலவர்களுக்கு ஆதரவளித்த மாபெரும் புரவலன் என்ற முறையில் தமிழ்மொழியுள்ளளவும்

---

[1]. கனகசபை, வி, (ஆ.நூ.) அப்பாத்துரை, கா., (மொ.பெ.ஆ.) ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், பக். 3-4 .

[2]. இராச மாணிக்கனார், மா., தமிழக ஆட்சி, **Ш. 13.**

அவன் பெயர் தமிழர் நினைவில் மங்காமல் நிலைபெறத்தக்கது. எவ்வியின் வீழ்ச்சிக்குப் பின் பாரி உயர்ந்த பறம்புமலையையும் அதனைச் சூழ்ந்த நிலங்களையும் கைக்கொண்டு மூவரசர்களில் எவரையும் மேலாளராக ஏற்காமல் தனியாட்சியாளனாக நடக்கத் தொடங்கினான்.[1]

இதனால் ஏற்பட்ட பகையினால் மூவேந்தராலும் வஞ்சித்துக் கொல்லப்பட்ட பாரியின் மறைவுக்குப் பறம்புமலையின் வளமும் ஒரு காரணமாக விளங்கியது மூன்று பேரரசுகளின் எல்லைகளுக்குள் பறம்புநாடு அடங்கவில்லை. அக்கால அமைப்பில் அது தனிக் கூற்றமாகவே விளங்கியது. தற்போதும் தனித்து. நான்கு மாவட்டங்களில் எல்லைப் பகுதியாகவே விளங்குகிறது. பறம்புமலை எனப்படும் பிரான்மலையின் ஒரு பகுதி சிவகங்கை மாவட்டத்திலும் மற்றொரு பகுதி, புதுக்கோட்டை மாவட்டத்திலும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

<u>பறம்புமலையின் வளம்</u>

இலக்கணப் பகுப்பின் ஐவகை நிலங்களில் முதன்மையான குறிஞ்சியைப் பெரிதும் பாடிய காரணத்தாலேயே குறிஞ்சிக் கபிலர் எனப் பெயர் பெற்றார் கபிலர். அவருக்கு அப்பெயர் பெறுவதற்குக் காரணமாக அமைந்ததே பறம்புமலையின் வளமும் இயற்கை சூழ்ந்த அழகியலுமே ஆகும்.

கபிலர் தம் அகப்பாடல்களில் மட்டுமின்றிப் புறநானூற்றுப் பாடல்களிலும் பறம்புமலையின் வளத்தைத் தனித்தே சிறப்பிக்கிறார். அவ்வளங்கள் இன்னும் குறையாமலே உள்ளன. உழவர் உழாது பெறக்கூடிய வளங்கள் அவை.

“ஒன்றே வெதிரின் சிறியிலை நெல்விளை யும்மே
இரண்டே தீஞ்சுவைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே
மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே அணிநிற வோரிபாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே[2]

என்று கபிலர் தமது புறப்பாடலொன்றில் நேரடியாகவே பறம்பின் வளத்தைக் குறித்துக் காட்டுகிறார்.

<u>அரியவகைத் தாவரங்கள்</u>

கபிலர் தாம் இயற்றிய குறிஞ்சிப் பாட்டில் 99 வகையான பூக்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவை பெரும்பாலும் குறிஞ்சி நிலத்திற்குரிய மலர்கள் என்பதும் அவை பறம்புமலையில் நிறைந்திருக்கக் கூடியவை என்பதும் உணர வேண்டியதாகும்.

---

[1]. **கனகசபை, வி, (ஆ.நூ.) அப்பாத்துரை, கா., (மொ.பெ.ஆ.) ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், ப. 185** .

[2]. கபிலர், புறநானூறு. பா.எ.109.

வள் இதழ்,

.....

மா இருங் குருந்தும், வேங்கையும், பிறவும்,[1]

என மலர் வரிசை நீள்கிறது.

இதற்குச் சான்றாக சங்க காலத்தில் பறம்புமலையாக விளங்கிய இம்மலை பக்தி இலக்கியக் காலத்தில் திருக்கொடுங்குன்றம் எனப் பெயர் விளங்கி, திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றபோதும் பல்வகை மணமலர்கள் நிறைந்த நகர் என்றே இம்மலையைக் குறிப்பிட்டுச் சிறப்பிக்கிறார். அவ்வரிசையிலும் அரியவகை மலர்கள் இடம் பெறுகின்றன.

மரவத்தொடு மணமாதவி மௌவல்லது விண்ட
குரவத்தொடு விரவும்பொழில் சூழ்தண்கொடுங் குன்றம்
அரவத்தொடு மிளவெண்பிறை விரவும்மலர்க் கொன்றை
நிரவச்சடை முடிமேலுடன் வைத்தானெடு நகரே.[2]

என்று பறம்புமலையாகிய திருக்கொடுங்குன்றத்தின் மலர்மணத்தைத் தம் பாடல்களில் பரப்புகிறார் நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் திருஞான சம்பந்தப் பெருமான்.

<u>விலங்கினங்கள்</u>

பறம்புமலையில் கானுறை விலங்குகள் மிகுந்திருந்ததைக் கபிலர் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளார். குறிப்பாக சிங்கம், யானை, வேங்கை முதலிய விலங்குகள் பாடல்களில் உவமையோடும் உள்ளுறையோடும் இறைச்சியோடும் இயைந்து வருகின்றன. திருஞான சம்பந்தர் பாடல்களில் யானை, சிங்கம் முதலியன பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

சிங்கத்தின் கர்ச்சனை ஓசையைக் கேட்டு அஞ்சிக் கொல்லும் தன்மையினவாகிய யானைகள் மன எழுச்சி குன்றி மலையிடையே உள்ள குகைப் பகுதிகளில் மறைந்து வைகும் கொடுங்குன்றம்,[3] என்று திருக்கொடுங்குன்றத்துத் தேவாரத்தில் திருஞானசம்பந்தர் காட்சிப் படுத்துகிறார்.

<u>பறம்புமலை அமைப்பு</u>

பறம்புமலை ஓங்கி உயர்ந்த செங்குத்தான பாறையமைப்பைக் கொண்டுள்ளது. சிகரங்களைப் போன்ற உயர்ந்த நீண்ட பாறைகளை உடையது. இதனைக் கபிலர், திணிநெடுங்குன்றம்[4] எனவும், நெடியோன்குன்றம்[5] எனவும் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. அண்ணல் நெடுவரை[6] எனவும் இனியோன் குன்றம்1 எனவும் பாடுகிறார். பறம்புமலைப்

---

1. *கபிலர், குறிஞ்சிப்பாட்டு, பாடலடிகள் 62-95*
2. *திருஞானசம்பந்தர், தேவாரம், திருக்கொடுங்குன்றத் திருப்பதிகம், பா.எ.7.*
3. *மேலது பா.எ.9*
4. *கபிலர், புறநானூறு, பா.எ.109*
5. *மேலது, பா. எ. 114.*
6. *மேலது பா. எ. 116.*

பாறைகள் கடினப் பாறை வகை அமைப்புடையவை. அப்பாறைகள் குடைவரை அமைப்புக்கு ஏற்றவை. ஆதலால் இம்மலையின் பல பகுதிகளில் குகைகள் போன்ற அமைப்புகள் நிறைந்திருக்கின்றன. இங்கு அமைந்துள்ள கோயிலும் குடைவரைக் கோயில் அமைப்பிலேயே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. பாறைகளை அடுத்த உடைமண் பகுதிகளில் அடர்ந்த வனமும் நிறைத்ததாகப் பறம்புமலை விளங்குகிறது.

நீரியலும் மேலாண்மையும்

பறம்புமலை குறிஞ்சி நிலத்துக்கே உரிய அருவிகளையும் சுனைகளையும் உடையது. சங்க காலம் தொட்டுப் பல புலவர்கள் இதனைத் தமது பாடல்களில் பதிவு செய்துள்ளார்கள்.

நல்லூர் நத்தத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையில் பறம்பின் பனிச்சுனை நீரைப் புகழ்ந்து பாடுகிறார்.[2]

நன்னாகனார் பறம்பின் இனிய சுனைத் தண்ணீரைப் புகழ்ந்து பாடுகிறார்.[3]

பெருஞ்சித்திரனார் தனது பாடலில் பறம்பின் வலிமையைப் போற்றிப் பாடுகிறார்.[4]

அதே பொருண்மையில் குறுந்தொகையில் மிளைக்கந்தனார் பாடுகிறார்.[5]

நக்கீரர் அகத்துறைப் பாடலொன்றில் பறம்பின் பனிச்சுனை நீரில் எழுந்த புதுமலர் எனத் தலைவியின் நெற்றியைப் புகழ்ந்து உரைக்கின்றார்.

ஔவையார் பறம்பின் கோட்டைச் சிறப்பைப் புகழ்ந்துரைக்கிறார்.[6]

ஓங்கி உயர்ந்த சிகரங்களிலிருந்து வீழும் அருவிநீர் தேனடைகளோடு கலந்து சுனைகளில் நிறைவதைச் சங்கப் பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன..

வானத்தில் விளங்கும் விண்மீன்களைக் கூட எண்ணி விடலாம். ஆனால், பறம்புமலையின்கண் உள்ள சுனைகளின் எண்ணிக்கையை அறிந்து கொள்ள முடியாது7 எனவும் வானத்தில் உள்ள சனி என்னும் கிரகம் வந்தபோதும், தூமகேது என்னும் தீயகோள் தோன்றிய காலத்தும், பறம்பின் வளம் குன்றாது நிலைத்திருக்கும்8 என்றும் கபிலர் உறுதிபடக் கூறுகிறார்.

அருவியில் பெருகி சுனைகளில் வழிந்து நிறையும் நீரை வீணாக்காமல் சேமித்து வைப்பதற்கான நீர்நிலைகளான குளங்கள் நிறையவே உண்டு. அவையும் முறையாகப் பராமரிக்கப்பட்டு

---

[1]. *மேலது பா. எ.115.*
[2]. *நல்லூர் நத்தத்தனார், சிறுபாணாற்றுப்படை, பாடல் அடிகள் 89-92.*
[3]. *நன்னாகனார், புறநானூறு, பா.எ.176*
[4]. *பெருஞ்சித்திரனார், புறநானூறு, பா.எ.158.*
[5]. *மிளைக்கந்தனார், குறுந்தொகை, பா.எ. 196.*
[6]. *ஔவையார், அகநானூறு, பா.எ.303.*
[7]. *கபிலர், புறநானூறு, பா.எ.119.*
[8] *கபிலர், புறநானூறு, பா.எ.117.*

வேளாண்மைக்கு உதவும்படி மேம்படுத்தப்பட்டவை. இன்றும் அந்நீர்நிலைகள் அழிந்தும் அழியாமலும் பறம்புமலையின் கதை கூறும் வரலாற்று எச்சங்களாக உள்ளன.

<u>உழவில்லாப் பறம்புமலை</u>

பறம்புமலை செங்குத்தான பாறை அமைப்புடைய மலை என்பதனால் சமதளத்தில் மேற்கொள்ளும் நிலைத்த விவசாயத்துக்கு அங்கு வழியில்லை. ஆனால், உழவர் உழாதனவாக விளங்கும் நால்வகைப் பிறபொருட்கள் அங்கு தாமே கிடைக்கும்.

அவை, 1. மூங்கில் நெல், 2. தீஞ்சுளைப் பலா, 3. கொழுங்கொடி வள்ளியின் கிழங்கு, 4. தேனும் அதற்கு இணையான சுவையுடைய அருவிநீரும் ஆகும்.

மூவேந்தர் பறம்பின்மீது முற்றுகையிட்டபோது பாரி எயில் காத்து இருந்தான். உண்ண உணவில்லாமல் உள்ளிருப்போர் மடிவர் அல்லது வெளிவருவர் என எண்ணிய மூவர் படை முற்றுகையை நீட்டித்தது. ஆனால், கபிலர் தாம் வளர்த்த கிளிகளைக் கொண்டு முற்றுகைப் பகுதிக்கு அப்பால் உள்ள விளைநிலங்களில் உள்ள தானியக் கதிர்களைக் கொய்து வருமாறு செய்தார்1 என்று ஔவையார் தனது பாடலில் பதிவு செய்துள்ளார்.

இதன்மூலம் பறம்புமலையில் உழவுத் தொழில் நிகழாததும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அத்தொழில் சிறந்திருந்ததும் பெறப்படுகிறது.

<u>நிலவியல் அடிப்படையிலேயே முற்றுகை</u>

சங்க காலத்தின் பேரரசுகளாக விளங்கிய சேர, சோழ. பாண்டிய அரசுகளைத் தவிர ஏனைய சிற்றரசுகளும் ஆங்காங்கு சிறப்புப் பெற்றிருந்தன. சோழநாடு – சோறுடைத்தும், பாண்டிய நாடு முத்துடைத்தும், சேரநாடு – வேழமுடைத்தும் தத்தம் வளங்களில் மிகுந்திருந்தன. இவ்வளங்களுக்கு இணையான வளங்களுடன் தமக்கென ஒரு மலையையும் ஒரு புலவரையும் கொண்டு சிறந்திருந்தனர் வள்ளல்கள்.

அவ்வகையில் வளங்களில் மிகுந்திருந்த பறம்புமலை நிலவியல் அடிப்படையில் மூவேந்தருக்கும் போட்டியாகவே விளங்கியது. மிழலைக் கூற்றத்தையும் முத்தூற்றுக் கூற்றத்தையும் தனதாகக் கொண்டு தனிப் பெரும் ஆட்சியாளனாக விளங்கிய பாரியும் அவன்தன் புகழைப் பாரறியப் பாடிய கபிலர்தம் பாடல்களும், இவ்விரண்டுக்கும் காரணமாகிய பறம்பும் அதன் நிலவியல் அமைப்பும் மூவேந்தர்களுக்குப் பாரியின்மீதான பகையை ஊட்டி வளர்ந்தன.2

மூன்று பேரரசுகளின் எல்லையாகவும், மூன்று பேரரசுகளின் நடுப்பகுதியாகவும் விளங்கிப் பறம்புமலையைத் தமதாக்க, பாரியை வஞ்சித்துக் கொல்ல வேண்டியிருந்ததை வரலாறு குறிப்பிடுகிறது.

---

[1] *ஔவையார், அகநானூறு, பா.எ.303.*

[2] *பரமகுரு,மரு., பறம்புமலை திருக்கொடுங்குன்றம் வரலாறு, ப.61.*

நிலவியல் அடிப்படையிலான எல்லைப் பிரச்சனையே பாரியின் மரணத்துக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. இதேபோலும் நிலவியல் அடிப்படையிலான எல்லைச் சிக்கல்கள் பிற்காலத்தில் ஏற்பட்டிருப்பதையும் வரலாறு உணர்த்துகிறது.

பிரான்மலை ஒவ்வொரு காலத்திலும் சிவகங்கை, இராமநாதபுர, புதுக்கோட்டை சமஸ்தானங்களின் ஆளுகைக்குட்பட்ட எல்லைப் பகுதியாக விளங்கியுள்ளது. மேய்ச்சல் நிலமாகவும் விளங்கிய இதனை முன்னிட்டுச் சண்டை சச்சரவுகளும் நேர்ந்திருக்கின்றன. அதை ஆங்கிலேயர்கள் தீர்த்து வைத்தனர்[1] என்றும் வரலாறு உணர்த்துகிறது.

<u>பறம்புமலையைச் சுற்றியுள்ள பிற பகுதிகள்</u>

சிவகங்கை மாவட்ட வனச்சரகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் பறம்புமலையாகிய தற்போதைய பிரான்மலை விளங்குகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையின் நீட்சியாக விளங்கும் இப்பறம்புமலையினைச் சுற்றிலும் சிறு, குறு, குன்றுத் தொடர்கள் நீண்டு கிடக்கின்றன. பறம்புமலையோடு இணைந்த வாணரிருப்பு மலை என்னும் வண்ணாரிருப்பு மலையும் செங்கண்ணான் மலையும் ஒருசேரக் காட்சி தருகின்றன.

இதனைக் கடந்து புழுதிபட்டி, துவரங்குறிச்சி, விராலிமலை வரையிலும் வடக்குப் பகுதியில் குன்றுத் தொடர்கள் பரந்துள்ளன. அதுபோலவே மேற்குத் தொடர்ச்சி மலையின் இறுதி எல்லையாகப் பறம்புமலையாக விளங்கினாலும் கிழக்குத் திசையில் பூலான்குறிச்சி, திருமெய்யம், குடுமியான்மலைக் குன்றுகள் வரையிலும் நீட்சி தொடர்கிறது. தென்பகுதியில் கருங்காலக்குடி, திருச்சுனை தொடங்கி ஆனைமலை, கீழவளவுவரை நீண்டு வையையின் எல்லை வரையிலும் உள்ள அழகர்மலைப் பகுதிவரை நீண்டிருக்கிறது.

<u>நிறைவாக...</u>

சங்க காலத்தின் பறம்புமலை இன்று எங்குள்ளது என்று அறிந்து கொள்ள நிலவியல் அடிப்படையில் அமைந்த ஆய்வே வழிகோலுகிறது.

அக்காலத்தில் விளங்கிய இயற்கை வளங்களாகிய பாறையமைப்பு, நீர்நிலைகள், நிலவளம் முதலியவை ஒத்துக் காணப்பட்டு அவை உறுதிப்படுத்தப் பெறுவதற்கு நிலவியல் நோக்கிலான ஆய்வே உதவுகிறது.

பறம்புமலையில் வாழ்ந்த உயிரினங்கள் – விலங்குகள் மற்றும் தாவரங்கள் ஒத்துக் காணப்பட்டு வகைப்படுத்தப் பெற்றுள்ளன.

---

[1] *ராஜா முகம்மது, ஜெ, டாக்டர், புதுக்கோட்டை மாவட்ட வரலாறு, ப.120.*

பறம்புமலையின் அமைவுக்குப் பெருஞ்சான்றாக விளங்கும் பல புலவர்களின் பல்வேறு காலவகைப்பட்ட பாடல்கள் பறம்புமலை குறித்து நிலைத்த தகவல்களையே அளிக்கின்றன. அவை குறிப்பாக நிலவியல் நோக்கிலேயே பாடப்பட்டுள்ளன என்பதும் குறிக்கத்தக்கது.

பறம்புமலையின் நிலவியல் சூழலே பாரியின் பறம்புநாட்டின்மீதான படையெடுப்புக்குக் காரணமாக விளங்கியது என்பதையும் அதே நிலவியல் சூழல் பிற்காலத்திலும் தொடர்ந்திருக்கிறது என்பதையும், தற்காலத்தும் அதே போன்ற நிலவியல் அமைப்பிலேயே விளங்குகிறது என்பதும் இந்த ஆய்வின் மூலமாக நிறுவப் பெற்றுள்ளது.

கட்டடவியல்

முனைவர். யாழ். சு.சந்திரா, இணைப்பேராசிரியர் – தமிழ்த்துறை, - மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி தன்னாட்சி , மதுரை - 625 002.

ஒரு சமூகத்தின் வரலாறு என்பது அச்சமூகத்தின் மக்கள் வாழ்வியல், அரசு, நிர்வாகம் முதலியவற்றோடு அச்சமூகத்தின் தொழில் மற்றும் கலை சார்ந்த வரலாறாகவும் அமைகின்றது எனலாம். இத்தகைய தொழில் மற்றும் கலைகளின் வளர்ச்சியும் மலர்ச்சியும் திடீரென எழுவதில்லை@ மாறாகக் காலங்காலமாக எழுந்த அனுபவத்தின் படிவுகளால் விளைகின்றன. அந்தவகையில் பழந்தமிழ்ச் சமூக வரலாறு என்பது பழந்தமிழரின் தொழில் அறிவையும் கலைநுட்பத்தையும் அறிவது ஆகிறது. அம்முயற்சியின் விளைவாகச் சங்க இலக்கியத்தில் அறிவியல் என்ற இக்கருத்தரங்கு நடைபெறுவது பாராட்டிற்குரியது.

அறிவியல் சார்ந்த தொழில் அறிவும் கலை பயில் நுட்பமும் இணைந்த கட்டிடக்கலை பற்றிய தரவுகளைச் சங்க இலக்கியங்களின் வழி அறிய முற்படுவது ஆய்வின் செல்நெறி ஆகும்.

கட்டிடவியல் :

கட்டிடக்கலை என்பது இன்றைய தொழில்நுட்ப இயலில் பொறியியலின் பிரிவுக்குள் அடக்கிச் சுட்டப்படும் ஒரு துறையாகும். ஈராயிரம் ஆண்டு வரலாற்றை உடைய தமிழ்ச்சமூகத்தில் பொறியியலும் அதன் பிரிவாகிய கட்டிடக்கலை பற்றிய அறிவும், திறனும் நுட்பமும் இருந்தன. இதனைச் சிந்துசமவெளி நாகரிக நகரங்களான மொகஞ்சதாரோவும் ஹரப்பாவும் மெய்ப்பிக்கின்றன. இந்த இடங்களில் அகழ்வாய்வு மேற்கொண்ட சர்-ஜான் மார்ஷலும் ஈராஸ் பாதிரியாரும் அங்குள்ள கட்டிடடங்கள், மாளிகைகள், மண்டபங்கள், குளங்கள் முதலியன திராவிடக் கலைப் பாணியில் உருவானவை எனச் சுட்டுகின்றனர். தற்போது இந்தக்கருத்து அறிஞர்கள் பலரால் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவேதான் அறிஞர் உலகம், 'தமிழரின் கட்டிடக்கலை தமிழரின் மரபுக்கே உரியது தொல்பழங்காலம் முதற்கொண்டே தமிழர் கட்டிடக்கலையைப் பேணி,தனிமுத்திரை பதித்து வளர்ந்து வந்துள்ளனர்' மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் அறிவியல், ப.242 என உரைக்கின்றனர்.

பழந்தமிழர் கட்டிடக்கலையைப் பற்றி அகழ்வாய்வு மற்றும் இலக்கியங்கள் வழி அறியமுற்படலாம். இவ்வரைவில் இலக்கியங்கள் மட்டும் களமாகக் கொள்ளப்படும் செல்நெறி கையாளப்படுகிறது.

பழந்தமிழர் வாழிடம் :

மலைகளிலும் காடுகளிலும் வசித்த மானிட சமுதாயம் விலங்குகளிடமிருந்தும் இயற்கைப் பேரிடர்களிலிருந்தும் தங்களைக் காத்துக்கொள்ள முற்பட்டது. அவ்வேளையில் ஏற்பட்டவையே வாழிடங்கள் ஆகும். செயற்கையாக மனிதர்கள் உருவாக்கிக் கொண்ட வாழிடங்கள் அந்தந்தப் பகுதியின் தன்மைக்கு ஏற்ப அமைந்தன. அந்த வகையில் பழந்தமிழர் தாம் இருந்த சூழலுக்கு ஏற்ப வாழிடங்களை ஏற்படுத்திக் கொண்டமையைச் சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

தாம் வாழும் இடத்திற்கு ஏற்ப நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுத்த தமிழர் அவ்வப்பகுதியில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டே தமது வாழிடங்களை அமைத்துக் கொண்டமையைச் சங்க இலக்கியம் நமக்குக் காட்டுகிறது.

இயற்கையில் பெற்ற மூங்கில், வரகு, கேழ்வரகு முதலியவற்றின் தாள்கள் போன்றவற்றைக் கொண்டு தமிழர் தமது இல்லங்களை அமைத்துக்கொண்டனர். அவர்கள் குழுவாக வாழ்ந்த பகுதி குறிஞ்சி, சிறுகுடி, சேரி, ஊர், பட்டினம், பாக்கம் எனப் பலவாறு அழைக்கப்பட்டன. இப்பகுதி இல்லங்களுக்கும் நகரங்களில் அமைந்த இல்லங்களுக்கும் வேறுபாடு இருந்தன. திணைசார் வாழிடங்கள், வாழ்வதற்கு உரிய இடமாக இருந்தனவேயின்றி, தொழில்நுட்பம் சிறந்து கலையாக உயரவில்லை என்பர். மணவழகன்.ஆ, பழந்தமிழர் தொழில்நுட்பம், ப.90 ஆனால், அவ்வாறான முயற்சிகளே பழந்தமிழ்க்கட்டிடக்கலையின் மூலவேர் என்பதனை நினைவில் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். கட்டுமானத் தொழில்நுட்பம் அமையப் பழந்தமிழர் வாழிடங்களை, வீடு, அரண்மனை, நகரம், கோட்டை எனப் பகுத்துக் காண்போம்.

<u>வீடு</u>

உழவுத்தொழில் செழித்து ஓங்கிய மருதநிலப் பகுதியில் நகரங்களும் நகர அரசுகளும் உருவாயின. அவ்விடங்களில் அமைக்கப்பட்ட பழந்தமிழர் வீடுகள், அழகுடையதாகவும் காற்றோட்ட வசதி உடையதாகவும் இருந்தன என்பதனை

‘சில்காற்றிசைக்கும் பல்புழை நல்லில்’ மதுரைக். 358

என மதுரைக்காஞ்சி சுட்டுகிறது. மேலும் பல்வேறுவிதமான எழிலுடனும் வசதியுடனும் மலை போன்று பெரிதாகவும் அவ்வீடுகள் உள்ளன எனவும் மதுரைக்காஞ்சி 501-502 குறிப்பிடுகிறது.

வீடுகள் மனை எனவும் குறுந். 124:4, 262:3, 321:3, புறம் 210, 211, 281, 293, 296, 311, 337, 338, 343, 354, 379, 384, 390, 395, நெடுநல்: 45 இல் எனவும் குறுந். 8:3, 83:3, 353:4 அழைக்கப்பட்டன.

வீடுகளின் முன்பகுதியில் கொடுங்கைகளுடன் கூடிய இடங்கள் இருந்தன. இவற்றில் புறாக்கள் தங்கி இருந்தன. சந்திரா யாழ்.சு. நெடுநல்வாடை விளக்கமும் நயவுரையும், ப.61 மேலும் காற்று வருவதற்கெனப் பலகணிகள் இருந்ததனை, 'வேனிற் பள்ளித் தெண்வளி தரூஉம் நேர்வாய்க்கட்டளை' நெடுநல். 61-62 என்ற தொடர் உணர்த்துகின்றது.

வீடுகள் அகன்ற பெரிய முற்றத்திணை உடையனவாக இருந்தன. இம்முற்றங்கள் காற்றும் வெளிச்சமும் வருவதற்கு உரிய வாயிலாக அமைந்தமையைக் குறுந்தொகை குறுந்: 41, 46, 53, 228, 235 வழி அறிய முடிகின்றது. இம்முற்றங்கள் வீடுகளின் மையப்பகுதியிலும் குறுந். 41, 46, 53 சிலபோழ்து வீடுகளின் முன்புறமாகவும் குறுந். 225, 228 அமைந்திருந்தன. இம்முற்றங்களில் சிறுபறவைகளும் வளர்ப்புப் பிராணிகளும் குறுந். 46: 2-3 , நெடுநல், 91-99 விளையாடித் திரிந்ததையும் உணரமுடிகின்றது. விழவணி வியன்களமன்ன முற்றம் புறம். 390:4 இருந்தது. இம்முற்றத்தில் தானியங்களை உலர வைப்பது குறுந். 46:2-3 பழந்தமிழர் பழக்கமாகும்.

<u>வான்தோய் மாடம்:</u>

பொதுமக்கள் வாழ்கிற வீடுகள் பலவும் மாடங்களுடன் கூடிய மாளிகைகளாக இருந்தமையையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உயர்ந்தோங்கிய மாடங்களாக விண் முட்டும் அளவுக்கு மாடங்கள் இருந்தமையை, 'வான்உற நிவந்த மேல்நிலை மருங்கு' நெடுநல். 60 'வான்தோய்மாடம்' பெரும். 334 'விண்பொர நிவந்த வேயா மாடம்' பெரும். 346 'விண்தோய் மாடத்து' பெரும். 369 'மாடம் ஓங்கிய மணல்மலி மறுகு' பெரும்: 322 உயர் மாடம்' பட்டினப். 145 'இடஞ்சிறந்து உயரிய எழுநிலை மாடம்' முல்லைப். 86 முதலிய தொடர்கள் தெளிவுபடுத்துகின்றன.

முல்லைப்பாட்டுத் தொடர்களின் வழி, ஏழு மாடிகளுடன் கூடிய மாளிகைகள் இருந்தமையை உணர முடிகின்றது. மேற்கூரை வேயப்படாது, இன்று நாம் உரைக்கும் மொட்டைமாடிகள் இருந்தமையை 'விண்பொர நிவந்த வேயா மாடம்' பெரும். 348 என்ற குறிப்பு உணர்த்துகின்றது. நிலவொளி வீசும் வண்ணம் அவை அமைந்திருந்தமையை, 'சுதைமாட அணி நிலாமுற்றம்' கலி. 99 என்ற குறிப்பு உணர்த்துகின்றது.

உயர்ந்தோங்கிய இம்மாடங்கள் மலைபோன்று இருந்தன என்பதனையும், 'மலைக்கண்ணத்தன்ன மாடம் சிலம்ப' புறம். 390:4 'மலைபுரை மாடம்' மதுரைக். 406 'நிறைநிலை மாடம்' மதுரைக். 451 'பிறங்கு நிலைமாடம்' பட்டினப். 265 'மலைழயாடும் மலையின் நிவந்தமாடம்'

மதுரைக். 355 ‘மழையென மலையென மாடம் ஓங்கி மலை. 484 முதலிய குறிப்புக்கள் உணர்த்துகின்றன.

இந்த மாடங்கள் வண்ணப்பூச்சுடன் இருந்தமையும் புறம். 378 பெரும். 369 பல தூண்களுடன் இருந்தமையும் பட்டினப் 111, 261 பழந்தமிழ் இலக்கியக் குறிப்புகள் காட்டுகின்றன. மேலும் இங்குள்ள தூண்களில் ஒள்ளரி செருகப்பட்டு வெளிச்சத்துடன் விளங்கினமையையும் பட்டினப் 111, பெரும். 348-349 அறிய முடிகின்றது.

<u>சுருங்கையும் புழையும்:</u>

பழந்தமிழர் நனி நாகரிகம் உடையவர்களாக இருந்தனர். தங்களது வீடுகளில் நீர் புழக்கத்திற்கான வசதிகளைச் செய்திருந்தனர். இன்று நகரப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருப்பது போன்ற ‘பாதாளச் சாக்கடை’முறைமை பழந்தமிழ்ச் சமூகத்தில் இருந்தது என்பதனை இலக்கியப் பதிவுகள் உணர்த்துகின்றன.

மணிமேகலை, பல்வேறு சமயத்தாருடன் வாதிட்டுவென்று தனது தாயாகிய மாதவியையும், தோழியாகிய சுதமதியையும், ஆசிரியராகிய அறவணஅடிகளையும் காண விழைந்து கச்சிமாநகர் புகுந்து நடக்கின்றாள். அவள் செல்லும் வழியில், உள்ள

சுருங்கைத் தூம்பின் மனைவளர் தோகையர்
கருங்குழல் கழீஇய கலவை நீரும்
எந்திர வாவியல் இளைஞரும் மகளிரும்
தந்தமில் ஆடிய சாந்துகழி நீரும் மணி. 28:5-8

ஆகிய பகுதிகளைக் கடந்து செல்லுகின்றாள். இதற்கு உரை எழுதும் உ.வே.சா ‘சுருங்கை-நீர் செல்லுதற்குக் கற்களாற் கரந்துபடுத்தது. தூம்பு - சலதாரை’ சாமிநாதையர். உ.வே. மணிமேகலை, ப.326 என உரைக்கின்றார். நீர் மறைவாகச் செல்லும் இம்மாதிரியானஅமைப்பு வீடுகளில் இருந்தமையைப் பரிபாடல் 16:20, 20:15, 104 காட்டுகின்றது. கல்லால் அடைக்கப்பட்ட இவ்வழிகள் இருந்தமையை ‘பாருடைத்த குண்டகழி’ புறம். 14:5 ‘கல்லகழ் கிடங்கு’ மலை.91 ‘கல்லிடித்து இயற்றிய இட்டுவாய்க்கிடங்கு’ மதுரைக்.730 முதலிய தொடர்களும் வலியுறுத்துகின்றன.

வைகையில் பெருக்கெடுக்கும் நீர் ஆரவாரம் வீடுகளில் கேட்கிறது என்ற குறிப்பு, ‘உயர் மதிலில் நீருர் அரவத்தாற் துயில் உணர்வு எழீஇ’ பரி.20:14-15 என்ற தொடரால் அறியப்படுகிறது. மேலும், இதே பாடலின் இறுதியில் நெடிய பெரிய சுருங்கையின் வழியே வரும் புனலை மதுரையிலுள்ள மதிலில் சொரியும்பொழுது, அப்புனல் யானைகள் துதிக்கையில் தூக்கிடும் நீரை

ஒத்துள்ளது. பரி.20: 104-107 என்ற குறிப்பு வருகிறது. இதன்வழி நன்னீர்ப் பங்கீடும் சுருங்கைகள் வழி இருந்தன என்பதனை உணர முடிகின்றது.

'புழை'என்ற சொல் துளை என்ற பொருள்படும் சொல்லாகும். வீடுகளில் 'புழை'எனப்படும் துளைகள் அமைத்தனர் என்பதனைப் பட்டினப்பாலை வழி பட்டினப். 287 அறிய முடிகிறது.

<u>கதவு:</u>

கதவம், கதவு என்ற சொற்களால் சங்கத்தமிழ் சுட்டும் இக்கதவு மக்கள் வாழிடங்களின் காப்பாக உள்ளது. உயர்ந்தோங்கு மதில்களுடன் கூடிய வீடுகளுக்கு உரிய கதவுகள் 'ஓங்கெயில் கதவம்' சிறுபான்மை ஆக உள்ளன. கதவுகளில் அழகுக்காக வைக்கப்படும் குமிழ் போன்ற பகுதி 'குடுமி'ஆகும். கதவுகள் இந்தக் குடுமியோடு மதுரைக்.170 அமைந்தமையை சங்கஇலக்கியம் காட்டுகிறது. இதற்கு 'கதவின் ஒரு பொருள்'எனக் குறிப்பு எழுதுகின்றனர். சாமிநாதையர், உ.வே. பத்துப்பாட்டு, ப.356

கதவுகள் இருபுறமும் சாத்தப்படும் முறைமையில் இரட்டைக் கதவுகளாகவும், தாழ்ப்பாள், கைப்பிடி முதலியன அக்கதவுகளில் பொருத்தப்பட்டமையையும் நெடுநல்வாடை 80-85 காட்டுகிறது.

<u>காலநிலைக்கேற்ற கட்டமைப்பு:</u>

மின்சாரம் கண்டறியப்படாத காலகட்டத்தில் பழந்தமிழர் வாழ்க்கை இயற்கையோடு இணைந்தே இருந்தது. அவர்தம் வீடுகள் காலைநிலைக்கு ஏற்ற வகையில் கட்டப்பட்டிருந்தன.

கோடையின் வெப்பத்தைப் போக்க, வீடுகளின் உயர்மாடம், மேற்பகுதிக் கூரையின்றி அமைக்கப்பட்டிருந்தது. வீடுகளின் உட்பகுதியில் காற்று வரும் பான்மையில் பலகணிகளுடன் கூடிய முறைமையும் இருந்தது. குளிர்காலத்தில் தென்றல் வரும் பலகணிகளைத் திறவாது மக்கள் அடைத்தே வைத்திருந்தனர். சந்திரா.யாழ்.சு.மு.நூ., ப.65 இதனை,

'வானுற நிவந்த மேல்நிலை மருங்கின்
வேனிற் பள்ளி தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலை
பேர்வாய்க் கதவம் தாழொடு துறப்ப' (நெடுநல். 60-63)

என நெடுநல்வாடை விவரிக்கின்றது.

<u>அரண்மனை:</u>

பொதுமக்கள் வாழ்கின்ற வீடுகள் இத்துணை வசதிகளுடன் இருக்க மன்னர் வாழும் இருக்கை பெருஞ்சிறப்புடன் இருந்ததில் வியப்பேதுமில்லை. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும்

அரண்மனை பழந்தமிழ் மன்னர்களின் வாழிடத்தையும் அவர்தம் கட்டிடக்கலை நுட்பத்தையும் புலப்படுத்துகிறது எனலாம்.

அரண்மனையின் நுழைவாயில் மலையளவு உயர்ந்துள்ளது. இரட்டைக்கதவுகள் உள்ளன. கைப்பிடியும், தாழ்ப்பாளும், ஐயவி எனும் கருவியும் பொருத்தப்பட்ட அவ்வாயிலின் வழியே வெற்றிக்கொடியை முதுகில் தாங்கிய யானைகள் வரமுடியும். அதாவது அவ்வளவு உயரிய வாயிலாக உள்ளது என்பதனை நக்கீரர் தெளிவுறுத்துகிறார்.

கதவினை அடுத்து மணல் பரப்பப்பட்ட முற்றம் உள்ளது. அம்முற்றத்தில் மயில்களும், அன்னங்களும் திரிகின்றன. நடுவில் நீருற்றுகள் உள்ளன. புரவிகள் கட்டப்படும் பகுதி உள்ளது. ஆடவர் அணுகா அந்தப்புரம் உள்ளது. வழிகள் தோறும் வெளிச்சத்திற்காக விளக்கு ஏற்றப்பட்டுள்ளது. அந்தப்புரத்தில் பலத்த காவலுக்கு இடையில் அரசியின் அறை உள்ளது. இவ்வாறு பழந்தமிழ் மன்னர்கள் வாழும் அரண்மனையை விரிவாகப் பேசும் நக்கீரர், பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை வகுத்து' நெடுநல். 78 எனவும் சுட்டுகிறார்.

<u>நகரங்கள்</u>

சமுதாய வளர்ச்சியின் ஓர் அங்கமாக அமையும் நகரங்கள் பற்றி சங்கத்தமிழ் விரிவாகவே எடுத்துரைக்கின்றது எனலாம்.

'மாடம் பிறங்கிய கூடல்' மதுரைக். 429 'மாடமலிமறுகிற் கூடல்' மருகு. 71 என மதுரையும் 'முட்டாச்சிறப்பின் பட்டினம்' பட்டினப். 218 எனக் காவிரிப்பூம்பட்டினமும் வஞ்சி நகரும், உறந்தை, திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் திருச்செந்தூர் , திருஆவினன் குடி பழனி திருவேரகம் சுவாமிமலை , குன்றுதோராடல், பழமுதிர்ச்சோலை கொற்கை, எயிற்பட்டினம், மருங்கூர்ப்பட்டினம் அகம். 227-20 கொற்கை, குமரி, தொண்டி, மாந்தை, முசிறி புறம் 343:10 எனப்பல நகரங்களும் ஊர்களும் சுட்டப்படுகின்றன.

இந்நகரங்களிலும் ஊர்களிலும் வீதிகள் அகன்றும் நீண்டும் இருந்தமையை 'யாறுகிடந்தன்ன அகல்நெடும் தெரு' நெடுநல். 30, மலைபடு-481, மதுரைக்.359 எனச் சங்கஇலக்கியம் குறிப்பிடுகின்றது. மேலும், நாளங்காடிகளும், அல்லங்காடிகளும் அம்பலங்களும், மன்றங்களும் இருந்தமையைப் பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி முதலிய சங்க இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது.

மதுரை நகரின் அமைப்பு தாமரை மலர்போல் இருந்தமையை,

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்

பூவோடு புரையும் சீர்ஊர் பூவின்

இதழகந்து அனைய தெருவம் அண்ணல்கோயில்

தாதின் அனையர் நன்தமிழ்க் குடிகள்(பரி. 8:1-5)

எனப் பரிபாடல் பேசுகிறது. பெரும்பாணாற்றுப்படை கச்சிமாநகரின் கட்டமைப்பை பெரும்பாண். 402-411 விரித்துப்பேசும் இதன்வழி பழந்தமிழகத்தில் நகரங்கள் திட்டமிட்டுக் கட்டப்பட்டவையை அறிய முடிகிறது.

கோட்டை:

மன்னர்கள் அரசாளும் நாட்டின் தலைநகரங்கள் பலவும் கோட்டைகளால் சூழப்பட்டிருந்தன. இக்கோட்டைகள் இஞ்சி எனவும் புறம்: 341:5 , பதி. 16:1, 58:6, 62:10 அகம். 35:2, 195:3, மலைபடு. 92 ஞாயில் எனவும் புறம். 21:3-4, 355:1, பதி. 71:12, அகம். 124:16 பட்டினப். 287-288 மதுரைக். 65 , அரண் எனவும் தொல். 1011, புறம். 20:16 அழைக்கப்பட்டன.

தலைநகரங்களைச் சூழ்ந்துள்ள கோட்டைகளின் சுவர்கள் முழுவதும் போர்க்கருவிகள் அமைக்கப்பட்டிருந்தன. ஆகவேதான் தொல்காப்பியர் 'முழுமுதல் அரணம்'என்பார். காவல் மிக்க தன்மை உடையது என்பதால், 'அம்புதுஞ்சும் கடியரண்' புறம். 20:16 எனப் புறநானூறு பேசுகிறது.

சங்க இலக்கியத்தில் பரவலாகக் கோட்டை பற்றிய செய்திகள் இருப்பினும் புறநானூறும் பதிற்றுப்பத்தும் இதனை விரிவாகப் பேசுகின்றன.

துஞ்சுமரந் துவன்றிய மலரகன் பறத்தலை

ஓங்குநிலை வாயில் தூம்பு தகைத்த

வில்லிசை மாட்டிய விழுச்சீர் ஐயவிக்

கடிமிளை குண்டு கிடங்கின்

நெடுமதில் நிரைப் பதணத்து

தண்ணலம் பெருங்கோட்டகப்பா எறிந்த பதி. 22:21-25

என்ற பதிற்றுப்பத்தின் பகுதி, போர்க்கருவிகளோடு கூடிய கோட்டையைக் காட்சிப் படுத்துகின்றது.

கணையமரத்தால் ஆக்கப்பட்ட வலிய உயர்ந்த கதவுகள் மதிலின் வாயிலில் உள்ளன. அவ்வாயிலில் அம்பினைத் தானாகப் பொழியும் ஐயவி துலாம் கட்டப்பட்டுள்ளது. கோட்டையைச் சூழ்ந்து காவற்காடும், ஆழமான அகழியும் உள்ளது. மேலும், கவண், கூடை, தூண்டில், துடக்கு, ஆண்டலை அடுப்பு, சென்றநெறி சிரல், நூற்றுவரைக் கொல்லி, தள்ளிவெட்டி எனக் காவலரே தேவையில்லாத தன்னிறைவுடைய மதிலாகக் கோட்டைச்சுவர் உள்ளது. ஆகவேதான்

நிரைபதணம் என்கின்றனர் போலும். (மாணிக்கவாசகனார், ஆ, பதிற்றுப்பத்து மூலமும் உரையும், ப.47)

இவ்வாறு வெறும் கற்களால் ஆகிய கோட்டையாக மட்டுமின்றி, போர்க்கருவிகளுடன் தானியங்கிப் போர்க்கருவிகளுடன் கூடியதாகக் கோட்டைகள் அமைகின்றன என்பது பழந்தமிழரது கட்டிடக்கலை நுட்பத்தைப் புலப்படுத்துகின்றது எனலாம்.

கலங்கரை விளக்கம்:

'இலங்கு நீர் வரைப்பில் கலங்கரை விளக்கம்' (சிலம்பு 6:41) எனச் சிலம்பில் குறிப்பிடப்படும் தொடருக்குக் 'கலங்கரை விளக்கம் - திக்குக் குறிகாட்டிக் கலத்தை அழைக்கின்ற விளக்கம் எனவும் 'நிலையறியாது ஓடுங்கலங்களை அழைத்ததற்கு இட்ட விளக்கு'எனவும் அரும்பதஉரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் உரைகூறுகின்றனர். சாமிநாதையர். உ.வே., சிலப்பதிகாரம், பக். 181-198

பழந்தமிழகத்தில் கலங்கரை விளக்கம் இருந்தமையை அறிந்தோம். அதன் கட்டுமான நுட்பங்களைப் புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையுள்

'வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்தியை வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவின் மாட்டிய இலங்கு சுடர் நெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும் துறை' பெரும். 346-350

என உரைப்பார். இதன்வழி கலங்கரைவிளக்கு உயர்ந்து இருந்தமை, தள வரிசையுடையதாக இருந்தமை, ஏறுதற்கு ஏணி சாத்தப்பட்டுள்ளமை, உச்சியில் இரவுக்காலத்து தீயிட்டமை முதலியன புலப்படுகின்றன.

கலங்கரை விளக்கைச் சங்க இலக்கியம் மாடவொள்ளெரி அகம்: 255:1-6 எனக் குறிப்பிடுவதனை மயிலை. சீனி. வேங்கடசாமி குறிப்பதும் இங்கு இணைத்து எண்ணத்தக்கதாகும். வேங்கடசாமி. மயிலை. சீனி, பழங்காலத்தமிழர் வாணிகம், ப.70 மேலும், பெரும்பாணாற்றுப்படையில் குறிப்பிடப்படும் கலங்கரைவிளக்கம் 'சோநகரம்'எனப்படும் எயிற்பட்டனம் ஆகும் எனவும் உரைக்கின்றார்.

கட்டுமானப் பொருள்கள்:

ஐரோப்பியர் வருகையின் காரணமாக நமது பழைய மரபுசார் தொழில்நுட்பங்கள் பலவற்றையும் மறந்துவிட்டோம் நாம்! பழங்காலத்தில் சுண்ணாம்பு, கடுக்காய், கருப்பட்டி முதலியவற்றைச்

சாந்தாக்கிக் கட்டிடங்கள் உருவாக்கினர், தமிழர் என்பது செவ்வழிச்செய்தியாகும். சங்க இலக்கியங்கள் தமிழர்க்கே உரிய பல கட்டுமானப் பொருட்களைக் காட்டுகின்றன.

கட்டுமானப் பொருள்களில் இன்றியமையா இடம் பெறுவது மணல். இதனை அரைமண் புறம். 341:5 , பூச்சுமண் அகம். 195:3 என இரு விதமாகச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. மணவழகன், ஆ, மு.நூ: ப.101 மண்ணோடு கருங்கல் புறம். 14:5, 331:1, அகம். 79:4, மலை. 91, மதுரைக். 730 செங்கல் 9அகம். 167:13, பதி. 68:16, பெரும்பாண். 405 ,பளிங்குக்கல் அகம். 399:14 முதலிய கல்வகைகள் பயன்படுத்தப்பட்டன. மேலும் ஓடுகளும் உலோகத்தகடுகளும் மேற்கூரைகளாகப் பயன்படுத்தப் பட்டமையைத் திறனாய்வாளர் குறிப்பிடுவார். முன்னது. ப.102 .

<u>வண்ணப்பூச்சு:</u>

பழந்தமிழர் கோட்டை கட்டி ஆண்ட பெருமையுடையவர்கள் என்பதனை முன்னர்க்கண்டோம். அக் கோட்டைகள் செம்பினால் பூச்சுப் பெற்றிருந்தன. என்பதனைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. புறம். 37: 9-10, 201:9, அகம். 375:13 மேலும்,வெளிப்புறச் சுவர்கள் உட்புறச் சுவர்கள், தூண்கள், மேல்விதானம் முதலியன வெவ்வேறு விதமான வண்ணங்களால் பூச்சுப் பெறுவதனை நக்கீரர் குறிப்பிடுகிறார்.

வெளிப்புறச்சுவர்களில் வெண்ணிற வண்ணச்சுதை 'பூசப்பட்டுள்ளது, தூண் கருநிறமுடையனவாக உள்ளது. உட்புறச் சுவர்கள் செம்பு உருக்கினாற்போன்று செந்நிறம் பூசப்பட்டுள்ளது. உட்புறச்சுவர் அழகுடையனவாக அமைய 'உருவப்பல்பூ ஒரு கொடி'எனப் பூ வேலைப்பாடு உடையதாக இலங்குகிறது. நெடுநல் 110-114

மேல்விதானத்தில் வண்ண ஓவியம் வரையப்பட்டுள்ளது நெடுநல். 158-162 நிலவும் உரோகிணியும் இணைந்திருக்கும் அவ்வோவியம் நெடுநல்வாடைத் தலைவியின் பிரிவுத்துயரை மிகுவிக்கிறது.

<u>தொழிற்கலைஞர்கள்:</u>

கட்டிடக்கலை வல்ல தொழிலாளர்கள் பலரும் மிகப்பெரும் நுட்பத்தோடு செயலாற்றிய சிறப்புடையவர்களாக இருந்தனர். ஆகவேதான் அவர்கள் தொழிலாளர் என்று குறிப்பிடப்படாமல் வல்லுநர்களாகச் சுட்டப்படும் பான்மையைச் சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது.

'வைகல் எண்தேர் செய்யும் தச்சன்' புறம். 87:2-3 என ஔவையார் சிறப்பிக்கும் தச்சரும், கொல்லரும், நூலறி புலவரும் வாஸ்து வல்லுநர் கட்டிடக்கலை சார்ந்த தொழில் வல்லுநர்களாக விளங்குகின்றனர்.

நெடுநல்வாடையின் அரண்மனையைக் கட்டிய தொழிலாளி நக்கீரரால் 'கைவல் கம்மியன்' நெடுநல். 85) எனச்சிறப்பிக்கப்படுகின்றான். சிறுபாணாற்றுப்படையில், 'கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி' சிறுபாண். 256 எனவும், 'கருங்கைக் கொல்லன்' புறம். 21:7 என்று சுட்டப்படுகின்றான்.

நெடுநல்வாடையில் அரண்மனைக் காட்டுமானத்தைச் செய்தவன், 'நூலறிபுலவர்'ராகக் குறிப்பிடப்படுகிறார். நெடுநல். 76 உரைகூறப்புகுத்த உ.வே.சா. இதனை அங்குரார்ப்பனம் எனவும் உரைப்பார். இன்றைய 'வாஸ்து'போன்று திசைகளையும் தெய்வங்களையும் அறிந்து மன்னர்க்கு உரிய மனையை வகுத்தனர் என்பார் நக்கீரர் இவ்வாறு பழந்தமிழகத்தில் கட்டிடம் கட்டும் தொழில் கட்டிடக்கலையாகவும் கட்டிடத் தொழிலாளர்கள் கலைஞர்களாகவும் உள்ளமையை உணரமுடிகின்றது.

<u>தொகுப்புரை:</u>

- பொறியியலின் ஒரு பிரிவாகிய கட்டிடவியல் பழந்தமிழகத்தில் இருந்த ஒரு தொழில் நுட்பமாகும்.
- நிலத்தை இயற்கை அமைப்பின் அடிப்படையில் அவற்றைப் பகுத்துப் பெயரிட்டிருந்தனர் பழந்தமிழர்
- இயற்கையோடு இயைந்த வாழ்வை உடைய பழந்தமிழர்கள் நகர வாழ்க்கை நிலைக்கு உயர்ந்தபோது செயற்கை வாழிடங்களை உருவாக்கத் தொடங்கினர்.
- அவ்வாழிடங்கள் வீடு, அரண்மனை, நகரம், கோட்டை எனப் பகுத்து நோக்கும் முறைமை கையாளப்படுகிறது.
- வீடுகள் 'மனை''இல்'என அழைக்கப்பட்டன. அழகுடையதாக, காற்றோட்டம் உடையதாக, பல்வேறு வசதிகளுடன் விளங்கின
- கொடுங்கைகள், முற்றம், பலகணி, மாடம், சுருங்கை, புழை, தாழ்ப்பாள், கைப்பிடிகளுடன் கூடிய கதவு முதலியன பழந்தமிழர் வீட்டில் இருந்த அமைப்புகளாகும்.
- 'மொட்டைமாடி ஏழுதளம் முதலியனவும் அன்றே தமிழர் வாழிடங்களில் இடம்பெற்றிருந்தன.
- இன்றைய பாதாளச்சாக்கடை, நன்னீர்ப்பங்கீடு முதலியன அன்றே தமிழ்ச்சமூகத்தில் செம்மையாகத் திகழ்ந்தன என்பது தெரியவருகிறது.
- காலநிலைக்கேற்ற முறைமையில் வீடுகளின் கட்டுமான முறைகள் இருந்தமை, பழந்தமிழரின் கட்டிலடக் கலையை உணர்த்துகின்றன.

- பெரும்பயர் மன்னர்க்கு ஒப்ப அரண்மனைக் கட்டுமானம் அமைத்திருந்தது. மலையளவு உயர்ந்த நிலைகள், தாழ்ப்பாளோடு கூடிய கதவு, முற்றம், நீரூற்று, அந்தப்புரம் முதலியன தனித்தனியே இருந்தன.
- திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரங்களில் தெருக்கள் அகன்றும் நீண்டும் அமைந்து இருந்தன. நாளங்காடிகள், அல்லங்காடிகள் அம்பலங்கள், மன்றங்கள் இருந்தாமையையும் உணரமுடிகின்றது.
- மதுரை, கச்சி முதலிய தலைநகரங்கள் தாமரைப்பூ போல் இலங்கின.
- கோட்டைகள் அகழிகளால் சூழப்பட்டும் போர்க் கருவிகளால் நிரப்பப்பட்டும் நகரங்களைக் காத்துக்கிடக்கின்றன: கவண், கூடை, தூண்டில், தூக்கு, ஆண்டலை அடுப்பு, செந்நெறிசிறல், நூற்றுவரைக்கொல்லி, தள்ளிவெட்டி முதலியவன அக்கருவிகள்!
- இரவில் கடலில் செல்லும் கப்பல்களை வழி நடத்தக் கலங்கரை விளக்கம் பழந்தமிழர் காலநுட்பத்தை வெளிச்சமிடுகிறது.
- அரைமண், பூச்சுமண் செங்கல் கருங்கல், பளிங்கு முதலியன கட்டுமானப் பொருள்களாக விளங்கின.
- வண்ணப்பூச்சு வெவ்வேறு இடங்களுக்கு வெவ்வேறு விதமாகத் தீட்டப்படும் பான்மை தெரியவருகிறது.
- கட்டிடத் தொழிலாளர்கள் அவர்தம் அருஞ்செயலில் வாழிடத்தை கலை மிளிர் இடமாக்குகின்றனர் ஆகவே, கட்டிடத்தொழில் கலையானது தொழிலாளர்கள் கலைஞர்கள் ஆயினர்.

துணைநூற்பட்டியல்

1. சந்திரா.யாழ்.சு., நெடுநல்வாடை விளக்கமும் நயவுரையும், செல்லப்பா பதிப்பகம், 2008
2. சாமிநாதையர். உ.வே. ப.ஆ மணிமேகலை உ.வே.சா. நூல்நிலையம். 1931
3. சாமிநாதையர். உ.வே. ப.ஆ பத்துப்பாட்டு, உ.வே.சா.நூல் நிலையம், சென்னை, 1950
4. சாமிநாதையர். உ.வே. ப.ஆ சிலப்பதிகாரம், உ.வே.சா.நூல்நிலையம் சென்னை, 2008.
5. சாமிநாதையர், உ.வே. ப.ஆ குறுந்தொகை, உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 2009.
6. சுப்பிரமணியன் ச.வே. ப.ஆ பத்துப்பாட்டு மூலம், மணிவாசகர் புத்தகநிலையம், 2006.
7. துரைசாமிபிள்ளை, ஔவை. சு. உ.ஆ புறநானூறு 1-200 கழகவெளியீடு, சென்னை, 1947.

8. துரைசாமிப்பிள்ளை. ஒளவை. சு. உ.ஆ புறநானூறு 201-400 கழக வெளியீடு, சென்னை, 1951

9. பலராமன். க, பழந்தமிழில் அறிவியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 2009

10. மணவழகன் ஆ, பழந்தமிழர் தொழில்நுட்பம், அய்யனார் பதிப்பகம், 2010

11. மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர்அறிவியல், உதகம், திருச்சி, 2005

12. வேங்கடசாமி, மயிலை. சீனி. பழங்காலத் தமிழர் வாணிகம்,. 2011

சங்கத்தமிழில் வனவியல் - ஒரு பார்வை

அ. அரவரசன், வனஅலுவலர், தேவக்கோட்டை

மாந்த இனத்தின் வாழ்வியல் கூறுகளில் வனவியல் எவ்வாறு ஒன்றியும் இணைந்தும் ஊடுருவியும் உள்ளது என்பதை சங்கத் தமிழ் இலக்கியம் எவ்வகையில் எடுத்துரைக்கின்றது என்பதை பேராழியின் துளி நீரரை சுவைத்துப் பார்க்கும் நோக்கில் நவில்வதே இக்கட்டுரை.

மனித இனம் முதலில் தோன்றிய பகுதி கடல்கொண்ட தமிழகத்தின் தென்பகுதி என்றும் அதன் பெயர் "லெமூரியா" என்றும் அதன் வரலாற்றை நுணுகி ஆராய்ந்து வரையறுத்த வரலாற்று ஆய்வறிஞர்கள் பதிவு செய்துள்ளனர். இதில் லெமூரியா என்பது "லெமூர்" என்ற குரங்கின் பெயர்தான் என்பதை நோக்கும் போது பிற்காலத்தில் மனித இனத்தின் மூதாதையர் குரங்குதான் என்று டார்வின் என்ற மேனாட்டு மாந்தவியல் அறிஞனின் கூற்று ஒத்துப் போவதை உணரலாம்.

இங்கு தொடங்கும் வனவியல் என்பது தாவரவியல், விலங்கியல், பறவையியல் , பூச்சியியல், நுண்ணுயிரியல் . இயற்கையின் சூழலியல் சுற்றுப்புறவியல் என பல்கிபெருகிய அனைத்தையும் உள்ளடக்கிய "பேரியல்" என்பதே வனவியல் என்பதை மனிதில் நிறுத்தினால் அதில் உள்ளடங்கிய தாவரவியலையும் விலங்கியலையும் பறவையியலையும் சேர்ந்த ஒரு சில செய்திகளை கீழ்கண்டவாறு நுகரலாம்.

தலைவி உயிருக்கம் தலைவன் உயிருக்கும் கூற்றுவனாக ஒரு மதங்கொண்ட யானை வந்தது என்றும் அதிலிருந்து விடுபடமுடியாமல் தவித்த நிகழ்வை தோழி உரைப்பதாக வரும் செய்தியில் உள்ளீடாக மேற்கண்ட இருவரின் நிலையும் என்னவாகுமோ என்ற அச்சநிலை உச்சம் பெறுகிறது. இதனை

"காரிப் பெயல் உருமின் பிளிறி சீர்த்தக
இரும்பிணர் தடக்கை இருநிலம் சேர்த்தி
சினம் திகழ் கடாஅம் செருக்கி மரம்கொப்பு
மையம் வேழம் மடங்களி;ன் எதிர்தர
உய்வுஇடம் அறியேம்ஆகி ஓய்வென
திருந்துகோர் எவ்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்து அவற்பொருந்தி
சூர்வறு மஞ்ஞையின் நடுங்க. . . "

என்ற குறிஞ்சிப்பாட்டு உணர்த்தும் விதத்தில் மதம் கொண்ட வேழத்தின் பிளிறவையும் அது செய்யும் ஆர்ப்பாட்டமான செயல்களையும் ஓவியம் போல் காணலாம். யானையின் செயல்கள்

அரிமாவின் பார்வை மயிலின் சாயல் என்ற பன்முகத்தன்மையை தெள;ளிதின் உணரலாம். புனைவியல் காட்சி எனினும் நடப்பியல் நிகழ்வை நலம் அகப்பார்வையில் காணுமாறு வைத்துள்ளதை எண்ணி எண்ணி மகிழலாம்.

அதுபோலவே தலைவன் தலைவியை தேடிவரும் நிகழ்வில் எதிர்ப்படும் பகையின் வகைகளை கூறிடும்போது, இரவிலே தலைவன் வருகின்றான்;. நீர்நிலைகளில் நீந்திவரும் சூழலில் ஆங்கே முதலைகள் இருக்கின்றன. அதை;தாண்டி வரும்போது விலங்குகளின் பகை என அடுத்துடுத்து பகைதனை சந்திக்கும் போது தலைவனுக்கு என்ன ஆகுமோ? ஏதேனும் உயிருக்கு இறுதி ஆகிடுமோ? என எண்ணி தோழி உணர்த்தும் பாங்கு நமக்கு சேர்த்தே சொல்லியது போல உள்ளது. அதனை,

“ . . . . . கங்குல்

அளைசெரிப உழுவையும் ஆளியும் உளியமும்
புழற்கேட்டு ஆமான், புகல்வியும் களிறும்
வலியின் தப்பும் வன்கண் வெஞ்சினத்து
உருமும் சூரும் இரைதேர் அரவமும்
ஒடுங்கு இரும் குட்டத்து அருஞ்சுழிவழங்கும்
கொடுந்தாள் முதலையும் இடங்களும் கராமும்
நூழிலும் இழுக்கும் ஊழ்அடி முட்டமும்
பழுவும் பாந்தளும் உளப்பட பிறவும்
வழுவின் வழாஅ விழுமம் அவர்
குழுமலை விடரகம் உடைய. . . . “

என்று இயம்பிடும் போது நாமும் திகைக்கிறோம்.

உயிரினங்களில் சிற்றினமாக உள்ளவற்றின் பெருமையினைப் பேசவந்த புலவன் , ‘‘இடியோசை முரசு அதிர்வுடன் கேட்கிறது. யாழ் இசைக்கு வண்டின் ஓசை (ரீங்காரம்) உவமையாக கூறும் வழக்கம் எனினும் அழகுமிளிரும் வரிகளை யாழ்போல் ஆரவாரிக்கின்றது என்பதைக் காட்சியாக்கியபதையும் வண்டுகளில் ஆண் இனமும் பெண் இனமும் புணர்ச்சிவிரும்பி “இம்மென” இமிருவது போன்றதுதான் “யாழிசை” என்னும் நுட்பத்தை நுணுக்கமாக கூறிடும் காட்சியை,

‘‘நைவளம் பழுநில பாலை வல்லோன்
கைகவர் நரம்பின் இம்மென இமிரும்

மாதர் வண்டொடு கரும்பு நயத்து இறுத்த" என்று கலித்தொகை இயம்புகிறது.

ஒரு மாலைப்பொழுது அந்தி மயங்கிய நேரம். அப்போத மான் கூட்டம் மரச்செறிவுப்பகுதியில் திரள, பசுக்கூட்டம் பல்வகையில் திரள அன்றில் பறவை தன் குரலில் கூவ, நாகப்பாம்பு தனது நாகமணியின் ஒளியை உமிழ, ஆம்பல்மலர் தனது அழகிய இதழ்களை கூம்பச்செய்திட, ஆம்பல் அம் தீம்குதல் மூலம் நல்லிசை மீட்ட , வனமனையில் உள்ள பெண்டிர்கள் விளக்கை ஏற்றிவைத்து ஒளிவெள்ளம் பாய்ச்ச தீக்கடைக்கோல் கொண்டு தீ மூட்ட மேகங்கள் திரண்டு வந்து இடியென வல்லோசையுடன் கூடிய கானம்பாட , புள்ளினம் ஆர்ப்பரித்து குரலிசைக்க என்று மாலைக் காட்சியை ஒரு எழில்மிகு ஓவியம் போல் தீட்டியுள்ளது போல் விவரித்துள்ளதை

''மான் கணம் மரமுதல் தெவிட்ட ஆண்கணம்
கன்றுபயிர் குரலமன்று நிறை புகுதர
ஏங்குவயிர் இசைய கொடுவாய் அன்றில்
ஓங்கு இரும்பெண்ணை அகமடல் அகவ
பாம்புமணி உமிழ பல்வயின் கோவலர்
ஆம்பல்அம் தீம்குழல் தெளிவிளிபயிற்ற
ஆம்பல் ஆடப் இதழ் கூம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
அந்தி அந்தணர் அயர கானவர்
விண்தோள் பணவைமிசை ஞெகிழி பொத்த
வானம் மாமலை வாய்சூழ்பு கறுப்ப, கானம்
கல்லென்று இரட்ட புள்ளினம் ஒலிப்ப"

என்று கலித்தொகை கழறும் காட்சிப்படிமத்தில் நாம் சொக்கிப் போகிறோம். இதில் கூறப்பட்டுள்ள அனைத்து வரிகளிலும் இயற்கையின் சமன்பாடும் பேரழகம் தெள;ளிதின் ஒளிவிட்டாலும் ''பாம்பு மணி உமிழ" எனும் வரியில் தற்கால அறிவியல் உண்மை அந்தகமாகி உள்ளதை நாம் கவனித்தில் கொள்ள வேண்டும். நாகப்பாம்பு மணியை உமிழாது என்பதே உண்மையானது.

கானகத்தின் பேரினமான யானைகள் உள்நுழையும் அளவுக்கு உள்ள பெரிய மலையை பகுத்தாற்போல அழகும் எழிலும் பொருந்திய நிலையுடன் கூடிய கதவுகளை உடைய மிகப்பெரிய அரண்மனையின் நுழைவு வாசல் வழியாக உள் நுழைந்தால் மிக அழகிய முன்றில் காணப்படுகின்றது.

அம்முற்றத்தில் மயிர் நீப்பின் வாழாக் கவரிமானும நீரை விடுத்து பாலை மட்டும் உண்ணும அன்னமும் துள்ளித் திரிகின்றன என்ற காட்சியைபடம் பிடித்துக்hகட்டும் பாடலை,

‘‘திருநிலை பெற்ற தீதுநீர் சிறப்பின்
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து
நெடுமயிர் எகினத் தூநிற ஏற்றை
குறுங்கால் அன்னமொடு உகளும் முன்கடை”

என்ற நெடுநல்வாடை காட்டும். இதில் கூறப்பட்டுள்ள இரண்டு விதமான நிகழ்வுகளாக உள்ள அதாவது கவரிமானும் அன்னமும் துள்ளிவிளையாடும் நிகழ்வில் அறிவியல் உண்மை ஏதும் இல்லை என்று இன்றைய அறிவியல் சொல்லும். இதில் சொல்லப்படும் விலங்கான “கவரிமான்” என்ற விலங்கு இம்மண்ணில் இல்லை. “கவரிமா” என்ற விலங்குமட்டும் உண்டு. கவரிமான் என்று எந்த வித மான் இனத்திலும் இல்லை என்பதே விலங்கியலாளர்கள் கூறும் ஆய்வுச்செய்தி. எல்லா உரையாசிரியர்களும் புனைவுடன் கூடிய செய்தியாக பதிவிட்டுள்ளதாக இலக்கிய உலகம் பற்றி அறிவியல் உலகம் சொல்கிறது. அதுபோலவே அன்னப்பறவையான தண்ணீரில் கலந்துள்ள பாலை பிரித்து உண்ணும் என்ற செய்தியிலும் அறிவியல் உண்மை இல்லை என்பதே பறவையியல் வல்லுநர்களின் ஆய்வு முடிவாகும். இருப்பினும் இச்செய்தியில் கூறப்பட்டுள்ள நிகழ்வில் வந்து போகும் அன்னத்தையும் கவரிமானையும் இலக்கியச் சுவை கருதி மனதில் இன்பமுடன் அசைபோடலாம்.

மேலும் கலித்தொகை தரும் பாடல் வரிகள் பொதிந்துள்ள பல நூறு பாடல்களின் ஒரு பாடலில் ‘‘அரக்கு” பற்றிய செய்தி உள்ளது. அரக்கு பற்றிய செய்தியில் மகாபாரதம் தோன்றிய காலத்தில் அரக்குமாளிகை இருந்ததாக வரும் தகவலின் தொன்மை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இந்திய மண்ணில் உலவி வருகின்றது. எனினும் மனித வாழ்வுக்கு நற்பயன் தரும் பூச்சிகளில் (தேனீ, பட்டுப்பூச்சிபோன்றவை) அரக்குப்பூச்சியும் ஒன்று. 1787 ல் ஜான்கேர் என்ற பிரெஞ்சு தேசத்து பூச்சியியல் அறிஞர் கண்டு பிடித்து அதன் வாழ்க்கைச் சுழற்சியை உலகிற்கு அறிமுகப்படுத்தியதாக அறிவியல் உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. “காக்சிடே “ என்ற பூச்சிக்குடும்பத்தை சேர்ந்த அரக்குப்பூச்சியின் விலங்கியல் பெயர் லேக்கிபர் லேக்கா ( ) என்பதாகும். (இதில் என்ற சொல்லிவரும் பதத்தினை அது தரும் அரக்கிற்கு பெயராக இட்டுள்ள செய்தி சுவையானதாகும்)

ஆனால் அரக்கு பற்றிய சங்கப்பாடல்களில் குறிப்பாக கலித்தொகையில் “பாலைக்கலி” பகுதியில் இடம் பெற்றுள்ள

‘‘வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
ஐவர் என்று உலகேத்தும் அரசர்கள் அகத்தராக்
கைபுனை அரக்கு இல்லை கதழ்எரி சூழ்ந்தாங்கு
களிதிகழ் கடாஅத்த கடுங்களிறு அகத்தவா
முளிகழை உயர்மலை முற்றிய முழங்கு அழல்
ஒள்ளுரு அரக்கு இல்லை வளிமகன் உடைத்துத்தன்
எழு. . . . . கவினே”

என்ற பாடலில் அரக்கு பற்றிய விவரம் விரவியுள்ளன. இதில் அரக்கு மாளிகையை நெருப்பு சூழ்ந்துகொண்டபோது பாண்டவர்கள் எப்படி வெளியேறினார்களோ அது மதங்கொண்ட யானை உள்ளே அகப்பட்டுக்கொள்ள அதிலிருந்து அது எப்படி மீண்டதோ அதுபோல் உளது என்றும் யானை தன் கூட்டத்தைக் காப்பாற்ற அத்தீயை மதித்து அழித்து வெளியேறியது ஒருங்கிணைத்து பாடியுள்ளமை வியப்புக்குரியது எனில் அதுமிகையில்லை.

நெருப்பு போன்ற வெப்பத்தை உமிழும் காடு துடிபோலும் வடிவுடைய கால்களைக் கொண்ட கன்று கலக்கி சேறாக்கி சிறிது நீரையும் காதல் துணையென விளங்கும் பிடிக்கு முன்னே ஊட்டிவிட்டு அதன்பிறகே தான் உண்ணும் களிறும் உளது என்ற காட்சியினையும்

தன் அன்பைக் கவர்ந்து கொண்ட மெல்லிய மென்புறா கோடையின் வெப்பத்தில் தளர்ந்து வருந்தும்பொது தனது மெல்லிய சிறகை விரித்து நிழல் அளித்து வெப்பத்தின் தீமையை அதன் தாக்கத்தால் ஏற்பட்ட வருத்தத்தை போக்கும் ஆண்புறாவும் உளது என்ற காட்சியினையும்

மலைமேல் வளரும் மூங்கில பட்டுப் போய்விடும் அளவில் கதிரவனின் திரண்ட கதிர்கள் காய்வதால் காட்டுவழியில் செல்லும் போக்கு இயலாது போகும் கொடுமையான தன்மையுடைத்து என்று நினைத்து நிழல் தரும் மரம் இல்லாமையால் வருந்தும் மடப்பம் மிக்க பெண்மானை வெயில் படாமல் தன் உடல் நிழலைக்கொடுத்து பாதுகாக்கும் கலைமானும் உளது என்ற நிகழ்வையும் ஒரே பாட்டில் படம் பிடித்துக் காட்டும் பாங்கு எண்ணி மகிழத்தக்கது. என்பதில் உள்ள நுட்பம் சார்ந்த வனவியலில் தொக்கிநிற்கும உள்ளீட்டு பாததிர நுணுக்கம் என்பது வாழ்வியல் மேன்மை என்பதே. அதாவது தலைவனின் மேலான பண்பினால் தலைவியின் துன்பம் நீங்கும் என்ற மறைபொருள் நமக்கு முருகியல் நோக்கில் காட்டும் பாடம் என்பதை உணர்த்தத்தான்.

‘‘. . . . . .

அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்

கடியவே. . . . . .

பிடியூட்டி பின் உண்ணும் களிறு”

என்றும்

‘‘இன்பத்தின் இகந்து ஒரீஇ இலைதீந்த உவமையால்

துன்புறூஉம் தகையவே. . . . . .

. . . . . மென்சிறகரால் ஆற்றும் புறவு” எனவும் உரத்தனரே!

என்றும்

‘‘கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்

துன்னரும் தகையவே காடு. . . . . .

தன் நிழல் கொடுத்தளிக்கும் கலை எனவும் உரைத்தனரே!”

என்ற பாடலில் புறா, யானை, மான் (கடமான்) என்ற சூன்றையும் ஒருங்கிணைத்து காட்டில் வாழ்கின்ற உயிரினத்தின் பாசப்பிணைப்பை வனவியலோடு வாழ்வியலை கலந்து அறிதல் உணர்வாக அன்பின் செழுமையை பாடியமை நமக்கான பண்பாட்டு தடம் ஆகும்.

உயர்ந்த மரங்கள் நிறைந்த வனம். அதில் புலியுடன் மோதிய யானை தன் வலியால் அதனை வென்று தளர்ச்சியோடு மலைச்சாரலில் படுத்துறங்கும்போது கனவிலும் அது நிகழக்கண்டு வெகுண்டெழுந்து தன்முன்னே மலர்ந்து நிற்கும் வேங்கை மரத்தை அந்த புலியாகவே கருதி அதன்மீது சாடிப் பாய்ந்த அந்த மரத்தை மோதி அழித்து விட்டு சினம் குறைந்த பின்னர் தன்னுடைய அறியாமையால் வந்த ஆணவத்தால் அழிந்த மரத்தைக்கண்டு அந்த யானை நாணியதாக ஒரு நெகிழ்ச்சியான சிததிரத்தை காணும்போது மெய்சிலிர்க்கிறது. அதனை,

‘‘கொடு வரி தாக்கி வென்ற வருத்தமொடு

நெடுவரை மருங்கில் . . . . . கனவில் கண்டு கதும் என வெரீஇய. .

எனும் பாட்டுவரிகளின் மூலம் உணர்த்தும் போக்கு புலவனின் கற்பனைத் திறத்தின் உச்சம எனலாம்.

முல்லை கலியின் முத்தான பாடல் ஒன்றில் கொன்றை, காயா, வெட்சி, பிடவு, முல்லை, கஞ்சாங்குல்லை, குருந்தம். காந்தள், பாங்கர் என்று மலையிலும் மரம் செறிந்த காட்டிலும் மலர்ந்த பல்வகை மலர்களால் ஆன கண்ணியைச் மூடி இளைஞர்கள் கொள்லேறு தழுவுதல் காட்சி நடைபெற்றதை விவரித்த புலவர் பெருந்தனை அதன் பிற்பட்ட பாடலில்

வளைந்து வெண்கோடுகளைக் கொண்ட சிவந்த எருதுபோன்ற வீருகொண்டு போரிடவல்ல காளைகள் புகுந்த அத்தெழு சிங்கமும் குதிரையும், களிறும், முதலையும் கலந்து போரிடும் மலைச்சாரல் என்று அதனைக் காட்சிப்படுத்தியதை

''வளையுபு மலிந்த கோடணி சேயும் ..... போலும்"

என்று பாடுவதன் மூலம் மனநிறைவைத் தருகின்றார்.

இதன் முற்பகுதியில் குறிக்கப்பட்டுள்ள மலர்வகையிலும் குறிஞ்சிப்பாட்டின் குறிக்கப்பட்டுள்ள மலர்வகையிலும் ''கஞ்சாங் குல்லை" என்ற மலர் குறிக்கப்பட்டுள்ளதை நாம் நுணுகி பார்த்தால் தற்போதைய அரசியல் சட்டப்படி இநத தாவரம் சட்டவிரோதமாக பயிரிடப்படும் தாவரவகையில் பட்டியலிடப்பட்டுள்ள முதன்மைவகை சட்டவிரோத மனமயக்க மற்றும் போதை பயிர் வகையாக சுட்டப்பட்டுள்ள "கஞ்சா" என்ற செடிவகை தான் இது என்பதை உணரலாம்.

சங்க காலத்தில் மகளிர்கள் கூந்தலில் அணியும் மலராகவும் ஆடவர்கள் கழுத்தில் அணியும் மலராகவும் வடிவமைக்கப்பட்டு பட்டியலிடப்பட்ட இத்தாவரம் காலத்தின் அடிச்சுவட்டின் தொன்மை தமறந்த காலத்தில் நலம்கெடுக்கும் பூவாக ஒதுக்கப்பட்டு இன்று இத்தாவரம் உலகிலே எங்கும் பயிரிடப்பட்டாலும் அது அனைத்துலக நாடுகளின் போதை தடுப்பு சட்டத்தின் கடும்பிடிக்குள் சிக்கிவிடும் என்பதே இன்றைய வரலாறு நமக்குக் காட்டும் உண்மை என்பதை உணர வேண்டும்.

காதலன் விரைந்து வந்து வரைந்து கொள்ளாது வெளிநாடு சென்று விட்டதால் பெண்ணியபண்புகளை இழந்து ஓயாத புலம்பிய ஒரு நங்கை காதலன் வரக் கண்டதும் பண்டுபொல் ஆகிவிட்டாள் . இதை ஊரார் பார்த்து பாராட்டியதை

''அகலாங் கண் இருள் நீக்கி அணிநிலாத் திகழ்ந்தபின் .....நீத்தான்"

என்ற பாடலின் மூலம் வெளிப்படும் கருத்தினை நெஞ்சகத்தில் ஏற்றிப் பார்த்தால் வஞ்ச எண்ணம் கொண்டு நான் வாசித்த யாழ் ஓசை கேட்ட அசுணப்பறவையின் மீது அன்பு காட்டாது அதன் உயிர்போகும் படி பறையறைந்து ஒலி எழுப்பினாற்போல் ஒருவன் முன்னே இன்பம் அளித்து பின்னர் அந்த இன்பத்தோடு என்னுடைய உயிரையும் பொக்கும் படி என்னைக் கைவிட்டான் . . . என்ற செய்திதனை உணர முடிகிறது. இப்பாடலில் வரும் "இசையறிபுள்" என்ற அசுணமா (அசுணம்) என்ற பறவையை எண்ணுகிறபோது ஏறக்குறைய பதிமூன்றாம நூற்றாண்டிலேயே உலகிலிருந்து மறைந்துபோன பறவையின் வரலாற்றை அறியவேண்டும் என்ற ஆவல் மேலிடுகிறது.

பட்டினப் பாலை எனும் பைந்தமிழ் பனுவலில் காவிரி சிறப்பு பற்றிய பாடிய புலவன் தான் பாடிய பாடலின், ‘‘வசைஇல் புகழ் வயங்கு வெண்மீன். . . . . கொழிக்கும்” என்ற வரிகளில் தற்பாடிய தளி உணவின் புள் என்ற சொல் வானம்பாடியை குறிப்பிட்டுச் சொல்லும் அமுதவரிகள் அதாவது கார்முகில்கள் திரண்டு வரும் போது அந்த முகில்கள் முதலில் தள்ளிவிடும் மழைத்தூறல் தளி என்றும் அதன்பின் தள்ளிவிழும் மழைத்துறல் துளி என்றும் வேறுபடுத்தி மழை நீரை (திவலை) உண்டு வாழும் வானம் பாடியானது நீரின்றி தேம்பினாலும் காவிரி பொய்க்காமல் நீர் வழங்கும் என்ற நுணுக்கம் சார்ந்த கருத்தியலை உணர்த்தும் செய்தியும் ,

‘‘கொழுங் காற் புதலமொடு செருந்தி நீடி “

எனும் பாட்டுத் தொகுதியில் மருதநிலத்தின் ஊர் புகுந்து முரண்பட்டோரை ஓடச்செய்து அவர்களத ஊர்களை பாழ்படுத்தியதால் நெல் விளைந்த கழனிகள் குவளை மலர்களோடு பிறமலர்கள் மலர்ந்திருந்த பொய்கைகளும அழிய அதன் உருத்தெரியாமல் மறைவுற்ற அந்த இடங்கள் இரலை மானும் அதன் துணையும் பிளையாடும் இடமாக மாறிதாகவும் அம்பலத்திலுள்ள நெடுந்தூண்கள் பாழ்பட்டு சாய்ந்திருந்த நிலையில் அவற்றின் மீது ஆண் யானைகளும் பெண் யானைகளும் உராய்ந்தனவென்றும் திருவிழா காலத்தின் ஆரவாரம் முடிவு பெற்று விழா மன்றங்களில் நெருஞ்சிப்பூக்கள் பூத்தும் அருகம்புல் தழைத்தும் நரிகள் ஊளையிட்டும கோட்டான்களும் ஆந்தைகளும் அலறி கூக்குரல் இட்டன என்பதை பதிவு செய்துள்ள பாடலில் கானுயிர்களான யானை, ஆந்தை, கோட்டான், நரி, இரலை மான் போன்றவை வந்து போவதைக் காணுகையில் முக்கியமான செய்தியாக இரலைமான் பற்றிய செய்தியை உணர்ந்தால் “திரிமருப்பு இரலை” என்று இதன் பெயர் என்பதும் இதனை பிற இலக்கியங்களான இராமகாதை “இரலைமான் குன்றம்” (ரிஷிபமுக பருவதம்) என்று கூறியிருப்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

சங்க இலக்கியம் காட்டும் சில பறவைகள் பற்றிய செய்திகளின் சாரமாக வலியன் வங்கா, கிளி, வானம்பாடி முதலியவற்றை காண்போம்.

<u>வலியன்</u>

இதை காரி என்றும் வலியன் என்றும் நிகண்டுகள் குறிக்கும். பிளவை, கஞ்சணம். கயவாய், கிகிணி, கஞ்சரீடம் என்ற பெயர்களும் உண்டு மலையமான் என்ற வேளிர்குடித்தலைவன் தன் குலப்பெயராக இப்பறவையின் பெயரான காரியை கொண்டிருந்ததால் அவனுக்கு திருமுடிக்காரி என்ற பெயரும் கொல்லி மலையைஆண்ட வில்லில் வல்ல வல்வில் ஓரி தன் குலப்பெயராக ஓரியை (நரியை) கொண்டதால் அவனுக்கு வல்வில் ஓரி என்ற பெயரும் வழங்கயுள்ளதாக

வரலாறு காட்டுகிறது. வலியின் (காரி) கண்களைப்போல் கண்ணன் என்ற புலவருக்கு இருந்ததால் அவருக்க காரிக்கண்ணன் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் வழக்கத்தை "கட்சியுட் காரி கடிய குரலிசைத்து காட்டும போலும்" என்று குறிக்கின்றது.

''ஆனை இறாய்ஞ்சி " என்ற பழந்தமிழ்சசொல் காரியின் பெயராக காட்டப்படுகிறது. அதற்குரிய கரணியம் எதுவெனில் பிற வலிய பெரிய பறவைகள் இரைதனைக் கொண்டு செல்லும் போது அவற்றை தாக்கி அந்த இரையை தட்டிப்பறித்து செல்வதால் (இறாய்ஞ்சி-தட்டிப்பறித்தல்) அதற்கு இப்பெயர் ஏற்பட்டதாகவும் இதன் வலிமை பிற பறவைகளை விஞ்சியிருப்பதால் இப்பெயர் இட்டதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்

இரட்டைவால் கரிச்சான் அல்லது துடுப்புவால் கரிச்சான் அல்லது மலைவாழ்கரிச்சான் என்ற இரட்டை வால்பகுதியை கொண்டு சாதாரண கரிச்சானை விட சற்று பெரியதாகவும் முரலில் ஒருவித கரகரப்பு மிகுந்த ஒலியை எழுப்புவதால் "கரிச்சுக்கொட்டும் ஒலி" என்று இதனை குறிக்கப்படுகின்றது. கரிச்சுக்கொட்டும் ஒலியுடன் கத்துவால் இந்த ஒலியைப் போல் பூசலுக்கிடையில் நடைபெறும் உரையாடலில் கூட கரிச்குக்கொட்டுகிறாள்(ன்) என்பதை கேட்கலாம். இக்குருவிக்கு "காரடை" என்ற பெயரும் உண்டு. பறவைகளுக்கு அந்தக்காலத்தில் சாத்தன் சாத்தி என்று உயர்திணைப் பெயர்களை இடும் வழக்கம் உண்டு. அதன் அடிப்படையில் துடுப்புவால் கரிச்சானுக்கு "காரடையான் சாத்தான்" என்ற பேரும் உண்டு. இதற்கு மற்றுமொரு காரணமாக , கரவடமுடைய பண்பினை ம(தந்திரமாக ஏமாற்றும் பண்பு) இப்பறவை கொண்டுள்ளதால் பூனைபோன்று குரல் எழுப்பி வேடர்களை திசைதிருப்பி தப்பிச் செல்லும் பறவை என்பதால் "காரடையான்" என்று அழைக்கப்படுவதாக மலையாள நாட்டில் தமிழ்நாட்டின் எல்லையோரப்பகுதியில் பொதுவாக வழங்கும் செய்தியையும பிற பறவைகளின் (பெரிய பறவைகள் உள்பட) கண்களை தன் சிறகால் காயம் உண்டாக்கி அல்லது தாக்கிவிடும் பழக்கம் என்பதால் இதை பறவைகளின் அரசன் என்று அடைமொழியுடன் அழைப்பதும் உண்டு. தமிழில் "கோக்கயம்" என்ற பட்டப்பெயர் உண்டுஅதற்கும் பறவைகளின் அரசன் என்ற பொருள் காணலாம்.

இப்பறவை மரத்தின் உச்சியில் கூடு கட்டியிருந்தால் அந்த கூட்டுக்கு கிழேயுள்ள கிளைகளில் பிற சிறு பறவைகள் கூடு கட்டி வாழுவதாகவும் அதனால் கரிச்சானின் பார்வைக்கும் தாக்குதலுக்கும் பயந்து போய் சிறுபறவைகளை வேட்டையாடும் பெரிய பறவை ஒருங்கிச் சென்றுவிடும் என்றும் பறவையியல் வல்லுநர்கள் குறிப்பர். அதனால் வடமாநிலங்களில் இதற்கு காவல் பறவை என்ற பெயரும் உண்டு.

ஆப்பிரிக்காவில் சினம் மிகுந்த சிறுத்தையின் பெயரால் இப்பறவை அழைக்கப்படுகிறது. அதனால் இப்பறவையை புறப்பொருள் வெண்பாமாலை

‘‘வெட்சி மலையவிரவார் மணி நிரைக்

கட்சியுள் காரி கலுழ்ம்” என்று சிறப்பிக்கும்.

வங்கா

இப்பறவையின் உடல்பகுதி மஞ்சள் கலந்த கருப்புக் கோடுகள் நிறைந்தாக இருக்கும். மாம்பழத்தான் என்றும் மாங்குயில் என்றும‌ கூறுவர். ஆனால் இது குயில் வகை அல்ல. இப்பறவைக்கு சங்க காலததில் “வங்கா “ என்று பெயர்

‘‘வங்காக் கடந்த செங்காற் பேடை. . . . . வென்னாது”

என்று குறுந்தொகை பாடலில் வங்கா என்ற பறவையின் பேடையின் மேல் எழால் என்னும் வல்லூறு வீழ்ந்ததால் ஆண் வங்கா நிங்கப்பெற்ற பேடை வங்கா குழலிசைபோல குறுகிய ஒலியுடன் பலதடலை அகவியதாக கூறப்படுகிறது. மயிலின் குரலுக்கு “அகவுதல்” என்பதைப்போல் வங்காவின் குரலுக்கும் அகவுதல் என்ற சொல் தொன்மைநாளில் பயன்படுத்தப்பட்டுள்ளதை காணலாம்.

வேய்ங்குழலின் ஓசையைப்போல் இதன் குரல் இருப்பதாலும் வங்கியம வங்கால் போன்ற இசைக்கருவிகள் தமிழில் உள்ளதாலும் வங்கு என்ற வேர்ச்சொல்லுக்கு உள்ளே துளையாக இருக்கும பொருள் என்பதை வரையறுத்துக் கூறுவதால் மூங்கிலால் ஆன இயத்தை (புல்லாங்குழல்) வங்கியம் என்றும் ஆச்சாமரத்தால் ஆன நீண்ட குழல் கருவியான நாயனத்தை “பெருவங்கியம்” என்றும‌ கூறுவதை ஒப்புநோக்கினால் “வங்கா” என்ற பெயர் சாலப்பொருத்தம் உடையது என்பதை உணரலாம். இதில் கருப்புவங்கா, செவ்வரி வங்கா என்ற இருவகை உண்டு.

செந்தார்க்கிளி

கிளிகளில் பதினேழுவகை உண்டென்று பறவையியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். கிறுகிளி வகைதான் செந்தார்க்கிளி என்பதாகும். இதன் அழகு வடிவும், தோற்றம், அமைப்பு இவற்றை பேசவந்த இலக்கியமான அகநானூறு ‘‘எய்யா வரிவில் அன்ன பைந்தார்ச். . . . . உயிர்த்தன பால் நாள்” என்று குறிக்கும் வானத்தில் தோன்றுகின்ற வானவில்லை போன்று இருமுனையும் சேராத பச்சைமாலையை கழுத்தில் அணிந்துள்ள சிறுகிளி என்றும் ‘‘தார்” என்ற சொல்லுக்கு இருமுனைகள் ஒன்று சேராத மாலை என்பதால் அதைக் குறிக்கும் வகையில் ஆண்கிளியின் செந்தாரிலும் , பெண் கிளியின் பைந்தாலிலும் முனைகள் ஒன்று சேர்வதில்லை என்பதை

‘‘பைந்தாட் செந்தினைக் கொடுங்குரல் வியன்புனம்

செந்தார்க்கிள்ளை நம்மொடு கடிந்தோன் என்று அகநானூறும்

ஏனற் செந்தினைப் பாலார் கொழுங்குரல்

குறுகிளி கடிகஞ் சென்றும். . . . என்று நற்றிணையும் பேசும்.

இதுபோல பல உயர்ந்த சிறப்புமிக்க செய்திகளை உள்ளடக்கிய பழந்தமிழ் இலக்கிய பனுவல்களில் விரவியுள்ள வனவியல் செய்திகளை திரட்டினால் அவை படலமாக தொகுக்கலாம்.

வெளிநாட்டு உறவு

ஈழம் மலர்மன்னன், ஓய்வு பெற்ற கிராம அலுவலர், தேவகோட்டை

ஆழிசூழ் இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு நாடுகளுக்கிடையேயும் கடல் கடந்த செயல்பாடுகள் பண்ட மாற்றுகள், வர்த்தகங்கள் அந்தந்த நாடுகளுக்கிடையேயான, உறவுகளை மேம்படுத்தியிருக்கின்றன. சங்க காலத்தில், தமிழகம், ஏனைய நாடுகளோடு, எவ்வாறெல்லாம், ஒட்டி ஒழுக பரந்த அளவில் முயன்றிருக்கிறது , செயல்பட்டிருக்கிறது என்பதை இன்றைய நாகரிக உலகில், அகழ்வாராய்ச்சிகள் மூலம் கிடைக்கும் ஆதாரங்களைக்கொண்டு அறியமுடிகிறது.

மேற்கத்திய நாடுகளான , கிரிஸ், இரோம், எகிப்து தொடங்கி கிழக்கில் சீனாவரை மட்டுமல்லாமல் பாலஸ்தீனம் மெசப்பெட்டோமியா பரிலோனியா, ஆகிய நாடுகளுடன் வணிகத்தொடர்பு இருந்திருக்கும் தமிழகத்திற்கும் பாபிலோனியாவிற்குமிடையே மிக விரிவான நாகரிகம் பரவியிருந்தமைக்கும் ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன.. இத்தகைய பெருமைமிகு வணிகம் மற்றும் பண்பாட்டுத் தொடர்பினை, கடல்வழியாக தங்கள் பயணத்தை நம் தமிழ்ச்சமூகம் , கடலில் ஆமை வலசைப் பாதையைப் பயன்படுத்தியே விரைவாக பயணப்பட்டிருக்கிறது.

உலகின் முதற்கப்பலையும் , கப்பற்படையையும் வைத்திருந்தவர்கள் தமிழர்கள் என்பதற்கான ஆதாரங்கள் பல. தென் பசிபிக் மாகடலில் ஆஸ்திரேலியா கடற்பகுதியில் ஆழ்கடல் அகழ்வராய்ச்சியில் மிகப்பெரிய சரக்குக் கப்பல் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வறிக்கைகள் அக்கப்பல் 25000 ஆண்டுகளுக்கு மேல் பழைமையானது என்றும் தமிழர்களுடையதுஎன்று தெரிவிக்கின்றன. நாவாய் என்ற தமிழ்ப்பெயரே மருவிநேவி ( ) என்று அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

கி.மு. ஏழாம் நூற்றாண்டிலிருந்துதான் அயல்நாட்;டுவாணிகம் தமிழர்களிடையே தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஏற்றுமதிச்சரக்குகளை அராபியரும்,எகிப்தியரும் மரக்கலங்களில் வந்து ஏற்றிச்சென்றனர்.

தமிழகத்தின் உறையூரில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியாடைகளுக்கு, மேலை நாடுகளில் பெரும் தேவை காணப்பட்டது. காவிரிப்பூம்பட்டிணம் , முசிறி, தொண்டி ஆகிய ஊர்கள் பண்டையத் துறைமுகங்களாக அமைந்திருந்தன.

கொங்குநாட்டுத் தங்கம், பாண்டிநாட்டுமுத்து, தந்தம், சந்தனம், மிளகு, இஞ்சி, ஏலம் கிராம்பு போன்றவைகள் பண்டமாற்று முறையில் வாணிகம் செய்யப்பட்டன.

தமிழகத்திலிருந்து, ரோமாபுரிக்கு சென்ற ஒவ்வொரு கப்பல்களிலும் ஏலக்காய், இலவங்கப்பட்டை, வெல்லப்பாகு, நல்லெண்ணை, மிளகு, போன்றவைகளோடு தேங்காய், நெய், வாழை, அரிசி, சோளம், கம்பு முதலியவற்றுடன், புளி வெற்றிலை பாக்கு போன்ற மூலிகைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

சுள்ளியம், பேரியாற்று, வெண்ணுரை கலங்க,

யவனர் தந்த வினைமான் நன்கலம்,

பொன்னொடு வந்து, கறியொடு பெயரும்

என்பது அகநானூறு காட்டும் சான்றாகும்.மிகவும் பிற்பட்ட கி.மு 60 களிலேயே நம் இந்தியத் துறைமுகங்கள் முக்கியமான மேற்குத்துறைமுகங்களுடன் இணைக்கப்பட்டிருந்தமைக்கு வணிகம் மட்டுமே முக்கியக்காரணமாக இருந்தது.

2003ம் ஆண்டில் , செங்கடல் பகுதி துறைமுகத்தில் அகழ்வாராய்ச்சியில் , பானை,கெரியுடன் (தொங்கும் வலைக்குள் பானை-உறி) தமிழ் பிராமி எடுத்துக்களுடன், ஒரு உடைந்த மண்சாடியும் கிடைத்துள்ளது

எகிப்தைச் சேர்ந்த பெரனிஸின் என்பவர் எகிப்திய துறைமுகங்களிலும், தமிழ்பிராமி எழுத்துக்கள் உள்ள கல்வெட்டுகளும், காணப்பட்டதாக பதிவு செய்கிறார்.

இதன்மூலம் ஐரோப்பாவிற்கும் , தமிழ்நாட்டுக்குமிடையே வர்த்தக உறவுகள் செழித்தோங்கியிருந்தது என்பதும் உறுதியாகிறது.

‘‘த. பெரிப்ளஸ் ஆஃப்தி எரித்திரேயன் சீ “ (0 என்ற நூல் பண்டைய இந்தியகடல்சார் வணிகத்தின் சிறந்தொரு ஆவணமாக உள்ளது. இந்த நூலில் , குஜராத் கடற்கரையிலிருந்து தமிழ்நாடு மற்றும் அதற்கு அப்பாலும். அனைத்து முக்கியத்துறைமுகங்களையும், இது விவரிப்பதாக கடலாய்வறிஞர் நரசய்யா தெரிவிக்கிறார்.

தமிழ்நாட்டில், தொண்டியைப் போன்று மகாபலிபுரம் ஒரு கடல் துறைமுகமாக இரந்துள்ளது. மகாபலிபுரம் கடற்கரையில் பாறைகள் அதிகமாக இருந்ததால், அதற்கு மாற்றுத்தடமாக மரக்கானம் இரந்ததாக இந்த பெரிப்ளஸ் நூலில் குறிப்புகள் உள்ளது. பாண்டிசேரியில் அரிக்கமேடு மத்தியதரைக்கடலில் பெரும் வர்த்தக மையமாக விளங்கியது.

கங்கை வாரியும் காவிரிப்பயனூம்

ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும். . .

என பட்டினப்பாலை விவரிக்கிறது. காழகம் என்பது மலேயாவில்; கடாரத்தைக் குறிக்கின்றது. இதன் மூலம் சோடி அரசர்களில் ஒருவரான கரிகாற் பெருவளத்தான் சோழன் ஆட்சியில்

தென்கிழக்காசியா வரை சோழர்களின் வணிகப்பரப்பு விரிந்துள்ளதையும் அறிய முடிகிறது. சோழர்களின் வெளிநாட்டு வணிகத்திலும், சிறந்து விளங்குகியதை சீனாவின் சோங்( ) வம்சத்தின் குறிப்பொன்றில் சோழ வணிகக் குழுவொன்று கி.பி.1077ம் ஆண்டில் சீன அசரவைக்குச் சென்று வந்ததைக் கூறுகிறது.

கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானியப் பேரரசர்கள் வெளியிட்ட ரோமானிய நாணயங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளதால், இலக்கியம், தொல்லியல், நாணயவியல் ஆதாரங்களைக் கொண்டு கி.மு.300 தொடக்கம் கி.பி.300 வரை எழுதப்பட்ட இலக்கியம், சங்க இலக்கியம் எனப்படுகிறது. பண்டைய தமிழ்ச் சமூகத்தினரின் சூழலை தெளிவுபட உரைக்கின்றவைகளில் முன்னணியில் உள்ளவை சங்க இலக்கியங்களே.

ஓயாத உழைப்பு அதன் மூலம் கிடைத்த உயர்வு கடல் கடந்து தங்கள் பிழைப்பை நடத்தியது. தமது மொழி கலை பண்பாட்டுடன் கூடிய பாரம்பரியங்களை தங்களது வணிகத் தொடர்பினால் அந்தந்த நாடுகளிலும் பரவச் செய்துள்ளனர். இதன் விளைவாக பிற நாடுகளில் பல தமிழ்ச் சொற்கள் திரிந்தும் மருவியும் வழங்குகின்றன.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் தமிழகத்துடன் இருந்த வணிகத் தொடர்பினால் பல தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியில் கலந்துள்ளதை. தமிழக வரலாறு மக்களும் -பண்பாடும் என்ற நூலில் டாக்டர் கே.கே பிள்ளை , என்பவர் விளக்கியுள்ளார்.

சிறந்த தமிழறிஞரும் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் உருவாக அரும்பாடுபட்டவருமான, ஈழத்தைச் சேர்ந்த தனிநாயக அடிகள் தன்னுடைய தமிழ்த்தூது என்ற நூலில் சாவகம், சுமத்ரா போன்ற இடங்களில் இரண்டாம் நூற்றாண்டுக்கும் முன்னரேயே தமிழ் மக்கள் குடியேறியிருக்க வேண்டும் என்பது கெல்டோன் போன்ற அறிஞர்கள் கருத்து. இன்றும் சுமத்ராவில் வாழ்ந்து வரும் கரோபட்டாக் வகுப்பினரின் உட்பிரிவினராயிருக்கும், கிம்பரிங் என்போர் தம்மைச் சோளியர் , சேரர், பாண்டியர் , கலிங்கர் என்று வகுத்திருப்பதையும் வழிபாடுகள் கோயில்கள் சைவசித்தாந்தத் தத்துவங்களை அடிப்படையாக்க கொணடதாகவும் கட்டிடங்கள் திராவிட தென்னிந்திய மக்களின் கட்டடச் சிற்பக் கலைகளை ஒட்டியே அமைந்திருக்கின்றன என்றும் அவர்களுடைய பேச்சு வழக்கில் தமிழ் சொற்களான வாடை, சுக்கு, இஞ்சி, கொத்தமல்லி , குதிரை கூடை பெட்டி, பிட்டு ஆகியவை அவர்களின் பேச்சுவழக்கில் உள்ளன. அம்மா, அக்கா, மாமா, தம்பி போன்ற உறவுச் சொற்களும் இதில் அடங்கும்.

கம்போதியாவின் அரண்மனையில் நடைபெற்று வந்த நாட்டியக்கலை தமிழ் நாட்டியக் கலைகளோடு ஒப்பிட்டுப்பார்க்க முடியுமென்பதையும் தாய்லாந்து நாட்டில் அந்த நாட்டு

மன்னர்களின் முடிசூட்டு விழாவில் தமிழ்பாக்கள் பாடிவருவதையும் அங்குள்ள கோயில்களில் "ஆதியும், அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதியை" என்ற பாட்டைத் தமிழ் தெரியாது ஏடுகளில் பாதுகாத்து வைத்துள்ளதையயும், மார்கழி திருவெம்பாவைத் திரு நாட்களைக்கொண்டாடி வருவதையும் , கோயில்கள் வழிபாட்டு முறைகள் தென்னிந்திய முறைகளைத் தழுவி அமைந்துள்ளதாகவும், அடிகள் தெரிவிக்கிறார்.

இலத்தின் மொழி மேலைநாட்டுச் சமயங்களின் மொழியாய் விளங்கி வந்தது. இந்தியாவின் சமயங்களைப் பற்றிய நூல்கள் எழுதப்பட்டன. ஆனால் தமிழ் இலக்கியத்தில் சிறந்து விளங்கும் பல்வேறு சமய இலக்கியங்களைப்போல வெறு எம்மொழியிலும் இல்லை. சைவரும், வைணவரும் , சமணரும் பௌத்தமும் முகம்மதியர்களும், கிறித்தவர்களும் ஒருங்கே இலக்கிய உரிமை பாராட்டக்கூடிய மொழி தமிழ்தான் என்பதும் , பெரிய புராணம் , கம்பராமாயணம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சீறாப்புராணம், மே;பாவணி, இரட்சண்ய யாத்திரிகம் போன்ற காப்பியங்களுக்கு ஒப்பாய் பல்வேறு சமயங்களுக்குரிய நு{ல்கள் தமிழ்மொழியில் இருப்பது போல வேறு எந்த மொழியிலும் இல்லை யென்பது அடிகளின் முடிவாகும்.

கம்Nhதியாவில் , அங்கோர் எனுஞ்சொல் நகர், நகரம் எனும் சொல்லின் திரிபு. நகர் என்பது வடமொழிச் சொல்லென்று பொதுவாகக் கருதப்படுகிறது. வடமொழி தவிர்த்து ஏனைய இந்திய ஐரோப்பிய மொழிகளில் இல்லாததால் , திராவிடர்கள் நகரங்களை அமைப்பதில் சிறந்து விளங்கியதால் நகர் எனுஞ்சொல் திராவிடமொழிக்கே உரிய சொல்லாகும். வியட்நாம்நாட்டில் போநகர் எனப்படும் குன்றின்மேல் உள்ள கட்டிடங்கள் மாமல்லபுரத்தின் சிற்பக்கலை வழியாகத் தோன்றிய கட்டிடங்கள் என்றும், மீசான் எனப்படும் இடத்திலிருக்கும் இடிந்த கட்டிடங்களைப் பார்த்தாலும் பல்லவ மன்னர்களின் கோயில்களின் பான்மையைக் காட்டுகின்றன என்றும் சைக்கோன், நாத்திராங், தூரான் போன்ற இடங்களில் பாம் பொருட்காட்சிசாலைகளை ஆராய்ந்தால் அங்கிருக்கம் சிலைகளிலிருந்து இந்திய நடனக்கலை , சமயம் , சிற்பம், கட்டிடம் ஆகியவை எந்தளவி;ற்கு அந்நாட்டில் பரவியிருந்தன என்று தமிழர் தமிழ்க்கலை தொடர்பான பல செய்திகளை தனது ஒன்றே உலகம் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இந்தோனிசியத் தீவுகளில் முதன்பெற்ற தீவான சாவகம் (ஜாவா) தொன்று தொட்டே இந்தியப் பண்பாட்டைப்பெற்றிருந்தது. கி.பி.முதல் இரண்டாம் நூற்றாண்டுகளிலே தமிழ் நாட்டிலிருந்தது கப்பலோட்டிகளும் வணிகரும் அங்கு சென்றிருக்க வேண்டும். இதை மணிமேகலைக் காப்பியத்திலும், அந்த நாட்டில் காணப்படும் கல்வெட்டுகளிலிருந்தும் அறியமுடிகிறது என்கிறார் அடிகள்

இத்தாலியை பற்றிக் குறிப்படும்போது, தமிழ்நாட்டைப்பற்றி எழுதிய பிளினி, மார்க்கோபோலோ, இவர்களைத் தொடர்ந்து பெஸ்கி என்ற இயற்பெயருடைய வீரமாமுனிவரும் இத்தாலி நாட்டினரே

போர்த்துகல் நாட்டைப்ப்றறிக் குறிப்பிடும் அடிகள் 16 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் எழுதிய தமிழ் இலக்கண கையெழுத்துப்படியை பார்வையிட்டு இதுவே ஐரோப்பிய ஒருவரால் எழுதப்பட்ட முதல் இலக்கண நூல் என்ற கருத்தையும் முன்வைக்கிறார்.

டென்மார்க்கில் இருக்கும் நூலகத்திலும், தமிழ் நூல்கள் பல இருப்பதாக அடிகளார் குறிப்பிடுகிறார். தரங்கம்பாடி முதலிய தென்னிந்திய துறைமுகங்கள் இருந்த காலத்தில் அந்நூல்கள் டென்மார்க்கிற்கு அனுப்பியிருக்க வேண்டும் என்றும், குடந்தையில் அச்சிடப்பட்ட கண்டிராசன், நொண்டி சிந்து எனும் நூல் அங்குள்ளதாகவும் குறிப்பிடுகின்றார்.

மொரிசியஸ் நாடுபற்றிகுறிப்பிடும் அடிகள், பிரெஞ்சு ஆங்கிலம் மற்றும் தமிழ்பண்புகள் கலந்த நிலையிலேயே அங்கு தமிழர்கள் வாழ்கின்றனர். அங்கு போர்ட்லுசயிசி எனும் நகரில் தஞ்சாவூர் வீதி , திருச்சிராப்பள்ளி வீதி என்றும் இருந்ததையும் , அங்கு தமிழர்களே வாழ்ந்துவந்தனர். அங்கு தமிழர்களே வாழ்ந்துவந்தனர். ஆங்கிலேயர்கள் மொரிசியஸ் தீவினைக் கைப்பற்றியதும், மொரிசியஸ் குடிமக்கள் கையொப்பமிட்ட பதவிப்பிரமாணத்தில் சவரிமுத்து, சின்னத்தம்பி துரைச்சாமி என்று பலர் தமிழிலேயே கையெழுத்திட்டுருப்பதையும் குறிப்பிடுகிறார். அதுமட்டுமல்லாமல் பிரெஞ்சு ஆங்கிலம் கலந்த கிரையோல் எனும் ஒரு திசைமொழி வழங்கி வருவதையும் அக்கலப்பு மொழியில், பீரக்கங்காய். முருங்கை, கருவேப்பிலை, கொத்தமல்லி, தோழன், கேள்வி போன்ற தமிழ்ச்சொற்கள் இடம்பெற்றிருப்பதையும் 1816ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பிரெஞ்சு செய்தித்தாளில், தமிழ்அச்சுகள் கொண்ட தமிழ் விளம்பரங்கள் வெளியாகியிருப்பதையும் 1868ல் ஒரு தமிழ்ச் செய்தித்தாளை பதிப்பித்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கிறார். அத்தோடு தமிழுக்காக அயராது ஆய்வுப்பணியை மேற்கொண்ட தனிநாயகஅடிகள் இது தமிழ்ப் புலவர்களுக்காக அமைக்கப்பட்ட ஆய்வல்ல. வெளிநாட்டிலும் இந்தியாவிலும் உள்ள மாணவர்களுக்காகவும் தமிழைப் பற்றி அறிந்திராதவர்களுக்காகவும், அறிய விழைவோருக்கும் மேற்கொள்ளப்படுகிறது என்னும் உலகச் செம்மொழிகளிலிருந்து தமிழ் எந்தளவிற்க வேறுபட்டும் உயர்ந்தும் ஒப்புமையுடன் திகழ்கிறது என்பதை நிறுவுகிறார்.

பண்டைத்தமிழ் மக்கள் அயல்நாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்ததின் மூலம் , நம்நாட்டு பொருட்களை ஏற்றுமதிசெய்வதில் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தனர். இதன்

காரணமாகவே, தமிழகத்திற்கு உலகத்தொடர்பு என்பது ஏற்பட்டது. இத்தொடர்பு கருத்தியல் அளவில் வளர்ச்சி பெற்றிருந்ததைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

இத்தாலிய நாட்டில் வாழ்ந்த ஸ்டொமிக்வாதிகள் உரோமப்பேரரசு காலத்தில் எவ்வாறு ஓர் உலக மனப்பான்மையை வளர்த்தார்களோ, அவ்வாறே சங்க காலத்திற்கு முற்பட்ட காலந்தொடங்கி, ஓர் உலக மனப்பான்மை தமிழகத்தில் பரவியுள்ளது என்பதும் ‘‘யாதும் ஊரே, யாவரும் கேளீர்” யாதானும் நாடாமல், ஊராமால” ஆகிய செவ்விலக்கியத் தொடர்கள், தமிழர் தம் உலக மனப்பான்மையை எடுத்துக்காட்டும் தொடர்களாகும். அதேபோல தமிழ்ப்பண்பாட்டின் களஞ்சியகளான தொல்காப்பியம் , குறுந்தொகை, புறநானூறு, திருக்குறள். சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களில் தமிழர் தம் வாழ்வியலை, பண்பாட்டின் தொன்மங்களை அயல்நாடுகளோடு அவர்களின் , உலகத்தொடர்புகளை நலம். அறிந்துகொள்ள உதவும் உன்னத இலக்கிய நூல்கள் என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

கல்வியியல்

முனைவர் மு.பத்மா

உதவிப் பேராசிரியர், ஜெ.ஜெ கலை அறிவியல் கல்லூரி, சிவபுரம் புதுக்கோட்டை

செம்மொழி இலக்கியங்களில் கல்வி பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. சங்க காலத்தில் கற்றறிந்த புலவர்கள் அவையாகத் தமிழ்ச்சங்கங்கள் அமைந்திருந்தன. பெண்பாற் புலவர்கள் முப்பதுக்கும் மேலாக இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. இவ்வகையில் கல்வி நிலையில் சிறப்புற்ற சமுதாயமாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழினம் இருந்துள்ளது. சங்ககால கல்வி நிலையை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

தொல்காப்பியத்தில் கல்வி

பண்டைய இலக்கணமான தொல்காப்பியத்தில் கல்வி பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

"ஓதல் பகையே தூதிவை பிரிவே" அகத்திணையியல்-27

"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" அகத்திணையியல் 28

ஆகிய நூற்பாக்கள் கல்வி சார்ந்த செய்திகளை அளிக்கும் நூற்பாக்கள் ஆகும்.

தொல்காப்பிய காலத்தில் பிறநாட்டுக்குக் கல்வி கற்கச் செல்வது வழக்காக இருந்தது. கல்வித்தரத்தில் உயர்ந்தோரை மன்னன் மதிப்பான் என்ற நிலைய இருந்தது. கல்வியில் உயர்ந்தோர் சான்றோர் எனப்பட்டனர். கற்றோரையே தூதாக மன்னன் அனுப்பினான். தூது உரைப்பார்க்கு ஆராய்ந்த சொல்வன்மையும் நூல் வல்லவனாக விளங்கும் திறமையும் தேவை. எனவே கல்வியின் பொருட்டும் தூதின் பொருட்டும் பிரிவு என்பது நிகழ்வதாயிற்று.

"வேண்டிய கல்வியாண்டு மூன்றிறவாது' கற்பியல்

கல்வியின் பொருட்டு ஒருவன் பிரியும் காலம் மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் இருக்கவேண்டும் என்பது தொல்காப்பிய வரையறையாகும். இக்கால இளநிலைக் கல்வி போன்றே அக்கால எல்லையில் கல்வி வாய்ப்பும் இருந்தமை இதன் வழி தெரியவருகிறது.

சங்க காலத்தில் கல்வி

சங்க காலத்தில் பலரும் கற்றிருந்தனர். கணியன், கூலவணிகன், பாணன், பொருநன், புலவன் போன்ற பல பிரிவினர் கற்று இருந்தனர். கல்வி பற்றிய பல குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆரிய அரசன் பிரகதத்தனுக்கு தமிழ் அறிவித்தல் பொருட்டு

கபிலர் குறிஞ்சிப் பாட்டின எழுதினார் என்ற செய்தி அக்கால கல்வி நடைமுறையைக் காட்டுவதாக உள்ளது.

"தள்ளாப் பொருள் இயல்பின்
தண்தமிழ் ஆய்வந்திலார்"
"தமிழ் நிலைபெற்ற தாங்கரும் மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை"

என்று சிறு பாணாற்றுப்படை சங்க காலத்தில் தமிழ்கல்வி சிறந்திருந்தமையைக் காட்டுகிறது.

ஒரு தந்தையின் கடன் தன் மகனைச் சான்றோன் என்னும் நிலையில் உயர்ந்திப் பார்த்தல் ஆகும். இதற்குச் சிறந்த வழி கல்வியாகும். ஆகவே புறநானூற்றுப் புலவன், "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்று தந்தையின் கடமையாக்குகின்றது.

"தொல்லாணை நல்லாசிரியர்" மதுரைக்காஞ்சி என்ற பெயரின் வழி ஆசிரியர்கள் வழியாக மாணவர்கள் பாடம் கேட்டனர் என்பதை உணரமுடிகின்றது.

பாண்டிய மன்னர்களும் கல்வியுடன் அமைந்த நிலையில் விளங்கியுள்ளனர். இதனைப் பின்வரும் இலக்கியச் சான்றுகள் எடுத்துக்காட்டும்.

"தமிழ் வையைத் தண்ணம் புனல்" பரிபாடல் எட்டுத்தொகை
வைகை நதியில் கூட தமிழ் கல்வியின் மணம் வீசுகிறது
"சோமன் வழிவந்த பாண்டிய நின்
நாடுடைத்து நல்ல தமிழ்" திருமுருகாற்றுப்படை

என்ற இலக்கிய படைப்பிலக்கிய அடிகள் தமிழ்க்கல்வியின் சிறப்பைக் காட்டுவனவாக விளங்குகின்றன.

அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல் என்றும் குறிப்பிடப்படுகிறது. இதன் காரணமாக அறிவு பெற்றோர், கல்லாதவர் என்று இருநிலை இருந்தமையை உணரமுடிகின்றது. வள்ளுவரும் கற்றோர் கல்லாதவர் என்று இரு பிரிவினரையும் குறிக்கிறார்.

கடையெழு வள்ளல்களில் ஒருவனான அதியமான் அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு கொடுத்தது அவர் கற்ற கல்வியின் சிறப்பிற்கே ஆகும். சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடனின் குணங்கள் குறிக்கப்பெறுகின்றன. இக்குணங்களில் "ஓதியது உணர்தல்" என்பதும் சுட்டப்படுகிறது. இதற்குக் கற்ற கல்விக்கு ஏற்றவாறு ஆட்சி நடத்துதல் என்றுபொருள்.

<u>சங்கம் மருவிய காலத்தில் கல்வி</u>

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன்கண்படுமே” 183

திணை மொழிக்காஞ்சி குறிப்பிடும் நிலையில் கல்வி இருந்துள்ளது. கல்வியை செலவு செய்து கற்கவேண்டும் என்ற நிலைப்பாடு பதினெண் கீழ்க்கணக்கு காலத்தில் இருந்துள்ளது. ஒரு தாய் வயிற்றில் பிறந்த இளைய மகன்கல்வி கற்பின் மூத்தவனைவிட இளையவனுக்கே சிறப்பு அதிகம் என்ற நிலைப்பாடு இங்கு எண்ணத்தக்கது.

திருக்குறளும் கல்வியும்

திருக்குறளில் பொருட்பாலில் கல்வி பற்றிய செய்திகள் அடுக்கி உரைக்கப்படுகின்றன. 1

1.“கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத்தக’

கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்கவேண்டும்.

2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு’

எண்ணும், எழுத்தும் மக்களுக்கு இரு கண்கள் போன்றது.

3. “கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லாதவர்’

கண்ணுடையவர் என்பவர்கள் கற்றவர்கள் கல்லாதவர்கள் புண்ணுடையவர்கள்.

4. “உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்

அனைத்தே புலவர் தொழில்’

இனி இவரை எப்போது காண்போம என்று வருந்துவதே புலவர் தொழிலாகும்.

5. “உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்

கடையரே கல்லாதவர்’

கல்வி கற்றவர்கள் உயர்ந்தோர், கல்லாதவர்கள் தாழ்ந்தோராவர்

6. “தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு

கற்றனை தூறம் அறிவு’

கற்ற கல்விக்கு ஏற்றவாறு அறிவு தோன்றும்.

7. “யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்

சாந்துனையும் கல்லாதவாறு’

கற்றவனுக்கு எல்லா நாடும் தன் நாடு போலவே ஆகும்.

8. “ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப்புடைத்து’

ஒரு பிறப்பில் தான் கற்ற கல்லி ஒருவற்கு ஏழு பிறப்பிற்கும் தொடரும்.

9. “தாமின்புறுவது உலகின் புறம் கண்டு

காமுறுவர் கற்றறிந் தார்’

தாம் இன்பமடைந்ததை இவ்வுலகமும் இன்பம் அடைய வேண்டம் என்று அறிஞர் மேலும் கல்வி கற்பர்.

10. “கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு

மாடல்ல மற்றையவை’

ஒருவனுக்கு அழிவில்லாத செல்வம் கல்வி மட்டுமே

என்ற நிலயில் திருக்குறளில் கல்வி அதிகாரம் கல்வி நிலைப்பாட்டைச் சொல்லுவதாக உள்ளது. கல்வியால் தாம் இன்புறுவது மட்டுமில்லாமல் உலகமும் இன்புறவேண்டும் என்பது வள்ளுவம் தரும் செய்தியாகும். இதுவே கல்வியின் வெற்றியுமாகும். கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்கிறது திருக்குறள்.

<u>நாலடியாரும் திருக்குறளும்</u>

நாலடியார்- சமண முனிவர்கள்- பொருட்பால் கல்வி

1. “கல்வி அழகே அழகு’

நடுவு நிலைமை உடைய ஒழுக்க வாழ்க்கை தரும் கல்வி அழகே மிக உயர்ந்த அழகு

2. ஆலும் வேலும் பல்லுக்குறுதி

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

3. மம்மர் அறுக்கும் மருந்து

எந்த உலகத்திலும் கல்வியைப் போல அறியாமையைப் போக்கும் மருந்தை நாம் கண்டதில்லை.

4. “தலை நிலத்து வைக்கப்படும்’

கீழ்க்குடியிற் பிறந்தவர்களானாலும் கற்றறிந்தவராயின் அவர்களை மேலான குடியினும் உயர்ந்த இடத்தில் வைத்து மதித்தல் வேண்டும்.

5. “விச்சை மற்றல்ல பிற’

ஒருவன் தன் மக்கட்குச் செல்வம் எனச் சேர்த்து வைக்கத்தக்கது கல்வியே.

6. “கல்வி கரையில கற்பவர் நாள் சில”

கல்விகள் முடிவில்லாதது ஆனால் கற்பவருடைய வாழ்நாட்கள் சிலகாலம் தான்.

7. “மகன் துணையா நல்ல கொளல்”

நல்ல நூல்களை கற்ற கீழ் மகனாக இருந்தாலும் அவன் துணைகொண்டு நூல்களை கற்கவேண்டும் . படகோட்டி எந்த சாதி என்று பார்க்காமல் அவன் துணை கொண்டு போவது போல

8. “உம்பர் உறைவார் பதி’

கற்றோருடன் சேர்ந்து பெறும் இன்பம் தேவர்களோடு வாழ்வது போன்றது.

9. “தண்ணீர்க்குத் தான் பயந்தாங்கு’

பாதிரிப்பூ தண்ணீருடன் சேர்ந்து நறுமணம் தருவது போல கற்றவருடன் கல்லாதவர் சேர்ந்தால் அறிவு உண்டாகும்.

10. “போலும் துணையறிவார் இல்’

மெய்ஞான நூல்களை கற்காமல் உலக அறிவு நூல்களை கற்பது வீணான சலசலப்பே பிறவி தடுமாற்றத்தை போக்க முடியாது.

என்று நாலடியாரில் கல்வி பற்றிய செய்திகள் தரப்பெறுகின்றன.

<u>பழமொழி நானூறும் கல்வியும்</u>

பழமொழி நானூறு என்ற சங்கம் மருவிய இலக்கியத்தில் கல்வி பற்றிய பல செய்திகள் தெரிவிக்கப்பெற்றுள்ளன.

1. “சுரம் போக்கி உல்கு கொண்டாம் இல்லை’

கற்பதற்குரிய இளம் பருவத்தில் கல்வியைக் கல்லாதவன் முதுமையில் கற்று வல்லவன் ஆக முடியாது.

2. “கற்றொறும் தான் கல்லாதவாறு’

தளர்ச்சியில்லாது தான் கல்லாதவனாய் எண்ணிக் கற்க வேண்டும்

3. “பொருளைக் கொடுத்து இருளை கொள்ளார்’

ஞானநூலைக் கற்க வேண்டும் என வற்புறுத்தப்பட்டது.

4. “ஆற்றுணா வேண்டுவதில்’

கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு அவன் கட்டுச்சோறு கொண்டு செல்ல வேண்டும்.

5. “கற்றலின் கேட்டலே நன்று’

கற்ற வல்லவரிடம் நிறைய செய்தி கேட்க வேண்டும்

6. “குலவிச்சை கல்லாமல் பாகம்படும்’

கரிகாலச்சோழன் இளம் வயது திறமை கற்காமலேயே வரக்கூடியது.

7. “பாம்பறியும் பாம்பின் கால்’

அறிவுடைய வரை அறிவுடையாரே அறிவர்.

8. “அயிலாலே பேழ்ப அயில்’

இரும்பை இரும்பால் அடிப்பது போல் கற்றவரை கற்றவர் அறிவர்.

9. “நிறைகுடம் நீர்தளும்பல் இல்’

கற்றார் தம்மை புகழ்ந்து பேசிக் கொள்ளமாட்டார்

10. “மதிப்புறத்துப் பட்ட மறு’

அறிஞர் சிறு பிழை செய்தாலும் கல்வி, அறிவு அது எல்லாரும் அறிய விளங்கித் தோன்றும்.

நான்மணிக்கடிகையும் கல்வியும்

நான்மணிக்கடிகையிலும் கல்வி பற்றிய பல செய்திகள் அறிவுறுத்தப்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு.

“கற்றறிவு இல்லா உடம்பு’ அவைக்குப் பாழாவது கல்வி, கேள்வி வீண் சான்ற பெரியோர் இல்லாமை. தனக்குப் பாழாவது கல்வியறிவு இல்லாத புலால் உடம்பு உள்ளமை.

“கற்றன்னர் கற்றாரைக் காதலர் கண்ணோடார்” கல்வி அறிவு கொண்டவரை விரும்புவர் அக்கல்வியுடைய வரைப்போன்றவர்.

“கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான் இளமை பாராட்டும் உலகு’ ஒரு குடியில் படிக்காமல் வயதால் முதிர்ந்தவனை மதிக்காமல் விட்டுப் படித்தவனின் இளமைப் பருவத்தையே உலகத்தார் பாராட்டுவார்.

“தேவரனையர் புலவரும் தேவர்’கல்வி அறிவுடைய புலவரும் தேவரைப் போன்றவர் ஆவர்.

“கல்லா ஒருவர்க்குத் தம் வாயிற் சொற் கூற்றம்”கல்லாத ஒருவருக்குத் தம் வாயினின்று வரும் சொல்லே இயமன் ஆகும்.

“துகாதற் புலவர்க்குக் கல்வியே கல்விக்கும் ஓதிற் புகழ்சால் உணர்வு’ பெற்றோர் உள்ளத்துக்கு புதல்வர்க்கு கல்வி அறிவே ஒளி, கல்வி அறிவிற்கு நிலைத்த மெய் உணர்வே ஒளி!

இன்னா நாற்பதும் கல்வியும்

இன்னா நாற்பதில் பின்வரும் நிலையில் கல்வி பற்றிய செய்தி இடம்பெறுகிறது. “கல்லாதானூருங் கலிமாப் பரிப்பின்னா’கல்வியைக் கல்லாதவன் கற்றார் அவையில் ஒன்றைக் கூறுதல் துன்பமாகும்.

இனியவை நாற்பதும் கல்வியும்

இனியவை நாற்பது இலக்கியத்திலும் "பிச்சை புக்காயினும் கற்றல் மிக் இனிதே'பிச்சை எடுத்து உண்டாயினும் கற்க வேண்டியவற்றைக் கற்றல் மிகவும் இனிதாகும். . கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே' கற்றவர்க்கு முன்னர்த் தம் கல்வியை எடுத்துக் கூறுதல் மிகவும் இனிது. "கற்றறிந்தார் கூறும் கருமப்பொருள் இனிதே' கற்க வேண்டிய நூல்களைக் கற்று அவற்றின் பொருளை உணர்ந்தவர் சொல்லும் காரியத்தின் பயன் இனிதாகும். "கற்றலிற் காழினியது இல்' நன்மையுடைய நூல்களை கற்பதை போல் இனியது வேறொன்றும் இல்லை. என்று கல்வியின் சிறப்பு காட்டப்படுகிறது.

திரிகடுகத்தில் கல்வி

திரிகடுகம் நூலிலும் கல்வி பற்றிய செய்திகள் சுட்டப்பெற்றுள்ளன. கற்றவர் கடமை "கற்றறிந்தார் பூண்ட கடன்"உயிர்க்கு உறுதி பயக்கும் சொற்களைக் கீழ்க்குலம் அல்லாதவரிடத்து கூறுதலும் கற்றறிந்தவர் மேற்கொண்ட கடமை. "மறுமைக்கு அணிகலம் கல்வி' மறுபிறப்பில் நன்மைபெற கற்கவேண்டும் என்கிறது இந்நூல்.

ஆசாரக்கோவையில் கல்வி

"கல்வியோடு ஒப்புரவாற்ற அறிதல்' நலமுடையது என்கிறது ஆசாரகோவை. கல்வியை நோயின்மை என்றும் இந்நூல் காட்டுகிறது. எண்வகை ஒழுக்கங்களுள் கல்வியும் ஒன்று என்றும் இந்நூல் குறிக்கிறது.

முதுமொழிக் காஞ்சியில் கல்வி

"ஓதலின் சிறந்தன்று ஒழுக்கமுடைமை

கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று' நாம் அறியாத நாட்டின் ஒழுக்கங்களைக் குறை கூறக் கூடாது என்பது இந்நூலின் முடிவு.

இவ்வாறு கல்வி பற்றிய செய்திகள் இடம்பெறும் இலக்கியங்களாகச் சங்கம் மருவிய இலக்கியங்கள் அமைகின்றன.

மணிமேகலை – சிலப்பதிகாரம் ஆகியவற்றில் கல்வி பற்றி செய்திகள்

தென் தமிழ் நன்னாட்டுத் தீது தீர் மதுரை" என்று மதுரையில் தமிழ்க்கல்வி சிறந்திருந்ததைக் காட்டுகிறது சிலப்பதிகாரம். கோவலன் கனுக்கு மாதவி எழுதிய கடித்த்தின் மூலம் அவள் பெற்றிருந்த கல்விச் சிறப்பை வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு கல்வி பற்றிய பல செய்திகள் செம்மொழி இலக்கியப் பதிவுகளாக விளங்குகின்றன. இத்தலைப்பு பயிலரங்கத் தலைப்பு என்பதால் மாணவர்கள் செம்மொழி

இலக்கியங்களில் கல்வி பற்றிய செய்திகளைத் தொகுக்கும் பழக்கத்திற்கு வரவேண்டும் என்பது கருதி இக்கட்டுரை பயிற்சியரங்கக் கட்டுரையாக வழங்கப்படுகிறது.

மலர்கள்

பேரா. சு. தொண்டியம்மாள். கௌரவ விரிவுரையாளர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை

மலர்கள் என்றாலே மங்கையர் சூடுவதும், மணம் தருவதும் மட்டுமல்ல. அதில் பல்வேறு குணங்கள் தன்மைகள் பொதிந்துள்ளன என்று சங்க இலக்கியங்களில் தங்கள் பாடல் வரிகளில் பதிவு செய்துள்ளனர் பண்டைத் தமிழ் புலவர்கள். இயற்கையோடு இயைந்து வாழ்ந்த அவர்கள் தங்கள காலத்தில் நிலவிய காலச்சூழல்களையும் இயற்கை தன்மையையும் குறிப்பிட்டுள்ளனர். அவ்வகையில் சங்க இலக்கியங்களில் குறிப்பாக நற்றிணையில் காணலாகும் மலர்கள் குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

மலர்கள் என்பது செடி, மரம், கொடி ஆகிய தாவர வகையின் உறுப்பாகும். ஒவ்வொரு தாவரத்திலும் பல்வேறு வண்ணங்களில் காணப்படும். மலருக்கு ஏழுவகை பருவங்கள் உண்டு. அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல் ஆகும். மலர்கள் தாவரங்களின் இனப்பெருக்க உறுப்பு. மலர்கள் மனித வாழ்க்கையில் எல்லா நிகழ்வுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. சுப நிகழ்வு முதல் துக்க நிகழ்வு வரை முதல் இடம் பெறுவது மலர்கள்.

தமிழர்களின் சிறப்பாக ஒழுக்கத்தை கூறுவர். அவ்வொழுக்கம் அகவொழுக்கம், புறவொழுக்கம் என இரண்டாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. இவ்விரு ஒழுக்கங்களின் இன்றியமையா கூறாக மலர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவன் தலைவி இருவரிடை முகிழ்க்கும் உறவையும் மேற்கொள்ளும் இல்வாழ்க்கையையும் பிறர்க்கு அறிவிக்கவொண்ணாப் பேரின்பத்தை அகம் என்பர். அந்த அகத்திணையை அன்பின் ஐந்திணையாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற திணைகளின் பெயர்களிலே பூக்களும் உள்ளன. அதனால்தான் சங்க கால புலவர்கள் கருப்பொருள்களில் ஒன்றாக மலரையும் சேர்த்துள்ளனர்.

குறிஞ்சி- வேங்கை, குறிஞ்சி, காந்தள்

முல்லை-முல்லை, தோன்றி, பிடவம்

மருதம்-தாமரை, குவளை, கழுதி

நெய்தல்-நெய்தற்பூ, தாழம்பூ

பாலை-குராம்பூ, மராஅம்பூ

குறிஞ்சி

அரிய வகை மலர், 12 வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் சிறப்புடையது.

வள் இதழ் ஒண் செங்காந்தள், ஆம்பல். . . . . குருந்தம் வேங்கை புழகு

என 99 வகையான பூக்களை குறிஞ்சி பாட்டு (204) பாடல் விளக்குகிறது. இதே செய்தியை குறுந்தொகை 3வது பாடலில் மூன்றாவது வரியும் விளக்குகின்றது.

தாழை

இம்மலரானது அதிக அளவில் மணம் பரப்பக் கூடியது. இது கடற்கரை பகுதியில் மட்டுமே இருக்கும். இது பற்றிய பல குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன.

‘‘முழங்கு திரை கொழீஇய மூரி எக்கர்

தடந்தாள் தாழை முள்ளுடை நெடுந்தோட்டு

அக மடல் பொதுளிய முகை முதிர் வான் பூங்

கோடு வார்ந்தன்ன வெண் பூத்தாழை” (ந-203)

இதே செய்தி அகநானூறு பாடல்-130 கூறப்பட்டுள்ளது.

வேங்கைமலர்

இம்மலரானது அறுவடை காலங்களில் மட்டுமே பூக்கும் என்பதை குறிப்பிட்டதன் மூலம் சங்க புலவர்கள் நிலவியல் அறிவை காணலாம்.

‘‘எந்தை வந்து உரைத்தனனாக அன்னையும்

நன்னாள் வேங்கையும் மலர்கமா இனி என (நற்றிணை-206)

என்பது வேங்கை மலர் பற்றிய குறிப்பு இடம்பெறும் பகுதியாகும்.

ஆம்பல் மலர்

மாலையில் பூக்கும் இம்மலரானது வானத்தில் வெள்ளி பூத்தது போல் காட்சியளிக்கும். இப்பூவின் வடிவமானது கொக்கின் தலையை போல் அமைந்திருக்கும். இச்செய்தியை நற்றிணை 100 வது பாடலும் குறுந்தொகை 117 . 122 பாடலில் 1, 2 அடிகள் எடுத்து இயம்புகின்றன.

செருந்தி

இளவேனிற் காலத்தில் மலர்ந்து மணம் வீசக் கூடிய மலர்களின் செருந்தியும் ஒன்று. இம்மலர்கள் பொன்னிற வண்ணத்துடன் காட்சியளிக்கும்.

இதனை,

‘‘அமே வாழி, தோழி, பாசிலைச்

செருந்தி தாய இருங்கழச் சேர்ப்பன

தான் வரக் காண்குவாம் நாமே

மறந்தோம் மன்ற நாணுடை நெஞ்சே" (ஐ-12) என்ற பாடலடிகள் வெளிப்படுத்தும்.

ஞாழல்

''புலிநகக் கொன்றை" என்று கூறப்பெறும். இத கடற்கரையில் மிகுதியாக மலர்ந்திருக்கும். பெரும்பான்மை இடங்களில் புன்னையையும் ஞாழலையும் சேர்த்தே வழங்குவர். இளவேனிற் காலத்தில் மலரும் இம்மலர் பொன்னிற வண்ணத்தை உடையது. இது மகளிர் மேல் படரும் சுணங்கிற்கு உவமையாகக் கூறப்பெறுகிறது.

இதனை

''ஞாழற் பூவின் அன்ன சுணங்கு" (ஐ-149)

என்ற பாடலடி புலப்படுத்தும். ஞாழல் மலர் மிகச் சிறியதாகச் சிறுவெண் கடுகினைப் போலவும் ஆரல் மீனின் முட்டையைப் போலவும் இருப்பதாகக் கூறுவர். ஞாழல் மரத்தின் மலர்கள் கடற்கரையின் மணல்மேட்டில் பரவிக் கிடக்கின்றன என்பது அவரின் தாவரவியல் பதிவாகும்.

மௌவல்

மௌவல் எனச் சங்ககாலத்தில் வழங்கப்பட்ட மலரை இக்காலத்தில் மரமல்லிகை, பன்னீர்ப்பூ எனவும் வழங்குகின்றனர். இது வீட்டில் வளர்க்கப்படும் மரம். இந்த மலரின் அரும்புகள் மகளிரின் பல்வரிசைக்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளன. இப்பூ வருடத்திற்கு இருமுறை பூக்கும். மலர்கள் மிகுந்த வாசனையை கொண்டது.

''மனைநடு மௌவல் ஊழ்முசை" -நற்றிணை-115

''மனைமரத்து எல்லுறு மௌவல் நாறும்"-குறுந்தொகை-19

''சிறுகுடி மெல்லவல் மருங்கில் மௌவலும் அரும்பின-நற்-122

''மாதரார் முறுவல் போல் மண மௌவல் முகை வாழ்ப்ப"-க-27

''மணமௌவல் முகை அன்ன மாவீழ் வார் நிரை வெண்பல்"-க-14

''மனை இள நொச்சி மௌவல் வால்முகைத் துணை நிரைத்து

அன்ன மாவீழ் வெண்பல்-அக-21

என்ற பாடலடிகளில் இப்பூ பற்றிய பதிவுகள் அமைந்துள்ளன.

தும்பை

''தும்மை துழா அய்" என்று கபிலர் இதனைக் குறிஞ்சிப் பாட்டில் குறிப்பிடுகின்றார். தும்பை ஒரு செடி வெற்றிடங்களில் தழைத்துக் கிளைத்து வளரும். தும்பை மலர் தூய வெண்ணிறமானது. தும்பைச் செடி –தாவரவியல்படி துழாய்ச் செடிக்குடும்பத்தைச் சேர்ந்தது. தும்பைப் பெயர் பல

செடிகளுடன் இணைத்துப் பாடப்படினும் சிறுதும்பை, பெருந்தும்பை மலைத்தும்பை ஆகியவை மட்டுமே தும்பை இனத்தவையாகும்.

''கண்டிகும் அல்லமோ, கொண்க! நின் கேளே?
தும்பை மாலை இளமுலை
நுண் பூண் ஆகம் விலங்கு வோளே!

தும்பை மலர் மருந்தாகவும் பயன்படும். இதன் மலர்களை நல்லெண்ணெயில் காய்ச்சித் தலையில் தேய்த்துக் குளிக்க ஒருபக்கத் தலைவலி குணமாகும். கொத்தோடு ஆடவரும், மகளிரும தும்பைப் பூவை அணிவதும் உண்டு என்பது சங்கப் பாடல்களின் வழிப் புலனாகிறது.

குவளை

குவளை என்பது பொதுவாகச் செங்குவளையாகும், இதனைச் செங்கழுநீர் எனவும், நீலோற்பவம் எனவும் கூறுவர். "தண்யக்குவளை" என்ற கபிலரின் கூற்றுக்கு (கு-63)
''குளிர்ந்த குளத்தில் மலர்ந்த செங்கழுநீர்" என்று உரை கூறியுள்ளார் நச்சினார்கினியர்.
செங்குவளை, தாமரை, ஆம்பல் முதலிய கொடிகள் சுனையில் வளர்வன. இலைகள் நீர்மட்டத்தின் மேலே காணப்பெறும் இலை மட்டத்திற்குச் சற்று உயரமாக வளர்ந்து பூக்கும் இயல்பினம்(அ-180)

நெய்தல்

கடலைச் சார்ந்த உப்பங்கழியிலும் தண்ணீர் நிலைகளிலும் வளரும் இயல்புடையது நெய்தற் கொடி. நெய்தல் நிலத்துச் சுனை மலராகிய நெய்தலைப் புலவர் பெருமக்கள் வியந்து பாடியுள்ளனர். நெய்தல் அல்லி இனத்தைச் சார்ந்தது. ஒழுங்கான இருபாலான மலர்களாகக் காணப்பெறும். நீண்ட மலர்க் காம்பின் நுனியில் தனி மலராக வளரும்.
நீலநிறமுள்ள பெரிய நெய்தல் மலர் செங்கழுநீர்ப் பூவைப் போன்றது. நெய்தல் முகை, திருகு அமைப்பில் அகலிதழ்களை மூடிக் கொண்டிருக்கும். இதனை நெய்தல் மூக்கு என்பர்.
''வள் இதழ் நெய்தல் வருத்த மூக்கு இறுபு" (ந-372)

பீர்க்கம் பூ

பாரம், பீரம், பைங்குருக்கத்தி என வரும் குறிஞ்சிப்பாட்டில் (92) உள்ள பீரம் என்பதற்கு நச்சினார்க்கினியார் ''பீர்க்கம்பூ" என்று உரை கூறியுள்ளார். பீர்க்கு ஒரு கொடியாகும். இது மஞ்சள் நிறமான பூக்களை உடையது. பீர்க்கங்கொடி தழைத்துப் புதர் போலப் படரும். இது கார் காலத்தில் பூக்கும். இலைகள் தனித்துப் பிளவுகளுடன் காணப்பெறும். பால் வேறுபாடுள்ள தனித்தனிப் பீர்கமக் மலர்கள் மஞ்சள் நிறமானவை. பீர்க்கம் பூ மணமற்றது என்பர்.

‘‘முனை கவர்ந்து படப்பையில் படரும். ஆனால் மனையிலும் மன்றத்திலும் படரவிடக்கூடாது. மனையில் பீரம் முளைத்தால் அது பாழ்மனை என்றுபொருள்படும். என்ற கருத்து இப்பாடலில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

<u>புன்னை</u>

நெய்தல் நிலத்து மரமாகப் புன்னை குறிக்கப் பெறுகிறது. புன்னைமரம் கடற்கரை ஓரங்களிலும் உப்பங்கழியிலும் வளரும். புன்னை வேர்கள் கடல் அலைகளால் அரிக்கப் பெறுவதையும் கிளைகள் வளர்ந்து நிற்பதையும் பல புலவர்கள் குறித்துள்ளனர்.

இதனை,

‘‘புணரி திளைக்கும் புள் இதழ் கானல்

இணர் வீழ் புன்னை ஏக்கர் நீழல்” (கு. 299)

என்ற பாடலடிகள் உணர்த்தும். இதில் புன்னை மரத்தின் தழைத்த இலைகளையும் , முத்துப்போன்ற வெள்ளிய அரும்புகளையும், அழகிய மலர்களையும் சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர். புன்னை இலைகள் கரும்பச்சை நிறத்தில் காணப்பெறுவதால் மரமே நீலநிறமாகக் காட்சி அளிக்கும். இந்நிறமாற்றத்தை வியந்த புலவர்கள் தம் செய்யுள்களில் அக்காட்சியை அழகுற எடுத்துக் காட்டியுள்ளனர்.

இலக்கியங்களில் மிகுந்த அளவில் இடம்பெறுவது புன்னையாகும். புன்னையைப் பாடிய பல்லோருள்ளும் புலவர் உலோச்சனார் முகச் சிறந்தவர். இவர் தாவரவியலாருக்கு இணையாகப் புன்னையின் அழகினைப்பன்முக நோக்கில் காட்டுகிறார். புன்னையின் கரிய கிளைகள் இரும்பைப் போன்ற வளமையுடையன. இதன் கரும்பச்சை இலைகள் நீலநிறத்தின வெள்ளி போன்ற பூங்கொத்தின் தாது பொனனிறமுடையது. அதில் புலியின் புள்ளி போன்ற அழகிய வரி வண்டுகள் மொய்க்கும் என நற்றிணை-249 பாடலடிகளில் கூறப்பட்டுள்ளது.

இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
நீலத்து அன்ன பாசிலை அகம்தொறும்
வெள்ளி அன்ன விளங்கு இணர் நாப்பண்
பொன்னின் அன்ன நறுந் தாது உதிர
புலிப் பொறிக் கொண்ட பூ நாறு குரூஉச் சுவல்
வரி வண்டு ஊதலின் புலி செத்து வெரீஇ.

என்ற பாடலடிகள் மூலம் விளங்கும்.

அகத்திணையில் மூன்று விதமாக புணர்ச்சிகள் கூறப்பட்டுள்ளது. பூத்தரு புணர்ச்சி, களிறு புணர்ச்சி, புனல் தரு புணர்ச்சி என்பன அவையாகும். இதில் பூவை கொடுத்து தலைவன் தலைவியை புணரும் புணர்ச்சியே சிறப்பாக கூறப்பட்டுள்ளது.

புறத்திணை

ஒரு ஆண்மகனின் வீரம், கொடை, போர் திறம் போன்ற சிறப்புகளை பற்றி கூறுதல் புறத்திணையாகும்.

வெட்சி, வஞ்சி, உழஞை, தும்பை, வாகை, காஞ்சி என்ற திணைகளில் வீரர்கள் பகைநாட்டு மன்னர்களிடம் போரிடச் செல்லும் போது அந்தந்த திணைக்குரிய மலர்களை மாலைகளாக சூடி செல்வார்கள். வெற்றி பெற்றதும் அதனைக் கொண்டாடுவதற்கும் அத்திணைக்குரிய மலர்களையே சூடி மகிழ்வார்கள். வீரத்தின் அடையாளமாகவும் சங்க இலக்கியங்களில் மலர்கள் இடம்பெற்றுள்ளன.

புறப்பொருள் வெண்பாமாலையில் பூவை சிறப்பித்து கூறும் வகையில் ‘‘பூவை நிலை” என்ற துறையே கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாக பண்டைத் தமிழ்புலவர்கள் தங்களின் இலக்கியங்களில் மலர்களைப் பதிவு செய்துள்ளனர். அவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டும். அது எந்தெந்த இடங்களில் வளரும் தன்மையுடையன. அவை எவ்வாறு நோய் தீர்க்கும் மருந்தாகவும், ஒப்பனைக்கு பயன்படும் பொருளாகவும் இருந்துள்ளன என்பதனை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

:

தொல்லியல்

வே.இராஜகுரு

பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்) மற்றும் பொறுப்பாசிரியர்,

தொன்மைப் பாதுகாப்பு மன்றம், சுரேஷ் சுதா அழகன் நினைவு அரசு மேல்நிலைப்பள்ளி,

திருப்புல்லாணி – 623 532, இராமநாதபுரம் மாவட்டம். செல்பேசி எண் : 9944978282

தொல்காப்பியப்பொருளதிகாரத்தில் சொல்லப்படும் முல்லை, குறிஞ்சி, மருதம்,நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களில் குறிஞ்சி தவிர்த்த நால்வகை நிலங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளன. பரமக்குடி, கடலாடி, இராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகள் முல்லை நிலமாகவும்,திருவாடானை வட்டம் மருதநிலமாகவும், சுந்தரபாண்டியன்பட்டினம் முதல் கன்னிராஜபுரம் வரையிலான கடற்கரைப்பகுதி நெய்தல் நிலமாகவும், கமுதி, முதுகுளத்தூர், கடலாடியின் சில பகுதிகள் முல்லை திரிந்த பாலை நிலமாகவும் உள்ளன. இதற்கு ஆதாரமாக ஊர்ப் பெயர்கள், தாவரங்கள், விலங்குகள், நிலஅமைப்பு ஆகியவற்றைக் கொள்ளலாம்.

மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் இம்மாவட்டம் கீழ்ச்செம்பில் நாடு, வடதலை செம்பில் நாடு, செவ்விருக்கை நாடு, முத்தூற்றுக் கூற்றம், வரகுணவளநாடு, அரும்பூர்க் கூற்றம், துகவூர்க் கூற்றம், களாத்திருக்கை நாடு, இடைக்குளநாடு, ஏழூர் செம்பில் நாடு, அளற்றுநாடு, சுந்தரபாண்டியவளநாடு, உலகு சிந்தாமணி வளநாடு, கானப்பேர்க்கூற்றம், கோடிநாடு ஆகிய நாட்டுப் பிரிவுகளில் இருந்துள்ளது. பாண்டி மண்டலத்தின் ஒரு பகுதியான இம்மாவட்டம், பாண்டியர், சோழர், டில்லி சுல்தான்கள், விஜயநகர மன்னர்கள், மதுரை நாயக்கர்கள், சேதுபதிகள், ஆங்கிலேயர் ஆகியோர்களால் ஆளப்பட்டது.

சுந்தரபாண்டியன்பட்டினம், மருங்கூர்ப்பட்டினம், தீர்த்தாண்டதானம், பாசிப்பட்டினம், முத்துராமலிங்கபட்டினம், தொண்டி, நானாதேசிப்பட்டினம் (தளிர்மருங்கூர்), புதுப்பட்டினம், தேவிபட்டினம்,முடிவீரன்பட்டினம், அழகன்குளம், இராமேஸ்வரம், தனுஷ்கோடி, பாம்பன், பெரியபட்டினம், கீழக்கரை, இடைவழியான எறிவீரபட்டினம் ஆகிய பல துறைமுகங்கள் புகழ்பெற்று விளங்கி இருந்துள்ளதை கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகிறது.இங்கு வைகை, குண்டாறு, கிருதுமால், விரிசிலை, கோட்டைக்கரை, சருகணி, மணிமுத்தாறு, பாம்பாறு ஆகிய பல ஆறுகள் ஓடுகின்றன.

தொல்பழங்காலத் தடயங்கள்

இம்மாவட்டத்தில் பழைய கற்கால, நுண்கற்கால, புதிய கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் இம்மாவட்டம் இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன் வாழ்ந்த இடமாக இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. பழைய

கற்காலக் கருவிகள் கமுதி அருகே கல்லுப்பட்டியில் கிடைத்துள்ளன. இதை பேரையூரைச் சேர்ந்த கு.முனியசாமி என்ற ஆசிரியர் கண்டெடுத்துள்ளார்.

நுண்கற்காலக் கருவிகளைப் பேரையூரில் ஆசிரியர்கு. முனியசாமியும், காரேந்தல், செய்யாமங்கலம், காஞ்சிரங்குளம் ஆகிய இடங்களில் வீ.செல்வகுமாரும், தெற்குத்தரவையில் ஆ.இராஜாவும் கண்டுபிடித்துள்ளனர். தேரிருவேலி அகழாய்விலும் நுண்கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. போகலூரில் புதிய கற்காலக் கருவியை இராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தினர் கண்டெடுத்துள்ளனர்.

இரும்புக்கால கருப்பு சிவப்பு பானை ஓடுகள் மற்றும் முதுமக்கள் தாழிகள், இராஜசிங்கமங்கலம் அருகே செங்கமடை கோட்டை, லாந்தை, பேரையூர், கீழச்சீத்தை ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இரும்பு உருக்காலைகள் இருந்ததற்கான தடயம் சாயல்குடி அருகே கொக்கரசன்கோட்டையில் கிடைத்துள்ளது.

சங்ககால வாழ்விடங்கள் அழகன்குளம், தேரிருவேலி, சக்கரவாளநல்லூர், தெற்குத்தரவை, இலந்தைக்கூட்டம், கீழச்சீத்தை, இரா.காவனூர், வன்னிக்குடி, உத்திரகோசமங்கை, நல்லிருக்கை, லாந்தை, அரியகுடி புத்தூர், பெருங்களூர், சிறுவயல், சேமனூர், சத்திரக்குடி, தீயனூர், தென்னவனூர், வைரவனேந்தல், பெருஞ்சையூர், கொழுந்துறை, கொக்கரசன்கோட்டை, தளிர்மருங்கூர்ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வணிகமும் துறைமுகங்களும்

சுந்தரபாண்டியன்பட்டினம் முதல் அழகன்குளம் வரையிலான கிழக்குக் கடற்கரைப்பகுதிகளில்இயற்கையான உப்பங்கழிகள் அதிகளவில் காணப்படுகின்றன. இதனால் இப்பகுதிகள் பழங்காலத்தில் துறைமுகப்பட்டினங்களாகவும், வணிக நகரங்களாகவும், கப்பல் கட்டும் தளங்களாகவும் விளங்கி உள்ளன.

தமிழகத்தில்சிறப்புடன்விளங்கியவைஇரண்டுதொண்டிதுறைமுகங்கள். ஒன்றுஅரபிக் கடலோரம்சேரநாட்டில்உள்ளதொண்டி. மற்றொன்றுவங்கக்கடலோரம்பாண்டியநாட்டில் இருக்கும்தொண்டி.பழங்காலம் முதல் இலங்கை செல்லும் வழியாக தொண்டி இருந்துள்ளது. இப்பகுதியைச் சேர்ந்த பலர் இலங்கையில் குடியேறி உள்ளது கருதத்தக்கது. சோழர்கள் இலங்கை செல்ல இத்துறைமுகத்தையே பயன்படுத்தி உள்ளனர்.

பாண்டிய நாட்டின் தொண்டியை, சங்க இலக்கியமான அகநானூறில் “வளங்கெழு தொண்டி” என அம்மூவனாரும், சிலப்பதிகாரத்தில் “வங்க ஈட்டத்துத் தொண்டி என இளங்கோவடிகளும் குறிப்பிட்டுள்ளனர் (மயிலை சீனி.வேங்கடசாமி - பழங்கால தமிழர் வாணிகம் - சங்ககாலம் பக்கம் 73 ஸ்ரீசெண்பகா பதிப்பகம் சென்னை)

பாண்டிக்கோவை என்ற நூல் கி.பி.7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நெடுமாறன் என்ற பாண்டியமன்னனின் துறைமுகமாக தொண்டி விளங்கியதாக தெரிவிக்கிறது. யாப்பெருங்கலக்காரிகை உரையில் கி.பி.9ஆம் நூற்றாண்டில் ஆண்ட வரகுணப்பாண்டியன் காலத்தில் இவ்வூர் வரகுணன் தொண்டி எனஅ ழைக்கப்பட்டதாகக் கூறுகிறது.

கி.பி.13 முதல் 14 ஆம்நூற்றாண்டுகளில்பிற்காலப்பாண்டியர்ஆட்சியின்போதுகிழக்கு நாடுகளுடன்முக்கியமானவாணிகத்துறைமுகமாகதொண்டிவிளங்கியது. இவ்வூரிலுள்ள சிவன் கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்கள் தொண்டியை பவித்திரமாணிக்கப்பட்டினம் என அழைக்கிறது.

தீர்த்தாண்டதானம் சர்வதீர்த்தமுடையார் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் இவ்வூரைதிட்டானம் என்று குறிப்பிடுகிறது.திட்டானம் என்றால் மரக்கலம் நிறுத்தும் மேட்டுப்பகுதி என்றுபொருள். இக்கோயிலில் காணப்படும் ஏழு கல்வெட்டுகளில் நான்கு இங்கு தங்கி இருந்த வணிகக்குழுக்களையும், வணிகர்களையும் குறிப்பிடுகிறது. கி.பி. 1198ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு இவ்வூரை சிறுகடற்கடை என குறிக்கிறது.கி.பி.1269இல் இவ்வூரில்தங்கி இருந்த அஞ்சுவன்னம், மணிக்கிராமம், சாமந்தபண்டசாலி, தோயாவத்திரச் செட்டிகள், தென்னிலங்கை வளஞ்சியர், கைக்கோளர், தூசுவர், வாணியர், கரையார் ஆகிய வணிகக்குழுவினர் இக்கோயில் எதிரில் சிதைந்த நிலையில் இருந்த மண்டபத்தை பழுதுபார்க்க ஒப்புக்கொண்டுள்ளனர். இதில் அஞ்சுவன்னம் எனும் வணிகக் குழுவினர் அல்லாவைத் தொழும் கலிபா வழியினரான இஸ்லாமியர் என்பது குறிப்பிடத்தக்கது.பழங்காலத்தில் இவ்வூர் ஒரு வணிகத்தலமாக இருந்திருக்கக் கூடும்.

பாசியாற்றின் கரையில் அமைந்துள்ள பாசிப்பட்டினம் கி.பி.875 முதல் கி.பி.1090 வரையிலான காலத்தில் ஒரு துறைமுகமாக இருந்துள்ளது. இதன் அருகில் உள்ள ஊர் வட்டானம்.வட்டானம் என்பது வட்டவடிவமான மரக்கலத்தைக் குறிக்கிறது. இங்கு வட்டவடிவமான பரிசல் கட்டும் தொழில் நடந்திருக்கலாம்.

தளிர்மருங்கூர் ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பின் வீரகேரளபுரமான நானாதேசிப்பட்டினம் எனப் பெயர் பெற்றிருந்தது. இங்குவடக்கூர், தெற்கூர் என இரு இடங்களில் உள்ள சிவன் கோயில்களில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் உள்ளன. இதில் இவ்வூர் தளிர் மருங்கூர், குலமாணிக்கபுரம் என குறிப்பிடப்படுகிறது. குலமாணிக்கபுரம், நானாதேசிப்பட்டினம் என இவ்வூர் பெயர் பெற்றிந்ததன் மூலம் சிறந்த வணிக நகரமாக இருந்ததை அறியமுடிகிறது. சங்ககால பானை ஓடுகள் இங்குகிடைப்பதால் சங்ககாலம் முதல் இவ்வூர் புகழ் பெற்று இருந்துள்ளது என்பது உறுதியாகிறது.இங்குள்ள வடக்கம்மன் கோயில் கல்வெட்டில் கைக்கோளர் ஒருவர் செய்த கொடை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. கைக்கோளர் என்பவர்கள் நெசவுத்தொழில் மற்றும் துணி வாணிகம் செய்யும் பிரிவினர்.

தேவிபட்டினம் சோழர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட கடற்கரைப் பட்டினம் என கருதப்படுகிறது. இங்கு நகரத்தார்கள், நானாதேசிகள் ஆகிய வணிகக்குழுக்கள் தங்கி இருந்ததை இவ்வூர் சிவன் கோயில் கல்வெட்டுகளால் அறியலாம். இங்கு அரபுநத்தம் என்ற ஒரு பகுதி உள்ளது. இவ்வூரில் அரேபிய வணிகர்கள் தங்கி இருந்ததை இது உறுதிப்படுத்துகிறது.கீழக்கரையில் பதினெண் விசயத்தார் எனும் வணிகக்குழுவினர் முத்து வணிகத்தில் ஈடுபட்டதை கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது.

தனுஷ்கோடி இரட்டைத்தாழை முனியசாமி கோயிலில் கிடைக்கப்பெற்ற 8ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டில் வளஞ்சியர், திசையாயிரத்து ஐந்நூற்றுவர்ஆகிய வணிகக்குழுக்கள் செய்த தானம் குறிப்பிடப்பட்டுள்ளது.கமுதி ஐயனார் கோயில் வட்டெழுத்துக் கல்வெட்டில் ஐந்நூற்றுவர் எனும் வணிகக்குழுவின் மெய்க்கீர்த்தி இடம்பெற்றுள்ளது.

இராஜசிங்கமங்கலம் அருகே அறுநூற்றுமங்கலம், திருவாடானை அருகில் அறுநூற்றுவயல் ஆகியவை வணிகர்களின் பாதுகாப்பு வீரர்களான அறுநூற்றுவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

திருவாடானை அருகில் உள்ளபாரூரில் பதினெண்பூமி எனும் வணிகர் மற்றும் அவர்களின் பாதுகாப்பு வீரர் கொண்ட குழுவினரின் குடியிருப்பு உருவானபின் அவ்வூர் பதினெண்பூமிநல்லூர் என பெயர் மாற்றப்பட்டுள்ள தகவல் அறுநூற்றுமங்கலம் கல்வெட்டில் உள்ளது. சாயல்குடி அருகில் இடைவழி எனும் எறிவீரபட்டினம் இருந்ததாக திருமாலுகந்தான்கோட்டை கல்வெட்டு கூறுகிறது. எறிவீரபட்டினம் என்பது வணிகர்களின் பாதுகாப்புவீரர் குடியிருப்பு ஆகும்.

ரோமானிய பானை ஓடுகள் அழகன்குளம், தேரிருவேலி, கீழச்சீத்தை, பேரையூர் ஆகிய இடங்களிலும், சீனப்பானை ஓடுகள் பி.முத்துச்செல்லாபுரம், பிரபுக்களூர், வீரவனூர், தொண்டி, பெரியபட்டினம், அழகன்குளம், கீழச்சீத்தை, களத்தாவூர், மேலமடை ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன. இதன் மூலம் இப்பகுதிகளுக்கு ரோமானியர் மற்றும் சீனர் ஆகிய வெளிநாட்டு வணிகர்கள் வந்து சென்றதை அறியமுடிகிறது.

வரலாற்றுத் தடயங்கள்

சங்ககாலம் முதல் இம்மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் சமண, புத்தமதங்கள் பரவி இருந்துள்ளன. மேலூர் அருகிலுள்ள கீழவளவின் மலைக்குன்றில் கி.மு.மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு தமிழ் பிராமி கல்வெட்டு உள்ளது. இதில்,

"உப(ச)அன் தொண்டி(ல)வோன் கொடு பளிஇ"

என உள்ளது. இதன் பொருள் தொண்டியில் இருந்து வந்த இலவோன் என்பவர் இப்படுக்கைகளை அமைத்துக்கொடுத்துள்ளார். உபசன் என்போர் சமண சமய நூல்களை அம்மத இல்லத்தார் வீடுகளில் போதிப்பவர் என அறியமுடிகிறது. இலவோன் என்பவர் கீழைக்

கடற்கரைத் துறைமுகமான இராமநாதபுரம் மாவட்ட தொண்டியைச் சேர்ந்த சமய ஆசிரியர் ஆவார்.(மதுரையில் சமணம் – சொ.சாந்தலிங்கம் பக்கம் 33, 34)

இராமேஸ்வரம் அரியான்குண்டு பகுதியில் பெரும் பௌத்தபள்ளி இருந்ததற்கானதடயங்கள் கிடைத்துள்ளன. தொண்டி அருகில் செம்பிலான்குடியில் இருந்த ஆறு அடி உயர புத்தர் சிற்பம் சில ஆண்டுகளுக்கு முன் காணாமல் போயுள்ளது. பார்த்திபனூர் பகுதியில் வயலில் இரு புத்தர் சிற்பங்கள் உள்ளன. இவை பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தஅமர்ந்த நிலையிலான 5 அடி உயர புத்தர் சிற்பம் ஆனந்தூர் அருகில் சம்மந்தவயலில் கிடைத்துள்ளது.

காஞ்சிபுரத்தைப் போன்று சுந்தரபாண்டியன்பட்டினத்திலும், புத்தம், சமணம், சைவம், வைணவ ஆகிய நான்கு மதங்களின் கோயில்கள் இருந்துள்ளன. ஆனால் தற்போது ஏகாம்பரேஸ்வரர் என்ற சிவன் கோயில் மட்டுமே அங்கு உள்ளது. இக்கோயில் கல்வெட்டுகள் மூலம் இங்கு தசரதராம ஈஸ்வரமுடைய நாயனார் என்ற சிவன் கோயிலும், தசரதராம விண்ணகராழ்வார் கோயில் என்ற திருமால் கோயிலும் இருந்துள்ளதை அறியமுடிகிறது. திருமால் கோயில் முற்றிலும் அழிந்துள்ளது. அதன் எஞ்சிய சில சிலைகள் சிவன் கோயில் பகுதியில் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தநின்ற நிலையிலான புத்தர் சிலை சிவன் கோயிலில் உள்ளது. இக்கோயில் விமானத்தின் நாசிக்கூடுகளிலும் புத்தரின் உருவங்கள் உள்ளன. இதன் மூலம் இக்கோயில் புத்தர் கோயிலாக இருந்து சிவன் கோயிலாக மாற்றப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

மேலும் இவ்வூரின் தெற்கே இடையர்மடம் பகுதியில் பழுதடைந்த நிலையில் இருக்கும் கோபாலமடம், இராமர் பாதம் கோயில் ஆகியவை முன்பு சமணப்பள்ளியாக இருந்து மடமாக மாற்றப்பட்டது என சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.(கட்டுரை ஆசிரியர் களஆய்வின்போது கண்டுபிடித்தது)

திருவாடானை அருகில் மணிகண்டி என்ற ஊரில் கிடைத்த 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தர் சிலை சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. தொண்டி அருகேயுள்ள பனஞ்சாயல் பள்ளித்தம்மத்துக்கு (புத்தபள்ளி) வழங்கிய நிலக்கொடை சுந்தரபாண்டியபட்டினம் ஏகாம்பரநாதசாமிக்கு (சிவன்கோயில்) கி.பி. 17ஆம் நூற்றாண்டில் மாற்றி வழங்கப்பட்டுள்ளது.

கி.பி.11 - 12 ஆம் நூற்றாண்டுகளில் சோழர்கள் பாண்டிய நாட்டுப் பகுதிகளை நேரடியாக ஆட்சி செய்தபோது தொண்டிபகுதி முழுதும் வணிக மையங்களாக இருந்துள்ளன. இலங்கையிலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் கி.பி.15ஆம் நூற்றாண்டுவரை புத்தசமயம் சார்ந்த வணிகர்கள் வாணிகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். இப்பகுதியிலும் அதுபோன்ற நிலைதான் நிலவி இருந்திருக்கவேண்டும். இலங்கையுடனான வணிகத் தொடர்பு மூலம் மீண்டும் பரவிய புத்தமதம் கி.பி.15 – 16ஆம் நூற்றாண்டு வரை மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்துள்ளது. பல ஊர்களின் பெயர்கள் புத்தமதத் தொடர்புடையதாக உள்ளன.

பெரியபட்டினம், மேலக்கிடாரம், கீழச்சீத்தை, கீழச்சாக்குளம், பசும்பொன், திருப்புல்லாணி, கமுதி, மேலஅரும்பூர், மஞ்சூர், புல்லூர், புல்லுகுடி ஆகிய இடங்களில் சமண தீர்த்தங்கரர் சிற்பங்கள் கிடைத்துள்ளன.

கி.பி.8ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தொண்டி, தேவிபட்டினம், கீழக்கரை போன்ற ஊர்களில் முஸ்லிம் குடியிருப்புகள் இருந்துள்ளன. கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளில் முஸ்லிம்கள் சோனகர் எனவும் அவர்கள் தொழும் இடமான பள்ளிவாசல் சோனகப்பள்ளி எனவும் வழங்கப்படுகிறது. தொண்டி போன்ற சில ஊர்களில் சோனகத்தெரு என வழங்கப்படுவது அவர்தம் பழமையை உணர்த்தும்.

தொண்டி கடற்கரைப் பகுதிகளில் கி.பி.15 - 16ஆம் நூற்றாண்டு வரை சமண புத்தமதத்தைப் பின்பற்றுவோர் பெருமளவில் இருந்துள்ளனர். கி.பி.16ஆம் நூற்றாண்டுக்குப் பின் புத்தமதத்தைப் பின்பற்றிய மரக்கால நாயகர்களும், மாவோத்துகள் எனப்படும் மாந்தையர்களும் (கப்பல் கட்டும் தச்சர்கள்) இஸ்லாமியர்களாக மாறியிருக்க வேண்டும். மாந்தையர் மரபினராய் இருந்து இஸ்லாமியரானவர்கள் ஓடாவி முஸ்லிம் என அழைக்கப்படுகின்றனர். இப்போதும் தொண்டி மற்றும் சுந்தரபாண்டியன்பட்டினம் ஆகிய ஊர்களில் ஓடாவி தெரு என்று ஒரு தெரு உள்ளதை இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம். ஓடாவி என்பது ஓட ஆழ்வி என்பதன் திரிபாக இருக்கலாம். ஓடாவி என்பது மரக்கலம் செய்யும் தச்சர்களைக் குறிக்கும் சொல் ஆகும்.

திருப்புல்லாணி கோயில் முதல் கோபுர நுழைவு வாயிலின் அருகில் உள்ள சுவரில் காணப்படும் கி.பி.1247 ஆம் ஆண்டைச் சேர்ந்த, இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு, கீழ்ச்செம்பி நாட்டு பவித்திரமாணிக்கப்பட்டினத்திலுள்ள (பெரியபட்டினம்) பிழார் பள்ளி என்ற முஸ்லிம் பள்ளிவாசலுக்குஆம்பத்தூர், மருதூர் ஆகிய ஊர்களில் உள்ள நிலங்கள் தானமாக வழங்கப்பட்டதைத் தெரிவிக்கிறது. ஒரு வைணவக் கோயிலில் முஸ்லிம் பள்ளிவாசலுக்கு கொடை வழங்கிய கல்வெட்டு இருப்பது ஆச்சரியம் அளிப்பதாக உள்ளது. (A.R.E.No.116/1903)

வட்டானத்தில் உள்ள இஸ்லாமியர் கல்லறைக் கல்வெட்டுகள் கி.பி.1497முதல் காணப்படுவதால் இங்கு 15ஆம் நூற்றாண்டுகளிலேயே முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை அறியலாம்.

நரிப்பையூர் கடற்கரை அருகே முஸ்லிம் கபர்ஸ்தான் உள்ளே சுமார் 500ஆண்டுகால பழமையான முஸ்லிம் பள்ளிவாசல் உள்ளது. மண்டபம் போன்ற அமைப்பில் காணப்படும் இப்பள்ளிவாசலில் தொழும் மாடம், அர்த்தமண்டபம், முன்மண்டபம் ஆகியவை உள்ளன. இதன்மேல் மினார் எதுவும் கட்டப்படவில்லை. எனவே இதை மொட்டைப் பள்ளிவாசல் என உள்ளூர் மக்கள் அழைக்கிறார்கள். கடற்கரைப் பகுதிகளில் வாலிநோக்கம், கீழக்கரை உள்ளிட்ட பல இடங்களில் முழுவதும் கல்லால் கட்டப்பட்ட கல்லுப்பள்ளிகள் உள்ளன.

போர்ச்சுகீசியர்கள் கடற்கரைப் பகுதியில் வணிகம் செய்ததோடு கத்தோலிக்க கிறித்துவத்தையும் பரப்பினர். உப்பூர் அருகே கொக்குவாடியில் போர்ச்சுகீசியர்கள் கட்டிய ரோமன் கத்தோலிக்க தேவாலயம்தான் இம்மாவட்டத்தில் மிகப்பழமையான தேவாலயம் ஆகும். இராமநாதபுரம் அரண்மனை வடக்குத் தெருவில் உள்ள முதல் பிராட்டஸ்டன்ட் தேவாலயம் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனிப் படையின் தளபதி மனுவேல் மார்டின்ஸ் என்ற ஆங்கிலேயரால் கி.பி.1804 இல் கட்டப்பட்டுள்ளது.

சிவன் கோயிலுக்கு வழங்கும் நிலங்களின் நான்கு எல்லைகளிலும் திரிசூலம் பொறிக்கப்பட்ட சூலக்கற்களும், திருமால் கோயிலுக்கு வழங்கும் நிலங்களின் எல்லைகளில் திருவாழிக்கற்களும் நடுவது வழக்கம். மருங்கூர், மேலப்பெருங்கரையில் பாண்டியர் கால சூலக்கற்களும், மாஞ்சூர், மேலஅரும்பூர், செய்யாமங்கலத்தில் சோழர்கால சூலக்கற்களும், மேலஅரும்பூர், மேலமடையில் சேதுபதிகள் கால சூலக்கற்கள் கல்வெட்டுகளுடனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருவாழிக்கற்கள் கடம்போடை, திருப்புல்லாணி, மேலாய்குடி, மேலக்கன்னிசேரி ஆகிய ஊர்களில் உள்ளன.

பெரியபட்டினத்தில் சங்ககால சேரர், பாண்டியர் காசுகளும், இராஜராஜசோழன் கால ஈழக்காசுகளும், பாமினி சுல்தான்கள், மதுரை சுல்தான்கள் காசுகளும் கிடைத்துள்ளன. தொண்டியில் ஈழக்காசு கிடைத்துள்ளது. திருப்புல்லாணி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பஞ்சந்தாங்கி, தாதனேந்தலில் ஈழக்காசுகளையும், பால்கரையில் டச்சுக்காரர்களின் துட்டுகளையும், திருப்புல்லாணியில் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் வெளியிட்ட கச்சி வழங்கும் பெருமாள் காசையும் கண்டெடுத்துள்ளனர். அழகன்குளம் அகழாய்வில் ரோமானியர் காலக் காசுகளும், சங்ககால பாண்டியர் காசும் கிடைத்துள்ளன.

திருக்குறளை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர், திருவள்ளுவர் உருவம் தாங்கிய தங்க நாணயங்களை வெளியிட்டவர் என்ற சிறப்புக்குரிய பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ்என்பவர் தமிழ் மீது கொண்ட தீராக்காதலால் தன் பெயரை எல்லீசன் என தமிழ்ப் படுத்திக் கொண்டார்.இவர் தமிழ் ஆய்வுக்கு இராமநாதபுரத்தில் தங்கி இருந்தபோது திடீரென மரணமடைந்தார். இவருடைய கல்லறைக் கல்வெட்டுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ளன. அவை தற்போது இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

திருப்புல்லாணி அருகே பள்ளபச்சேரியில் ஒரே கோயிலில் ஐந்து கழுமரங்கள் மக்கள் வழிபாட்டில் உள்ளன. கழுவேற்றப்பட்டதன்அடையாளமாக உள்ள இத்தகைய கழுமர வழிபாடுகள் மாவட்டம் முழுவதும் பரவலாக காணப்படுவது ஏதோவொரு வரலாற்றுச் செய்தியை நினைவுபடுத்துவதாக உள்ளது.

கடற்கரைப் பகுதிகளில் உள்ள மணற்பாறைகளில் வாலிநோக்கம் கடற்கரைப் பகுதிகளில் உள்ள மணற்பாறைகள் நல்ல தரமானவை என்பதால் அப்பகுதி கடலில் இருந்த பாறைகளை வெட்டி எடுத்து வந்து திருப்புல்லாணி, உத்திரகோசமங்கை, மாரியூர், சாயல்குடி உள்ளிட்ட

கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. திருப்புல்லாணியில் உள்ள பட்டாபிஷேக ராமர் சன்னதி கொடிமரம் அருகில் உள்ள இராமலட்சுமணர் சிற்பங்கள் அத்தகைய கல்லில் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

மதுரை சுல்தான்களை வீழ்த்தி விஜயநகர மன்னர் வீரகம்பண உடையார் மதுரையை கைப்பற்றிய பின்பு திருப்புல்லாணி ஆதிஜெகநாத பெருமாள் கோயிலுக்கு கொடை வழங்கியுள்ளார். அவருடைய முதல் கல்வெட்டு திருப்புல்லாணி கோயிலில் உள்ளது. இதன்மூலம் அவர் மதுரையைக் கைப்பற்றியது கி.பி.1371க்கு முன்பு என அறியமுடிகிறது.

திருப்புல்லாணி, உத்தரகோசமங்கை ஆகிய கோயில் கோபுரங்களில் சேதுபதி மன்னர்கள் கால தேக்கு மரச்சிற்பங்கள் உள்ளன.தென்னிந்தியாவிலேயே முழுவதும் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரே அரண்மனையாக இராமநாதபுரம் இராமலிங்கவிலாசம் திகழ்கிறது. அரண்மனை, கிழவன் சேதுபதி காலத்தில் கட்டப்பட்டிருந்தாலும் ஓவியங்கள் முத்துவிஜய ரகுநாத சேதுபதி காலத்தில் தான் வரையப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. உத்தரகோசமங்கை, திருவாடானை ஆகிய கோயில்களிலும் சேதுபதிகள் கால ஓவியங்கள் உள்ளன.

நிரை கவர்தல், மீட்டல், ஊரை எதிரிகளிடமிருந்து காத்தல், புலி, பன்றி, யானையுடன் சண்டையிடுதல், அரசனின் வெற்றிக்காக போரிடுதல் ஆகிய காரணங்களால் இறந்துபோன கணவனுடன் உடன்கட்டை ஏறிய மனைவிக்கு அமைக்கப்பட்ட நடுகல்லின் மேல் எழுப்பப்படும் சதிக்கோயில் மாலைக்கோயில் எனப்படுகிறது. இத்தகைய மாலைக்கோயில்கள் இம்மாவட்டத்தில் நரிப்பையூர், கொக்கரசன்கோட்டை, குண்டுகுளம், ஆரைகுடி உள்ளிட்ட சில இடங்களில் இக்கோயில்கள் இன்றும் மக்கள் வழிபாட்டில் உள்ளன.

வீரர்கள், போரில் தன் அரசனுக்கு வெற்றிகிடைக்கவும், தன் தலைவன் உடல் நலம் பெறவும், ஊரின் நன்மைக்காகவும் காளி, கொற்றவை போன்ற தெய்வங்களை வேண்டிக்கொண்டு, அக்கோயில் முன்பு வாளால் தங்கள் தலையை தாங்களே அரிந்து அத்தெய்வங்களுக்கு காணிக்கையாகக் கொடுப்பர். இதனை கல்வெட்டுகள் 'தூங்குதலைகுடுத்தல்' என்கின்றன. இந்த முரட்டு வழிபாடு தலைப்பலி, நவகண்டம் எனவும் அழைக்கப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டம் சூரம்புலி அருகே செம்பிலான்குடியில் தன் தலையை தானே அரிந்து காணிக்கையாகக் கொடுத்த வீரனின் நவகண்ட சிற்பம் மாவட்டத்தில் முதன்முறையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தின் பல ஊர் பெயர்கள் தாவரங்கள், விலங்குகள் பெயரில் அமைந்துள்ளன. இவை பிற்காலத்தில் புராண இதிகாசங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

கோட்டைகள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் போகலூர், இராமநாதபுரம், கமுதி,செங்கமடை,பாம்பன், ஓரியூர், திருப்புல்லாணி, அத்தியூத்து, சீனியப்பா தர்கா, ரெகுநாதபுரம்ஆகிய இடங்களில் கோட்டை மற்றும் அரண்மனைகள் உள்ளன. ஏற்கனவே பாண்டியர்களால் கட்டப்பட்ட

மண்கோட்டைகளை, கற்கோட்டைகளாக மாற்றியும், புதிய கோட்டைகளையும் சேதுபதி மன்னர்கள் அமைத்துள்ளார்கள். இத்தகைய கோட்டைகளுக்குள் நாட்டுவீழி, ஆதண்டை, சங்கஞ்செடி ஆகிய மூலிகைத்தாவரங்கள் காணப்படுகின்றன. குதிரை லாயம் உள்ளது. வீரர்கள் தங்கும் வசதி சில கோட்டைகளில் உள்ளது. செங்கற்களை கொண்டு கட்டப்பட்டுள்ளன. கமுதி,செங்கமடை,பாம்பன் ஆகிய கோட்டைகள் பிரஞ்சுப் பொறியாளர்களைக் கொண்டு கட்டப்பட்டது. இக்கோட்டைகளை முத்துவிஜய ரகுநாத சேதுபதி கட்டியுள்ளார். இவற்றில் செங்கமடை கோட்டை அறுங்கோண வடிவிலும், கமுதிக்கோட்டை வட்ட வடிவிலும் கட்டப்பட்டுள்ளன.

பாரம்பரியத் தாவரங்கள்

இம்மாவட்டத்தில் சீமைக் கருவேல மரங்களே எங்கும் நிறைந்து காணப்படும் நிலையில் மிக அரியவகையான தாவரங்களும் இங்கு வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியங்களில் பாலைத்திணைக்குரிய மரமாக குறிப்பிடப்படும் உகாய், ஆங்கிலத்தில் மிஸ்வாக் எனப்படுகிறது.இதுமாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளிலும், கிராமக் கோயில்களிலும் பரவலாக வளர்ந்து வருகிறது. இதன் தாவரவியல் பெயர் சல்வடோரா பெர்சிக்கா *(SalvadoraPersica*) ஆகும்.

சில கிராமக்கோயில்களில் மருத்துவச் சிறப்புமிக்க சோழர்களின் குடிப்பூ மரமான ஆத்தி மரம் *(Bauhiniaracemosa)* வளர்க்கப்பட்டு வருகிறது. நெய்தல் திணைக்குரிய மலர்களான அடும்பு *(Ipomoea pes-caprae)*மற்றும் தாழம்பூ *(Pandanustectorius)*கடற்கரை, ஆற்றங்கரைப் பகுதிகளில் வளர்ந்து வருகின்றன.

சிந்துசமவெளிப் பகுதிகளில் ஆதண்டை வகைத் தாவரங்கள் இருந்ததற்கான தடயங்கள் அகழாய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளன. (Source : Indian Archaeology 1997-98 A Review- Page No 238- ASI) ஆதண்டை வகைகளில் குழல் ஆதண்டை*(Capparis decidua)*, துரட்டி ஆதண்டை *(CapparisDivaricata)*, ஆதண்டை *(Capparisspinosa)*, கொக்கிமுள் ஆதண்டை *(Capparissepiaria)* ஆகிய நான்கு வகைகள் இம்மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளன. இவை மிகப் பழங்காலம் முதல் மக்களால் பயன்படுத்தப்பட்ட மூலிகைத் தாவரங்கள் ஆகும்.

சங்கஞ்செடி *(Azimatetracantha Lam),* மணிப்பூவந்தி *(SapindusEmarginatus),* நாட்டு வீழி *(Cadabaindica),* நஞ்சுண்டா*(Balanitesaegyptiaca)* ஆகிய தாவரங்கள் ஆங்காங்கே மாவட்டம் முழுவதும் காணப்படுகின்றன.

இதுதவிர ஆப்பிரிக்கா,மடகாஸ்கர், ஆஸ்திரேலியா, அரேபியா ஆகிய இடங்களைப் பூர்வீகமாகக் கொண்ட பொந்தன்புளி *(Adansoniadigitata*)எனும் மிகப் பிரமாண்டமான 1500 ஆண்டுகளுக்கும் மேல் உயிர் வாழக்கூடிய ஒருவகை மரங்கள் வெளிநாட்டு வணிகர்கள் மூலம் கடற்கரைப்பகுதிகளில் வளர்ந்துள்ளன.இராமநாதபுரம் பெரியார் நகரில் உள்ள மரத்தில் பொந்துகள் உள்ளதால் அதன் வயது 1000 ஆண்டுகளாக இருக்கலாம்.

முடிவுரை

இம்மாவட்டம் முழுவதும் காட்டுப்பகுதிகளில் பரவலாக மான்களும், முயல்களும் காணப்படுகின்றன. மானும்,முயலும் முல்லைத் திணைக்குரிய விலங்குகள் ஆகும். திவாகர நிகண்டு முல்லைநில மக்களாக இடையர், பொதுவர், அண்டர்,ஆயர் போன்றோரைக் குறிப்பிடுகிறது. இதில் இடையர்கள் தற்போதும் பரவலாக இம்மாவட்டம் முழுவதும் உள்ளனர். மற்றொரு முல்லை நிலத்தவரான பொதுவர் பெயரில் பரமக்குடியில் பொதுவக்குடி, தென்பொதுவக்குடி, கடலாடியில் கண்ணன் பொதுவன் ஆகிய ஊர்கள் உள்ளன. அண்டர் பெயரில் பரமக்குடி பகுதியில் அண்டக்குடியும், கமுதி அருகில் அண்டநாயகபுரமும் உள்ளன.

மேலும் முதுகுளத்தூர், உத்திரகோசமங்கை, இராஜசிங்கமங்கலம் ஆகிய பகுதிகளில் பூமியின் ஆழத்தில் பழுப்பு நிலக்கரி இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு அழிந்துபோன மிகப் பெரிய காடுகளே நிலக்கரி உருவாகக் காரணமாக உள்ளன. எனவே இங்கு பெரியஅளவில் காடுகள் இருந்ததை ஊகிக்கமுடிகிறது.

மனித நாகரிக வளர்ச்சியின் காரணமாக முல்லைநிலக் காடுகள் அழிக்கப்பட்டு மருதநில ஊர்களை முற்காலப் பாண்டியர்கள் உருவாக்கியுள்ளனர். முல்லை நிலம் இயல்பில் திரிந்ததால் உருவான பாலை நிலம் கமுதி, முதுகுளத்தூர் பகுதிகளில் காணப்படுகின்றன. வைகை மற்றும் குண்டாற்றுப் பகுதிகளில் சிறந்த நாகரிகங்கள் இருந்துள்ளன.

இவ்வாறாக மனித நாகரிக வளர்ச்சியின் அனைத்துப் படிநிலைகளையும், பல்வேறு தொல்லியல் தடயங்களையும்கொண்டதாக இம்மாவட்டம் திகழ்கிறது. அழகன்குளம், தேரிருவேலி அகழாய்வுகளில் கிடைத்த பானை ஓடுகளில் தமிழி எழுத்துகள் எழுதப்பட்டுள்ளன. தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுத்தறிவு பெற்றிருந்தனர்என்பதற்கு ஆதாரமாக இதைக் கொள்ளலாம்.

வரலாறு, பண்பாடு ஆகியவை அதைத் தெரிந்தவர்களால் தான் அடுத்த தலைமுறைக்குபரப்பப்படுகிறது. பண்பாட்டைக் காப்பதில் பெண்களே சிறந்து விளங்குகிறார்கள். வெறும் இலக்கிய சான்றுகள் நம் தமிழின் தொன்மையைச் சொல்லிடாது. அதனுடன் தொல்லியல் தடயங்களும் இருந்தால் தான் அதன் பழமை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

தமிழை வெறுமனே படிப்பவர்களாக இல்லாமல் அதன் மரபை, தொன்மையை பின்பற்றுபவர்களாகவும், காப்பவர்களாகவும்,பிறர்க்கு கற்றுத் தருபவர்களாகவும்இருந்தால் தான் தமிழும் நம் பண்பாடும் வாழும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

பழமையைத் தெரிந்து கொண்டு பண்பாடு காப்போம்.வாழிய செந்தமிழ்! வாழிய நற்றமிழர்!!

குறுந்தொகையும் சூழலியலும்

முனைவர் சொ.சேதுபதி
துணைப்பேராசிரியர், பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
புதுச்சேரி- 605008

நவீன அறிவியல் யுகத்தில் இன்று பரவலாகப் பேசப்பெறும் ஒரு துறை சூழலியலாகும்.

"சுற்றுச்சூழல் (Environment) என்னும் சொல்லுக்கு நேரடிப்பொருள் சுற்றுப்புறம் ‹ (Surroundings). 1960க்கு முன் வரை, இச்சொல்லானது, வெப்பம், ஒளி, போன்ற இயற்பியல் காரணிகள் உள்ளிட்ட உயிரிகளின் சூழலைக் குறித்தது. பின்னரோ, அபரிமிதமான வளர்ச்சிப்போக்கில் விரிந்த தொழில்பெருக்கம், வேளாண்மை விரிவு, சூழல்மாசுகள், மக்கட்பெருக்கம்- இவை தொடர்பான பிரச்சினைகளால் அச்சொல் மறுபரிசீலனைக்கு உள்ளானது." (முனைவர் சொ.சேதுபதி, சுற்றுச்சூழல் கல்வியும் நமது கடமைகளும், ப.11)

இத்தகு கருத்தாக்கங்கள் எழுவதற்கு முன்பே தோன்றிய பழந்தமிழ் இலக்கியங்களில், சூழலியல் சிந்தனைகள் குறித்துத் தேடுவது அவ்வளவு பொருத்தமற்றதுபோலத் தோன்றினாலும், இன்றைய சூழலியல் கருத்தாக்கத் திற்கான வேர்களையும் விழுமியங்களையும் அவை கொண்டிருக்கின்றன என்பதை மறுக்க இயலாது.

நிலப்பாகுபாடும் திணைக்கோட்பாடும் வரையறுத்தளித்த வாழ்வியற் சிந்தனைகள் தமிழிலக்கணத்தின் பொருள் இலக்கணமாகத் துலங்குவது குறிப்பிடத்தக்கது என்றே கொள்ளலாம்.

வளமிகு வாழ்விற்குப் புறப்பொருள் தேடுதலின் காரணமாகக் தொலைத்த அகப் பொருளின் ஆழத்தையும் பொருளையும் தெளிவுற விளக்கி, அறத்தின்வழியே பொருளுணர்த்தி இன்பம் நல்க விழைந்த தமிழ் இலக்கிய, இலக்கண நோக்குகள் என்றும் போற்றத்தக்கவை.அவை சூழலியற் கருத்துக்களின் அடிப்படைக் கூறுகளைக் கொண்டு திகழ்வதைக் கண்கூடாகக் காணலாம்.அந்த அடிப்படையில் குறுந்தொகையும் சூழலியலும் என்கிற பொருண்மையில் சில கருத்துக்களை, இக்கட்டுரையில் காணலாம்.

2

சுருங்கச்சொல்லி விளங்கவைப்பது தமிழ் இலக்கிய மரபு, அதில், நெடிதாகவும் இன்றி,மிகக்குறுகியதாகவும் அல்லாமல், நடுவினதாகவும் அன்றி ஓரளவு குறுகிய அளவில் அகப்பொருள் விளக்கும் பழந்தமிழ் இலக்கியம், குறுந்தொகை.

அன்பின் ஐந்திணையை உள்ளமைத்து எழுதப்பட்ட 401 பாடல்களின் உட்கிடக்கை இந்நூல்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு வகையான நிலங்களின் அடிப்படையில் நானிலம் என்று போற்றப்பெற்றது, தமிழகம். இதன் முதற் பொருளும் கருப்பொருளும் சூழலியல் கூறுகளுக்குச் சிறப்பாகப் பொருந்துவன. தன்னளவில் உள்ளதைக் கரவாமல் பிறர்க்கு ஈயும் மலையும் காடும் எப்பொழுதும் ஒரேமாதிரி இருப்பன அல்ல. மழைவளம் இருப்பின் தன்வளம் சுரக்க அருளும். வறண்ட காலத்துப் பாலையாய்த் திரியும். முல்லையும், குறிஞ்சியும் முறைமை யில் திரிந்தமையால், தோன்றிய நிலம் பாலை.

நிலத்தின் ஈரம் குறைந்த நிலையில், அகத்தின் ஈரமான அன்பும் வற்றிப்போகும் போலும். அது அகவறுமை என்றால், புற வறுமை, பொருளின்மை. அதனைப் போக்கப் புலம்பெயர்கிறான் தலைவன். அவ்வாறு, தலைவியையும் தமரையும், தன் நிலத்தையும் விட்டுப் பொருள்வயிற்பிரியும் தலைவன், இத்தகு சுரத்திடைப் பயணம் மேற்கொள்ளும்போது பற்பல அவலநிலைகளுக்கு ஆளாவதைப் பாலைப் பாடல்கள் சுட்டுகின்றன.

அதேவேளையில், அந்தப் பாலைநிலத்திலும் பரிவும் அன்பும் மிக்கதாய் மானுடர் தவிர்த்த ஏனைய உயிர்கள், அதாவது உயர்திணை ஒழிந்த அஃறிணை உயிர்கள் விளங்குவதை மிக அழகாகச் சித்திரிக்கின்றன, குறுந்தொகைப்பாடல்கள்.

சூழலியல் மரபில், உணவுச் சங்கிலியின் முறைமை மாறாத தன்மை இத்திணைப் பாடல்களின் ஊடே, ஆங்காங்கு சித்திரமாகின்றன.

அதாவது, புல்லைத்தின்னும் புழு. புழுவைத்தின்னும், மீன். மீனைத்தின்னும் பறவை. பறவையைத் தின்னும் மிருகம். முன்னர்ச்சுட்டிய அனைத்தையும் வேட்டையாடித் தன்வசப்படுத்தும் மனிதம் என்னும் தன்மையைப் பல பாடல்கள் ஆங்காங்கே சுட்டுகின்றன.

உணவுக்கு வேட்டையாடி உண்ணும் மிருக வர்க்கத்தை ஒத்து இருந்த மனிதன், பின்னர் பொருளாசை கொண்டு உயிர்கொன்று பொருள் கொள்ளும் வெறியுடை யோனாக மாறுகிறான். கொள்வதற்குப் பொருள் இல்லாவிடினும், வறிதே அம்பு போட்டு அகன்றுவிடுகிற ஆறலைகள்வர்களைப் பாலை நிலப் பாடல்கள் காட்டு கின்றன. ஆறலை கள்வர்கள் ஏன் தோன்றுகிறார்கள் என்று சிந்தித்துப் பார்த்தால், அதற்குப் பின்புலமாக ஓரளவு இருப்பது சூழலியற்சீர்கேடு என்பது புலனாகும். அக்காலத்தில், அது இயற்கையின் இரக்கமின்மையால் நிகழ்ந்தது எனலாம். ஆயினும் அறமற்ற தன்மையால், அத்தகு அவலம் தோன்றுகிறது என்று உள உணர்வை ஒழுங்குபடுத்த முனைகிறது பண்டைத் தமிழ் இலக்கியம். அப்போது அறநூல்கள் பிறப்பெடுக்கின்றன. அவற்றுள் தலையாயதான திருக்குறள்,

அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்

வற்றல் மரந் துளிர்த்தற்று

என்கிறது. இது, அகத்தில் அன்பாகிய ஈரமில்லாவிடில், புறத்து வாழ்க்கை பாலை தான் என்பதை உறுதிப்படுத்துகிறது. அதேசமயம், புறத்துப் பாலைநிலத்தில் ஈரமில்லாவிடினும் அகத்தின் ஈரமான அன்பினால், அவற்றை எதிர்கொள்ள முடியும் என்பதை நுட்பமாக உணர்த்துகின்றன குறுந்தொகைப்பாடல்கள்.

3

தன்னுயிர்போல் பிறிதுயிரையும் கருதிப்பேணும் உயிரிரக்கப்பண்பு, அனைத்து உயிர்களிடமும் இருப்பதைச் சங்கப்பாடற்சித்திரங்கள் புலப்படுத்துகின்றன. மனிதநேயம் என்று தற்காலத்தில் மிகப்பரந்த அளவில் பேசப்படும் இப்பாங்கு பண்டைக்காலத்தில் அஃறிணை உயிர்களிடத்தில் இருந்தே உயர்திணை உயிர்களாகிய மனிதர்களுக்கு வந்து வாய்த்திருக்கின்றன என்பதற்குக் குறுந் தொகைப்பாடல்கள் பல சான்றுகளாக அறியக்கிடைக்கின்றன.

நிழலற்று நீளும் பாலைநிலத்தில். தன் கன்றொடு நடக்கும் கலைமான், பருத்த பெருமரப்பட்டைகளைத் தன் கன்றுக்கு ஈந்து பசிப்பிணி போக்கும். உண்டபின் தோன்றும் களைப்பைப்போக்க நிழல் இல்லாக் காரணத்தால், தன் நிழலையே அளிக்கும் என்கிறார் கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றவன். தன்னுடைய குறுந்தொகைப்பாடலில்.

.....ஞெரேரெனக்

கவைத்தலை முதுகலை காலின் ஒற்றிப்

பசிப்பிணிக் கிறைஞ்சிய பரூஉம்பெருந் ததரல்

ஒழியின் உண்டு வழுவி னெஞ்சிற்

றெறித்துநடை மரபிற்றன் மறிக்குநிழ லாகி

நின்றுவெயில் கழிக்கு மென்பநம்

இன்றுயில் முனிநர் சென்ற வாறே, (குறுந்.213)

தலைவியைப் பிரிந்து தலைவன் சென்ற பாலைநிலத்தின் இயல்பு கூறும் தோழி, தன் கடமை கருதிக் காதலை அடக்கிக்கொண்டு பொருள்தேடப்போன பான்மை யை விளக்குவதாக இப்பாடலைப் பாடுகிறாள்.

இவ்வாறு உள்ளுறையாகவும், இறைச்சியாகவும் சொல்லப்பட்ட செய்திகளூடே சூழலியற்சிந்தனைகள் ஆங்காங்கே தென்படக்காணலாம்.

4

நிலம், நீர்,நெருப்பு, விண், காற்று என்னும் ஐம்பெரும்பொருட்களின் சேர்க்கை இந்தவுலகு என்பதைப் பண்டைத்தமிழ் இலக்கியங்கள் இனிதுணர்த்துகின்றன. அறிவியல் உணர்த்துவதும் இதுவேயாம். வான் மழையின்றி வாழுலகில்லை. நீரும் காற்றும், ஒளியுமிழ் வெப்பமும் இயற்கையின் பெருங்கொடை. காதலும் அப்படிப்பட்டதே என்பது இலக்கியத்துணிபு. அன்பை மையமாகக் கொண்ட, எதிர்பார்ப்புக் கடந்த இயற்கையின் உன்னதம் காதல் வழிப் பிறந்த நட்பு. எனவே, ஐம்பெரும்பொருட்களிலும் நுண்பொருளாகக் காதல் சிறந்த பெற்றியை அழகாக உணர்த்துகிறது, தேவகுலத்தாரின் குறுந்தொகைப்பாடல்.

உலகம் பெரிது. வானம் உயர்ந்தது. நீர்நிறை பெருங்கடல் ஆழம் உடையது. அகலமும் உயரமும் விரிவும் உடைய இந்தப் பிரபஞ்சத்தின் பெருமையை, உள்வைத்து, அதனினும் பரந்து விரிந்து உயர்ந்தது, தன் தலைவனுடனான நட்பு என்று பேசுகிறாள் குறிஞ்சிநிலத்தலைவி.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரள வின்றே சாரல்

கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே. (குறு.3)

என்பது அப்பாடல். இதில், குறிஞ்சிப்பூவின் தேன் சுட்டப்படுகிறது.

பன்னீராண்டுகட்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி. அதனை ஒட்டியே, தமது வயதினை கணக்கிடுகிற வழக்கம், நீலகிரியில் உள்ள தொதுவர் என்னும் மலை வாழ்மக்களின் மரபாக இருக்கிறது.

குறிஞ்சி மலரிலிருந்து தேனீக்களால் பெறப்படும் தேன் மிகுந்த சுவையுடையது. அது மட்டுமன்றி, அப்பருவத்தில் தேன் எடுக்கும் தேனீக்கள் வேறு மலர்களை நாடாது என்றும் குறிப்பிடுவர். குறிஞ்சிப்பூவோ, மலைச்சாரலில், சிறிய கரிய செடியில் மலர்வது. அதன்வழி பெற்ற தேனைச் சேகரித்து மலைத்தேனீ கட்டும் தேனடையோ மிகப்பெரிது. மலைக்க வைக்கும் மலைத்தேனின் சுவையும் அது பேணப்படும் தேனடையும் அளவிற்பெரியது. காதலும் அத்தகையதுதான். இங்கே மலரும் மங்கையும் ஒருநிறை கொள்வதை உணரலாம். அவளை விரும்பிய தலைவன் அவளன்றி வேறு யாரையும் நாடான். காரணம், அவன், கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடன். பெருந்தேன், இழைக்கும் என்ற கவிச்சொற்களில் அன்பின் பெருக்கமும், அன்பில் ஒன்றிய அகங்களின் நெருக்கமும் அழகாகத் துலக்கமாகக் காணலாம்.

இது குறிஞ்சித்திணைக்குரிய பாடல். இது ஐவகை நிலங்களுள் உயர்ந்தது. வானின்று இறங்கும் மழை அருவியாகிப் பின்னர் ஆறாகி, காடு பெருக்கி, கழனியை விளைவித்து, இறுதியில் கடல்

சேர்கிறது. அவ்வாறு சேர்ந்தால்தான், சூழல் சமநிலையோடு இயங்க வாய்ப்பு. காதலும் அப்படிப்பட்டதுதான். முல்லை யும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பழிந்த பாலைநிலத்திற்கும் பரிவுமிகு காதல் உண்டு.

தன்னுயிரினும் பெரிதாகக் கருதிக் காதலிக்கும் இன்னுயிரான பெண்ணிணை யின்பால் ஆணுயிர்கள் கொண்ட அன்பின் பெருமையைப் பறவையினத்திலும் விலங்குகள் இனத்திலும் மிகுதியாகக் காணமுடிகிறது. இயற்கைச்சூழலில் வறண்டது பாலைநிலம். இதில் இன்பத்திற்கு அப்பால் விரிகிறது உயிர்களின் அன்பு. சான்றுக்கு இரண்டனைக் காணலாம்.

வறண்ட பாலை. பிடியொடு அலமரும் களிறு, யாமரப்பட்டைகளைத் தன் துதிக்கையால் உரித்து, அதன் நீரைத் தன் இணைக்குத் தருகிற காட்சியைச் சித்திரப்படுத்துகிறார், பாலை பாடிய பெருங்கடுங்கோ.

பிடிபசி களைஇய பெருங்கை வேழம்

மென்சினை யாஅம் பொளிக்கும் (குறுந்.37)

பின்னும் ஓரிடத்தில் பிடிகளைத் தழுவிய களிறுகள் வருகின்றன. இதுவும் பாலைநிலம்தான்.

நீர் இல்லாது வறண்ட குளத்தைத் துழாவிய களிறுகள், தந்தம் நீண்ட தன் துதிக்கைகளால், தம் காதற்பிடிகளைத் தழுவியபடி இருக்கின்றன. காரணம், காதல் மிகுதியன்று. காப்பே நோக்கம். எந்த நேரத்திலும் வன்புலிகளின் தாக்குதல் களுக்குத் தன்னிணைகள் ஆளாகிவிடக்கூடாது என்ற அன்பின் பெருக்கம்தான். இந்தக் காரணத்தைக் கண்டு பின்வரும் பாடல்வழி காட்டுபவர், மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்.

.....நீர்இல்

வறுங்கயம் துழைஇய இலங்குமருப்பு யானை

குறும்பொறை மருங்கின் அமர்துணை தழீஇக்

கொடுவரி இரும்புலி காக்கும்

நெடுவரை மருங்கின் சுரன் (குறுந்.215)

என்பதே அப்பாடல் அடிகள்.

இவையனைத்தும் மழைவளம் இன்றி மலைப்பகுதி வறண்டதால் எழுந்த குறிஞ்சியது பாலை.

மெய்யாகவே, செழிப்பு மிக்க குறிஞ்சியிலும் தன் உயிர்ப்புமிக்க இரக்கப்பண்பை இழந்துவிடவில்லை யானையினம்.

வளமிகு குறிஞ்சித்திணையின் யானை, பரணரின் குறுந்தொகைப்பாடலில் துஞ்சுகிறது. (குறுந்.36) பக்கத்தில் துறுகல் (உருண்டைக்கல்) கிடக்கிறது. அதன் அருகில் உள்ள மாணைக்கொடி, இந்தத்

துறுகலைவிட்டுவிட்டு, துயிலும் யானையின் மேனியில் படரத்தொடங்குகிறது. யானையும் அக்கொடிக்குத் தன்னையே தந்து அமைதிகொண்டிருப்பது அழகு. இது எவ்வளவு நேரம் நீடித்ததோ, அறியோம். ஆனால், ஓரறிவுடைய அவ்வுயிரின் நலன் கெடலாகாது என, ஐந்தறிவுடைய யானை அமைதிகாத்தது சிறப்பல்லவா? அந்த நிலத்திற்கே உரிய பறம்புமலையாண்ட பாரி, தனது தேரை முல்லைக்கு ஈந்ததையும் இங்கே ஒப்புநோக்கலாம்.

பொருள்வயிற்பிரிந்த தலைவன், சொல்லியவண்ணம் கார்காலத்தில் திரும்ப வருகிறான். அவனது தேர் வரும் ஒலி கேட்ட தோழி, தலைவியிடம் சொல்லுகிறாள்.

முல்லை ஊர்ந்த கல்உயர்பு ஏறிக்

கண்டனம் வருகம், சென்மோ தோழி (குறுந்.275)

என்று.

முல்லைக்கொடி படர்ந்த உயர்ந்த கல்லின்மீது ஏறித் தன் தலைவன் வருந்தேரைக் காண வருக என்று, ஒக்கூர் மாசாத்தியார் காட்டுகிற முல்லைநிலத்தோழி உரைக்கிறாள். இவ்வாறு குறிஞ்சிநிலத்து யானையும், முல்லைநிலத்துக் கல்லும் மாணைக்கொடிக்கும் முல்லைக்கொடிக்கும் பற்றிப்படரத் தன்னேயே கொடுத்த தரத்தைச் சொல்லுகின்றன குறுந்தொகைப்பாடல்கள்.

இவற்றை வள்ளல் பாரிக்கு முன்னோடி எனக் கொள்ளல் தகும்.

இவ்வாறு இயற்கைவளம் குன்றினாலும் நிறைந்தாலும் தன் அன்புவளம் வற்றாமல் அரவணைக்கும் உயிர்களின் செயல்களால், சூழல் இயல்பாகப் பேணப் பட்டது கண்கூடு.

இவ்வாறு உயிரினங்களின் உணர்வுவழி, தன் அறிவையும் ஆற்றலையும் பெருக்கிக்கொண்ட மானுடம் தனது காதல் உணர்வையும் பிரபஞ்ச அளவிற்கு வைத்துப் பேணுகிற பாங்கையும் குறுந்தொகை உணர்த்துகிறது. இப்பாங்கு, தாய்மை ஒளிரும் பெண்மையிடம் தான் சிறந்து விளங்குகிறது என்பதையும் சிறப்புறக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

இன்றைக்கு, நுகர்வுவெறியால் சூழலைச் சிதைப்போர் அடுத்துச் சிதைப்பது பெண்மையைத் தான். இந்த அவலத்தையும் அவ்வப்போது, சுட்டிக்காட்டத்தவற வில்லை, குறுந்தொகைப்பாடல்கள்.

காமநுகர்ச்சி இயல்புமீறிய வெறியாக, அறம்பேணத் தேடிய பொருள் வரம்பிகந்து சேர்த்துவைத்துக் கொள்ளும் பொருளாசையாக, மனிதகுலம் ஏனைய உயிரினங் களின் இயல்பிலிருந்து தனித்துவப்படத்தொடங்குகின்றது.

பேதமற்று வளர்ந்த ஆணையும் பெண்ணையும் இந்தப் பொருள் தேடும் வினை வேறுபடுத்திவிடுகின்றது.

இப்போது வினை ஆடவர்க்கு உயிராகின்றது. ஆடவர் மனையுறை மகளிர்க்கு உயிராகின்றார். (பாலைபாடிய பெருங்கடுங்கோ, குறுந்.135)

பெண், மனைக்குள் சிறைப்படுத்தப்படுகிறாள். இற்செறிவூட்டல் இயல்பாகி விடுகிறது. விரும்பிய வண்ணம் தலைவனைச் சந்திக்கவோ, தன் உணர்வுகளைப் புலப்படுத்திக்கொள்ளவோ அவள் அனுமதிக்கப்படவில்லை. அதனால்தான்,

முட்டுவேன்கொல் தாக்குவேன்கொல்

ஓரேன் யானும் ஓர் பெற்றிமேலிட்டு

ஆஅ ஒல் எனக்கூவுவேன்கொல் (குறுந்.28)

என்று பைத்தியம்போல் தனக்குற்ற உயவுநோய் அறியாது துஞ்சும் ஊருக்கு எடுத்துணர்த்த முடியாமல் துடிக்கிறாள் ஒளவையார் காட்டும் குறுந்தொகைத் தலைவி.

இத்தகு காவலையும் மீறிக் காதலன்பால் தன்னைக்கொடுத்த குறிஞ்சித் தலைவிக்கு நேர்ந்த அவலம் இன்றைக்கும் பொருத்தப்பாடுடையது.

யாரும் இல்லை தானே கள்வன்

தான்அது பொய்ப்பின் யான் எவன் செய்கோ?

தினைத்தாள் அன்ன சிறுபசுங்கால

ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்

குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே (குறுந்.25)

என்ற கபிலரின் தலைவியது உள்ளம் இன்றைக்கு நீதிமன்றங்களில் வெவ்வேறு பரிமாணங்களில் ஒலிக்கக் கேட்கலாம்.

மண் வளம் சுரண்டித் தன்னலம் பெருக்கிவரும் மருதநிலத்தலைவன் பெண்ணல மும் சுரண்டுகிற போக்கை விரிவாகவே பேசுகின்றன சங்க இலக்கியங்கள். இங்கே மருதநிலத்தின் மாண்பையும் நாம் கருதிப்பார்க்க இடம் வைக்கிறது குறுந்தொகை.

"கழனி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்

பழன வாளை கதூஉம் ஊரன்" (குறுந்.8)

என்ற ஆலங்குடி வங்கனார், நுட்பமாக ஓர் உண்மையைச் சித்திரப்படுத்துகிறார். மருதநிலத்து நீர்நிலையில் உள்ள வாளை மீன், தான் வாழும் நீருக்குள் கிட்டும் உணவைவிட்டு அல்லது உண்டு உண்டு அலுத்துப்போய், வயல் வரப்பிலே உள்ள மாமரத்தில் விளைந்து தானே வீழும் கனியைப் பற்றி உண்கிறது. இது வரம்பு மீறிய நுகர்விற்கான வாசல் திறப்பு. தேவகுலத்தாரின் பாடலில் இடம் பெறும் குறிஞ்சித்தேனீயையும், ஆலங்குடி வங்கனாரின் மருத வாளையை யும் ஒப்பு

நோக்கினால், உயிரியல்பான நுகர்வின் உயர்வு, வரம்பிகந்த வெறியாகப் பரிணமிப்பதைக் காண முடியும்.

இயற்கையில் மலையும் காடும் உள்ளது உள்ளவாறே ஒளிக்காது வழங்கக் கூடியவை. இல்லாது வறண்ட காலத்திலும் இருக்கிற அளவிற் தண்மை பேணும் தன்மையன. ஆனால், மனித உழைப்போடு கூடிய மருதநிலத்தில் உற்பத்திப் பெருக்கம் ஏற்படுகிறது. பண்பாடு நாகரிகமாகப் பரிணமிக்கத் தொடங்குகிறது.

இத்தகு "நாகரிகத்தின் தொடக்கத்திலேயே, மனிதனின் தலையீடு, சுற்றுச் சூழலுக்கு நிகழ்ந்தது. வாழ்வதற்குக் கட்டைகளைப் பயன்படுத்தி இருப்பிடத் தையும், காட்டை அழித்து விளைநிலத்தையும், பசிக்கு விலங்கினங்களையும் சார்ந்து வாழ்ந்த அக்கால மனிதனின் வாழ்க்கை கற்காலத்திலேயே சுற்றுச் சூழலில் மனிதனின் தலையீட்டைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இன்றைய அறிவியல் புரட்சியின் காரணமாக, மனிதன் தான் பெற்ற அறிவால், மற்ற உயிரினங்களைப் போலன்றி அவனது உடனடித் தேவைகளுக்கேற்பப் பொருத்த மாகச் சுற்றுச்சூழலை மாற்றி அமைக்கிறான். இது மனித வாழ்க்கையோடு ஒன்றிணைந்தது என்றாலும், இயற்கைக்கு முரணானதாகும்" என்பர் சூழலிய லாளர். (முனைவர் எஸ்.ஜான்பிரிட்டோ, சூழல் அறிவியல், ப.221)

இப்போக்கு மனிதகுலத்தின் அகத்திலும் புறத்திலும் பெரியதொரு மாற்றத்தை உண்டுபண்ணிவிடுகின்றது. புறவாழ்க்கைக்காகப் பொருள் தேடும் வேகத்தில் அகவாழ்க்கைக்கான பொருளை இழந்துவிடக்கூடாது என்கிற அக்கறையில் எழுந்த குறுந்தொகைப்பாடல்கள் திரும்பத்திரும்ப வலியுறுத்துவது அன்பைத்தான். அது இயற்கையில் கார்காலத்து மலரெனப் பூத்துச் சிரிக்கிறது. வான் மழையென வரமளிக்கிறது. வருவேன் என்ற தலைவன் வாராத வேளையில் காலம் காரெனக் கூறினும் யான் அது ஏற்க மாட்டேன் என்று வீம்புகொண்டுநிற்கும் பெண்மையில் அன்பு பிரபஞ்சத்தை மீறி வளர்கிறது, விரிகிறது. உடைமை வர்க்கம் வளர வளர உரிமையிழக்கும் பெண், மருதநிலத்து ஆண்களிடத்தில் தன்னையிழந்து பரத்தையாகிறாள்.

பொய்யும் களவும் பையப்பையத் தலையெடுக்கத் தொடங்குவதைத் தடுக்க வழி யின்றித் தவிக்கிறது பெண்மை. இந்த உண்மை உணர்ந்து தவிக்கும் ஆண்களும் குறுந்தொகையில் வலம் வருகிறார்கள். தெய்வம் நிகர்த்த பெண்மையைப் போற்றுகிற, அவர்களின் காதலை உணர்ந்து சிலிர்க்கிற ஆடவர்கள் உள்ளங்கள் குறுந்தொகைப்பாடல்களில் ஒளிர்த்தான் செய்கின்றன.

ஆயினும் அறம் கடந்த ஆசைக்கு ஆளாகிய ஆண்கள், அவர்கள் வசப்பட்ட பெண்கள், இருவரும் பிறந்த மழலைகள் என்று வாழையடி வாழையென வளர்ந்து பெருகிய மனிதவர்க்கத்தின் அறிவு, ஆற்றல், அறிவியல் வளர்ச்சி அனைத்தும் கூடி, சூழலைத் தமக்கு அடிமையாக் கொண்டன. அதனால் ஏற்படும் சாதக பாதகங்களை அனுபவிக்கிறவர்களாக இந்தத் தலைமுறை இருக்கிறது. இனி வரும் தலைமுறை என்னாகுமோ என்ற கவலையும் பிறக்கிறது.

இந்த நேரத்தில், பெண்ணாசை, பொருளாசை, பின்னர் நிலங்களை அபகரிக்கும் மண்ணாசை என்று வளர்ந்து இப்போது விண்ணாசையாகவும் வெறிகொண்டு எழுகிற காலத்தில், இவையனைத்தையும் விட உயர்ந்தது நட்பெனப் பேசும் தேவகுலத்தாரின் குறுந்தொகைப்பாடல்தான் உலகமாந்தருக்கு உண்மையை உணர்த்தும் நன்மொழி என்று கருத வேண்டியிருக்கிறது.

மொழியும் இசையும் கலந்து வெளிப்படும் லயத்துக்கேற்பத் தவிலும், பொறையும் பின்னொலிக்கின்றன.ஓங்கி ஓங்கி ஒலிக்கிறது கொகாலு. (அது இருளர்களுக்கான இசைக்கருவி.)இருளர்களின் மூச்சுக்காற்றோடு கொகாலுக்குள் செருகிய புல் மணக்கிறது. கோழி இறகு படபடக்கிறது. பொண்றீக (பெண்கள்) ஆடும் ஊட்டாட்டமும், ஆண்களும் ஆடுகிற கூட்டாட்டமும் நம் மனக்கண்முன் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன.

சபையில் மூப்பன் மூப்பத்தியோடு அமர்ந்திருக்கிறான்.அவன்தான் இருளர்பதியின் தலைவன்.ஊரைப் பதி என்று குறிப்பது இவர்தம் மரபு. அவனது வலதுகரமாய்ச் செயல்படும் வண்டாரி, இருளர்குழுவுக்குள் மூப்பனுக்கு அடுத்த பொறுப்பு வகிக்கும் குறுதலையும் இருக்க, வீணர்களும் வீணிகளுமாக (மணமுடித்த திருவாளர்கள், திருமதிகள்)கூடிய பெருங்கூட்டத்தினுள் நம்மையும் லட்சுமணன் அழைத்துப்போகிறார்.

தலைவீணனும் தலைவீணியும் அவர்கள் பாரம்பரிய முறைப்படி வளைந்த மூங்கில் குச்சியைக் கையில் கொடுத்து வரவேற்கிறார்கள்.காட்டுப்பூக்களால் பின்னப்பட்ட ஒரு மாலையைப்போட்டு பச்சைச் சந்தனத்தையும் பூசுகிறார்கள். கொகலும் பொறையும் தவிலும் முழங்கிக் காடுகளில் எதிரொலிக்கிறது. (ப.117) அவர்களோடு நாமும் ஐக்கியமாகிறோம்.

தேனெடுத்தல், கிழங்ககழ்தல், கானுயிர்களை வேட்டையாடித் தீயிட்டுக் கருக்கியுண்ணல் எனும் பழந்தமிழ் மரபின் ஒழுங்கு குலையாமல் வாழும் அவர்களோடு நாமும் இணைகிறோம்.பெசாதுகளைக் கும்பிட்டு, கோலன் (கொம்புத்தேன்) எடுக்கப்போகும் பீமன் நம்மையும் கூட்டிப்போகிறான். ஓலைக் காரனும் கொடுக்கனும் நம்மோடுதான்

நடக்கிறார்கள்.வெரையன்- மலைத்தேன். தொடுதி- அடுக்குத்தேன், குசுவ- கொசுத்தேன், போன்ற தேன்வகைகளையும், மாசி, பங்குனியில் தேன் கிடைப்பது அவ்வளவு எளிதல்ல' என்பன போன்ற தகவல் களையும் அவர்களது உரையாடல்களில் இருந்து தெரிந்து கொள்கிறோம். ஆனைத்துளசியைப் பிடுங்கிப் பிழிந்து அதன் சாற்றைத் தன் மேனிகளில் பூசிக் கொள்கிற பீமன் நம்மீதும் தடவுகிறான். தேனீக்களின் தாக்குதலில் இருந்து தப்பிக்கும் மருந்துபோலும்.

இதோ, இடுப்பில் கயிறு கட்டிக்கொண்டு தேனெடுக்க இறங்குகிறான் பீமன். பாறையின் இடுக்கில் கட்டியிருந்த ராட்டுகளை எடுக்கக் கூடையும் இறக்கி யாயிற்று. 'க்கூகோய்..' என்று பீமனிடமிருந்து வந்த ஓசையைக் கேட்டுக் கூடையையும், கயிற்றையும் இழுக்கத் தொடங்குகின்றனர், மற்ற இருவரும். ஈக்களுக்கு விட்டுவிட்டுத் தேவையான தேனடைகளை மட்டும் எடுத்துக் கொண்டுமேல் வருகிறான் பீமன்.(ப.263) அதளபாதாளம் நோக்கிச் சொட்டிக் கொண்டிருக்கும் தேன்துளிகளைச் சுவைக்க எந்த உயிரிகளுக்குக் கொடுத்துவைத் திருக்கிறதோ என்று எண்ணும்போது நாக்கில் நீர் ஊறுகிறது.

உழைத்த பங்குக்கு உரிய தேனை ஈக்களுக்கு விட்டுவிடும் கானகதர்மம் இவர்களுக்கு எப்போதும் உண்டு. தேனீக்களிடம் மட்டுமல்ல, கன்றுகளைப் பட்டினிபோட்டுப் பாலை ஒட்டக்கறுக்கும் சுரண்டல் பிழைப்பு அவர்களிடம் ஒரு போதும் இருந்ததில்லை.

கண்ணுகுட்டி

துள்ளிக்கெடாக்கூ

பாலே கறந்து

சொசேட்டிக்கு ஊத்துங்கா

கொங்கே

அத்து பாலு

அத்துக் குட்டீக்கு

பால் போசிக்குள்ளே

பாம்பும் கண்டே (ஒடியன், ப.22)

பாலைக் கறந்து சொசைட்டிக்கு ஊற்றச் சொல்கிறான் கொங்கன், அதாவது நகரில் இருந்து வந்து இவர்களை ஆக்கிரமித்தவன். அதன் பால் அதன் கன்றுக்கு என்று நியாயம் பேசும், இருளர்களுக்குப் பாம்பையும், கெங்கனையும் காண்பது கெட்ட சகுனம்.அந்த அறிகுறியைச் சுட்டும் கவிதை இது. அதுமட்டுமல்ல,, மீன்பிடிக்கும் போதும் இந்த மரபைத் தான் கடைப்பிடிக்கிறார்கள். கொக்குமரப் பட்டையைக் கசக்கி நீரில் போடுகிறார்கள்.உடனே மீன்கள்

மயங்கி நீரில் மிதக்கின்றன. இவர்கள் பெரிய மீன்களை மட்டும் பிடித்துக் கொண்டு சின்ன மீன்களை விட்டுவிடுகிறார்கள்.கொஞ்ச நேரத்தில் மயக்கம் தெளிந்த சின்னமீன்கள் மீண்டும் நீந்தத் தொடங்கிவிடும்.ஒட்டுமொத்தமாய்ப் பிளாஸ்டிக் வலைவிரித்துப் பற்றி இழுத்து வந்து கரையில் போட்டுச் சாக அடிப்பதோ, வெடிவைத்து அனைத்தையும் கொன்று அள்ளுவதோ அவர்களுக்கு உடன்பாடானதல்ல; அதனை எதிர்த்துக் **குரல் கொடுப்பவர்களும் கூட.**

வேங்கே மடுவிலே

வெடி போடும் வலையா

நா

வெளஞ்சே கெண்டே

நல்லா திந்து

ஆடி மூஞ்சாச்சு

ஏங்குஞ்சும் சாகேடா

குட்டீயே கொல்லுகாதில்லே

சனமான் கத்துதுன்னா

முச்சூடும் சொரண்டும் பழக்கோ

முடுகனுக்குமில்லே

ரெக்கே திங்கா பக்கி (ஒடியன், ப.25)

என்று சபிக்கிறான்.'இறகைத் தின்னும் குருவியே' என்று அத்தகையோரை எள்ளுகிறான். .

'சினைமான் கத்தினால் கொல்லுவதில்லை' என்பது ஒரு குறியீடு. வேட்டை யாடுவதுதான் அவர்கள் தொழில் எனினும் குட்டிகளையும் சூல் கொண்ட மிருகங்களையும் கொல்வது அவர்களின் பண்பாடல்ல. அம்புபட்டுத் துடித்தலறிப் பள்ளத்தில் வீழ்ந்துகிடக்கும் கடமானைக் கறிக்காக எடுக்கப்போகிறான் சடையன்.கூடப்போகிறார்கள், கொன்னானும், கோயனும், சுள்ளானும் இன்னும் இருவரும்.நாமும் கூடப்போகிறோம்.

சட்டென்று நின்ற சடையன், மூக்கை உறிஞ்சிவிட்டு, முணுமுணுப்பதுபோலச் சொல்லுகிறான்: "ராஜா ஈங்குதான் ஏங்கியோ கடாக்கான்." சொல்லிமுடித்ததும் பிளிறலில் காடு அதிர்ந்தது. 'காட்டுக்கு ராஜா சிங்கம் என்று கதையில் படித்தது பொய். உண்மையில் காட்டுக்கு ராஜா களிறுதான் என்பது இருளர்கள் காட்டும் மெய்.

'க்க்க்க்க்க்க்....க்க்க்க்க்க்...க்க்க்க்க்க்க்...ர்' சத்தம் வந்த திசைநோக்கி முன்னேறும் சடையன் ஏறவே முடியாத பள்ளத்துக்குள் இறங்குகிறான்.சத்தம் அதனுள் இருந்துதான்

வந்துகொண்டிருக்கிறது. புதர்களை விலக்கி உள்ளே இறங்கினால், 'தொட்டில் கட்டிதே இழுக்கோனு; கயிறு வரட்டு' என்கிறான். கயிறு இறக்கப்பட்டது.

"ஊரே திந்தாலூ தீருகாதுல சடையா" என்று உற்சாகத்தோடு கூவுகிறான் கோடன். மேலேறிவந்த தொட்டிலில் அவ்வளவு பெரியமான்; கடமான். இரண்டாம் முறை கயிறு உள்ளிறங்குகிறது.இப்போது அது அப்போது ஈன்ற குட்டியும் வருகிறது.ஒன்றுக்கு இரண்டு இலாபம் என்று துள்ளிக்குதிக்கவில்லை அவர்கள். "கால்களின் காயத்துக்கும் குத்தீட்டிக் காயத்துக்கும் சுள்ளான் இருமுளிச் சாற்றைப் பிழிந்து சாக்கைக் கிழித்துக் கட்டினான். பக்கத்து குண்டியிலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து கடமனின் வாயில் கொஞ்சம் கொஞ்சமாய் ஊற்றினான் கோடன். கோக்கடையும் அவனது மகன்களும் இழைதழைகளை முறித்துவந்து அதற்கு ஊட்டிவிட்டார்கள். அதற்குள் கோயனும் சடையனும் மேலே வந்துவிட்டார்கள்.இப்போது அதன் கண்களில் மரணபயம் சுத்தமாக இல்லாமல் போயிருந்தது.அது எழுந்து நிற்பதற்கு வசதியாக அடிப்பகுதியில் கொடியைப் போட்டு எல்லோரும் சேர்ந்து மேலே உந்திக் கொடுத்தார்கள்.ஒரு கட்டத்தில் எழுந்துவிட்ட கடமன், குட்டியை மூக்கில் தள்ளித்தள்ளி கால்க¬ளை உதறியபடி துள்ளத்தொடங்கியது. "நீ போய்.. நல்லா... பொழத்தா போதும்" - சடையன் சொன்னதைக் கேட்டு உடனிருந்தவர்கள் ஆ..ஆ'போட்டு ஆமோதிக் கிறார்கள் .நாமும்தான். எத்தனை பெரிய தாயுள்ளம் அவர்களுக்கு. (சப்பெ கொகாலு, ப.188)

ஃ ஃ ஃ

உணவு போனாலும் பரவாயில்லை. உயிரே போகும் ஆபத்து வந்தாலும் அதன் உயிர்களைக் கொல்லாமல் விட்டுவிடுகிற கருணை இவர்களுக்கு உண்டு. சேர மன்னனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வேறு வழியேயில்லாமல் அவனுக்கு வேண்டிய யானைக¬ளைப் பிடித்துக் கொடுக்க வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு. ஆழக்குழி தோண்டி, அதனுள் ஒரு யானையையும் வீழ்த்தியாயிற்று.இச்செய்தி அரசனுக்கும் போயிற்று.படை பரிவாரங்களோடு அவன் புறப்பட்டுவருகிறான். அதற்குள் குழிக்குள் இருந்து யானையை எடுத்து அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.தானே வெளியேறி ஓடி விட ஆனமட்டும் முயற்சி செய்து சோர்ந்து குழிக்குள் கிடந்த யானையை அவினன் சுற்றிச்சுற்றிவந்து பார்க்கிறான். அது பிடி.வயிறு பார்த்து, 'மாசமாக் கெடாக்குல' என்று சொல்லிச் சோர்ந்துபோய் உட்கார்ந்துவிட்டான். 'ராஜா வர்க்காக்குள்ளே இதே வெளியேடுக்கணுமே" அவினன் சொல்லுக்குக் கட்டுப்பட்ட பதியர்கள் நாளெல்லாம் தோண்டி, குழியைத் தட்டி மேடுறுத்தி அதன் ஆழத்தைக் குறைத்தார்கள். முன்னங்கால்களைத் தூக்கி மேட்டின் மேல் வைத்து தும்பிக்கையால் மண்ணை அழுத்திப் பிடித்துக்கொண்டு உடலை

மேலே இழுத்தது.தயங்கித் தயங்கிப் பின் வேகம் கூட்டி ஒரே உந்தில் மேடேறியது. மக்கள் ஒதுங்கி வணங்கிநின்றனர்.கூட்டத்தை ஒருமுறை பார்த்துவிட்டு மிதமாக பிறிளி நன்றிப்பெருக்கோடு தும்பிக்கையைத்தாழ்த்தி வணக்கம் வைத்தது.பின் திரும்பித்திரும்பிப் பார்த்துக் கொண்டே நடக்கத்தொடங்கி காடுகளுக்குள் மறைந்து போனது.அரசன் காட்டை எட்டியிருந்தான்.யானைக்கொப்பம் காலியாக இருந்தது. அதிர்ச்சியடைந்தான் . மன்னன் படைகளுக்குக் கட்டளையிட்டான்.படைகள் மூப்பனைத் தேடியது. அவினன்பதியே காலியாக இருந்தது.பதியர்கள் மேற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். (மேலது, ப.232)

ஃ ஃ ஃ

கதையாக இருந்தால் இத்தோடு முடிந்துபோயிருக்கும்.லட்சுமணன் களத்தில் உய்த்துணர்ந்த வரலாற்றை அல்லவா புனைந்து சொல்கிறார். காடு கொன்று நாடாக்கி, வனங்களை அழித்து வயலாக்கி வெள்ளாமை போடவந்தவர்களை எதிர்த்துத் தங்கள் சொல்லாலும் செயலாலும் காலங்காலமாகப் போராடிக் கொண்டே இருக்கிறார்கள் இன்றளவும், இன்றளவும்.

“இந்த வனம் எனக்குச் சொந்தமானதில்லை. அது கோணமாகாளிக்குச் சொந்தமானது. இங்கிருக்கும் நரிகளும், உடும்புகளும், மான்களும், சிறுத்தை களும், பாம்புகளும், புலிகளும், ஏன் நாங்களும்கூட அவளுடைய குழந்தைகள் தான்.எங்கள் அத்தனை பேருக்கும் படியளக்கும் அவள் சம்மதம் இல்லாமல், இதைச் செய்ய முடியாது. அப்படிச் செய்தால், நானும் வாழமுடியாது; நீங்களும் ஆபத்தில்லாமல் இருக்க முடியாது” மூச்சுவிடாமல் கோவன் சொன்னதை இப்படித் தமிழில் மொழிபெயர்த்தான் அரசவையாள். உண்மையில் கோவன் இன்னும் கூட்டித்தான் சொல்லியிருந்தான்.ஆனால், அந்தப் படைகள் அதைக் கேட்கத் தயாராக இல்லை.” (மேலது, ப.234) அழிவுக்கு மேல் அழிவை உண்டாக்கத் தொடங்கினார்கள். திடீரென்று கோவன் அருளாட ஆரம்பித்தான்.இப்போது ஓலையான் எழுத ஆரம்பித்திருந்தான். “.... அந்த வனத்திலிருந்த துர்க்கை சோழனிடமிருந்து பலிகேட்டது.அது கேட்டபடி சோழன் சமைய முதலியை அழைத்து துர்க்கைக்கு ஒப்புக் கொள்ளச் சொன்னார்.அவர் சொன்னபடி சமைய முதலியும் கரிகாற்சோழனாகிறவர் நகரமும் கட்டிவைத்து அதிலுண்டாகிறவர் ஆலயமும் கட்டிவைத்து உன்னையும் நிலைநிறுத்திவைத்து முப்பலியும் கொடுக்கிறேன் துர்க்கையம்மா” என்று சொல்ல.... கொங்கர்கள் பதியிலிருந்த காடுகளை வெட்டி விதைக்கத் தொடங்கினார்கள்.குப்பர்கள் படி நாட்டுக்கும் கல்கட்டிகள் புறமலை நாட்டுக்கும் போனார்கள்” (மேலது.)

இப்படிச் சொந்தமண்ணின் மக்களைப் புலம்பெயரச் செய்துவிட்டுத்தான் அவர்கள் காடுகொன்று நாடாக்கினார்கள்.பண்பாடு ஒழித்துப் பணம் பெருக்கினார்கள். நாகரிகம் எனும் பெயரில் வாழ்வியல் சூழல்களைச் சுரண்டினார்கள்.

இந்திய விடுதலையின் வரலாறு, இவர்களிடம் இருந்து கவனிக்கப்படவேண்டும் என்பதை, 'வெள்ளேக்காரெ தோட்டத்திலே', 'வாராண்ட வாராண்ட வெள்ளெக்காரே', 'சோதோ சோதோ சின்னாத்தொரே' என்ற பாடல்களின் பதிவுகளை ஊன்றிக் கவனிக்கச் செய்கின்றன லட்சுமணனின் எழுத்துச்சித்திரங்கள்.

ஃ ஃ ஃ

வரலாறு மட்டுமா, அவர்களின் அகவாழ்வையும் சித்திரப்படுத்திக்காட்டி யிருக்கிறார். "சப்பெ கொகாலுவில், 'துண்டுமல்லிகை' தொடங்கி 'வெள்ளிங்கிரி சாமியோ' வரைக்கும் 45 இருளர்களின் பாடல்களைத்தந்து அதன்பின் சிறு சிறு புனைவுகளின்மூலம் அவர்களின் வரலாற்றை வாழ்வியலாகக் காட்டி, நம்மையும் உடனிருத்தி உணர்த்திக் காட்டுகிறார்.பாறையாகிப்போன பொன்னான், கிழங்காய்ச் சமைந்த வள்ளி, தொன்மங்களாய் உறைந்த காளி, காரமடை ரங்கநாதப்பெருமானுக்கு வா(ழ்)க்(¬)கப் பட்டுப்போன, துளசிலாம்பா எத்தனை கதாபாத்திரங்கள். எத்தனை உரிமையோடு சொல்கிறான் வைத்தியக் கிழவன் பூரடன். "அதுக்கு முன்னால இந்தக் கடவுளையெல்லாம் நம்த்தாளுக சீந்தியதே இல்லை. அவர் (காரமடை ரங்கநாதர்) துளசிலாம்பாவை கல்யாணம் செய்து, நம்க்கு மச்சான் ஒறவு வந்த பிந்துக்குதா, அவருக்குந்து ஒரு கிராக்கியே வந்ததுலா". (மேலது, ப.272)

ஆண்டாள் போல இருளர்கள் வாழ்க்கையில் ஒரு துளசிலாம்பா.இவர்கள் வாழ்வு, பழந்தமிழ் மரபு சுட்டும் அன்பின் ஐந்திணை வாழ்வு.அதிலும் குறிஞ்சிநிலத்திற் கென்றே உரிய புணர்தலும் புணர்தல் நிமித்தமுமான கருப்பொருள் நிறைந்த கருணை வாழ்வு. வயதுக்கு வந்த இருளனும் இருளச்சியும் சுயமாய் முடிவெடுத்துத் தாமே காட்டில் கூரை கட்டிக் கொண்டு வாழத்தொடங்கினால் முடிந்து போயிற்று, கல்யாணம். இதற்குத் துணைவரும் தோழிகள் தாட்டிக் குருவிகளாக ஆகிறார்கள். 'ஓடிப்போகுமோ' என்று கேட்கும் ஆண்-பெண் இணைந்து பாடும் பாடல்களில் பழந்தமிழ் 'உடன்போக்கு' மரபு துலக்கமாகிறது. இற்செறித்தல் இல்லை. அலர் இல்லை. மறுப்பு இல்லை. எப்படியானதொரு சமத்துவ, பொதுமை வாழ்க்கை அவர்களது.(கீரைப்பாசி (தாலி) கட்டிக்கொள்ளும் வழக்கமும், சீர் (பரியப்பணம்) கொடுக்கும் வழக்கமும் இவர்களின் வாழ்வில் பின்னால்தான் வந்திருக்கும். அதுவும் பெண்வீட்டாருக்குத்தான்

கொடுத்தாக வேண்டும்.அதுமட்டுமல்ல, தான் விரும்பும் பெண்ணோடு வாழ, விரும்பும் ஆண்மகன் தானாகவே வலியப்போய்ப் பெண் வீட்டில் ஆறுமாதங்கள் தங்கி அவளை மனைவியாக்க அவர்கள் வீட்டு வேலைகளை எல்லாம் செய்யவேண்டும்.அப்படிச் செய்யும் இருளனுக்கு மெனமாப்பிளை என்று பெயர். அவ்வாறு செய்யும் வேலைக்கு பொண்ணுவேலை என்று பெயர். (செட்டிநாட்டு வழக்கில், 'பொண்டுக செட்டி' என்று சொல்லும் வழக்கம் நினைவுக்கு வருகிறது.) பெண்ஜாத்தி, ஆண்ஜாத்தி என்று பிரிந்து கேலி பேசி உறவுகளைச் சேர்த்து வைக்கும் வழக்கமும், தாய்மாமனுக்குக் கொடுக்கும் மலாடைப்பணம், குருமொடத்துக்குக் கொடுக்கும் பசதுபணம், ஊருக்குச் சேரவேண்டிய பதிப்பணம் என்ற காணிக்கைகளெல்லாம் வரிவசூலிக்கும் வழக்கத்திற்குப் பின்னர் வந்தவை யாக இருக்க வேண்டும். அந்தக் காலத்தில், அண்டி என்னும் நீர் எடுக்கும் மூங்கில் பாத்திரம் போன்றவை மட்டுமே தாய்வீட்டுச் சீதனமாய்ப் பெண் வீட்டுக்கு வந்து சேரும்.

அக்காலத்தில், வீணனும் வீணியும் வாழ்க்கை தொடங்குகையில், எந்தப் பொருளுக்கும் மாமனார் மாமியார் உற்றார் பெற்றோர் உதவிநாடாமல் காடே வீடாய் அவர்களுக்கு வேண்டின கொடுத்து விடுகிறதே. கத்தாரே, நூரே, ரியான் முள்ளி என்று கசங்குகள் (கிழங்குகள்), வசலடாகு, பொவிடாகு, முஸ்டெடாகு, பாலேடாகு என்று டாகு(கீரை)வகைகள், வெரகரிசி, ரூமுசாடே, மூங்கமூரி என்று வரகு,சாமை, மூங்கிலரிசிகள், என்று இயற்கை கொடுத்த உணவு வகைகள் எத்தனை எத்தனை. தானே வரும் நோய்க்கு மருந்துகளும், கொன்னான் வைக்கும் விஷ மை வைக்கு மருந்துகளும் அவர்களுக்குத் தெரியும். எல்லாம் பழங்கதை யாகப் போக நஞ்சுபோல் வந்து கலக்கிறது, நவீன வாழ்வும், நாகரிகப் போக்கும்.

அமுதெது, நஞ்செது என அறியும் கல்வி அவர்களது.நஞ்சைவிடவும் கொடிய நாகரிகக் கல்வியைக் கொண்டு வந்து திணித்துத் தாய்மொழியையும், தாயகத்தையும் களவு கொள்கிற கொடுமையைப் பள்ளிக்கூடம் என்கிற தலைப்பில் கவிதையாகத் தருகிறார் லட்சுமணன்.

வீடு..

.....

அதான் தூங்குவமே

ஓ! கூரே

தாய்...

ம் அஃகா

தந்தை....

அம்மே

தவளை...

ம்கூம்

கப்பே

சொன்னதைத் திருப்பிச் சொல்லு

பிரம்பு பிஞ்சிடும்

.....

.....

வகுப்புக்கு வெளியே

முட்டி போட்டு நின்னுகொண்டிருக்கேம்

நானும்

எத்து மொழியும் (ஒடியன். ப.67)

ஆங்கிலத்தின் முன்னால் நம் தமிழும், தமிழினமும் இப்படித்தான் நிற்கிறது என்று சொல்லவும் வேண்டுமோ?

விஷம் தீண்டினால், சுண்டமுள்ளால் மூன்று முறை அடித்தால் போகும் என்பது அவர்கள் அனுபவம் அதைப்போக்கவும் தெரியும் அவர்களுக்கு.ஆனால், இந்த நாகரிகம் என்கிற பெயரில் வந்த நஞ்சை எத்தனை அடி அடித்தாலும் எப்படிப் போக்குவது என்று தெரியாமல் புலம்புகிறது இருள மனம்.

பல்வலிக்குப் புங்க இலையையும், பசிக்கு மாகாளிக் கிழங்கையும், பிறநோய்களுக்கு வேம்பும், கஞ்சாவும் எனப் பல்வேறு மூலிகைகளைப் பயன்படுத்தி நோய் போக்கும் இருளர்களின் வாழ்வைக் காட்டுமிராண்டி வாழ்க்கை என்று நகையாடிய நாகரிகர்கள் அவற்றுக்கான காப்புரிமை பெற்றுக் கொள்ளை கொள்வதைக் கண்டு வினவும் ஒரு கவிதை:

பல்லுக்கூ புங்கே

பசிக்கூ மாகாளி

தலேக்கு ஊஞ்சே

காஞ்சா வேப்பே

துப்பினா காரி

இன்னூங் காயாலே

இப்பவே வருகே

எம்த்து மூளேயே

நிம்த்துன்னு பகிகாக்கு

வயித்து அழுக்குக்குதே ரேய கங்கு (ஒடியன், ப.30)

'வயிற்றைச் சுத்தப்படுத்த ரேய கங்கு பயன்படுத்துவோம்.உங்கள் மூளையைச் சுத்தப்படுத்த மருந்து இல்லையே' என்று சொல்லாமல் சொல்லி முடிகிற இக் கவிதையில் அவர்களது கோபத்தைவிட, மனிதர்களைக் குணப்படுத்தும் அக்கறையே ததும்பி நிறைகிறது. காரணம், "பழங்குடிகள் எதையும் தனக்கென வைத்துக் கொள்ளும் தன்மையற்றவர்கள். கிடைப்பது கஞ்சாவாக இருந்தாலும், கண்ணீராக இருந்தாலும் எதையும் பகிர்ந்து கொள்ளும் இயல்புடையவர்கள். எழுத்தாளர் பாலமுருகன் குறிப்பிட்டதைப்போல, பாலின சமத்துவம், பொது வுடமைக்கொள்கை, சுரண்டலற்ற சமூகம், விருந்தோம்பல் பண்பு, தோழமை யைப் பகிர்ந்து கொள்ளும் தன்மை, இனம் சார்ந்த பற்று, பிற இனத்தவர்களை வெறுக்காத தன்மை, சனநாயகத்தன்மை, கடும் உழைப்பும் படைப்பாற்றல் கொண்ட திறன், மூதாதையர் வழிபாடு என பழங்குடியினர் எளிய நிறைவான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். வாழ்வியல் மற்றும் நெறி முறைகளில் சமவெளி நாகரீக சமூகத்தை விட, மலைவாழ் பழங்குடிகள் உயர்ந்தே நிற்கின் றார்கள். ஆனால் ஆதிக்கசமூகம் அவர்களுக்கு தொடர்ந்து அநீதி இழைத்து வருவதுதான் வேதனை" என்று ஊடகவியலாளர் வி.கிஷோர் சொல்வது உண்மையிலும் உண்மை. அவர்களுக்கு நன்மை செய்வதாகவும், தொண்டு செய்வதாகவும் வந்து வந்து செய்த செயல்களைக் கண்டு நொந்து சொல்கிறது ஒரு கவிதை:

ஆதிவாசிக்கு

அற்புதமான திட்டோம் தந்தேங்கே

டெவலப்புன்னு

டெண்டரு போடுகே

பேப்பருலே எழுதுகா

டீவிலே காட்டுகா

ஊரெல்லாம் பேசுகா

போட்டா புடிக்கா

நினாக்கு பெரியாபிசர் பதவி

காட்டோடே இருந்தே

இப்போ

நிம்து பேரு வாங்காக்கு

நேனு கடங்காரே

பரணுன்னு மேலே ஏறுகாக்கில்லே

கெழங்குன்னு கீழே தோண்டுகாக்குமில்லே (ஒடியன், ப.28)

வந்தவர்கள் எல்லாம் வளர்கிறார்கள். புகழ் பெறுகிறார்கள்.ஆனால், இந்த மக்களின் நிலை? தற்கால வாழ்வுக்கும் பழங்காலப் பண்பாட்டுக்கும், இயற்கைக் கும் செயற்கைக்கும் இடைப்பட்ட நிலையில் அந்தரமாகத் தொங்கிக் கொண்டு நிற்கும் வாழ்வு. 'அஞ்சு இட்லிக்கு ஆறு ஏக்கரை (ஏமாந்து) கொடுத்துவிட்டு, சொந்த மண்ணில் சொந்த மண்ணையே வேகவைக்கும் செங்கல் சூளைக்கு மண்சுமக்கும் வேலை எத்தனை கொடூரம்? (ஒடியன், ப.19) மண்ணுக்குரியவர்களான இந்த மக்கள் என்ன செய்தாலும் தண்டிக்கும் அதிகாரவர்க்கத்தை நோக்கிப் பின்வரு மாறு வினாத்தொடுக்கிறது இருளமனம்.

கள்ளி எடுத்தா அடிக்கே

காட்டுக்குள்ளே போனா புடிக்கே

தேனெடுத்தா பாதி கேக்கே

தானிக்காய் பொரித்தா பாக்கே

எல்லாமே நிம்த்துதுங்கே

மீட்டிங்லே...

சோம்பேரிங்கே

சொன்னா புரிகாதில்லேங்கே

காட்டான்னு பெணாங்குகே

சேத்திவெக்கா பழக்கோ இல்லே

சொத்து பேப்பரு ஒந்துமில்லே

காட்டுவினா

எம்தாளுலே

நின்னே போலே

பொறுக்கி திங்கா பீச்சேக்காரே (ப.31)

எத்தகு அறச்சீற்றம்?

பன்முனைப்பட்ட சுரண்டல்கள், வளர்ச்சி அதிகாரத்தில் இருப்போர்க்கு மட்டும்.நவநாகரிக உலகில் நடத்தப்படும் இந்த வளர்ச்சி நாடகத்தில் என்னென்ன கூத்துகள்?

ஃ ஃ ஃ

சங்க இலக்கியத்து கருப்பொருள்கள் போல, இந்த இலக்கியத்திலும் இயற்கை உயிரிகள் இவர்களின் வாழ்வையும் வலிகளையும் உள்ளுறைப் பொருள் கொள்ள வந்து சிறக்கின்றன. ஏமாந்த நாய்(ப.41), கோக்கிரி மாடு (ப.36) நல்லது நடக்கும் என்பதை முன்னறிவிக்கக் கத்தும் பெருமாட்டி குருவி (ப.44), கெட்ட சகுனத்தைக் குறுக்கே வந்து உணர்த்தும் செம்போத்து (ப.32), அந்நியன் கல் பட்டு மார்பில் குருதிவழியக் கிடக்கும் பசிலிக்காக்குருவி (ப.47), ஊரில் உள்ள எல்லோர்க்கும் சமமாய் ஏதாவது கிடைக்கும்; நல்லது நடக்கும் என்பதை உணர்த்த இருள்வரும் நேரத்தில் வாசலில் வந்து கத்துதலின் மூலமாக உணர்த்தும் கிளி(ப.21), உலகம் அழிந்தபோது, மனிதர்கள் யாரும் உள்ளார்களா என்பதை அறிந்துவரக் கடவுள் அனுப்பிய சுள்ளாம்பூக்குருவி (ப.50) எல்லாம் வருகின்றன. இவற்றுக்கு மத்தியில் ஓர் ஆடு, பேசாத ஆடு பேசுகிறது.நல்ல தீனி வேண்டும் என்று வனக்காப்பாளரிடம் லஞ்சம் கொடுத்து, ரிசர்வ் காட்டில் மேயவிட்டுத் தன்னை வளர்க்கிற கோசி என்ற இருளச்சியிடம் அந்த ஆடு சொல்கிறது:

கப்(«)ப(£)ம் கட்டி

காட்டுல உருகே

ஒப்பே சோலே வரே

ஓடியோடி மேய்க்கே

நல்லா மேஞ்சென்னா செய்காது.

எல்லாம் சரி இப்படியெல்லாம் மேய்த்து என்ன பயன்?

என்னை எதற்காக இப்படி வளர்க்கிறாய்?

அந்தப் பெண்ணுக்குத் தெரியாதது, அந்த ஆட்டுக்குத் தெரிந்துவிடுகிறது.என்னை காட்டு நரி தின்றாலும் பரவாயில்லை; நீ தின்றாலோ புண்ணியம்.

நீ திந்தா புண்ணியம்

பரவால்லே நரிதிந்தாலும்ஆனால்,

ஆருக்குமில்லாமே

ரேஞ்சர் பொண்ணு கண்ணாலத்துக்கூ

கரியாகப் போரே

இதோ தீய சகுனம் சொல்லிச் செம்போத்து குறுக்கே பறக்கிறது.எனவே,

கோசி,

என்னே

கொன்னு திந்துரு இப்பவே (ஒடியன்.ப.32)

என்னவொரு நன்றிப் பெருக்கு!

ஃ ஃ ஃ

ஒடியன்- தாயின் கர்ப்பத்தில் இருந்து சிசுவை எடுத்து தைலம் செய்யும் மந்திரவாதி என்று விளக்கம் தருகிறார் லட்சுமணன். இந்தத் தலைப்பை முன்னிறுத்திக் கவிதை தருகிறார் ஆசிரியர்.அதில், கள்ளி முள்ளில் சிக்கி நிலவு குருதி வடிக்கும் ஒரு நள்ளிரவில், மலை பொரிச்சான குஞ்சான யானை குளிக்கப் போகிறது.வழியில் அந்நியன் நட்டுவைத்த கருவேல மரங்களை உடைத் தெறிகிறது. கேளையாடு எழுப்பும் ஒலிக்கு, பயிரமரம் காதுகளை விரித்துக் கொண்டு காத்துக்கிடக்கிறது.கண்ணில் விளக்கு வைத்து உணவும் நீரும் தேடுகிறது யானை. கொடுமை, நீரைத் தன்னுள் நிறையச் சேமித்திருக்கும் நீர்முள்ளிக் கிழங்குகூடக் கிடைக்கவில்லை. குந்திரிக்கே (தேள்) வந்து நாவில் கொட்டுவதுபோலத் தாகம்.

யானை சொல்கிறது: பசியில் சோர்ந்த என் காலில், தவளை ஏறிக் குதிக்கிறது. (எத்தனை அலட்சியம்!) பட்டிசாலை - ஊரின் தலைவன் வண்டாரி பொறை அடிக்கிறான், கிழக்கே. மொக்கையில் ஊரார் பட்டாசு வெடிக்கிறார்கள் மேற்கே. குள்ளான் என்னை விரட்டி அடிக்கக் குள்ளான் காத்திருக்கிறான். இப்படித் திசைதோறும் பகைகள்.அட, நன்றி கெட்ட நாய் இந்த மனிதர்களோடு சேர்ந்து என்னைக் காட்டிக் கொடுக்கிறது'. இன்னும் சொல்கிறது யானை. இந்த இருளர்களின் மொழிகளிலேயே...

நித்துதே திருடி

நின்னே தெகேய் மேலே போட்டு

தொரைகா சத்து வெச்ச

பணத்தே! தின்னே.... ந்தாப்பா

(உன் காட்டைத் திருடி, உன்னை அநாதை(தேகேய்)ஆக்கிவிட்டு, அதில் பணப்பயிர் (வாழையும் கரும்பையும்) விதைக்கிறான் அந்நியன். அதைத்தானே தின்கிறேன்.(அதில் என்ன தவறு?)

ஏழு உருப்படியூம் லெத்து

ஒண்டியாகி வருகேமு

ஒன்னா நிப்பாமா

(காட்டில் இருக்கும் உனது பிரிவுகளான ஏழு குலங்களின் பெரும்பலத்தோடு நான் ஒருவனாய் வருகிறேன். ஒன்றாய் நிற்போமா?) ரேசா, (ரேசமூப்பனை இப்படித் தான் அழைக்கிறது, யானை)

ரேசா,

கீழ்நாட்டுகயிருந்து (கீழ்நாட்டில் இருந்து)

வெரகாட்டகாக்கு வருகாரு

எம்மே (விரட்ட வருகிறது என்னை)

கும்கிகா (கும்கி யானை)

இப்போ என்னே (இப்போது நான்)

அப்புறோ நின்னே (நாளை நீ)

கும்கியோடு கொலைவெறி கொண்டு காட்டைவிட்டு, இன்னும் துரத்தும் ஒடியன்கள் இன்றைக்கு கீழ்நாட்டில் இருந்து வந்து மலைமுழுவதையும் சிதைத்து அழித்து ஒழிக்க நிறைந்து கிடக்கிறார்கள் என்கிறது இக்கவிதை.

இப்போ என்னே

அப்புறோ நின்னே

இந்தச் சொல், இருளர்களுக்கு மட்டுமா?

நம் எல்லோருக்கும் தானே!

நீரியல்

முனைவர் வேல்.கார்த்திகேயன், இணைப்பேராசிரியர்-தமிழ்த்துறை, காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம், (தன்னாட்சி)புதுச்சேரி அரசு , புதுச்சேரி 605 008.

இலக்கியங்கள் காலந்தோறும் நடைபெற்ற நிகழ்வுகளின் வரலாற்றுப் பெட்;டகங்களாக விளங்குகின்றன. இலக்கியங்களின் வாயிலாக ஒரு நாட்டின் வரலாற்றையும், மக்களின் பழக்கவழக்கங்களையும் அறியலாம். குறிப்பாக பண்டைக்கால மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வினையே மேற்கொண்டான். இவ்வுலகம் பஞ்சபூதங்களான நிலம், நீர், காற்று ஆகாயம், நெருப்பு ஆகியவற்றைக் கொண்டு இயங்குகிறது. உலகில் தோன்றிய உயிரினங்களில் ஒன்றாகிய மனிதனும் இவற்றின் துணைகொண்டே செயல்படுகிறான். உலகமக்களின் உயிர் வாழ்விற்கு மட்டுமின்றி அனைத்துப்பயன்பாட்டிற்கும் நீர் உதவுகிறது. நீர் இல்லாமல் எதுவும் செய்ய இயலாது. அத்தகைய நீரின் இன்றியமையாமையை விளக்குவதே இக்கட்டுரையாம்.

நீரின்றி அமையாது உலகம்

மனிதனை மகிழ்விப்பதும் வாழ்விப்பதும் இயற்கையாகும். இயற்கையின் இயக்கத்தில் தான் மனிதனின் வாழ்க்கையும் இயங்குகிறது. இலக்கியங்கள் இயற்கைக் காட்சிகளின் வழியாக மனிதவாழ்வினைப் போதித்தன. சங்ககாலப் புலவர்கள் மாந்தர்களை வருணிப்பதற்கும் வாழ்வியல் கருத்துக்களை எடுத்துரைப்பதற்கும் நிலத்தின் வகைப்பாட்டினைச் சுட்டுவதற்கும் இயற்கைக்காட்சிகளைப் பயன்படுத்தினர் என்றால் மிகையாகாது. இயற்கைக்கும் மனிதன் வாழ்வதற்கும் அடிப்படை ஆதாரமாக விளங்குவது தண்ணீர் தான். பழங்காலம் முதல் இன்று வரை மக்கள் நீருக்கு உரிய மரியாதையும் முக்கியத்துவமும் தந்து வருகின்றனர். மக்கள் வாழ்வு நீரையே நம்பி இருந்துள்ளமையையும் அதனைப் போற்றியும் பாதுகாத்தும் வந்துள்ள மையும் சங்ககால இலக்கியங்கள் பறைசாற்றுவதனை அறிந்துணரலாம். இலக்கண நூல்கள் உணர்த்தும் முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் ஆகிய மூன்றனுள் கருப்பொருள்கள் பதினான்கனுள் ஒன்றாக கருதப்படுவது நீர்நிலையாம்.

குறிஞ்சி நில நீர்நிலையாகச்சுனையும் அருவியும் ,முல்லைநில நீர்நிலையாக காட்டாறும் , மருத நில நீர்நிலையாக குளமும் பொய்கையும் பழனமும் ஆறும் நெய்தல் நில நீர்நிலையாக நீர்ச்சுழியும், கடலும் பாலை நில நீர்நிலையாக வறுங்கயமு; புலர்ந்த சுனையும் அக்கால மக்களின் தேவைகளை நிறைவு செய்துள்ளன என்பதனை அறியமுடிகிறது.

குறிஞ்சி நில மக்கள் மலைக்கண் அழகுற ஓடிவரும் அருவி நீரைப் பயன்படுத்தி மலைச்சரிவுகளில் பயிரினை விளைவிப்பதையும் மருதநில மக்கள் நீர்வளத்தைச் சிறப்பாக பயன்படுத்தி நெல்

விளைவித்ததையும் நெய்தல் நில மக்கள் கடல்நீரைக் கொண்டு உப்பு விளைவித்ததையும் வாணிபம் செய்ததையம் சங்ககால இலக்கியங்கள் பறைசாற்றும்.

குறிப்பாக இயற்கைவளங்களில் நீரின் பங்கு முதன்மையானது. நாம் வாழும் இந்த பூமியில் தண்ணீரில் 97 விழுக்காடு கடல் நீராகவும் ஒரு விழுக்காடு துருவப் பிரதேசங்களில் பனிக்கட்டிகளாகவும் மீதமுள்ள இரண்டு விழுக்காடு தான் நிலத்தடி நீர் மற்றும் நீர் நிலைகளின் நீராகவும் அமைந்துள்ளது. இத்தகைய நீரைப் போற்றிப் பாதுகாப்பது நம்அனைவரின் கடமையாகும்.

நீரின் இயல்பு

தமிழில் இன்று கிடைக்கும் முதல் நூலாக விளங்கும் தொல்காப்பியத்தில் உலகம் என்பது ஐம்பூதங்களி;ன் கூட்டு என்பதனைத் தெளிவாக உணர்த்துகிறது. நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தின் கூட்டுக்கலந்த கலவை என்பதனைப் பின்வரும் நூற்பா உணர்த்துகிறது.

நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் (தொல்காப்பியம் நூற்பா 635)

மேலும் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் எண்வகை மெய்ப்பாடுகள் கூறுமிடத்து உவகைக்குரிய நிலைகளன்கள் நான்கனுள் ஒன்றாக விளையாட்டு என்று சுட்டிக்குறிப்பிடுகின்றார்.

தலைவனும் தலைவியும் ஆறு, குளம், பொழில், தம் நாட்டின் எல்லைகடந்தும் நீர்நிலையில் விளையாடுதற்குரியர் என்றும் குறிப்பிடுவதனை நூற்பாவழி உணர்ந்தறியலாம்.

செல்வம் புலனே புணர்வு விளையாட்டெ
றல்லல் நீத்த உவகை நான்கே (தொல். நூற்பா 1205)
யாறும் குளனும் காவும் ஆடிப்
பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப (தொல். நூற் 1137)

சங்க காலத்தில் ஆறு குளம் முதலான நீர்நிலைகள் தலைவனும் தலைவியும் நீராடி மகிழ்தற்குரிய நிலையாக இருந்துள்ளதனைப் பாடல்கள் வழி அறியலாம். இதனைப் புனலாடல் என்றும் இன்பவிழா என்றும் குறிப்பர்.

நீரின் முக்கியத்துவம்

உலகில் உள்ள உயிரினங்கள் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாத ஒன்று நீர் ஆகும். இந்நீருக்காக இன்றைய மக்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் பல. ஆறு, கண்மாய், குளம் போன்ற நீர்நிலைகளையும் விளைநிலங்களையும் இக்கால மக்கள் குடியிருப்பு பகுதிகளாகப் பயன்படுத்தி

வருகின்றனர். இதனால் நீரை சேமிக்கும் நில அமைப்புகள் அடியோடு மாற்றமடைந்து வருகின்றன. இக்காலத்தில் மக்கள் முறையாக சேமிக்காமலும், சேமித்த நீரை முறையாகப் பராமரிக்காமலும், தண்ணீருக்காகவும், தண்ணீராலும் பல்வேறு துன்பங்களை அடைகின்றனர். நீரின் பற்றாக்குறை ஒருபுறமும் மழைநீரினால் குடியிருப்பு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்கள் உடைமைகளை இழந்து பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாயினர் என்பது ஒருபுறமும் மறுக்கமுடியாத மறைக்கமுடியாத உண்மையாகும். இதற்கெல்லாம் அடிப்படை காரணம் இன்றைய மக்கள் நீரின் முக்கியத்துவத்தை அறிந்து அதனை முறையாகப் பராமரிக்காததே ஆகும். ஆனால் பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள் பருவம் தவறாமல் பெய்யும் மழைநீரைத் தேக்கி கயம், வாவி, தடாகம், குட்டம், குளம், ஏரி. கிடங்கு, மடு, மதகு. மடை , ஏந்தல், தாங்கல் போன்ற நீர்நிலைகளை உண்டாக்கி அவற்றிலிருந்து தேவைக்கு ஏற்ப நீரைச் சரியாகப் பயன்படுத்தினர். ஆண்டுக்கு சில நாட்கள் மட்டுமே பெய்யக் கூடிய மழைநீரைத் திட்டமிட்டு குளம், ஏரி முதலியவற்றில் தேக்கி அவற்றை முறையாகப் பாதுகாத்து ஆண்டு முழுவதும் பயன்படுத்தும் பண்டைய மக்களின் நீர்மேலாண்மைத் திறன் வியப்பிற்குரியது.

நீர் ஆதாரத்தைப் பண்டைய மக்கள் உயிரினும் மேலானதாகப் போற்றியுள்ளனர். மழைநீரை முறையாகச் சேமித்து, சேமித்து நீரை திறம்படப் பயன்படுத்தியதன் மூலமே பண்டைய தமிழகத்தில் வேளாண்மை பெரிதும் நடைபெற்றுள்ளது. தமிழர்கள் நீர்நிலைகளைப் பாதுகாத்து பயிர்த்தொழிலுக்கும் உயிர் வாழ்க்கைக்கும் பயன்படுத்தியுள்ளனர். பண்டைய மக்கள் மழையின் வருகையினை வானத்தின் தோற்றம், மேகத்தின் இயக்கம், காற்று வீசும் திசை, கோள்களின் நிலைமை ஆகியவற்றைக் கொண்டு கணிக்கும திறன் பெற்றவர்களாகவும் விளங்கியதை இவ்விலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

சங்க காலப் புலவர்கள் இயற்கைவளம் சிறக்கவும் செழிக்கவும் ஆறுகளே அடிப்படை என்பதை உணர்ந்து பாடல்கள் பாடியுள்ளனர். குறிப்பாக காவிரி, பொருநை, வையை என்னும் ஆறுகளைப் புகழ்ந்து கூறியுள்ளனர். பரிபாடலில் வையையின் சிறப்பினையும் வையை புனல் விரிந்து பரந்தது எனப் பலவாறு நல்லந்துவனார் புகழ்ந்துரைக்கும் பாடலடிகள் பின்வருமாறு

நறுநீர் வையை (பரி 11:140)

அந்தண் புனல் வையை (பரி 12:10)

தீம்புனல் வையை (பரி 22:15)

பூமலி வையை (பரி 20:11)

பேநீர் வையை (பரி 7 :84)

தொய்யா விழுச்சீர் வளங்கெழு வையை (பரி 17: 44)

மாசில் பனுவற் புலவர் புகழ்பல

நாவிற் புனைந்த நன்கவிதை மாறாமை

மேவிப் பரந்து விரிந்து வினை நந்தத்

தாயிற்றே தண்ணம் புனல் (பரிபாடல் :6)

இரட்டைக்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் காவிரியின் சிறப்பினை வான்பொய்ப்பினும் தான் பொய்யா காவிரி எனப் புகழ்ந்துரைக்கின்றது. சங்ககால மக்களின் சேமிப்பினையும் பயன்பாட்டினையும் இன்று நாம் எண்ணிப்பார்க்கக் கூடிய ஒன்றாக அமைந்துள்ளது. பொருநாராற்றுப்படையில் சோழன் கரிகாலனின் சிறப்பினை முடத்தாமக் கண்ணியார் பாராட்டுகிறார். அப்பாடலடிகள்:

நுரைதலைக் குரைபுனல் வரைப்பகம் புகுதொறும்

புனலாடு மகளிர் கதுமெனக்குடைய

ஆயிரம் விளையுட்டாகக் காவிரி புரக்கு நடுகிழ வோனே (பொருநராற்றுப்படை 240-248)

நீரானது குளத்திலும் கோட்டகத்திலும் புகுந்தோறும், நீராடும் மகளிர் கடுகக் குடைந்து விளையாட நெற்கதிர்களை மலையாக அடுக்கிக் குவித்து வரம்பு கட்டப்பட்ட ஒரு வேலி நிலத்தில் ஆயிரங்கல் நெல் விளையுமாறு வளம் செய்யும் காவிரியால் பாதுகாக்கப்படும் நாட்டைத் தனக்கே உரியவன் கரிகாலன் எனப் புகழ்கிறார்.

சைவத்திருமுறைகளில் ஒன்றான சுந்தரர் தேவாரத்திலும் காவிரியாற்றின் சிறப்பு பேசப்படுகிறது.

வார்கொள் அருவி பலவாரி

மணியும் முத்தும் பொன்னுங் கொண்டு

ஆர்க்குந் திரைக் காவிரிக் கோட்டத்து ஐயாறே (சுந்தரர் தேவாரம் 60)

அரசனைப் புலவர்கள் வாழ்த்துதல்

வறுமையால் வாடிய புலவரது ஏற்ற கைநிறைப் பொன்னை வாரிச் சொரியும் வழுதி மன்னனைப் போல தமிழ் வையை, நிலத்தின் கண் பொன்னைப் பரப்பும் சிறப்பான இயல்பு என்றும் குன்றாது நின்று ஒளிர்வதாக என்று வாயார வாழ்த்தித் தென்திசை நோக்கி நடந்தனர் என்று நீரின் சிறப்பினைப் பரிபாடலில் வாழ்த்துகிறார் புலவர்.

அரசனும் மக்களோடு நீராடி மகிழ்தல்

மதுரை மக்களுடன் பாண்டிய மன்னன் வையையில் நீராடிய சிறப்பை ஒரு புலவர் நயம்படச் சித்தரிக்கின்றார். ஆயிரம் கண்களையுடையவனாகிய இந்திரன் ஆகாய கங்கையாற்றில்

தேவர் குழாத்துடன் கூடி நீராடியது போல, பாண்டியன் கூடல் மாநகரத்து மக்களுடன் கூடி வையையில் நீராடி மகிழ்ந்தான் என்று கூறுவதன் மூலம் பாண்டிய மன்னனின் சிறப்பு வெளிப்படுகிறது.

வெருவெரு சொல்யான் வீங்குதோள் மாறன்
உருகெழு கூட லவரோடு வையை
வருபுன லாடிய தன்மை பொருவுங்கால்
ஆந்தர வானியாற்று ஆயிரங் கண்ணினான்
இந்திர னாடுந் தகைத்து (பரி 2:90-97)

மிகச் சிறப்பாக ஒலிக்கின்ற பரப்பினையுடைய கடல்நீரை மேகம் முகந்து கொண்டு மலையைப் போல் குவித்து பெரு மழையைத் தந்து வளம் பெருக்கும் நிலையினைப் புறநானூறு கூறுகிறது.

நீண்டு ஒலி அழுவம் குறைய முகந்து கொண்டு
ஈண்டு செலல் கொண்மூவேண்டுவயின்
மன்பதையெல்லாம் சென்றுணர் கங்கைக்
கரை பொரு மலி நீர் நிறைந்து தோன்றியாங்கு (புறம் 161:1-7)

கங்கை கரையை மிகுதியான நீர் மிக்க வளமையுடையதாய் எடுத்துரைக்கின்றார்.

உருமுரறு கருவிய பெருமழை (அகம் 158: 1)

புதுமழையின் சிறப்பினை வம்பப் பெரும் பெயல் (புறம் 325) என்று கூறுவதால் நீரின் வளத்தினை உணர முடிகிறது. பதிற்றுப்பத்தில் கார்கால இயற்கை நிகழ்வுகளை எடுத்துரைப்பது சிறப்பான ஒன்றாகும்.

உலகம் புரக்கும் உருகெழு சிறப்பின்
வண்ண கருவிய வளங்கெழுமஞ்சூல்
காலை யிசைக்கும் பொழுதொடு

என்று கூறப்படுவதன் வழி கார் காலத்துப் பெருமழை காலை நேரத்தில் பெய்யும் என்றும் அது மனத்திற்கு இனிமை தரும் என்று கூறுவதனை உணர முடிகிறது.

நீர் நிலைகளில் சங்க காலத்தில் பொய்கைகளும் நிறைந்து காணப்பட்டன. இதனை

தண்துறை ஊரன் (குறுந் 91:3)

தண்ணந் துறைவன் (குறுந் 9:7)

பொய்கை ஊரன் (குறுந். 61:5)

என்னும் தொடர்களால் அங்கு இருக்கும் தலைவனை பொய்கையுடன் இணைத்துக் கூறுவதனை அறியலாம்.

ஊர்கள் முழுவதும் வண்டுகள் உறைந்து வளமலர்கள் நிறைந்த குளிர் பொய்கைகள் நிறைந்ததாக இருந்தன என்று ஐங்குநுறூறு குறிப்பிடுகிறது (88:1-2)(439 :2-3)

ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே (குறுந் . 113:1-2)

என்பதனால் காட்டாற்றிலிருந்து வரும் வெள்ள நீர் பொய்கைபயில் சேர்ந்திருக்கலாம் என எண்ண முடிகிறது.

நீர் மேலாண்மை

தமிழில் நீரைத் தேக்கும் அமைப்புத் தொடர்பாக முப்பதுக்கும் மேற்பட்ட சொற்கள் உள்ளன. நீரின் போக்கையும் நிலத்தின் தன்மையும் அறிந்து நம் முன்னோர்கள் நீர்த்தேக்கத்தையும் ஏற்படுத்தினர்.

ஏரிகளின் பங்கு மிக முக்கியமானது. ஏரிக்கரை நீளம் குறைவாகவும் ஆனால் அதிக நீர் கொள்ளளவு கொண்டதுமான அமைப்பு எட்டாம் பிறை வடிவில் ஏரி இருக்கும். இது ஏரி அமைப்பதில் மிகவும் சிக்கனமான வடிவமைப்பு சிறுபஞ்சமூலம் நூலில் காரியாசான் ஏரிகள் அமைக்கப்பட வேண்டிய வரைபடத்தைத் தருகின்றார்.

குளந்தொட்டு கோடு பதித்து வழி சித்து
உளந்தொட்டு உழவயலாக்கி – வளந்தொட்டு
பாடுபடுங் கிணற் றோடொன்றில் வைம்பாற்
கடுத்தான் ஏகு சுவர்க்கத் தினிது. (சிறுபஞ்சமூலம்)

இப்பாடலின்; விளக்கம் ஓரு ஏரியைக் கீழ்க்கண்ட 5 அங்கங்களுடன் அமைப்பவன் சொர்க்கத்திற்குப் போவான் என்பதாம்.

1)குளம் (குளம்தொட்டு) 2) கலிங்கு (கோடு பதித்து) 3) வரத்துக்கால், மதகுகள், மிகைநீர் போகும் கால்கள் ஆகிய வழிகளை அமைத்தல்(வழிசித்து) 4) பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மூலம் ஆய்க்கட்டுப் பகுதிகளை உருவாக்குதல் (உழுவயலாக்கி) 5) பொதுக்கிணறு அமைத்தல் (கிணறு) முதல் நான்கு அங்கங்களும் கொண்டவை. நாம் சாதாரணமாகப் பார்க்கும் ஏரிகள் ஆனால் ஏரிகளில் நீர் குறைவாகும்போது ஏரி மதகுகள் மூலம் தண்ணீர் பாய்ச்சுவது அதிக நீர் விரயமாக்கும் வழிஃ அந்த நேரங்களில் மதகுகள் மூலம் நீர்ப் பாய்ச்சுவதை விட நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது. சுறந்த மேலாண்மை வழியாகும். எல்லோரும் கிணறு தோண்ட முடியாது.

ஆகவே பொதுக்கிணறு அமைத்து அனைவரும் தண்ணீரைப் பாய்ச்சிக் கொள்வது சிறந்த வழியாகும். தற்போது மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவற்றை இணைத்துப் பயன்படுத்த வேண்டும் என்ற கோட்பாடு உலகெங்கும் பரவி வருகிறது. இந்த சிறந்த நீர் மேலாண்மை உத்தி சங்கம் மருவிய காலத்தில் இருந்ததென்பதும் அது இன்று மீண்டும் பயனுக்கு வருகின்றது என்பதும் தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கும் செய்தியாகும்.

ஏரி எந்த வடிவில் இருக்கவேண்டும் என்பதனைச் சங்கப் புலவர் கபிலர் வரையறுத்துக் கூறியுள்ளார். ஏரியின் நீளம் குறைவாகவும் ஆனால் அதிக கொள்ளளவு கொண்டதாகவும் சிக்கனமான வடிவமைப்புடன் எட்டாம் பிறை வடிவில் ஏரியின் அமைப்பு இருக்க வேண்டும் புறநானூற்றுப் பாடல் வழி தெரிவிக்கின்றார்.

அற்றையும் பொறையும் மணந்த தலைய
எண்ணாள் திங்கள் அணைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ (புறம் 118).

அக்காலத்தில் அரசன் பெயரில் குளம் இருந்ததனை நற்றிணைப் பாடல் தெரிவிக்கின்றது.

கடுந்தேர்ச் செழியன் படைமாண் பெருங்குளம் மடைநீர் (நற். 340)

குளங்களுக்குக் காவலர்கள் (மடைவாரியர்கள்) நியமிக்கப்பட்டிருந்தனர் என்பதனைப் பின்வரும் பாடலடி குறிப்பிட்டுள்ளனர்.

மடைவாரியர்கள் கண்மாய் குடும்பன் (அகம் 252)

நீர் வளத்தோடு இணைத்து ஊரையும் சிறப்பித்துள்ளனர் என்பதனை நீர் மோதும் மதகுகளை உடைய உறையூர் (அகம் 237) என்ற அகநானூற்றின் வரியால் அறியமுடிகின்றது.

மன்னனின் தலையாய கடமை

மழைநீரைச் சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர்நிலைகளை அமைப்பது ஒரு மன்னனின் தலையாய கடமைகளுள் ஒன்று என்பதனைப் புறநானூறு உணர்த்துகிறது.

அடுபோர்ச் செழிய அகழாது இகழாது வல்லே.
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத் (புறம் 18: 27-28)

சோழநாட்டில் காடுதிருத்தி நாடாக்கி, குளங்களை உருவாக்கி வளம் பெருக்கும் முயற்சி மேற்கொண்டதைப் பட்டினப்பாலை பாடல் புலப்படுத்துகின்றது. காடழித்து, நாடாக்கி, குளங்கள் பெருக்கி, நீர் வளம் கொண்டு குடிமக்களைக் காத்;த கரிகாலன் என்பது உணர்த்தப்படும் செய்தியாகும்.

காடு கொன்று நாடாக்கி

குளம் தொட்டு வளம் பெருக்கி

பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கிக்

கோயிலொடு குடிநிறீஇ (பட்டினப்பாலை : 283 286)

நீரியல் சுழற்சிமுறை

நீரியல் சுழற்சி முறையைப் பட்டினப்பாலையில் உருத்திரங் கண்ணனார் ,கடலிலிருந்து ஆவியான விண்நீர் மழையாக வந்து நிலத்து உயிர்தந்து கடலில் கலந்து மீண்டும் ஆவியாகி மழைபொழியும் என்று நீரின் சுழற்சியை மிகத் தெளிவாக அன்றே கூறி இருக்கின்றனர்.

வான்முகந்த நீர் மழைப் பொழியவும்

மழைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்

மாரிபெய்யும் பருவம் போல் நீரின்றும்

நிலத்துஏற்றவும் நிலத்தினின்றுநீர்ப பரப்பவும்

அளந்து அறியாப் பல பண்டம் (பட்டினப்பாலை 126-131)

நீர் மேலாண்மை என்பது இந்தியாவை பொருத்தவரை மிகப் பழமையான தொழில் நுட்பமாகும். அதுவே இந்தியாவின் முக்கிய அடையாளமும் கலாச்சார வடிவமும் ஆகும்.

இந்த தொழில் நுட்பங்கள் தான் இன்று உலகம் முழுவதும் பரவி உள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையான நீர் மேலாண்மை தொழில் நுட்பத்தை அந்த இடத்திற்கு தகுந்தவாறு அமைத்து இருந்தனர். ஆற்றுவெள்ளம் மழைபொய்த்துப்போகும் காலம், நிலத்தடிஆற்றல் இருந்து நீரை சேகரித்தல். நிலத்தடி ஊற்று நீரை சேகரித்தல் நீராவி ஆகாத அளவுக்கு கிணறுவெட்டி அமைத தினசரி உபயோகத்துக்கும் விவசாயத்திற்கும் பயன்படுத்துதல் இப்படியாக மழைநீரை சேகரித்து அதை முறையாக பராமரித்தல் போன்ற அனைத்து நீர் மேலாண்மை உத்திகளையும் அறிந்து செயல்பட்டுள்ளனர்.

நீர் அரண்

நீர் மேலாண்மை நுட்பத்தில் நீர் உற்பத்தி செய்தல் , நீரைச் சேகரித்தல், நீரைப் பாதுகாத்தல் போன்றன மட்டும் நிர்வகிக்க வில்லை. நீரையே அரணாகப் பயன்படுத்தும் மேலாண்மையையும் அறிந்திருந்தனர். நீரும் ஒரு சிறந்த அரணாக இருந்தமைக்கு சான்றுகளாக ஆழமான ஆறும் கடலும் சில கோட்டைகளின் இயற்கை அரணாக இன்றும் விளங்குகின்றன. தென்திசையில் அமைந்த இலங்கை , கடல் சூழ்ந்த நாடு, பாரதநாட்டின் படையெடுத்த பகையரசர் பலர் இலங்கையின் மேல் செல்லாதொழிந்ததற்குக் கடல் அரணும் ஒரு காரணமாகும். இதுபோல பழங்கால மக்கள் அகழி, கிடங்கு போன்றனவும் நீர் அரணாகப் பயன்படுத்தி வந்துள்ளனர் .

நிறைவுரை

மனித வாழ்க்கைக்கும் நல்ல உடல்நலத்திற்கும் சுத்தமான நீர் தூய்மையான காற்று கலப்படமில்லா உணவு முக்கியமானது . இயற்கையோடு இணைந்து வாழ வேண்டிய மனிதன் சுத்தமான நீரைப் பருகினால் தான் நோயின்றி வாழ முடியும். நீரின்றி அமையாது உலகு என்ற வள்ளுவரின் கூற்றுப்படி மகிழ்ச்சியான வாழ்வுக்கு நீர் முக்கியமான ஒன்றாகும். சங்காலத்தில் அறியாமையின் காரணமாகவோ குடிநீர்ப் பற்றாக்குறையின் காரணமாகவோ, பாசிமூடிய நீர்நிலைகளில் மக்கள் தங்கள் குடிநீர்த்தேவையைப் பூர்த்திசெய்து கொண்டமை காணப்படுகிறது.

ஊர் உண்கேணி உண்துறை

பாசி அற்றே பசலை (குறுந் 399 : 1-2)

நீரின் அருமை பெருமையை இன்றைய விஞ்ஞானமும் ஒப்புக்கொள்கிறது. நீரின்றி நிலமும் நிலமின்றி நீரும் இல்லை என்பது கண்கூடு. இதனைக் கீழ்காணும் புறநானூற்றுப்பாடல் உறுதிசெய்கின்றது.

உணவெனப்படுவது நிலத்தொடு நீரே

நீரும் நிலனும் புணரியோ ரீண்டு

உடம்பும் உயிரும் படைத்திசினோரே

என்று கூறுவதன்மூலம் நீரின் சிறப்பு உணரமுடிகிறது. ஒரு நாட்டின் வளம் அதன் நீர் மேலாண்மையைப் பொருத்தே அமைகின்றது. சுருங்கக் கூறின் நீரின் தன்மை இயற்கையோடு இணைந்த ஒன்றாக இருந்தமையால் மக்களின் வாழ்க்கையைப் பண்படுத்தும் ஒன்றாக விளங்கியுள்ளமை உணர்ந்தறியலாம்..

வானிலையியல்

முனவர் கு.வை.பாலசுப்பிரமணியன், M.Sc. Phy , M.A. Tamil & His , M. Phil., Ph. D.,

வானிலை விஞ்ஞானி, மண்டல வானிலை ஆய்வு மையம், சென்னை 600006

முன்னுரை

தமிழ் இலக்கியத்தில் அறிவியல் என்ற தலைப்பைப் பார்த்ததுமே நினைவுக்கு வருவது ஔவையின் வாக்குதான். இலக்கியத்தில் அறிவியல் குறித்துப் பேச அல்லது எழுதத் தொடங்கும் எந்தவொரு ஆராய்ச்சியாளருக்கும் முதலில் தோன்றுவது திருவள்ளுவமாலையில் ஔவையார் எழுதியுள்ள "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" என்ற பாடலே. இந்தப் பாடல் ஔவையாரோடு வள்ளுவரையும் நினைவிற்கு கொண்டு வந்து விடும். ஔவையின் வாக்கு குறித்து அதிக விளக்கம் கூறத் தேவையில்லை. மிகச்சிறிய அலகாகக் கருதப்படும் அணுவையே துளைத்தல் குறித்த சிந்தனை இலக்கியத்தில் எப்படி வந்தது என்பது மிகப்பெரிய வியப்புதான். தொடர்ச்சியாக நினைவில் வருவது, வள்ளுவரின் பெயராகும். உலக வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது நீர் எனக் கூறிடின் அதில் மிகையில்லை. ஆங்கிலத்தில் Water - the elixir of life " என்று சொல்வார்கள். இதையே வள்ளுவர் –

"நீரின்றமையாது உலகெனின் யார்யார்க்கும்

வான்இன் றமையாது ஒழுகு."

என்கிறார். எவ்வகையில் உயர்ந்தவராக இருந்தாலும் நீர் இல்லாமல் இவ்வுலகில் வாழ முடியாது. அதுபோலவே மழை பெய்யவில்லை என்றால் வாழ்க்கையின் ஆதாரமான நீரும் இல்லை. இது ஒரு சுழற்சிச் சக்கரம் போன்றது. இரண்டு வரிகளுக்குள் அடங்கும் இந்த அரிய கருத்துக்கு நிகரான ஆங்கில Water is the elixir of life என்ற கருத்து நிச்சயமாக வள்ளுவருக்கு முன்னால் தோன்றியிருக்க முடியாது. ஆனால் தமிழில் இந்தக் கருத்து சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே பதியப்பட்டிருக்கிறது என்றால், பெருமைப்படுவது ஒருபுறம் இருக்க, அறிவியல் நோக்குப் பார்வையில் வியப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. வள்ளுவருக்கு முன்னர் குடபுலவியனார் என்ற புலவர் புறநானூற்றில் இக்கருத்தை மிக அழகாக சொல்லுகிறார்.

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்து பட்ட வியன் ஞாலம்
தாளின் தந்து தம்புகழ் நிறீஇ
ஒருதாம் ஆகிய உரவோர் உம்பல் 5
ஒன்றுபத்து அடுக்கிய கோடிகடை இறீஇய
பெருமைத்து ஆக நின் ஆயுள் தானே!
நீர்த்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்கதூஉம் இனவாளை

நுண்ஆரல் பருவரால்
குரூஉக்கெடிற்ற குண்டுஅகழி
வான்உட்கும் வடிநீண்மதில்
மல்லல்மூதூர் வயவேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ ஆகல் வேண்டினும், சிறந்த
நல்இசை நிறுத்தல் வேண்டினும் மற்றதன்
தகுதி கேள்இனி மிகுதி யாள!
நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே அதனால்
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண்தட்டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே.

”நீர்நிலை பெருகத் தட்டோர் அம்ம இவண் தட்டோரே தள்ளாதோர் இவண் தள்ளாதோரே” என்ற இந்த அடிகளில் நீர்நிலைகள் கட்டி நீரைத் தேக்கி வைத்தவர்கள், செல்வம், புகழ், ஆட்சி முதலியவற்றைத் தக்க வைத்துக்கொள்ள முடியும் என்ற கருத்தும் உலகுக்கு நீர் இன்றையமையாததால், நீர்நிலைகள் கட்டி, நீரைத் தேக்கி வைக்கத் தவறியவர்கள் செல்வம், புகழ், ஆட்சி முதலியவற்றை இழக்க நேரிடும் என்றும் குடபுலவியனார் கூறுவதாகக் கொள்ளலாம்.

<u>தொல்காப்பியம் காட்டும் அறிவியல்</u>

தொல்காப்பியம் என்றாலே இலக்கண நூல் என்றுதான் நாம் அறிவோம். ஆனால் இன்று மொழி அறிவியல் என்றொரு வகை இருக்கிறது. லிங்க்விஸ்டிக்ஸ் Linguistics என்னும் மொழியியல் கோணத்தில் பார்க்கும்போது, வள்ளுவருக்கும் முந்தைய தொல்காப்பியத்தில் மொழிக்கு இலக்கணம் மட்டுமல்ல, ஒலி அமைப்பும் உச்சரிப்பும்கூட தெள்ளத்தெளிவாக, இன்றும்

திருத்தம் தேவைப்படாத. திருத்த முடியாத செம்மையான வடிவத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது.

இவ்வளவு தெளிவான மொழியியல் விளக்கங்கள் எப்போது எழுதப்பட்டன என ஆய்வு செய்தோமெனில் வெள்ளைவாரணார் கருத்துப்படி கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முன் – அதாவது ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொல்காப்பியம் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு முன்னரே தொல்காப்பியம் இயற்றப்பட்டது என்று கருதாவிட்டாலும், குறைந்தபட்சம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது தொல்காப்பியம். அதாவது சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மொழியியல் விதிகள் வரையறுக்கப்பட்டு விட்டன.

தொல்காப்பியப் பொருளதிகாரம் உலகத் தோற்றம், உயிர்களின் வகைப்பாடு, கருப்பொருள்களைக் கொண்ட சூழல், ஆகியவற்றை எல்லாம் விவரிக்கிறது.

நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயனெறி வழாமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்

பஞ்சபூதங்கள் எனப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் கலந்தது இந்த உலகம் என்று கூறும்போது, கலந்த மயக்கம் என்பது கவனிக்கத்தக்கது. அதாவது, ஒன்றொடு ஒன்று ஒட்டியும் ஒட்டாமலும் கலந்தும் கரைந்தும் இருப்பது உலகம் என்கிறார் தொல்காப்பியர்.

இதைத்தொடர்ந்து, உயிரினங்களை வகைப்படுத்துதல் எங்ஙனம் எனத் தொல்காப்பியம் கூறுகிறது.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

அதாவது ஓரறிவு உயிரானது உடம்பினாலறிவது. ஈரறிவு உயிர் என்பது வாயும் கொண்டது. மூவறிவு உடையது மூக்கையும் கொண்டது. நான்கறிவு உடையது கண்ணையும் கொண்டது. ஐந்தறிவு உள்ளது செவித்திறனும் உடையது. ஆறறிவு என்பது சிந்திக்கும் மனமும் கொண்டது. தொல்காப்பியத்தின் மரபியலில் வரும் இப்பாடலைத் தொடர்ந்து, ஓரறிவு உயிர்கள் எவை, ஈரறிவு கொண்ட உயிர்கள் எவை என்ற பட்டியலும் தரப்படுகிறது.

தமிழுக்குத் தனிச்சிறப்புச் சேர்ப்பவை தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியன ஆகும். இச்சங்க இலக்கியங்களை ஆய்ந்து ஆழம் கண்ட அறிஞர் பலர். அவர்களின் ஆய்வுகளில் திணை, துறை, அகத்தின் சிறப்பு, புறத்தின் பெருமை ஆகியவற்றை வெளிப்படுத்திய ஆய்வுகள் பல உள்ளன. மேலும் போரின் ஒழுங்கு, வாழ்வியல் செய்திகள், உளவியற் சிந்தனைகள், இயற்கை எழிலோவியங்கள், செடிகொடிகள், உயிரினங்கள் ஆகியன பற்றிய ஆய்வுகளும் இருக்கின்றன. அவ்வகையில் சங்க இலக்கியங்களில் காணப்படும் வானிலைச் செய்திகள் என்ற தலைப்பிலான ஆய்வும் அவசியமானது.

வானிலை weather , காலநிலை climate பற்றிய அறிவியல் பல துறைகளோடு தொடர்புடைய ஓர் அறிவியல் துறையாகும். சங்க இலக்கியங்களிலும் பல்வேறு அறிவியல் துறைகள் பற்றிய செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. குறுந்தொகையில் அம்மூவனாரும் புலவர் கூவன் மைந்தனும் உறக்கமின்மை நோய் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். பசலை நோய், கருவுற்ற பெண்கள் மண்ணையும் புளிப்புச்சுவையுடைய பொருட்களையும் உண்ணுதல் ஆகிய மருத்துவச் செய்திகள், வேகம் என்னும் இயற்பியற் கோட்பாடு, நியூட்டனின் இயக்க விதிகள், தெர்மாஸ் பிளாஸ்க் என்றழைக்கப்படும் சேமச்செப்பு, உணவுச் சங்கிலி, மனிதன் சுற்றுப்புறச் சூழலை மாற்றும் தன்மையுடையவன் ஆகியன பற்றிய பாடல்கள் பல சங்க இலக்கியத்தில் உள்ளன.

வானிலையியல் Meteorology காற்று, மேகங்கள் ஆகியவற்றின் இயக்கங்களைப் பற்றி ஆய்வு செய்கையில் இயற்பியலோடும் பசுங்குடில் வாயுக்கள் ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி ஆய்வு செய்கையில் வேதியலோடும் வானிலை, காலநிலை மாற்றங்களால் தாவரங்களும் உயிரினங்களும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதனை ஆய்வு செய்கையில் தாவரவியல், உயிரியல் துறைகளோடும் எனப் பல்வேறு அறிவியற் துறைகளோடு தொடர்புடையது. எனவே இத்தகையதோர் அறிவியற் துறை பற்றிய கருத்துக்கள் சங்க இலக்கியத்திலும் காணப்படுவதில் வியப்பில்லை அல்லவா.

<u>வானிலைக் கூறுகள்</u>

ஓரிடத்தின் வானிலையைப் பாதிக்கும் வானிலைக் கூறுகளில் முக்கியமானது காற்றாகும் காற்று ஈரப்பதத்தையும் மழையையும் கொண்டுவருகிறது. காற்றிற்கு அடுத்த நிலையில் மழை வானிலையைப் பாதிக்கும் முக்கியக் கூறாகிறது. மழையைத் தருவது மேகங்களே. மேகங்கள் மழையைத் தருவதோடு மட்டுமல்லாமல் மழையில்லாக் காலங்களில் வெயிலில் இருந்து நமக்கு இதந்தருகிறது. இத்தகைய வானிலைக் கூறுகளின் தொகுப்பே காலநிலை.

சங்க இலக்கியம் கூறுகின்ற செய்திகள் அனைத்தும் முதல், கரு, உரி என்னும் மூன்று பொருட்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. வானிலை உட்பட இந்த உலகில் உள்ள எல்லாம் இம்முப்பொருளில் அடங்கும் என்பதனை சங்க காலப் புலவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். வானிலை மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்தது. இதனை

உருமிடைக் கடிஇடி கரையும் பெரு மலை நாடனைப் பற்றியும்
ஊகம் பார்ப்போடு பனிப்ப, பனிமழை பொழிந்த சாரலைப் பற்றியும்
பனியிருஞ்சோலை பற்றியும்
பெயல கடுநீர் வரித்த செந் நிலமருங்கு பற்றியும்

பாடுகின்ற சங்கப் புலவர்களின் பாடல்களிலிருந்து நாம் அறிய முடிகிறது. மேலும் புலவர்கலின் வானிலை பற்றிய நுணுக்கமான கண்ணோட்டமும் இப்பாடல்களிலிருந்து நமக்குப் புலப்படுகிறது.

<u>காற்று</u>

காற்று எத்திசையிலிருந்து வீசுகிறது என்பது வானிலை முன்னறிவிப்பில் ஓர் முக்கிய தகவலாகும். சென்னை போன்ற கடற்கரை நகரில் கிழக்கிலிருந்து காற்று வீசும்போது மழைபொழியவும் மேகங்கள் உருவாகவும் வாய்ப்புள்ளது. சங்க இலக்கியப் புலவர்கள் காற்று எத்திசையிலிருந்து வருகிறது என்பதன் முக்கியத்துவத்தை அறிந்திருந்தனர். ஆகவே கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு திசைகளிலிருந்து வீசும் காற்றிற்கு முறையே கொண்டல், கோடை, வாடை, தென்றல் எனப் பெயரிட்டிருந்தனர்

காற்றிற்கு அசாதாரண வலிமை உண்டு என்பதனையும் அவர்கள் அறிந்திருந்தனர். சங்க இலக்கியங்களில் காணப்படும் காற்று பற்றிய செய்திகள் பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டு இன்று வரை பயன்பாட்டில் உள்ள ப்யூபோர்ட் அளவையில் Beaufor Scale காற்றின் வலிமையைக் கண்டறியும் வகையில் கொடுக்கப்பட்டுள்ள வெவ்வேறு குறியீட்டு எண்களுடைய நிலைகளுக்கான இயற்கைச் செயல்பாட்டு விவரங்களோடு ஒப்பிடும் வகையில் உள்ளன.

எடுத்துக்காட்டாக ப்யூபோர்ட் எண் (6) குறிப்பிடும் நிலையில் பலமான காற்று பெருங்கிளைகளைச் சலனமடையச் செய்யும். தந்திக் கம்பங்களின் ஊடே காற்று வீசுகையில் ஒலி ஏற்படுகிறது. கடலில் பெரு அலைகள் எழுகின்றன. வெண்நுரைப்படலம் ஏற்படுகிறது. நீர்ச் சிதறல் அதிகரிக்கிறது. காற்றால் ஏற்படும் ஒலி பற்றிய குறிப்பொன்றினை ஔவையார்

பொதுவில் தூங்கு விசியுறு தண்ணுமை

வளி பொரு தெண் கண் கேட்பின் (புறம் 89:8-9)

எனப் புறநானூற்றில் பொதுவிடத்தில் தொங்குகின்ற முழவினிடத்துக் காற்று மோதி ஓசை எழுப்புதலைக் குறிப்பிடுகிறார். பலமான காற்றினால் வில்லால் அடிபட்ட பஞ்சு போல அலைகள் பிசிர்களைப் பரக்கச்செய்யுமாறு எழும்பும் அலைகள் பற்றி

வில் எறி பஞ்சி போல மல்கு திரை

வளி பொரு வயங்கு பிசிர் பொங்கும்

நளி கடற் சேர்ப்பனோடு நகாஅ ஊங்கே நற் 299/8

என நற்றிணையில் நெய்தல் நிலப் பாடலொன்றில் வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் குறிப்பிடுகிறார்.

மழை

மழை உருவாகும் இயற்பியல் அடிப்படையை விளக்கும் வண்ணம் கடல் நீரை முகந்து கொண்டு மேகங்கள் உருவாவது பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக குறிஞ்சிப்பாட்டில் கபிலர் நீர் நிறைந்த கடலின் நீர் குறைபடும்படி முகந்துகொண்டு மெலிதாக இடித்து முருகனின் வேல் போல மின்னி மலைமிசைப் பொழிந்த மழையைப் பற்றி

நிறை இரும் பௌவம் குறைபட முகந்து கொண்டு

அகல் இலு வானத்து வீசுவளி கலாலின்

முரசு அதிர்ந்தென்ன இன்முரல் ஏற்றோடு

நிரைசெலல் நிவப்பின் கொண்மூ மயங்கி

இன் இசை முரசின், சுடர்ப்பூண் சேஎய்

ஒன்னார்க்க ஏந்திய இலங்கீலை எ /கின்

மின்மயங்கு கருவிய கல்மிசைப் பொழிந்தென குபா 47/53

எனக் குறிப்பிடுகிறார். விரைவில் வெளிவரவிருக்கும் திரைப்படப் பாடலொன்று இவ்வமயத்தில் நினைவுக்கு வருகிறது. அப்பாடலின் முதல் இரண்டு வரிகள் என்னை மிகவும் கவர்ந்தன.

"எவ்வத்தின் உதி காண நீயாற்றும் யாவும் எவ்வாறு இங்கே பிழை?

பவ்வத்தின் துளிமொண்டு மாகஞ்செய்யாது அவ்வானில் ஏது மழை?"

பௌவம் என்பது கடல். புறநானூற்றில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் பாடிய பாடலில் "குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்" புறம் 6/4 என்று பாடுகிறார். மேற்கில் உள்ள அரபிக் கடல் மிகப் பழைய கடல் எனக் குறிப்பிடுவது காலநிலை பற்றிய அரியதோர் குறிப்பல்லவா ?

இடிமழை பற்றிய தெளிவான வருணனைகள் சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றன. இடிமழை நேரத்தில் வெப்பநிலை திடீரெனக் குறையும் பெருந்துளி மழை பொழியும் ஆகிய செய்திகள் காணக்கிடைக்கின்றன. பாம்பு இடியோசை கேட்டு அஞ்சியது எனச் சங்க காலப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளது சரியானது. தற்கால அறிவியலாளர்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது. பல்வேறு மழைகள் பற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன.

இடிமழைக்கு ஆலம்பேரி சாத்தனாரின் அகநானூற்றுப் பாடலை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். பிரிவினால் வாடும் தலைவி தோழிக்குத் தலைவன் தன் கைபற்றிச் சூளுரைத்து வருவதாகச் சொல்லிச் சென்ற பருவம் வந்துவிட்டது. ஆயினும் தலைவன் இன்னமும் வரவில்லையே என்று கூறும் பாடலான

கால்இயல் நெடுந்தேர்க் கைவண் செழியன்
ஆலங் கானத்து அமர்கடந்து உயர்த்த
வேலினும் பல்ஊழ் மின்னி, முரசுஎன
மாஇரு விசும்பில் கடிஇடி பயிற்றி,
நேர்கதிர் நிரைத்த நேமிஅம் செல்வன்
போர்அடங்கு அகலம் பொருந்திய தார்போல்
திருவில் தேஎத்துக் குலைஇ உருகெழு
மண்பயம் பூப்ப பாஅய்,
தண்பெயல் எழிலி தாழ்ந்த போழ்தே ? அகம் 175/0-18

பாண்டியனின் வாள் போல மின்னி, அவன் வெற்றி முரசு போல் இடித்து, திருமால் மார்பில் அணியும் மாலை போல் வானவில்லைத் தோற்றுவித்த குளிர் மழை என ஆலம்பேரி சாத்தானார் இடிமழை பற்றி அழகாகப் பாடியுள்ளார்.

மேகங்கள், காலநிலை

மேகங்கள் தொடர்பாகவும் சங்க இலக்கியங்களில் பல அறிவியற் செய்திகள் காணக்கிடைக்கின்றன. மேகமற்ற வானம், புகை, பஞ்சு, யானை போன்ற மேகங்கள், தொங்கும் பைகளுடைய மேகங்கள், பருவகால மேகங்கள் ஆகியன பற்றி சங்க காலப் புலவர்கள் அறிந்திருந்தனர்.

காலநிலையியல் செய்திகள் பற்றி நோக்குகையில் கோடைக்குப் பின்னர் கார் காலம் வருதல், கார்காலத்திற்குப் பின் கூதிர், முன்பனிக் காலங்கள் வருதல், கார்காலத்தில் வழக்கமாகப் பெய்யும் மழை, இளமழை, பழமழை காலவரிசையில் இளவேனிற்காலம், ஆகியவை பற்றி சங்க இலக்கியப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. முதுவேனிற் காலத்தின் கோடை வெப்பம், அக்காலத்தில் இலையுதிர் காடுகளின் நிலை, மிருகங்களின் நீர்வேட்கை, முதுவேனிற் காலம் நீண்டது பற்றிய குறிப்புகள், கோடையில் இயற்கயில் ஏற்படும் நிகழ்ச்சிகள், கோடை மழை, காட்டுத்தீ, வெப்பத்தால் புழுதி பரவுதல், கானல் நீர் ஆகியன பற்றிய செய்திகள் இக்காலத்திய நிகழ்ச்சிகளோடு ஒப்பிடத்தக்க வகையில் உள்ளன. மேலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். பாலை ஆகிய ஐந்திணை நிலப்பாகுபாடு கொப்பனின் காலநிலை மண்டலங்களின் வகைப்பாடோடு ஒப்பிட்த்தக்க வகையில் உள்ளது.

முடிவுரை

எனவே பண்டைத் தமிழர் வானிலை பற்றிய அறிவு கொண்டவராய் இருந்தனர் என்பது அக்கால இலக்கியங்களில் இருந்து அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களில் காணப்படும் இச்செய்திகள் இக்காலத்து வானிலை இயல் கருத்துக்களுடன் ஒப்பிடத்தக்க வகையில் உள்ளன.

காட்சி அறிவியல்

ஆவிச்சி கிருஷ்ணன், ஊடகவியலாளர், சென்னை

செம்மொழிக்கான 11 தகுதிகள் பட்டியலிடப்படுகின்றன. அவற்றில் பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு Finding expression in the culture art and life experiences of the civilized society மற்றும் கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு Originality in artistic and literary expressions என்கிற இரண்டு தகுதிகளின் அடிப்படையில் இந்தக் கட்டுரை அமைகின்றது.

திரைத்துறையின் முக்கியமான தூணாகக் கருதப்படும் /பிரெஞ்சுத் தத்துவவியலாளரான கில்லெஸ் டெலூஸ் Gilles Deleuze திரைப்படத்தை, அதனூடக ஒட்டு மொத்தக் காட்சி ஊடகத்தை அழகாக வரையறுக்கிறார். 'A pre-verbal intelligible content pure semiotics ' என்று அவரது Cinema 1: The Movement-Image 1986 புத்தகத்தில் எழுதுகிறார். இதை தேசிய விருது பெற்ற தமிழ் இயக்குனர் சீனு ராமாசாமி 'மொழிக்கு முந்தியது காட்சி' என்று தன் பேச்சில் அழகாக மொழி பெயர்த்திருக்கிறார்.

காட்சிக்குப் பேச்சு மொழி முக்கியமில்லை என்று இவர்கள் சொல்லாமல் சொல்கிறார்கள். ஆனால் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னதான இலக்கியம் ஒரு காட்சியை அ காட்சித் தொகுப்பை இன்றைக்கான காட்சிப் படுத்துதலுக்கு உரிய நுட்பங்களோடு வெளிப்படுத்தி இருப்பதை வியந்து பார்க்காமல் இருக்க முடியவில்லை. அப்படி உணரப்பட்ட காட்சிகள் தொடர்புடைய நுணுக்கங்களோடு இங்கே பட்டியலிடப்படுகின்றன.

காட்சித் தொகுப்பு Montage

செர்ஜி ஐசன்ஸ்டைன் Sergei Eisenstein புகழ்பெற்ற ரஷ்ய இயக்குனர். 1925ல் Battleship Potemkin என்ற படத்தில் இவர் அறிமுகப்படுத்தியது Montage என்கிற காட்சித் தொகுப்பு முறை. சொல்ல வேண்டியதை சின்ன சின்னக் காட்சிகளை அடுத்தடுத்து வேகமாக நகரும்படி வைப்பதன் மூலம் சுருக்கமாகச் சொல்வது இதன் பாணி. இப்படி ஒரு காட்சியைப் புற நானுற்றில் பக்குடுக்கை நன்கணியார் வைக்கிறார்.

'ஓர் இல் நெய்தல் கறங்க ஓர் இல் / ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப / புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர் / பைதல் உண்கன் பனிவார்ப்பு உறைப்ப / படைத்தோன் மன்ற அப் பண்பி லாளன் / இன்னா தம்ம இவ் வுலகம் / இனிய காண்க இதன் இயல் புணர்ந்தோரே'

பிரிந்தவர் வீட்டின் அழுகை ஒரு காட்சி. கூடியவர் வீட்டின் மகிழ்வு அடுத்த காட்சி. கூடியவர் சூடும் பூ மூன்றாவது காட்சி. பிரிந்தவர் உகுக்கும் கண்ணீர் நான்காவது காட்சி. இந்தக் காட்சிகள்

வசனமற்றவை சுருக்கமானவை விரைவானவை. இவற்றை இப்படி மாறி மாறித் தொகுக்கும் போதே பார்க்கிறவர்களுக்கு படைத்தவன் மேல் ஒரு கோபத்தை உண்டு பண்ணுகிறார் புலவர். இரு வேறு உலகத்து இயற்கையும் இவை மாறி மாறி வரவே செய்யும் என்பதும் பார்க்கிறவர்களுக்குப் புரியும். இதில் இனியதை எடுத்துக் கொள்வதே வாழும் வழி என்றும் உணர்த்தப்படுகிறது.

மிகைப்படுத்தும் காட்சி Exaggeration shot

ஒரு கதா நாயகன் 25 பேரையாவது ஒரு சண்டையில் தகர்ப்பார். அவரது ஒவ்வொரு அசுர அடிக்கும் எதிராளி போய் மோதி பழங்கள், பொரி, வண்ணப்பொடி, கண்ணாடி ஏன் சுவரைக் கூடப் பெயர்ப்பார். இப்படியான மிகைப்படுத்தல்கள் காட்சி ஊடங்கங்களின் வழக்கமும் கவர்ச்சியும் ஆகும். இப்படி ஒரு மிகைப்படுத்தல் காட்சி முத்தொள்ளாயிரத்தில் வருகிறது.

‘கச்சி ஒரு கால் மிதியா / ஒரு காலால் தத்து நீர்த் தண்ணுஞ்சை தான் மிதியா – பிற்றையும் / ஈழம் ஒரு கால் மிதியா வருமே நம் / கோழியூர் கோக்கிள்ளி களிறு’

நடந்து வருவது உறையூர் மன்னன் கிள்ளியின் யானை. ராஜ நடையை சாதாரணமாகப் பாடி விட்டால் மன்னனுக்கு, புலவனுக்கு ஏன் யானைக்கே அசிங்கம். எனவே, இப்படி ஒரு அழகான மிகைப் படுத்தல். அதிக உயரத்தில் இருந்து காட்டும் Aerial Shot ல் யானை நடக்கிறது. ஒரு கால் காஞ்சியில். ஒரு கால் வடக்கே உச்சயினியில். மற்றொரு கால் தெற்கே ஈழத்தில். கடைசிக் காலுக்கு ஒன்றும் காட்டவில்லை. அதை எங்கே வைக்குமோ என்கிற மிரட்சியோடு முடிகிறது காட்சி. அது சரி, மூவடியால் தானே உலகளந்தார் பெருமாள்?

பார்வை இலக்கிலான புற நிலைக் கோணம் Audience view objective angle

திரைக்காட்சியில் இல்லாத கவனிப்பாளரின் கண்களால் தொடர்ச்சியாக ஒரே பார்வைக் கோணத்தில் காட்சிப்படும் படத்தையே இப்படிச் சொல்கிறார்கள். இந்தக் கோணம் தனிச்சார்பு அற்றது Impersonal என்பதால் சம்மந்தப்பட்டவர்களின் இயல்பு இதில் அதீதமாக வெளிப்படும்.

அகநானூற்றில் இப்படியான ஒரு அற்புதக் காட்சி காட்டப்படுகிறது. மகிழ்வாய் களி நடை போடுகிற ஒரு யானை இணையை எதிரில் இருந்து பார்க்கிறது ஒளிப்படக் கருவி Camera . எதிர்பாரத திருப்பமாக பிடி-பெண் யானை பயம்பு என்கிற யானை பிடிக்கிற குழிக்குள் விழுகிறது. இதனை கீழ் நோக்கு காட்சியாகக் High shot காட்டுகிறது. மேலே இருக்கிற களிறு – ஆண்

யானை பிடியின் நிலைக்கு மறுகி துதிக்கையை வான் நோக்கி உயர்த்திப் பிளிறுவது மேல் நோக்கு காட்சியில் Low shot காட்டப்படுகிறது.

உயர்த்திப் பிடித்த வளைவான தும்பிக்கையின் அடிப்பாகத்தில் இருந்து நுனி வரை வெளிப்புறமாக வேகமாக ஓடுகிறது கேமரா. என்ன வரும்? வெளி வருகிறது ஓய்யென ஒரு கர்சனை. இந்தக் கர்சனையில் நிலம் அதிர்கிறது. அந்த அதிர்வின் மேல் குவிகிற காட்சி Zoom தொடர் காட்சியாக Follow shot ஓடி நீண்டு உயர்ந்து நிற்கிற மூங்கில்கள் முறிபட்டு விழுவதில் போய் உறைகிறது Freeze . ஆக இந்தக் காட்சியின் நோக்கம் கத்தும் யானையின் உன்மத்தத்தில் காதலின் உன்னதத்தை காட்டுவதே.

‘கயந்தலை மடப் பிடி பயம்பில் பட்டென / களிறு விளிப்படுத்த கம்பலை வெரீஇ / ஒய்யென எழுந்த செவ்வாய்க் குழவி / தாது எரு மறுகின் மூதூர் ஆங்கண்’

<u>உள்வெட்டு புற நிலை நெருக்கக் காட்சி Cut-in objective close-up shot</u>

ஒரு அகலக் காட்சியில் இருக்கிற ஏதோ ஒரு பொருளை மட்டும் உருப்பெருக்கி பார்வையாளரின் கோணத்தில் காட்டுவதே இதன் தன்மை. முக்கியத்துவம் இல்லாத எல்லா வற்றையும் காட்சியில் இருந்து விலக்கி அழுத்தம் தர வேண்டியதை மட்டும் தனியே பிரித்துக் காட்டுவதே இதன் நோக்கம்.

பட்டினப்பாலையில் இப்படி ஒரு நெருக்கக் காட்சி வருகிறது. கரிகாற் பெருவளத்தான் நாட்டின் செல்வச் செழிப்பையும் களவு பயமின்மையையும் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது. முதலில் அகலக் காட்சி. காய்கிற நெல்லைத் தின்ன வரும் கோழியைக் காதில் உள்ள மகரக் குழலால் விரட்டுகிறாள் தாய். முக்காற் சிறு தேர் ஓட்டி வருகிற பிள்ளை தாய் எடுக்காத குழலைத் தாண்டி நாசூக்காக விலக்கி ஓட்டுகிறான்.

இங்கே தான் ஒளிப்படக் கருவி சிறுவனின் காலில் குவிகிறது. நெருக்கக் காட்சியில் அவன் ’பொற்காற் புதல்வ’னாக இருக்கக் காண்கிறோம். தங்கம் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து இருப்பது மலைப்பாக இருக்கிறது. அவ்வளவு செழிப்பு. அதே நேரம் எறிந்த தங்கத்தை எடுக்க விழையாத தாயின் செய்கை கேள்விக்குள்ளாகிறது. பாடல் பதில் சொல்கிறது ‘விலங்கு பகை அல்லாது கலங்கு பகை அறியா’ நாடாம். எப்படிப் பாருங்கள்…!

‘கோழி எறிந்த கொடுங் கால் கனங் குழை / பொன் கால் புதல்வர் புரவி இன்று உருட்டும் / முக்கால் சிறு தேர் முன் வழி விலக்கும் / விலங்கு பகை அல்லது கலங்கு பகை அறியா’

அதீத தொலை தூர வரைபட வகைக் காட்சி Extreme long map type shot

மிகத் தொலைவான தூரத்தில் இருந்து ஒரு பெரிய பகுதியை இந்த வகைக் காட்சி சித்தரிக்கும். பிரம்மாண்டமான காட்சிப் பரிமாணத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே இதன் உண்மையான நோக்கம். பெரும்பாலும் ஒரு கதை நிகழ்கிற இடத்தைக் காட்டக் கதை ஆரம்பிக்கும் காட்சிகளில் இவை வைக்கப்படும்.

பெரும் கௌசிகனார் இப்படித் தான் ஒரு ரசனையான காட்சியோடு நன்னன் வேண்மானைப் பற்றி மலைபடுகடாமில் பாட ஆரம்பிக்கிறார். பல குன்றத்துக் கோட்டம் எப்படிப்பட்ட நாடு என்று காட்ட ஒளிப்படக் கருவியை மலை உச்சிக்குத் தூக்கிப் போய் படம் பிடிக்கிறார்.

இரண்டு அற்புதமான உதாரணங்கள். ஒன்று, அவரைப் பூக்களைப் பற்றியது. வெண்மையான அவரைப் பூக்கள் எங்கும் பூத்துச் சிதறிக் கிடக்கின்றன. தொலை தூரத்தில் இருந்து பார்க்கும் போது நுட்பமான காட்சி விவரணை இருக்க வாய்ப்பில்லை. ஒரு ஒட்டு மொத்தமான படமே கிடைக்கும். ஆகவே தான் தயிர் சிதறிக் கிடந்ததாக இதனை உருவகப் படுத்துகிறார் புலவர்.

இரண்டாவது உதாரணம் வரகுக் கதிகளைப் பற்றியது. மேலே இருந்து பார்க்கும் காட்சியில் சம தளத்தில் இருக்கும் பொருட்களை விடத் துருத்திக் கொண்டு அ நீட்டிக் கொண்டு இருக்கும் Protruding பொருட்கள் எளிதில் கவரும். விளைந்த வரகுக் கதிர்கள் வானை நோக்கி நீண்டு இருக்கின்றன. அவை முஷ்டி உயர்த்திப் பேசுகிற வாதியின் கை போல இருக்கின்றனவாம்.

‘விளை தயிர்ப் பிதிர்வின் வீ உக்கு, இருவி தொறும் / குளிர் புரை கொடுங் காய் கொண்டன, அவரை / மேதி அன்ன கல் பிறங்கு இயவின், / வாதி கை அன்ன கவைக் கதிர் இறைஞ்சி, / இரும்பு கவர்வுற்றன, பெரும் புன வரகே’

குறியீட்டுக் காட்சி Symbolic shot

மாலை போடப்பட்ட ஒருவரின் புகைப்படம், பெரிய கைகளுக்குள் இருக்கும் சின்னக் கைகள், உரசுகிற பூக்கள் இவை முறையே இறப்பு, பிறப்பு, காதல் இவற்றை சொல்லாமல் சொல்லும் காட்சிகள். இப்படியான காட்சி ஒன்று முத்தொள்ளாயிரத்தில் காட்டப்படுகிறது.

‘அந்தணர் ஆவொடு பொன் பெற்றார் நாவலர் / மந்தரம் போல் மாண்ட களிறூர்ந்தார் – எந்தை / இலங்கிலைவேற் கிள்ளி இரேவதி நாள் என்னோ / சிலம்பிதன் கூடிழந்தவாறு’

அந்தணர்கள் பசுக்களையும் நாவலர்கள் யானைகளையும் பரிசாகப் பெறும் கிள்ளியின் பிறந்த நாளில் சிலம்பிப் பூச்சிக்கு மட்டும் ஏன் வீடிழக்கிற சிக்கல்? பரிசு பெறும் காட்சியில் கோலாகலம் காட்டப்படுகிறது. அதன் கடைசியில் பூச்சி கூடிழக்கும் சோகம். ஏன் என்று புரியாமல் பார்க்கிறவர்களுக்காக ஒரு இடைச்செருகல் காட்சி Insert . மன்னன் பிறந்த நாள் என்றால் ஊரே விழாக் கோலம் பூணுமே. புதுச் சுண்ணம் பூசுகிற போது பூச்சிகளின் கூடுகளைக் களைக்காமல் வேறென்ன செய்வதாம்? மறை பொருளாய்ச் சொன்னாலும் உரை இல்லாமலும் புரிகிற காட்சியே.

உள் முரண் காட்சி Contradictory shot

ஒரு கதையை சொல்லிப் போகிற போதே ஒரு எதிர்பார்ப்பையும் கதாசிரியர் உருவாக்குகிறார். சில சமயங்களில் அந்த எதிர்பார்ப்புக்கு நேர் எதிர் மாறாகவும் காட்சிகளை அமைப்பது உண்டு. காரணம், வெறுமே ஒரு மாற்றத்தை உருவாக்குவது அல்ல. மாறாக அதற்கான ஒரு நியாயமான தேவையும் இருக்கும்.

வீதி உலா வருகிறவனைப் பார்க்க வேண்டுமென வீட்டிற்குள் இருப்பவள் மனது துடிக்கிறது. போவாளா மாட்டாளா என்று பார்க்கிறவர்களும் துடிக்கிறார்கள். ஒரு வழியாகப் போகிறாள். பார்க்கிறவர்களுக்கு ஒரு பரவசம் ஆரம்பிக்கிறது. வீதியில் போகிறவனைப் பார்க்க வேண்டுமென்றால் வீட்டுக் கதவைத் திறக்கத் தானே வேண்டும். இவளோ கதவை அடைத்து விடுகிறாள். பார்க்கப் போனவள் 'காணியச் சென்று கதவடைப்ப'து நம் எதிர்பார்ப்பின் மீதா? நாணம் இடையில் வந்து கதவடைத்ததற்கு அவளென்ன செய்வாள்? . அழகான உள் முரண் காட்சி.

'ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக் / காணியச் சென்று கதவடைத்தேன்' – முத்தொள்ளாயிரம்.

அவலச் சுவைக் காட்சி Pathos shot

ஒரு இயக்குனருக்கான மிகப் பெரிய சவாலே அவலச் சுவையை ரசனையோடு தருவதே. பிழியப் பிழிய சோகத்தைத் தந்தால் எப்படி ரசிப்பது? அவலத்திற்கு உரிய சீழ் வாடையைக் காட்சியில் கோர்ப்பது எப்படி? உள் உணர்வுகளைச் சுடும் அவலத்தின் உக்கிரத்தை உருத்தாமல் காட்சிப் படுத்தத் தான் முடியுமா?

இந்த சவால்களை எல்லாம் அனாயசமாகப் புறந்தள்ளுகிறது நற்றிணையில் எயினந்தையார் காட்டும் காட்சி.

'அஞ்சல் என்ற இறைகை விட்டெனப் / பைங்கண் யானை வேந்துபுறத்து இறுத்தலின் / களையுநர்க் காணாது கலங்கிய உடைமதில் / ஓரெயில் மன்னன் போல / அழிவுவந் தன்றால் ஒழிதல் கேட்டே'

முதல் காட்சியில் துணைக்கு யாருமில்லாமல் தனியே மாட்டிக் கிடக்கும் மன்னன். இரண்டாவது காட்சியில் எதிரி மன்னன் யானைப் படையுடன் கோட்டைக்கு வெளியே. மூன்றாவது காட்சியில் விரிசல் விடும் நிலையில் இருக்கும் பரிதாபமான கோட்டை. ஆக, மரணம் கோட்டை வாசல் வரை வந்து விட்டது. காதலனால் கை விடப்பட்ட பெண்ணின் அவலத்தைக் காட்டும் அற்புதக் காட்சி.

இதில் 'அஞ்சல் என்ற இறை கை விட்டென' என்கிற வரிகளே உச்சம். திக்கற்றோர்க்கு தெய்வமே துணை'. அடைக்கலம் என்று தேடிப் போனால் அந்தத் தெய்வமே கை விட்டதாம். கையறு நிலையின் விளிம்பை இதை விட நுட்பமாகக் காட்சிப்படுத்தவே முடியாது. இதைப் படிக்கிற போது நினைவில் வரும் ஒரு நாட்டுப் புறப் பாடல் – 'நம்புன சாமியால நனையுறனே தூத்தலிலே'. நிழலில் வைத்துக் காக்கும் என்று தானே கும்புடுகிறோம். நடுத்தெருவில் இழுத்துப் போட்டால்.....?!

காட்சி இணைப்பாக்கம் Composition of shots

காட்சிகளை ஒத்திசைப்பதன் மூலம் பார்வையாளர்கள் மனதில் கதையை உயிர் பெறச் செய்வதே இணைப்பாக்கம். திரைப்படத்தின் இரண்டாம் நூற்றாண்டான இந்தக் காலத்தில் புதுமையானதாகக் காட்டப்படும் ஒரு இணைப்பாக்கத்தை நற்றிணை அன்றே காட்டி இருக்கிறது. அதீத தூரக் காட்சியில் Extreme Long shot நிலவு மறைந்து இருள் பரவுகிறது. தூரக் காட்சியில் Long shot ஓவியம் போல அழகுள்ள தலைவியின் வீடு. இதுவரை நிலைக் காட்சியாக Static Shot இருந்தது இப்போது நகரும் காட்சியாக Moving shot மாறுகிறது. நடுத்தர தூரக் காட்சியில் Medium Long shot வீட்டின் உள்ளே இருக்கிற அம்மா. இன்னும் சுருங்கும் நடுத்தரக் காட்சியில் Medium shot காவல் காக்க வேண்டிய அவளும் தூங்குகிறாள்.

இப்போது முன்னோக்கி நகர்ந்த ஒளிப்படக் கருவி Camera எதிர் திசைக் காட்சிக்கு Reverse shot மாறி வீட்டிற்கு வெளியே ஓடுகிறது. அங்கே பாகர்களை விலக்கி விட்டுக் கொதிக்கும் மத்தகமுள்ள யானை போல தனியனாக நிற்கிறான் தலைவன்.

இனி என்ன? தலைவி தலைவனை சேருவது தானே. இதனை இருவர் காட்சியாக Two shot or American shot காட்டுகிறது. காணமால் போன நகையைக் கண்டெடுத்தவள் போல ஓடிச் சென்று துடிக்கும் அவனது மார்பில் சேர்வாளாம். அவள் சேர்ந்தாளோ என்னவோ தெரியாது. ஆனால் இப்படி ஒரு இணைப்பாக்கத்தால் கதை உயிர் பெற்று நம் மனங்களைச் சென்று சேர்கிறது.

'நிலவும் மறைந்தன்று இருளும் பட்டன்று / ஓவத்து அன்ன இடனுடை வரைப்பில் / பாவை அன்ன நப்புறம் காக்கும் / சிறந்த செல்வத்து அன்னையும் துஞ்சினள் / கெடுத்துப்படு நன்கலம் எடுத்துக் கொண்டாங்கு / நன்மார்பு அடைய முயங்கி மென்மெலக் / கண்டனம் வருகம் சென்மோ தோழி / கீழும் மேலும் காப்போர் நீத்த / வறுந்தலைப் பெரும்களிறு போலத் / தமியன் வந்தோன் பனியலை நீயே'

இயக்குனரின் முத்திரை Directorial touch

ஒவ்வொரு இயக்குனருக்கும் ஒரு பாணி இருக்கும். ஒரு கதையைத் தன் பாணியில் அவர் அழகாகக் காட்டுவதே அவரது முத்திரை. பெரும்பாலும் அப்படியான முத்திரைகள் வெறொன்றை உணர்த்தும் Metaphoric நுட்பமானவைகளாக இருக்கும்.

இறந்த கணவனுக்கு ஈமத்தாழி செய்பவனிடம் அதனைப் பெரிதாக வனையும் கனிவைக் கேட்கிறாள் ஒரு கைம்பெண். அச்சில் சுழலும் வண்டிச் சக்கரத்தில் ஒட்டி இருந்த ஒரு சிறு பல்லியாம் இவள். எதற்காக இந்த முத்திரை?

வண்டிச் சக்கரத்தில் ஒட்டி இருக்கிற போது அது பயணிக்கும் பாதைகளில் தானும் பயணிக்கலாம். ஆனால் களைப்பு இருக்காது. விருப்பம் இல்லாத போதும் வண்டிச் சக்கரத்தோடே பயணித்தாக வேண்டிய கட்டாயம். கூடவே பயணித்தாலும் நிற்கச் சொல்லிக் கேட்க முடியாத உடன் போதல். பயணம் ஒத்திசைவு என்றாலும் சாதக பாதகங்கள் சக்கரத்துக்கு மட்டுமே. தூக்கிச் சுமப்பது சக்கரம் தான். இருந்தாலும் ஒரே அச்சில் சுழல்வதும் சுமை தானே. தெரியாமல் பிடி நழுவினால் சக்கரத்துக்கு அடியில் விழுந்து நசுங்கியும் போகலாம். ஆக ஒட்டு மொத்த இயக்கமும் சக்கரம் சார்ந்ததே. எத்தனையோ காலம் இப்படிப் பயணித்த பிறகு திடீரென சக்கரம் நின்று விட்டால் பல்லிக்குப் போகுமிடம் ஏது?

இந்த ஒரு முத்திரையில் அன்றைய பெண்களின் நிலையையும் 'உயிர் போன பின்னர் உடல் ஆரும் உய்வரோ' என்று கம்பர் கேட்ட கேள்வியையும் உணர வைக்கிறார் புற நானூற்றுக் கவிஞர்.

இன்னும் எவ்வளவோ அழகான காட்சிகளைத் தன்னகத்தே கொண்டது செம்மொழி. பார்க்கப் பார்க்க வியப்பை ஏற்படுத்தும் அதன் காட்சி அறிவியல் நுட்பங்களை இன்னும் நிறையச் சொல்ல வேண்டும்

துணை நூற்பட்டியல்:

Cinema 1: The Movement-Image 1986 - Gilles Deleuze – University of Minnesota Press

சினிமா ஒளிப்பதிவின் 5 சி'கள் – ஜோசப் வி மாசெல்லி – தமிழில் 'வேட்டை' எஸ். கண்ணன் – பாரதி புத்தகாலயம்.

சங்கச் சித்திரங்கள் – ஜெயமோகன் – கவிதா வெளியீடு

https://en.wikipedia.org/wiki

சங்க இலக்கியப் பதிவுகள் – அருணன் – பாரதி புத்தகாலயம்

கதைக்கு வெளியே உள்ள கதை – கௌதம சித்தார்த்தன் – http://unnatham.net

செம்மொழித் தமிழ் – பதிப்பாசிரியர் ம.வே.பசுபதி – தமிழ்ப் பல்கலைக் கழகம் – தஞ்சாவூர்

பறவைகள்

பேரா. து, ரோசி தமிழ்த்துறைத் தலைவர், ராஜா சரபோஜி அரசு கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.

குயில் ஓசை, மயில்தோகை , தூக்கணாங்குருவிக்கூடு, முதலானவை வியப்பானவை. கிளி, புறா,அன்னம், அன்றில் போன்றவை மக்களுக்கு மகிழ்ச்சித் தருகின்றன. காக்கை, குருவி, வீட்டுக்கோழி முதலியன சுற்றுப்புறக் கழிவுகளை உட்கொள்கின்றன. பறவையின் எச்சங்களால் நிறைய வனங்கள் உருவாகியுள்ளன. தாவரங்களிலுள்ள பூச்சி, புழுக்களையும் வயல்வெளிகளையும் பாழாக்கும் எலி, சுண்டெலி போன்றவற்றையும் பறவைகள் கட்டுப்படுத்துகின்றன. மேலும் மனிதர்கள் புலி, சிங்கம் போன்ற விலங்குகளுக்குப் பயப்படுவது போல், கழுகு, பருந்து வல்லூறு, கிளி போன்ற பறவைகளுக்குப் பயப்படுவதில்லை பறவையியல் பேரறிஞர் சலீம் அலி 'மனிதர்களின்று பறவைகளால் வாழமுடியும், ஆனால் பறவைகளின்றி மனிதர்களால் வாழ முடியாது என்று குறிப்பிடுவார். இத்தகு சிறப்பு வாய்ந்த பறவைகள் சங்க காலத்தில் மக்களால் எவ்வாறு அறியப்பட்டிருந்தன என்பதை அறிலாம்.

தொல்காப்பியம்

உயிர்கள் பகுப்பைத் தொல்காப்பியம்

'ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனளே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே'
(மரபியல்-நூற்பா-27)

என்று கூறுகிறது. இவ்உயிர் பகுப்பில்

மாவும் புள்ளும் ஐயறி விளவே
பிறவும் உளவெ அக்கினைப்பிறப்பே

என்று கூறுகிறது. எனவே ஐந்தறிவு உயிராக பறவையினம் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

பறவைகள் புள் என்றும் பார்ப்பு, பிள்ளை, பறழ், குட்டி ஆகியவை பறவைகளின் இளமைப்பெயர் என்றும் பெண் இனப்பறவைகள் பெடை, பேடை, பெட்டை, அளகு என்றும் ஆண்

இனப்பறவைகள் சேவல், ஏற்றை என்றும் தொல்காப்பியம் மரபியல் (நூற்பா-4,6,7,49,50,55,56) வழி அறிய முடிகிறது.

<u>பறவைகள்</u>

பறவைகளில் பறக்கும் நிலை முற்றிலும் சிறப்படைந்து காணப்படுகிறது. 'இவை விரோதிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளவும் உணவைத் தேடிச் செல்லவும் மற்றும் இரைகளைப் பிடித்துண்ணும் பெரிய பிராணிகளின் பிடிப்புகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் பறவைகள் நிலத்தில் வேகமாக ஓட ஆரம்பித்தன. இந்நிலையின் பொழுது முன்னங்கால்களைத் தொடர்ந்து வேகமாகக் காற்றில் மேலும் கீழும் அசைத்தன. இதனால் முன்னங்கால்களின் பின் விளிம்புகளிலுள்ள செதில்கள் நீண்டு பறக்க உதவும் இறகுகளாக மாற்றமடைய ஆரம்பித்தன. கடைசியாக இவ்வாறு மாற்றமடைந்த முன்னங்கால்கள் இறக்கைகளாக மாற்றமடைந்தன. இறக்கைகள் முழுமையாக மாற்றமடைந்து தேனர்றிய பிறகே பறவைகளுக்குரிய பல:வெறு வகைச் சிறப்புக் குணாதிசயங்கள் மேலும் மேலும் தோன்ற ஆரம்பித்தன. தொடர்ந்து ஊர்வன இனத்தைச் சார்ந்தவைகள் முழுமையாக மாற்றமடைந்தன. '' (உ. கருப்பண்ணன், பறவைகள் எப்படிப் பறக்கக் கற்றன-பக்-15-16)

'சங்க நூல்களில் பறவையென்ற பெயர் பறக்கும் உயிர்கள் எல்லாவற்றிற்கும் வழங்கியிருப்பினும் பெரும்பாலும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் புள்ளினத்திற்கே வழங்கியுள்ளது. பறவைகளானவை பறக்கும் சிறப்புத்தன்மை பெற்ற ஊர்வன என்று கூறுவர். விலங்கினததிற்கும பறவையினத்திற்கும் உள்ள முக்கிய வேற்றுமை அவற்றின் இனப்பெருக்க முறையில் காணப்படுகின்றது. விலங்குகள் குட்டிப்போட்டுப் பால்கொடுக்கும் . பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்'' (பி. எல். சாமி. சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் , ப-1) இச்செய்திகளால் பறவையினத்தின் இயல்பு நிலைகளை அறிய முடிகின்றன.

சங்க இலக்கியத்தில் பறவைகள்

சங்ககால மக்கள் வாழ்க்கை இயற்கையோடு இணைந்ததாகும் . அவ்வாழ்க்கi முதற்பொருள், கருப்பொரள், உரிப்பொருள் ஆகிய நிலைகளில் அடக்கப்படுகிறது. எனவே சங்க இலக்கியங்கள் காட்டும் ஐந்நில பறவைகளை அறியலாம்

<u>குறிஞ்சி நிலப்பறவைகள்</u>

கிளி. மயில்;. மலையுறை குருவி, வங்கா ஆகியவை சங்க இலக்கியம் காட்டும் குறிஞ்சி நிலப்பறவைகளாகும். கிளிப்பற்றி (நற்றிணை பாடல்-25 , 102,134,147) குறுந்தொகை (67,133, 142,217,223,291,360) , ஐங்குறுநூறு (260,282,284,286) பெரும்பாணாற்றுப்படை (227-230)

ஆகிய சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. மயில் பமற்றி ஐங்குறுநூறு (296), அகநானூறு(108,177) , நற்றிணை -288) , புறநானூறு(344) , பொருநராற்றுப்படை (190-191) , திருமுருகாற்றுப்படை (247) போன்ற சங்க நூல்களில் காணமுடிகிறது. சங்கப்பாடல்கள் பாடிய 473 புலவர்களில் 73புலவர்கள் மயில் பற்றிப் பாடியுள்ளனர். மயில் முழுமையாக 132 இடங்களிலும் உறுப்புகள் பற்றி 121 இடங்களிலும் காணப்படுகின்றன. மலையுறைக் குருவிப்பற்றி குறுந்தொகை (72) , அகநானூறு (303,338) புறுநானூறு(19) ம் , வங்கா என்கிற மாம்பழக்குருவிப் பற்றி குறுந்தொகை(151) , நற்றிணை (341) ஆகிய சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றன.

<u>முல்லை நிலப் பறவைகள்</u>

கானக்கோழி. குயில், தூக்கணாங்குருவி, புறா, மடாப்புறாக, மணிப்புறா, சிறிய தவிட்டுப்புறா, சாம்பல்புறா, போகில் (பச்சைப்புறாவினம்) போன்றவை முல்லை நிலப்பறவைகள் ஆகும்.

1. கானக்கோழி-குறுந்தொகை(224), புறநானூறு (28,52) அகநானூறு (192)
2. குயில்-நற்றிணை(224,246), குறுந்தொகை (242)
3. தூக்கணாங்குருவி-குறுந்தொகை(366,374), புறநானூறு (225)
4. மாடப்புறா-நற்றிணை (71,162), குறுந்தொகை(285),நெடுநல்வாடை (45-48)
5. மணிப்புறா –அகநானூறு(167), பெரும்பாணாற்றுப்படை(438-440)
6. சிறியதவிட்டுப்புறா-நற்றிணை (384),அகநானூறு(271)
7. சாம்பல்புறா-

நற்றிணை(189),குறுந்தொகை(79,154,174.274),மலைபடுகடாம்(120),பதிற்றுப்பத்து94-32வரி)

8. போகில் - (பச்சைப்புறாவினம்), ஐங்குறுநூறு(325), அகநானூறு(129)

<u>மருத நிலப்பறவைகள்</u>

காக்கை-சிறுகருங்காக்கை, அண்டங்காக்கை

கோழி-கம்புள் கோழி. நீர்க்கோழி, நீலக்கோழி, மனைக்கோழி, மனையுறை, குருவி ஆகியவைமருதநிலப்பறவைகள் ஆகும்.

சிறுகருங்காக்கை-நற்றிணை(210)281,343),

குறுந்தொகை(210)ஐங்குறுநூறு(391)பொருநராற்றுப்படை(183-186)

அண்டங்காக்கை-நற்றிணை(367)

கம்புள்கோழி-ஐங்குறுநூறு(85), மலைபடுகடாம்(253-254)

நீர்க்கோழி-புறநானூறு(395)

நீலக்கோழி-ஐங்குறுநூறு(51). சிறுபாணாற்றுப்படை(181-186)

மனைக்கோழி-குறுந்தொகை(1152), பரிபாடல்(8.17-19), புறநானூறு(395), பொருநராற்றுப்படை(222-223)

மனையுறைக்குருவி-நற்றிணை(58,85,231), குறுந்தொகை(46,72,85), புறநானூறு(318)

<u>நெய்தல் நிலப்பறவைகள்</u>

அன்றில், அன்னம் , குருகு-இனக்குருகு, வெண்குருகு, பசுங்கால் குருகு, வெண்பூக்குருகு, வெண்தலைக்குருகு, கருங்கால் குருகு, வெள்ளாங்குருகு, சிறுவெள்ளாங்குருகு, யானையங்குருகு,கொக்கு, சிரல்(மீன்கொத்திக்குருவி), சிறுவெண்காக்கை, நாரை, போன்றவை நெய்தல் நிலப்பறவைகளாகும்.

அன்றில்-நற்றிணை(124,152), குறுந்தொகை(57,160.301)

அன்னம்-நற்றிணை(356),ஐங்குறுநூறு(92),கலித்தொகை(70)புறநானூறு(67)

குருகு-நற்றிணை(159),குறுந்தொகை(228),ஐங்குறுநூறு(457)

இனக்குருகு-நற்(131),கலித்தொகை(126)

வெண்குருகு-நற்(4,138,162), குறுந்தொகை(113,303),அக(141)

பசுங்கால் வெண்குருகு-அக(273), வெண்தலைக்குருகு-ஐங்(86)கருங்கால்குருகு-நற்(211),வெள்ளாங்குருகு-ஐங்(86), சிறுவெள்ளாங்குருகு நற்றிணை(70),யானையங்குருகு-குறு(34),

கொக்கு-நற்றிணை(100,230), குறுந்தொகை(117,122), அக(346) புற(342) குறிஞ்சிப்பாட்டு(188) பெரும்பாணாற்றுப்படை(309)

சிரல்

(மீன் கொத்திக்குருவி) பதிற்றுப்பத்து (42;: 2-5) , அகநானூறு (106) . சிறுபாணாற்றுப்படை (1810 பெரும்பாணாற்றுப்படை (313-314)

சிறுவெண் காக்கை

நற்றினை (278,345), ஐங்குறுநூறு (163,167,168). அக(170,171)

நாரை

நற்(91,127,178,263), குறு(103,125,166,236,296) ஐங் (156) அக(40,276)

பாலைநிலப்பறவைகள்

ஆந்தை, ஊமன், வானம்பாடி, குடிஞை, குரால், கூகை, எழால், குடுமி எழால், கழுகு, எருவை, பாறு, பொகுவல், கிணந்துள், பருந்து , பூழ் (கௌதாரி) , குறும்பூழ் (காடை) போன்றவை பாலைநிலப்பறவைகளாகும்.

ஆந்தை (ஆண்டலை)-வேட்டைக்கார அந்தை

பதிற்றுப்பத்து (25, 7,8) , பரிபாடல் (2, 58வரி) , திருமுருகாற்றுப்படை (226-227)

ஊமன்

குறுந்தொகை(224)

வானம்பாடி

கலித்தொகை(46) , அகநானூறு (67)

குடிஞை

ஐங் (291) நற்(394) , மலைபடுகடாம் (146,151)

குரால்

பட்டைக்கழுத்து சின்ன ஆந்தை)

ந்ற்(218)அகம்(265)புற(280)மதுரைக்காஞ்சி (1690

கூகை

நற் (83) குறு (153, 393), பரிபாடல் (258) புற (359) திருமுருகாற்றுப்படை (49) அகநானூறு (122,148) பதிற்றுப்பத்து (44)

எழால் (வல்லூறு)

குறு (151) அக (103) குடுமி எழால் பதிற்றுப்பத்து (46)

கழுகு

அகநானூறு (31) புறநானூறு (370) ,

எருவை

நற்றிணை (298), அகநானூறு (51. 77, 215) , பாறு (வெண் முதுகுக் கழுகு

நற்றிணை (229) , அகநானூறு (247) , புறநானூறு (359,360)

பொகுவல்

புறநானூறு (238)

கணந்துள் (ஆள்காட்டிக் குருவி) நற் (212), குறுந்தொகை(350)

பருந்து

நற் (141,325)

குறுந்தொகை

(207,283) , அகநானூறு (363) , புறநானூறு(271), மலைபடுகடாம்(231.502வரிகள்

பூழ் சிவல் (கௌதாரி) புறனாறூறு (321,384) குறும்பூழ் (காடை, அகம்(63), புறம் (214)

கோழிப்பறவை

சங்ககால மக்கள் தம வாழ்க்கையை உள்ளது உள்ளபடி காட்டுவதுடன் பறவைகளின் மூலம் ஏதேனும் கருத்தை அல்லது உணர்ச்சியைக் காட்டும் நோக்கம உடையன. அப்பறவைகளில் கோழிப்பற்றி அறிந்து கொள்ளலாம். தமிழ்நாட்டில் காணும் பறவைகளில் கானாங்கோழி, நீலமார்ப்புச் சம்பங்கோழி, கம்புள் கோழி, சிவப்புக்கானாங்கோழி, தண்ணீர்க்கோழி, நீலத்தாழைக்கோழி, தாழைக்கோழி, நாமக்கோழி, வரகுக் கோழி, நீளவால் இலைக்கோழி, தாமரைக்கோழி, சுண்டாங் கோழி, வர்ணச்சுண்டாங்கோழி, காட்டுக்கோழி ஆகிய கோழி வகைகள் காணப்படுகின்றன. (க. ரத்னம், தமிழ்நாட்டுப்பறவைகள்-பக்33-34,36-41) இவற்றில் கம்புள் கோழி , நீர்க்கோழி, நீலக்கோழி, கானக்கோழி போன்றவையும் மனைக்கோழியும் சங்கஇலக்கியத்தில் காணமுடிகின்றன.

கம்புள்கோழி

கம்புள் கோழியை 'சம்பங்கோழி' என்று அழைப்பர்

ஐங்குறுநூற்றில்

'பழனக் கம்புள். . . . . வேலே-(ஐங்-60)

என்ற பாடல் பழனத்தின் கண் உள்ள சம்பங் கோழிச்சேவல் வரம்புடைய கழனியிலிருந்து தன்னைக் காதலித்தழைக்கும் பேடையின் இயல்பு அறியாமல் அதனை வருந்திக் கூவியழைப்பது போன்ற தலைவன் கடிமனைக்கண் வரவை எதிர்பார்த்து வருந்தியிருக்கும தலைவியின் நிலையறிந்து வரையாமல் வீணே இருளிளும், பகலிலும்,வந்து வந்து போகும் நிலைக்கு ஒப்பாகும் என்று கூறுகிறது.

மேலும்

வெண்ணுதற் கம்புள் அரிக்குரற் பேடை

தண்ணலும் பழனத்துக் கிளையோடு ஆலும்

. . . . . (ஐங்-85)

என்ற பாடல் சம்பங்கோழியுள் வெள்ளை நிறம் அமைந்த நெற்றியையும் அரித்தெழும் ஓசையையுமுடைய பெடைக்கோழி தன் சேவலின்றியும் தனது கிளையோடு மகிழ்ந்து ஆரவாரிக்கும். அதுபோல் தலைவி பரத்தையர் மேல் சென்ற தலைவனை மனத்தில் இருத்தி. தன் சுற்றத்தோடு மகிழ்ந்து இருக்கும் நிலைக்கு ஒப்பாகும் என்று கூறுகிறது.

மருதநில ஓசைகள் பற்றி மதுரைக்காஞ்சிக் கூறும்போது,

‘வண்டிறை கொண்ட கழம்பூம் பொய்கைக்
கம்புட் சேவல் இன்றுயில் இரிய’’ (மது.கா.254-255)

என்கிறது. இதில் வண்டுகள் தங்கும் மணமிக்க பூக்களையுடைய பொய்கையில் கம்புள் சேவல் இனிய உறக்கம் கொள்ளும் என்பதை அறியலாம்.

சங்க இலக்கியம் வாயிலாக , கம்புள் கோழி ‘சம்பங்கோழி’ என்று அழைக்கப்படும். இக்கோழி நீர் நிலைகள் அருகில் வாழக்கூடியது. இதன் பேடை வெண்மையான நெற்றியையும் கரகரத்த குரலையும் உடையது. எப்போதும கூட்டத்தோடு இருக்கும். பொய்கையில் உறக்கம் கொள்கிறது. வயல்வெளிகளில் வாழ்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

32 செ.மீட்டர் உள்ள கம்புள் கோழி நெற்றியும் தலையின் பக்கங்களும் வெண்மை நிறம். கருஞ்சிலேட் நிறம் கொண்ட பிடரியும் உடலும் கொண்ட இதன் மார்பும் அடிவயிறும் நல்ல வெண்மை நிறம். வாலடி இறகுகள் செம்பழுப்பாக இருக்கும். அடிக்கடி குறுகிய வாலை மேலே நிமிர்த்தும். சிரமப்பட்டு உயர எழுந்து பறக்கும்போது கால்கள் கீழே தொங்கும். தாழைக்கோழி போல நீந்தவும் செய்யும். ஏப்ரல் முதல் அக்டோபர் மாதம் வரை புதர்களுக்கு அடியில் உடமைத்து இனப்பெருக்கத்தில் ஈடுபடுகிறது. 6முதல் 7முட்டைகள் வரை இடுகிறது’’(க. இரத்தினம், தமிழ்நாட்டுப்பறவைகள்-ப.37)

<u>நீர்க்கோழி</u>

நீர்க்கோழியை இன்று ‘தண்ணீர்க்கோழி’’ என்றும் ‘கானாங்கோழி’’ என்றும் நாட்டுப்புறமக்கள் குறிப்பிடுவதாகப் பி.எல்,சாமி குறிப்பிடுவார். (சங்க இலக்கியததில் புள்ளின விளக்கம்-ப.110) புறநானூற்றில் சோழநாட்டப் பிடவூர்கிழான் மகன் பெருஞ்சாத்தனை மதுரை நக்கீரர் பாடும்போது,

‘அவிழ் நெல்லி . . . . . குந்து’’ (புறம்-395,8-11) என்று பிடவூர் நன்செய் வளத்தைக் குறுpப்பிடுகிறார். மதில நற்சோற்றினின்று இறக்கப்பட்ட வடித்த கள்ளையருந்தும் மனைக்கோழி மனையிடத்திலிருந்து செய்யும் பசிய அழைப்பினால் காட்டுக்கோழியும் நருக்கோழியும் குரலெடுத்துக் கூப்பிடுதல் செய்யும் என்று அறியலாம்.

‘நீர்க்கோழியைத் ‘தாழைக்கோழி’ என்று க. ரத்னம் குறிப்பிட்டுள்ளார். 32 சென்டிமீட்டர் உள்ள நீர்க்கோழி சாம்பல் நிறம் உடலையுடையது. இதன் அடிப்பகுதி வெள்ளையாக உள்ளது. ஆணும் பெண்ணுமாய் இரைதேடுகிறது. தமிழகம் எங்கும் பரவலாகக் காணப்படும் நீர்க்கோழி இனம் இது ஒன்றே. கரையோரத்தில் உள்ள நாணல், தாழைப்புதர்களை விட்டு தண்ணீரில் நெடுந்தொலைவு நீந்திச்செல்லும. பழக்கம் இல்லை. அச்சம் கொண்டு பறக்க முற்படும்போது சற்று நேரம் இறக்கையை அடித்துப் பின் எழுந்து பறக்கும். பறக்கும திறமை குறைந்து எனினும இடம் பெயர நேரும்போது உயர்ந்த மலைகளையும் கடந்து பறந்து செல்லும். நீரில் மூழ்கி மறைந்தபடி ஆபத்திலிருந்து தப்பிக்கவும் முயலும். சூன் முதல் செம்படம்பர் வரை கலவியல் ஈடுபடுகிறது. நாணல், தாழை அடர்ந்து காணப்படும் இடங்களில் நீர்த்தாவரங்களைக் கொண்டு மேடையமைத்து 5முதல் 12 வரை முட்டைகள் இடும்.’’ (க. ரத்னம் , தமிழ்நாட்டுப்பறவைகள்,ப.39)

நீலக்கோழி

நீலக்கோழியின் அலகும், கால்களும் சிவப்பு நிறமானவை. உடல் நீல நிறம். இக்கோழி நாணல் செடிகளின் அருகே கூடமைத்து 3முதல் 7வரை முட்டைகள் இடுகிறது. நவம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை கலவியல் ஈடுபடுகிறது. இந்நீலக்கோழிப்பற்றி ஐங்குறுநூறு,

‘நீருறை கோழி நீலச் சேவல் . . . . . நோய்க்கே’’ (ஐங்-51)

என்று கூறுகிறது. அதாவது கூர்மையான நகங்களை உடைய பெண் நீலக்கோழிக்கு அதன் சேவல் வயாநோய் தீர்க்கும். அதுபோல தலைவனும் தலைவியின் வயா நோய்க்கு (கருப்பக்கால மசக்கை) மருந்தாக இருந்தான். ஆனால் இன்று அவ்வாறில்லை.

நீலக்கோழி மருதநிலததில் காணப்படுகிறது. ‘இதை நீலத்தாழைக் கோழி’ என்று அழைப்பர். கால் விரல்களால் நாணல் தண்டைப் பற்றியபடி உயர ஏறிச்சென்று அமர்ந்து வெயில் காயும். இனப்பெருக்கக் காலததில் ஒன்றை ஒன்று துரத்தும். ‘சக்சக்’ எனக் குரல் கொடுக்கும் ஆண் அலகால் நீர்த்தாவரங்களைக் கவ்வியபடி தலை தாழ்த்தி பெண்ணின் முன் சிறுகுரலில் கத்தித தன் காதலை வெளிப்படுத்தும்’’ (க. ரத்னம், தமிழ்நாட்டுப் பறவைகள் ப-38)

மனைக்கோழி

சங்க காலத்தில் மனையின் கண் உள்ள இக்கோழியைக் கூட்டில் அடைத்து உள்ளனர். இதன் குஞ்சுகளைக் கவர பூனையும் பிற பறவைகளும் முயலும். அந்த நேரத்தில் தாய்க்கோழி குரல்கொடுத்து தன் இளம் குஞ்சுகளை இறக்கைக் கொண்டு குடைபோல் சூடியபடி அமர்ந்து கொள்ளும். சிலவேளைகளில் அவைகளைப் பாதுகாப்பான இடத்தில் மறைய வைத:து கோபமான குரலில் கூச்சலிடும். பருந்து, கழுகு முதலியன அவ்விடத்திலிருந்து நீங்'கும் வரை தொடர்ந்து குரலைக் கொடுத்துக்கொண்டே இருக்கும். இன்றும் கிராமங்களில் இந்நிகழ்வைக் காணமுடிகிறது. பண்ணைக்கோழி வருகையால் இக்கோழி பராமரிப்பின்றி அழிந்து வருகிறது.

காட்டில் வாழும் கோழி இயற்கையில் விளைந்திருக்கும் கதிரைக் குத்தித் தின்னுகிறது. இல்லத்தில் வாழுகின்ற இந்த கோழி மக்கள் காய வைத்திருக்கும் திணையை உண்ணுகிறது. இதை பொருணாற்றுப்படை 'கானக்கோழி கதிர் குத்த

மனைக் கோழி திணைக் கவர'' (பொரு-222-223) என்கிறது. சங்க இலக்கியத்தில் பெரும்பாலும் மனைக்கோழியின் குரல் குறிப்பிடப் பெற்றுள்ளது. விடியற்காலையில் இக்கோழியின் குரலைக் கேட்டுத் தலைவி நடுக்கம் கொள்கிறாள். அவளுடன் கூடியிருக்கும் தலைவன் விடியற் பொழுதில் பிரிந்து செல்வான் என்று வருந்துகிறாள். இதைக் குறுந்தொகை

'குக்கூ என்றது கோழி அதன்எதிர்

துட்கென் றன்று என்தூஉ நெஞ்சம்'' (குறுந்-157)

என்று குறிப்பிடுகிறது. குரலுக்கு எதிர்குரல் கொடுக்கும் பழக்கம் கோழியிடமுள்ளது. யானையிள் பிளிறில் கேட்டுக் கோழியும் குரல் கொடுத்துள்ளதை

'முதல்வநின் யானை முழக்கம் கேட்ட

கதியிற்றே காரின் குரல்

குரல்கேட்ட கோழி குன்றதிரக்கூவ (பரி.8, 17-19 வரிகள்)

என்று பரிபாடல் கூறுகிறது.

சங்க இலக்கியத்தில் மனைக்கோழி போன்று குப்பைக்கோழி, குடுமிக்கோழி ஆகிய சொல்லாட்சிகளும் இடம்பெற்றுள்ளன. குப்பைக் கோழிகள்; போரிடும்போது தடுப்பார் இல்லாமையால் அதன் வலிமை அழியும் வரை போரிட்டு அடங்குகிறது. அதுப்போன்று தலைவியின் நோயும் தலைவன் வந்து போக்காமல் பசலைப்பெற்று நீடித்தது. மேற்காணும் கோழிகள் அனைத்தும் பெரும்பான்மை மருதநிலத்தில் காணப்படுகின்றன.

கானக்கோழி

கானக்கோழி காட்டுக்கோழி என்பர். இது கவர் குரலை உடையது. ஊதா நிறம் கலந்த கருப்பான காட்டக்கோழி காலை, மாலை இரு வேளைகளிலும் உணவைத் தேடுகிறது. புழு, பூச்சி, சிறிய பாம்பு, தானியம், இலந்தை , கிழங்கு முதலியவற்றை விரும்பி உண்ணும் . சனவரி முதல் மே மாதம் மவரையிலான காலத்தில் இணை சேருகிறது. 5முதல் 6வரையிலான முட்டை இட்டுப் பெண் காட்டுக்கோழி அடை காக்கிறது.

காட்டில் வாழும் கானவர்கள் உறங்கும்போது, வைகறைப்பொழுது வந்துவிட்டது என்பதை உணர்த்த கூவிற்று. இதைப் புறநானூறு

‘வட்ட வரிய செம்பொறிச் சேவல்

ஏனல் காப்போர் உணர்த்திய கூவம்

கானத் தோர்நின் தெவ்வர் நீயே’’ (புறம்-28,8-10)

என்று கூறுகிறது. காட்டுக்கோழி கூட்டத்தோடு வந்து திணைகளை கவர்ந்துண்ணும். மழைத்துளியில் நனையப்பெற்ற மலரை வெறுத்து மிளக்கொடி பிணைந்திருப்பதில் உறக்கம் கொள்கிறது. சூதாடுபவர்கள் விளையாடி விட்டுச் சென்ற குழியல் முட்டையிடுவதை

‘நரைமூ தாளர் நாயிடக் குழிந்த

வல்லின் நல்லகம் நிறையப் பல்பொறிக்

கான வாரணம் ஈனும்’’

என்று புறநானூறு குறிப்பிடுகிறது. காட்டுக்கோழி தன் பெடைகளைக் கவர்கின்ற இனிய குரலையுடைய சேவலின் பிடரில் தண்ணிய துனிகள் துளிரத்துக் காப்பது போல் தன்பால் அடைக்கலம் புக்க தலைவியின் பால் தலைவன் பெரிதும் தண்ணளியுடையன் என்பதைக்

‘கானக் கோழி கவர்குரற் சேவல்

. . . . . பூநாறு புறவில்’’

என்று குறுந்தொகைக் காட்டுகிறது. கிளிதின்று சிதறிவிட்டுச்சென்ற கதிரைக் காட்டுக்கோழிகள் அதன் கூட்டத்தோடு வந்து தின்றுள்ளன. இச்செயல் தலைவனால் நலன் உண்ணப்பட்ட தலைவியை, வேற்றுமணவரைவு நேர்ந்ததோடு ஒப்பிடப்பட்டுள்ளது. இதைச்

‘செவ்வாய்ச் சிறுகிளி. . . . . உயிர்த்தன’’ (அகநானூறு-192)

என்று அகநானூறு கூறுகிறது.

'இந்தியாவில் உள்ள காட்டுக்கோழிகளில் இருவகை உண்டு. சிவந்த நிறமுடையது வடநாட்டில் மிகுதியாகக் காணப்படும். தமிழ்நாட்டில் மிகுதியாகக் காணப்படுவது வெண்மையும் கருமையும் கலந்த பொறிகளை உடைய கோழியாகும். இதையே சங்க நூல்கள் சொல்லியுள்ளன.'' (பி.எல்.சாமி. சங்கஇலக்கியத்தில் புள்ளின விளக்கம்-ப.182)

கணந்துள் (ஆள்காட்டிக்குருவி)

கணந்துள் பாலைநிலப் பறவையாகவோ முல்லைநிலப் பறவையாகவோ இருக்கலாம். மஞ்சள்நிற ஆள்காட்டிக்குருவி பாலை நிலததிலும் சிவப்புநிற ஆள்காட்டிக்குருவி பசுமையான நிலத்திலும் வாழும் தன்மையுடையது. இப்பறவை நெடிய கால்களையுடையது. பாலை வழியில் வழிப்போக்கர்களுக்கும் பிற பறவைகளுக்கும் துணையாக இருந்துள்ளது. மறவர்கள் மறைந்திருந்து தாக்க இருப்பதைக் காட்டிக் கொடுத்துவிடும்-நற்-212, குறு-350

'ஆணும் பெண்ணும் மார்புத் தூவிகளை நனைத்து வந்து முட்டைமீது படுத்து முட்டைகளைக் கோடைவெயிலின் வெப்பத்திலிருந்து காக்கும் பழக்கம் கொண்டவை காட்டுக்கோழிகளாகும் .

(க. ரத்னம்-தமிழ்நாட்டுப்பறவைகள் ப-43)

அறிவியல் என்பது வாழ்க்கையோடு ஒன்றிய ஒன்று என்பதையும் சங்ககாலத் தமிழரின் வாழ்க்கையில் ஆதாரமாய் இருப்பதையும் இன்றைக்கு உணரமுடிகிறது. அவர்கள் மருந்தே உணவாகக் கண்டிருக்கிறார்கள். வீட்டுமரம், காட்டுமரம், கோயில்மரம் என தாவரங்களைப் போற்றி இருக்கிறார்கள். கட்டிடத்தில் கலையைக் கண்டார்கள். அடை, அணிகலன்களில் அற்புதம் சொன்னார்கள். எண்களில் எண்ணங்களைக் காட்டினார்கள். அளவையில் அறிவைச் சொன்னார்கள். பறவைகளில் வாழ்வியலைக் கண்டார்கள். அதனுடன் இயற்கை நிகழ்வை அறிந்தார்கள். எனவே சங்ககால மக்களின் அறிவியல் அறிவு இன்றைக்கும் வெவ்வேறு பரிணாமத்தில் பொருந்துவதும் தேவையாக இருப்பதும் வியப்புதான்.

பார்வை நூல்கள்

1. தொல்காப்பியம்-

2. சங்க இலக்கியங்கள்

3. பி.எல்.சாமி-சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்

4. க.ரத்னம்-தமிழ்நாட்டுப் பறவைகள். மெய்யப்பன்தமிழாய்வகம்

தமிழ்நாட்டுப் பறவைகள் என 328 பறவைகளை க. ரத்னம் புகைப்படத்துடன் வெளியிட்டுள்ளார்.

திணை இலக்கியங்களில் தாவரங்கள்

டாக்டர். இராஜா வரதராஜா, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்-613005

தமிழ் மொழியின் இலக்கியப் பரப்பில் காலத்தில் முற்பட்ட இலக்கியம் சங்க இலக்கியமாகும். பாண்டிய மன்னர்கள் தம் தலைநகரங்களில் தமிழ் பேரவை அமைத்துத் தமிழ்மொழியின் இலக்கியப் பேரவை அமைத்துத் தமிழ்மொழியின் இலக்கியப் பழைமையினைக் காத்தனர். இப்பேரவைப் புலவர்களால் பாடப்பட்ட இலக்கியங்களின் தொகுப்புச் சங்க இலக்கியம் ஆகும்.

சங்க இலக்கியம்- வேறுபெயர்கள்

உயர்தனி இலக்கியம், சங்க இலக்கியம், சங்கத்தமிழ், சங்க நூல், சங்கப் பனுவல், சான்றோர் செய்யுள், செவ்வியல் இலக்கியம், திணை இலக்கியம் , திணைப்பாட்டு , தொகையும் பாட்டும், பண்டைத்தமிழ், பண்டைய இலக்கியம், பதினெண் மேற்கணக்கு, பழந்தமிழ் இலக்கியம், பழைமை இலக்கியம் என்றெல்லாம் சங்க இலக்கியம் வழங்கப்படுகின்றது.

சங்க காலம் கி.மு. 500 முதல் கி.பி 100 என்பார் மு. வரதராசனார். இச்சங்க இலக்கியம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் இரு தொகுப்புகளாக அமைகின்றது.

எட்டுத்தொ்யில் குறுந்தொகை குறிப்பிடத்தக்க அக நூலாகும். அந்நூலின் தாவரச் செய்திகள் பற்றி இக்கட்டுரை அமைகின்றது.

குறுந்தொகை அறிமுகம்

குறுமை+தொகை-குறுந்தொகை. குறுமை-சிறிய, தொகை- தொகுக்கப்பட்டது. சிறிய அளவுடைய அடிகளால் அமைந்த பாடல்களின் தொகுப்பு என்பதால் 'குறுந்தொகை' எனப்பட்டது.

அடி அளவினாலும் வேறு சில ஏதுக்களாலும் எட்டுத்தொகை நூல்களில் முதலில் தொகுப்பட்டது என்பர்.

இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார். தொகுப்பித்தோன் உப்பூரிக்குடி கிழாராக இருக்கலாம் என்பர். இத்தொகையிலுள்ள பாடல்களை 205 புலவர்கள் பாடியுள்ளனர்.

402 பாடல்களுள் ஆசிரியர் பெயர் தெரியாப்பாடல்கள் 10 ஆகும். உவமையால் பெயர் பெற்றோர் 18 பேர். பாடல்களைப் புனைந்த 205 புலவர்களுள் 11 பேர் பெண்பாற் புலவர்கள் ஆவர். அதிக எண்ணிக்கையிலான பாடல்களைக் கபிலர் பாடியுள்ளார். இவருடைய பாடல்களாக 28 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

தாவரவியல்

மனிதர்கள் மற்றும் விலங்குகள் உயிர் வாழ்வதற்கான வாழ்வியல் தேவையான குறிப்பிடத்தக்க அளவு உயிர்வளி மற்றும் உணவு ஆகியவை தாவரங்களின் மூலமே கிடைகின்றது.

ஆஸ்திரிய நாட்டுத் துறவி கிரிகர் ஜோகன் மெண்டல் 1822-1884 , தன் மடத்தின் தோட்டத்தில் வளர்ந்த பட்டாணிக் செடியில் பைசம் சட்டைவம் பல வேறுபாடுகளை உடைய பண்புகளைக் கி.பி. 1865இல் கண்டறிந்தார்.

விதை வடிவம் , நிறம், மலரின் நிறம். கனி வடிவம், கனி நிறம், மலரின் அமைவிடம் தண்டின் உயரம் ஆகியவற்றைக் கண்டறிந்தார்.

இது தாவரவியல் 'தாவர அறிவியல்', தாவர உயிரியல் என்று அழைக்கப்படுகின்றது.

கி. பி. 19 ஆம் நூற்றாண்டில் விஞ்ஞானி ஜெகதீஸ் சந்திரபோஸ் 1858-1937 தாவரங்களுக்குரிய உயர்வை விஞ்ஞானக் கருவிகள் கொண்டு எடுத்துக்காட்டி மெய்ப்பித்தார்.

உயிரினப் பன்மயம்

பல்லுயிரியம், உயிர்ப் பல்வகைமை, உயிரியல் பல்வகைமை உயிரினப்பன்மயம் என்றெல்லாம் 'பையோ டைவர்சிட்டி' மொழிபெயர்க்கப்பட்டுகின்றது.

உயிரினப் பன்மயம் என்பது புவியியல் எல்லாப் பகுதிகளிலும் பல்வேறு சூழல்களில் வாழும் பலவகையான உயிரினங்களைப் பற்றி விவரிக்கப்பயன்படுத்தும் ஒரு சொல்லாகும்.

உயிரினங்களின் வடிவம், நிறம், பருமன், நடத்தை போன்ற தன்மைகளைக் கூறுதல் உயிரினப் பன்மயம் எனப்படுகின்றது.

உயிரினப் பன்மயத்தைச் சங்க இலக்கியங்களில் காணலாம்.

தொல்காப்பியம் கூறும் உயிரினப் பன்மையம்

தமிழர்கள் இயற்கையுடன் இயைந்து பண்டுதொட்டே வாழந்து வரும் சிறப்பிற்குரியவர்கள். புல், பூண்டு, செடி, கொடி, மரம் ஆகியவற்றோடு தமிழர்களுக்கு பலஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல தொடர்புகள் இருந்திருக்கின்றன. அவனுடைய சமூக , பண்பாட்டு நிகழ்வுகளில் கூட தாவரங்களின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்திருக்கின்றன.

இன்று தாவரவியல் என்று சொல்லப்படக்கூடிய அறிவியலில், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் தெளிவு பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள்.

தாவரங்களுக்கு உயிர் உண்டு என்பதை கிரிகர் ஜோகன் மெண்டல் கண்டுபிடிப்பதற்கு முன்பே தொல்காப்பியர் தொல்காப்பியத்தில்,

‘‘ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவதுவே அதனொடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே’’ -தொல் . பொருளதிகாரம் , 1526

என்றும்,

‘‘புல்லும் மரனும் ஓர் அறிவினவே
பிறவும் உலிவே அக்கிளைப் பிறப்பே’’-தொல். பொருளதிகாரம், 1527

என்றும் குறிப்பிடுகின்றார்.

உடம்பால் மட்டும் அறிவன ஓர் அறிவு உயிர்கள். அவை புல் , மரம், செடி, கொடி, தாவர இனங்கள் அனைத்தும ஆகும்.

<u>பண்டைக்காலத் தமிழர் வாழ்வியல்</u>

பண்டைத் தமிழர் வாழ்வில் முதற்பொருள், கருப்பொருள் , உரிப்பொருள் ஆகியவற்றை அமைத்து கொண்டனர்.

முதற்பொருள் நிலமும் பொழுதும் ஆகும். இன்றைய மண்ணியல் என்ற அறிவியல் ஆய்விற்கு முன்பே, தமிழர்கள் நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்தாகப் பிரித்தனர்.

கருப்பொருளைத் தொல்காப்பியம்,

‘‘தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை,
செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கரு என மொழிப’’ -தொல். பொருளதிகாரம்-964

என்று கூறுகின்றார். இதில் ‘மரம்’ என்ற தாவர இனம் சுட்டப்படுகின்றது.

நாற்கவிராச நம்பி,

‘‘ஆரணங்கு, உயர்ந்தோர், அல்லோர், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணா, பறை, யாழ், பண், தொழில் எனக் கருஈரேழு வகைத்து ஆகும்’’ -அகப்பொருள் விளக்கம், அகத்திணையியல் 19 என்று

பதினான்கு கருப்பொருளைச் சுட்டுகின்றார். இதில் பூ , மரம் என்ற இரு தாவர இனம் காட்டப்படுகினறது.

மலர்கள்

மனிதர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை பல நிலைகளில் தமிழர்களின் முக்கிய அங்கமாக மலர்கள் இருக்கின்றன. நறுமணம் உடைய மலரே சிறப்பிற்குரியது. இன்னா நாற்பதும்,

''நாற்றமிலாத மலரின் அழகு இன்னா''

என்கின்றது.

ஒவ்வொரு நிலத்திற்குரிய மலர்களை அகப்பொருள் விளக்கம் கூறுகின்றது.

குறிஞ்சி நிலம்- வேங்கைப்பூ, காந்தள் பூ

முல்லைநிலம்-குல்லைப்பூ, முல்லைப்பூ, தோன்றிப்பூ, பிடவம்பூ

மருதநிலம் -தாமரை பூ, கழுநீர்ப்பூ, குவளைப்பூ

நெய்தல் நிலம்- நெய்தல்பூ, தாழம்பூ,முண்டகப்பூ, அடம்பம் பூ

பாலை நிலம்- குராம்பூ, மராம்பூ

மார்கழி மாதத்தை 'பீடை மாதம்' என்பர், 'பீத மாதம்' என்ற சமஸ்கிருதச் சொல்லே 'பீடை' எனச் சிதைந்து விட்டது. 'பீத' என்னும் சமஸ்கிருதச் சொல்லுக்கு 'மஞ்சள்' என்று பொருள் மார்கழியில் மஞ்சள் வண்ணப் பூக்களைத் தரும் தாவரங்கள் அதிகமாகப்பூக்கும். அதனால் 'பீத மாதம் 'என்பர்.

தலைவனின் நாட்டு வளத்தைச் சொல்ல,

''கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே''-தேவகுலத்தார்-03

'கரிய கொம்புகளையுடைய குறிஞ்சிப்பூ' என்று கூறுகின்றது.

''அரும்பு அற மலர்ந்த கருங்கால் வேங்கை

மேக்கு எழு பெருஞ்சினை இருந்த தோகை

பூக்கொய் மகளிரின் தோன்றும் நாடன்''

-கொல்லன் அழிசி, 26என்றும்,

''. . . . . முன்றில்

நனை முதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்''-கோப்பெருஞ்சோழன்-53

என்றும் , நாட்டு வளத்தைக் கூறக் குறிஞ்சிப்பூ, வேங்கை மலர், புன்க மலர் ஆகியன

பற்றிக் 'கரிய கொம்புடைய குறிஞ்சிப்பூ'

'கரிய அடியை உடைய வேங்கை மரப் பூ'

‘புன்க மரத்தின் மலர்கள் உதிரிந்து பரந்த வெள்ளிய மணற்பரப்பு’

என்று நிறம், வடிவம் சுட்டப்படுகின்றது.

‘‘. . . . . மனை மரத்து

எல்லுறும் மௌவல் நாறும்

பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே’’

-பரணர்,19

என்பதில் முல்லை மலர் மனம் வீசும் கரிய கூந்தலை உடையவள் என்கிறது.

‘‘நரந்தம் நாறும் குவை இருங் கூந்தல்’’

-பனம்பாரனார்-52

நரந்தம் பூவின் மணம் கமழ்கின்ற கரிய கூந்தல்.

‘‘கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை

நாறு இதழ்க் குவளையொடு இடையிடுபு விரைஇ

ஐது தொடை மாண்ட கோதை போல

நறிய நல்லோள் மேனி’’-சிறைக்குடி ஆந்தையார்-62

காந்தள் மலர், முல்லை மலர், குவளை மலர் போல , நறுமணத்தை உடைய தலைவியின் உடல்

‘‘வேங்கையும் காந்தளும் நாறி

ஆம்பல் மலரினும் தான் தண்ணியளே’’-மோசிகீரனார்-சபு

வேங்கை மலரினது மணத்தையும், காந்தள் மலரினது மணத்தையும் ஒருங்கே பெற்றவள். ஆம்பல் மலரைக் காட்டிலும் குளிர்ச்சியை உடையவள்.

‘‘ மா என மடலும் ஊர்ப் பூ எனக்

குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப’’-பேரெயின் முறுவலார்-17

மடல் ஊரும் போது எருக்கம் பூவை ஆடவர் சூடினர்.

‘‘ஆம்பல் பூவின் சாம்பல் அன்ன’’ குறுந்-46 , ‘‘கருங்கால் வேங்கை வீ உகு துறுகல்’’ குறுந்-47 , ‘‘குவளையொடு பொதிந்த குலிவி நாறு நறு நுதல்’’ குறுந்- 59 , ‘‘வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில் குளவி மொய்த்த அழுகற் சில் நீர்’’ குறுந்-56

என்றெல்லாம் குறுந்தொiயில் மலர்களின் நிறம், வடிவம், மணம் , உறுப்புகள் தாவரவியல் முறையில் சுட்டப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

நறுமண சிகிச்சை என்பது இன்றைய விஞ்ஞான மருத்துவம், பண்டைய தமிழர் இதனை அறிந்திருந்தனர்.

மரங்கள்

ஒவ்வொரு நிலத்திற்குரிய மரங்களை அகப்பொருள் விளக்கம் விரிவாகக் கூறுகின்றது. அவை பின்வருமாறு

குறிஞ்சி நிலம்- சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில்

முல்லைநிலம்-கொன்றை, காயா, குருந்தம்

மருதநிலம்-காஞ்சி, வஞ்சி, மருதம்

நெய்தல் நிலம்- கண்டல், புன்னை, ஞாழல்

பாலைநிலம்- உழிஞை, பாலை, ஓமை, இருப்பை.

பண்டைய தமிழர் மரங்களைப் புனிதத் தன்மையோடு பார்த்தனர், பாதுகாத்தனர், இன்றைய வனவியல் கோட்பாடு சங்க காலத்திலேயே உருவாக்கப்பட்டு இருக்கின்றது.

மரத்திற்கு விளக்கத்தைத் தொல்காப்பியர்,

''புறக் காழனவே புல் என மொழிப

அகக் காழனவே மரம் என மொழிப''-தொல் . பொருளதிகாரம் -1585

என்ற நூற்பாவில் தருகின்றார்.

''தோடே மடலே ஓலை என்றா

ஏடே இதழே பாளை என்றா

ஈர்க்கே குலை என நேர்ந்தன பிறவும்

புல்லொடு வரும் எனச் சொல்லினர் புலவர்''-தொல் . பொருளாதிகாரம்-1586என்று,

புல்வகை சார்ந்த மர உறுப்புகள் கூறப்படுகின்றன.

''இவையே முறியே தளிரே கோடே

சினையே குழையே பூவே அரும்பே

நனை உள்உறுத்த அனையவை எல்லாம்

மரனொடு வரூஉம் கிளவி என்ப''-தொல். பொருளதிகாரம் ,1587

என்று, மர உறுப்புகளை கூறுகின்றது.

''குருகு உறங்கும் இன் நிழற் புன்னை'' குறுந்.5 , ''வாகை வெண் நெற்று ஒலிக்கும்'' குறுந்-7 , ''காஞ்சி ஊரன் கொடுமை'' குறுந்-10 ''தொல் மூது ஆலத்துப் பொதியில்'' குறுந்-15 , ''புது பூங் கொன்றைக் கானம்'' குறுந்-21 , ''கருங்கால் வேம்பின்'' குறுந்-24 ''வெண்கோட்டு அதவத்து'' குறுந்-24 ''மென் சினை யாஅம் பொளிக்கும்'' குறுந்.37 ,''செவ்வி மருதின் செம்மலொடு'' குறுந்.50 ,''மடவமன்ற தடவுநிலைக் கொன்றை'' குறுந்.66 , '' நறுமா

கொன்று ஞாட்பில் போக்கிய'' குறுந்.73 , ''பொரிதான் ஓமை வளி பொரு நெடுஞ்சினை'' குறுந்-79 , ''பசுமையான அரும்புகளை உடைய ஞாழல் '' குறுந்-81 , ''தீம் பழம் தூங்கும் பலவின்'' குறுந்-83 ,''மன்ற மரா அத்தபோம்'' குறுந்.87 , ''அருவி வேங்கைப் பெரு மலை நாடற்கு'' குறுந். 96

என்று புன்னை,வாகை, காஞ்சி, ஆலம். கொன்றை, வேம்பு, அத்தி, யா, மருதம், மாமரம் , ஓமை, ஞாழல், பலாமரம், வேங்கை போன்ற மரங்கள் பற்றிக் குறுந்தொகை கூறுகின்றது.

செடிகள்

செடிகள் பற்றிய செய்திகளும் குறுந்தொகையில் காணக்கிடக்கின்றன.

''அம்காற் கள்ளி அம்காடு இறந்தாரே'' குறுந்-16 , ''அணிற் பல் அன்ன கொங்கு முதிர் முண்டகத்து மாநீர்ச் சேர்ப்ப'' குறுந்.49 , ''கூன் முள் முண்டகக் கூர்ம பனி மாமலர்'' குறுந்-51 , ''குறுந்தாட் கூதளி ஆடிய நெடு வரை'' குறுந்.60 ,''பாீஇ வித்திய ஏனல்'' குறுந். 72 , என்று கள்ளிச் செடி , முள்ளிச்செடி, கூதளஞ்செடி, பருத்தி செடி பற்றியும் அறிய முடிகின்றது.

கொடிகள்

ஒன்றைப் பற்றி வளருபவை கொடிகள் ஆகும். அக்கொடிகள் பற்றி,

''கொழுங்கொடி அவரை பூக்கும்'' குறுந்-82

''கறிவளர் அடுக்கத்து இரவில் முழங்கிய '' குறுந்.90

''அரில் பவர்ப் பிரம்பின் வரிப் புற'' குறுந்.91

''மாரிப் பீரத்து அலர் சில கொண்டே'' குறுந்.98

''பரு இலைக் குளவியொடு பசுமரல் கட்கும்'' குறுந்.100

என்று அவரைக் கொடி, மிளகுக் கொடி, பிரப்பம்கொடி, பீர்க்கங்கொடி, மரலைக்கொடி பற்றிக் குறுந்தொகை காட்டுகின்றது.

புற்கள்

புற்கள் பற்றியும் குறுந்தொகை மூலம் அறிய முடிகின்றது. அவை பின்வருமாறு

''கான யானை கைவிடு பசுங்கழை '' குறுந். 54

''விசும்பு தோய் பசுங்கழைக் குன்ற நாடன் குறுந்.74

''தேம் பொதிக் கொண்ட தீம் கழைக் கரும்பின்'' குறுந். 85

''அருவிப் பரப்பின் ஐவனம் வித்தி '' குறுந்.100

மூங்கில், கரும்பு, மலை நெல் என்று புற்கள் பற்றி அறிய முடிகின்றது.

கனிகள்

கனிகள் பற்றிய செய்திகளும் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு

''கழனி மாஅத்து விளைந்து உகு தீம் பழம்'' குறுந்.08

''வேரல் வேலி வேர்க்கோட் பலவின்'' குறுந்.18

''ஆற்று அயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து

எழு குளிறு மிதித்த ஒரு பழம் போல'' குறுந்.67

''கலை தொட இழுக்கிய பூ நாறு பலவுக் கனி'' குறுந்.90

மாம்பழம், பலாப்பழம், அத்திப்பழம், வேப்பம் பழம் பற்றிக் குறுந்தொகையால் அறிய முடிகின்றது.

பிற தாவர செய்திகள்

''கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'' குறுந்.02

''பயிறு போல் இரை பைந் தாது'' குறுந்.10

தாதின் செய்த தண் பனிப் பாவை'' குறுந்.48

போன்ற அடிகளில் பூந்தாது பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது.

இவ்வாறு திணை இலக்கியமான குறுந்தொகையில் தாவரங்கள் பற்றிய செய்திகள் காணக்கிடைக்கின்றன. தாவரவியல் கூறுகின்ற வண்ணம், வடிவம், மணம் பற்றிக் கூறுகின்றது. இவையெல்லாம் நாட்டுச்சிறப்பு, தலைவியின் அழகு நலம், வர்ணனை என்ற நிலைகளில் பாடல்களில் புலவர்கள் கையாண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

உயிருக்கு ஆதாரமாக இருக்கும் தாவரங்கள் கலையியல் வழிச் சொல்லி, அதனைக் காக்கும் அறநெறியைப் பதிவுசெய்த நம் முன்னோர்கள் மாண்பு சிறப்புக்குரியது.

மக்கள் தகவல் தொடர்பியல்

கரு. நா. மணிமாறன்.

ஊடகவியலாளர், இராமநாதபுர மாவட்டம்

மனிதன் சமுதாயமாக வாழ முற்பட்டபோது முதல் தகவல் தொடர்பு முறை அமைந்திருக்க வேண்டும். மொழி தோன்றுவதற்கு முன்பே தகவல் தொடர்பு சைகைகளால் அமைந்திருக்க

முடியும். இவ்வகையில் தற்காலத்தில் பெருவளர்ச்சி பெற்றுள்ள மக்கள் தகவல் தொடர்பியல் துறை செம்மொழி இலக்கிய காலத்தில் ஓரளவிற்கு அச்சமுதாய தேவைக்கு ஏற்ப அமைந்திருந்தது. அரசன், அவனுக்குக் கீழ் அமைச்சர்கள், ஐம்பெருங்குழு, எண்பேராயம், வரி வசூல் செய்பவர்கள் என்று அரச சுற்றம் செம்மொழி காலத்தில் இருந்தது. இந்தச் சுற்றம் எடுக்கும் முடிவுகள், கட்டளைகள் மக்களுக்கு அறிவிக்கப்பெற்றன. அவை நடைமுறைக்கு வந்தன.

சங்க காலத்தில் முரசு அறைந்து செய்தி அறிவிக்கும் நடைமுறை இருந்துள்ளது. இது தவிர பறை முழக்குதல், முழவு கொட்டுதல், மணி அடித்தல் போன்ற செயல்பாடுகள் வழியாக மக்கள் அதிகாரக் குழுக்களுடன் இணைவு பெற்றனர். இவ்வடிப்படையில் சங்ககாலத்திலேயே தமிழர்கள் மக்கள் தகவல் தொடர்பியல் கூறுகளைச் சிந்தனைகளைப் பெற்றிருந்தனர் என்பது தெரியவருகிறது.

மக்கள் தகவல் தொடர்பியல் இன்று பல்வகை நிலைகளில் விரிந்து பரவி ஆழ் நிலையில் சமுதாயத்திற்குத் தொண்டாற்றி வருகிறது. ‘‘தொடர்பியல் உலகின் ஒரு மூலையில் நடைபெறும் நிகழ்வுகளையும் நம்மைச் சுற்றி நடைபெறும் நிகழ்வுகளையும் கண்முன் கொண்டு வந்து நிறுத்தி உலக நாடுகளை எல்லாம் அளவில் சுருக்கி நெருக்க வைத்துள்ளது. மக்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளவும் தொடர்பியல் கருவியாகப் பயன்படுகிறது”[1] என்று தகலியலுக்கான விளக்கம் தரப்பெறுகிறது.

‘‘தொடர்பியல் என்பது ஒரு செய்தியையோ, கருத்தையோ, நிகழ்ச்சியையோ, குறியீடுகளின் வழியாகவோ, வாய்மொழியாகவோ, படங்களின் வாயிலாகவோ ,மரபுச் சாதனங்கள் வழியாகவோ நவீன சாதனங்கள் வாயிலாகவோ மக்களுக்கு அறிவித்தோ, அறிவுறுத்தியோ, மகிழ்வித்தோ அவர்களுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்பு கொள்வது தொடர்பியலாகும்”[2]

இக்கருத்துகளின் அடிப்படையில் மக்களை ஒருசெய்தியின் வாயிலாகத் தொடர்பு கொள்வது தகவல் தொடர்பியலாகின்றது.

செம்மொழிக் காலத்தில் அகச் செய்திகளையும் புறச் செய்திகளையும் பகிர்ந்து கொள்ளும் நிலை இருந்துள்ளது.

---

[1] இராஜா வரதராஜா, மு.அருணாசலம், மக்கள் தகவல் தொடர்பியல்,ப. 13

[2] இராஜா வரதராஜா, மு.அருணாசலம், மக்கள் தகவல் தொடர்பியல்,ப14

அகச் செய்திகளும் தகவல் பரிமாற்றமும்

அகநிலையில் காதல் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளும் நிலைப்பாடு சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. தலைவன் வருகையை அறிவித்தல், தலைவன் பிரிதலை அறிவித்தல் போன்ற செயல்பாடுகள் தோழி வழி தொடர்பு படுத்தப்பட்டு தலைவியை அடைந்துள்ளன.

அறத்தொடு நிற்றல் என்ற துறையானது மகளின் காதல் அவளின் குடும்பத்தாருக்குச் சென்று சேரும் வண்ணம் தோழி, செவிலி, நற்றாய், தந்தை, தனையர் என்று கடத்தப்படுகிறது. தலைவி ஒருத்தி தலைவனைக் காதலிக்கிறாள் என்றால் அவளின் காதலைச் சமுதாயம் அறிந்து கொண்டால் அதற்குப் பெயர் அலர், அம்பல் என்பதாகும். தலைவி தலைவனின் காதலை ஏற்காமல் மறுக்கிறாள் என்றால் தலைவியின் உருவத்தை எழுதி பனையோலைக் குதிரையில் அமர்ந்து தலைவன் மடலேறுகிறான். இது நிறைவேறாத காதலை நிறைவேற்றிக் கொள்ளச் செய்யும் தகவல் நடைமுறையாகும்.

''கூன்முள் முண்டகக் கூர்ம்பனி மாமலர்

நூல்அறு முத்தின் காலொடு பாறித்

துறைதொறும் பரக்கும் தூமணற் சேர்ப்பனை

யானும் காதலென் யாயும் நனி வெய்யள்

எந்தையும் கொடீஇயர் வேண்டும்

அம்பல் ஊரும் அவனொடு மொழிமே.

(குன்றியனார், குறுந்தொகை, பாடல்எண். 51)

என்ற பாடலில் தலைவியின் காதலை தாய், எந்தை ஆகியோர் அறிந்து கொள்கின்ற நடைமுறை விளக்கப் பெற்றுள்ளது. அதுமட்டும் இல்லாமல் ஊரார்க்குத் தலைவியின் காதல்

தெரியவந்துள்ளது என்பதை அம்பல் ஊரும் அவனொடு மொழிமே என்ற அடி காட்டுகிறது. இவ்வகையில் மிக நயமாகக் காதல் நிலையில் தகவல்கள் கடத்தப்பெற்றுள்ளன.

சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்குத் தகவல் தெரிவிக்க மடல்கள் எழுதுகிறாள். அவை உரிய முறையில் கோவலனுக்குச் சென்று சேர்கின்றன. மாதவி எழுதிய இரண்டாம் மடல், கோவலனின் சூழலில் அவனின் பெற்றோருக்கு உரியாத மறுபடி அனுப்பப் பெறுகிறது. நயத்தக்க நாகரீகமான கடிதமாக அக்கடிதம் விளங்கியிருக்க வேண்டும்.

அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்

வடியாக் கிளவி மனக் கொளல் வேண்டும்.

குரவர்பணி யன்றியுங் குலப்பிறப் பாட்டியோ

டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது

கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்

பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி

(இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், புறஞ்சேரி இறுத்த காதை, 87-92)

என்ற நிலையில் தகவல் ஆவணமாக கடிதம் விளங்கியுள்ளது.

இவ்வகையில் அக நிலையில் பல தகவல் தொடர்பு நிலைப்பாடுகள் நடைபெற்றுள்ளன.

புறச் செய்திகளும் தகவல் பரிமாற்றமும்

மன்னனின் ஆணைகள், ஊர்முடிவுகள் போன்றவற்றை அறிந்து கொள்ள பொதுமக்கள் மன்றத்தில் பறை அறைதல், முரசு முழங்குதல் போன்ற செயல்பாடுகள் நடைபெற்றதாகச் செம்மொழி இலக்கியப் பதிவுகள் காட்டுகின்றன.

முரசறைதல்

முரசறைந்து செய்தி தெரிவிக்கும் நடைமுறை இருந்ததைப் பின்வரும் இலக்கியச் சான்றுகள் காட்டுகின்றன.

‘‘முரசு முழங்கு தானை மூவரும் கூடி

அரசவை இருந்த தோற்றம் போல” (முடத்தாமக் கண்ணியார், பொருநர் ஆற்றுப்படை, 53-54) என்ற பாடலடிகளில் முரசு முழங்கி செய்தி அறிவித்த நிலை உவமையாக்கப்பெற்றுள்ளது. புறனானூற்றில் நாள்தோறும் இயக்கப்படும் முரசு நாள் முரசு எனப்படுகிறது. (புற 161)

அரசு இழந்திருந்த அல்லற் காலை

முரசு எழுந்து இரங்கும் முற்றமொடு (நப்பசலையார், புறநானூறு, 174- 6-7

என்ற பாடலடிகளில் அரண்மனையின் முன்னால் காலையில் முரசு ஒலிக்கும் நிகழ்ச்சி நடைபெறுவதை உணரமுடிகின்றது.

மாசற விசித்த வார்புறு வள்பின்

மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை

ஒலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்

பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்

குருதி வேட்கை யுருகெழு முரசம்

மண்ணி வாரா வளவை யெண்ணெய்

நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை

அறியா தேறிய வென்னைத் தெறுவர

இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை

அதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்

அதனொடு மமையா தணுக வந்துநின்

மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென

வீசியோயே வியலிடங் கமழ

இவணிசை யுடையோர்க் கல்ல தவண

துயர்நிலை யுலகத் துறையு ளின்மை

விளங்கக் கேட்ட மாறுகொல்

வலம்படு குருசினீ யீங்கிது செயலே. (மோசிக்கீரனார், புறநானூறு,பாடல்எண். 50)

மேற்பாடலில் புலவர் ஒருவர் முரசு கட்டிலில் உறங்கிய நிலையில் அவரை வருத்தாது வாழவைத்த சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும் பொறை என்ற அரசனின் பெருந்தன்மை சுட்டப் பெற்றுள்ளது. இதில் அரச முரசிற்குச் செய்யப்பட்ட அலங்காரம் குறிக்கப் பெறுகிறது. எனவே அக்காலத் தகவல் தொடர்பு சாதனங்களுக்கு இருந்த பெருமை தெரியந்து கொள்ளத்தக்கதாக உள்ளது.

ஆடு_கள பறையின் அரிப்பன ஒலிப்ப - அகம் 45/2

ஆடு_கள பறையின் வரி நுணல் கறங்க - அகம் 364/3

அவை புகு பொருநர் பறையின் ஆனாது - அகம் 76/5

என்ற நிலையில் ஆடுகளத்தில் பறை அறையப்பெற்றமையும், பொருநர் பறை கொண்டு செய்தி சொன்னமையும் தெரியவருகிறது.

சிலப்பதிகார காலத்தில் தகவல் தொடர்பு சாதன வேகம் சிறப்புடன் இருந்துள்ளது. கோவலன் கொலையுண்ட செய்தி கண்ணகி இருக்கும் ஆயர்பாடிக்கு வந்து சேர்கிறது.

அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்

கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே

கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே

குரைகழல் மாக்கள் கொலை குறித்தனரே (இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், துன்பமாலை, 24-28)

என்ற நிலையில் கோவலன் கொலையுண்ட செய்தி கண்ணகியை வந்தடைகிறது. இதில் குறிக்ககத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த செய்தி மிகச் சுருக்கமாக அதே நேரத்தில் அரச ஆணையின் படி நடந்தை என்பதைத் தெரிவிக்கும் நிலையில், இருமுறை அறிவிக்கப்படுகிறது. இது தகவலின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இதுபோன்று வடநாட்டிற்குச் சேரன் செங்குட்டுவன் படையெடுக்கிறான் என்ற செய்தி அம்மண் சார்ந்தவர்களால் அறியப்பெற்று செய்தி கடத்தப்படுகிறது.

‘நாவல் அம் தண் பொழில் நண்ணார் ஒற்று நம்

காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா;

வம்பு அணி யானை வேந்தர் ஒற்றே

தம் செவிப் படுக்கும் தகைமைய அன்றோ?

அறை பறை’ என்றே அழும்பில் வேள் உரைப்ப- (இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், காட்சிக்காதை, 173-177)

என்ற அடிகள் பறை அறிவித்தால் போதுமானது. வட திசை மன்னர்களுக்கு இப்பறை செய்தி இங்கிருக்கும் ஒற்றர்கள் வழியாக அவர்களைச் சென்று சேர்ந்துவிடும் என்கிறார் அழும்பில் வேள் என்ற அரசு அதிகாரி.

இதன்வழி அரச செய்திகள் பறை அறைந்து தெரிவிக்கப்பெற்றன என்றும் பல நாட்டு ஒற்றர்கள் சேரநாட்டில் திரிதருகின்றனர் என்பதும் தெரியவருகிறது.

இவ்வாறு சிலப்பதிகார காலத்தில் தகவல் தொடர்பு சிறப்புற்று விளங்கியது எனலாம்.

தற்காலத்தில் நடைமுறையில் இருக்கும் பல தகவல் இயல் கூறுகள் பண்டைக் காலத்திலேயே தமிழகத்தில் இருந்தன என்பதற்கு மேற்காட்டிய சான்றுகள் ஓரளவினவே. இன்னும் இத்துறையில் நுழைந்து ஆராயத் தேட வாய்ப்பாக இக்கட்டுரை செய்திகளைத் தந்து தூண்டுதல் செய்துள்ளது.

வணிக மேலாண்மை

பேரா. க .இளையராஜா, துறைத்தலைவர், வணிகவியல் துறை, அழகப்பா பல்கலைக்கழக மாலை நேரக் கல்லூரி, தொண்டி

பொருள் ஈட்டும் நோக்குடன் தன்னிடம் உள்ள மூலப்பொருட்களை வைத்து தொழில் செய்யும் முறைமையே வணிகமாகும் என்பா.; சிறந்த வணிகத்திற்காண மேலாண்மை நடவடிக்கைகளை திருக்குறள் வழி ஒப்பிட்டறிவதே இக்கட்டுரையாகும்.

வரிச் கோண்ட்ஸ் என்ற அறிஞர் "மேலாண்மை என்பது நிருவனம் அல்லது அமைப்பின் இலக்குகளை அடைய மனிதஇ வளம், பொருள் வளம் மற்றும் நிதிவளம் ஆகியவற்றை சிறப்பாக பயன்படுத்தும் வழிமுறை" என்று வரையறுக்கிறார். மேலைநாடுகளில் மேலாண்மை என்ற துறை வளர்ச்சி பெற்று எறக்குறைய நூற்று இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து விட்டன. இந்நிலையில் வளரும் நாடுகளுக்கு இம்மேலாண்மை தத்துவங்கள் பரவி அவையும் அத்தத்துவங்கள் வழி நிற்க முயலுகின்றன. இவற்றோடு பழமையான மொழிகளில் இலக்கியங்களில் பழ மேலாண்மை கூறுகள் அமைந்து கிடைப்பதை இன்றைக்கு அறிய முடிகிறது. குறிப்பாக திருக்கயளில் பல்வேறு மேலாண்மைச் சிந்தனைகள் விரவிடக்கிடக்கின்றன.

மேரி பார்க்கர் ஃபாலட் (1868-1933), என்பவறே மேலாண்மை என்பதற்கான முதலாவது வரைவிலக்கணத்தை முன்வைத்தவராவர். இவரின் கருத்துப்படி மேலாண்மை என்பது "ஊழியர்களைக் கொண்டு செயல்களை ஆற்றுவிப்பது தொடர்பான செயற்பாடாகும்" இவரை தொடர்ந்து பலரும் மேலாண்மை என்ற சொல்லிற்கு பலவித வரை விலக்கணத்தினை அளித்துள்ளனர். இறுதியாக "மேலாண்மையாளர்கள் என்ன செய்கின்றாரோ அதுவே மேலாண்மை" என பொருட்கடுத்தியுள்ளனர். இவற்றுக்கு காரணம் நடப்புக் காலங்களில் மேலாண்மை வளர்ந்து வரும் ஒரு துறையாக இருப்பது மேலாண்மை என்பது செயல்படும் பணிகளுக்குத் தக்கவாறு வேறுபடுகிறது.

பொதுவாக நடைமுறையில் நிர்வாகமும் மேலாண்மையும் ஒரே கருத்தினில் புலங்கப்படுகின்றது, ஆயினும் நிர்வாகம் என்பது உண்மையில் மேலாண்மைக்குள் அடங்கும் ஒர் பணியாகும்.

மேலாண்மைக் கூறுகள்:-

1. திட்டமிடுதல்
2. மூலதனம்
3. தலைமை
4. கட்டுப்படுத்துதல்

5. ஒருங்கிணைத்தல் போன்றவை மேலாண்மையின் கூறுகளாகும்.

திட்டமிடுதல்:-

எதிர்காலத் தேவைகளை கருதி சில குறிக்கோளகளை நிர்ணயித்து, அவற்றை அடைவதற்கான செயல்முறைகளே திட்டமிடல் எனப்படும். ஒரு தொழில் தொடங்கும் முன் அதனால் வரும் ஆதாயத்தையும் நஷ்டத்தையும் ஆராய்ந்தறிந்து தொடங்குவதே சரியான திட்டமிடுதல் ஆகும் இதை,

“அழிவதூஉம் ஆவாதூஉம் ஆகி வழிபயங்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்” (குறள்-461) என்ற

வள்ளுவரின் குறள் வழி அறிய முடிகின்றது. ஒரு நாட்டை நிர்வகிக்க தேவையான மேலாண்மை திறன்களாக வள்ளுவர் கூறியவற்றை வணிகத்தடன் ஒப்பிட்டறியலாம். அவ்வாறு ,லாபத்தையம் நஷ்டத்தையும் ஆராய்ந்து தொடங்கிய பொழுதே அந்த வணிகத்தை வெற்றியுடன் செயல்படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டும் மாறாக எதையும் ஆராயாது தொடங்கி அதனால் வரும் பிரச்சனைகளைப் பிறகு பார்த்தக் கொள்ளலாம் எனக் கலங்கி நிற்பது தவறு என்றும் (குறள்-467). பிறகு சரிசெய்ய பலர் வந்து நின்னாலும் அதனால் எந்தப் பயனும் ஏற்படாது என்றும் (குறள்-468). வணிகத் திட்டமிடு;தலுக்காண இலக்கணத்தை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தெளிந்து விளக்கியுள்ளார் வள்ளுவர்;

ஒரு தொழிலைத் தொடங்கும் முன் அதனால் வரும் தடைகள், அத்தடைகள் நீக்கினால் ஏற்படும் இலாபம், தொடங்கம் தொழிலின் முடிவு பொன்ற அனைத்தையும் அறிந்து செய்ய வேண்டும் என்பதை,

“முடிவும் இடையூனும் முற்றியாங்கி எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்” (குறள்-676)

என்றும், யானையைக் கொண்டு யானையைப் பிடிப்பது போல் ஒரு செயலைக் கொண்டு மற்றொரு செயலை முடித்துக் கொள்ள வேண்டும் என்பதை,

“வினையால் வினையாக்கிக் கொடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று” (குறள்-678)

என்று பதிவுசெய்துள்ளார் வள்ளுவர்.

“காலம் பொன் போன்றது”

என்பது பழமொழி. காலத்தை தகுந்தமுறையில் பயன்படுத்துபவன் எவனோ அவனே ஆளும் தகுதி படைத்தவன் ஆவான்.

காலமறிந்து தொழில்தொடங்குபவன் உலகத்தை வெல்லும்

திறனாளன் ஆகிறான் என்பதையும (குறள்-484)

உலகையே தன் செயலால் (வணிகத்தால்) ஆள நினைப்பவன் காலம் பார்த்து அச்செயலை (அவ்வணிகத்தை) தொடங்க வேண்டும் என்பதையும் (குறள்-485)

நினைத்த தருணத்தில் தொழில் தொடங்குவது என்பது மூடர்களின் செயல் ஆகும். எத்தொழிலும் காலம் இடம் பார்த்து அமைத்தால்தான் அத் தொழில் சிறப்புடனும் வெற்றியுடனும் அமையும்.

பெறும் வணிகத்துடன் போட்டியிட முடியாத சிறு வணிகமாக இருந்தாலும் கூட தக்க இடத்தில் அவ்வணிகம் அமையுமானால் பெரும் வணிகத்தையும் வெல்லலாம். தகுந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட எவ்வணிகமும் அதனினும் உயர்வாக உள்ள வணிக அமைப்பை உடைத்தெரிய முடியும்.

“கால் ஆழ் களரில் நரியாடும் கண்ணஞ்சா

வேலாள் முகத்த களிறு” (குறள் - 500)

மூலதனம்:-

ஒரு தொழில் தொடங்க முக்கியமான கருவியாக அமைவது மூலதனமாகும். தான் அளிக்கும் மூலதனத்திற்கு ஏற்ற இலாபம் சரியாக வரவில்லை என்றாலும் செலவு அதிகமாக வராத அளவுக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

“ஆகாறு அளவிட்டியது ஆயினும் கேடில்லை

போகாறு அகலாக் கடை” (குறள்-478)

அது மட்டுமல்லாது கொடுத்த மூலதனத்தின் அளவிற்க்கு ஏற்பதான் செலவுச் செய்ய வேண்டும்.

“ஆளவறிந்து செலவு செய்யாதவன் வாழ்க்கை (தொழில்)

இருப்பதுபோல் தோன்றி மறைந்துவிடும்” (குறள்-479)

தலைமை (அ) கட்டுபடுத்துதல்:-

தலைமை என்பது ஒரு பதவி அல்ல. அது ஒரு பொறுப்பு. "இலக்கு நிர்ணயிக்க திட்டமிட ஒருங்கிணைக்க, ஊக்கம் தர, வழி நடத்த, கட்டுபடுத்த என்று ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து இருக்கும் இடங்களில் எல்லாம் தலைவர்கள் தேவைபப்படுவர";. ஒரு தலைவனுக்கு அழகு வேலையைப் பிரித்தளித்தல், ஜனநாயகப் பண்புடன் இருத்தல் தனித்து முடிவு எடுத்தல் என்பனாவாகும்.

வணிக மேலாண்மையில் ஒருங்கிணைப்புத் திறன் பெற்றவராய் அதன் உரிமையாளர் செயல்பட வேண்டும். வலிமையான வீரர் பலர் இருந்தாலும் தலைவர் இல்லாப்படை நிலைக்காது என்பது வள்ளுவர் வாக்கு. (குறள்-770) தொழிலாளார்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுத்து வேலைக்கு அமர்த்துவதும் தன்னுடைய அதிகாரத்தை அடுத்த நிலையில் உள்ளவர்க்கு அளி;த்து ஆணையிடுவது ஒரு வணிக தலைவனின் பணி ஆகும். வருவாயைப் பெருக்கி வணிகத்தை வளர்ப்பதற்கான தடைகளை ஆராய்ந்து அறிபவனாய் உள்ளவனே ஒரு சிறந்த வணிகத்தின் சிறந்த முதலாளி ஆவான்.

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை" (குறள்-512)

வணிக முதலாளி ஒருவரை வணிக மேற்பார்வையாளாராக நிர்ணயிக்கும் போது சிலவற்றை கவனிக்க வேண்டியது அவசியமானதாகும். நேர்மையானவனா? இவன் இத்தொழிலுக்கு ஏற்றவனா? என்றும் இச்செயலை இதனால் இவனால் மட்டும் தான் செய்ய இயலும் என பகுத்தாராய்ந்து அவனை பணி அமர்த்த வேண்டும் என்று

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாயிந்து
அதனை அவன்கண் விடல்"(குறள்-517)

அத்துடன் நில்லாது அவ்வுறுப்பினரை தினந்தோறும் தலைமை பொறுப்பில் இருப்பவர் மேற்பார்வை செய்ய வேண்டும். (குறள்-520) எனவும் நிறுவன பணி அமர்த்தும் முறைமையினை எடுத்தியம்புகிறது குறள்.

சுற்றத்தோடு கொடுத்துதவியும் இனிய மொழிபேசியும்

வாழ்பவனை அவன்சுற்றத்தார் சூழ்ந்திருப்பர் (குறள்-525)

அதைப்போல் தூண்களாய் இருக்கும் பணியாளர்களுக்கு அவர்களின் மணம் மகிழும் படி ஊதியம் கொடுப்பவனும் சினம் இல்லாதவனுமாகிய வணிக உரிமையாளரை பணியாளர்கள் சூழ்ந்திருப்பர். (குறள்:525-526).

தலைமை இடத்தில் இருக்கும் அரசன் இன்ன செயல் செய்ததால் அவர்கள் இத்தகுதியை உடையவர்கள் என முறையறிந்து பரிசு கொடுத்து அவர்களின் பாராட்டுதலைப் பொறுவான். (குறள்-528) அதே போல் பணியாளர்களின் உழைப்பிற்கேற்ப ஊதியம் கொடுக்க வேண்டும். தவறு செய்யும் பணியாளர்களைத் தண்டிக்கும் பொழுது அதிகம் தண்டிப்பது போல் காட்டி அளவுடன் தண்டிக்க வேண்டும் (குறள்-562)
மற்றவரின் வணிகச் சிறப்பினை அறிந்து வர ஒற்றன் ஒருவரை அனுப்பி அவனுக்கே தெரியாமல் அவன் கூறிய செய்திகள் அனைத்தும் சரியா என மற்ற ஒற்றனை அனுப்பி ஆராயந்து தொழில் ரகசியத்தை தெரிந்து கொள்ள வேண்டும். (குறள்-588)

மற்ற வணிகர்களின் வணிக நுட்பத்தை அறிந்து வர ஒற்றன்கள் மூவரை அனுப்ப வேண்டும் தனித்தனியாக அனுப்பிய மூவரும் ஒரே போல் செய்தியறிந்து கூறினால் மட்டுமே அதை சரி என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். (குறள்-)
விளம்பரம்:-
வணிக பொருட்களை விற்க விளம்பரம் முக்கியமானதாகும். கேட்பவரை கவரக்கூடியதாகவும் கேளாதவரை கேட்கத் தூண்டும் வகையிலும் வணிக தொடர்பான விளம்பரம் அமைய வேண்டும்.(குறள்-643)
சொல்வண்மை மிக்க விளம்பரங்ளை இவ்வுலகம் ஏற்கும் பார்க்கும்.(குறள்-648)
முடிவுரை:-
வணிக மேலாண்மை செயல்முறைகளை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எடுத்தியம்பி பழந்தமிழரின் நிர்வாக அறிவினை வெளிப்படுத்தி நிற்கிறது தமிழ் செம்மொழி இலக்கியமான திருக்குறள்

சங்க இலக்கியங்களில் கடலியல் சமூகம்

முனைவர். கா. பாஸ்கரன், இயக்குநர்,
அழகப்பா பல்கலைக்கழக மாலை நேரக் கல்லூரி, தொண்டி-623409

தமிழர்களின் உள்ளத்து உணர்ச்சிகளையும் வேட்கைகளையும் புலப்படுத்துவதற்கு இயற்கையைப் பின்னணியாகக் கொண்டு பாடப்பட்டவை சங்க இலக்கியங்கள். மக்கள் தங்கள் வாழிடங்களை ஐந்து வகை நிலங்களாகப் பாகுபாடு செய்துள்ளனர். வயல், காடு, மலை கடல், மணல்பகுதிகள் என ஐந்தாகப் பிரித்து, தனித் தனிப் பெயரிட்டு அழைத்தனர். தங்கள் வாழிடங்களுக்கேற்ப, அக்காலத்தில் காணப்பட்ட தாவரங்கள், விலங்குகள், பறவைகள் , தொழில் . விழாக்கள் , சடங்குகள் , உணவுமுறை போன்றவற்றை சங்கப்பாடல்களில் பதிவு செய்துள்ளனர். இப்பாடல்களில் மனித சமுதாயத்தின் உயர்ந்த கருத்துக்களையும் வாழ்வியல் விழுமியங்களையும் காணமுடிகிறது. சங்க அகப்பாடல்களில் குறுந்தொகையில் கடலியல் சார்ந்த வரலாற்றுச் செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. குறுந்தொகை நெய்தல் திணைப் பாடல்களில் இடம்பெறும் கடலியல் சமூக வரலாற்றை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

சங்ககால புலவர்கள் 473 பேரில் 205 பேர் குறுந்தொகையிலுள்ள 401 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களுள் 46 புலவர்கள் குறுந்தொகை நெய்தல் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இந்நூல் 72 நெய்தல் திணைப்பாடல்கள் உள்ளன. இவற்றில் மூன்று பாடல்களை 381, 313, 326 இயற்றிய புலவர்கள் பெயர் தெரியவில்லை. அம்மூவனாரே கடல் சார்ந்த சமூக வரலாற்றை மிகுதியாகப் பத்துப்பாடல்களில் பாடியுள்ளார். அம்மூவனர் கடல் சார்ந்த நிலப்பகுதியின் வரலாறு, அங்கு வாழும் விலங்குகள். பறவைகள், செடி, கொடிகள், தொழில், உணவு முறை, மக்களின் இயல்புகள் மற்றும் தலைவன் தலைவியின் திணை அகஒழுக்கம் குறித்த செய்திகளை மிகுதியாகப் பாடியுள்ளார். சங்க இலக்கியங்களாகத் திகழ்ந்த பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாகும். எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியவை புறச் செய்திகளைக் கூறுகின்றன. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநு}று, கலித்தொகை , அகநானூறு என்ற ஐந்தும் அகம் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. பரிபாடல் அகம் புறம் இரண்டையும் ஒருங்கே உணர்த்தும் நூலாகும். சங்க இலக்கியங்கள் மனித வாழ்வை முதன்மைப்படுத்தி பாடுகின்றன. இயற்கை அதற்கு உறுதுணையாய் இரண்டாம் இடமே பெறுகின்றது. சங்க இலக்கியத்தில் விண்ணைத் தொட்டு நிற்கும் மலைகளையும், நீண்ட கடற்பரப்பையும் , வயல்வெளிகளையும் , அடர்ந்த காடுகளையும் உணர்ச்சி ததும்ப வலிமைமிக்க கருவிகளாகப்

பயன்படுத்தியுள்ளனர். அகப்பாடல்களில் முதற்பொருளையும், கருப்பொருளையும் அறிவியல் பூர்வமாகப் பாடியுள்ளனர். இவை உரிப்பொருளுக்கு பின்னணியாக அமைந்துள்ளன.

இக்கட்டுரையில் குறுந்தொகை நெய்தல் நிலப்பாடல்களில் இடம்பெற்றுள்ள சமூக வரலாற்றை விரிவாக ஆய்வு செய்கிறது. தமிழர்கள் கடல் சார்ந்த வாழ்க்கையில் உயர்ந்த விழுமியங்களோடு வாழ்ந்துள்ளனர். பல நாடுகளோடு கடல் வாணிகம் நடத்துள்ளனர். சங்கப்பாடல்களும் சிலப்பதிகாரமும் இதனை மெய்ப்பிக்கின்றன. இங்கு கடல் வாணிகம், கடற்கரைத் தாவரங்கள், விலங்குகள் , கடல்வாழ் உயிரினங்கள், நெய்தல் நில மக்களின் வரலாறு, பிற கருப்பொருள் செய்திகள் ஆகியவை குறுந்தொகை பாடல்களோடு ஒப்புமைப்படுத்தி ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

கடல் வாணிகம்

தொல்காப்பியம் கடல் வாணிகத்தை "முந்நீர் வழக்கம் எனக் குறிப்பிடுகிறது. கப்பல் கட்டிய தச்சர் "கலம் புனர் கம்மியர்' எனப்பட்டனர். நாவாய், படகு, திமில், அம்பி போன்ற பெயர்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. பூம்புகார் , கொற்கை , முசிறி, தொண்டி ஆகியவை துறைமுகங்களாக விளங்கின. மேலை நாட்டக்கும் கீழை நாட்டுக்கும் தமிழக கப்பல்கள் சென்று வந்தன. சோழர் சிறந்த கப்பற்படையை நிறுவினான். செங்குட்டுவன் "கடல் மிறக் கோட்டிய செங்குட்டுவன் எனப்பட்டான் .

கரிகாலன், "நளியிரு முந்நீர் நாவாயோட்டி வளி தொழிலாண்ட உரவோன் உம்பல்" எனப் பாராட்டப்பட்டான். கி.மு.3000 த்துக்கு முன்பே சுமேரியாவோடு தமிழர்கள் வாணிகத் தொடர்பு வைத்திருந்தனர். பாரசீக வளைகுடா வழியே எகிப்துவோடு கடல் வாணிகம் செய்து அகில், சந்தனம், யானைத்தந்தம், ஆடைகள் போன்றவற்றை ஏற்றுமதி செய்தனர். கி.மு. 12ல் சாலமன் மன்னனுக்கு மயிற்தோகை, யானைத்தந்தம், வாசனைப்பொருட்கள் ஆகியவை விற்கப்பட்டன. பாரசீகம், ஆப்பிரிக்காவிற்கு எருதுகள் ஏற்றுமதியாயின. உரோமம் நாட்டில் தமிழரின் முத்துக்கள் விற்கப்பட்டன. கி.பி. 60 இல் வெளிவந்த "பெரிபுளூசு " எனும் நூல் தொண்டி, குமரி, முசிறி, கொற்கை, புகார் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. புகாரில் யவனர்கள் குடியேற்றம் நடைபெற்றதாக அ. தட்சிணா மூர்த்தி குறிப்பிடுகிறார். மேல்குறியீடு செய்யவேண்டும் கி.பி. 150 இல் வாழ்ந்த தாலமியின் கடல்சார் வாணிகக் குறிப்புகள் தமிழரின் உழைப்பை உறுதிப்படுத்துகின்றன.

முழங்குகடல் முத்தும், சங்கு வளையல்களும், பரதவரின் கூலமும், தீம்புளியும், வெள்ளுப்பும் விற்றுக் குதிரைகளை வாங்கி வந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. "கலங்கரை விளக்கம் '

பற்றிய குறிப்புகள் பெருபாணாற்றுப்படையில் உள்ளன. மீன்பிடித்தல், முத்துக்குளித்தல் உப்பு விளைவித்தல் போன்றவை நெய்தல் நில மக்களின் முக்கிய தொழிலாக விளங்கியது. தாழையை வேலியாகவுடைய நெய்தலங்கனால், புன்னைமரம், ஆம்பல் மலர், புகார் நகர வணிகம், கருங்குவளைமலர் நறுஞாழல் பூ, பவளம் போன்ற செய்திகளை சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. மேலும் கடற்கரைப் பரப்பில் பூக்கள் மலிந்த சோலை, இனிய கள்ளையுடைய நெய்தல் மலர், மாரிக்காலத்து மலர்கின்ற ம்ர்க்கம்பூ,சண்பகம், கருமுகை, வெண்பூ, மல்லிகை, தாழைமடல், வெட்டிவேர், குமிழமரம், ஆம்பல் மலர் குறித்த செய்திகளும் சிலம்பில் இடம்பெற்றுள்ளன. கடல் வாணிகம் தமிழருக்கு மிகவும் தொன்மையானது என்பதை மேற்கூறிய செய்திகள் அரண்சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

கடற்கரைத் தாவரங்கள்

கடல் பகுதியில் உப்புநீர் ஆழ்ந்துள்ளதால் இந்நிலத்திற்கே உரிய தாவரங்கள் குறுந்தொகையில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. நெய்தல்

நிலத்தின் கருப்பொருளாக தெய்வம், உணவு, விலங்குகள், மரம், செடி, கொடிகள், பறவைகள், தோற்கருவிகள், தொழில், ஊர், நீர், பூ போன்றவை முக்கியமானவை. இதனை இளம்பூரணர்,

“நிலமும் காலமும் பற்றி வருவன கருப்பொருள் என உணர்க” எனக் கூறுகிறார். சங்கப்பாடல்களில் அகம், புறம் என்ற பாகுபாட்டை உணர்வு நிலையில் மட்டுமின்றி உணர்வுகளோடு தொடர்புடைய சூழல்களை வகைப்படுத்திக் காட்டுவதற்கு பாடல்களில் இடம்பெறும் கருப்பொருள் பெரிதும் பயன்படுகிறது. கருப்பொருளின் பயன்பாடே உரிப்பொருளை விளங்க உதவுகிறது. எனவே புலவர்கள் கடல்சார் பகுதியில் காணப்படும், பூக்கள், மரம், செடி, கொடிகள், விலங்குகள், பறவைகள் போன்றவற்றைபாடலோடு இணைத்துப் பாடியுள்ளார். தமிழரின் தொன்மையான கடல்சார் அறிவை அறிந்து கொள்ள சங்க இலக்கியங்கள் உதவுகின்றன. கருப்பொருளில் ஒன்றான தாவரங்கள் குறுந்தொகையில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

நெய்தல் கொடிகள்

கடற்கரைப் பகுதியில் நெய்தல் கொடிகளும் அதில் நெய்தல் மலர்களும் வெள்ளம் பெருகுந்தோறும் நீரில் மூழ்கும். இதனை, “கூழை நெய்தல் 223.3 “இருங்கழி நெய்தல் 336.5 , நெய்தல் மாமலர் 336.5 என்று ஓத ஞானி , குன்றியன், அம்மூவனார் ஆகிய புலவர்கள் நுட்பமாகக் கூறியுள்ளனர்.

அடும்பு : - கடற்கரையில் பரந்து விரிந்து கிடக்கும் இக்கொடியை "அடப்பங்கொடி' எனக் கூறுவர். நெய்தல் மலரோடு அடும்பு மலரைச் சேர்த்துத் தொகுத்து மாலை அணிந்ததாக அம்மூவனார் கூறுகிறார்.

"அடும்பின் ஆய்மலர் விரைஇ நெய்தல்
நெடுந்தொடை வேய்ந்த நீர் வார் கூந்தல்" 401-1-2

என்ற அடிகள் உணர்த்தும். கடற்கரை மணல் மேடுகளில் அடுப்பங்கொடி படர்ந்து கிடந்தன என்கிறார் உலோச்சனார். இதனை,

"அடும்பு இவர் மணற்கோடு ஊர" 248.5

என்ற அடி புலப்படுகிறது.

முள்ளிச் செடிகள்

கடற்கரை மணற்பரப்பில் முள்ளிச்செடி உள்ளதாக பலபாடல்கள் குறிப்பிடுகின்றன. குறுந்தொகை நெய்தற் கழியில் முள்ளிச்செடிகள் நின்றதை அம்மூவனார் "அணில்பல் அன்ன கொங்கு முதிர் முண்டகத்து 49.1 எனச் சுட்டுவர். இச்செடி வளைந்த முள்ளைப் பெற்றிருக்கும் என்பதைக் குன்றியனார் "கூன்முள் முண்டகம்" 51.1 எனக் குறிப்பிடுகிறார். கடற்கரை மணற்பரப்பில் இந்நிலத்திற்குகேயுரிய குறிப்பிட்ட சில தாவரங்களே காணப்பட்டதை அறியமுடிகிறது.

நெய்தல் நில மரங்கள்

கடற்பரப்பில் முன்னர் காணப்பட்ட குறிப்பிட்ட சில மரங்களையும் குறுந்தொகை குறிப்பிடுகிறது. நெய்தல் சோலையில் புன்னைமரம், குரவமரம், ஞாழல் மரம், கடப்பமரம், பனைமரம் ஆகியவை இடம் பெற்றுள்ளது.

"இணர் அவிழ் புன்னை" 2993

"இன்னிழல் புன்னை" 5.2

"கருங்கோட்டுப் புன்னை " 123.3

"முள் இலைத் தடவு நிலைத் தாழை 219.6

"கொழுமடல் தாழை" 245.30

"கமழும் ஞாழல்" 310.6

"நறுவீ ஞாழல்" 318.2

"பல்வீ படரிய பசுநனைக் குரவம் 341.1

"நெடும் பனை" 248.5

என்ற தொடர்கள் நெய்தல் நில மரங்களைக் குறிப்பிகின்றன. கருப்பொருளில் மரங்களும் முக்கியப் பங்கு வகித்துள்ளன.

கடல்வாழ் பறவைகள்

கடற்கரைப் பரப்பில் பல பறவைகள் காணப்பட்டாலும், நெய்தற்கு உரிய பறவைகளாக அன்னமும், அன்றிலும் விளங்கும் என்பார் நச்சீனார்கினியர் கடற்காக்கையை நெய்தற்குரிய பறவையாக இளம்பூரணர் கூறுவர்.

அன்னம்

வானில் உயரமாகப் பறக்கக் கூடியது. வெண்ணிறமானது. நீரிலும் நிலத்திலும் வாழும் உடல் அமைப்பை உடையது. மேகம் மழைபொழிகிறது. வெண்ணிறத் தேரில் ஏறிக் கலங்கிய கடலிலுள்ள நீர்த்துளிகள் தேரின் சக்கரத்தை நனைக்குமாறு தலைவன் விரைந்து வந்தான். அதுவானத்தில் பறக்கும் அன்னப்பறவை மேலும் உயர்ந்து பறப்பது போல் காணப்படுகிறது என்பார் உலோச்சனார்,

“மின்னுச் செய் கருவிய பெயல் மழைதூங்க
மவிசும்பு ஆடு அன்னம் பறை நிவந்தாங்கு
பொலம்படைர்ப் பொலிந்த வெண்தேர் ஏறிக்
கலிங்கு கடற் றுவலை ஆழி நனைப்ப
இனிச் சென்றனனே” எனக் குறிப்பிடுகிறார்.

அன்றில்

கடற்கரைக் குழிகளில் மீன் முதலாயவற்றையுண்டு வாழும் பறவையாகும். பனைமரத்தில் கூடமைத்து வாழும் தன்மையது. சிவந்து வளைந்த வாயினை உடையது. இதன் கால் கரியது. ஒன்றைவிட்டு ஒன்றுபிரியாது வாழும் இயல்பின. பிரியின் பனைக்கூட்டில் அமர்ந்து நள்ளிரவில் தன் துணையை உணர்ச்சி மேலிட்டால் அழைக்கும்

“ கடல்படு அவிந்து கானல் மயங்கித்
துறைநீர் இருங்கழி புல்லென் றன்றே
மன்றலம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை
அன்றிலும் பையென நரலும்” 1771-4 என்ற அடிகள் புலப்படுத்தும்.

சிறுவெண் காக்கை –

கடற்கரை நெய்தல் கழியில் வாழும் ஒரு வகைக் காக்கை. இதன் கழுத்தின் கீழ் புறம் சிறிது வெளுத்தும் ஏனைய உடல் முழுவதும் கருமையாகக் காணப்படும். இதன் வாயின் உட்பகுதி செந்நிறமாக இருக்கும். வெண்காக்கைக் கூட்டம் நீரில் வேட்டையாடுங்கால் உடல் நனைந்து விடுகின்றன. அதனால் அக்காக்கை சோலையில் தங்கி இன்பம் பெறும் என்கிறார் இளம்பூதனார். அதனை,

“சிறுவெண் காக்கை செவ்வாய் பொருந்தோடு
எறி தனத் திவலை ஈரம் புறம் நனைப்ப
பனிபுலர்ந்து உறையும் பல்பூங்கானல்”
என்ற அடிகள் உணர்த்தும்.

மேலும் நெய்தல் நிலத்துக்குரிய பறவைகளாக கொக்கு, நாரை, குருகு, வெளவால் ஆகியவை குறுந்தொகையில் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளன.

கடல் வாழ் உயிரினங்கள்- முதலை , சுறா ஆகிய இரண்டையும் கடல் வாழ் விலங்காக நச்சினார்க்கினியரும், இளம்பூரணரும் கூறுவர். குறுந்தொகையில் முதலை, சுறா மீன்களுடன் அயிரை, ஆரல் போன்ற மீனினங்களும் குறிக்கப்பட்டுள்ளன. கடல் நீரில் வாழும் அலவன் பற்றிய குறிப்பும் மிகுதியாகக் காணப்படுகின்றன. கடலுள் மீன் பிடிக்கச்சென்ற எம் தந்தையை வலிமைமிக்க சுறாமீன் தாக்கியது. அதனால் ஏற்பட்ட புண் ஆறி மீண்டும் மீன் பிடிப்பதற்காக என் தந்தை கடலுள் சென்றுள்ளான் என்கிறார் தலைவி. இதனைக் கல்லாடனார்,

“வயச் சுற எறிந்த புண் தணிந்து எந்தையுயும்
நீலகுறப் பெருங்கடல் புக்கனன்” 269.3-4 எனக் கூறுவர். முதலை அகப்பட்டவறெ பற்றிக் கெதன்ற என்கிறார் கவைமகள் அதனை,

“கொடுந் தாள் முதலை கோள்வல் ஒற்றை
வழி வழக்கு அறுக்கும் கானலம் 324.1-2
என்ற அடிகள் சுட்டும்.

யாமம் , மாலை, கங்குல், வையுள் மாலை ஆகிய பொழுதுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

சமுதாயவியல்

முல்லைப்பாட்டில் மேலாண்மைச் சமுதாயம்

பேரா. ஈ. சுரேஷ், ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர், திருவாடானை

மேலாண்மை என்பதை ''மக்களை வைத்துச் செய்ய வேண்டியவற்றைச் செய்து முடிப்பது" என்று வரையறுக்கிறார் பார்கர் போலெட். வீரிச் கோண்ட்ஸ் என்ற அறிஞர் ''மேலாண்மை என்பது நிறுவனம் அல்லது அமைப்பின் இலக்குகளை அடைய மனித வளம், பொருள்வளம் மற்றும் நிதிவளம் ஆகியவற்றைச்ளைச் சிறப்பாகப் பயன்படுத்தும் வழிமுறை" என்று வரையறுக்கிறார். மக்களைக் கொண்டு ஓர் அமைப்பு தன் நோக்கத்தை வெற்றிகரமாக அடையும் செயல்திட்டம் மேலாண்மை என்ற பொதுக்கருத்தை இவ்விரு அறிஞர்களின் கருத்துகள் வழியாகப் பெறமுடிகிறது.

மேலைநாடுகளில் மேலாண்மை என்ற துறை வளர்ச்சி பெற்று ஏறக்குறைய நூற்று இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து விட்டன. இந்நிலையில் வளரும் நாடுகளுக்கு இம்மேலாண்மைத் தத்துவங்கள் பரவி அவையும் அத்தத்துவங்கள் வழி நிற்க முயலுகின்றன. இவற்றோடு பழமையான மொழிகளில், இலக்கியங்களில்; பல மேலாண்மைக் கூறுகள் அமைந்துகிடப்பதை இன்றைக்கு அறியமுடிகிறது. குறிப்பாகத் தமிழ் இலக்கியங்களில் பல்வேறு மேலாண்மைச் சிந்தனைகள் விரவிக்கிடக்கின்றன. பண்டை இலக்கியமான சங்க இலக்கியங்களில் பல மேலாண்மைக் கருத்துகள் தெரிவிக்கப்பெற்றுள்ளன. அவற்றில் முல்லைப்பாட்டில் காணப்படும் மேலாண்மைக் கூறுகளை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

முல்லைப்பாட்டு

போர் இலக்கியமாகத் திகழ்வது முல்லைப்பாட்டு ஆகும். போர் கருதி பிரிந்த தலைவனை எண்ணித் தலைவி வருத்தமுற்றுக் காத்திருக்கும் கற்பு முறைமையைக் காட்டுவது முல்லைப் பாட்டின் பாடுபொருள் ஆகும். இதனை எழுதியவர் நப்பூதனார். இவர் அகமரபினைப் பின்பற்றி முல்லைப்பாட்டினை எழுத வந்தாலும் அதனுடன் பல புற மரபுகளையும் இணைத்துப் படைத்துள்ளார். இப்புற மரபுகள் அரசன், அரசன் சார் பணியாளர்கள், அவர்கள் தம் இருக்கை, பணி போன்றனவற்றை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. அகமரபும் புறமரபும் இணைந்த நிலையில் காணலாகும் முல்லைப்பாட்டில் இரு பாடுபொருள்களுக்குமான சமத்தன்மை நிலைப்படுத்தப்பெற்றுள்ளது.

முல்லைப்பாட்டினை மையமாக வைத்து அக்கால நிலையில் ஓர் அரசனின் பாடி வீடு எப்படி இருந்தது என்பதை உணர்ந்து கொள்ளமுடிகின்றது. மேலும் அரசனின் நிர்வாகம், போர் நடைமுறை முதலானவற்றையும் இவ்விலக்கியம் வழி அறியமுடிகிறது.

பாடி வீடு

பாடி வீடு என்பது அரசனும் மற்றோரும் படைஞரும் தங்குவதற்காக அமைக்கப்பெறும் வீடு ஆகும். ஓரளவு வசதிகள், கடுமையாக பாதுகாப்பு அரண் ஆகியன கொண்டு விரைவில் கட்டி முடிக்கப்படும் தன்மை வாய்ந்தது இந்தப் பாடிவீடு ஆகும். இதனைக் கட்டக் கட்டிடத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படுவதில்லை. மாறாக படைவீரர்களே இதனை வடிவமைப்பார்கள்.

பாடி வீடு அமையப் பெற்ற இடம் ஓர் ஆற்றின் கரையாக விளங்குகிறது. ஆற்றின் அருகில் இருக்கையை அமைப்பது என்பது முக்கியமான இட நிர்வாகச் சிறப்பாகும். இக்கரையைச் செதுக்கி, சமப்படுத்தி, புதர்களை ஒழங்குபடுத்தி, பிடவச் செடிகளை வீழ்த்தி இப்பாடிவீடு அமைக்கப்பெற்றது. இந்த இடத்தை முதலில் வேடர்கள் தம் இருப்பிடமாக வைத்து வேட்டை நடத்தி வந்துள்ளனர். இந்த இடத்தில் தற்போது பாடி என்ற பாசறை அமைக்கப்பெற்றுள்ளது. இந்தப் பாடி வீட்டிற்குப் பாதுகாவலாக முட்களை வளைத்துக் கட்டியுள்ளனர். இதனை முல்லைப்பாட்டு பின்வருமாறு குறிக்கிறது.

“கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்
சேணாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை அருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுள் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி” (முல்லைப்பாட்டு 24-28)

என்ற இந்த விவரிப்பு பாடி வீட்டின் அமைப்பினைக் காட்டுவதாக உள்ளது.

இந்தப் பாடிவீட்டைச் சுற்றிலும் அரண் அமைக்கப்பெற்றுள்ளது. பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள வில் போன்ற போர்க்கருவிகளை நட்டு, அவற்றில் கயிறுகளைக் கட்டி, அவற்றில் திரைகளைத் தொங்கவிட்டு அவ்வீடு அமைக்கப்பெற்றிருந்தது. நடுநடுவே வேல்கள், கேடயங்கள் நிறுத்தப்பெற்றிருக்கின்றன.

பாடிவீட்டின் பக்கங்களில் விளக்குகள் தொங்கவிடப்பெற்றுள்ளன. அரசன் பாடி வீட்டின் மையப் பகுதியில் பல வீரர்களின் இருக்கைகளுக்கு நடுவில் ஒரு கூடாரத்தில் தங்கி இருக்கிறான். அவன் தங்கியுள்ள அறை இரு பகுதிகளை உடையதாக உள்ளது.

அரசனின் இருக்கையை பாதுகாவலர்கள் காத்துவருகின்றர். அவர்கள் குதிரைச் சவுக்கினை இடுப்பில் கட்டியிருக்கின்றனர். அதன்மேல் சட்டை அணிந்துள்ளனர். இவர்கள் கண்ணும் கருத்துமாகக் காவல் பணியைச் செய்துவருகின்றனர். இவ்வளவு நயமுடையதாகப் பாடி வீடு அமைக்கப்பெற்றிருந்தது.

அரச சுற்றம்

அரசனைச் சுற்றிலும் பலர் குழுமியிருப்பர். நாடாக இருந்தால் அமைச்சர், எண்பேராயம், ஐம்பெருங்குழு ஆகியோர் இருப்பர். இது பாடி வீடு என்ற காரணத்தினால் பொழுதறிந்து கூறுவோர், யானை வீரர்கள், மெய்க்காப்பாளர்கள், காவலர்கள், தீபமிடும் பெண்கள் என்று பலரும் குழுமியுள்ளனர். இவர்களின் இயல்புகளும் முல்லைப்பாட்டில் சுட்டப்படுகின்றன.

இத்தகைய நிர்வாக முறைமை "வளங்களை நிர்வகித்தல்" (யுடடழஉயவழைn ழக சநளழரசஉநள) என்ற வகைமையின் பாற்படுகிறது. "இருக்கும் வளங்களுக்கும் அளவுண்டு. ஓரளவோ அல்லது குறைவாகவோ இருக்கும் வளங்களை, தலைவன் மிகச்சிறந்த பலன் தரும் வகையில் பங்கீடு செய்து வெவ்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவது வளங்களை நிர்வகித்தல் எனப்படுகிறது" (சோம. வள்ளியப்பன், எத்தனை மேலாண்மை சூட்சுமங்கள் எங்கள் கம்பனிடம்,ப. 77). புதிதாக வந்துப் பாடி வீடு அமைத்த இடத்தில் கிடைத்த வளங்களைத் தன் வசதிக்கேற்ப பயன்படுத்தி அரசன் நிர்வகித்துக் கொள்கிறான். நீர் இருக்கும் இடத்தில் பாடிவீடு அமைக்கிறான். அதன் மையத்தில் இருஅறைகள் கொண்ட தலைவனுக்கான இடமாக அமைத்துக்கொள்கிறான். மற்றவர்கள் சூழ்ந்திருக்க பாடி வீடு அமைக்கப்படுகிறது. உடைத்த போர்க்கருவிகள் உபயோகமற்றவை என வீசப்படாமல் அவற்றைக் கொண்டு அரண்களை அமைத்துக்கொண்டான். இதன் காரணமாக வளங்களை நிர்வகிக்கும் தன்மை சங்க காலத்தில் இருந்தது என்பது உறுதியாகின்றது.

"கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப நற்போர்
ஓடாவல்வில் தூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறு வாங்கு இருக்கைப்
பூந்தலை குந்தம் குத்திக் கிடுகு நிரைத்து
வாங்குவில் அரணம் அரணம் ஆக" (முல்லைப்பாட்டு,37-43)

என்று உடைந்த பொருள்களை வைத்துப் பாடி வீடு அமைக்கப்பெற்ற முறைமை முல்லைப்பாட்டில் காட்டப்பெறுகிற:து. திருமணி விளக்கம் காட்டித் திண்ஞாண் எழினி வாங்கிய ஈரறைப் பள்ளி (முல்லைப்பாட்டு, 63-64) என்ற கவித்தொடர் மன்னன் இருந்த அறையின் சிறப்பினை; காட்டுகிறது. விளக்கு மன்னனின் சார்பு பெற்றதால் திருமணி விளக்காகின்றது. இவ்வகையில் இருப்பதைக் கொண்டு வசதிபட அமைத்துக்கொள்ளும் நடைமுறை இங்குப் பின்பற்றப்பெற்றுள்ளது என்பது தெரியவருகிறது.

அரசனின் தலைமைப்பண்புகள்

முல்லைப்பாட்டின் தலைவனாக விளங்கும் அரசன் தலைமைப் பண்பு மிக்கவனாக விளங்குகிறான்;. " தலைமை என்பது ஒரு பதவி அல்ல. அது ஒரு பொறுப்பு. தலைமைக்கு என்று சில தகுதிகள் உண்டு. நியமிக்கப்படுபவர்கள் முறைமையால் வந்த தலைவர்கள் ஆகிறார்கள். தானாக உருவாகிறவர்கள், மற்றவர்களால் தலைவராக ஏற்றுக் கொள்ளப்படுபவர்கள் முறைமை மீறி வந்தத் தலைவர்களாகின்றனர்" (முன்னது,ப. 25) என்று தலைவர்களுக்கான வகைமைகள் விளக்கப்படுகின்றன. முறைமையால் வந்த தலைவன் முல்லைப்பாட்டின் அரசன் ஆவான். ஆனால் அவன் தலைமுíறு தலைமுறையாக அரச மரபினை அறிந்து வளர்ந்திருக்கிறான். இதன் காரணமாக அவனுக்குப் போர்க்காலத்தில் மேலாண்மையைச் செய்து கொள்ள முடிகின்றது.

"இலக்கு நிர்ணயிக்க, திட்டமிட, ஒருங்கிணைக்க, ஊக்கம் தர, வழி நடத்த, கட்டுப்படுத்த என்று ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து இருக்கும் இடங்களில் எல்லாம் தலைவர் தேவைப்படுவார்" (முன்னது, 24) என்று தலைவரின் தேவையை மேலாண்மை அறிஞர்கள் வரையறுக்கின்றனர். போர் நடத்த, போர் வீரர்களை ஒருங்கிணைக்க, போரின் வெற்றி, அழிவு போன்றவற்றைக் கணக்கிட அரசனின் தலைமைப்பண்பு உதவி செய்கின்றது.

ஒரு தலைவனுக்கு அழகு வேலைகளைப் பிரித்தளித்தல், ஜனநாயகப் பண்புடன் இருத்தல், தனித்து முடிவு எடுத்தல் என்பனவாகும். இப்பண்புகளைப் பெற்றவனாக முல்லைப்பாட்டின் தலைவன் அமைந்துள்ளான். வெற்றிக்குப் பல சொந்தக்காரர்கள். தோல்வி ஒரு அனாதை என்பது நிர்வாக வழக்கு. தோல்வி அல்லது வெற்றி நடந்துவிட்டபின் அது யாரால் ஏற்பட்டது என்பதைத் தன்னைத் தாண்டி யோசிப்பதுதான் இயல்பு இந்நிலையில் முல்லைப்பாட்டின் தலைவன் வெற்றி பெறுகிறான். வெற்றி பெற்றபின் அவன் அவ்வெற்றியைத் தொடர்ந்துப் பலவகைகளில் சிந்திக்கிறான். இதனை முல்லைப்பாட்டு வெளிப்படுத்துகிறது.

"மண்டமர் நசையொடு கண்படை பொறஅது

எடுத்n;தறி எஃகம் பாய்தலிற் புண் கூர்ந்து

பாம்பு பதைப்பன்ன பரூஉக்கை துமியத்

தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்

சோறுவாய்த்து ஒழிந்தோர் உள்ளியும் தோல்துமிபு

வைந்நுனைப் பகழிமூழ்கலிற் செவிசாய்த்து

உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்" (முல்லைப்பாட்டு- 67-74)

என்ற நிலையில் தலைவனின் சிந்தனை அமைகிறது. தலைவன் உறக்கம் வராமல் பஞ்சணையில் படுத்திருக்கிறான். அவனின் நினைவுகள் போர்க்கள நிகழ்ச்சிகளைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. வேல்களால் புண்பட்ட ஆண் யானைகளையும், தும்பி;க்கை அறுபட்டுத் துயர்பட்ட பகைவரின் யானைகளையும் எண்ணி எண்ணி அவன் மனம் துன்பப்படுகிறது. மேலும் தன் இட்ட சோற்றுக்காகச் செஞ்சோற்றுக் கடன் தீர்க்க இறந்த படை வீரர்களை எண்ணியும் அரசனின் மனம் துன்பமடைந்தது. குதிரைகள் மேல் வேல்பட்ட காரணத்தால் அதன் வலியால் புல் உண்ணாமல் நிற்கும் குதிரைகள் அரசனின் மனதில் வருத்தத்தைத் தந்தன. இக்குறிப்புகள் அரசன் போரின் நினைவுகளினால் சூழப்பெற்றிருப்பதை வெளிப்படுத்துகிறது. அடுத்தநாள் திட்டமிடலுக்கு இந்நினைவுகள் அரசனுக்குத் துணைசெய்கின்றன.

அவனின் சிந்தனை கொண்ட மனத்தினைப் பின்வரும் கவியடிகள் படம் பிடித்து நிற்கின்றன.

"ஓருகை பள்ளி ஒற்றி ஒருகை

முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்து" (முல்லைப்பாட்டு 975-76)

என்ற அடிகள் அரசனது சிந்தனை நிலையை எடுத்துரைக்கின்றன. ஒருகையைத் தலையில் வைத்துக் கொண்டு ஒருகையை பஞ்சனையில் வைத்துச் சிந்தனை வயப்பட்டு அரசன் இருந்தான் என்று முல்லைப்பாட்டு கூறுகிறது. இரவுப் பொழுதில் அரசன் அன்றைய நடப்புகளை மீள்பார்வை செய்துள்ளான் என்பதை இப்பகுதி காட்டுகின்றது.

"பகைவர் சுட்டிய படைகொள் நோன்விரல்

நகைதாழ் கண்ணி நல்வலந்திருத்தி

அரசிருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை

இன்துயில் வதியுநன் காணாள் துயருழந்து" (முல்லைப்பாட்டு 75-80)

பகைவர் சுட்டிய படைகொள் நோன்விரல் என்பதே அடையப்பட வேண்டிய இலக்காகும். அதாவது தான் பகைவரை வெல்வேன் என்று சொன்ன சூளுரை அடையப் பட வேண்டிய

இலக்காக நிர்ணயிக்கப்பெற்றுள்ளது. இதற்கான திட்டமிடலை அரசன் தொடங்கிவிட்டான். அதனை அடைவதற்கு அவன் நாள்தோறும் திட்டமிடுகிறான்.

இவ்வகையில் முல்லைப்பாட்டின் தலைவன் போர் என்ற தன் செயல்பாட்டினை தக்க முறையில் நடத்திச் செல்லும் திறன் வாய்ந்தவனாக உள்ளான்.

வீட்டையும் நிர்வகிப்பவன்

போர்க்களத்தையும், போர் வீரர்களையும் நிர்வகித்த முல்லைப்பாட்டின் அரசன் வீட்டையும் திறம்பட நிர்வகிப்பவனாக உள்ளான். இவனின் வருகையை எதிர்நோக்கித் தலைவி காத்திருக்கிறாள். கார்காலத்தில் வந்துவிடுவேன் என்று சொன்ன தலைவன் தன் சொல் பிழையாது சரியான காலத்திற்கு அரண்மனை திரும்புகிறான்.

“எதிர் செல் வெண்மழை பொழயும் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடு பிறக்கும் ஒழியத்
துனைபரி துரக்கும் செலவினர்
வினை விளங்கு நெடுந்தேர் பூண்டமாவே” (முல்லைப்பாட்டு 100-103)

என்ற நிலையில் தலைவன் திரும்பி வரும் காட்சி முல்லைப்பாட்டில் காட்டப்பெறுகிறது. ஆறாக் காதலை உடைய தலைவி கடமை தவறாத தலைவன் இவர்களின் ஒப்பற்ற இணைவில் முல்லைப்பாட்டு இல்லறம் சிறக்கின்றது. சிறந்த திட்டமிடல், சிறந்த தலைமை, சிறந்த துணைமை என்ற நிலையில் நிர்வாகக் கூறுகளைக் கொண்ட தமிழ் இலக்கியமாக முல்லைப்பாட்டு விளங்குகிறது.

செம்மொழி இலக்கியங்களில் கடல் சார் உயிரியல்

பேரா. சு. இரவிக்குமார், கடலியல் துறை, அழகப்பா பல்கலைக்கழகம், (தொண்டி மையம்)

முன்னுரை :

கிழக்கு மேற்கு கடற்கரை பகுதிகள் மற்றும் அந்தமான், லட்சத்தீவுகள் கடற்கரைகள் உள்ளடங்கிய இந்திய கடற்பகுதி வெப்ப மண்டல பகுதியில் உள்ளடங்கியது.இந்திய கடற்கரையின் நீலம் சுமார் 7916 கி.மீட்டர்கள் ஆகும்.இதில்22.6 விழுக்காடு தீவு பகுதிகளைச் சார்ந்தது.இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலம் சுமார் 2மில்லியன் கி.மீட்டர்கள்.

உலகளவில் உள்ள கடல்களில்,இந்து மகாசமுத்திரம் சிறியது.அதில் பெரும் பங்கு வகிப்பது இந்திய கடல்தான். அரபிக் கடல், வங்காள விரிகுடா ,அந்தமான் கடல் மற்றும் லட்சத்தீவு கடல் ஆகியவை இந்திய கடலில் அடங்கும்.கட்ச் வளைகுடா,காம்பட் வளைகுடா மற்றும் மன்னார் வளைகுடா ஆகியவை இந்திய கடல்பகுதியில் உள்ள மூன்று முக்கிய வளைகுடாக்களாகும்.

சுமார் 980 கி.மீட்டர் நீளம் கொண்ட தமிழ்நாட்டின் கடற்கரை,இந்திய கடற்கரையின் மொத்த நீளத்தில் 17விழுக்காடு ஆகும்.இதில்,வங்காள விரிகுடா355 கி.மீட்டர் அளவிலும்,பாக் சலசந்தி,மன்னார் வளைகுடா மற்றும் அரபிக் கடல் ஆகியவை 625 கி.மீட்டர் அளவிலும் இடம் பெற்றுள்ளன.மணல் பாங்கான கடற்கரை,சதுப்பு நிலங்கள்,சதுப்பு நிலக்காடுகள் மற்றும் பவளப்பாறைகள் ஆகியவை தமிழ்நாட்டில் இடம் பெற்றுள்ள முக்கிய சூழ்நிலைகளாகும்.பவளப்பாறைகள்,இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் உள்ளடங்கிய மன்னார் வளைகுடா மற்றும் பாக் சலசந்தி பகுதிகள் இடம் பெற்றுள்ளன.இயற்கை மற்றும் இயற்கை வளம் பேணுதலுக்கான சர்வதேச ஐக்கிய கூட்டுறவு அமைப்பின்படி, கடல் ஏற்ற – வற்ற இடைப்பகுதி மற்றும் அது சார்ந்தநீர்ப்பகுதி, தாவர, விலங்கினங்கள், சரித்திர மற்றும் கலாச்சார விசேச அம்சங்கள் ஆகியவை சட்டங்கள் மற்றும் ஏனைய நற்பயனளிக்கும் முறைகள் மூலமாக முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதி மட்டும் பாதுகாக்கப்பட்டிருந்தால்,அது கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதி எனப்படும்.

கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகள்,கடல்சார் பல்உயிரினப் பேணுதலுக்கு மிகவும் முக்கியமாகும்.கிட்டத்தட்ட,12800-க்கும் அதிகமான உயிரினங்கள் இந்திய கடல்சார் உயிர்ப்பல்வகைமையில் இடம் பெற்றுள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளது.இந்தியாவில்,சில தேசிய பூங்காக்கள் மற்றும் சரணாலயங்கள் கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக 1980 மறறும் 1990க்கு இடைப்பட் பகுதியில் அறிவிக்கப்பட்டன. இயற்கை மற்றும் இயற்கை வளம் பேணுதலுக்கான சர்வதேச ஐக்கிய கூட்டுறவு அமைப்பின்படி,31 கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. இது, ஏற்கனவே கடற்கரை சார் மற்றும் அந்தமான் மற்றும் நிகோபார் தீவு பகுதியில் உள்ள 100-க்கும் அதிகமான பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் சில

பகுதிகள் கடல்சார் சூழ்நிலைகள் அல்லது அமைப்புக்களை உள்ளடக்கியோ அல்லது கடலை எல்லைகளாகக் கொண்டோ காணப்படுகின்றன.தமிழ்நாட்டில்,மன்னார் வளைகுடா தேசிய பூங்காவைச் சேர்த்து 3 பாதுகாக்கப்பட்ட பகுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் கடல் சார் உயிரினங்கள்

நீர்வாழ் உயிரினங்கள் பற்றிய பதிவுகள் ஏறத்தாள மூப்பத்தைந்து இடங்களில் காணப்படுகின்றன. அதிலும் மருதம்இ நெய்தல் திணைப்பாடல்களில் நீர்வாழ் உயிரின குறிப்புகள் அதிகளவிலும்இ குறிஞ்சிஇ முல்லை ஆகிய திணைகளில் மிக குறைவாகவும் உள்ளது. சங்ககால மக்கள் விலங்குகள்இ பறவைகள் போன்றவற்றுடன் தொடர்புகொண்டு வாழ்ந்துள்ளனர். அவற்றின் செயல்பாடுகளை உற்று நோக்கி சமூகத்தில் தேவையான இடத்தில் உவமையாகப் பயன்படுத்தியுள்ளனர். என்று குறிப்பிடுகிறார் அன்பு ஓவியா. மீன்கள் பற்றி சங்க இலக்கியங்களில் பல இடங்களில் குறிக்கப்படுகின்றன.

அகலா மீனின் அவிர்வன இமைப்ப - திரு 88

வைகுறு_மீனின் பைபய தோன்றும் - பெரும் 318

வைகுறு_மீனின் நினைய தோன்றி - நற் 48 /4

நிலை கிளர் மீனின் தோன்றும் நாடன் - நற் 393 /7

வான மீனின் வயின்_வயின் இமைக்கும் - குறு 150 /2

வைகுறு_மீனின் தோன்றும் - அகம் 17 /21

வான்_அக மீனின் விளங்கி தோன்றும் - அகம் 114 /11

வான மீனின் வயின்_வயின் இமைப்ப - அகம் 144 /17

விசும்பு அணி மீனின் பசும் புதல் அணிய - அகம் 235 /10

மதி சூழ் மீனின் தாய் வழிப்படூஉம் - அகம் 297 /15

மீனின் செறுக்கும் யாணர் - புறம் 7 /12

சங்க இலக்கியங்களில் நண்டு அலவன் என்ற பெயரில் பயல இடங்களில் சுட்டப்பெற்றுள்ளது. அலவன் (24)

அளை வாழ் அலவன் கண் கண்டு அன்ன - பொரு 9

கவை தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர் - சிறு 195

கவை தாள் அலவன் அளற்று அளை சிதைய - பெரும் 208

அலவன் ஆட்டியும் உரவு திரை உழக்கியும் - பட் 101

ஆழி மருங்கின் அலவன் ஓம்பி - நற் 11 /7

பல் கால் அலவன் கொண்ட கோட்கு அசாந்து - நற் 35 /4

ஆடு வரி அலவன் ஓடு_வயின் ஆற்றாது - நற் 106 /3

சேர்ப்பு ஏர் ஈர் அளை அலவன் பார்க்கும் - நற் 123 /10

அலவன் ஆடிய புலவு மணல் முன்றில் - நற் 239 /4

அலவன் ஆட்டுவோள் சிலம்பு ஞெமிர்ந்து எனவே - நற் 363 /10

பொன் வரி அலவன் ஆட்டிய ஞான்றே - குறு 303 /7

ஆய்ந்த அலவன் துன்புறு துணை பரி - குறு 316 /6

அலவன் சிறு_மனை சிதைய புணரி - குறு 328 /2

அளை வாழ் அலவன் கூர் உகிர் வரித்த - குறு 351 /2

அலவன் தாக்க துறை இறா பிறழும் - ஐங் 179 /2

இலங்கு வளை தெளிர்ப்ப அலவன் ஆட்டி - ஐங் 197 /1

அடும்பு அமல் அடைகரை அலவன் ஆடிய - பதி 51 /7

கையதை அலவன் கண் பெற அடங்க சுற்றிய - கலி 85 /6

ஆனா பரிய அலவன் அளை புகூஉம் - கலி 131 /18

உவறு நீர் உயர் எக்கர் அலவன் ஆடு அளை வரி - கலி 136 /2

கரை ஆடு அலவன் அளை_வயின் செறிய - அகம் 260 /5

திணி மணல் அடைகரை அலவன் ஆட்டி - அகம் 280 /3

இரும் சேற்று ஈர் அளை அலவன் நீப்ப - அகம் 350 /4

அலவன் காட்டி நல் பாற்று இது என - அகம் 380 /7

இவ்வாறு கடல் வாழ் உயிரினங்கள் பற்றிய பல செய்திகள் கிடைக்கின்றன. இக்குறிப்புகளை அடிப்படையாக வைத்து கடல் வாழ் உயிரினங்கள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளலாம்.

இனி தமிழகத்துக் கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் கடல் சார் உயிரின வளம் பற்றிய அடிப்படை செய்திகள் இங்குத் தொகுத்து வழங்கப்பெறுகின்றன. இச்செய்திகளின் புரிதலோடு மாணவர்கள் இப்பயிலரங்கைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

பவளப் பாறைகள் :

பவளப் பாறைகள் கடலின் மழைக்காடுகள் என்றழைக்கப்படுகின்றன. பவளப் பாறைகள் உயிர்கோளத்திற்க்கும் மனிதர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்.இவை மிகவும் அழகாக இருக்கும்.பவளப் பாறைகள் கடற்கரைக்குப் பாதுகாப்பைக்

கொடுகின்றன.உணவுக்காகவும் மருந்திற்காகவும் பயன்படும் மீன்கள்,சிப்பிகள் மற்றும் சங்குகள் போன்றவற்றிற்கு இவை புகலிடமாக இருக்கின்றன.

பவளப்பாறைகளின் வெளிப்புற அமைப்பு மற்றும் உடற்கூறு ஆகியவை சுவாரஸ்யமானதாகும்;.பவளப்பாறையின் மொத்த அமைப்பு கோரல்லம் என்று அழைக்கப்படுகின்றன.மேலும் உயிர்ப்பகுதியான பாலிப்புகள் கோரல்லைட் என்ற கடின பகுதியில் அமைந்துள்ளன.இந்த பாலிப்புகள் ஒருவித கோழையை சுரப்பதன் மூலம் தண்ணீரிலுள்ள நுண்ணுயிரிகளைப் பிடித்து உண்கின்றன.பாலிப்புகளுக்கும் ஸ{சாந்தெல்லே என்னும் நுண்ணுயிர்ப் பாசிகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு தான் பவளப் பாறைகளின் அதிக உற்பத்தித் திறனுக்குக் காரணமாகும்.

பவளப் பாறைகளின் இனப்பெருக்கம்,பாலினப்பெருக்கம் மற்றும் பாலில்லா இனப்பெருக்கம் என்று இருவகைப்படும். பாலினப்பெருக்கத்தில், பாலிப்புகள் முட்டைகளையும் விந்துக்களையும் உருவாக்குகின்றன.இந்த முட்டைகளும் விந்துக்களும் இணைவதால் பிலானுலா என்ற சிறிய பவளப்பாறை உயிரினம் உருவாக்கப்படுகிறது.இந்த பிலானுலா ஏதேனும் ஒரு கடினமான பரப்பில் ஒட்டி வளர ஆரம்பிக்கிறது.பாலில்லா இனப்பெருக்கத்தில் பவளப்பாறைகளின் துண்டுகள் உடைக்கப் பட்டால் அந்தத் துண்டுகள் தனியாக வளரும் திறன் கொண்டவை ஆகும்.

பவளப்பாறைகள் நான்கு வகையாகப் பிரிக்கப்படுகின்றன.அவை1.ஓரத்தில் வளருபவை,2.மேடை போன்ற அமைப்பில் வளருபவை,3.பவளத் திட்டுகள்,மற்றும்4.வட்ட வடிவில் வளருபவை.

ஓரத்தில் வளரும் பவளப்பாறைகள் சமீபத்தில் உண்டானவை ஆகும்.மிதவெப்ப மண்டல நாடுகளின் கடலோரங்களில் இவை காணப்படுகி;றன. இவை கடல் மட்டம் வரையும்,கடலை நோக்கியும் வளரச் கூடியவை.இவை பொதுவாகச் சிறிய இடங்களாகவும் மற்றும் கரைக்கு அருகிலேயே இருப்பவையாகும்.

மேடை போன்ற பவளப் பாறைகள் பாழுகாக்கப்பட்ட இடங்களில் வாழ்பவை ஆகும்.ஆனால் கரையிலிருந்து சிறிதளவு தூரம் அதிகமாகும்.இவை தட்டை போன்ற அமைப்போடு சிறிய ஏரிகளையும் உடையவையாகும்.

பவளத் திட்டு போன்ற பவளப் பாறைகள் கடற்கரைக்கு இணையாக வளருபவை.ஆனால் இவை ஓரு ஏரியின் மூலம் கரையிலிருந்து பிரிக்கப்படுகின்றன.ஓரத்தில் வளரும் வகையான பவளப் பாயைகள் காலப்போக்கில் கரையிலிருந்து ஒரு ஏரியினால் பிரிக்கப்பட்டு திட்டு அமைப்பு

போல் மாறக்கூடும்.ஆஸ்திரேலியாவில் உள்ள கிரேட் பேரியர் ரீ /ப் சுமார் 2300கி.மீ அளவானதாகும்.மேலும் 200000 சதுர கிலோ மீட்டர் இடத்தை இது ஆக்கிரமித்துள்ளது.

வட்ட வடிவில் வளரக்கூடிய பவளப் பாறைகள் பல திட்டுக்களால் சூழப்பட்டவை ஆகும்.திட்டுகளின் நடுவில் ஆழமற்ற மணற் பாங்கான மற்றும் பாதுகாக்கப்பட்ட ஒரு ஏரியும் இருக்கும்.திட்டுகளுக்கு இடையில் கடல் நீர் வந்து போவதற்கு ஏதுவாக சிறிய வாங்க்கால்கள் காணப்படும்.

கடல் மெல்லுடலிகள் :

உலகில் ஏறத்தாழ 30 மில்லியன் உயிரினங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.அவற்றுள் கடல் வாழ் உயிரினங்கள் மிக முக்கியமான ஒன்றாகும்.சமுத்திரத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடல்வாழ் உயிரினங்கள் காணப்படுகின்றன.அதாவது கரையோரப் பகுதியிலிருந்து ஆழ்கடல் பகுதி வரையிலும் மற்றும் கழிமுகப் பகுதியிலும் காணப்படுகிறது.நுண்ணுயிரிகள் முதல் மிகப் பெரிய திமிங்கலம் வரை கடல் நீரில் வாழ்கின்றன.உலகில் 12 உயிர்வளம் மிகுந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகத் திகழ்கிறது.பூமியின் மொத்தப் பரப்பின் 70 சதவீத கணக்கெடுப்பில் 40000 தாவர வகைகளும்,81000 விலங்கினங்களும் கண்டறியப்பட்டுள்ளது.இந்திய கடல் என்பது பெரிய கடல்பரப்பும் அத்துடன் தீவுகளையும் உடையது.அதில் சதுப்புநிலக்காடுகள்,பவளப்பாறைகள்,கழிமுகங்கள்,தீவுகள் ஆகிய இடங்களில் கடல் வளங்கள் உள்ளது.கடல் உயிரினங்கள் பலதரப்பட்ட குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.அறிவியல் தகவல்படி 23 வகையான உயிரின வகைகள் இந்தியக் கடற்கரையில் உள்ளது.உலகளவில், கடல் சூழ்நிலையில் பிரிதிநிதித்துவம் பெற்றிருக்கும் உயிரின வகைகளில்,ஆர்த்ரோபோடா இன வகைகளுக்கு அடுத்து கிட்டதட்ட 100000 உயிரினங்களுடன் மெல்லுடலிகள் இனம் இரண்டாம் இடம் வகிக்கிறது.இதில் சங்குகள்,சிப்பிகள் மற்றும் கணவாய் மீன்கள் ஆகியவை தலா 80,000, 10000 மற்றும் 5000 என்ற எண்ணிக்கையில் இடம்பெற்றுள்ளது.மெல்லுடலிகள்,நன்நீர்,கடல் மற்றும் நிலம் என அனைத்துப் பரப்புகளிலும் வியாபித்துப் பரவியுள்ளது.நமது நாட்டிலுள்ள அனைத்து கடற்கரைகளிலும் மெல்லுடலிகள் பயனள்ள மீன்பிடித் தொழிலாக உள்ளது.அத்துடன் உணவாகவும்,சுண்ணாம்பு உற்பத்திப் பொருளாகவும்,அலங்காரப் பொருட்கள் தயாரிப்பிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதில் 28 வகையான சிற்பிகளும்,65 வகையான சங்குகளும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.இந்தியாவில்,8.5 மில்லியன் ஹெக்டேர் அளவில் வளமான் உட்கடலோரப்பகுதி மற்றும் 1.7 மில்லியன் ஹெக்டேர் அளவில்,ஆற்று

முகத்துவாரங்கள்,கழிமுகப் பகுதி மற்றும் ஏரிகள் இருந்தாலும்,மொத்த மீன் உற்பத்தியில்,மெல்லுடலிகளின் பங்கு 1 அளவே உள்ளது.கணவாய் மீன்களே இந்த ஒரு சதவிகிதத்தை பெரிதளவில் பிரதிபலிக்கிறது.முக்கியமாக பச்சைச் சிப்பிகளைப் பற்றிக் குறிப்பிட வேண்டும்.மேற்குக் கடற்கரையில் இதன் ஆண்டு உற்பத்தி 2500 முதல் 4000டன் வரை வேறுபடுகிறது.

கடல் அட்டைகள் :

கடல் அட்டைகள் சீனர்களுக்கும்,கொரியர்களுக்கும் மற்றும் ஜப்பானியர்களுக்கும் மிகவும் பழக்கமான உணவாகும்.அவர்கள் கடல் அட்டைகளை பச்சையாகவோ,பதப்படுத்தியோ அல்லது காய வைத்தோ உண்ணுகிறார்கள்.சீன மற்றும் ஜப்பான் நாட்டின் கிடைக்கக்கூடிய கடல் அட்டையின் ஒரு இனம் மட்டும் 1கிலோவிற்கு அமெரிக்க டாலர் 400க்கு விற்கப்படுகிறது.இரத்தக் கொதிப்பு, தசைக் கோளாறு போன்ற நோய்களுக்கும் மற்றும் வீரியசக்தி விருத்திக்காகவும் கடல் அட்டைகள் மருந்தாக பயன்படுகின்றன.கடல் அட்டையின் உடம்பில் காணப்படும் விஷத்தன்மை கொண்ட பொருள்களிலிருந்து,புற்றுநோய் மற்றும் கட்டிகளைக் குணப்படுத்தும் மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.கொழுப்பு சத்து குறைந்து காணப்படுவதால் இதய நோயாளிகளின் உணவாக பயன்படுகின்றது.கடல் அட்டையிலிருந்து வெளியாகும் நூல் இழையங்களை உடலின் காயங்களுக்கும் மருந்தாக மீனவர்கள் பூசுவதுண்டு.மற்றும் கருப்புநிற அட்டையின் கத்திரிப்பூ நிறச்சாயத்தை மீன்களை மயக்கிப் பிடிப்பதற்க்கு மீனவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

உலகத்தில் உள்ள கடல்களில் சுமார் 1400 வகையான கடல் அட்டைகள் காணப்படுகின்றன.அவற்றில் 30 இனங்கள் மட்டும் சாப்பிடுவதற்க்கு உகந்தவை.இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள கடல்களின் சுமார் 90 இனங்கள் காணப்படுகின்றன.அவற்றில் பாதி அளவு ஆழ்கடலில் வசிக்கின்றன.சுமார் 20இனங்கள் பதப்படுத்தக்கூடய வியாபாரத்திற்க்கு பயன்படுத்தலாம்.கடல் அட்டைகளை பதப்படுத்தும் முறை சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பு சீனர்களால் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

கடல் குதிரை :

கடல் குதிரைகள் 40 மில்லியன் வருடங்களுக்கு முன்பே தோன்றியதாக கருதப்படுகிறது.கேஸ்டீரோஸ்டிபார்ம்ஸ் வரிசையில் சிங்நேத்திடே குடும்பத்தில் கடல்குதிரை,குழாய்மீன்கள் 215இனங்கள் 52 பேரினங்களின் கீழ் இடம் பெற்றுள்ளன.

குடல் குதிரைகளின் வகைப்பாடு மிகவும் சிக்கலானது மட்டும் இல்லாமல் இன்றளவிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.என்னும்,புரத்தோற்றம் மற்றும் மரபு ஆராய்ச்சிகள் உலகளவில் 32கடல் குதிரை இனங்கள் இருப்பதைச்சுட்டிக் காட்டுகின்றன.இதில் கிட்டதட்ட 70 சதவிகிதம்,இந்திய பசுபிக் பெருங்கடல் பகுதியில் காணப்படுகின்றன.கடல் குதிரையின் ஆயட்காலம் இன்றளவிலும் கண்டறியப்படவில்லை.ஆனால்,நடுத்தர இந்திய பசுபிக் பெருங்கடல் வாழ் கடல் குதிரைகளும் கிட்டதட்ட நான்கு வருடங்கள் இருக்கலாம் என மதிப்பிடபட்டுள்ளது.கடற்புள்,பவளப்பாறைகள் மற்றும் சதுப்பு நிலக்காடு பகுதிகள் கடல் குதிரையின் விரும்பத்தகுந்த வாழ்விடங்கள் ஆகும்.

<u>கடல் ஆமைகள்</u> :

ரெப்டைல் எனப்படும் ஊர்ந்து செல்லும் விலங்கின வகையை சார்ந்த கடல் ஆமைகள் பலநூறு வருடங்களாக இவ்வுலகில் வாழ்ந்து வருகின்றன.கடல் ஆமைகள் உணவுக்காகவும்,முட்டையிடுதலுக்காகவும் பல ஆயிரம் கிலோமீட்டர்கள் இடம் பெயர்ந்து செல்லக்கூடியவை.உலகளவில் 7வகை ஆமைகள் காணப்படுகின்றன.

கடல் ஆமைகள் கடற்கரையில் 50 முதல் 80 செ.மீ வரையிலான குழிதோண்டி அதில் 100 முதல் 150 முட்டைகளையிட்டு பின் அக்குழியை மூடிவிடுகின்றன.முட்டையிட மட்டுமே அவைகள் கடற்கரைக்கு வருகின்றன.முட்டைகள் பொறிப்பதற்க்கு 7 முதல் 10 வாரங்கள் வரை ஆகிறது.ஆண்,பெண் இன உற்பத்தியில் இக்குழிகளின் வெப்பநிலை பெரும்பங்கு வகிக்கிறது.ஆயிரம் ஆமைகளில் ஒன்றுதான் பல்வேறு தடைகளை தாண்டி முதிர்ந்த பருவத்தை அடைவதாக கூறப்படுகின்றது.பேராமை கடல் பாசிகளை உண்ணுகிறது.அழுங்காமை பவளப்பாறை பகுதிகளில் கடல் பஞ்சுகளை உண்ணுகிறது.பெருந்தலை ஆமை,நண்டுகள் மற்றும் மெல்லுடலிகளை உண்கிறது.கடலில் பல்லாயிரம் கிலோமீட்டர்கள் வெப்பம் மற்றும் மிதவெப்ப மண்டல பகுதிகளில் பயணம் செய்யும் ஆற்றல் பெற்ற கடல் ஆமைகள்,தங்கள் இன வளர்ச்சிக்கு கடற்கரையைச் சார்ந்தே இருக்க வேண்டியதுள்ளது.

<u>கடற்பசு :</u>

டுகாங் என்பதை பொதுவாகக் கடற்பசுக்கள் என்று அழைக்கப்படுகின்றன.இவை நீந்துவதற்கேற்ற உடலமைப்பையுடைய பழுப்புநிற பாலூட்டிகள்.கடற்பசுக்கள்,வாழ்பகுதி

மற்றும் ஒரு ஜோடி பக்கத் துடுப்புகளின் உதவியால் மெதுவாக நீந்திச்செல்கின்றன.இவை 3 மீட்டர் நீளம் மற்றும் 500 கிலோ எடை வரையிலும் வளரும்.இவற்றின் உடல் ஒழுங்கற்ற அமைப்புடன் சிறுமுடிகளை கொண்டும்,கடினமான தோல்களை உடையதாகவும் உள்ளது.இதன் வாய்ப்பகுதி கடற்புற்கள் மேய்வதற்க்கு வசதியாக கீழ்நோக்கிய வடிவில் அமைந்துள்ளது.ஆண் கடல்பசுக்களிடம் தந்தம் காணப்படுகிறது.

சதுப்புநிலக் காடுகள் :

நிலப்பரப்புக்கும் கடலுக்கும் அடையில் அமைந்துள்ள ஒரே வனம் சதுப்பு நிலக்காடுகள் ஆகும்.இவை உலகளவில் உள்ள வளம் மிகுந்த இயற்கை நிலைகளில் ஒன்றாகும்.இவை கடலோர உயிரப்;பல்வகைமையை அதிகரிக்கச் செய்யதோடு வனப்பெருட்களைக் கொடுப்பதிலும்,கடலோரத்தை பாதுகாப்பதிலும்,கடலோர மீன்வள ஆதாரத்திற்க்கும் உதவுகிறது.எந்த ஒரு வனப்பபுதிக்கும் இல்லாத சிறப்பம்சமாக கடுமையான சூழ்நிலைகளான உயிரிய உப்புத்தன்மை,வெப்ப நிலை,பலத்த காற்று மற்றும் சகதியான மற்றும் பிரான வாயுவற்ற மணலமைப்பு ஆகியவற்றை சமாலிக்கும் தக அமைப்பை பெற்றுள்ளது.இந்த பகுதியில்,இந்தியாவில் சதுப்பு நிலக்காடுகளின் இன்றைய பாதுகாத்தல் நிலை அவை எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் மற்றும் இயற்கையோடு ஒன்றிய வளர்ச்சிக்கு எதிரான சவால்களைச் சந்திக்கும் உத்திகள் ஆகியவற்றை பார்க்கலாம்.

இந்தியாவில் சதுப்புநிலக்காடுகள் 4461 சதுர கி.மீட்டர்கள் வரை பரவியுள்ளன.இவை கிழக்கு கடற்கரை பகுதியில் 59 சதவிகிதமும் மேற்க்கு கடற்கரை பகுதியில் 23 சதவிகிதமும் மற்றும் தீவு பகுதிகளில்; 18 சதவிகிதமும் பரவியுள்ளன.

இந்தியாவில் மூன்று வகையான கடலோர அமைப்புகளில் இவை வியப்பித்துள்ளன.அவையாவன:1.ஆற்றுக்கழிமுகப் பகுதி 2.கடல் கழிமுகம் ஆற்று முகத்துவாரம் மற்றும்,3.கடல் சூழ்ந்த தீவுப் பகுதிகள் ஆகியவையாகும்.

<u>கடற்பாசிகள் :</u>

கடல் பாசிகள் கடலில் வளரும் பூக்காத தாவர இனத்தை சேர்ந்;தவை இவைகள் இந்திய கடற்கரை பகுதிகளில் பாறைகள்,கற்கள் மற்றும் நுறைகற்களின்மீது வளர்கின்றன.கடற்பாசிகள் பாச்சை பாசிகள் பழுப்பு பாசிகள்ஈ,சிவப்பு பாசிகள் மற்றும் நீள பச்சை பாசிகள் என 4 வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் தமிழ்நாடு, குஜராத் கடற்கரை பகுதிகளிலும், மும்பை, இரத்தினகிரி, கோவா, கார்வார், விழிஞ்சம், வார்காலா-நிக்கோபார் தீவுகளிலும் கடற்பாசிகள் பெரும் அளவில் கிடைக்கின்றன.

உலகத்தில் 20000-க்கும் மேற்பட்ட பாசி வகைகள் உள்ளன.பழுப்பு பாசிகள் 1460 மில்லியன் டன்னும்,சிவப்பு பாசிகள் 261 மில்லியன் டன்னும் உலகத்தில் உள்ளன.இந்தியாவில் 434 வகை சிவப்பு பாசிகளும்,194வகை பழுப்பு பாசிகளும்,216 பச்சை பாசிகளும் காணப்படுகின்றன.இந்திய கடலில் உள்ள பாசி வளம் 870000டன் என கணக்கிடப்பட்டுள்ளது. அதில் சுமார் 22000டன் பாசிகள் ஒவ்வொரு ஆண்டும் அருவடை செய்யப்படுகின்றன.

<u>கடற்புற்கள் :</u>

கடற்புற்களானது கடலில் ஆழமற்ற இடங்கள் மற்றும் நதிமுகத்துவாரங்கள் ஆகியவற்றில் வளரும்,பூக்கும் தாவரங்கள் ஆகும்.உருவ அமைப்பில் கடற்புற்களானது நிலத்தில் வளரும் தாவரங்களுக்கு ஒத்ததாகும்.கடற்புற்களின் வேரானது அவற்றை ஓரிடத்தில் தாங்கி நிறுத்துவது மட்டுமின்றி நிலத்திலுள்ள சத்துக்களை உறுஞ்சவும் பயன்படுகின்றன.கடற்புற்களுக்கு பலமான தண்டுகளும் கிளைகளும் கிடையாது.

போரியல்

வே. எட்வின் ராஜா, முதுகலைத்தமிழாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, சண்முகநாதப்பட்டிணம், சிவகங்கை- 630411

போர் என்பது ஒரு நாட்டின் அழிவு. ஒரு இனத்தின் அழிவு. போரினால் பெற்றோர்கள் தங்களின் வாரிசுகளையும் குழந்தைகள் தங்களின் பெற்றோர்களை இழப்பதே உச்சகட்ட கொடுமை. அதனால் தான் இன்று உலகமெங்கும் உள்ள மக்கள் அமைதியை விரும்புகிறார்கள். ஆனால் இவையனைத்தும் தெரிந்தும் கூட உலகின் சில மூலைகளில் இன்றும் போர்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இரண்டாம் உலகப்போர் நடந்ததுஇதில் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு நகரத்தையே அழிக்கக்கூடிய அணுகுண்டுகள் பயன்படுத்தப்பட்டன. இது மட்டுமல்லாமல் கனரகப் பீரங்கிகள் இயந்திரத் துப்பாக்கிகள்நீர்மூழ்கிகள்வான்வழிப் போர்முறைகள் போன்றவைகளும் பயன்படுத்தப்பட்டன.

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வளர்ச்சி அடையாத கால காட்டமான சங்க காலத்தில் நம் தமிழ் மன்னர்கள் போர்கள் பல புரிந்து பல நாடுகளையும் கைப்பற்றியுள்ளனர்(2). சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் மன்னனின் போர்த்திறத்தையும் போரில் வெற்றிப்பெற்றதையும் பாடியிருக்கின்றனர். சில புலவர்கள் போரினால் ஏற்பட்ட கொடுமைகளை பாடியிருக்கிறார்கள். இன்னும் சிலரோ மன்னர்கள் பகையின்றி ஒற்றுமையுடன் வாழ பாடுபட்டிருக்கிறார்கள். சங்ககாலத்தில் நடந்த போர்களை பற்றி புலவர்கள் பாடிய சில பாடல்களைப்பற்றியும் போரை விரும்பாத சில புலவர்களை பற்றியும் விரிவாக அலசி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சங்க கால அரசர்கள்

சங்க கால தமிழகத்தை சேரர் சோழர் பாண்டியர் என்ற மூன்று பேரரசர்கள் ஆண்டனர்(3). இம்மூவரும் மண்ணாசையினாலும் தங்களுள் யார் வலிமை மிக்கவர் என்பதை காட்டுவதற்காகவும் அடிக்கடி போர் புரிந்தனர். மன்னர்கள் தங்களுக்கு என்று ஒரு அடையாளச் சின்னமாக ஒரு கொடியை வைத்திருந்தனர். சோழர்கள் புலிக்கொடியையும் பாண்டியர்கள் மீன் கொடியையும் சேரர்கள் வில்கொடியையும் வைத்திருந்தனர். சங்க கால மன்னர்கள் தங்கள் நாட்டை பகைவர்கள் கைப்பற்றாமல் இருக்க கோட்டையை எழுப்பியும் அந்த கோட்டையை சுற்றி அகழிகளையும் அமைத்தனர். அந்த கோட்டையின் வாயிலில் தங்களின் கொடியை பறக்க விட்டிருந்தனர். குறுநில மன்னர்களும் தங்களுக்கென ஒரு கொடியை வைத்திருந்தனர். இவர்கள் தாங்கள் சார்ந்த பேரரசுகளுக்கு கப்பம் கட்டி ஆட்சி புரிந்தனர். இந்த பேரரசுகளின் போர்களின் போது குறுநில மன்னர்களும் தாங்கள் சார்ந்த பேரரசுகளுக்கு ஆதரவாக போர் புரிந்தனர். [4]

அறவழிப்போரை குறிக்கும் பாடல்

சங்க காலத்தில் தமிழ் மன்னர்களின் போர்முறைகள் அறப்போர் முறை ஆகும். அதாவதுஅவர்களின் போர்களில் வஞ்சகம் சூழ்ச்சி என்று எதுவும் இல்லாமல் நேர்மையாக இருந்துள்ளது. காலையில் சூரிய உதயத்தின் போது முரசறைந்து போர் தொடங்கி மாலையில் சூரியன் அஸ்தமிக்கும் போது முரசறைந்து போர் நிறுத்தப்படும். முழு இரவு ஓய்வுக்கு பிறகு மறு நாள் மீண்டும் போர் தொடங்கும். இன்று போய் போர்க்கு நாளை வா என்று இராவணனை அனுப்பிய இராமனின்(5) உள்ளம் தமிழரின் போர்ப் பண்பாட்டில் கடைப்பிடிக்கப்பட்டது. மேலும் போரில் தோல்விகண்டு ஓடும் பகைவனின் மேல் ஈட்டிகளையும் வேல்களையும் செலுத்தாத அறநெறி இருந்தது. போரில் காயமடைந்தவன் பகைவனே ஆனாலும் அவனிடம் இரக்கம் காட்டும் பண்பு இருந்தது.

குடுமி என்ற இயற்பெயரை கொண்ட பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன் தான் போருக்கு போகும்போது முதலில் போரில் பங்குகொள்ளதாவர்களை விலகச் செய்த பின்புதான் அறப்போர் செய்யத் துவங்குவான். நெட்டிமையார் எனும் புலவர்புறநானூற்றில் ஒன்பதாவது பாடலாக இந்த மன்னனை பற்றி இவ்வாறு பாடியிருக்கிறார்.

“ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நுன்அரண் சேர்மின்’ என
அறத்துஆறு நுவலும் பூட்கை மறத்தின்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி!” - புறநானூறு: 09

அதாவது பசுக்களும் பசுவை போன்ற குணமுடைய அந்தணர்களும் பெண்களும் நோயுற்றவர்களும் பிதிர்க்கடன் ஆற்ற ஆண்குழந்தை இல்லாதவர்களும் கேளுங்கள் என்னுடைய அம்புகள் விரைவாக பாய உள்ளன. அதனால் பாதுகாப்பான இடத்துக்கு போய்விடுங்கள் என்று அறிவுறுத்திப் போர் புரியும் அறநெறியாளனாம் எம்முடைய வேந்தனாகிய குடுமி என்று பொருள் படுகிறது இப்பாடல்.

<u>போரின் அழிவை குறிக்கும் பாடல்</u>

இப்படி புகழ்ந்து பாடிய இதே புலவர் இந்த மன்னன் சிற்றூர்களின் மேல் பெரும்படை கொண்டு தாக்கியதானால் ஏற்பட்ட பேரழிவுகளைப் பார்த்து மனம் வருந்தி புறநானூற்றில் பதின்னைந்தாவது பாடலாக பாடியுள்ளார்.

“கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்

வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்

பாழ்செய்தனை அவர் நனந்தலை நல்லெயில்

புள்ளினமிமிழும் புகழ்சால் விளைவயல்

வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத்

தேர் வழங்கினை நின்தெவ்வர் தேஎத்துத்

துளங்கியலாற் பணையெருத்திற்

பாவடியாற் செறல் நோக்கின்

ஒளிறு மருப்பின் களிறு அவர

காப்புடைய கயம் படியினை .....” புறநானூறு: 15

பெருமானே! பகைவருடைய நல்ல கோட்டைகள் சூழ்ந்த அகன்ற தெருக்களை கழுதை ஏர் பூட்டி உழுது பாழ் செய்தாய். நெற்பயிர்கள் விளைந்துள்ள வயல்களில் தேர்களைச் செலுத்தி அழித்தாய். அவர்களின் காவல் மிகுந்த நீர்த்துறைகளில் உனது யானைகளை நீராட்டி அழித்தாய் என்று அம்மன்னன் சிற்றூர்களில் போர் நிகழ்த்திய கொடுஞ்செயல்கள் குறித்து வருந்திக் கூறினார்.

<u>போரின் வெற்றியை குறிக்கும் பாடல்</u>

சோழ நாட்டை ஆண்ட சோழன்குராப்பள்ளித்துஞ்சியகிள்ளிவளவன் எனும் நீண்ட பெயருடைய கிள்ளி வளவன் முதலில் கொங்கு நாட்டை வெற்றி கொண்டான். பிறகு சேரர்கள் ஆண்டு வந்த குட நாட்டை தாக்கி வெற்றி கொண்டான். கோவூர் கிழார் என்னும் புலவர் இந்த போர்க்களத்தை நேரில் கண்டு இம்மன்னனை புகழ்ந்து பாடி பரிசுகளைப் பெற்றார். இந்த பாடல் புறநானூற்றில் முன்னூற்றி எழுபத்தி மூன்றாவது பாடலாக உள்ளது.

“உருமிசை முழக்கென முரசம் இசைப்பச்

கணைக்காற் றெடுத்த கண்ணகன் பாசறை

இழிதரு குருதியோடு ஏந்திய ஒள்வாள்- (புறநானூறு: 373)

அதாவது உன்னுடைய இடமகன்ற பாசறையில் இடியின் ஓசையை போல் முரசு ஒலித்தது. போரில் பயிற்சி பெற்ற யானைகள் மேகங்கள் போல் காட்சி அளித்தன. தேர் குதிரைகள் அழிந்ததால் அவற்றிலிறிந்து சிதைந்த தூள்கள் மழைத்துளிகள் போல் விழுந்தன. போர்க்களத்தில் எய்யப்பட்ட அச்சம்தரும் அம்புகள் காற்றுப் போல் பறந்தன. சொறியும் குருதியோடு கையிலேந்திய ஒளிபொருந்திய வாள்களால் உடலைப் பிழிந்து எடுப்பதற்கு பிளந்ததுபோல் பகைவரைப் பிளந்ததால் உன் படைவீரர்கள் மகிழ்ந்தனர். போர் செய்வதை விரும்பி திரண்ட பெரும்படையால் கொங்கு நாட்டவரைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்த வெற்றியையுடைய வேந்தனே! என்று கிள்ளி வளவனை போர்க்களத்தில் கண்டு அவனைப் பற்றி இப்பாடலை பாடி பரிசில்களை பெற்றார்.

<u>மன்னர்கள் பகையின்றி ஒற்றுமையுடன் வாழ பாடுபட்ட புலவர்கள்</u>

சோழ அரசர்களான நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே போர் மூண்டது. சோழர் குலத்தில் தோன்றிய நீங்கள் இருவரும் போரிட்டு யாற் தோற்றாலும் அது சோழ குலத்துக்கு தோல்வியே ஆகும் என்று அவர்களுக்கு சோவூர் கிழார் எடுத்துரைத்த பாடல் தான் இந்த பாடல்.

“இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்

கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்

நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே - புறநானூறு: 45

இங்கு போர் செய்பவர்களில் யாரும் பனந்தோட்டால் ஆன மாலையை (சேரர்களுக்கான மாலை) யாரும் அணியவில்லை. கரிய வேப்பம்பூ மாலையை (பாண்டியர்களுக்கான மாலை) யாரும் அணியவில்லை. உன்னுடைய மாலை அத்திப்பூவால் தொடுக்கப்பட்டது. உன்னோடு போர் புரிபவனின் மாலையும் அத்திப்பூவால் தொடுக்கப்பட்டது தான். உங்கள் இருவரில் ஒருவர் தோற்றாலும் தோற்பது சோழனின் குடி தான். இப்போரில் நீங்கள் வெற்றி பெறுவது என்பது முடியாத காரியம். ஆதலால் உங்கள் செயல் உங்கள் குடிப்பெருமைக்குத் தான் இழுக்கு. இந்தப் போரைப்பார்த்து மற்றவர்கள் ஏளனமாகச் சிரிப்பார்கள் என்று இந்த பாடலின் மூலம் சோவூர்

கிழார் அறிவுரை வழங்கினார். இதனைக் கேட்ட நெடுங்கிள்ளி நலங்கிள்ளிக்கு விட்டுக்கொடுத்தான் என்று தெரியவருகிறது.

தகடூர் மன்னன் அதியமான் அஞ்சி மீது தொண்டைநாட்டு மன்னன் தொண்டைமான் இளந்திரையன் போர் புரிவதற்காக படைகளை பேருக்கும் வேளையில் ஈடுபட்டிருந்தான். ஒற்றர்கள் மூலம் தெரிந்துக்கொண்ட அதியமான் இந்த போரை நிறுத்துவதற்காக அவ்வையாரை தூது அனுப்பினான். தன் படைபலத்தை அவ்வையிடம் காட்டி அதன் மூலம் அதியமானை எச்சரிக்க நினைத்து அவ்வையை தன் படைக்கலத்தை காட்டினான் தொண்டைமான். அவ்வைக்கு அவனுடைய கர்வம் புரிந்தது. அவனுடைய கர்வத்தை அடக்குவதற்காக வஞ்சப்புகழ்ச்சியில் ஒரு பாடலை பாடினார்.

"இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்
பகைவர் குத்திக் கொடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில்!" - புறநானூறு: 93

அதாவது இங்கே ஆயுதங்கள் எல்லாம் பூவாலும் மயில் இரகாலும் அலங்கரிக்கப்பட்டு நெய் தடவி புதிதாக இருக்கிறது. ஆனால் அதியமானின் படைக்கலத்தில் இந்த மாதிரி எல்லாம் காட்சி இல்லை. அவன் ஆயுதங்கள் எல்லாம் பகைவர்களின் ரத்தம் தோய்ந்து அவர்கள் உடம்பிலிருந்த சதைகள் எல்லாம் ஆயுதங்களில் ஒட்டி கூர் மங்கி போய் கொல்லனிடத்தில் சரி செய்யவைக்கப்பட்டுள்ளன.

இப்படி அதியமானின் படைபலத்தையும் போர்களில் அவன் செய்த வீரத்தையும் வஞ்சப்புகழ்ச்சியின் மூலமாக தொண்டைமானுக்கு தெரிவித்தார் அவ்வையார். இந்த வஞ்சப்புகழ்ச்சியை தெரிந்துக்கொண்ட தொண்டைமான் அதியமானுடன் போரிடும் எண்ணத்தை விட்டுவிட்டு நட்பு பாராட்டினான்.

முடிவுரை சங்க காலத்தில் புலவர்கள் மன்னனை பாராட்டி பாடல்களை பாடி பரிசுகள் பெற்றிருந்தாலும்மன்னனுக்கே அறிவுரைகள் கூறும் அளவிற்கு அவர்கள் புகழ் உயர்ந்திருந்தது. மன்னர்களும் அவர்களின் அறிவுரைகளை கேட்டு பல போர்களை தவிர்த்திருக்கின்றனர். இக்கட்டுரையில் அவ்வாறு இரண்டு உதாரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இன்று அந்த மாதிரி புலவர்கள் இருந்து நாட்டை ஆள்பவர்களும் அவர்களின் அறிவுரைகளை கேட்டு நடந்தால் இன்றைய உலகம் ஒரு அமைதிப் பூங்காவாக திகழும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

சங்க இலக்கியம் உணர்த்தும் பகுத்தறிவுச் சிந்தனைகள்

ச. முருகேசன், ஆய்வுத் திட்ட உதவியாளர், UGCபெருந்திட்ட ஆய்வு,
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை.

பகுத்தறிவுக் கொள்கை இன்றைய காலத்தில் தோன்றியவை அல்ல மனிதன் என்று சிந்திக்கத் தொடங்னானோ அன்றே உண்டானவையாகும்.பகுத்தறிவு என்ற பெயர்தான் பிற்காலத்தில் வந்ததே தவிர அதன் பொருண்மை அல்லது அதன் பொருள் எனப்படும் பகுத்து ஆராயும் முறை சிந்திக்கத் தொடங்கிய நாளில் இருந்தே இருந்து வருகின்றது. ஒவ்வொரு காலகட்டத்திலும் மனிதனை நல் வழிப்படுத்த சில பகுத்தறிவுக் கூறுகள் எடுத்துக் கூறபட்டன.அந்த வழிமுறையில் பகுத்தறிவுக் கொள்கையினை மனிதனுக்கு உணர்த்துவதில், சங்க இலக்கியத்தின் பங்கு என்ன என்பதனை இக்கட்டுரை ஆராய்ந்து விளக்குகிறது.

மனித மூளையின் ஆற்றலினால் தோன்றுகின்ற சிந்தனா சக்தியின் விழைவால் அவனது மனதிலே நன்றும் தீதுமாய் எண்ணங்கள் கலந்திருக்கின்றன.இவற்றுள் நல்லது எது தீயது எது என அறியும் நுண்ணியல் ஆற்றலே பகுத்தறிவாகும். எந்த ஒரு கொள்ளைகையையும் கோட்பாட்டையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வதோ அல்லது ஏற்காமல் விட்டு விடுவதோ பகுத்தறிவு ஆகும். எந்த ஒன்றின் உண்மைத் தன்மையை அறிவதுதான் பகுத்தறிவு.இது ஏன் என்ற கேள்வி கேட்கப்படுவதன் மூலமே தெளிவுபடும்.

பகுத்தறிவு

பகுத்தறிவு என்பது ஒன்றினைப் பகுத்து அறிதல் எனப் பொருள்படும்.சிந்திக்கும் திறன் பெற்ற மனிதன் எந்த ஒரு செயலையும் ஏன் என்று கேள்வி கேட்டு தங்களின் ஐயத்தினைப் போக்கி அது நல்லதா?கெட்டதா என்பதனை அறிந்து செயல்பட வேண்டும். மனிதன் ஒரு சமூக விலங்காகக் கூறப்பட்டு(Human is a Social Animal) இருந்தாலும்; அவன் சிந்திக்கக் கூடிய சமூக விலங்காவான்.இதனை உணர்ந்துதான் தொல்காப்பியர் பிற உயிர்களை விட, மனிதனுக்கு ஆறாவது அறிவு கொடுத்து விளக்கியுள்ளார்.மக்களில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனும் வேறுபாடு கிடையாது.அனைவரும் ஒத்த சமநிலையினை உடையவர்களே.“சாதி, செல்வம், அதிகாரம் ஆகிய அனைத்திலும் யாரும் உயர்ந்தவர்கள் இல்லை என்பது பெரியாரின் கருத்தாகும்”.(பெரியார், குடியரசு இதழ், ஆகஸ்டு, 1929).இக்கருத்தின் முன்னோடியாக சங்க இலக்கியப் பாடல் அமைந்துள்ளது.பெரியாரின் கருத்துக்கு முன்பே சங்க இலக்கியத்தில் பகுத்தறிவு குறித்து

விளக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் நிகழும் நிகழ்வினை மனிதன் ஆராய்ந்து தெளிவு பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு காலகட்ட இலக்கியங்களும், சமய பரப்பாளர்களும், சமூக சீர்திருத்தப் பெரியோர்களும் தங்களது கருத்துக்களைக் கூறி வந்தனர்.கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழகம் வந்த சீர்திருத்தக் கிறித்தவம் கல்வி கற்றல், கணவன் இறந்த பின்பு கைம் பெண்களை மறு திருமணம் செய்ய ஊக்குவித்தல், குழந்தைத் திருமணத்தைத் தடுத்தல் எனப் பல்வேறு கருத்துக்களைக் கூறி மனிதனை நல்வழிப் படுத்தியது குறிப்பிடத்தக்கது.மூட பழக்க வழக்கங்களில் இருந்து தமிழர்களை மீட்டெடுத்ததில் பல்வேறு மதங்களின் பங்களிப்பு இருந்தன என்பதனை அறிய முடிகிறது.இதன் அடிப்படையிலேயேபத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் இவற்றை எல்லாம் கடந்து பலர் அறிய பகுத்தறிவுக் கருத்துக்களை மனிதனுக்கு உணர்த்திய மாண்பு பகுத்தறிவுப் பகலவன், தமிழகத்தின் விடி வெள்ளி எனப் பெயர் பெற்ற தந்தை பெரியாரைச் சாரும்.

சுயமரியாதைக் கொள்கை

மனிதன் சுய மரியாதையுடன் அதாவது தன்மானத்துடன் வாழ வேண்டும் என எண்ணினான்.மனிதனின் வாழ்வியல் உரிமைகளை மீட்டெடுப்பதற்காக பெரியார் 1925 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தினைத் தொடங்கினார்.இவற்றில் பெண்கள் விடுதலை, ஏற்றத்தாழ்வு இல்லாத கல்வி, பிற பொது உடமைத் தத்துவங்களும் கூறப்பட்டு உள்ளன. பகுத்தறிவு என்பது பிறர் நினைப்பது போன்று கடவுள் மறுப்புக் கொள்கை மட்டுமல்ல. சமமான கல்வி, அனைவருக்கும் கிடைக்கக் கூடிய நீதி, பொருளாதார பொது உடமை, எல்லோரையும் மதிக்கும் பண்பு, மூட பழக்கத்தை அகற்றுதல் முதலானவைகளினை உள்ளடக்கியதாகும்.

சாதி மறுப்பு

ஆணும் பெண்ணும் யாரை வேண்டும் என்றாலும் திருமணம் செய்து கொள்ளலாம்.அவர்களுக்கு எந்தவிதமான கட்டுப்பாடும் இருத்தல் கூடாது என்பது பொது உடமைக் கொள்கை வாதிகளின் கோட்பாடு.இம்முறை பண்டைக்காலம் தொட்டே தமிழகத்தில் இருந்து வருகின்றது.தமிழர்களின் வரலாறு, பண்பாட்டினை உணர்த்தக் கூடிய தமிழ் இலக்கியங்களில் புலவர்கள் விளக்கியுள்ளனர். இதனை,

யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (குறு. 40)

இப்பாடலில் எந்த சாதி, மதம் என்பதனைக் குறிப்பிடவில்லை.ஒருவரை ஒருவர் முன்பு அறிந்திராதவர்கள் ஏற்படுத்திய திருமணமாக உள்ளது.எந்த வயதில் திருமணம் நடைபெற்றது என்பதனை அறிய முடியவில்லை.சங்க இலக்கியத்தில் திருமணத்திற்கான வயது குறிப்பிடவில்லை.தந்தை பெரியார் பெண்ணை நன்றாகப் படிக்க வைத்து இருபது வயதில் திருமணம் முடித்துக் கொடுத்தல் வேண்டும் என்கிறார்.அது யாராக இருந்தாலும் இருவருக்கும் பிடித்து இருந்தால் போதுமானது.இதே கருத்தினையே இப்பாடலும் முன்வைக்கின்றது.'எம்முறைக் கேளிர்' என்ற பாடலடி உறவினர்கள் இல்லை என்பதைக் காட்டுகிறது.அதே போன்று சாதி, மதம் எதனையும் இப்பாடல் குறிப்பிடவில்லை.முன்பு நாம் யார் என்றே தெரியாது.இன்று திருமணம் எனும் புதிய உறவின் மூலம் ஒருவரை ஒருவர் அறிந்து அன்பு செலுத்தப் போகிறோம் என்று விளக்கம் தருகிறது இப்பாடல்.

<u>பொது உடமைக் கொள்கை</u>

உலகத்தில் உள்ள எல்லாப் பொருளும் அனைவருக்கும் பொதுவான ஒன்று.அனைவரும் உறவினர்களே.அனைவரும் நட்புடன் இருக்க வேண்டும், யாரும் பகைவர் கிடையாது.எல்லோரும் சகோதரத்துவம் சார்ந்து பழகுதல் வேண்டும்.வேற்றுமை என்பதே இருத்தல் கூடாது. தற்காலத்தில் உள்ளது போன்ற எல்லைச் சண்டைகள், ஜாதி, மதம், இனப் பிரிவினை வாதம் முதலானவை தவிர்க்கப்பட வேண்டும் என்ற மையக் கருத்தினைச் சிவகங்கை மாவட்டத்தைச்(பழைய இராமநாதபுரம் மாவட்டம் தற்பொழுது அதாவது 1985 ஆம் ஆண்டிற்குப் பிறகு சிவகங்கை மாவட்டம்)சேர்ந்த புலவன்கணியன் பூங்குன்றன் சங்க காலத்திலேயே கூறியுள்ளார். பொது உடமைக் கொள்கை தத்துவம் என்பது எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதுதான்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன" (புறம். 192)

எந்த ஊராக இருந்தால் என்ன எல்லாமே நமது ஊர்தான் என்ற பொதுக்கருத்தினை இப்பாடல் உணர்த்துகிறது.அதே போன்று பூமியில் உள்ள அனைவரும் நம்மவர்தான் பகைவர் என்று யாரும் இல்லை.அனைத்து மனிதர்களும் நமது உறவினர்களே என கணியன் பூங்குன்றன் விளக்கியுள்ளார்.அன்றைய காலத்தில் போர் புரிந்து தங்களது வீரத்தின் மூலம் நாட்டைக் காத்தனர்.பிற நாட்டின் மீது போர் தொடுத்து பகை நாட்டின் பூமியை தனதாக்கினர்.அங்கு உள்ள

சமூகத்தினரை அடிமையாக வழி நடத்தினர்.இதனை அறிந்த புலவர் உலகத்தில் எதுவும் சொந்தமில்லை அனைவரும் நமது உறவினர்.ஆதாலால் போர் செய்தலைக் கை விடுங்கள் எனக் கூறுகிறார்.போரின் மூலம் மக்களுக்கு வரும் துன்பங்களினையும் எண்ணியதால் 'யாவரும் கேளிர்' என்ற சொல்லினைப் பயன்படுத்துகிறார்.அனைத்து நாடும், நகரமும் அங்கு குடியிருக்கும் மக்களும் நம் உறவினர்கள் என்று நினைத்தால் போர் வராது எனும் பொது உடமைக் கொள்கையினை சங்க காலத்திலேயே உரைத்துள்ளார்.இங்ஙனம் நினைத்தால் எல்லை தாண்டி வருகின்ற மீனவன் சுடப்படுவதில் இருந்து மீட்கப்படுவான்.பிற மாநிலத்தில் கல்வி கற்கச் செல்லும் தமிழக மாணவரின் நலன் காக்கப்படும்.'யாதும் ஊரே யாவரும் கேளிர்' இனும் இக்கொள்கையின் வழி நடந்தால் மானுட தர்மம் காக்கப்படும்.சமூக நீதி நிலை நாட்டப்படும்.மனித மாண்புகள் சிதைந்து போகாத நிலை ஏற்படும்.

நல்லாட்சி நடத்த பகுத்தறிவு

நாட்டை ஆளுகின்ற அரசன் மக்களைத் துன்புறுத்தாமல் சட்டங்கள் இயற்றி வரி வசூல் செய்ய வேண்டும்.செங்கோல் வழுவாமல் ஆட்சி செய்தான் மன்னன் என்ற பெயர் சிறக்க வேண்டும். என்பதனை,

"தென்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்
நடுநாள் யாமத்துப் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி, உடுப்பது இரண்டே
பிறவும் இல்லாம் ஓரொக்குமே,
செல்வத்துப் பயனே ஈதல்,
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"(புறம். 189)

அளவுடன் பொருள், சொத்துக்களினை வைத்துக் கொண்டு போதும் என்ற மனப்பான்மையுடன் இருக்க வேண்டும்.பிறருக்கு உதவி செய்தல் வேண்டும்.செல்வத்தின் பயன் என்பது கொடுத்தல் எனப்படும்.யாராக இருந்தாலும் உணவும், உடையும் எல்லோருக்கும் ஒன்று தான் அது பொது உடமையானது.அளவுக்கு அதிகமான செல்வம் இருந்தாலும் அவை அனைத்தினையும் அனுபவிக்க முடியாது.ஆதலால் உதவி செய்து வாழ வேண்டும் என உணர்த்துகிறது இப்பாடல்.பொது உடமைக் கொள்கையின் தத்துவம் என்பது எல்லோருக்கும்

எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதுதான்.மக்கள் அனைவரும் சமமானவர்கள் என்ற தத்துவார்த்த அடிப்படையினை வைத்துத் தான் பொது உடமைக் கொள்கை தொடங்கப்பட்டது.தற்காலத்தில் இவ்வாறு எண்ணாமல் ஆட்சியாளர்கள் தமக்கு மட்டுமே பொருள் ஈட்டிக் கொண்டு மக்களைத் துண்புறுத்துகின்றனர்.

தன்மானம்

மனிதன் யாராக இருந்தாலும் தமக்கு என்று தன்மானம் இருப்பது வழக்கமான ஒன்று தான்.உளவியல் அடிப்படையில் மனிதனை அவனது நிலையில் இருந்து தாழ்த்துகின்ற பொழுது ஏற்படுவதாகும்.தன்மானமானது தம்மை இழிவு படுத்துகின்ற போதோ, தமக்கான ஒன்றினை பிறர் எடுத்துக் கொள்ள முயற்சித்தாலோ, தமக்கு உரிய மரியாதை தராமல், தம்மைக் குறைத்து மதிப்பிடுகின்ற பொழுதோ இது வெளிப்படுவதாகும். இதனை,

குழவி இறப்பினும், ஊன் தடி பிறப்பினும்,
ஆள் அன்று என்று வாளின் தப்பார்,
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத் தீத் தணியத்
தாம் இரந்து உண்ணும் அளவை,
ஈன்மரோ இவ் உலகத்தானே" (புறம். 74)

இப்பாடல் தன்மானச் சிறப்புடன் தமது வீரத்தின் மரபினையும் குறிப்பிடுகின்றது.கணைக்கால் இரும்பொறை சிறையில் இருந்த பொழுது அவன் வெளிப்படுத்திய தன்மான உரையாக இப்பாடல் அமைந்துள்ளது.குழவி இறந்து பிறந்தாலும் அதனைக் குழந்தை என்று எண்ணாமல் அதன் மார்பில் வாள் வைத்து காயம் ஏற்படுத்திய பின்பே புதைப்போம்.அந்தக் காயமானது போரில் கலந்து கொண்டு ஏற்பட்ட விழுப்புண்ணாக நாங்கள் எண்ணிக் கொள்வோம்.வீரம் என்பது சிறு குழந்தைக்கும் இருக்க வேண்டும் என்ற கருத்து இதன் மூலம் வெளிப்படுகிறது.இத்தகைய வீர மரபில் இருந்து வந்த என்னை நாய் போன்று சங்கிலியால் கட்டிப் போட்டு தண்ணீர் குடிக்கச் சொல்கிறீர் இதனை நான் செய்தால் இந்த உலக்கத்தில் உள்ளோர் என்னை மதிப்பார்களா? என வினா தொடுத்து தன்னுடைய தன்மானத்தை வெளிப்படுத்துகிறான்.

இத்தகைய வீரத்தினை உடைய மன்னன் தமது பகைவரிடம் இரந்து (கெஞ்சி) தண்ணீர் குடித்து விட்டானே என்று இந்த உலகத்தினர் இழிச்சொல் சொல்லி தம்மையும் தம்

குடியின் வீரத்தினையும் குறைத்து மதிப்பிட்டு விடுவார்களே என்று எண்ணி மறுத்துவிட்டது தெரிகின்றது. தாம் அழிந்தாலும் தம் இனத்தின் வீரம், புகழ் நிலை நிற்க வேண்டும் என்ற கருத்தினை இப்பாடல் உணர்த்துகிறது.சுதந்திரமாக இருக்கும் ஒருவரது உரிமைகளைப் பரித்துக் கொண்டால் வெளிப்படும் எண்ணம்தான் தன்மானம்.இதனை இப்பாடலின் வழி தெளிவாக அறிய முடிகிறது.இதனைத் தான் பிற்காலத்தில் சுயமரியாதை என்றனர்.சொற்கள் தான் வெவ்வேறானது பொருள் ஒன்றுதான்.இப்பாடலில் மன்னனுக்கு உரிய மரியாதை தரப்படாமல் இருப்பதால் அவனது தன்மானச் சிந்தனை வெளிப்படுகிறது.

இனப் பெருமை காத்தலில் பகுத்தறிவு

எந்த ஒரு இனம், குடும்பமாக இருந்தாலும் தமக்கான பெருமையினைக் காத்தல் என்பது சிறப்பானதாகும்.தங்களது இனம் அல்லது குடும்பத்திற்குள் சண்டையிட்டால்அதில் வரும் துன்பம் தமக்கானதாகும் என்பதனை உணர்த்துவதற்காகப் பாடப்பட்டவையாகும். சகோதரர்களான நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும் போரிட்டனர். இதனை அறிந்த புலவர் கோவூர்கிழார் நேரடியாகச் சென்று இருவரும் ஒரே குடியில் பிறந்தவர்கள் ஏன் சண்டையிடுகிறீர்கள் உங்களில் யார் தோற்றாலும் அது உங்களுக்கே இழிவான செயலாகும் என அறிவுறுத்தியுள்ளார். இதனை,

“பொருவோன் கண்ணியும் ஆர் மிடைந்தன்றே, நின்னொடு
ஒருவீர் தோற்பினும் தோற்ப நும் குடியே,
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே, அதனால்” (புறம். 45)

இப்பாடல் சகோதரர் இருவரும் அதிகாரத்திற்காகப் போர்புரிவதனை (சண்டை இடுவதனை) எடுத்துக் காட்டுகின்றது.இவர்கள் இருவரும் அறியாமையால் இச்செயலை செய்ய நினைத்த பொழுது புலவர் அதனைத் தடுத்து நிறுத்தி அவர்களைச் சிந்திக்கும்படிச் செய்கிறார்.புலவர் என்பவர் கல்வி கற்ற அறிஞன் மட்டும் கிடையாது அரசர்களுக்கு அவர்கள் தான் சிறந்த அறிவுரை கூறுபவராகவும் இருந்துள்ளனர். சகோதரச் சண்டை என்பது தங்களது இனம், உறவினர் அல்லது குடும்பத்திற்கு வருகின்ற இழிவான ஒன்றாகும் என்பதனை இப்பாடல் உணர்த்துகிறது.

கல்விச் சிந்தனை

கல்வியே மனிதனை சிந்திக்கத் தூண்டுகிறது.ஒழுக்கம், நல்லவை, அல்லவை ஆகியவற்றினை அறிந்து கொள்ள கல்வி முக்கியமான ஒன்றாகும்.இதனை அறிந்துதான் சங்கப்

புலவராக இருந்தாலும், மன்னராக இருந்தாலும் கல்விக்கே முதன்மை இடம் கொடுத்துள்ளனர்.மன்னர்கள் கல்வியில் வல்ல புலவர்களை தங்களது அவையில் வைத்திருந்தனர்.அவர்கள் சொல்லுவதனைக் கேட்டு அதன் வழி ஆட்சி நடத்தினர். இதனை,

"உற்றுழி உதைவியும், உறு பொருள் கொடுத்தும்,
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்,
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்,
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,
சீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே" (புறம். 184)

என்ற பாடல் உயர்ந்தோர் ஆனாலும், தாழ்ந்தோர் ஆனாலும் கல்வியில் யார் சிறந்து விளங்குகின்றார்களோ அவர்களுக்கே முதன்மை இடம் கொடுக்கப்படும்.தாயாக இருந்தாலும் மூத்த மகனை வருக என அழைக்க மாட்டாள் யார் கல்வியில் மேம்பட்டு இருக்கின்றனரோ அவரையே விரும்புவர்.என இப்பாடல் விளக்கம் தருகிறது.கல்விதான் உயர்ந்தோர், தாழ்ந்தோர், இனப்பாகுபாடு இல்லாமல் அனைவரும் சமம் என்ற கருத்தினை முன் வைப்பதாகும்.தற்காலத்தில் கல்விக்கு முதன்மை இடம் கொடுப்பது போன்று சங்க இலக்கிய காலத்திலும் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.முறையான கல்வியே சிறந்த மனிதனையும், சமுதாயத்தையும் உருவாக்க உதவும் கருவியாகும்.கல்வியின் மகத்துவத்தினை அறிந்ததால்தான் எப்படியாவது கற்க வேண்டும் என்று இப்பாடல் வழியுறுத்துகிறது.இதனால்தான் ஔவையாரும் பிச்சை புகினும் கற்கை நன்றே என்றார்.கல்வியின் உண்மைத் தன்மையினை அறிந்ததால் இன்றளவும் தரமான கல்வி, சமச்சீர் கல்வி முதலான வற்றிற்கு முதன்மை இடம் கொடுத்து வருகின்றோம்.கல்வியே சிறந்த செல்வம் என்றும் அழியாத நிலையினை உடையது என்றும் அறிஞர்கள் கூறி வருகின்றனர்.

முடிவாக

பகுத்தறிவுச் சிந்தனை என்பது காலந்தோறும் இருந்து வருகின்ற ஒன்றாகும்.கருத்துக்களினைக் கூறும் பாடல்கள் அனைத்தும் பகுத்தறிவு சார்ந்தவைதான்.கல்வி, தன்மானம், சாதிய மறுப்பு, பொது உடமை முதலான கருத்துக்களினைச் சங்க இலக்கியப்

பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.பகுத்தறிவு என்ற சொல் தற்காலத்தில் வழக்கில் வந்ததாகும்.சிந்தனை பண்டு தொட்டே இருந்து வருகின்றது என்பதற்கு மேலே உள்ள கருத்துக்களே சான்றாகும்.பண்டைத் தமிழன் சிந்தனை மரபில் சிறந்து இருந்தான் என்பதனை இப்பாடல்கள் வழி அறிய முடிகிறது.

பார்வை நூல்கள்

1. பாலசுப்பிரமணியன். கு.வெ.2014,குறுந்தொகை, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

2. பாலசுப்பிரமணியன். கு.வெ .2014, புறநானூறு, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

3. பெரியார், குடியரசு இதழ், ஆகஸ்டு, 1929. சென்னை, பெரியார் திராவிடக் கழகம்.

செம்மொழி இலக்கியங்களில் உயிரியல்

முனைவர் சே.குமரப்பன் முதல்வர் (ப.நி) நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி கோவிலூர் –

செம்மொழி இலக்கியங்களில் சூழ்நிலைஇயல், உயிரியல், விலங்கியல், தாவரஇயல், மருத்துவஇயல், வானிலை இயல், உணவியல் எனப் பல்வேறு அறிவியல் சிந்தனைகள் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்கள் பலவற்றில் "உயிரியல்" பற்றிய செய்திகள் பெருவாரியாக உள்ளன. இவற்றில் திருக்குறள், குறுந்தொகை மற்றும் தொல்காப்பியத்தில் காணப்படும். "உயிரியல்" தொடர்பான கருத்துக்களை இக்கட்டுரையிலிடம்பெறச் செய்துள்ளேன். உலகப்பொதுமறை என அழைக்கப்படும் "திருக்குறள்" ஏறக்குறைய அறிவியல் அறிஞர்கள் குறைவாகவே இருந்திருப்பர். அறிவியல் எண்ணங்கள் என்பது அரிதாகவே இருந்திருக்கும். அக்காலட்டத்தில் விலங்குகள், தாவரங்களின் வகைப்பாட்டியல்உயிரினங்களின் பல்லுயிர்ப் பரவல் விலங்குகளின் நடத்தைஇயல், பண்பு நலன்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வகைகள், வாழும்இடம், இவற்றின் சந்ததிகள் உணவு பழக்கவழக்கங்கள் பலவற்றை திருக்குறளில் பல குறட்பாக்களில் எடுத்துக் கூறியுள்ளார். திருவள்ளுவர் 46 குறட்பாக்களில் உயிரினம் பற்றிய செய்திகளைக் கூறியுள்ளார். அனிச்சம், குவளை எனும் இருமலர்கள் மட்டும் கூறப்பட்டுள்ளது. இதில் அனிச்சமலர் 4 முறை கூறப்பட்டுள்ளது. நெருஞ்சிப்பழம் எனும் ஒரே பழவகையும் குன்றி மணி எனும் ஒரே விதையும் பனை, மூங்கில் எனும் இரு மரங்களும் யானை 8 முறையும், பாம்பு 3 முறையும், ஆமை, கொக்கு, முதலை, காகம், மீன், நரி, கவரிமான், பசு, காளை, சிங்கம், புலி, ஆடு, குதிரை, முயல், அன்னம், மயில், ஒட்டகம், வாத்து, எருமை ஆகிய உயிரினங்கள் குறட்பாக்களில் கூறப்பட்டுள்ளன. புல், பயிர், கொம்பு, கொடி, மரம், மலர், காய், கனி, வித்து, மொட்டு எனத் தாவரங்களின் வகைகள் மற்றும் வளர்ச்சிப்பருவங்கள் கூறப்பட்டுள்ளன. அன்புடைமை அதிகாரத்தில் 77வது குறள் "என்பிலாதனை வெயில்போலக் காயுமே அன்பி லதனை அறம்" எனும் குறளில் எலும்பு இல்லாத உயிர்களான புழு போன்றவை வெயிலில் காய்ந்து அழிந்துவிடும். இதுபோல் அன்பு இல்லாத உயிர் அறத்தினை செய்ய இயலாமல் துன்புறும் எனக் கூறியுள்ளார். இக்குறளின் மூலம் விலங்குகளில் எலும்பு உள்ளவையும் எலும்பு அற்றவையும் உள்ளன என்பதைக் கூறியுள்ளார். குறள் 78 "அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த் தற்று" அன்பில்லாது வாழும் வாழ்க்கை வறண்ட பாலை நிலத்தில் தளிர்விடாத உலர்ந்த மரம் போன்றது எனும் பொருள்படும்

இக்குறளில் நிலங்களை வகைப்படுத்தி அதில் பாலைநிலம் ஒன்று என்றும் அது வறண்ட தன ;மையுடையது என்றும், இந்நிலத்தில் தாவரங்கள் எளிதாக வளர முடியாது என்பதையும் உணர்த்தி உள்ளார். குறள் 90 "மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து நோக்கக் குழையும் விருந்து" அனிச்ச மலர் மிக மென்மையானது. முகர்ந்தாலே வாடிவிடும் இதுபோல் வீட்டுக்கு வரும் விருந்தினரை முகம் மலர வரவேற்காமல் முகம் கடுக்க வரவேற்றால் விருந்தினர் முகம் மாறிவிடும். இப்பாடலில் அனிச்ச மலரின் தன்மையை அறிந்து உவமையாகக் கூறியிருப்பது வியப்பைத் தருகிறது. குறள் 126 அடக்கம் உடைமை அதிகாரம் "ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்புடைத்து" ஒரு மனிதனுக்கு அடக்கம் அவசியம். உடலின் ஐம்பொறிகளையும் அடக்கி வாழப் பழகிக் கொண்டால் அது ஏழு பிறவிக்கும் பயனளிக்கும் எனக் கூறும் திருவள்ளுவர் இதற்கு உவமையாக ஆமையையின் நடத்தையைக் கூறுகிறார். எப்படி ஆமை தனது உறுப்புக்களை உள்ளே இழுத்து ஓட்டுக்குள் அடக்குகிறதோ அதுபோல் ஐம்புலன்களை அடக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டி உள்ளார். காலம் அறிதல் அதிகாரம் குறள் 481 "பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும் வேந்தற்கு வேண்டும் பொழுது" மன்னன் பகைவரை வெல்ல தக்க காலம் அறிந்து செயல்பட வேண்டும். அப்பொழுது தான் வெல்ல முடியும் என கூகை, காக்கை ஆகிய இரண்டு விலங்குகளின் உடல்தன்மை, செயல்பாட்டை உவமையாகக் கூறுகிறார். கோட்டானுக்கு பகலில் கண் தெரியாது. எனவே காகம் கோட்டானை எளிதில் வென்றுவிடும். காகத்திற்கு இரவில் கண்தெரியாது எனவே கோட்டான் காகத்தை இரவில் எளிதில் வென்றுவிடும். எனவே வெற்றிபெற காலம் அறிந்து செயல்படுதல் முக்கியம் என வள்ளுவர் அறிவுறுத்தி உள்ளார். குறள் 486 "ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருநகர் தாக்கற்குப் பேரும் தகைத்து" எனும் குறளில் ஆட்டுக்கிடாய் காத்திருந்து பாயும் அது போல் ஊக்கம் உடைய வேந்தனுக்கு காலம் பார்த்து காத்திருந்து செயல்படவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் முழுவலிமையோடு தாக்குவதற்கு ஏற்ற காலம் வரும்வரை காத்திருந்து முழுவலிமையையும் ஒரே இடத்தில் செலுத்தி வெற்றிபெற வேண்டும் எனவும் கூறிஉள்ளார். குறள் 490 "கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன் குத்துஒக்க சீர்த்த இடத்து" எனும் குறளில் கொக்கு உணவுபெறும் முறையையும், உணவைப் பெற எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் அழகு படக்கூறியுள்ளார். கொக்கு மீன் வரும் வரை அமைதியாகக் காத்திருக்கும். எப்பொழுது மீன் வருகிறதோ அப்போது பாய்ந்து சென்று மீனைக் கௌவிப்பிடிக்கும். இதனைப் போல் ஒருவினையைச் செய்யும்போது முயற்சி குன்றாது. சமயத்தையும், இடத்தையும் நழுவவிடாது வினையைச் செய்து முடிக்க வேண்டும் என நடைமுறை உவமையின் மூலம் எளிதில்

புரியும் வண்ணம் கூறியுள்ளார். குறள் 495 “நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின் நீங்கின் அதனைப் பிற” முதலை நீரில் வாழக்கூடிய விலங்கு. அதன் உடல் அமைப்பானது நீரில் வாழ்வதற்கான தகவமைப்புடன் உள்ளது. எனவே நீரில் அது பலம் மிக்கதாக இருக்கும். எனவே பிற விலங்கினங்களை எளிதில் வென்று விடும். ஆனால் அதே முதலையின் உடல் தகவமைப்பு தரை வாழ்க்கைக்கு மிக ஏற்படுதையாக இருக்காது. எனவே அது தரையில் பலவீனமாக இருப்பதால் பிற உயிர்கள் முதலையை எளிதில் வெல்லும். தேர்ந்தெடுக்கும் இடமே வெற்றி தோல்வியை நிர்ணயம் செய்கிறது. எனவே தகுந்த இடத்தைத் தேர்வு செய்து வெல்ல வேண்டும் எனக் கூறுகிறார் வள்ளுவர். குறள் 500 “கால்ஆழ் களரில் நரிஅடும் கண்அஞ்சா வேலாள் முகத்த களிறு” யானை பலம் மிக்கது. போரில் வேல்கொண்டு தாக்கவரும் வீரர்களைக்கூட கொம்பால் குத்தி வீழ்த்தி வீடும். ஆனால் இப்பலம் மிக்க யானை புதையும் சேற்றில் சிக்கி;க் கொண்டால் சிறுநரி கூட யானையை வென்றுவிடும். எனவே இடனிறிந்து வினையைத் தொடங்க வேண்டியது அவசியம். இதில் உருவம் பெருத்த யானையையும் உருவம் சிறுத்த நரியையும் ஒப்பிட்டு எளிதில் புரியும் வண்ணம் செந்நாப்போதார் கூறியுள்ள பாங்கு அருமை. அதிகாரம் சுற்றம் தழால் குறள் 527 “காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும் அன்னநீ ரார்க்கே உள” காக்கை கிடைத்த உணவைத் தானே உண்ணாது. மறைக்காது. “கா“,“கா“ எனக் கூவி அழைத்து தனது இனத்துடன் கூடி உண்ணும். அதுபோல் சுற்றத்தை அழைத்து உண்ணும் இயல்புடையவனுக்கு ஆக ;கம் வந்து சேரும். அவனைப் பலரும் விரும்புவர். இக்குறளில் திருவள்ளுவர் விலங்குகள் உண்ணும் போக்கை ஆய்வு செய்து காக்கை உணவு உண்ணும் முறையை சுற்றம் தழுவுதலுக்கு உவமையாகக் கூறியிருப்பது அவரது அறிவியல் அறிவைப் புலப்படுத்துகிறது. அதிகாரம் ஊக்கம் உடைமை குறள் 595 “வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு” நீரில் வாழும் தாவரங்களின் மலர்கள் நீரின் மேற ;பரப்பிற்கு ஏற்ப தண்டு நீண்டு நீர்ப்பரப்பில் காணப்படும். எவ்வாறு மலர்தாள்களின் நீலம் நீரின் அளவைப் பொறுத்து உள்ளதோ அதுபோல் மக்களின் வாழ்க்கையின் நிலை அவரவர் முயற்சியைப் பொறுத்தே அமையும். எனவே முயற்சியும், ஊக்கமும் இருந்தால் உயர்நிலையை அடையலாம். குறள் 599 “பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை வெரூஉம் புலிதாக் குறின்” யானை பருத்த உடலையும் கூரிய கொம்புகளையும் கொண்டது. பலம் மிக்கது. உருவத்தில் பெரியது. எனினும் உருவத்தில் சிறிய புலி தாக்கினால் யானை பயந்து ஓடிவிடும். யானையை விட புலியின் ஊக்கம் அதிகம் இருப்பதால் பெரிய யானையை வெல்ல முடிகிறது. எனவே ஊக்கம் உடையவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதனை புலி-யானையின் செயல்திறனை வைத்து விளக்குகிறார் வள்ளுவர். அதிகாரம் படைமாட்சி குறள்

763 “ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை நாகம் உயிர்ப்பக் கெடும்”. எலிகள் கூட்டமாகச் சேர்ந்து கடல் போல ஒலித்தாலும், நாகம் சீறினால் எலிக்கூட்டம் ஓடிவிடும். நாகம் மூச்சுவிட்டால் அவை அழியும். இதுபோல் பலமற்றவர்கள் பலர் கூட்டமாகச் சேர்ந்து எதிர்த்தாலும் வீரம் நிறைந்தவன் பயப்படமாட்டான். மாறாக வீரம் நிறைந்தவன் சீறி எழுந்து தாக்கினால் எதிர்க்கூட்டம் மடியும். இக்குறளில் எலியின் இயல்பையும், நாகத்தின் இயல்பையும் உவமையாகக் கூறி விளக்கி உள்ளார். அதிகாரம் படைச்செருக்கு குறள் 772 “கான முயல்எய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது”. காட்டில் உள்ள முயலைக் கொன்ற அம்பைவிட யானையைக் கொல்ல குறிவைத்துத் தவறிய அம்பே சிறப்புடையதாகும். இவ் அம்பினை ஏந்திய வீரனும் சிறப்புடையவனாவான். குறள் 774 “கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல் பறியா நடும்” கையில் உள்ள வேலை யானையின் மீது பாய்ச்சிவிட்டு வறிதுநின்ற வீரன் எதிர்வரும் யானையைக் கொல்ல தன் உடம்பின் மீது பாய்ந்துள்ள வேலைப் பறித்து வீசி மகிழ்வான். அதிகாரம் மானம் குறள் 969 “மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர்நீப்பர் மானம் வரின்” காவரிமான் மானம் மிக்கது. அதன் உடம்பிலிருந்து ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாது. அதுபோல் சான்றோர் அவர் தம் மானத்துக்கு இழுக்கு வரும் என்றால் உயிரை நீப்பர். சான்றோர்கள் மானத்தை உயிரைவிட மேலாகக் கருதுவர் என்பதை கவரிமான் மற்றும் அதன் வாழ்க்கை முறையை உவமையாகக் கொண்டு விளக்குவது சிறப்பாகும். அதிகாரம் நன்றி இல்செல்வம் குறள் 1008 “ நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள் நச்சு மரம் பழுத்தற்று” சிலரிடம் பெரும் செல்வம் இருக்கும். ஆனால் பிறருக்குக் கொடுத்து உதவமாட்டார்கள். நடுஊரில் நச்சு மரம் பழுத்தால் யாருக்கும் பயன் இருக்காது. இதுபோல் செல்வம் இருந்து பிறருக்கு உதவாமல் இருப்பது நச்சுமரம் பழுத்தது போன்றதாகும். எப்படி நச்சு மரத்தை மக்கள் விரும்பமாட்டர்களோ, எப்படி வெறுப்பார்களோ அதுபோல உதவாத செல்வம் உடையவனையும் விரும்பமாட்டார்கள். அதிகாரம் நலம்புனைந்து உரைத்தல் குறள் 1114 “காணின் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும் மாண்இழை கண்ஒவ்வேம் என்று” குவளை மலர்கள் மிக அழகானவை. ஆனால் அழகுமிக்க குவளை மலர்கள் தலைவியின் கண்களைக் கண்டால், தலைவியின் கண்களுக்கு நாங்கள் நிகராகமாட்டோம் என நாணித் தலைகுனியுமாம். குவளை மலரின் தன்மையை அறிந்து அதனைத் தலைவியின் கண் அழகிற்கு ஒப்பிடுவது மிக அருமை. குறள் 1115 “அணிச்சப்பூக் கால்களையால் பெய்தாள் நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை” அனிச்சப்பூவே மெல்லியது. எடை குறைவானது. இத்தகைய அனி;ச்சப்பூவின ; காம்பினை நீக்காது இவள் மலரைச் சூடுகின்றாளே! காம்பின் சுமை தாங்காது இடை ஒடிந்துவிடுமே. இனி

இங்கு நல்ல பறை ஒலிக்காதே. இக்குறளில் அனிச்சப்பூ மெல்லியது என்றும் பெண்ணின் இடை அதைவிட மெல்லியது எனக் காட்டுவதும் சிறப்பு. குறள் 1120 “அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்” அனிச்சப்பூவும், அன்னப் பறவையின் இறகும் மென ;மையானவை. அவை கூட மாதரின் கால்களுக்கு நெருஞ்சி முள்ளாகத் தோன்றுகின்றன. மலர் மற்றும் பறவைகளின் தன்மையை ஆய்வு செய்து அதில் மெல்லிய தன்மை உடைய அனிச்சப்பூவையும் அன்னப்பறவையையும், உவமையாகக் காட்டியிருப்பதும் வள்ளுவரின் அறிவியல் அறிவை நன்கு புலப்படுத்துகிறது. மேலும் இவை நெருஞ்சி முள்ளாகத் தோன்றுவன் மூலம் பெண்ணின் பாகம் எவ்வளவு மென்மையானது என்பதைப் புலப்படுத்துகிறது. அதிகாரம் குறிப்பறிவுறுத்தல் குறள் 1274 “முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு” மலர இருக்கின்ற மலரின் மொட்டுக்குள் நறுமணம் இருப்பதுபோல் காதலின் புன்முறுவலில் குறிப்பு ஒன்றும் உள்ளது. எப்படி மொட்டுக்குள் உள்ள மணம் தெரியாமல் உணரப்படுகிறதோ அதுபோல் காதலியின் புன்முறுவலில் குறிப்பு உணரப்படுகிறது என மலர்மொட்டை உவமையாகக் கூறியிருக்கும் பாங ;கு சிறப்பானது. அதிகாரம் இனியவை கூறல் குறள் 100 “இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று” “இனிய சொற்களைக் கூறாமல் துன்பம் தரும் சொற்களைக் கூறுவது கையில் இருக்கும் கனியைவிட்டுவிட்டு காயை விரும்புவது போலாகும். குhயைவிட கனி சுவையுடையது. பெரும்பாலும் கனியையே விரும்புவர் என்ற அறிவியல் சிந்தனை சிறந்த உவமையாகும். அதிகாரம் ஒப்புரவு அறிதல் குறள் 216 “பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம் நயன்உடை யான்கண் படின்” ஊருக்கு நடுவே உள்ள பயன் தரும் பழமரம் பழுத்தால் ஊரில் உள்ள மக்கள் பயனடைவர். இதுபோல் மக்களிடத்து அன்பு வைத்திருப்பவனின் செ;லவம் அனைவருக்கும் பயன்படு;ம. காய்களை விட கனிகளையே மக்கள் அதிகம் விரும்புவர். அதனாலேயே பழமரத்தினை இக்குறளில் உவமையாகக் கூறிஉள்ளார். குறள் 217 “மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந ;தகை யான்கண் படின்” மருந்துக்குப் பயன்படும் மரத்தில், அவற்றின் இளம் தளிர் முதல் வேர்வரை அனைவருக்கும் பயன்படும். அதுபோல் பிறருக்கு வழங்கும் பண்புடைய உள்ள செல்வமும் மக்கள் அனைவருக்கும் பயன்படும். இக்குறளில் மரத்தின் பாகங்களைக் கூறியுள்ளார் வள்ளுவர். அதிகாரம் புகழ் குறள் 235 “ நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும் வித்தகர்க்கு அல்லால் அரிது” சிப்பியானது உடலுக்குள் முத ;தை உண்டாக்கும். ஆனால் முத்தை சிப்பியின் உடலைக் கிழித்து எடுக்க வேண்டும். சிப்பி தன்னை இழந்தாலும் முத்தாக இருந்து ஒளிரும். இதுபோல சான்றோர்களின் பூத உடல் மறைந்தாலும் புகழ்

உடம்பு ஒளிரும். இவ் உவமையில் முத்துச் சிப்பியின் வாழ்க்கை, முத்து எடுக்கும் பாங ;கு பற்றிய அறிவியல் புலப்படுகிறது. அதிகாரம் கூடா ஒழுக்கம் குறள் 277 “புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி மூக்கில் கரியார் உடைத்து” குன்றிமணி புறத்தே சிவந்து மூக்கி;ல் கரும்புள்ளி பெற்றிருக்கும். மனிதர்கள் சிலர் வெளுப்பாக இருப்பார்கள் ஆனால் அகத்தே கறுத்து இருப்பார்கள். வஞ்சனை உடையவர்களாக இருப்பர். இவரிடத்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இக்குறளில் குன்றுமணியின் நிறம், தோற்றத்தை உவமையாகக்காட்டி வஞ்சனை உடையவரிடம் கவனமாக இருக்க வேண்டும் என இயம்பப்பட்டுள்ளது. அதிகாரம் கொல்லாமை குறள் 322 “பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை” அறநூல்கள் கூறும் எல்லா அறங்களிலும் மேலானது தன்னிடம் உள்ளதை மற்றவர்களோடு பகுத்து உண்பதாகும். இக்குறளின் மூலம் இயற்கை வழங்கும் உணவை உயிர்கள் பகுத்து உண்ணுகின்றன. ஓர் உயிரினம் மட்டும் உண்ணாமல் பல உயிரினங்களும் உண்ணுவதால் பல் உயிர்ப்பெருக ;கம் மிக அவசியம். விலங்குகள் பற்றியும் அவைகளின் வாழ்க்கை முறை, பண்பு நலன்கள் ஆகியவற்றை நன்கு அறிந்து இந்த அறிவியல் சிந்தனைகளை உவமையாகக் கையாண்டிருப்பது வியக்கத்தக்கதும் போற்றத்தக்கதும் ஆகும்.

தமிழும் கணித்தலும்

முனைவர் து.சுந்தர், உதவிப்பேராசிரியர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவாடானை.

முனைவர் பா.உமாதேவி, உதவிப்பேராசிரியர், மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரி,
சிவகங்கை

முன்னுரை :

கணினியில் தமிழ் தோன்றியது 1980 காலப்பகுதியிலேயே தான் தனி மேசைக் கணினிகள் அல்லது தனியாள் மேசைக்கணினிகள் (*personal desktop computers*) விற்பனைக்கு விடப்பட்டன. பல வியாபார நிறுவனங்கள் இப்படிப்பட்ட பல கணினிகளைத் தயாரித்து வெளியிட்டு சந்தைக்கு முந்த முயன்று கொண்டிருந்தன. இவைகளும் தத்தமக்கெனத் தனியான இயக்கு தளங்களைக் (*Operating system*) கொண்டிருந்தன. பின்னர் *மக் ஓ.ஸ்.*(*MacOS*), *மைக்ரோசாப்ட்* (*Microsoft DOS*), *ஓ.எஸ்.2* (*OS2*) வகை இயக்கு தளமுடைய கணினிகள் கிட்டத் தட்ட ஒரு பொதுக் கருவியாக உருவெடுக்கத் தொடங்கின. இவ் வகைக் கணினிகள் மேசைக் கணினிகளாக விற்பனைக்கு வந்தது கிட்டத்தட்ட 1983-84 அளவில். இவை வெளிவந்து கொண்டிருக்கும்போது தமிழ்க் கணினி வல்லுநர்கள், தமிழைக் கணினியில் கொண்டு வரும் முயற்சிகளைத் தொடங்கினர்.

கணினிகள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இயக்கக் கட்டளைகளையும் (*operation commands*) மறுமொழிகளையும் கொண்டிருந்தன. நமது ஆழ்மனத்தின் எண்ணங்கள், உள்ளத்தில் அமிழ்ந்து கிடக்கும் கனவுகள், ஆசைகள், கற்பனைகள் இவற்றை எல்லாம் பிறரிடம் பகிர்ந்து கொள்கையில், அவற்றின் சாரம் மாறாமல், தயக்கமோ, தடையோ ஏதுமில்லாது எடுத்துக் கூற ஓர் கருவியாக இருப்பது அவரவரது தாய் மொழி.

இருப்பினும் தமிழில் கணித்தல் திறன் தொன்று தொட்டு வந்துள்ளது. கணியன் பூங்குன்றனார், கணி மேதாவியார் போன்ற புலவர்கள் இருந்துள்ளனர். இவர்களின் அடைமொழி கணித்தல் தொடர்புடையதாக உள்ளது. புலவர் நக்கீரரை மதுரைக் கணக்காயர் மகனார் என்றே குறிப்பர். இதன் காரணமாகக் கணக்கீடு செய்யும் கணக்காளர் நடைமுறை சங்க காலத்தில்

இருந்துள்ளது என்பது அறியத்தக்கது. கணிச்சி கூர்ம் படை கடும் திறல் ஒருவன் - புறம் 195/4 என்ற பாடலடிகளில் காலம் கணித்து வரும் நிலை யமனுக்கு இருந்ததாகக் குறிக்கப்படுகிறது. இவ்வாறு கணித்தல் என்பது ஒரு தீர்வைப் பெறுவதற்கான முயற்சியாகக் கொள்ளப்பெற்றுள்ளது. கணக்கு ஆய் வகையின் வருந்தி என் - குறு 261/7, கரும்பு கரு_முக கணக்கு அளிப்போரும் - பரி 19/39 என்ற நிலையில் கணக்கு பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

ஓலை கணக்கர் ஒலி அடங்கு புன் செக்கர் - நாலடி:40 7/1 என்ற நிலையில் கணக்கர் என்ற சொல்லும் , கற்றதூஉம் இன்றி கணக்காயர் பாடத்தால் - நாலடி:32 4/1 கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கு அறுக்கும் - திரி 10/1 என்ற வகையில் கணக்காயர் என்ற சொல்லும், கிணற்று அகத்து தேரை போல் ஆகார் கணக்கினை முற்ற பகலும் முனியாது இனிது ஓதி - பழ 61/2,3 என்ற நிலையில் கணக்கு என்ற சொல்லும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் காணப்படுகின்றன.

நாழிகை கணக்கர் நலம் பெறு கண்ணுளர் - புகார் 5/49

காவிதி மந்திர கணக்கர் தம்மொடு - மது 22/9

என்று சிலப்பதிகாரத்திலும் கணக்கீட்டு முறை பற்றிய குறிப்புகள் அமைந்திருக்கின்றன. இவ்வகையில் தமிழில் கணக்கீட்டு அறிவு என்பது தொன்மைக்காலம் தொட்டு இருந்து வந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

<u>கணினி தமிழ் வளர்ச்சி :</u>

கணினியில் தமிழ் மொழியை கருத்துப் பரிமாற்றத்திற்கும், தகவல் பரிமாற்றத்திற்கும் பெரும்பாலும் பயன்படுத்துபவர்கள் யார் ? தமிழை சரளமாக பேசும் தமிழ் மக்கள் அனைவராலும் எளிதாக தமிழை கணினியில் பயன்படுத்த முடிகிறதா ? தமிழ் மொழியை கருத்துப் பரிமாற்றத்திற்கும், தகவல் பரிமாற்றத்திற்கும் பயன் படுத்துவோர், தமிழ் மொழி மீது ஈடுபாடும் ஆர்வமும், கணினியில் தமிழ் பயன்பாட்டினை பெரிதும் விரும்புவோர் மட்டுமே. இது தமிழ் மொழியை கணினியில் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் அவரவரது தனிப்பட்ட முயற்சியால் அறிந்து கொண்டு, செயல்படுத்தப்பட்டது ஆகும்.

தமிழில் தட்டச்சு செய்ய கற்றுக் கொள்ள விரும்புபவர்கள் முதலில் முயற்சித்து பார்ப்பது, கூகுள் வழங்கும் ஒலிபெயர்ப்பு (Google transliteration) முறை தான். அதில் முயற்சி செய்து

பார்த்து விட்டு, மனதிற்கு திருப்தியும் நிறைவும் ஏற்பட்ட பின், மெல்ல மெல்ல தமிழ் தட்டச்சு மென்பொருட்களான, ஏ - கலப்பை (E- kalappai) , என் எஹெச் எம் ரைட்டர் (NHM Writer), அழகி (Azhagi) போன்றவற்றை பயன்படுத்த முயற்சி எடுக்கின்றனர்.

தமிழை தங்களது முதல் பாடமாக கொண்டோர், தமிழில் ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிட விரும்புவோர், தமிழில் முனைவர் பட்டப்படிப்பு பயில்வோர் என்று தமிழைச் சார்ந்து இருப்பவர்கள் கூட கணினித் தமிழ் குறித்து விரிவாக அறிந்திருப்பதில்லை. கணினித் தமிழில் ஆராய்ச்சி மேற்கொள்வோர், தமிழ் ஆவணங்களை எண்ணிமப் (Digitize/ Digital) படுத்தி உலகிலுள்ளோர் அனைவரும் பயன்படுத்தி மகிழ்வுற வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டோர், தங்களது தாய்மொழியாம் தமிழ் மொழியிலேயே தங்களது எண்ணங்களை, கருத்துக்களை, தங்களது மொழி பால் கொண்ட பற்றின் காரணமாக இலக்கியங்கள் படைத்து வெளியிடுவோர் என்று சொற்பமானவர்களே கணினியில் தமிழை பயன்படுத்துகின்றார்கள்.

மொழியியல் பயன்பாட்டில் கணினித் தமிழ் :

கணினியில் தமிழ் வளர்க்க பல அறிவியல் துறை சார்ந்த கலைச்சொற்களை தமிழ் மொழியில் மொழி பெயர்த்து அவற்றை பயன்பாட்டுக்கு கொண்டு வருதல் மொழி வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும். இது கணினி அறிவியலுக்கு மட்டுமன்றி, அனைத்து அறிவியல் துறைகளுக்கும் பொருந்தும். கணினி அறிவியல், மருத்துவம், பொறியியல் துறைகளை சேர்ந்த சொற்களை தமிழ் மொழியில் மொழிபெயர்த்து அவற்றை பயன்பாட்டுக்கு கொண்டு வந்தால், அது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும். மொழி பெயர்த்து பத்திரமாக வைத்துக் கொண்டால் மட்டும் போதாது. அவற்றை நிச்சயம் அன்றாட பயன்பாட்டுக்கு கொண்டு வருதல் வேண்டும்.

முக்கியமான விடயம் என்னவெனில் எழுத்துப் பிழை. பிழையின்றி எழுதுவதிலும் பேசுவதிலும் தானே மொழியின் அழகு அடங்கியிருக்கிறது. ஆங்கில மொழியில் இந்தப் பிரச்சனைக்கு தீர்வாக சொற் செயலிகளை (Word Processors) பயன்படுத்துகையில், அல்லது வலைப்பதிவுகள் (blog post) தட்டச்சு செய்கையில், நாம் ஏதேனும் சொல்லை பிழையாக தட்டச்சு செய்து விட்டால், அதற்கான சரியான சொல், அதைப் போன்றே ஒலிக்கும் வேறு சரியான சொற்கள் என்று நமக்கு பரிந்துரை (suggestions) வழங்குகின்றது , பிழையான சொற்களை சிகப்பு

அடிக்கோட்டினால் குறிப்பிட்டு காட்டுகிறது. சில செயலிகளில் தானியங்கி திருத்தம் (Auto-correct) வசதியும் உண்டு. தமிழ் தட்டச்சு செய்கையில், இது போன்று தானியங்கி திருத்தம் மற்றும் சொல் பரிந்துரை வசதிகள் உருவாக்கப் பட்டால், தமிழ் ஆவணங்கள் பிழையின்றி உருவாக்க பேருதவியாக இருக்கும். Google வழங்கும் blogger உதவி கொண்டு நாம் தமிழில் வலைப்பதிவுகள் உருவாக்கினால், வார்த்தைகளை தானியங்கு பரிந்துரைக்கும் (auto-suggest) வசதியும் உண்டு.

நமது மின்நூல்களை அமேசான்.காம் போன்ற வர்த்தக இணையதளங்களிலும் விற்பனை செய்யலாம். நூல்களை அச்சில் ஏற்ற ஆகும் செலவு, பதிப்பகத்தாரால் வெளியிட ஆகும் செலவு இவற்றை கருத்தில் கொண்டு பலரும் தற்போது தங்களது படைப்புகளை மின்னூலாக வெளியிடுகின்றனர். இப்படி வெளியிடும் நூல்கள் கண்டிப்பாக பல வாசகர்களை சென்றடையும். இதனால், புத்தகம் வெளியிடுவோருக்கும் செலவில்லை, வாசிப்போரும் இலவசமாகவே வாசித்து தங்களது மேலான கருத்துக்களை பகிர்ந்து கொள்ளலாம். வாசகர்களின் வரவேற்பினை பொறுத்து, நூலினை அச்சில் ஏற்றலாம்

நீங்கள் உபயோவிக்கும் கணினியில் படம் பார்ப்பதில் இருந்து,ஆவணங்களை (இந்த கட்டுரையை போல) படிப்பதும் எழுதுவதும் ஆகட்டும், முகநூல் (facebook), கூகிள் (Google) தேடல் பொறி,வாட்சப் (whatsapp) தகவல் செயலி போன்றவற்றை கணினி வழியாக பயன் செய்திருப்பீர்கள். தமிழ் எழுத்துகளை முதன் முதலில் கணிப்பொறியில் உள்ளிட்டவர்கள் கனடாவில் வாழும் இதயம் சகோதரர்கள் ஆவர். முதலில் மின்னஞ்சல் வழி தமிழ் மொழியானது இணையத்தில் உலா வந்தது. பின் சிறிது சிறிதாக தமிழ் இணைய தளங்கள் தமிழில் உருவாகின. இதன் வழி இணையத்தில் பல அரிய தகவல்கள், செய்திகள், இலக்கியங்கள், படைப்புகள் போன்றவை தம்ழில் காணப்படுகின்றன. தமிழ் தகவல்கள் விக்கிபீடியா, வலைப்பக்கங்கள், தமிழ் திரட்டிகள், மின் நூலகங்கள், இணைய வானொலிகள், சமூக வலைதளங்கள் போன்ற தளங்களின் வழி காணக்கிடைக்கின்றன.

எந்த ஒரு மொழியில் எழுத்துக்கள் குறைந்துள்ளதோ அம்மொழி கணினியில் முதன்மை இடமாக வகிக்கின்றது. அவ்வகையில் ஆங்கில மொழி உலகத்தில் முதன்மையாக காணப்படுகின்றது. ஆங்கில எழுத்துகளில் சிறிய எழுத்துக்கள் 26, பெரிய எழுத்துக்கள் 26,

எண்கள் 0 முதல் 9 வரை உள்ள 10 எழுத்துக்கள், குறியீடுகள் 30 எழுத்துக்கள் ஆக மொத்தம் 102 எழுத்துக்களை கொண்டுள்ளதால் கணினிக்கு நிரல் நிரை படுத்துவதற்கு உகந்ததாக அமைகிறது.

அடுத்தபடியாக தமிழ் எழுத்துக்களை எடுத்துக் கொண்டோமானால் 71 எழுத்துகள் மட்டுமே கணினிக்கு தேவைப்படுகிறது. ஆங்கில எழுத்துகளைவிட குறைவானதாக நம் தமிழ் மொழி இருக்கிறது. ஆனாலும் நம் தமிழர்கள் ஆங்கிலத்தையே பின்பற்றி தமிழை ஆய்ந்து வருகின்றனர். அதனால்தான் தொழில் நுட்ப வளர்ச்சியில் நாம் பின்தங்கியே கிடக்கிறோம். கணினி பயன்பாட்டிற்கு தமிழ் எழுத்தான உயிர் எழுத்துகள் 12, மெய் எழுத்துகள் 18, ஆய்த எழுத்து 1 எண்கள் 10 எழுத்துகள் குறியீடு 30 ஆக மொத்தம் 71 எழுத்துகள் மட்டுமே கணினிக்கு நிரல்நிரை செய்வதற்குத் தேவைப்படுகிறது.

முடிவுரை :

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்",

என்பதனை இணைய வாயிலாக தமிழர்களின் இணைப்பைக் காண முடிகிறது. மேலும் சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்! பட்டி தொட்டிகளிலெல்லாம் தமிழின் மனம் கணினி வழி உலகமெங்கும் வீசப்படவேண்டும்.

கணினியில் தமிழ்ப் பயன்பாடு குறைந்தபட்சம் தமிழர்களை இணைக்கவாவது பயன்படும். இந்த முயற்சி தொடரவேண்டும். கல்லூரி மாணவர்கள் மத்தியில் இந்த முயற்சியை அறிமுகம் செய்தால். கணினி தமிழ் வளரும் தமிழின் தொன்மைச் சிறப்பு, தமிழ்ப் பொறியாளர்களின் ஆர்வம் தமிழி கணினிக்கான மென்பொருள்களின் பரவல் மற்றும் சந்தைப் படுத்துதல் அத்துடன் உலகளாவிய தமிழர்களின் தமிழ்ப்பற்று ஆகியவை கணினிப் பயன்பாட்டின் வழி தமிழின் வளர்ச்சியைத் தடுக்க இயலாத முக்கியக் காரணிகளாக அமைந்து தமிழின் வளர்ச்சிக்கு உதவுகின்றன.

<u>குறிப்புகள்</u>:

1. muhilneel.blogspot.com
2. teacherloga.blogspot.com

மனையியல்

பேரா. பெ. வித்யா, உதவிப் பேராசிரியர், இராமசாமி தமிழ்க்கல்லூரி, காரைக்குடி.

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை, நீர்மை என்று நிகண்டு பொருள் உரைக்கின்றது. ‘‘இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்” (பிங்கலநிகண்டு), “தமிழுக்கும் அமுதென்று பேர்” என்கிறார் பாவேந்தர். இப்பண்புகளே தமிழ் மொழியைப் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கன்னித் தமிழாக முன்னைப் பழமைக்கும் பழையதாகவும், பின்னைப் புதுமைக்கும் புதியதாகவும் வளமையும் செழுமையும மிக்கதாக அழியாத் தன்மையுடன் நிலை நிறுத்தி வருகின்றன. இவ்வாறாகத் திகழும் தமிழ் மொழியில் இன்று பல துறைகளை நிறுவிச் சாதனைப் படைக்கின்றனர் சான்றோர்கள். அந்த வகையில் செம்மொழித் தகுதி பெற்ற தமிழ் இலக்கியங்களில் பல்துறை அறிவியல் சிந்தனைகள் என்ற தலைப்பில் “மனையியல்” துறையினை அடித்தளமாகக் கொண்டு “அகநானூற்றுப் பாடல்களில் மனையியல் செய்திகள்” என்ற தலைப்பில் இக்கட்டுரை வரையறுக்கப்பட்டுள்ளது.

மனையியல் - அறிமுகம்

மனையியல் அல்லது மனை அறிவியல் என்பது வீடு. குடும்பம் வாழ்வியல் தொடர்பான பல்வேறு கூறுகளுக்கான ஒரு கல்வித்துறை ஆகும். மனையியல் என்ற சொல்லுக்கு அகராதியில் ‘‘வீட்டைநிர்வகித்தல், குடும்பத்தினருக்குத் தேவையான ஊட்டச்சத்து உள்ள உணவு தயாரித்தல் முதலியவற்றை அறிவியல் முறையில் கற்றுத் தரும் படிப்பு.

உருவாக்கப்பட்டதன் நோக்கம்

1850 –ல் ஐக்கிய அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட நில அன்பளிப்பு பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டது. இந்த பல்கலைக் கழகங்கள் மரபு வழியில் அளிக்கப்பட்டு வந்த பொறியியல் படைத் துறையியல் ஆகியத் தொழில்சார், திறன்சார் துறைகளில் உயர்கல்வி வழங்கின. இவை பெண்கள் கல்வி பெறவும் வாய்ப்புகளைக் கொடுத்தன. பெண்களுக்கு கைத்தொழிற்கலைகளை திறன்களைக் கற்பிக்கவென உருவாக்கப்பட்ட துறையே மனையியல் துறை.

இத்துறை வீட்டையும் குடும்பத்தையும் மேலாண்மை செய்ய அறிவியல் நோக்கிலான கல்வியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டது. இந்தியாவில் 1920 ல் மனையியல் துறை அறிமுகப்படுத்தப்பட்டது. 1938ல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இத்துறை அறிமுகப்படுத்தப்பட்டது.

அகநானூறுக் கூறும் மனையியல் செய்திகள்

சமூகத்தில் சங்கமித்து வெளிப்படுத்தும் ஆன்மத் துடிப்புகளை அகவய நிலையில் உள்வாங்கிக் கொண்டு புறவய நிலையில் வெளிப்படுத்தும் காலக் கண்ணாடி சங்க இலக்கியம் மன நிலையின் உணர்வுகளை உணர்ச்சியுடன் கூறும் அகவொழுக்கமும் , புறவொழுக்கமும் தமிழ் இலக்கியத்தை அலங்கரிக்க வந்த மணிமகுடங்கள். தமிழ் மொழியின் தொன்மையும், தமிழ் நிலத்தின் வளமையும் , தமிழ் இனத்தின் பெருமையையும் மையமாகக் கொண்டு எழுந்த எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று "அகநானூறு"ஆகும்.

அகநானூறு கூறும் ஊட்டச்சத்துச் சொல்

உடலுக்குச் சத்துச் சேர்க்கக் கூடிய "வைட்டமின்" என பலராலும் குறிக்கப்படும் சொல் "உயிர்ச்சத்து" என்று மனையியல் குறிக்கின்றது. இதற்கு இணையான சங்கச் சொல் "உரன்" என்றுக் குறிப்பிடப்படுகிறது. உரன் என்பதற்கு மனஉறுதி, பற்றுக்கோடு என்னும் பொருள்களில் சங்க இலக்கியப் பாடல்களில் கூறப்படுகின்றன.

''பசும்பிசிர்த் திரைபயில் அழுவம் உழக்கி
உரன் அழிந்து நிரைதிமில் மருங்கில்"
(அக. நா. 210)

இவ்வரிகளில் வலுவிழந்து நிற்கும் படகுகள் என்ற வரிகள் "உரன் அழந்து" என்னும் சொல் கொண்டு கூறப்பட்டுள்ளது.

''வினைநசை இப்பரிக்கும் உரன்மிகு நெஞ்சமொடு" (அக.நா.215)

இவ்வரிகளில் "உரன் மிகு நெஞ்சம்" என்ற சொல்லானது துணிவுமிக்க உள்ளத்தைக் குறிப்பிடுகிறது.

''உரன்மலி உள்ளமொடு முனை பாழாக" (அக.நா.349)

இவ்வரிகளில் வலிமைமிக்க உள்ளத்தோடுச் சென்று பகைவரை வெல்ல வேண்டும் எனக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வரிகளின் மூலமாக உடலுக்கும் உள்ளத்துக்கும் உறுதியையும் பற்றுக் கோட்டையும் நல்கும் வலுவூட்டர் சக்தியரினை நாம் உரன் என்னும் சொல்லின் அடிப்படையில் "உரனி" எனக் குறிப்பிடலாம்.

உடலுக்கு வேண்டிய அளவு உரனி கிடைக்காவிட்டால் உடல் நலிவுறும். நோய்க்கு இடமாகும் அந்தந்த உரனியின் இயல்பிற்குக்கேற்ப ஒவ்வொன்றிற்கும் பெயர்ச்

சூட்டப்பட்டுள்ளது. உதாரணமாக நோய் அடிப்படையில் உரனியை வகைப்படுத்துவதில் ஒன்று மட:டும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

நம் உடலில் சுண்ணாம்புச் சத்து தேவைக்கான உரனியை சுதைய உரனி என குறிப்பிடலாம்

“சுதை விரிந்தன்ன பல்பூ

மராஅம்”(அக.நா.211)

சத்து மிகுந்த மரத்தில் படர்ந்திருந்த பூக்கள் பல என்ற பொருளின் அடிப்படையில் இங்கு “சுதை” என்பது சுண்ணாம்புச் சத்தைக் குறிப்பிட்டிருக்கலாம்.

இதனைப்போன்று

‘‘மாரிச் சுதையின் ஈரம்புறத்து அன்ன”

(அக.நா.346)

இவ்வரிகளில் வெண்மை நிறத்தை ஒத்த என்ற பொருளின் அடிப்படையில் கூறப்படுகிறது.

இவ்வாறாக பல வகையான ஊட்டச் சத்துக் குறிக்கின்ற சொல் உரன் என்று குறிப்பிட்டிருக்கலாம்.

தொகுப்புரை

உலகில் எத்தனையோ மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. இதில் பல மொழிகளுக்கு எழுத்து வடிவங்கள் இல்லை என்பதால் பயன்பாட்டுக்குக் கெணர்டு வர முடியாமல் உள்ளன. ஆனால் சில மொழிகள் மிகப்பழமையானதாகவும், இலக்கியத்தில் சிறந்து விளங்குவதாகும் உள்ளன. இவற்றில் சில மொழிகளை செம்மொழிகள் என்று அடையாளப்படுத்தப்படுகின்றது.

ஒரு மொழியின் சிறப்பிற்கும் . செம்மொழிக்கும் முதல் அடையாளமாகத் திகழ்வது அம்மொழியின் பழமை வாய்ந்த இலக்கியங்கள் தான்.

அவ்விலக்கியங்களில் ஒன்றான அகநானூற்றில் மனையியல் தொடர்பான அறிவியல் சிந்தனைச் செய்திகள் பல இருக்கின்றன. எனினும் இக்கட்டுரையில் “உரன்” என்பது ஊட்டச்சத்து தொடர்பான சொல்லானது. உடலுக்கும் உள்ளத்துக்கும் உறுதியையும் பற்றுக் கோட்டையும் நல்கும் சொல்லாக அழைக்கப்பட்டிருக்கலாம்

உளவியல்

பேரா ப. மணிமேகலை

ஆங்கிலத் துறைத் தலைவர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை

'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி' என்பார் மகாகவிபாரதி. அத்தகைய வளம் நிரம்பியது தமிழ்மொழி. ஆனாலும் உலக அளவில் செவ்வியல் மொழி-அதாவது செம்மொழி என்று தமிழ்மொழி அறிவிக்கப்படவில்லை. கிரேக்கம், இலத்தீனம், எபிரேயம், சீனம், சமஸ்கிருதம் ஆகியன செம்மொழிகள் என அறிவிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டன. 'செம்மொழி' என்று ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உலக அளவில் 11-தகுதிப்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அத்தகைய 11-தகுதிப்பாடுகளும் தமிழ்மொழிக்கு உண்டு

1. தொன்மை, 2. தனித்தன்மை, 3. பொதுமைப்பண்பு, 4. நடுடுவுநிலைமை, 5. தாய்மைத்தன்மை, 6. பண்பாடுகலை பட்டறிவு இவற்றின் வெளிப்பாடு 7. பிறமொழித் தாக்க மிலாத் தனித்தன்மை 8. இலக்கியவளம் 9. உயர்சிந்தனை 10. கலை, இலக்கியத்தனித்தன்மை வெளிப்பாடு, பங்களிப்பு 11. மொழி , மெர்ழி இயல்கோட்பாடு- என்ற 11 தகுதிப்பாடுகளில் 'இலக்கியவளம்' என்னும் கோட்பாடு குறித்தும், அது எவ்வாறு தமிழில் வெகுசிறப்பாக அமைந்துள்ளது என்றும் இச்சிறு கட்டுரையில் காண்போம்.

2. இலக்கியப் படைப்பு என்பதற்கு 'உருவம்-உள்ளடக்கம்' என்ற இரண்டும் வேண்டும். இந்த இரண்டும் சேர்ந்ததுதான் 'படைப்பு' ஆகும். இவ்விரண்டனுள் 'உருவம்' முக்கியமா? உள்ளடக்கம் முக்கியமா? என்ற ஓர் அபூர்வமான விவாதம் உலக அளவில், பல்வேறு அரங்குகளில் தீவிரமாக விவாதிக்கப்பட்டது. இறுதியில் இலக்கியப் படைப்புக்கு இரண்டுமே முக்கியம் என முடிவு செய்யப்பட்டது.அந்த உலகளாவிய விவாதத்தில் உருவம் எதுவாக இரந்தாலும 'உள்ளடக்கம்' மிகவும் கூர்மையாக , மிகவும் நளினமாக, மிகவும் இனிமையாகச் சொல்லப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. ஒரு படைப்பாளி தான் சொல்லவரும் கருத்தைப்பல்வெறு உத்திகளில் சொல்ல முனைவார். அத்தகைய உத்திகளல் ஒன்றுதான் 'உளவியல் உத்தி' என்பது.

3. இலக்கியப்படைப்பில் ‘உளவியல் உத்தி’ என்பது பற்றி, தமிழின் முதல் நூலான தொல்காப்பியம் மிக விரிவாகவே பேசுகிறது. தமிழ் ஆராய்ச்சிப் பேரறிஞர்கள் ‘உளவியல் ‘ உத்திப்பற்றி மிக விரிவாகவே எடுத்துரை செய்துள்ளனர். ‘தமிழ்க்காதல்’ என்ற தமது ஆய்வு நூலில் பேரறிஞர் வ.சு.மாணிக்கனார், ‘என் ஆராய்ச்சியை ‘உளவியல் ஆய்வாகவே செய்கிறேன்’ என்பார். உளவியல் என்பது என்ன? என்று ஒரு முக்கியமான வினாவை எழுப்பிக்கொண்டு, ‘அது ஒரு தனிமனக்கூறு’ என்பார். இப்படியான ‘தனி மனக்கூறு’தான் தமிழின் அக இலக்கியங்கள் அனைத்திலும் விரவிக் கிடக்கின்றன. இத்தகைய ‘தனிமனக் கூறு பற்றிப் பிறிதோரிடத்தில அறிஞர் வ.சுப.மா அவர்கள் ‘நெஞ்சியல்’ என்பார்.

4. ‘தனிமனக்கூறு’ அதாவது ‘நெஞ்சியல்’ என்பது இலக்கியப்படைப்புக்களில் எவ்வாறு, எந்த உருவில் வெளிப்படும்? என்ற வினா முக்கியமானது. இந்த வினாவுக்குத் தொல்காப்பியம் விடைசொல்கிறது. உருவகமாக, உவமையாக, உள்ளுறையாக, இறைச்சியாக உளவியல் பாங்கு வெளிப்படுமை என்பதே தொல்காப்பிய விளக்கம். உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி என்ற பொருள் புலப்பாட்டு வரிசையில் ‘முன்னம்’ என்ற உத்தி மிகுந்த இன்றியமையாமை பெறுகிறது. அதாவது தொல்காப்பியம் குறிப்பிடும் ‘முன்னம்’ என்பது ‘உளவியல்’ பூர்வமான இலக்கிய வெளிப்பாட்டு அம்சம் எனக் கொள்ளலாம்.

5. ‘இவ்விடத்து, இம்மொழி, இவர் இவர்க்கு உரிய என்று அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம்’ (தொல். 1443ஆம சூத்திரம்) தொல்காப்பியம் சொல்லும் இந்த நூற்பாவுக்கு அறிஞர் கூறும் பொருள்விளக்கம் முக்கியமானது ஆகும். அறிஞர் தமிழண்ணல் அவர்கள், ‘முன்னம் என்பது பொதுவாகக் ‘குறிப்பு’ என்றும், ஒருவரது ‘உள்ளக்குறிப்பு’ என்றும் பொருள்படும்’ என்பார். ‘முன்னம்’ என்ற கவித்துவ அமைப்பு முறைபற்றிச்சொல்ல வந்த அறிஞர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களும், ‘இவ்விடத்து இம்மொழியை, இவர்க்குச் சொல்லத் தகும் என்று குறித்து, அவ்விடத்து. அவரவர் தம்மொழியை உரைப்பது முன்னம் ‘ என்று உரைக்கக் காணலாம்.

6. இத்தகைய ‘முன்னம்’ என்ற ‘உளவியல்’ சார்ந்த அழகியல் கவிதைகளுக்குச் சங்கத்தமிழ் அகத்திணைப்பாடல்களே மிக உயரிய சான்றுகளாக விளங்குகின்றன. இந்தச் சிறிய கட்டுரையில் மூன்று சான்றுகளைக் காண்போம். ‘அகவன் மகளே , அகவன் மகளே

மனவுக்கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்

அகவன் மகளே , பாடுக பாட்டே!

இன்னும் பாடுக பாட்டே, அவர்

நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே!'

என்ற ஔவையார் பாட்டு , 'உளவியல்' அமைப்புக்கும் அழகுக்கும் புகழ்பெற்ற பாட்டு. தொல்காப்பிய, சங்க இலக்கிய ஆய்வாளர்கள் அனைவரும் சுட்டிக்காட்டும் பாட்டு இந்தப்பாட்டு தோழி பாடுவதாக அமைகிறது.

'பாட்டுப்பாடுகிற கட்டுவிச்சியே, நீ மேலும் மேலும்பாடு. தலைவனுடைய குன்றம் பற்றிய பாடலை நீ மறுபடியும் பாடு' என்று தோழி கேட்கிறாள். ஐந்தே ஐந்து அடிகள் கொண்ட குறுந்தொகைச் சிறிய பாட்டில், தோழி, ' தலைவனுடைய மலையைப்பற்றி மறுபடியும் பாடு என்று ஏன் கேட்கிறாள்? இந்தக் கவித்துவ அமைப்புதான் 'முன்னம்' என்ற அழகமைந்த 'உளவியல்' அமைப்பு ஆகும். 'உளவியல்' பாங்கும் அழகும் அமைந்த இந்தப்பாட்டுக்கு அறிஞர் பெருமக்கள் எழுதியுள்ள குறிப்புரைகள் சிந்திக்கத் தக்கவை. 'தோழி, இடைப்புகுந்து உரைக்கிறாளே, அது ஏன்?

'தோழி ஏன் அவர் மலையைப்பாடுக என்று கேட்கிறாள்? என்று தாய் சிநத்திக்கத் தொடங்கிவிடுவாள்' -என்று அறிஞர் வ.சுப.மா அவர்கள் குறிப்பு எழுதினார்கள். 'அவர்' என்ற சொல்லைக் கேட்டதும் தாய்க்கு 'ஆராய்ச்சி' பிறந்துவிட்டது என்று அறிஞர் தமிழண்ணலும் எழுதினார்கள். ஐந்து அடிகள், பத்தொன்பது சீர்கள் கொண்ட இந்தச் சிறிய பாட்டுக்குள் எத்தனை பெரிய உளவியல் நாடகம்!

'முன்னம்' என்ற அழகியல் பொருந்திய உளவியல் பாட்டுக்கு இன்னொரு சான்றாக மற்றுமொரு பாட்டு, ஐங்குறுநூறு , 203ஆம்பாட்டு, குறிஞ்சி கபிலர் தீட்டிய அழகிய சொல்வோவியம்.

'அன்னாய் , வாழி, வேண்டு, அன்னை, நம்படப்பைத்

தேன் மயங்கு பாலினும் இனிய –அவர்நாட்டு

உவலைக் கூவற் கீழ்

மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே!'

தலைவனோடு தலைவி உடன்போய் , அவனை மணம் செய்துகொண்டு , தாய்வீட்க்கு வருகிறாள். அவளைப் பார்த்த தோழி, 'நீ உன் தலைவனோடு போய்விட்டாய், அவனுடைய நாட்டில் கிணற்று நீர் நல்ல நீர் இல்லையாமே, இலைகளும் , தலைகளும் விழுந்து அழுகிப்போன

தண்ணீர்தான் கிடைக்குமாமே! நமது நாட்டில், தோட்டத்தில் , தேனும் பாலும் கலந்தது போன்ற தண்ணீர் குடித்தாய்! அப்படியிருக்க, உன் தலைவனுடைய ஊரின் கிணற்று நீரை எப்படி அருந்தினாய்?' என்று கேட்டாள் அவளுக்குத் தலைவி சொன்ன மறுமொழிதான் இந்தப்பாட்டு 'நீ சொல்வதுபோல , அவர் நாட்டில் கிடைக்கும் தண்ணீர் இலை மக்கியதும், விலங்குகள் கலக்கியதுமாக இருக்கலாம். ஆனால் அதுதான், எனக்கு இனிமை தந்த தண்ணீர் ' என்று தலைவி சொல்கிறாள். ஐங்குறுநூறு- இந்த நான்கு அடிப்பாட்டுக்கு உரை எழுதிய உரையாசிரிகள், 'இந்தப்பாட்டு ஓர் அழகிய உளவியல் பாட்டு, இன்ப உணர்வுக்கும், துன்ப உணர்வுக்கும் மனம்தான் காரணம், உளவியல் ரீதியாக தலைவி துன்பச் சூழ்நிலையை இன்பச் சூழ்நிலையாக மாற்றிக்கொள்கிறாள்' என்று எழுதினார்கள்.

சங்க இலக்கியத்தில் 'உளவியல் பாங்கு' அல்லது 'சிறப்பு' என்பது கூற்று நிலைபற்றியதும் ஆகும். எல்லாக் கருத்துக்களையும் எல்லாரும் கூறிவிடமுடியாது. நினைத்த கருத்துக்களை நினைத்தவாறும் கூறிவிடமுடியாது. இந்த வரையறை 'உளவியல் ' தொடர்பானது. ஒரு சூழ்நிலையில் நற்றாய் பேச முடியாத நிலையில் , அவளது நிலைப்பற்றித்தோழி எடுத்து மொழிகிறாள். இவ்வாறு ஒரு பாத்திரத்pன் நிலை பற்றி வேறு ஒரு பாத்திரம் பேசுவதைக் 'கொண்டெடுத்து மொழி'ஷ என்று தொல்காப்பியம் (1447)குறிப்பிடுகிறது. இத்தகைய 'கொண்டெடுத்து மொழி ' அமையும் இடம்பற்றி விளக்கும் இடத்தில் டாக்டர் ஆ. அமிர்தகௌரி (சங்க இலக்கியத்தில் உரையாடல்) 'உரையாடல் பண்பு மிகுதியும் ஒளிர்கிறது ' என்று எடுத்துக்காட்டுவார் . இத்தகைய கொண்டெடுத்து மொழி' அமைந்த உளவியல் ரீதியான அழகிய சான்றுக்கு அகநானூறு ஊட்டியார் பாட்டு (68) அறிஞர்களால் எடுத்துக்காட்டப்படுகிறது. தலைவன் இரவில் தலைவியைச் சந்திக்க வந்து நிற்கிறான். அவனுடைய வரவைத் தலைவிக்கு அறிவிக்க வேண்டும். இந்த நிலையில் அன்னை துயில்கிறாளா, துயிலாதிருக்கின்றாளா என்று அறிந்து கொள்ளவேண்டும். தான், எவ்வாறெல்லாம் உரை செய்து, அன்னை தூங்குகிறாள் என்று ஆராய்ந்தேன் என்று விளக்கி, தோழி உரை செய்வதே இந்தப்பாட்டு. இது தோழி 'துயில் ஆராய்ந்த முறை' என்று அறிஞர்கள் எடுத்துக்காட்டுவர். இத்தகைய 'கொண்டெடுத்து மொழி' அமையும் இடத்தில் 'ஒரே களத்தில் இரண்டு காட்சிகள் தோன்றும் ' என்று டாக்டர் ஆ. அமிர்தகௌரி சுட்டிக்காட்டும் இடம் முக்கியமானது ஆகும்.

இத்தகைய அழகியலும் உளவியலும்தான் தமிழ்ச் சங்க இலக்கியத்தை உலகளாவிய உயரத்தில், உயர்தனிச் செம்மொழிஎன்ற உச்சத்தில் அமர்த்தி வைத்திருக்கிறது. உளவியலும் அழகியலுமாய் அமைந்து மிளிர்கின்ற சங்க இலக்கியப் பாடல்களை வாசிக்குபோது பிரெஞ்ச்

நாட்டுச் சிந்தனையாளரும், அவர்சொன்ன முத்திரை வாக்கியமும் தான் நினைவுக்கு வருகின்றன. அவர்சொன்னார்'

' பிரெஞ்ச் நாட்டுச் சிந்தனையாளர் 'மலார்மே' கூறிய இந்த முத்திரை வாக்கியத்தைத்தமிழ்ச் சங்க இலக்கியத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து மேலும் மேலும் ஆராய்வது நமது கடமையாகும்.

உடற்கூறு அறிவியல்

முனைவர் க. சத்யா, உதவிப் பேராசிரியர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை

கல்தோன்றி மண்தோன்றா காலத்து- வாளொடு

முன்தோன்றிய மூத்தகுடி"

என்று தமிழ்க் குடியின் தொன்மையை புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.

கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்

உன் உரத்து உதித்தெழுந்து ஒன்றுபல ஆயிடினும்

ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையா

உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே என்று தமிழ் மொழியின் செம்மைத் தன்மையினைப் பாடியுள்ளார் மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை.

செம்மையும், தொன்மையும் நிறைந்த செம்மொழி இலக்கியங்களில் ஆங்காங்கே அறிவியல் சார்ந்த கருத்துகளும் இடம் பெற்றுள்ளன. இதனை மருத்துவ அறிவியல். வானியல், மின்னணுவியல், ஒலியியல், கணிப்பொறி அறிவியல், உடல்கூறு அறிவியல் எனப் பல்வகைப் படுத்தலாம். இவற்றில் உடற்கூறுஅறிவியல் பற்றிய செய்திகளை இக்கட்டுரை தந்து நிற்கின்றது.

உடற்கூறுஅறிவியல்

மனிதன், விலங்குகள், தாவரங்கள் ஆகியனவற்றின் உடலமைப்புகள் பற்றிய அறிவியல் ஆய்வு "உடல்கூறுஅறிவியல்" ஆகும். ஆங்கிலத்தில் இதனை ‘ ‘ என்றழைப்பர்.

தொல்காப்பியத்தில் உடல்கூறு அறிவியல்

வாழ்விற்கான இலக்கணமாகிய பொருளிலக்கணம் கூறுவது தொல்காப்பியத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும்.

உயிர்களின் பாகுபாட்டைக் கூறும் தொல்காப்பியர் ஓரறிவு முதலாக ஆறறிவு ஈறாக உள்ள உயிரினங்ககளை வகைப்படுத்தும் பொழுது அவ்உயிரிகளுக்கான உடல் உறுப்புகள் வெளிப்படுகின்றன.

சான்றாக

1. தொடு உணர்வு உள்ள உயிரிகளான புல்லும், மரமும் ஓரறிவு உடையன என்றும்

2. சுவைத்தன்மையை அறியக்கூடிய உறுப்பாகிய நாக்கைப் பெற்றுள்ள உயிரினங்கள் ஈரறிவு உடையன என்றும்

3. நுகர்தல் தன்மை உடைய மூக்கைப் பெற்றுள்ள உயிரிகள் மூவறிவு உடையன என்றும் இவைகளோடு

4. நாக்கைப் பெற்றுள்ள உயிரிகள் நாலறிவு உடையன என்றும்,

5 காதுகளைப் பெற்றுள்ள உயிரிகள் ஐந்தறிவுடையன என்றும் கூறும் தொல்காப்பியர்

மேற்கண்ட ஐந்து உறுப்புகளோடு ஆறாவதாக நன்மை தீமையை ஆராய்ந்து மனத்தால் அறியக்கூடிய மனித இனம் ஆறறிவுடையன என்று கூறுமிடத்திலும் அவ்வறிவு உடைய உயிரினங்களை இனங்கண்டறிந்து வகைமைப்படுத்துமிடத்திலும் தமிழிர்களுடைய அறிவியல் பார்வை பரந்துபட்டிருக்கின்றன.

மனித உடல் உறுப்புகள்

எழுத்துகளின் பிறப்பைக் கூறும்பொழுது

உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட என்ற வரிகளில் மனிதனின் உடல் உறுப்புகளான தலை, கழுத்து, நெஞ்சு , பல், நாக்கு , மூக்கு , இதழ், உந்தி (வயிற்றின் அடிப்பகுதி) வெளிப்படக் கூறப்பட்டுள்ளன.

இவ்உறுப்புகளை சங்க இலக்கியங்கள் பலவும் அழகுறக் கூறும்பொழுது அவ்உறுப்புகளின் செயல்பாட்டை படிப்போரின் கண்முன் நிறுத்துகின்றனர். மேலும் எண்வகை மெய்ப்பாடுகளும் வெளிப்படும் பொழுது அவை வெளிப்படும் களங்களாக மனித உடலுறுப்புகள் அனைத்தும் அமைந்துவிடுகின்றன.

உடல்உறுப்புகள் செயல்பாடு

அதியமான் நெடுமான் அஞ்சியின் சினம் மிகுந்த தன்மையைக் கூறும்பொழுது

“மெய்யது வியரே, மிடற்றது பசும்புண்” என்றும்
செறுவர் நோக்கிய கண் தன்
சிறுவனை நோக்கியுஞ் சிவப்பு ஆனாவே (புறம் 100)

என்ற வரிகளில் அவ்வுறுப்புகளின் செயல்பாடுகள் கூறப்பட்டுள்ளன.

கால்

பாண்டியன் நெடுஞ்செழியனின் கால் வலிமையைக் கூறும் இடைக்குன்றூர் கிழார் வணங்கு தொடைப் பொலிந்த வலிகெழு நோன்தான் என்றுரைக்கிறார்(புறம்-78)

கால் தொண்டைமான் இளந்திரையன் நெடுமுடியளந்த திருமாலின் மரபில் தோன்றியவன் எனுமிடத்தில்

. . . . . நீயிரும்

இருநிலங் கடந்த திருமறு மார்பின் என்றுரைக்கின்றது பெரும்பாணாற்றுப்படை. இருநிலங்களை கடப்பதற்கான கால் எனும்பொழுது அக்கால்களின் வலிமை கூறப்பட்டுள்ளது.

வயிற்றுகோடு

பேரியாழின் தன்மை பற்றிக் கூறும்பொழுது மணம் வீசும் கூந்தல் உடைய பெண்ணின் வயிற்றில் தொடங்கி மார்பில் முடிகின்ற மயிர் வரிசை போன்று நடுவில் தோலை இழுத்துத் தையல் இட்டனர் என்பதை

அடங்குமயிர் ஒழுகிய அவ்வாய் கடுப்ப

அகடுசேர்பு பொருந்தி அளவினில் திரியாது

கவடுபடக் கவைஇய சென்றுவாங்கு உகுடுந்தி

. . . .

வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்

என்கிறது (மலைபடுகடாம்-32)

கை

பெண்களின் கைகளிலும் உரோமம் எனும் முடிகள் காணப்பட்டதென்பதை

“பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை”

(நெடுநல்வாடை-141)

எடுத்தியம்புகின்றது.

எலும்பு

உடம்பானது எலும்புகளால் ஆனாது என்பதனை

“உடும்பு உரித்து என்பு எழு மருங்கின்” (புறம்-68)

என்று புறநானூறும்

“என்புதோல் போர்த்த உடம்பு “ என்று திருக்குறளும் எடுத்தியம்புகின்றது.

நாக்கு

நாக்கைப் பற்றிக் கூறம்பொழுது”எரி மறித்தன்ன நா” என்று சிறுபாணாற்றுப்படையும்

“மதந்தபு ஞமலி நாவி னன்ன” என்று மலைபடுகடாமும் எடுத்துரைக்கின்றது.

கூந்தல்

“விரைவளர் கூந்தல்” என்று புறநானூறும்

வயது முதிர்ந்த பெண்களுக்கு நரைத்த கூந்தல் காணப்பட்டதென்பதை

“பெரும்பின் னிட்ட வான்நரைக் கூந்தலர்

நன்னர் நலத்தர் தொன்முது பெண்டிர்” என்று சிறுபாணாற்றுப்படையும்

“நறுவிரை துறந்த நாறா நரைத்தலை என்று புறநானூறும் கூறுகின்றது.

இளம் பெண்களின் கூந்தலைப் பற்றி

“கொடிக் கூந்தல் (குறுந்தொகை 132)

நரைவிரா வுற்ற நறுமென் கூந்தல் (புறம்-228)

என்றும்

“மையுக் கன்ன மொய்யிருங் கூந்தல்”

“அகிலுனவிரித்த அம்மென் கூந்தல் “ (சிறுபாணாற்றுப்படை) என்றும் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றது.

மூக்கு

தசைப்பகுதி அற்ற தோலால் போர்த்தப்பட்ட எலும்புகளால் ஆன தென்பதை

“உள் ஊண் வாடிய கரி மூக்கு (அகம்-53)

என்றும்

“நொள்ளை” என்றும் இலக்கியங்கள் கூறுகின்றன.

காது

காதைப் பற்றிக் கூறும்பொழுது “கருமறிக்காது” என்று கூறப்பட்டுள்ளது. காதின் மேற்பகுதியில் லேசான ரோமங்கள் காணப்படுவதால் அது கருமை நிறமுடைய ஆட்டின் காதுபோல தோன்றுகின்றதென்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

கண்

குவளை மலர் போன்ற வடிவுடைய கண் என்பதை “குவளை யுண் கண்” (நற்-205) என்றும் பொலிவிழந்த கண்ணைப்பற்றிக் கூறுமிடத்தில்

“தோளே தொடி கொட்ப ஆனா, கண்ணே

வாள் ஈர் வடியின் வடிவு இழந்தனவே" (நற்-133)

என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனால் அழகுடன் கூடிய விழிகளின் தன்மையும் , அதே நேரத்தில் உள்ளத்தில் உள்ள வருத்தங்களை கண் வெளிப்படுத்தும்பொழுது அதன் பொலிவற்ற தன்மையும் கூறப்பட்டுள்ளது. மேலும் உடற்பகுதிகளில் காணப்படுகின்ற வரி போன்ற வெள்ளை நிற கோடுகளை தற்காலத்தில் தேமல் என்று குறிப்பிடுகின்றோம். அவற்றால் அழகு கெடுவது அனைவரும் அறிந்தது. இந்த செய்தியை

"தொய்யில் வனமுகை வரிவனப்பு இழப்ப(நற்-225)

நற்றினை பதிவுசெய்துள்ளது..

உடல் உறுப்புகளில் ஏதேனும் குறைபாடு இருந்தால் அவற்றால் பயனில்லை என்பதனை

"சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்,

கூறும் , குறளும், உனமும் , செவிடும்,

மாவும், முருளும் உளப்பட வாழ்நர்க்கு

என்பேர் எச்சம் என்றிவை எல்லாம்

பேதைமை அல்லது ஊதியம் இல்"(புறம்-28)

என்று புறநானூறு கூறுகின்றது.

இவைகளில் சிதடும் என்பவை கண்பார்வை இல்லாத தன்மை ஆகும். பிண்டம் என்பது வடிவற்ற தசைத்திரன் ஆகும். மா என்பது விலங்கு வடிவமாகக் குழந்தை பிறத்தல் ஆகும். இவ்வாறு குறைபாடு உடைய உடலமைப்புகளைப் பற்றிக் கூறுமிடத்தில் ஆசிரியரின அறிவு நுட்பமும் அக்காலத்தில் காணப்பட்ட உடல்குறைபாடுகள் பற்றியும் அறியமுடிகின்றது.

வாய்மட்டும் பேச இயலாதவர்களை

"உடம்பி னுரைக்கு முறையா நாவின்"(முல்லைப்பாட்டு-65)

என்றும்

அவர்களும் அரண்மனைகளில் பணி செய்தனர் என்றும் முல்லைப்பாட்டு பதிவு செய்துள்ளது.

இவ்வாறு தொல்காப்பியர் கூறிய உடல் உறுப்புகளையும். அவ்வுறுப்புகளின் செயல்பாடுகளாக இலக்கியங்கள் கூறியதனையும் சான்று காட்டப்பட்டுள்ளன.

இதே வகையில் நன்னூலாரும் முதல் எழுத்துக்கள் பற்றிக் கூறுமிடத்தில் உயிர் வேறு, உடல்வேறு என்பதனை நிறுவியுள்ளார்.

“உயிரும் உடம்பும் ஆம் முப்பது முதலே” என்ற இடத்தில் தமிழ் மொழியை ஒரு உயிரினத்திற்கு ஒப்பிட்டு இருக்கும் ஆசிரியர்அவ்வியுரியின் இயக்கத்திற்குத் தேவையான உயிர் சக்திகளாக 12 உயிர் எழுத்துக்களையும் 18 மெய்யெழுத்துக்களையும் கூறும் நிலையில் உயிர் வேறு உடம்பு வேறு என ஆராய்ந்து பார்க்கும் அறிவியல் திறத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

திருமணம்

களவு வாழ்க்கையின் தன்மை பற்றிக் கூறும் பொழுது எண்வகை மணங்கள் கூறப்பட்டுள்ளன. அவை பிரமம், பிரசாபத்தியம் , ஆரியம் , தெய்வம். காந்திருவம், அசுரம் , இராக்கதம், பைசாசம் என்பன. இவைகளில் காந்திருவம் என்பதற்கு “ஒத்த இருவர் தாமே கூடும் கூட்டம்” என்றுரைக்கின்றனர் உரையாடசிரியர்கள்.

“ஒத்த இருவர்” என்ற இடத்தில் தலைமக்களுக்குரிய ஒப்புமைகளான பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, அழகு, அன்பு, அடக்கம், கருணை, அளவு , செல்வம் என்ற பத்து அமைப்புகள் வந்தடைகின்றன.

இவற்றுள் ஆண்டு என்பதற்கு “ஒருவரினொருவர் முதியரின்றி ஒத்த பருவத்தராதல் அது குழவிப்பருவங் கழிந்து 16 பிராயத்தானும், 12 பிராயத்தாளும்” ஆதல் என்கிறார் இளம்பூரணர் எண்வகை மணங்கள் இருந்த பொழுதிலும் கந்திருவமே சிறந்தது என்பது போல குழவிப்பருவம் கடந்த மங்கைப்பருவ பெண்ணின் வளதை (12) 16 வயதுடைய தலைமகனின் ஒப்புமைக்காகக் கூறும்பொழுது அவர்களுடைய உடல் முதிர்ச்சியும் கவனிக்கப்படும் ஆதலால் அங்கு “உடல் கூறு அறிவியல்” ஆய்வு வெளிப்படுகின்றன.

கருவுறுதல்

பெண்களின் கருவுறு காலத்தைப்பற்றிக் கூறும்தொல்காப்பியர்

“பூப்பின் புறம்பா டீரறு நாளும்
நீத்தகன் றுரையார்” என்றுரைக்கின்றார்.

இதனையே

“தீண்டாநாண் முந்நாளு நோக்கார் நீ ராடியபி
னீராறு நாளு மிகவற்க வென்பதே
பேரறி வாளர் துணிவு” (ஆசா-கோவை.420)

என்றுரைக்கின்றது.

கருவுறுவதை இலக்கியங்கள் “சூளுறுதல்” என்றுரைக்கின்றன. இதனை குற்றாலக் குறவஞ்சியில் அங்கு இருக்கக்கூடிய கருவுற்ற சங்குகள் தனது சிப்பிகளை வெளிக்கொணர வருத்தமுறுகின்றன என்ற இடத்தில் “சூல்’ எனும் சொல் கையாளப்பட்டுள்ளன.

பெண்களுடைய பேறு காலத்தை சாத்தந்தையார் “பெண்ணீற் றுற்றெனப்”(புறம்-82) எனப் பாடியுள்ளார்.

மேலும் கருவுற்ற பெண்கள் மண் உண்பர் என்பதனை

“வயவுறு மகளிர் வேட்டு உணின் அல்லது

பகைவர் உண்ணா அரமண் ணினையே”(புறம்-20)

என்கிறார் குறுங்கோழியார் எனும் புலவர்.

அடுத்ததாக மனித உடம்பானது நீரால் அமைந்தது என்பதை

“நீர் இன்று அமையா யாக்கை” என்றும் அவ்வுடம்பின் இயக்கத்திற்கு தேவையான உணவு கொடுத்தவர்களே உயிர்கொடுத்தோராவர் என்பதனை

“உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரரே:

உண்டி முதற்றே உணவின் பிண்டம்”

என்றும் பாடப்பட்டுள்ளது.

ஆதலால் மனித உடம்பானது நீராலும், உணவாலும் இயங்குகின்ற தன்மை உடையது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சான்றுகளின் மூலமாக பண்டைய மக்களின் உடற்கூறுகள் பற்றிய அறிவியல் அறிவு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இயற்பியல்

கி. கிருஷ்ண குமார்

முதுநிலை இயற்பியல் ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, திருவாடானை

தமிழ் இலக்கியங்கள் வாழ்க்கையை எதிரொலிக்கின்றன. இயல்பு வாழ்க்கையா அல்லது கற்பனை வாழ்க்கையா என்பதை முடிவு செய்வதில் சில நேரம் தடுமாற்றம் நிகழும் ஏன் நம் சிலப்பதிகாரத்தையே கற்பனைக் கதை என்றும் உரைப்பர்

அறிவியல் வளர்ச்சி மிகுந்த காலம் ஒன்று இருந்ததோ என்ற எண்ணத்தை தோற்றுவிக்கும் படியான செய்திகள் உள்ளன. இந்த நூற்றாண்டில் உள்ள சில கருவிகள் அக்காலத்திலேயே பயன்பாட்டில் இருந்தன.

இன்றைய தினம் எத்தனையோ இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளது. தமிழ் மொழியின் பிறப்பிடம் குமரிக் கண்டமே குமரிக்கண்டம் பெரியது. ஆஸ்திரேலியா முதல் தென்ஆப்பிரிக்கா வரை இந்தியாவையும், இமாசல பிரதேசத்தையும் இணைந்தது உலகின் முதலில் பேசிய மொழி தமிழ்மொழிதான். ஆனால் குமரிக்கண்டம் மூழ்கியதை சிலப்பதிகாரம் மூலம் தெரிந்து கொள்ளலாம். உலகின் 6 துவக்க மொழிகளில் தமிழ் மொழி முதல் மொழி ஜப்பான் நாடு அனைத்து பல்கலைக்கழகங்களிளும் யாதும் ஊரே யாவரும் தேநீர் என்ற கணியன் பூங்குன்றனார் பாடல் வாயிலில் தமிழ் மொழிமயிலும் , ஜப்பான் மொழியிலும் எழுதப்பட்டுள்ளதைநாம் அறியும் போது நம் உள்ளம் மிகவும் பூரிப்படைகிறது.

ஐம்பெரும் பூதங்களின் படைப்பு உலகம், இறைவன் படைப்பன்று அது எனத் தொல்காப்பியம் (மரபியல் -89) சுட்டும். 'நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம உலகம் அணுவின் தோற்றம் என்கிற கருத்து பி;ன்னர் தலையெடுத்தது. கிரேக்கத்திலும் இவ்வகை கருத்து ஒரு காலத்து நிலவியது. இன்று 'அணு' நியூட்ரான் என்பதோடு இணைத்துப் பேசப்படுகிறது. இயற்பியலின் பிற கூறுகளான ஒலி, ஒளி பற்றிய பல குறிப்புக்களும் உள்ளன. கதிர், சுடர், ஒளி, நிலா முதலிய சொற்கள் ஒலியைக் குறிக்க உள்ளன. சும்மை, அரவம், ஒலி, ஓதை, கம்பலை என்பன ஒலியைச் சுட்டும்.

மேலும், கி.பி16ஆம் நூற்றாண்டு வாக்கில் வடிவமைக்கப்பட்ட தற்காலததிய கரியக் கடிகை தொழில் நுட்ப ஆதாரம் நெடுநல்வாடையிலும் இடம் பெறக் காண்கிறோம்.

வான நடுவரையாகிய சூரியவீதி செங்குததாக நிறுத்தி வைக்கப்பட்ட கோலினைச் சுற்றி வட்டம் அமைத்து கிழக்கு, மேற்கில் வரையிட்டு, அதில் விழும் நிழல் அளவைக் கொண்டு காலததைக் கணிக்கும் உத்தியினை நம் முன்னோர் அறிந்திருந்தனர்.

‘விரிகதிர் பரப்பிய வியன்வாய் மண்புலம்

. . . . . .

. . . . . மனைவகுத்து (நெடுநல்வாடை-73:78)

வாழ்ந்தனர் நம் முன்னோர். ஆயின் இன்றைய நவீன அணுவியல் கடிகாரம் ( ) நம் தொழில் நுட்ப வளர்ச்சி. அவ்வாறே , ‘தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட பனையளவு காட்டும் படிமம்’ பற்றிய கபிலர் சிந்தனையே இன்று அண்டவெளி ஆராய்ச்சியில் காலங்காட்டிகளாக விளங்கும் தொலைகாட்டி வில்லைகள்!

‘வலவன் ஏவா வானவூர்தி (புறம்-27:9) என்கிற உறையூர் முது கண்ணன் சாத்தனார் கருத்தோட்டமே இன்றைக்கு வலவன் அல்லது ஓட்டுநர் இன்றி விண் சுற்றித் திரும்பும் ரஷிய நாட்டு எனர்ஜியா –புரான் அதி பிரம்மாண்ட விண்வெளி ஓடத்தின் முன்னோடிச் சிந்தனை எனலாம். புலவர் பாடும் புகழுடையோர் விசிம்பில் வலவன் ஏவா வானவூர்தி எய்தும்

புலவர்களால் பாடப்பெறும் புகழ் உடையாம் வானத்துப் பூட்டுனர் இல்லாமல் வானவூர்தியில் பறந்து செல்லும் பெருமை அமையா.

பேரண்டத் தோற்றம் குறித்து மேலை நாட்டு அறிஞர் பெருமக்கள் கடந்த சில நூற்றாண்டுகளாகப் பெரும் முயற்சி எடுத்து தங்களின் கருத்துகளை முன்வைக்கின்றனர். அறிஞர் பெருமக்கள் பலரும் ஆய்வு செய்து வருவதால் மாறுபட்ட கருத்துக்களும் எழுகின்றன.

எனினும், சென்ற நூற்றாண்டில். ஃபிரெட் ஹாயல் என்பார் பெருவெடிப்புக் கொள்கையில் நம்பிக்கை கொண்டு என்னும் சொல்லை உருவாக்கிப் பிரபஞ்சக் கோட்பாட்டினை விளக்கினார்.

இன்று பெரும்பாலோர் பெருவெடிப்புக் கொள்கையை ஏற்றுக்கொள்கின்றனர். தொடர்ந்து ஆய்வில் ஈடுபட்டும் வருகின்றனர்.

பலகோடி ஆண்டுகளுக்கு முன்னால் எதுவும் அறிய முடியாத நுண்ணிய ஒன்றிலிருந்து ஒரு நொடிப்பொழுதிற்கும் குறைவான நேரத்தில் மிகப்பெரிய வெடிப்பு ஏற்பட்டது. பருப்பொருட்கள் அனைத்தும் ஒன்றாகச் சுருங்கி அணுவை விடச் சிறியதாகி மீவெப்பமும் அடர்த்தியும் கொண்ட பந்தாக உருவாயின. அப்பந்து மெல்லக் குளிர்ந்து விரிவடைந்து மீண்டும் சிதறியது. அப்போது ஆற்றலும் பருப்பொருட்களும் எல்லாத் திசைகளிலும் பரவின. இந்த நிகழ்வினையே பெரு

வெடிப்புக்கொள்கை என்கின்றனர். எல்லாத் திசைகளை நோக்கியும் இந்தப் பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டே போகிறது.

விஞ்ஞானிகள் தரும் விளக்கம் தமிழர்களுக்கு புதிய செய்தி அன்று. பழந்தமிழர்கள் பிரபஞ்சம் குறித்துச் சிந்தித்து வெளியிட்ட கருத்துகளை ஒப்பிட்டு பார்த்தால் அறிவியல் மேலோங்கிய பழந்தமிழ் அறிஞர்களின் பெருமை புலப்படும்.

ஞாலம்

ஞாலம் என்றால் உலகம் என்று பொருள். இந்தச்சொல் 'ஞால்' என்னும் சொல்லடியிலிருந்து தோன்றியதாகும். ஞான் என்பதற்கு 'தொங்குதல்' என்பது பொருளாகும். இந்த உலகமானது எந்த பற்றுக்கோடும் இல்லாமல் அந்தரத்தில் தொங்கிக்கொணடு இருப்பதால் உலகத்தை 'ஞாலம்' என்னும் சொல்லால் தமிழர் அழைத்தனர்.

மண்புலம் -

தேவநேயப் பாவாணர், மண்டலம் என்னும சொல்லே மண்புலம் எனவாயிற்று என்று கருதுகிறார். 'மண்+; தலம் ஸ்ரீ மண்டலம்,ஞாலம்போல வட்டமாயிருப்பது வட்டம்' என்று பொருள் காண்கிறார். புறநானூற்றில், 'செஞ்ஞாயிற்றுச் செலவும அஞ்ஞாயிற்று பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்' என்னும் தொடர் காணப்படுகிறது. 'மண்டு' என்பதற்கு 'வளை' என்னும் பொருளும் இருப்பதால் நீண்டு வளைந்த வட்டப்பாதையைக் குறிக்க 'மண்டிலம்' என்னும் சொல்லை தமிழர்கள் கையாண்டுள்ளனர். சூரியனைச் சுற்றி நீள்வட்டப்பாதையில் தான் கோள்கள் இயங்கி வருகின்றன. அந்த வட்டப்பாதையைக் குறிக்கும் பழந்தமிழ் சொல்லே மண்டிலம்

ஞாயிறு

சூரியன் தனக்கென ஒரு குடும்பததை வைத்துக் கொண்டுள்ளது. ஒன்பது கோள்கள் சூரியனை சுற்றி வருகின்றன. (புளூட்டோ ஒரு கிரகம் தானா? என்ற ஆய்வும விவாதமும் தொடர்கின்றன) 'பரிப்புச் சூழ்ந்த மண்டிலம்' என்று புறநானூறு கூறுவதன் மூலம் சூரியன் மற்ற எல்லாக் கிரகங்களையும் ஈர்க்கும் ஆற்றல் பெற்றுள்ளது என்பது தெளிவாகிறது. 'ஞால்' என்றால் தொங்குதல். எவ்வித பற்றும் இல்லாமல் தொங்கிக் கொண்டிருக்கும் ஒன்பது கோள்களையும் இறுகப் பற்றியிருப்பதால் சூரியனை 'ஞாயிறு' என்று அழைத்தனர்.

செவ்வாய்

வாய் என்பதற்கு இடம் என்னும் பொருளும் உண்டு. சிவந்து இரக்கும் இடமே செவ்வாய். விண்வெளி ஓடங்களும் செயற்கைக் கோள்களும் இன்று செவ்வாய்க் கோளைப் படம் எடுத்து

அனுப்புகின்றன. அப்படங்கள் தமிழரின் கூர்ந்த மதியினை மதிக்கும் சான்றுகளாக இருக்கின்றன. செவ்வாய் கிரகத்தை 'செம்மீன்' என்றும் தமிழர் அழைப்பர். கடல்நடுவே தோன்றுகின்ற திமிலின் மீது இடப்பட்ட விள்க்குபோலச் செவ்வாய் மீன் விளங்கும் என்று புறநானூறு பகர்கிறது.

முந்நீர் நாப்பண் திமில் சுடர்போலர்

செம்மீன் இமைக்கும் மாக விசும்புன் (புறம்-60)

விண்மீன்

விண்மீன் என்றால் நட்சததிரம் மின்னுவதால் 'மீன்' என்று அழைக்கப்பட்டது. பூமியின் மேற்பரப்பில் காற்று மண்டலம் இருப்பதால் விண்மீன் மின்னுவது போலத் தோற்றம் அளிக்கிறது. உண்மையில் விண்மீன்கள் மின்னுவதில்லை. வான்வெளிக்குச் சென்று நட்சத்திரங்களைக் கவனித்தால் தொடர்ந்து ஒளி வீசியபடியே அவை விளங்கும் தன்மையை காணலாம்.

புறநானூற்றில் 229 ஆம் பாடலுக்குக் காணப்படும் உரையில் 'நக்கத்திரம்' என்னும் சொல் காணக்கிடைக்கிறது.நகு+அம்;+திரம் என்றும் பழந்தமிழ் சொல் நட்சத்திரம் என்று திரிந்துள்ளதாகச் சொல்வர். மிகுந்த ஒளியோடு நிலைத்திருப்பது என்று பொருளாகும்.நகுஸ்ரீஒளி.

உலகம்

உலவு என்னும் சொல்லின் அடியாக 'உலகம்' உருவானது. சுற்றுதல் என்பது பொருளாகும். சூரியனைச் சுற்றி வருவதால் 'உலகம் ' என்று வழங்கப்படலாயிற்று

நாள்மீன் கோள்மீன்

மீன் என்பது மின்னக்கூடிய ஒன்றை குறிப்பதாயினும் நாண்மீன் (நாள்-மீன்) என்பது 27 நட்சத்திரங்களைக் குறிக்கும். நட்சத்திரங்கள் வேறு கோள்கள் வேறு என்று அறிந்து கொண்டமையை இச்சொற்கள் தெளிவாக உணர்த்துகின்றன. சூரியனின் ஒளியைக் கொள்வதால் 'கோள்' என்று அழைக்கப்பட்டதாகவும் சொல்வர்

வான் மண்டலத்தை மிக நுட்பமாகக் கண்டுணர்ந்ததால் தான் மகச் சிறந்த சொற்களை உருவாக்க முடிந்தது. தொல்காப்பியர், 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று குறிப்பிடுவார். மேலே விளக்கிய சொற்களை ஆழ்ந்து நோக்கினால் 'வானியல்' ஆய்வறிஞர்கள் நிறைந்த நாடாகப் பழந்தமிழகம் இருந்திருக்க வேண்டும என்ற முடிவிற்கு வரலாம்

புறநானூற்றன் 30 ஆவது பாடல் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாக இருக்கிறது

செஞ்ஞா யிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்

. . . . . .

. . . . . .

. . . . . ஊரே'

வான்வெளியையும் ஞாயிற்றின் இயக்கத்தையும் விளக்கும் பாடல் இது. உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவரின் செய்யுள் இது.

' செஞ்ஞாயிற்றினது தீயும் அஞ்ஞாயிற்றினது . . . . . .

. . . . . கல்வியை உடையோகும் ஊர்.

இப்பாடலின் கருத்தால் பெறக்கூடிய செய்திகளாகக் கீழ்க்காண்பனவற்றைச் சுட்டலாம்.

1. வான்வெளியினைப் பற்றிய பரந்த அறிவினைப் பழந்தமிழர் பெற்றிருந்தனர்

2. வான்வெளிக்கே சென்று அளந்து வந்தவர்போல' அன்று சொல்வதால் வான்வெளிக்கும் போய் வந்தோர் இருந்துள்ளனர்.

3. வானியல் தொடர்பான கல்வியைக் கற்பித்தும் வந்துள்ளனர்.

புறப்பாடலின் கருத்தை கூர்ந்து நோக்கும்போது பழந்தமிழர்கள் வான்வெளியில் பயணம் செய்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும், புறநானூற்றின் (பா.27) 'வலவன் ஏவா வானூர்தி' என்னும் தொடர் காணப்படுகிறது. 'பாகனால் செலுத்தப்படாத விமானம்' என்று பழைய உரை விளக்கம் தருகிறது.

இன்று செயற்கைக் கோள்கள் அனுப்பப்படுவதைப்போல அன்றும் விண்கலம் ஒன்றை அனுப்பியிருக்கலாம் என்று எண்ண இத்தொடர் இடம் தருகிறது.

கரிய வானிடைக் கூரிய பார்வையைச் செலுத்தியிருப்பதால் தான் விண்வெளியைப் பற்றிய தெளிவான செய்திகளை புலவர்கள் தாங்கள் பாடல்களில் பதிவு செய்துள்ளனர்.

'வரிது நிலைஇய காயமும்' (புறம்-30) என்று கூட்டியுள்ளமை, 'வானத்தில் காற்றில்லாப் பகுதி உண்டு. என்பதை அக்காலத்தினர் 'காற்றையும் கடந்து நிற்பது வானம். 'வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம் (36513) என இது காட்டப்பெறுகிறது.

சமணமும் பௌத்தமும் தமிழகத்தே தலைத்தெழுந்த கால கட்டங்களில் (கி.பி.100-500) தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள் முழுக்க முழுக்க அறிவியல் நூலாகும்.

'அகர முதல எழுத்தெல்லாம்' (குறள்-10 ஆதிபகவனான சூரிய மண்டலம் முகிழ்த்த நாள் தொட்ட உலகில் தோன்றிப் பரிணமித்தன எனலாம். 'மலர் மிசை ஏகினான்'(குறள்-3) என்பது கூட நமது அண்டமாகிய ஆகாய கங்கை எனும் பால்வீதி உடுக்கணத்தின் விளிம்பால் இயங்கி வரும் சூரியக் குடும்ப நாயகனைத் தானே.

'கோள்இல் பொறியில் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை' (குறள்-9)

புதன் (குஜன்) , வெள்ளி (சுக்கிரன்), செவ்வாய்(படிமகன்), வியாழன்(குரு, அந்தணன்), சனி(இறையமன்) , ராகு (பாம்பு)கேது இவற்றுடன் திங்களையும் சேர்த்து எட்டுக்கோள்களும் முறையே சிறுமம், ஒளிர்வு, செம்மை, பருமம், தலைமை. தீமை, இருள், குளிர்ச்சி ஆகிய எண் குணங்களின் பிரதிநிதிகள், இவற்றின் இயக்குநரான சூரியனை 'ஞாயிறு போற்வுதும்' என வழிபடுவதும் காப்பிய மரபு

முதல் நாள் ஒளியைப் படைத்த தேவன் மறுநாள் நீரைப் படைத்ததாகவே உலகின் பல வேதங்களும் புராணங்களும் கூறுகின்றன. உலகப்பொதுமறையாம் , திருக்குறளும் ஒளிப்படைத்த ஞாயிறு வாழ்த்தினைத் தொடர்ந்து வான்மழைச் சிறப்பையே வகைப்படுத்துகிறது.

தவிர, ஆடு, எருது, இரட்டையர், நண்டு, சிங்கம், தேவதை துலாக்கோல், தேள், அம்பு, கடலாழி, குடம், மீன் ஆகிய உருவங்களில் அமையும் உடுக்கணங்களான பன்னிரண்டு இராசிகளின் வழியே சஞ்சரிக்கும் சூரியனோடு முரண்பட குளிர்விளங்கும் சந்திரனாகிய 'செல்வனொடு நிலை இய உரோகிணி' யை நினைத்துத் தன்னிலைக்கு இரங்கும பாண்மாதேவி நிலையை நக்கீரர் நெடுநெல்வாடையில் சித்திரிக்கிறார்.

'வானூர் மதியம் சகடணைய வானத்து
சாலி ஒருமீன் தகையாளைக்கோவலன்'
(சிலம்பு-மங்கல வாழ்த்து-50-50)

மணம்புரிவதாகப் பாடுகிறார் இளங்கோ அடிகள். சந்திரன் 2 ரோகிணி (சகடம்) இணைகின்ற நாளில் சாலினி மீனாகிய அரந்ததி ஒத்த கண்ணகியைக்கோவலன் மன்றல் புரிந்ததாக வரலாறு.

வடதிசையின் சப்தரிஷி மண்டலத்தின் பெருங்கரண்டி அல்லது பெருங்காடி வடிவ உடுக்கணததில் வால் நுனியிலிருந்து இரண்டாவதான 'மிசார்' எனும் வசிட்ட விண்மீனை நெருங்கியுள்ள அல்கோர் எனும் அருந்ததி விண்மீனே' கடவுளொடு மீன் சாலினி' (பரிபாடல்-5-44) என்றும், 'விசும்பு வழங்கு மகளிருள்ளும் சிறந்த செம்மீன்' (பதிற்றுப்பத்து 31-28) என்றும் சங்கத்தமிழர் வியந்து போற்றினார்.

'கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்'

(சிலம்பு –நாடுகாண்காதை 102-103) வற்றாது காவிரி என்பது இளங்கோ கூற்று, இங்கு கரியவன் -சனி , புகைக்கொடி தூமகேது, வால்விண்மீன் எனினும் இந்த இடத்தில் வெள்ளி என்பது

வடதுருவ விண்மீனையே சுட்டுவதாகும். சுக்கிரனை அன்று, பெருங்கரண்டி வடிவ சப்தரிஷி மண்டல முனை விளிம்பின் இரண்டு விண்மீன்களை இணைக்கும் நேர்கோடு சுட்டும் திசையில் அடிவானில் தோன்றும் போலாரிஸ் விண்மீனே இன்று நம் வடவிண்மீன்கள்.

இங்ஙனம் , சமண , பௌத்தக் கொள்கைகளினுடே பழந்தமிழர் வாழ்வியல் நுட்பங்களும் சங்கம் மருவிய கால கட்டங்களில் அறியக் கிடக்கின்றன. தவிர கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் கவிச் சக்கரவர்த்தி கம்பர் மறு பெயர்ப்பாக்கம் புரிந்த இராமாயணக்கதையிலும் வானத்தில் சஞ்சரிக்க வல்ல எந்திரத்தேர் பற்றிய தொழில் வட்டச் சிந்தனைகள் அநேகம்

'வானவூர்தி யிலேறிக் கோவலுடன் விண்ணில் எழுந்து மறைந்தாள் கண்ணகி என்பார் இளங்கோ அடிகள்.

தேவாரத்திலும் , 'போர் அரக்கண் புட்பகம்' (6-12-10) ஏனும் விமானம் மலைமீது ஓடாததைப் பாடுகிறார் அப்பர்.

பொறிவலம் திருகிட விண்ணிலேறி, பொறி இடம் திருகிட தரைமயிறங்குமாறு 'எந்திரவூர்தி ' (235) மயில்வடிவில் தயாரிக்கப்பட்டதாகத் திருத்தக்கதேவர் சிந்தாமணியில் சித்திரிக்கிறார்.

'வித்தக அணி வேண்டவயின் முருக்கி விண்ணகத்(து) இழிந்து விமானம் ஏறி' (133-194) பிறந்த உதயணன், யூகி ஆகியோர் பயணத்தை விவரிக்கிறார். பெருங்கதை ஆசிரியர் கொங்குவேள்.

கம்பராமாயணத்திலும் புட்பக விமானம்- எந்திர தேர் (ஆரண்ய காண்டம், சடாயு உயிர் நீத்தப் படலம் 3508) பற்றிய செய்திகள் பலப்பல.

சோழர் ஆட்சிக்காலத்தில் எந்திரத்தொழில் நுட்பங்கள் சிறப்புற்றிருந்தன. வானில் கோள்கள் பற்றிய அளவு வேளாண்மைக்குத் தேவைப்பட்டது. பருவக்காலத்தைக் கணக்கிட்டு இத்தொழிலில் ஈடுபட்டனர். நாள்மீன் , கோள்மீன் பற்றிய சில குறிப்புகள் உள்ளன. ஞாயிறு பூமியைச் சுற்றுவதாக அன்று கருதப்பட்டதால் 'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு ஞாயிறு' என்று நக்கீரர் பாடினார். (திருமுருகாற்றுப்படை) இது புவிமையைக் கொள்கை எனப்பட்டது. தற்போது பூமி சூரியனைச் சுற்றிவது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. வீட்டு முற்றத்தில் ஆட்டுக்கிடாயுடன் சிவலைப் பறவை விளையாடுவது நாள் மீனோடு கோள்மீன் விளையாடுவதை ஒக்கும என்கிறது பட்டினப்பாலை (67-77)

'நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு. . . . . விளையாட

இந்த மீன்களின் தோற்றம் , மாற்றம் , மறைவு, குறித்து பல நம்பிக்கைகளும்-இன்று இராசிபலன் பார்ப்பது போல இருந்தன. புறநானூறு 229 ஆம்பாட்டு , இந்த மீன்களின் மாற்றத்தால் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இறக்கக்கூடும் என்று கூறுவதாக அமைகிறது. மேடம், கார்த்தினை, அனுடம், புனர்பூசம், இடபம் , சனி முதலியவற்றுக்கு நிகராக ஆடு, அழற்குட்டம், முடப்பனை, குளவடிவு ஏறு, மைம்மீன் முதலிய வழக்குகள் இடம்பெற்றன. தமிழரரின் வானியல அறிவு பற்றி விளக்கமாக முனைவர்பெ. துரைசாமி தனது நூலில் கூறியுள்ளது கருதத்தக்கது.

‘ அகர முதலின் எழுத்;தாய் நின்றாய்’ (7:3:7) என்கிற சுந்தரரின் ஏழாம் திருமுறைக்கும் திருவள்ளுவர் கண்ட ஆதி (த்த) பகவானுக்கும் தொடர்பிருக்கலாம். ‘பிறர்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்’ (குறள் -319) என்பது ‘ஒவ்வொரு வினைக்கும் சமமான எதிர்வினை உண்டு’ என்கிற நியூட்டன் இயக்க விதியல்லவா? சுந்தரரும்

‘செற்றொருவரைச் செய்த தீமைகள்
இம்மையே வரும் தீண்ணமே’

என்பார்.

‘ஆவதும் அழிவதும் இல்லை இல்லை இல்லையே’ (பாடல்-30) என்கிற சிவவாக்கியர் பாடல் ஆற்றல் அழி மாதத்தன்மை ஆகிய இயற்பியல் விதிகளின் முழக்கம் தானோ?

‘உடலுக்கும் உயிரும் போல் உட்கலந்து நின்றான்டி’(பாடல்-77) என்கிற அத்வைதமே ஐன்ஸ்டீனின் பொருண்மையும் ஆற்றலும் இணைந்த பொதுச்சார்பியல் கோட்பாடு என்று வேண்டுமானாலும் விளக்க முற்படலாம். உடலின் அற்றல் வடிவம் உயிர், உயிரின் பொருள் வடிவமே உடல்’

‘விரிந்த குவிந்து விளைந்த’ என்ப்பாடும் திருமூலர் கருத:து இந்தப் பிரபஞ்சம் 29000 கோடி ஆண்டுகள் விரிவடைந்தும் பின் 41000 கோடி ஆண்டுகள் சுருங்கவும் செய்யுமென்கிற இன்றைய ‘துடிக்கும் பிரபஞ்சக் கோட்பாடுடன் ஒத்துப்போகிறது. டாக்டர் ஆலன் சாண்டேஜ் கணிதப்படுத்திய அறிவியலுக்குத் தத்துவார்த்த முன்னோடி திருமூலர் தானே!

ஆயின் தொழில் நுட்ப முன்னேற்றங்களைப் பொருளாய அடிப்படையில் வியந்துபாடும் உலோகாயதச் சித்தரின அறிவியல் பார்வை இது

‘மாறிக்கொண்டிருப்பது மாளா இயற்கை-தன்
. . . . . முடிவில்’

‘காலங்கள் மாறிடும் காலங்கள் தோறும்-உள்ள

கடவுள்களின் மதவேரும் பேரும்’

‘அறியாமை அச்சம் தவறுகள் யாவும்- உலகில்

. . . . . கொடுத்தனர் தொல்லை.

‘ஆன்மா என்பதும் பொய்யின் கற்பனை –வெறும்

ஆத்திகம் என்பதும் தன்னல விற்பனை’

கோள் நிலைகள்

வருகெழு வெள்ளிவந் தேற்றியல் செர . . . . . (பரிபாடல்11-4-13)

கோள்கள் மழை பொழிவதற்கு ஏற்ற நிலையில் இருந்ததாக ஆசிரியர் பாடலைத் தொடர்கிறார். பாடலின் வரிகளை நுணுகி ஆய்ந்த கோள்கள நிற்கும் இராசி நிலைகளைக் கொண்டு இந்தப்பாடல் பாடப்பெற்றகாலம் எது என்று கண்டறிய முடியும். பரிமேலழகர் உரையுடன் பரிபாடலை உ.வே. சா. பதுப்பித்துள்ளார். அவ்வுரை நூற்பொருளை அறியப் பெருமளவில் உதவுகிறது.

பரிமேழகரின் உரை கொண்டு இப்பாடலின் பொருளை முதலில் காண்போம்.

‘நிறத்தையுடைய வெள்ளி இடபத்தைச் சேரச் செவ்வாய். . . . . மதிய மறையும்படி

வருநாளின் கண்

கடல் வற்றுமா?

தொடர்ந்து சில ஆண்டுகள் மழை இல்லா தொழியுமானால் குளம் , குட்டை, ஏரி போன்றவை வற்றுகின்றன. ஆறுகளும் வற்றுவதுண்டு. கடல் வற்றுமா? என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

நெடுங்கமலும் தன் நீர்மை குன்றும் தடிந்தொழிலா

தான்நல் காதாலி விடின்

என்கிறார் குறளாசான்,

‘மழை பொழியவில்லை என்றால் கடல்கூட வறண்டு குறைந்துவிடும் என்பது பொருள் இக்குறட்பாவின் இரண்டு கருத்துகளை ஆழ்ந்து நோக்க வேண்டும்.

1. நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும்
2. தடிந்தெழிலி தான் நல்காதாகி விடின்

கடல், ஆறு, ஏரி போன்ற நீர்ப்பகுதிகளிலிருந்து ஆவியாகிப்போகும் நீராவி விண்ணிற் சென்று மீண்டும் குளிர்ந்து மழையாக பொழியும்' என்பது எல்லோர்க்கும் தெரிந்த செய்தி. இருப்பினும் , முதற்கேள்வி மழை மேகம் மழை தராது போகுமா? என்தேயாகும். (விண்ணிற்குச் செல்லும் நீராவி நீர்திவலைகளாக மாறியும் மழை பொழியாமல் போக வாய்ப்பு உண்டா?) வள்ளுவர் 'தடிந்தெழிலி' என்னும் பதத்தைப் பயன்படுத்துகிறார். எழிலி என்பது மேகம். தடிந்தெழிலி என்பதால்; 'நீருள்ள மேகம்' என்று பொருள். நீரைச் சுமந்து கொண்டுள்ள மேகம் மழை தராது போவதுண்டா என்றால் அறிவியல் 'ஆம்' என்று பதில் தருகிறது.

இதனை வானியலார் 'விர்கா' என்பார்கள். விழும் மழையானத பூமியைத் தொடுவதற்கு முன்பே ஆவியாகிப்போகும். இதனையே, 'தடிந்தெழிலி தான் நல்காதாகி விடின்' என்றுரைக்கிறார். வள்ளுவனார்.

அடுத்த மிகப்பெரிய கேள்வி'கடல்நீர் வற்றுமா' என்பதுதான் அறிவியல் நோக்கில் கூற வேண்டுமானால் கடல்வற்றவும் வாய்ப்பிருக்கிறது.

நீராவி மேகமாகி, பின் குளிர்ந்து மழை பொழிகிறது. மழை பொழிய புவியீர்ப்பு விசையும் ஒரு காரணம் என்றால் தவறு இல்லை. ஈரப்பு விசை இல்லையெனில் பின் மழைத்துளி பூமியில் எப்படி விழும்?

ஆயினும் , சில நேரங்களில் காற்றின் மூலக் கூறுகளும் நீராவியும ம , பவியீர்ப்பு விசையையும் எதிர்த்து விண்வெளிக்குத் தப்புவதுண்டு. தொடர்ந்து இதேபோன்று நிகழ்ந்து வந்தால் பூமியில் மழை வளம் குறைய வாய்ப்பு உண்டு. கடலிலிருந்து வெளியேறும் ஆவி இப்படி தப்பிச்சென்றால் கடல் குன்றவும் கூடும்.

விஞ்ஞானிகள் வேறு வகையாகவும சொல்கிறார்கள். உலகத்தில் வெப்பம் கூடிக்கொண்டே போகிறது. உயிரினங்கள் தாங்க முடியாத அளவிற்கு வெப்பம் கூடினால் மனிதன் உட்பட எல்லா உயிரினங்களும அழியும் அதி வெப்பத்தினால் கடல் வற்றலாம்.

ஒராண்டிற்கு 92,000,000,000,000,000 கேலன்கள் கடல்நீர் ஆவியாகிறது என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

உடனடியாக கடல் வற்றிவிடும் என்று அறிவியல் அறிஞர் அச்சுறுத்தவில்லை. மெதுவாக மெல்ல, மெல்ல, கொஞ்சம் கொஞ்சமாகத் தொடர்ந்து (மேற்கூரிய முறையில்) நிகழ்ந்தால்

வற்றலாம். இப்படி நிகழ ஒரிரு கோடி ஆண்டுகள் ஆகலாம். எப்படியிருப்பினும் தொடர்ந்து மழையே பொழியாமல் இலட்சக்கணக்கான ஆண்டுகள் கழியுமானால் சாத்தியம் இருக்கிறது.

வேறு வகையிலும் அறிவியல் அறிஞர் இந்தச் சாத்தியக் கூறினைக் கூறுகின்றனர். சூரியனிலுள்ள வாயுக்கள் தீர்ந்து போகும் நிலையில் அது மிகப்பிரகாசமாக எரியும் சூரியனும் தன் அளவில் பெரிதாகும். அப்போது எற்படும் வெப்பத்தில் கடல் வற்றும். பூமியும் சூரியனின் ஈர்ப்பு விசையில் ஐக்கியமாகிவிடவும் வாய்ப்புள்ளது.

எதுவாயினும் பொய்யில் புலவன் பொய்க்கவில்லை என்பது மட்டும் உண்மை. மழைமேகம் பொழியாமல் போகலாம் . கடலும் வற்றலாம் அறிவியல் பார்வையில் சாத்தியம் இருக்கிறது.

கார் பருவம்

பேரா. க. கார்த்திகா.

உதவிப் பேராசிரியர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை

இயற்கை கூறுகளின் சங்கமமாக அமைந்திருப்பதே உலகம். உலகின் முதல்பொருளாக நிலமும் பொழுதும் அமைந்துள்ளன. பொழுதுகள் பற்றியதான சங்கப் புலவர்களின் திறனை நற்றிணைவழி அறிவதே இக்கட்டுரையாகும்.

பொழுதுகள்

வானிலை மாற்றங்களுக்கு ஏற்ப பாகுபடுத்தப்பட்டதே பொழுதுகள் ஆகும். பொழுதுகள் பற்றி வானிலை அறிவியல் பருவமழைக்காலம் , பருவ மழைக்கு பிந்தைய காலம், குளிர்காலம், கோடைகாலம் என நான்காக வகைப்படுத்துகின்றது. இவ்வகைப்பாடானது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கியங்களில் பதிவாகியுள்ளது. பொழுதுகளை பெரும்பொழுது , சிறுபொழுது என இரண்டாகப் பிரித்து, ஒரு ஆண்டின் கூறுகளாக அமைவது பெரும்பொழுது எனவும் ஒரு நாளின் கூறுகளாக அமைவது சிறுபொழுது எனவும் கூறி, கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என பெரும்பொழுதுகளையும் மாலை, யாமம், வைகறை, காலை , நண்பகல் , எற்பாடு என சிறுபொழுதுகளையும் வகைப்படுத்தியிருப்பது சங்கப்புலவர்களின் பொழுதியியல் அறிவைக் காட்டுகின்றது.

மழை

உலக உயிரினங்களுக்கு அடிப்படை ஆதாரங்களாக அமைவது நீர் ஆகும். நீரின்றி உலகம இயங்காததைப் போல தலைவனின்றி தன் உயிர் இயங்காது என்று தலைவி கூறுவதாக நற்றிணையின் முதல் பாடல் அமைந்துள்ளது. நீரின் தன்மையுணர்ந்தவராய் எதிர்காலச் சிந்தனையுடையவராய் தமிழர் இருந்துள்ளனர். அதனால்தான் இளங்கோவடிகளும் தன் நூலில் மாமழை போற்றுதும் மாமழை போற்றுதம் என்கிறார்.

“நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்றி அமையாது ஒழுக்கு” (குறள்-20)

என்ற வள்ளுவனின் கூற்றும் இதை வலியுறுத்துவதாய் அமைந்துள்ளத. கடல்நீர் ஆவியாகி மேகமாகி குளிர்ந்த காற்று வீசுவதன் மூலம் மழையானது பொழியும் என்கிறது அறிவியல்.

இவ்வுண்மையை,

‘‘மறந்து கடல் முகந்த கமஞ்சூல் மாமழை”(நற்-99-6)

‘‘குணகடல் முகந்து குடக்கு ஏர்பு இருளி”(நற்-153-1)

‘‘வானம் நனிகடல் முகந்து செறிதக இருளி (நற்-289-3)

‘‘இருவிசும்பு அதிர மின்னி

கருவி மாமழை கடல் முகந்தனவே” (நற்-329-10-11)

‘‘மாக்கடல் முகந்து” (நற்-112-6)

‘‘நளி கடல் முகந்து செறிதக இருளி “ (நற்-289-4-5)

என்று செம்மொழி இலக்கியமான நற்றிணை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எடுத்துரைத்துள்ளது. இதனை

பணை முழங்கு எழிலி பௌவம் வாங்கி

தாழ்பெயற் பெருநீர் வலனேர்பு

வளைஇ மாதிரம் புதைப்ப

பொழிதலின் காண்வர(அகம்-84-2-4) என்று அகநானூறும் எடுத்தியம்புகிறது.

மலர்

மனித வாழ்க்கைக்கு தேவையான அடிப்படைப் பொருளாக விளங்கும் பதினான்கு கருப்பொருகளில் ஒன்றாக விளங்குவது மலர் ஆகும். மலர்கள் பற்றியும் அம்மலர்கள் மலரும் பருவங்கள பற்றியும் அறிந்தவராகப் பழந்தமிழர்கள் இருந்துள்ளனர். முல்லை, குருக்கத்தி , பித்திகை (செண்பகம்) களா, பிடவம், கொன்றை , கர்யா போன்ற மலர்கள் கார்கால மலர்களாக இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. வினைவயின் சென்ற தலைவன் குறித்த கார்பருவம் வந்தும் வரவில்லை. அதை நினைத்து வருந்திய தலைவியிடம் தோழி , கடல் நீரை அதிகம் உண்ட மேகம் அதை நீண்ட காலம் வைத்துக் கொள்ள முடியாமல் மழையாகக் கொட்டியது. மழையைப் பார்த்தவுடன் கார்காலம் வந்துவிட்டதென பிடவமும் கொனறையும் காந்தளும் அறியாமையால் மலர்ந்துவிட்டன. அதனால் அம்மலர்களைப் பார்த்து நீ கார்க்காலம் என மயங்காதே என்பதாக

‘‘மறந்து கடல்முகந்த கமஞ்சூழ் மாமழை …… மலர்ந்தன் பலவே” (நற்-99-6-10)

என்ற இப்பாடல் அமைந்துள்ளது. கொன்றை பருவமறியாது மலர்ந்தது என்பதை ‘‘மடவ மன்ற தடவு நிலைக்கொன்றை” (குறு-66-1-5) புதுப்பூங்கொன்றை , கானம் காரெனக் கூறினும், யானோ

தேரேன் அவர் பொய் வழங்கலாரே (குறு-23-3-5) என்ற குறுந்தொகை பாடல்வழி அறிந்துக்கொள்ள முடிகின்றது.

பித்திகை கார்காலத்தில் மலர்வதை,

''பேருந்தண்மாரி பேதைப் பித்திகத்து

அரும்பே முன்னும் மிகச்சிறந்தனவே" (குறு-94-1-2)

என்று குறுந்தொகையிலும் ''மலிபெயற் கலிதத மாரிப் பித்திகத்து" என அகநானூறிலும் (42-1) கூறப்பட்டுள்ளது. தெறுழ் கார்காலத்தில் மலர்வதொரு கொடியாகும். தெறுழ் கொடியில் பூக்கும் மலர்கள் நீலநிறமானவை. அம்மலர்கள் கார்பருவம் நீங்கியதால் வெண்மை நிறமாக மாறியதைப் பார்த்தும் கூட தலைவன் வாராதிருக்கிறாரே என்ற தலைவியின் புலம்பலில் (நற்-302-4-5) இருந்து பருவ மலர் பற்றிய அறிவுடையோர் நம் முன்னோர்கள் என்பது புலனாகிறது.

<u>கார்பருவம்</u>

மழை பொழியும் பருவமே கார்பருவமாகும். உயிரினங்களிடம் புணர்ச்சி வேட்கையை ஏற்படுத்தக் கூடிய பருவமாக இப்பருவம் அமைந்துள்ளது. குயில் தன் பெடையைத் தேடுவதற்கானப் பருவமாகவும், மான் தன் துணையை நாடுவதற்கான பருவமாகவும், தலைவன் தலைவியைக் கூடுவதற்கானப் பருவமாகவும், கார்ப்பருவம் அமைகிறது. மழையால் நீங்கிய வெப்பமும் நிலத்தின் குளிர்ச்சியும் மழையுடன் சேர்ந்து வரக்கூடிய வாடைக் காற்றும் மற்ற பருவங்களைவிட கார்பருவத்தில் அதிகப்படியான புணர்ச்சி வேட்கையை ஏற்படுத்துகின்றது. தலைமக்கள் பிரிய நினைக்காத பருமாகவும் பிரிந்து சேர்ந்திருக்கும் பருவமாகவும் கார்காலம் விளங்குகிறது என்பதாக இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. பொருள்வயின் பிரிய நினைக்கும் தலைவனின் செயல்களை தோழி தலைவியிடம், தலைவன் பொருள்வயின் பிரிந்து செல்கிறானாம். அவன் திரும்பி வரும்வரை நாம்மட்டும் இம்மழைக்காலத்தில இம்மழையைப் பார்த்தபடி தனியாக இருக்க வேண்டுமாம். இச்செயல் நகைப்புக்குரியதாய் உள்ளதல்லவா" என்றுரைப்பதிலிருந்து தலைமக்கள் பிரியாத பருவமாகக் கார்பருவம் அமைகிறதென்றும் அதனால்தான் அப்பொழுதில் பிரிய நினைக்கும் தலைவனின் செயல் தோழிக்கு நகைப்பை ஏற்படுத்தியது என்றும் அறிய முடிகின்றது. (நற்-129-1-9)

தலைவியைத் தழுவ உதவிய மேகத்தை வாழ்த்தும் தலைவனை நற்றிணை எடுத்துரைக்கிறது. (139-8-10) பிரிந்தோரை சேர்த்து வைப்பதாக மழை பதிவு செய்யப்படுகிறது.

''இன்துணைப் பிரிந்தோர் நாடித்

தருவது போலும் இப்பெருமழைக் குரலே"(நற்-208-11-11)

மழையுடன் வரக்கூடிய வாடை பிரிந்தோரை வருத்தும் என்பதாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பிரிவுக் காலத்தில் வாடை கொடிதாதலை

‘‘இரும்புறம் தமூஉம் பெருந்தண் வாடை” (நற் -153-1)

‘‘தண்வரல் அசைஇய பண்பில் வாடை” (அகம்-58-11)

‘‘ஆனாது எறிதரும வாடையொடு நோனேன்” (அகம்-294-15)

என்ற இவ்வடிகளின் மூலம் அறிய முடிகின்றது.

காமம் என்ற ஒரு கொடிய நோயை ஏற்படுத்தும் பருவமாக மழைக்காலமும் மாலைக்காலமும் அமைந்துள்ளன. மாலையின் தன்மையை வள்ளுவர், காமநோய், காலையில் அரும்பாகி, பகலில் முதிர்ந்து மாலையில் மலராய் மணம பரப்பும் என்கிறார்.

‘‘காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி

மாலை மலரும் இந்நோய் “ (குறள்-1227)

பிரிந்தோரை வருத்தும் பருவமாய் மழைக்காலத்து மாலைப்பொழுது அமைந்துள்ளது. கார்பருவ மாலையில் தனித்திருந்த தலைவி பிரிந்தோரை வருத்தும் மாலைப்பொழுது என் தலைவன் சென்றுள்ள நாட்டில் இல்லை போலும் இருந்திருந்தால் அவர் உடனே வந்திருப்பாரல்லவா? எனத் தனக்குத்தானே பேசிக்கொள்பவளாய், தோழியிடம் கேட்பவளாய் நற்றிணைத் தலைவி படைக்கப்பட்டிருக்கிறாள்.

‘‘படையொடு வந்த பையுள் மாலை

இல்லைகொல் வாழி தோழி” (343-7-8) பிரிந்தோரை மாலைப்பொழுது வருத்துமென்பதை

‘‘ஆருயிர் அணங்கும் தெள;ளிசை

மாரி மாலையும தமியோன் கேட்டே” (அகம்-214-14-15) காமம் தாங்குதற்கரியது என்றும் (குறு-18-5)அக்காம நோயை மிகுவிப்பதாக மாலைப்பொழுது அமைகிறது என்றும் தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. ‘‘நோயும் பெருகும் மாலையும் வந்தன்று”(நற்-397-5)

உளவியல்

மனம் பற்றிய அறிவியலே உளவியல், அதை சங்கத்தமிழ் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வழங்கி உள்ளது. மழைக்காலமும் , அக்கால மாலைப்பொழுதும், அப்பருவத்தில நிகழும் புற நிகழ்வுகளும் தலைவனைப் பிரிந்த தலைவிக்கு எத்தகைய எண்ண ஓட்டங்களை பாதிப்பை உண்டாக்கும் என்பதை பழங்காலத்திலேயே எடுத்துரைத்த மொழி தமிழ்.

மாலைப்பொழுதில் பெண்கள் விரும்பி சூடிய பூக்களாக குருக்கத்தி, பித்திகை, முல்லை போன்றவை குறிப்பப்படுகின்றன.

தலைவி காம நோயில் துன்புற்றிருக்கும் போது மேலும் துன்பத்தைத் தரவல்லதாய் உள்ளது குருகத்தி, பித்திகை மலரை வீதி தோறும சென்று விற்றுவரும் பெண்ணின் குரல் பிற உயிரினங்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தி இசைக்கு உண்டு. இசையறி தாவரங்கள் பற்றி எம். எஸ். உதயமூர்த்தி அவர்கள் தன் எண்ணங்கள் என்னும நூலில் குறிப்பிட்டுள்ளார். தாவரங்களையே இசையானது ஆட்கொள்ளும் போது மனிதர்களின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை எண்ணி பார்த்தல் வேண்டும். யானைபாகனின் இசை அமிர்தவதி என்பவளுக்கு அவன்மீது காமத்தை மிகுவிக்கின்றது. அவனுடன் கள்ள உறவு கொள்கிறாள். இச்செயலை கணவன் யசோதரனும் மாமியாரும் அறிய, தடைய இருக்கும் இருவரையும் உணவில் நஞ்சைக் கலந்து கொள்கிறாள் என்பதாக அமைகிறது. யசோதர காவியம் "இசை காமத்தை மிகுவிக்கும்" என்பதை உணர்த்வல்லதாய் இவ்விலக்கியம் அமைந்துள்ளது. சூழலுக்கேற்ப மற்ற உயிரினங்களிடம் இன்பத்தை, துன்பத்தை, காமத்தை ஏற்படுத்தும் அற்புதக் கருவியாக இசை அமைகின்றது. முத்தமிழில் ஒன்றாக இசைத்தமிழ் அமைந்துள்ளதைக் கொண்டு இதனை அறிய முடிகின்றது. இயல்பாகவே, காமத்தை மிகுவிக்கும் புல்லாங்குழலின் இனிய இசையை கார்கால மாலைப்பொழுதில் கேட்கும்போது , படையுடன் வந்து தன் உயிரை கொல்லும் தன்மையில் இருந்தது என்பதை,

''அழம் போலும் மாலைக்குத் தூது ஆகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை" குறள்-1228 என்று திருக்குறள் பதிவு செய்கிறது. ''நோயும் பெருகும் மாலையும் வற்" (நற்-397-5) என வருந்தும தலைவிக்கு அப்பொழுதில் கேட்கக்கூடிய புல்லாங்குழலின் இசை வருத்தத்தைத் தருகிறது. அழகிய புறா அதன் பேடையோடு கூடி மகிழும் மாலைப்பொழுதில் நீ இன்றி நான் தனியே இருப்பதைவிட கடுமையான பாலை வழியில் உன்னோடு நானும் வருவது எனக்கு மகிழ்வை தரும் என்கிறாள் தலைவி.

''மனை உறை புறவின் செங்காற் பேடைக். . . . . ஆற்றேன்"(நற்-162-1-4)

இதிலிருந்து கொடுமையான பாலைநிலப்பயணத்தைவிட மாலைப்பொழுது மிகக் கொடியதாகப் பதிவுசெய்யப்படுகின்றது. இத்தன்மையுடைய மாலைப்பொழுதில் நடக்கும் சில நிகழ்வுகள் பிரிந்தோரை மேலும் துன்புறுத்தவல்லதாய் அமைகின்றன. பறவை இனங்கள் ஒன்றுடன்ஒன்று கூடி இன்புற்றிருக்கவும், ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடவும் பெண்கள் மாலை நேரத்தில் சூடிக்கொள்ளும் முல்லை, சண்பகம், குருகத்தி போன்ற மலர்கள் பூக்கவும் காரணமாக அமைவது கார்ப்பருவமாகும். கார்ப்பருவ மாலைப்பொழுதில் இந்நிகழ்வுகள் நடைபெறும்பொழுது மேலும் பிரிந்தோரை வருத்துவதாய் அமைகின்றது. ஏற்கனவே மார்பில் ஏற்பட்ட ஆழமான புண்ணின்

தசை காயும முன்பே மீண்டும அவ்விடததில் வேலைச் செலுத்தியது போல் உள்ளது இம்மாலைப்பொழுது. தன் பெடையைக் கூடுவதற்கு அழைக்கும் குயிலின் ஓசை இவ்வேளையில் எனக்கு கொடியதாகத் தோன்றுகிறது. குயிலின் கூவலை விட நீர் பெருகி வரும் ஆறு கொடியதாக உள்ளது. பசுமையானக் குருக்கத்தி மலருடன் வாசமிகு பித்திகை மலரையும் வாங்கிக் கொள்ளுங்கள் எனக் கூறும் பூவிற்கும் பெண்ணின் குரலானது முற்கூறிய குயிலைவிட ஆற்றைவிட மிகமிகக் கொடியதாக உள்ளது என தன் ஆற்றாமையைத் தோழியிடம் தலைவி கூறுவதாக அமைகிறது மாறன் வழுதியின் பாடல்.

‘‘அழுந்து படு விழுப்புண் வழும்பு வாய் புலரா . . . . . .

தண்டலை உழவர் தனி மட மகளே” (நற்-97)

தலைவி தனிததிருக்கும் பருவத்தே இசையெனும நெருப்பால் குயில் துயரம் பெருக்கவே குயில் கொடிது என்றாள்(157-5-7) காதலால் மேனிக்கண் ஏற்பட்ட வெப்பத்தை ஆறு போக்காததால் ஆற்றைக் கொடிதென்றாள். தலையில் சூடும் பூக்கள் தலைவன் இல்லாத பொழுது மகிழ்ச்சியைத தராததால் பூ விற்கும் பெண்ணைக் கொடியள் என்றாள். தலைவனைப் பிரிந்த தலைவிக்கு மாலைப்பொழுதில் காணும் இனிய நிகழ்வுகள் எல்லாம் வருத்தத்தையே தரும் என்பதை உணர்த்தவல்லதாய் அமைகின்றது. தமிழ் இலக்கியங்கள் காமநோயை மிகுவிக்கும் கார்கால மாலைப்பொழுதின் தன்மை கருதியே மேற்கொண்ட பயணத்தை நிறுத்தி செயவழுங்கியத் தலைவர்களைக் காட்டுகின்றனர் சங்கப்புலவர்கள் . (நற்-256-7-9)

தவிர்க்க இயலாச் சூழலில் தலைவியைப்பிரிந்த தலைவன் வினைமுடிந்து திரும்பி வரும்பொழுது மழைக்கால மாலைப்பொழுதின் வலிமையையும் தன் தலைவியின் நிலைமையையும் உணர்ந்த தலைவன் தேர்ப்பாகனிடம். தன் தலைவியின் நிலைமையையும் உணர்ந்த தலைவன் தேர்ப்பாகனிடம் , முல்லை மலரைச் சூடி இருக்கும் பார்ப்பன மகளிரை மாலைப்பொழுதில் காணும்போதெல்லாம் நான் இல்லாது வெறுமையாக இருக்கும் மனையைப் பார்த்து வருந்துவாள். நான் உடனே சென்றாகவெண்டும். இல்லையெனில் காமம் தாங்காது அவள் அழுதே விடுவாள். அதனால் தேரை விரைந்து செலுத்து என்கிறான்.

‘‘புல்லென்வெறு மனை நோக்கி. மெல்ல

வருந்தும் கொல்லோ” (நற்-321-6-7-)

‘‘நிழல் திகழ் சுடர்த்தொடி ஞெகிழ ஏங்கி

அழல் தொடங்கினளே ஆயிமை”(371-7)

முடிவுரை

இவ்வாறாக நிலவியல், வானியல், பருவவியல், மலரியல் , உளவியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்கிய அறிவியல் அறிவுடையோர் பழந்தமிழ்ப்புலவர்கள் என்பதை கார்பருவத்தின்வழி எடுது;துரைக்கின்றது செம்மொழி இலக்கியமான நற்றிணை.

செம்மொழி இலக்கியங்களில் பலதுறை அறிவியல் சிந்தனைகள் . வேதியியல்

முனைவர். மி. நோயல்

ஆசிரியர் அறிக அறிவியல்

அறிவியல் பயன்பாடும் , பகுத்தறிவுச் சிந்தனைகளும் தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்விலும் நெடிய பண்பாட்டுப் பயணத்திலும் நீங்காத இடம் பிடித்திருந்தன. இந்தப் பண்பாட்டுப் பயணம் எப்போது தடுமாறியது? எப்படித் திசைமாறியது? இந்தத் திசை மாற்றத்தின் விளைவுகள் என்ன? அண்மைக்காலங்களில் தமிழ்ப்பண்பாட்டை மீட்டெடுக்க நாம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் என்னென்ன? இன்னும் நாம் என்ன செய்யவேண்டும்? இந்தக் கேள்விகளுக்கான விடையை நாம் இந்த விவாதத்தின் வேதியியல் துறையில் செம்மொழி இலக்கியக்காலங்களில் ஏற்பட்ட வரலாற்றுப் பின்புலங்களை நாம் நிறைவுப்பகுதியில் ஒரு எடுத்துக்காட்டாக ஆராயலாம்.

இது ஆய்வுரை அன்று, இளம் தமிழ்நெஞ்சங்களை உற்சாகப்படுத்திச் சிந்திக்க வைக்கும் ஒரு பயிலரங்க முயற்சி. எனவே இங்கே விடைகளைவிடச் சிந்திக்கத் தூண்டும் இளைய சமூகத்தை விடைதேடும் முயற்சிகளைத் தொடங்கத் தூண்டுவதே நம் நோக்கம்.

1. செம்மொழிச் சமுதாயக் காலம்

பழமையும் தனித்துவமும் வாய்ந்த மொழிகள் மிகச்சில. 2000 வருடங்களுக்குமேல் பழமை வாய்ந்த மொழிகள் விரல்விட்டு எண்ணிவிடக் கூடியவை. அவற்றில் தமிழும் ஒன்று. ஆனால் நம் தமிழ்ச்செம்மொழியைப் பற்றியும் தமிழ்ச்சமூகம் பற்றியும் பொதிய கள ஆய்வுகள் நடந்திருக்கிறதா? இல்லை என்றால் ஏன்?

ஒவ்வொரு செம்மொழிக்கும் உற்சாகமாகக் குரல் கொடுக்கவும் ஆய்வுகளை முன்னெடுக்கவும் அரசு சார்ந்த நிறுவனங்கள் முன்னால் நிற்கின்றன.

சீன மொழி அந்த நாடு முழுமையும் பேசப்படும் செம்மொழி. சீன மக்கள் யாவரும் அந்தக் கலாச்சாரத்தைப் பெருமையோடு முன்னெடுத்துச் செல்கிறார்கள். இலத்தீன் மொழி உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்களின் மறைமொழி.

கிரேக்கமொழி மிகச்சிலரால் மட:டமே இன்று பேசப்படுகிறது. ஆனால் அதன் அறிவு வீச்சும், இலக்கியங்களும் ஐரோப்பிய நாகரிகத்தின் அடித்தளம். எனவே அது எல்லாரையும் ஈர்க்கிறது.

ஹீப்ரு யூத சமூகத்தின் உயிர்நாடி. அந்தச் சிறிய ஆனால் உயிர்த்துடிப்புள்ள சமூகம் அதைத் தாங்கிப்பிடிக்கிறது.

சமஸ்கிருதம் இந்தியாவின் தெய்வமொழி மட்டுமல்ல இந்தோ ஆரிய மொழிகளின் வேர்கள் அதில் தேடப்படுகின்றன.

தமிழ் உலகெங்கும் இன்றும் 8 கோடி மக்களால் பேசப்படும் மொழி. பழம்பெரும் மொழி. இந்த மொழி கலாச்சாரத்தின் மீது இப்போதுதான் கொஞ்சம் அக்கறை எழுந்திருக்கிறது. இங்கே நடைபெறவேண்டிய பணிகள் ஏராளம்.

2. செம்மொழிக் காலங்கள்! கள ஆய்வுகள்

இலக்கியங்கள் மட்டும் நம்முடைய பண்பாட்டுக்கான காலத்தை மதிப்பிடும் ஆதாரங்கள் ஆகிவிடாது. 'கல்தோன்றி மண்தோன்றாக் காலம்.' போன்ற பல நம் பண்பாட்டின் பழமையை நிலைநாட்டிவிடப் போதுமானவை அல்ல.

பழைய கற்காலம், புதிய கற்காலம் , செம்புக்காலம், இரும்புக்காலம் போன்ற காலங்களில் நம்முடைய நாகரிகம் பரவி இருந்ததற்கான அடையாளங்கள் இப்போது மெல்ல மெல்ல வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இந்தப் பணி வேகம் பிடிக்க வேண்டும். இதற்கு ஈடுபாடுள்ள இளைஞர்கள் வேண்டும். அரசின் ஈடுபாடும் வேண்டும். உலகளாவிய ஆய்வு அமைப்புகள் இந்த முயற்சியில் வழிகாட்டலாம்.

தமிழகத்துக்கு வெளியே இருக்கின்ற தமிழர்களைவிட நமது ஆர்வமும் முயற்சியும் இந்த வகையில் குறைவாக இருக்கிறதா?

அல்லது நமது தமிழர் ஆர்வம் அரசியல் வெத்துவேட்டுகளாகவே முடிந்து போகிறதா?

தமிழகத்தில் எத்தனை இடங்களில் கள ஆய்வுகள் நிறைவு பெற்றிருக்கின்றன?

கி.மு.300க்கு முன் தமிழ்மொழிக்கு வரிவடிவம் இருந்ததற்கான ஆதாரங்கள் போதிய அளவு இருக்கிறதா? நமக்கும் ஹரப்பா நாகரிகத்துக்கும் உள்ள தொடர்புகள் பற்றி இன்னும் எவ்வளவு நாட்கள் மேலோட்டமாகப் பேசிக்கொண்டிருக்கப் போகிறோம்.

இப்படிக் கேள்விகளை அடுக்கலாம். துடிப்புள்ள இளைய தலைமுறைதான் இவற்றுக்கு ஆய்வுப்பூர்வமாக விடைதேட வேண்டும்.

3. அறிவும் அறிவியல் சிந்தனைகளும்

தமிழச் சமுதாயம் அறிவுச் சமூகம் தான். பகுத்தறிவுப் பார்வை கொண்ட சமூகம்தான்.

இயற்கையோடு இசைந்து வாழ்ந்த சமூகம்.

மொழி இலக்கணமே வாழ்க்கை இலக்கணம் ஆகிப்போன சமூகம்.

மலையில், காட்டில், வயலில், கடற்கரையில் பாலை நிலத்தில் வாழ்க்கை முறைகளையே பகுத்துப் பார்த்த சமூகம்.

யார் யார் வாய்க்கேட்டாலும்.

எத்தன்மையதாகினும்- மெய்ப்பொருளைக் காண்பது அறிவுதான் என்று தந்த சமூகம் .

கடல் வணிகம் உள்ளிட்ட பொருளாதார வழித்தடத்தில் சிறந்து விளங்கிய சமூகம்தான்.

கடல்கடந்தும் தமிழர் பண்பாட்டை வளர்த்தெடுத்த சமூகம்தான்.

ஆனால் இந்தச் சமூகத்தில் அறியாமையும் மூடநம்பிக்கையும் பரவியத எப்போது, யாரால்

அறநெறிகளையும் இலக்கியங்களையும் வளமூட்டிய சமணர்களையும் பௌத்தர்களையும் களப்பிரர்கள் என்று ஓரங்கட்டியவர்கள் யார்? எப்படி? எப்போது?

சாதிய மேலாதிக்கமும் , விதியின் மேல் அதிதீவிர நம்பிக்கையும் வளர்ந்தது எப்போது?

யாதும் ஊரே! யாவரும் கேளிர். . . . அப்புறம்?

இந்த அறியாமைப் பயணத்திலிருந்து பகுத்தறிவுப் பாதையில் நாம் மீண்டும் அடியெடுத்து வைத்தது எப்போது? எப்படி?

4. வேதியியல் பார்வையும் பாதையும்

செம்மொழிக் காலத்தில் நம்முடைய வேதியியல் பாதையும் உயிர்த்துடிப்போடுதான் இருந்தது.

நம்முடைய உலோகவியல் வளர்ச்சி

நாணயங்கள்

சித்த மருத்துவம்! மருந்துகள்

ஆடைகள்! வண்ணங்கள்!

ஓவியக் கலையில் பயன்படுத்தப்பட்ட வண்ணக் கலவைகள்

ஏன்? நமது உணவுமுறை! உணவைச் சமைக்கும் முறை.

இவை. எல்லாம் நமது வேதியியல் சிந்தனைப் போக்கின் வழித்தடங்கள்.

ஆனால் இங்கேயும் தடுமாற்றம் வந்து சேர்ந்தது! ரசவாதம் தங்கத்தைத் தேடி அலைந்தது!

இந்தப் பயணத்தைப்பற்றியும் நாம் கொஞ்சம் சிந்திப்போம்.

நாம் மீண்டும் ஓர் அறிவுச் சமூகமாக வளர வழிதேடுவோம். நமது பண்பாட்டு வழித்தடங்களை அடையாளம் கண்டு கொள்ளவும் முயற்சி எடுப்போம்.

செம்மொழி இலக்கியத்தில் மண்ணியல்

முன்னுரை

''திங்களொடும் செழும்பரிதி தன்னொடும் விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்ததமிழ்''

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் வழி தமிழ் மொழியின் தொன்மையினை அறியலாம். தமிழ் இலக்கிய வரலாற்றில் மூவாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே மண்ணியல், தாவரவியல், விண்ணியல், மருந்து, அளவியல், எண்கள், உடை, அணிகலன், இசை, நாட்டியம், கட்டடக்கலை, ஓவியக்கலை முதலிய பலதுறைகளில் அறிவியல் வேரூன்றித் தொடர்ந்திருக்கிறது. அறிவியல் தமிழுக்கும் புதிதல்ல. தமிழருக்கும் புதிதல்ல. அத்தகைய சிறப்புமிக்க தமிழ் இலக்கியங்களில் மண்ணியல் குறித்த செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

அறிவியல் பேசும் செம்மொழி இலக்கியங்கள்.

அறிவியல் என்பதற்கு விஞ்ஞானம், நுணங்கியல், இயல்நூல், ஆய்வுத்துறை, அறிவு, பொருளாய்வுத்துறை, புறநிலை ஆய்வுநூல், அறிவு பற்றிய துறை, பருப்பொருள்களை ஆயும் நூல் தொகுதி ஆகிய கருத்துக்கள் அகராதிமை அலங்கரித்து நிற்கின்றன. மனித இனம், வாழ்வு, வளம், நலம், பண்பு, வசதிகள் யாவும் மேன்னிலையடைவதற்கு உறுதுணையாயிருப்பது உலகில் உலாவும் அறிவியலாகும். மண்ணியல், வானியல், இயற்பியல், வேதியியல் உயிரியல், விலங்குகியல், தாவரவியல் ஆகிய பல துறைகள் அறிவியலில் அடங்கும். இவ்வாறான அறிவியலைப் பூமித் தாயின் மக்களில் ஒரு சிலர் அறிவியற் பூங்காவில் நுழைந்து தத்தமக்கான துறையில் ஆர்வங்கொண்டு உலக முன்னேற்றத்தில் உதவிக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் சேவை மகேசன் சேவையாகும். இனி, பண்டைத் தமிழர்களின் பழைமை வாய்ந்த மண்ணியல் பற்றிய செய்திகள் செம்மொழி இலக்கியங்களில் எவ்வாறு பேசப்படுகின்றன என்ற பாங்கினையும் காண்போம்.

உணவியல்

பேரா. ந. பிரியா, உதவிப் பேராசிரியர், ஈ.வெ.ரா. பெரியார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

உயிரினங்கள் கூடிவாழும் உயிர்த்தொகுதி சமுதாயம் என்ற பெயரால் சுட்டப்பெறுகின்றது. சமுதாயத்தில் வாழும் எவ்வுயிராயினும் அவ்வுயிர், தன்னை நிலை நிறுத்திக்கொள்ளும் உரிமையை இயற்கை வழங்கி இருக்கிறது. உயிரினங்களுக்கான நிலைநிறுத்தக்காரணிகள் பலவாறுயிருப்பினும் அவற்றுள் நிலம்,உணவு என்ற இருகாரணிகளே மானுட வாழ்வில் பெரும்பங்காற்றுகின்றது. உணவு உற்பத்திக்கு நிலம் உதவுகின்றது. உயிர் வாழ உணவுத்தேவைப்படுகின்றது. இந்த அடிப்படையில் நிலத்துடன் இயைந்த தமிழரின் உணவுமுறையின் கூறுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

உணவும் வாழ்வும்

ஆரம்ப காலத்தில் இனக்குழுச்சமூகமாக இருந்த மனித சமூகம் இயற்கையாகக் கிடைத்தவற்றை உண்டு வாழ்த்தல், அடுத்த நிலையில் தன் வயிற்றுப்பிழைப்பிற்காக வேட்டையாடுதல் என்றிரு வேறு நிலைகளில் உணவு சேகரிப்பு நடந்தது. உணவு சேகரிப்பு என்ற செயல்பாட்டிலிருந்து தான் மனித சமூக வரலாறு எழுதப்படுகின்றது.

பொதுவாக உண்ணும் உணவின் வகை(எநசவைல), எடுத்துக்கொள்ளப்படும் உணவின் அளவு(ஞரயவெவைல), உணவின் தன்மை (ஞரயடவைல) என்னும் காரணிகளால் மாறுபாடுகள் நிகழலாம். ஆனால் உண்பதற்கு உணவுத்தேவை என்பதில் எவ்வித மாற்றமும் இருக்க வாய்ப்பில்லை. சுருங்கக்கூறின் 'உணவின்றி உலகமில்லை' என்பது நடப்பியல் உண்மை. மனித குலத்திற்கு உணவு பங்காற்றும் திறனை கருத்திற்கொண்டு 'உணவுஉடை உறையுள்' என வரிசைப்படுத்தும் போதும் உணவே முன்மொழியப்படுகின்றது.

நிலஞ்சார் உணவுப்பகுப்பு

இயற்கைப்பின்புல அடிப்படையிலும், நிலப்(திணை) பின்புல அடிப்படையிலும் நம் சான்றோர்கள் நிலத்தினைப் பகுத்தறிந்ததை,

"மாயோன் மேய காடுறைஉலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறை சொல்லவும் படுமே”

என்று தொல்காப்பிய நூற்பா உணர்த்துகின்றது. காடு - முல்லை, வரை(யால்) - குறிஞ்சி, புனல் (நீர்) - மருதம், மணல் - நெய்தல் என்றறியப்படுகின்றது. இந்நிலப்பகுதிகளில் மனித சமூகம் குழுவாக வாழ்ந்து இயற்கைக்கு ஊறு விளைவிக்காத திறன் போற்றுதற்குரியது. இவ்வாறு தான் வாழும் நிலத்தின் இயல்பிற்கேற்ப வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டது தமிழரின் உயிர்நெறியாக கருதப்பட்டது.

மைவரை உலகம் - குறிஞ்சி

ஆதியில் இயற்கைச்சீற்றங்களைக்கண்டு அஞ்சிய மனிதன் அதிலிருந்து தன்னைக்காத்துக்கொள்ள அவன் மலைகளிலும் குன்றுகளிலும் அதனைச் சார்ந்த பகுதிகளிலும் தஞ்சமடைந்தான் குறிஞ்சி நிலமக்கள். சிலம்பன், குறவன், வெற்பன், வேட்டுவன், குன்றவன், இறவுளன், இருளன் என்ற பெயர்களால் அறியப்பட்டு வில், அம்பு, கோல், வேல் இவற்றின் துணையுடன் உணவுத்தேவைக்காக விலங்குகளை வேட்டையாடி உண்டதாகத் தெரிகின்றது. இம்மக்கள் உடும்பு, முயல் போன்ற விலங்கினங்களை உணவாகப் பயன்படுத்திய செய்தியை,

“வேட்டைச்சிறாஅர் சேட்புலம் படராது
படுமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்கு நிணம் பெய்த
---------- தயிர்க்கண் மிதவை
யாணர் நல்லவை பாணரொடு ஓராங்கு
வருவிருந்து அயரும் விருப்பினள்”(புறம் - 326)

என்ற புறப்பாடல்வழி அறியலாம். வீட்டின் அருகில் உள்ள மடுக்களில் பிடித்;த உடும்பினை சமைத்து தான் மட்டும் உண்ண நினையாமல் வருவோர்க்கும் பகிர்ந்தளித்த பண்பாட்டினையும் இப்பாடல் முன்வைக்கின்றது. மேலும் உடும்பின் தசையை உண்டால் அத்தசை உடல் முழுவதும் பரவி நன்மை பயக்கும் என்ற நம்பிக்கை குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த வேட்டுவர்களிடம் இருந்ததை அறியமுடிகின்றது.

மலைப்பகுதிகளில் வாழ்ந்த குறவர்கள் நிலங்களிலிருந்து அகழ்ந்தெடுத்த வள்ளிக்கிழங்குகள், மலைத்தேன் ஐவனநெல், மலைநெல் இவற்றையும் உணவாகக் கொண்டிருந்தனர்.

காடுறை உலகம் - முல்லை

மலையில் வாழ்ந்த குழுவினருள் சிலர் தங்களின் உணவுத்தேவையை நிறைவடையாத நிலையில் புலம் பெயர்ந்து வாழ முற்பட்டனர்.அவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் இடையர்கள் என்றழைக்கப்பட்டனர். இடையர்கள் இடையர்களின் வசிப்பிடம் காடுசூழ்ந்த முல்லை என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. ஆடு மாடுகளை மேய்த்தும், அப்பகுதிகளில் விளைந்த வரகு, சாமை, அவரை, துவரை போன்ற தானியங்களை உணவாக உண்டும் இவ்விடையர்கள் வாழ்ந்து வந்தனர். பால், தயிர், நெய் போன்ற பால் சார்ந்த பொருட்களும் இடையர்களின் உணவில் பெரிதளவு பயன்பாட்டில் இருந்ததை அறியமுடிகின்றது.. குறிஞ்சி நிலம் போன்றே இங்கும் ஐவன வெண்ணெல் பயன்பாட்டில் இருந்ததை,

“கொடிச்சி ஐவனவெண்ணெல் குறூஉம்”குறுந்- 373.

என்ற வரி உணர்த்திச்செல்கின்றது. புன்செய் நிலத்தில் விளையும் இந்த ஐவனவெண்ணெலை சமைத்து அத்துடன் துவரை, அவரை போன்ற தானியங்களைக் கலந்து உணவாக முல்லைநில மக்கள் உண்டனர்.

முல்லை நிலமக்கள் புளித்த தயிரில் சமைத்த சோற்றுடன் நெய்யையும், செம்மறியாட்டுக்கறியையும் கலந்து உண்டனர். (அக 394: 2-7) இறைச்சி உட்கொள்வது இவர்களிடம் பெரிதாக காணப்படவில்லை. (அக394 -5). இந்த மாற்றத்திற்கும் ஆயர்களிடையே வைதீகசமயம் பரவியதற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கலாம்” என்று குறிப்பிடுகின்றார் ராஜ்கௌதமன்.

முல்லைநில இடையர்கள் தன்னிடத்து உள்ள பாலை கொடுத்து பண்டமாற்று முறையில் அதற்கு ஈடான தானியம் பெற்றதை, முதுகூத்தனார் என்ற புலவர், குறுந்தொகைப்பாடலொன்றில்,

“பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாருடை இடையன்”– (குறுந் - 221:3:4)

என்று குறிக்கின்றார். இடையர்கள் நண்டுகுஞ்சுபோல காணப்படும் தினைச்சோற்றினைத் தாமும் உண்டு விருந்தினர்க்குக் கொடுத்த பண்பாட்டினை

“மடிவாய் கோவலர் குடிவயின் சேப்பின்

இருங்கிளைலெண்டின் சிறுபார்ப்பன்ன

பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்" (பெரு -166-168)

என்று பெருபாணாற்றுப்படை உணர்த்தி நிற்கும்.

முல்லை நிலத்தார் சிவந்த அவரை விதைகளையும் மூங்கிலரிசியையும் மேட்டு நிலத்தில் விளைந்த நெல்லின் அரிசியையும் புளி கரைத்த உலையிற்பெய்து குழைந்த புளியங்கோலாக்கி உட்கொண்டனர். பொன்னை நறுக்கினாற்போன்ற நுண்ணிய அரிசியை வெள்ளாட்டு இறைச்சியுடன் கூட்டி ஆக்கிய மூன்றையும், திணைமாவையும் உண்டு வாழ்ந்ததாக பெரும்பாணாற்றுப்படை சுட்டும்.

தீம்புனல் உலகம் - மருதம்

மலைகள் - காடுகள் இவைகளில் சுற்றித்திரிந்த மனிதன் பரிணாம வளர்ச்சி பெற்று ஆற்றங்கரையோரங்களில் நிலையாக வாழத்திட்டமிட்டதன் வெளிப்பாடு தான் மருதநிலமாக உருபெற்றது. ஆற்றுநீர்த்தேக்கி, உணவுத்தானியங்களைப் பயிரிடும் வேளாண்மைத்தொழில் கண்டுபிடித்ததன் அடிப்படையில் இங்கு வாழ்ந்த மக்கள் மன்னர், உழவர், பன்னர் என்று அழைக்கப்படலாயினர்.

பள்ளமானப்பகுதியிலுள்ள மிகுநீரினைப்பயன்படுத்தி செந்நெல் வெண்நெல் கரும்பு இவற்றை விளைவித்து அதனையே உணவாக உண்டனர். மருதநிலமக்கள் கரும்பு சாற்றினைக்காய்ச்சி வெல்லம் தயாரித்துத் தேவையான நேரங்களில் உணவாக உண்டனர்.

அரிசிசோற்றை மிகுதியாக உண்ட நிலையிலும் அவ்வரிசியும் கைக்குத்தல் அரிசியாக மாற்றி உணவு சமைத்து, அச்சோற்றுக்குத்தொடுகறியாக வயல்நண்டுடன் பீர்க்கங்காய் சேர்ந்து செய்த கலவை பயன்பட்டது. இதனை,

"இருங்காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த

அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு

கவைத்தாள் அலவன் கலவையொடு" (சிறு -193 – 195)

என்ற சிறுபாணாற்றுப்படை வரிகள் வழி உணரலாம்.

பெருமணல் உலகம் - நெய்தல்

வயல் நிலப்பகுதிகளை அடுத்து இருப்பது கடலும் கடல்சார்ந்த பகுதிகளும் ஆகும். கடல் சூழ்ந்த நிலப்பகுதிக்கு 'நெய்தல்' என்று பெயர். அரிசிச்சோறு, மீன்சூட்டு, கள் என இவைகளை பரதவர்கள் உணவாக ஏற்றுக்கொண்டனர். மீனுக்கு மாற்றாகப்பெற்ற நெல்லை சோறு சமைத்துத் தயிருடன் உட்கொண்ட பரதவர்களின் செயலை

‘பசு மீன் நொடுத்த வெண்நெல் மாசுத்

தயிர் மிதி மிதவை ஆர்த்துவம் நினக்கே’ (அகம் -340(14-15)

“கொழுமீன் சுடுபுகை மறுசினுள் மயங்கி

சிறுவீ ஞாழல் துறையுமார் இனிதே” நற் 311(6-7)

என்ற இருபாடல்கள் உணர்த்துகின்றன. உப்பு விற்று வந்த நெல்லரிசியில் சமைத்த சோற்றை புளியிட்டு சமைத்த மீனுடன் தானும் உண்டு தன் தந்தைக்கும் பரதவப்பெண்கள் வழங்கியதை

“நெடுந் திமில் தொழிலோடு வைகிய தந்தைக்கு

உப்பு நொடை நெல்லின் மூரல் வெண்சோறு

அமிலை துழந்த அமம்புளிச்சொரிந்து

கொடுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்” (அகம் - 60(3-6)

என்ற பாடல் வழி உணரலாம். பரதவர்கள் களைப்புத்தீரகள் பருகியுள்ளனர். இது நீர்ம ஆகாரமாகக் கருத இடமுள்ளதாக அறியமுடிகின்றது.

‘திண்திமில் வன்பரதவர்

வெய்பு உடைய மட்டு உண்டு’ புறம் (4-5)24

இப்பாடலில் வரும் மட்டு என்பது கள்ளை குறிக்கும். நெல்லை இடித்து மாவாகிய உணவை ஆண் பன்றிக்கு இட்டுக் கொழுக்க வைத்தனர். அங்ஙனம் கொழுத்த ஆண் பன்றியைக் கொன்று அதன் இறைச்சியை சமைத்து உண்டனர். காவிரி பூம்பட்டினத்து மீனவர் கடல் இறா, வயல் ஆமை இவற்றைப்பக்குவப்படுத்தி சமைத்து உண்ட செய்தியைப்பட்டினபாலை வழி அறிய முடிகின்றது.

நாள் முழுவதும் இடைவிடாமல் உழைக்கும் பரதவர் கள் குடிப்பதையும் பழக்கமாகக் கொண்டிருந்நதனர். சுற்றத்தாருடன் அதனைப்பருகி, அளவற்ற மகிழ்வில் இருந்தனர். என்பதை,

“ஞான்ற ஞாயிறு குடமலை மறைய

மான்ற மாலை மகிழ்ந்த பரதவர்”(நற் -239.)

என்பதன் வழி அறியலாம்.

“நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்

சேரி விலைமாறு கூறரின் மனைய

விளியறி ஞமலி குரைப்ப வெரிஇய”– (அகம்-140)

இவ்வாறு பண்டமாற்றாகப் பெற்ற நெல்லை, வீட்டிற்குக் கொண்டுவந்து, வெண்சோறு ஆக்குவர். அச்சோற்றில், அயிலை மீனை இட்டு ஆக்கிய அழகிய புளிக்கறியினைக் சொரிவர். அதனுடன் கொழுமீன் கருவாட்டையும் உண்பர். இதனை,

“உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு

ஆயிலை துழந்த அம்புளிச்சொரிந்து

கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்”–(அகம்-60)

என்ற அகப்பாடல் வழி அறியலாம்.

முடிவுரை

இயற்கையை சுவாசித்தும் நேசித்தும் வாழ்ந்த நம் முன்னோர்கள் காலச்சூழலுக்கேற்ப மாற்றம் கொண்ட வாழ்வினை முன்னிலைப்படுத்தினர். அம்மாற்றம் உணவு, உடை, உறையுள் என எல்லா நிலைகளிலும் பரவியது. நம் நாட்டை விட்டு புலம்பெயர்ந்துச் சென்றோர், புலம் பெயர்ந்து சென்ற இடத்தில் கற்றுக்கொண்ட உணவுமுறையும், உணவியல் சார்ந்த நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் என நம்நாட்டில் விதைத்தவை ஒருபுறம் இருக்க, மேலைநாட்டவர், தம் உணவியல் நெறிகளை நம் நாட்டில் விட்டுச்சென்றது என்ற இருவேறு நிலைகள் பெரிதளவில் தாக்கத்தை ஏற்படுத்தாவண்ணம் நம் இயல்பான உணவுமுறை அமைய வேண்டும். இவ்வளையத்துள் உணவு உள்ளிட்ட அனைத்து பண்பாட்டுக் கூறுகளும் அடங்கும்.

கடல் பயணம்

கப்பல் பொறிஞர் சுப. இராமநாதன், சென்னை

மக்கள் பழங்காலம் முதலே பயணம் மேற்கொண்டுள்ளனர். நாடோடிகளாக, கால்நடை வளர்ப்பவர்களாக பழங்கால மக்கள் பயணப்பட்ட பயணங்கள் அதிகமாகும். நாகரீகம் வளர வளர நிலப்பயணம் தாண்டி நீரைக் கடக்கும் கடல் பயணத்திற்கும் செல்லும் நிலை ஏற்பட்டது. ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்லும் நடைமுறை வாய்த்தது.

கடல் பயணம் ஏன் அவசியம் என்று ஒரு கேள்வி எழுப்பினால் அதற்கு இன்றைய நிலையில் கிடைக்கும் பதில் பின்வருமாறு.

கடல் பயணத்தின் அவசியம் இரண்டு மட்டுமே

1. பொருளீட்ட கடல் செல்லுதல்
2. சுற்றுலா நிமித்தமாக

இவ்வுலகில் 90% வணிக பொருள் கடல் மார்கமாக தான் எடுத்துச் செல்கின்றது, என் என்றால்..
கடற்பயணம்

- மிகவும் பாதுகாப்பானது
- அதிக பொருள்கள் கொண்டு செல்ல முடியும்
- சூழல் நட்பு உடையது
- மிக மலிவானது

இக்காலத்திலேயே கடற்பயணம் இவ்வளவில் ஏற்புடையது என்றால் காற்றுவழி விமான சேவை வருவதற்கு முன்னதான காலத்தில் கப்பல் பயணம் மட்டுமே வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பினை அளித்தது என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

கடல் பயணம் செய்வதில் பல சவால்கள் உண்டு. நீரிலேயே அதிக நாள் பயணிக்க வேண்டும். நோய் வந்தால் சரி செய்து கொள்ள இயலாது. கப்பலில் ஏற்படு கோளாறுகளால் அவதி ஏற்படலாம். உணவு, நீர் வசதி சராசரியாகப் பயன்படுத்தும் அளவிற்குக் கூட கிடைக்காது.

இன்றைக்கே இவ்வளவு இடைஞ்சல்கள் இருக்கிறது என்றால் பழங்காலத்தில் , செவ்விலக்கிய காலத்தில் இன்னும் எத்தனை நெருக்கடிகள் இருந்திருக்க இயலும் என்பதை யூகித்துக்கொள்ள வேண்டும். இவற்றைத் தாண்டி பழந்தமிழர்கள் காற்றின் போக்கறிந்து கலம்செலுத்தியுள்ளனர். பிற வெளிநாட்டினர் தமிழகத்திற்கு வருகை புரிந்துள்ளனர். இவ்வகையில் போக்கும் வரவும் கடல் பயணத்தில் பழங்காலந்தொட்டே இருந்துள்ளது. பட்டினப் பாலை என்ற நூல் காவிரிப்பூம்பட்டினத்தில் கடல் வணிகம் நடைபெற்றதைக் காட்டும் சிறந்த தமிழ் இலக்கியமாக இருக்கிறது. இதன்வழி பழைய கடற்கரை சார் நடைமுறைகளை அறியமுடிகிறது.

<u>பழந்தமிழர் கடல் வணிகம்</u>

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்னும் ஔவைமொழியும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் கணியன் பூங்குன்றன் மொழியும், தமிழர்களின் உலகளாவிய சிந்தனைக்கும் பன்னாட்டுத் தொடர்புக்கும் சான்றுகளாம். பழங்காலத்தில், தமிழர் பிற நாடுகளுக்குக் கடற்பயணம் மேற்கொண்ட செய்தி முந்நீர் வழக்கம் எனத் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை என்பது தொல்காப்பிய மொழி. இதன்வழி ஆண்களே கடற்பயணம் மேற்கொண்டனர் என்பது அறியத்தக்கது. மேலும் கலத்திற் பிரிவு என்று ஒரு பிரிவே தலைவனுக்குச் சுட்டப்படுகிறது.

பழந்தமிழர் பொருளீட்டுதலைத் தம் கடமையாகக் கருதினர். இதனைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பொருள்வயிற் பிரிவு விளக்குகிறது. இப்பிரிவு காலில் (தரைவழிப்பிரிதல்) பிரிவு, கலத்தில் (நீர்வழிப் பிரிதல்) பிரிவு என இருவகைப்படும்.

தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்றவற்றில் தலைவன் பொருள்வயிற்பிரிவு மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அக்காலகட்டத் தமிழ் இளைஞர்கள் பொருள் ஈட்டுவதற்காக அக்கம்பக்கத்து நாடுகளுக்குப் பயணம் செய்தார்கள்.13 ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்த மாக்கோபோலோகூட, “ஆண் மக்களுக்கு பதின்மூன்று வயதாகிவிட்டால் பெற்றோர்கள் அவர்களை வீட்டில் வைத்துக்கொள்வது இல்லை. அந்த வயதில் வணிகம் செய்து பொருள் ஈட்டும் ஆற்றலை அவர்கள் பெற்றுவிடுகிறார்கள் என்றும் அவர்களை வளர்க்கும் பொறுப்பு அதற்குமேல் தங்களுக்கு இல்லை என்றும் பெற்றோர்கள் கருதுகிறார்கள். எனவே

அந்தப் பிள்ளையின் கையில் 20 அல்லது 24 குரோட்டோ அளவிற்குச் சமமான பணம் கொடுத்து அவர்களை வெளியில் அனுப்பிவிடுகிறார்கள். தங்கள் பெற்றோர்களது வருமானத்தில் கிடைக்கும் சோற்றில் ஒரு பருக்கையும் அவர்கள் தொடுவதில்லை" எங்கிறார் அவர். கி.பி. 13ஆம் நூற்றாண்டுத் தமிழ் இளைஞர்கள் கூட வணிகம் செய்து பொருள் ஈட்டியுள்ளனர் என்பதற்கு இக்கூற்று ஒரு வரலாற்று ஆதாரமாக உள்ளது எனவும், இத்தகைய ஒரு பொது மனோபாவம் சிலப்பதிகார காலத்திற்கு முன்பிருந்தே வேரூன்றி வளர்ந்து வந்துள்ளது எனவும் அவர் கூறுகிறார்,

சிலப்பதிகாரக் காப்பியத்தில் கோவலன் தான் தொழில்செய்து சம்பாதித்த பணத்தை மாதவியிடம் இழந்த பின்னர் சொந்தமாக வணிகம் செய்து பொருள் சம்பாதிக்கவே கண்ணகியோடு மதுரை போகிறான். அனால் அப்பொழுது அவனது தந்தையும் சரி, கண்ணகியின் தந்தையும் சரி பெரும் பணக்காரர்களாகவே உள்ளனர், எனினும் அவர்களிடம் பொருள் கேட்டுப் பெறுவது இழுக்கு என்பதால்தான் அவன் சுயமாகப் பொருள் சம்பாதிக்க மதுரை போகிறான். அன்றைய தமிழ்ச் சமுதாய மரபுப்படி சுயமாகப் பொருள் சம்பாதித்து வாழ்வது தான் ஒரு ஆண்மகனின் கடமை ஆகும். தனது குடும்பச் செலவுக்குத் தன் தந்தையிடம் பணம் வாங்குவது இழுக்கு என்றே அன்றையத் தமிழ்ச் சமுதாயம் கருதியது. பொருள்வயிற் பிரிவு என்பது திருமணத்திற்கு முன் தனது குடும்ப வாழ்விற்குத் தேவைப்படும் பொருளை ஒரு ஆண்மகன் சுயமாகச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் எங்கிற தமிழ்ச் சமுதாயத்தின் அடிப்படைக் கருத்தில் இருந்து உருவான ஒரு இலக்கியக் கருத்தாக்கம் எனலாம். 13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இக்கருத்து தமிழர்களிடம் இல்லாது போய்விடுகிறது.

<u>சங்ககாலத் தமிழர்களின் வணிகத்தொடர்பு</u>

எகிப்து, பாலஸ்தீனம், மெசபடோமிய, பாபிலோனியா, சீனம் ஆகிய நாடுகள் தமிழரின் பொருள்களை விரும்பிப் பெற்றன.ஏலமும் இலவங்கமும் இஞ்சியும் மிளகும் மேற்காசிய நாடுகளில் நல்ல விலைக்கு விற்கப்பட்டன. தமிழ்நாட்டில், பிற நாட்டார் உள்ளத்தை கவரும் பல பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன. அவற்றுள், முத்தும் பவளமும் ஆரமும் அகிலும் வெண்துகிலும் சங்கும் குறிப்பிடத்தக்கன. பழந்தமிழர், கிரேக்கரையும் உரோமானியரையும் யவனர் என அழைத்தனர்.

<u>கப்பல் :</u>

பழங்காலத்திலேயே தமிழகத்தில் பலவகையான கப்பல்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு பெரிய கப்பலும், மதில்சூழ்ந்த கோட்டைபோலத் தோன்றுமாம். அஃதாவது, நான்கு பக்கமும் நீர் நிரம்பிய கழனிகள், அதன் நடுவில் தனியாக மதிலோடு கூடிய மருதநில அரசனது கோட்டை. அக்கோட்டையின் தோற்றமானது, நடுக்கடலில் செல்லும் கப்பலுக்கு உவமையாகப் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

கடலும் மரக்கலங்களும் :

ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி என்பவை கடலைக் குறிக்கும் தமிழ்சொற்கள். இவ்வாறே மரக்கலத்துக்கும் தமிழ்மொழியில் பெயர்கள் பல வழங்குகின்றன, அவை : கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, பஃறி, ஓடம் என்பன. ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு வகையான காலத்தைக் குறிக்கும். இச்சொற்களைக் கொண்டே பண்டைத் தமிழர்களின் கடற்பயணம் பற்றித் தெளிவாக அறியலாம். உப்பங்கழிகளில் செலுத்துதற்குரிய சிறிய படகுகளும் கடலில் செலுத்துதற்குரிய பெரிய நாவாய்களும் அன்று இருந்தன.

கடலில் செல்லும் பெரிய கலம் நாவாய் எனப்படும். புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள், அலைகளால், அலைப்புண்டு கட்டுத்தறியில் கட்டப்பட்ட யானை அசைவதுபோல் அசைந்தன. அவற்றின் உச்சியில் கொடிகள் அசைந்து ஆடின எனப் பட்டினப்பாலை கூறுகின்றது. பெரிய நாவாய்கள் காற்றின் துணைகொண்டே இயங்கின. அவை பாய்மரக் கப்பல்கள் எனப்பட்டன. இதற்குக் காற்றானது, எவ்வெப்போது எவ்வெத்திசை நோக்கி வீசும் என்பதனைத் தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர் என்பதனைப் புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.

நாவாய் பற்றிய பல குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு.

நாவாய் சூழ்ந்த நளி நீர் படப்பை - பெரும் 321

ஆடு இயல் பெரு நாவாய்/மழை முற்றிய மலை புரைய - மது 83,84

விழுமிய நாவாய் பெரு_நீர் ஓச்சுநர் - மது 321

நெடும் சுழி பட்ட நாவாய் போல - மது 379

தூங்கு நாவாய் துவன்று இருக்கை - பட் 174

பல வினை நாவாய் தோன்றும் பெரும் துறை - நற் 295/6

ஏமுறு நாவாய் வரவு எதிர்கொள்வார் போல் - பரி 10/39

நெடும் கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ - அகம் 110/18

களிறே முந்நீர் வழங்கு நாவாய் போலவும் - புறம் 13/5

நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி - புறம் 66/1

பொலம் தரு நாவாய் ஓட்டிய அ வழி - புறம் 126/15

என்ற குறிப்புகள் பழங்காலத்தில் ஓடிய நாவாய்கள் பற்றிய செய்திகளை அறிவிக்கின்றன.

கலம் என்ற சொல்லில் அக்காலக் கப்பல் குறிக்கப்பெற்றுள்ளது.

போக்கு இல் பொலம் கலம் நிறைய பல் கால் - பொரு 86

உரவு நீர் அழுவத்து ஓடு கலம் கரையும் - பெரும் 350

மீன் பூத்து அன்ன வான் கலம் பரப்பி - பெரும் 477

நலம் சான்ற கலம் சிதறும் - மது 104

கள்ளின் இரும் பைம் கலம் செல உண்டு - மது 228

நனம் தலை வினைஞர் கலம் கொண்டு மறுக - மது 539

மென் பூ செம்மலொடு நன் கலம் சீப்ப - மது 685

நாள் தர வந்த விழு கலம் அனைத்தும் - மது 695

நேர்வரும்-குரைய கலம் கெடின் புணரும் - குறி 14

கலம் பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ - மலை 50

பலர் புறங்கண்டு அவர் அரும் கலம் தரீஇ - மலை 71

கலம் பெய கவிழ்ந்த கழல் தொடி தட கையின் - மலை 577

கெடுத்துப்படு நன் கலம் எடுத்து கொண்டு ஆங்கு - நற் 182/5

ஈர் மண் செய்கை நீர் படு பசும் கலம்/பெரு மழை பெயற்கு ஏற்று ஆங்கு எம் - நற் 308/9,10

கலம் பெறு விறலி ஆடும் இ ஊரே - நற் 328/11

ஆசு இல் கலம் தழீஇ அற்று - நற் 350/9

பெயல் நீர்க்கு ஏற்ற பசும் கலம் போல - குறு 29/2

பாடு இமிழ் பனி துறை ஓடு கலம் உகைக்கும் - ஐங் 192/2

பொன் செய் பாண்டில் பொலம் கலம் நந்த - ஐங் 316/1

நாடு படு நன் கலம் தரீஇயர் - ஐங் 463/4

வருநர்க்கு வரையாது பொலன் கலம் தெளிர்ப்ப - பதி 18/3

நன் கலம் தரூஉம் மண் படு மார்ப - பதி 21/19

சிறு மகிழானும் பெரும் கலம் வீசும் - பதி 23/9

நகைவர் ஆர நன் கலம் சிதறி - பதி 37/4

நகைவர் ஆர நன் கலம் சிதறி - பதி 43/20

கலம் செல சுரத்தல் அல்லது கனவினும் - பதி 44/5

அரும் கலம் தரீஇயர் நீர் மிசை நிவக்கும் - பதி 52/3

வென்று கலம் தரீஇயர் வேண்டு புலத்து இறுத்து அவர் - பதி 53/1

உரை சால் நன் கலம் வரைவு இல வீசி - பதி 54/8

பாடு சால் நன் கலம் தரூஉம் - பதி 59/18

அந்தணர் அரும் கலம் ஏற்ப நீர் பட்டு - பதி 64/5

தெண் கடல் முத்தமொடு நன் கலம் பெறுகுவை - பதி 67/4

பெரும் களிற்று யானையொடு அரும் கலம் தராஅர் - பதி 71/21

கொடுமணம் பட்ட வினை மாண் அரும் கலம்/பந்தர் பயந்த பலர் புகழ் முத்தம் - பதி 74/5,6

நாடு கெட எருக்கி நன் கலம் தரூஉம் நின் - பதி 83/7

சென்மோ பாடினி நன் கலம் பெறுகுவை - பதி 87/1

களிறொடு கலம் தந்து - பதி 90/7

இரும் கண் யானையொடு அரும் கலம் தெறுத்து - பதி 91/1

மென் தோள் மேல் அல்கி நன் கலம் இன்று - பரி 9/32

புரிநூல் அந்தணர் பொலம் கலம் ஏற்ப - பரி 11/79

உரி மாண் புனை கலம் ஒண் துகில் தாங்கி - பரி 19/12

கலம் பூத்த அணியவர் காரிகை மகிழ் செய்ய - கலி 27/11

அம் தீம் சொல் நல்லார் அணிந்த கலம் காட்டி - கலி 83/28

தீம் பால் கறந்த கலம் மாற்றி கன்று எல்லாம் - கலி 111/1

துறைய கலம் வாய் சூழும் துணி கடல் தண் சேர்ப்ப - கலி 132/7

தீம் பால் உண்பவர் கொள் கலம் வரைதல் - கலி 133/17

கரை காணா பௌவத்து கலம் சிதைந்து ஆழ்பவன் - கலி 134/24

கலம் சிதை இல்லத்து காழ் கொண்டு தேற்ற - கலி 142/64

கலம் தரல் உள்ளமொடு கழிய காட்டி - அகம் 3/12

பொலம் கலம் சுமந்த பூண் தாங்கு இள முலை - அகம் 16/9

இரந்தோர் வறும் கலம் மல்க வீசி - அகம் 30/9

விருந்தின் மன்னர் அரும் கலம் தெறுப்ப - அகம் 54/1

நன் கலம் தரூஉம் வயவர் பெருமகன் - அகம் 69/17

அரும் கலம் தெறுத்த பெரும் புகல் வலத்தர் - அகம் 89/15

பெறல் அரு நன் கலம் எய்தி நாடும் - அகம் 93/6

நன் கலம் களிற்றொடு நண்ணார் ஏந்தி - அகம் 124/1

கழங்கு உறழ் முத்தமொடு நன் கலம் பெறூஉம் - அகம் 126/12

பணி திறை தந்த பாடு சால் நன் கலம்/பொன் செய் பாவை வயிரமொடு ஆம்பல் - அகம் 127/7,8

நசையின் வாழ்நர்க்கு நன் கலம் சுரக்கும் - அகம் 143/11

யவனர் தந்த வினை மாண் நன் கலம்/பொன்னொடு வந்து கறியொடு பெயரும் - அகம் 149/9,10

தனம் தரு நன் கலம் சிதைய தாக்கும் - அகம் 152/7

கலம் பெய கவிழ்ந்த கழல் தொடி தட கை - அகம் 213/20

நலம் சால் விழு பொருள் கலம் நிறை கொடுப்பினும் - அகம் 280/5

கலம் சுடு புகையின் தோன்றும் நாட - அகம் 308/6

பாணர் ஆர்ப்ப பல் கலம் உதவி - அகம் 331/11

அ எயில் கொண்ட செய்வு_உறு நன் கலம்/பரிசில்_மாக்கட்கு வரிசையின் நல்கி - புறம் 6/15,16

பரிசிலர்க்கு அரும் கலம் நல்கவும் குரிசில் - புறம் 14/10

வளி புடைத்த கலம் போல - புறம் 26/2

புகாஅர் புகுந்த பெரும் கலம் தகாஅர் - புறம் 30/13

கடும்பின் அடு கலம் நிறை ஆக நெடும் கொடி - புறம் 32/1

இரவலர்க்கு அரும் கலம் அருகாது ஈயா - புறம் 56/17

யவனர் நன் கலம் தந்த தண் கமழ் தேறல் - புறம் 56/18

அன்பு உறு நன் கலம் நல்குவன் நினக்கே - புறம் 67/14

பிற கலம் செல்கலாது அனையேம் அத்தை - புறம் 126/16

நாள்-தொறும் நன் கலம் களிற்றொடு கொணர்ந்து - புறம் 148/3

பெறுதற்கு அரிய வீறு சால் நன் கலம்/பிறிது ஒன்று இல்லை காட்டு நாட்டேம் என - புறம் 150/18,19

சிறு பொன் நன் கலம் சுற்ற இரீஇ - புறம் 160/9

அரிது பெறு பொலம் கலம் எளிதினின் வீசி - புறம் 160/11

உள் இல் வரும் கலம் திறந்து அழ கண்டு - புறம் 160/21

தாள் நிழல் வாழ்நர் நன் கலம் மிகுப்ப - புறம் 161/30

யாம் வேண்டி ஆங்கு எம் வறும் கலம் நிறைப்போன் - புறம் 171/5

அரும் கலம் களிற்றொடு வேண்டினும் பெருந்தகை - புறம் 171/10

ஒன்னார் வாட அரும் கலம் தந்து நும் - புறம் 198/15

அரு விலை நன் கலம் அமைக்கும்_காலை - புறம் 218/4

கலம் செய் கோவே கலம் செய் கோவே - புறம் 228/1

கலம் செய் கோவே கலம் செய் கோவே - புறம் 228/1

நனம் தலை மூதூர் கலம் செய் கோவே - புறம் 228/4

கலம் செய் கோவே கலம் செய் கோவே - புறம் 256/1

கலம் செய் கோவே கலம் செய் கோவே - புறம் 256/1

நனம் தலை மூதூர் கலம் செய் கோவே - புறம் 256/7

கலம் தொடா மகளிரின் இகந்து நின்றவ்வே - புறம் 299/7

கலம் தந்த பொன் பரிசம் - புறம் 343/5

கலம் கழாஅலின் துறை கலக்கு_உற்றன - புறம் 345/4

உறந்தை அன்ன உரை சால் நன் கலம்/கொடுப்பவும் கொளாஅ - புறம் 352/10,11

அரும் கலம் நீரொடு சிதறி பெருந்தகை - புறம் 361/5

கலம்_கலம் தேறல் பொலம் கலத்து ஏந்தி - புறம் 361/18

கலம்_கலம் தேறல் பொலம் கலத்து ஏந்தி - புறம் 361/18

வீறு சால் நன் கலம் வீசி நன்றும் - புறம் 362/15

இரவலர்க்கு அரும் கலம் அருகாது வீசி - புறம் 367/8

உண்ட நன் கலம் பெய்து நுடக்கவும் - புறம் 384/20

கடலே கால் தந்த கலம் எண்ணுவோர் - புறம் 386/14

வீறு சால் நன் கலம் நல்கு-மதி பெரும - புறம் 389/15

அரும் கலம் வரவே அருளினன் வேண்டி - புறம் 395/28

அரும் கலம் நல்கியோனே என்றும் - புறம் 397/18

மிக பெரும் சிறப்பின் வீறு சால் நன் கலம்/கலிங்கம் அளித்திட்டு என் அரை நோக்கி - புறம் 400/11,12

என்ற அளவில் கலம் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத் தொகுப்பில் காணக்கிடைக்கிறது. இவ்வகையில் தமிழர்களுடன் ஒட்டிய வாழ்வுடையதாக கப்பல் பயணம் இருந்தது என்பதை அறியமுடிகிறது.

துறைமுகங்கள் :

தமிழகத்தில் நடைபெற்றுவந்த வாணிகத்தின் பயனாகப் பல துறைமுகங்கள் கடற்கரைப் பட்டினங்களாகச் சிறந்து விளங்கின. அவற்றுள் காவிரிப்பூம்பட்டினம், முசிறி, கொற்கை ஆகியவை குறிப்பிடத்தக்கன. முசிறி, சேர மன்னனுக்குரிய துறைமுகம், அங்குச் சுள்ளி என்னும் பெரிய ஆற்றில் யவனர்களின் மரக்கலங்கள், ஆற்றுத்துறைகள் கலங்கிப் போகும்படி வந்து நின்றன. அக்கலங்களுக்கு உரிய யவனர்கள், பொன்னைச் சுமந்து வந்து, அதற்கு ஈடாக மிளகை ஏற்றிச் சென்றார்கள். இச்செய்தியை, அகநானூறு தெரிவிக்கிறது. பாண்டிய நாட்டு வளத்தைப்

பெருக்கியது கொற்கைத் துறைமுகம், இத்துறைமுகத்தில் முத்துக்குளித்தல் மிகச் சிறப்பாக நடந்ததனை வெனிசு நாட்டறிஞர் மார்க்கோபோலோ குறித்துள்ளார். இங்குச் சங்க காலத்தும் முத்துக்குளித்தல் நடந்தது. ஏற்றுமதிப் பொருள்களில் முத்தே முதலிடம் பெற்றது.

மதுரைக்காஞ்சியும் சிறுபாணாற்றுப்படையும் கொற்கை முத்தைச் சிறப்பிக்கின்றன. விளைந்து முதிர்ந்த விழுமுத்து என மதுரைக்காஞ்சி கூறும். கடற்கரையை அடுத்து இருக்கும் ஊர்களைப் பட்டினம், பாக்கம் என்றழைப்பர். அவ்வூர்களில் பெரும்பாலும் வணிகர்களே வாழ்ந்து வந்தார்கள். சோழநாட்டின் துறைமுகமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் (பூம்புகார்), சுங்கச்சாலையும் கலங்கரை விளக்கமும் இருந்தன. இங்குக் கப்பலிலிருந்து நிலத்தில் இறக்கப்படுவனவும், நிலத்திலிருந்து கப்பலில் ஏற்றப்படுவனவுமாகிய அளவில்லாத பண்டங்கள் முன்றிலில் மலைபோகக் குவிந்து கிடந்தன.

ஏற்றுமதி இறக்குமதி :

பழந்தமிழகத்தின் வாணிகப்பொருள்களைப் பற்றிய குறிப்புகள் பட்டினப்பாலையிலும் மதுரைக்காஞ்சியிலும் காணப்படுகின்றன. இங்கிருந்து ஏற்றுமதியான பொருள்களும் இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி முதலியன குறிப்பிடத்தக்கவை. தமிழகப் பொருள்கள் சீனத்தில் விற்கப்பட்டன. சீனத்துப் பட்டும் சருக்கரையும் தமிழகத்துக்கு இறக்குமதி ஆயின. கரும்பு, அதியமானின்முன்னோர் காலத்தில் சீனாவிலிருந்து கொண்டுவந்து பயிரிடப்பட்டது. கடற்பயனம்பற்றிய கல்வியறிவு இந்நாளில் மக்களை எட்டியுள்ளது. கடல்சார் பல்கலைக்கழகத்தின் வாயிலாகப் பட்டம், பட்டயக்கல்வி கற்பிக்கப் பெற்று வருகின்றன. இத்துறையில் பயில்வோருக்குப் பயிற்சியும் பணிவாய்ப்பும் நிரம்ப உள்ளன. எனவே, மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம் என்னும் பாரதியின் கனவு இன்று நனவாகி உள்ளது.

வேளாண்மையியல்

முனைவர் க. சொல்லேருழவன் ,உதவிப் பேராசிரியர்,தமிழ்த் துறை, அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி-3.

பல்வேறு முயற்சிக்குப் பின்னும் இவ்வுலகம் ஏரின் பின்னாகவே நிற்கிறது. ஆதலின் எங்கு சுற்றியும் உழவுத் தொழிலே தலையாயது. உழவுத் தொழில் செய்வோரே மற்றைத் தொழில் செய்வோருக்கும் உணவு அளித்தலால் அச்சாணி போன்றவர். உழுதுண்பவர் வாழ்நிலை சுதந்திரமானது. மற்றைத் தொழில் செய்வோர் உணவுக்கு உழவரைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. ஆதலால் உழுதுண்பவர்களுக்கு இரந்து வாழும் வாழ்க்கை நிலை இல்லை. மாறாக ஈர்ந்து வாழும் வாழ்க்கை நிலை உடையவர். உழவர்; கொடையின் கீழ் அரசர்களின் வெண்கொற்றக் குடைகளும், ஆண்டிகளின்; தவக் குடைகளும் குடைபிடிக்கும்; என வள்ளுவர் உழவு என்ற அதிகாரத்தில் கூறுவர். உழவுத் தொழிலையும், உழவரின் மேன்மையையும் கூறும் வள்ளுவர் வேளாண்மை என்னும் அதிகாரம் படைத்துக் குறள் பாடாதது ஏன்? என்ற வினா எழுகிறது. அத்துடன் வேளாண் வேளாண்மை ஆகிய சொற்களுக்கான பொருள் யாது? ஆகியவற்றிற்கான விடை தேடுவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியத்தில் வேளாண் எனும் சொல்:

தொல்காப்பியர் வேளாண் என்னும் சொல்லை மூன்று இடங்களில் கையாள்வர். ஒன்று தலைவன் கூற்றை மொழிகின்ற இடத்தில்,

“வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்”; (தொல். களவு:16:8)

என்றும், மற்றொன்று தோழி கூற்றில்,

“வேளாண் பெருநெறி வேண்டிய விடத்தும்”; (தொல். களவு:23:23)

என்னும் இருவிடங்களை நோக்குமிடத்து வேளாண் என்னும் சொல் கொடை என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. இதற்கு இளம்பூரணர் உபகாரம் என்றும் நச்சினார்க்கினியர் கொடுத்தல்

என்றும் உரை கூறுவர். தொல்காப்பியர் மரபியலில் வேளாளருக்குரிய தொழிலைக் குறிக்கின்ற பொழுது,

"வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" (தொல். மரபு:82)

எனக் கூறுவதால் வேளாண் என்பது நான்கு வருணபாகுபாட்டில் வேளாளரைக் குறிக்கினறதே ஒழிய உழவரை அல்ல.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் வேளாண் எனும் சொல்:

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகையில் வேளாண்மை எனும் சொல் இடம் பெற்றுள்ளது, அது

"கேளாளன் ஆகாமை இல்லை அவற் கண்டு
வேளாண்மை செய்தன கண்"; (கலித்:101:45-46)

என வரும் முல்லைக் கலிப் பாடலடிகளில் இடம் பெறும் "வேளாண்மை" என்னும் சொல்லுக்குப் பொருளாவது உதவுதல் என்பதாகும். மேலும் புறநானூற்றில்

"கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்";; (புறநா:74:4)

எனும் அடியில் வேளாண் என்னும் சொல் உதவுதல் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. பத்துப்பாட்டில் பொருநராற்றுப்டையில்,

"வேளாண் வாயில் வேட்பக் கூறி" (பொருநர்:75)

என வரும் அடியில் இடம்பெறும் "வேளாண்"; என்பதற்கு விருந்தோம்பல் எனும் பொருள் அமைந்துள்ளது. ஆதலின் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இலக்கியங்களில் இடம்பெறும் வேளாண்மை, வேளாண் ஆகிய இரு சொற்களும் உழவுத் தொழிலைக் குறிப்பிடவில்லை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் வேளாண்மை எனும் சொல்:

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான நாலடியாரில்,

"நாள்வாய்ப் பெறினும் தம் நள்ளாதார் இல்லத்து
வேளாண்மை வெங்கருணை வேம்பாகும்"; (நாலடி:207:2)

என்னும் அடிகள் உணர்த்துவது அன்பினால் அணுக்கம் இல்லாதவர் உதவியால் கிடைக்கும் கறி உணவு வேப்பங்காயை ஒத்தது என்பதாகும். ஈண்டு வேளாண்மை என்பதும் உதவுதல் எனும் பொருளில் ஆளப்பட்டுளளது. நான்மணிக் கடிகை,

"..... .... வேளாண்மை
வேள்வியோடு ஒப்ப உள" (நான். மணி:54:3)

என்பதால் வேள்விக்கு நிகரான ஈகைகளும் உள்ளன என்பதால் வேளாண்மை என்பது ஈகை எனும் பொருளில் சுட்டப்பட்டுள்ளது. இன்னா நாற்பது,

"பொருள் இலான் வேளாண்மை காமுறுதல் இன்னா" (இன்னா:37:1)

என மொழிவதால் செல்வம் இல்லாதவன் உதவிபுரிதல் துன்பம் எனக் கூறுமிடத்து வேளாண்மை உதவுதல் எனும் பொருள்பட வந்துள்ளது. இனியவை நாற்பது,

"ஏறுடையான் வேளாண்மை இனிது" (இனி:3:3)

என்பதால் உழுமாடுகளை வைத்துப் பயிர்த் தொழில் செய்தல் இனிது என வேளாண்மை என்னும் சொல்லுக்குப் பயிர்த் தொழில் எனப் பொருளுரைக்கிறது இனியவை நாற்பது. திருக்குறள் நான்கு இடங்களில் வேளாண்மை எனும் சொல்லைக் குறிக்கின்றது. அவை.

"இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு" (குறள்:81)

"தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள்:212)

"தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு" (குறள்:613)

"தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்"; (குறள்:614)

என்பதாகும். ஈண்டு நான்கு குறள்களிலும் வரும் வேளாண்மை என்னும் சொல் உதவுதல் என்னும் பொருளில் வந்துள்ளதே ஒழிய உழவுத் தொழில் என்னும் பொருளில் கையாளப்படவில்லை. உழவு என்ற அதிகாரத்திலும் வேளாண்மை எனும் சொல் எக்குறளிலும் பயின்று வரவில்லை. பழமொழி நானூறு,

"வேளாண்மை செய்து விருந்து ஓம்பி வெஞ் சமத்து" (பழ:173:1)

என்கிறது. ஈண்டு வேளாண்மை என்பது உதவுதல் என்னும் பொருளில் கையாளப்பட்டுள்ளது. திரிகடுகம் வேளாண் குடி பற்றி கூறுகையில்,

"கழகத்தால் வந்த பொருள் காமுறாமை
பழகினும் பார்ப்பாரைத் தீபோல் - ஒழுகல்
உழவின்கட் காமுற்று வாழ்தல் இம்மூன்றும்
அழகென்ப வேளாண் குடிக்கு" (திரி:42)

என்கிறது. இவ்விடத்து வேளான் குடிக்குத் தொழில் உழவு என்பதைச் சுட்டுகிறது. இது தொல்காப்பியர் கூறிய வேளாண் மாந்தர்க்கு உழுதூண் என்பதை நினைவூட்டுகிறது. சிறுபஞ்சமூலம்,

"வேளாண்மை கொல்லார்"; (சிறு:46:2)

என்பதால் நற்குணத்தார் பலருக்கும் பயன்படும் பயிர்த்தொழிலைக் கெடுக்கமாட்டார்கள் எனக் கூறுகிறது. ஈண்டு வேளாண்மை என்பது உழவுத் தொழில் என உணரமுடிகிறது. முதுமொழிக் காஞ்சி,

"பொய் வேளாண்மை புலைமையிற் றுவ்வாது" (முது:36)

எனக் கூறும். இதனால் தெரிவது விருப்பம் இல்லாவிட்டாலும் விருப்பமுடையவர் போல் செய்யும் ஈகையானது நீசத் தன்மையின் நீங்கி ஒழியாது என்பதாம். இவ்விடத்து வேளாண்மை எனும் சொல் ஈகை என்னும் பொருளில் ஆளுப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

இதுகாறும் செம்மொழி இலக்கியங்கள் சுட்டும் வேளாண், வேளாண்மை எனும் சொற்கள் உணர்த்துவது கொடை, உதவி பயிர்த் தொழில் ஆகிய மூன்று பொருளைத் தருவதால் வேளாண்மை என்பது ஒரு சொல் பலபொருள் தன்மை உடையது. அத்துடன் உலகத்து உயிர்கள் வாழ்வதற்கு உழவுத் தொழிலை மேற்கொண்டு உணவை உற்பத்தி செய்து கொடையாகக் கொடுத்து உதவுதல் எனும் நிலையில் உழவுத் தொழிலுக்கு வேளாண்மை என்னும் பெயர் ஆகி வந்ததால் அது ஆகுபெயராயிற்று. ஆதலின் வேளாண்மை என்பது உழவுத் தொழிலை மட்டும் குறிக்காது பண்டைய அரசர்கள் அறம் நோக்கியும் கலை வளர்ச்சிப் பற்றியும், ஊழிய பாராட்டாகவும் வினையூக்கற் பொருட்டும் பல்வேறு கொடை நிகழத்தி வந்தனர். அவை, உண்டிக் கொடை, பொற்கொடை, ஊர்திக் கொடை, சின்னக் கொடை, பெயர்க்கொடை, நிலக்கொடை, மகற்கொடை, ஆட்சிக்கொடை, விலங்கினக் கொடை ஆகியவற்றையும் குறிக்கும். இருப்பின் மேற்குறிப்பிட்ட கொடைகளை விட நாள்தோறும் உணவு உற்பத்தி செய்து உலக உயிர்களைக் காக்கும் உழவுத் தொழில் மற்றைய கொடைகளை விட மேலானது என்பதால் வேளாண்மை எனும் சொல் உழவுத் தொழிலைக் குறித்து வழங்கலாயிற்று.

குறிஞ்சி நில வேளாண்மை:

குறிஞ்சி நில மக்களாகிய குறவர் மலைப் பக்கத்தில் இடம்கண்டு கார்காலத்தில் மழை பெய்தவுடன் நிலத்தை உழுது பண்படுத்திய செய்தியைப் புறநானூறு,

"கார்பெயல் கலித்த பெரும்பாட்டு ஈரத்து
பூமி மயங்கப் பல உழுதுவித்தி" (புறநா:120:2-3)

என மொழிகின்றது. மலைவாழ் மக்கள் கார்காலத்தில் மலைச்சாரலில் அகலமாகவும், வளையவும் பதமானதுமான கொல்லையாகிய காட்டினை உழுத செய்தியை நற்றிணை,

"மலை இடம்படுத்துக் கோட்டிய கொல்லைத்
துனிபதம் பெற்றகான் உழு குறவர்" (நற்:209:2-3)

எனக் கூறுகின்றது. குறமகளிர் தினை கவரவரும் கிளிகளை மூங்கிலால் செய்த தட்டை, கவண், குளிர் போன்ற கருவிகளைக் கொண்டு விரட்டியதை,

"கலிகெழு மரமிசைச் சேணோன் இழைத்த
புலிஅஞ்சு இதணம் ஏறிஅவண
சாரல் சூரல் தகைபெற வலந்த
தழலும் தட்டையும் குளிறும் பிறவும்
கிளிகடி மரபின ஊழ்ஊழ் வாங்கி" (குறி.பா:40-44)

எனக் குறிப்பிடுகின்றது. குறமகளிர் தினை காத்தது போல் இரவில் சேம்பு, மஞ்சள் ஆகியவற்றைப் பன்றி அகழாமல் இருக்க குறவர் பறையோசை எழுப்பியதை மலைபடுகடாமும்(343-344) ஊதுகொம்பு ஊதி காத்ததை அகநானூறும்(94:9-11) செப்புகின்றன. தினை முற்றியதும் அதனைக் கொய்து பாறையின் மேல் போட்டு யானையைக் கொண்டு காலில் மிதிக்கச் செய்து தினையைப் பிரித்தெடுத்த செய்தியை நற்றிணை

"நிலம் கண்டன்ன அகன்கண் பாசறை
மென்தினை நெடும் போர் புரிமார்
துஞ்சு களிறு எடுப்பும்"; (நற்:125:10-12)

என விளக்குகின்றது.

<u>முல்லை நில வேளாண்மை:</u>

முல்லை நில உழவர் வரகு, பயிறு, நெல் போன்றவற்றை விளைவித்துள்ளனர் என்பதை இடைக்காடனார் பெரும்புனவரகின் எனும் தொடரால் அறியமுடிகிறது. முல்லை நில வேளாண்மையில் பயிறு விளைவித்தலைச் சிறப்பாக அகநானூறு சுட்டுகிறது.

"முதைபடு பசுங்காட்டு அரில்பவர் மயக்கி
பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்
இடுமுறை நிரம்பி ஆகுவினை கலித்து
பாசிலை அமன்ற பயறு;"; (அகநா:262:1-4)

முல்லை நில வேளாண்மையில் நெல் விளைந்ததை அகநானூறு: 41:4-7

ஆம் பாடல் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

மருத நில வேளாண்மை:

தாம் செய்யும் தொழிலால் மருத நில மக்கள் ஏரின் வாழ்நர் களமர் (புறநா:212-387) என விளிக்கப்படுகின்றனர். வேளாண்மைக்கு அவர்கள் பயன்படுத்திய நிலம் வன்புலம், மென்புலம் எனப்பட்டது. பெரிய மழைபெய்த இருள் புலர்ந்த காலைப் பொழுதில் உடும்பின் முகம் போன்ற ஏர்களால் நிலத்தைக் கீழ்மேலாகப் புழுதி புரளும்படி உழுததை அகநானூறு(194:1-3)சுட்டுகிறது. பெரிய எருதுகளை நுகத்தில் பூட்டி நாஞ்சிலின் முழுக்கொழுவும் மறையும்படி ஆழ உழுததை பெரும்பாணாற்றுப்படை,

"குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்
நடைநவில் பெரும்பகடு புதவில் பூட்டி
பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்புமுக முழுக்கொழு மூழ்க ஊன்றி
தொடுப்பு எறிந்து உழுத துளர்படு துடவை
அரிபுகு பொழுதின் இரியல் போகி" (பெரு:197-202)

செப்புகின்றது. இவ்வாறு உழும் பொழுது ஏர்மங்கலம் பாடுவதை மலைபடுகடாம்(469) செப்புகின்றது. மருத நில வேளாண்மையில் கரும்பு முக்கிய வேளாண்மையாக இருந்ததைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன (பட்:20, குறுந்:262, ஐங்:65, புறநா:28,29,386, பதி:30)

நெய்தல் நில வேளாண்மை:

நெய்தல் நில மக்களால் செய்யப்பட்ட வேளாண்மை உப்பு வேளாண்மையாகும்.. உழுகாது உவர் நிலத்தில் உப்பை விளைவிக்கும் உழவராகப் பரதவர் சுட்டப்பெறுகின்றனர். உப்புப் பாத்தியில் கடல் நீரைப் பாய்ச்சி உப்பு விளைவிப்போர் வானத்தை வேண்டாத உழவினை உடையவர் என்பதை நற்றிணை,

"நேர்கண் சிறுதடி நீரின் மாற்றி
வானம் வேண்டா உழவின"; (நற்:254:10-11)

எனக் குறிப்பிடுகின்றது.

பாலை நில வேளாண்மை:

பாலை நில மக்களை வில்லேருழவர் என நற்றிணை(35:5)உருவகம் செய்கிறது. பாலை நில மக்கள் தினை, பருத்தி ஆகியவற்றை விளைவித்த செய்திகளைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. தினையை உண்ண வரும் மானை மகளிர் விரட்டியது(அகநா:14:2). பருத்திக்

காய்களைக் கொத்திய கோழி அதிலுள்ள விதைகளை விடுத்து இளங்காயைத் தன் பெடைக்கு ஊட்ட சிதறிய வெள்ளி விதைகளை வறுமையுற்ற மகளிர் சேகரித்தமை ஆகியவற்றால் தினை, பருத்தி ஆகியன பாலை நிலத்தில் வேளாண்மை செய்யப்பெற்றது அறியப்பெறுகிறது.

முடிவுரை:

ஐந்நில வேளாண்மையில் வட்டில், கூடை ஆகியவற்றில் விதை எடுத்துச் சென்றது, விதைப்பதற்குக் கூலியாக நெல் வழங்கியது, நாற்று வளர்த்து வயலில் நட்டது, நாற்று நட அதிகாலையில் சென்றது, களையெடுக்கும் உழவரைத் துளர்எறி வினைஞர் என்றது, களையெடுப்பதற்குக் களைக்கொட்டு மற்றும் மரத்தால் செய்த கருவி பயன்படுத்தியது, விளைந்த நெல்லைக் கூரிய அரிவாளால் அரிந்தது, நெற்கட்டுக்களைக் களத்திற்குக் கொண்டு சென்றது, நெல்மணிகளை அடித்தது, உதிராத நெல்மணிகளைப் பரித்து எடுக்க கடாவிட்டது, வேளாண்மைக்குத் தேவையான நீரைக் காஞ்சி மரத்தின் துண்டுகளை நட்டு கரும்பினைக் குறுக்கே வைத்து அடைத்துப் பயன்படுத்தியது வேளாண்மையோடு தொடர்புடைய செய்திகளும் சங்க இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன.

உயிர்த்தோற்றம்.

முனைவர். பழ. முத்தப்பன், முன்னை முதல்வர், கணேசர் செந்தமிழ்க்கல்லூரி, மேலைச்சிவபுரி , திருச்சிராப்பள்ளி.

செந்தமிழ் மொழியின் பண்டை இலக்கியங்களைச் சங்க இலக்கியங்கள் என்பர். தனித்தனிப் பாக்களால் இருந்தவற்றை அகப்பாடல்கள் என்றும், புறப்பாடல்கள் என்றும் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்து, அவற்றை நானூறு என்ற எண்ணிக்கையிலும் பத்து என்ற எண்ணிக்கையிலும், நானூறு என்ற எண்ணிக்கையிலும் , ஐந்நூறு என்ற எண்ணிக்கையிலும் தொகுத்துப் பண்டைத் தமிழ் அறிஞர்கள் வகைப் படுத்தித் தந்துள்ளனர்.

அவ்வாறு வகைப்படுத்தப்பட்ட சங்க இலக்கியங்களில் கடவுள் நம்பிக்கை பற்றிய செய்தியும், கடவுளால் படைக்கப் பெற்ற உடல் வகைகளைப் பற்றிய செய்தியும், அவ்வுடலை இயக்குகின்ற உயிர்களின் தன்மை பற்றிய செய்தியும், அவ்வுயிர்கள் தத்தம் பண்டை ஊழ்வினைக்கு ஏற்றவாறு உடம்பினைப் பெறுகின்றன என்ற செய்தியும்
சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களில் பல்துறை அறிவியல் சிந்தனைகள் என்ற பொதுத் தலைப்பில், சங்க இலக்கியங்களில் காணப்படும் உயிர் பற்றிய கொள்கைகளை எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பண்டு தொட்டுத் தமிழகத்தில் வழங்கி வந்த கடவுள் கொள்கை முப்பொருளை உணர்த்தும். அதாவது வினையின் நீங்கி விளங்கிய அறிவனாக விளங்கும் இறைவன் முதற்பொருள். இறைவனைப் பதி என்ற குறியீட்டுச் சொல்லால் குறிப்பிடுவர். அந்த இறைவனின் கருணைப் பெரு வெள்ளத்தால், தனு, கரண, புவன போகங்கள் என்று கூறப்படும் உடம்பு, கருவிகள், உலகம், போகப் பொருள்கள் என்பவை படைக்கப் பெறுகின்றன. படைக்கப் பெற்ற பொருளைப் பயனுடையதாகக் கொள்வதற்குக் கடவுள் தோன்றிய பொழுதே, அவன் இயங்குவதற்குரிய நிலைக்களமாக உயிர்கள் தானே தோன்றின . அந்த உயிர்களின் இயக்கம் வினையின் அடிப்படையில் அமைகிறது என்ற வினைக்கொள்கையும் பண்டு தொண்டு வழங்கி வருகின்றது. இவ்வாறு தமிழகத்தில் கடவுள் கொள்கை பதி என்றும், உயிராகிய பசு என்றும், வினையாகிய பாசம் என்றும் முப்பொருளை அடிப்படையாகக் கொண்டு விளங்கி வருகின்றது.

பதி, பசு, பாசம் என்ற கடவுள் கொள்கையின் முப்பொருளைச் சங்க இலக்கியங்கள் பலவாறு பதிவு செய்துள்ளன. அதில் உயிரின் தோற்றம் பற்றிய செய்திகளை இக்கட்டுரை தொகுத்துத்தர முற்படுகிறது.

<u>சைவக் கொள்கைக்கு முன்னோடி சங்க இலக்கியங்கள்</u> :

தமிழகத்தின் கடவுள் கொள்கையைக் கடவுள் சார்ந்த பல்வேறு வகைப்பட்ட சமயங்கள் தத்தமக்கு ஏற்றவாறு வெளிப்படுத்துகின்றன. அதில் இந்திய மெய்ப்பொருளியலில் சைவசமயம் தனி ஒரு சமயமாகவும், முதன்மைச் சமயமாகவும் விளங்குகிறது. பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களின் செய்திகளைச் சங்க இலக்கியங்கள் பல்வேறு சமயங்களின் அடிப்படையில் கூறினாலும், சைவம் சார்ந்த கொள்கையைப் பெரிதும் வலியுறுத்துகின்றன. சைவசமயக் கொள்கைகளைத் தமிழில் வகைப் படுத்தியும், தொகுத்தும் தருகின்ற நூல்களைத் திருமுறைகள் என்றும் சித்தாந்த சாத்திரங்கள் என்றும் இரண்டு வகையாக வகுக்கப்பட்டுள்ளன.

திருமுறைகள் பனிரெண்டாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடிய பாடல்களைக் கொண்டுள்ளன. அடுத்த நான்கு,ஐந்து, ஆறு திருமுறைகள் திருநாவுக்கரசர் பாடியருளிய பாடல்களைக் கொண்டுள்ளன. ஏழாம் திருமுறை சுந்தரமூர்த்தி பாடிய பாடல்களைக் கொண்டு விளங்குகின்றது. எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் பாடியருளிய திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் கொண்டுள்ளது. ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்ற பாடல்களைக் கொண்டுள்ளது. பத்தாம் திருமுறை திருமூலர் பாடியருளிய திருமந்திரப் பாடல்களைக் கொண்டுள்ளது. பதினோராம் திருமுறை சைவ அருளாளர்கள் பதினோருவர் பாடிய பாடல்களைக் கொண்டுள்ளது, பனிரெண்டாம் திருமுறை சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணமாம் அறுபத்திமூன்று தொண்டர்களின் வரலாற்றைக் கூறும் பாடல்களைக் கொண்டுள்ளது. இத்தகைய பனிரெண்டு திருமுறைகளைப் பாடிய இருபத்தேழு அருளாளர்களின் கருத்துகளாம் சைவசமயக் கொள்கைகள், பெரும்பாலும் சங்க இலக்கியங்களைக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே விளங்குகின்றன.

பனிரெண்டு திருமுறைகள் இலக்கியங்கள் போல அமைய, இலக்கியம் கொண்டு இலக்கணம் இயம்புதல் என்ற மரபிற்கேற்ப, திருமுறைக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் போல் பதினான்கு சாத்திரங்கள் சைவ சமயக் கொள்கைகளை வரையறுத்துக் காட்டுகின்றன. பதினான்கு சாத்திரங்களாவன - திருஉந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருப /து, திருவருட்பயன், உண்மை விளக்கம்,

சிவப்பிரகாசம், கொடிக்கவி, வினாவெண்பா, போற்றிப் ப /றொடை, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாகும். இத்தகைய பதினான்கு சாத்திரங்கள் சைவசமயத்தில் பரவலாக விளங்கினாலும், சிவஞானபோதமே தலைமை நூலாக விளங்குகிறது. இப்பதினான்கு சாத்திரங்களிலும் கூறப்படுகின்ற கடவுள் கொள்கைகள் , சங்க இலக்கியக் கடவுள் கொள்கை கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே விளங்குகின்றன.

பன்னிரு திருமுறைகளும் , பதினான்கு சாத்திரங்களும் கூறுகின்ற கடவுள் கொள்கை கருத்துகள், சங்க இலக்கியங்களில் காணப்பெறும் கடவுள் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு விரித்துக் கூறுகின்றன என்று இன்றைய ஆய்வாளர்கள் பலவித நோக்கில் வலியுறுத்தியுள்ளனர்.

உயிர்த்தோற்றம் :

தமிழகத்துக் கடவுள் கொள்கையாம் முப்பொருளில் நடுநாயகமாக விளங்குவது உயிர் பற்றிய கொள்கைகளாகும். உயிர்த்தோற்றம் என்ற தலைப்பில் உயிர் உடலைத் தத்தம் ஊழ்வினைகளுக்கு ஏற்ப, உடல் நிலைகளைப் பெற்று நிலையாக வாழ்வதைச் சங்க இலக்கியங்கள் எவ்வாறு கூறுகின்றன என்ற நிலையில் விளக்கப் பெறுகிறது. உயிர் பற்றிய இலக்கணங்களாகச் சைவசமயம் கூறுவது 1.உயிர் தானே தோன்றியது, 2. என்றும் அழிவில்லாதது, 3. தனித்து நிற்காதது, 4. தான் எதனைச் சார்ந்திருக்கின்றதோ அதனையே சார்ந்து இயங்கும் குணத்தை உடையது, 5. உயிர் வினைகளை அனுபவிப்பது என்று குறிப்பிடுகின்றன. உயிர் என்ற ஒரு பொருள் இல்லை என்று கூறுகின்ற கடவுள் மறுப்புக் கொள்கையாளராம் உலகாயதர் குறிப்பிடுவர். அதனைச் சைவ சமயம் மறுத்து உயிர் உண்டு என்று நிறுவுகின்றது. அவ்வாறு நிறுவுவதற்கு அடிப்படை சங்க இலக்கியங்களே ஆகும்.

உயிர் என்று கூறப்படும் ஆன்மா பற்றி கீழ்க்கண்ட முடிவு கூறப்பெறுகிறது. மாயையின் காரியங்களால் உருவாக்கப் பெறுகின்ற தூல உடம்பு, சூட்சும உடம்பு, பர உடம்பு மூன்றும் அடங்க, தனு என்று கூறப்படுகின்ற உடம்பினுள் அதனை இயக்குகின்ற அறிவாகிய ஆன்மா என்ற ஒன்று உண்டு, அது அனுமானத்தாலேயே அறியப்படும் என்பது தமிழ்ச் சைவ சமயக் கொள்கையாகும். எனவேதான் தமிழ் இலக்கணத்தில் அறிவை அடிப்படையாக வைத்து அவை ஓரறிவு, ஈரறிவு என்று குறிக்கப் பெறுகின்றன.

“ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவதுவே அதனொடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே

நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப் படுத்தினரே"

தொல்-மரபியல்27

எனவே அறிவு நிலையில் ஆன்மா உணரப் படுகிறது என்பது இச்சூத்திரத்தால் பெறப்படுகிறது. இவ்வாறு உயிர் பற்றிய விளக்கம் தருகின்ற சிவஞானபோதம் தரும் சூத்திரம் ,

"உளது இலது என்றலின், எனது உடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டி வினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனவினுள் ஆன்மா'' சூ.3

இவ்வாறு சைவ சித்தாந்தம் உயிர் என்பதை உடம்போடு இணைத்து உண்டுஎன்று நிறுவுகிறது. ஆன்மா என்றும்,உயிர் என்றும்இ பசு என்றும் வழங்கப் பெறுகின்றது. மூன்று சொற்களால் வழங்கப் பெறுகின்ற உயிர் பற்றிச் சங்க இலக்கியங்களில் பல கருத்துக்கள் அமைந்துள்ளன. அவற்றைப் பாகுபடுத்திக் காண்பது நலம் பயக்கும்.

<u>உயிரும் உடம்பும் --</u>

சங்க இலக்கியங்கள் உயிர் உண்டு என்பதை ஏற்கின்றன. அவ்வுயிர் உடம்பினின்று வேறுபட்டது என்பதையும் ஏற்கின்றன. உடம்பை வீட்டு உயிர் பிரிகின்ற நிலை உண்டு என்றும்இ உடம்பும் உயிருமாக இணைந்து வாழ்வது உண்டு என்றும்இ சங்க இலக்கியத் தொடர்கள் விளக்குகின்றன. ஆதனுங்ஙன் என்ற குறுநில மன்னனைக் கள்ளில் ஆர்த்திரையனார் பாடிய புறநானூற்றுப் பாடல் -

''எந்தை வாழி ஆத னுங்கஎன்
நெஞ்சந் திறப்போர் நிற்காண் குவரே
நின்யான் மறப்பின் மறக்கும் காலை
என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவென் '' புறம் -175

என்ற பகுதியை உடையது. வள்ளலைப் புலவர் மறக்கும் காலம் எது என்றால் தன்னுடைய உயிரானது,தன்னுடைய உடம்பை விட்டு நீங்கும் காலத்துத் தன்னை மறக்கும் காலம் உண்டாயின் அப்பொழுது வள்ளலை மறப்பேன் என்று புலவர் இப்பகுதியில் குறிப்பிடுகின்றார். எனவே உடம்பும் உயிரும் இணைந்திருக்கின்றன என்பதும் உடம்பை விட்டு உயிர் பிரியுங்காலம் வரும் என்பதும் இப்பகுதியால் பெறப்படுகிறது. ஆதலால் உடம்பினுள் ஆன்மா உள்ளது என்ற சித்தாந்தக் கருத்திற்கு மூலக் கூறாக இச்சங்க இலக்கியப் பாடல் உடம்பையும் உயிரையும் இணைத்துக் கூறுகிறது எனலாம். இதே கருத்தை

1.. ''நல் நலம் தொலைய நலம் மிகச் சாஅய்
இன்னுயிர் கழியினும் உரையல்'' குறுந் -93

2. ''துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் என்னின் உயிரும் கொடுக்குவர் '' புறம் -182

3. ''நிரின்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' புறம் - 18

4. ''அனையன் என்னாது அத்தக்கோனை
நினையாக் கூற்றம் இன்னுயிர் உய்த்தன்று'' புறம் - 221

5. ''உடம்போடு இன்னுயிர் நிரம்பம் கிழமை
தொல் நட்புடையார் தம்முழைச் செறினே'' புறம் - 223

6. ''யாக்கை இன்னுயிர் கழிவதாயினும் நின்மகள்
ஆய்மலர் உன்கண் பசலை
காமநோய் எனச் செப்பாதீமே'' அகம் - 52

என்ற எடுத்துக் காட்டுகள் உடம்பும் உயிரும் இணைந்திருப்பதையும்இ உடம்பை விட்டு உயிர் என்பது பிரியும் என்பதையும் சுட்டிக் காட்டுவன ஆகும். இவற்றின் மூலம் சங்க இலக்கியங்கள் உயிர் என்ற ஒன்று உண்டு என்பதில் உடன்பட்டும்இ அது உடம்போடு சார்ந்ததன் வண்ணமாய் விளங்கும் என்றும் குறிப்பிடுவதையும் உணரலாம். சங்க இலக்கியங்களின் இச் செய்திகள்

பின்னால் வந்த சாத்திரங்களில் உயிர் பற்றிய இலக்கணத்தைத் தருவதற்கு அடிப் படையாக அமைந்தது எனலாம். இந்த உயிர் உடம்பைப் பெற்று வாழுகிறது என்பதனைச் சித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றான போற்றிப் ப /றொடையில் உமாபதி சிவம் குறிப்பிடுகின்றார்.

'' எவ்வுயிர்க்கும்- உள்நாடிக்
கட்புலனான் காணார்தம் கைக்கொடுத்த கோலேபோல்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின் கண் - முற்பால்
தனுகரணமும் புவனமும் தந்து அவற்றால்
மனமுதலால் வந்த விகாரத்தால் - வினையிரண்டும்
காட்டி அதனால் பிறப்பாக்கிக் கைக்கொண்டு
மீட்டறிவு காட்டும் வினை போற்றி'' 10-14 கண்ணி

உயிர்களுக்கு உதவுவதற்காகக் கண்ணற்ற குருடனுக்குக் கோல் கொடுத்து உதவுவது போல மாயையைக் கூட்டுவித்து அதன் மூலம் உடல்இ கருவி உலகு நுகர்ச்சிப் பொருள்களைத் தந்து நல்வினை தீவினைகளைப் பொருத்தி வினைப் பயனை நுகர்வதற்குப் பல பிறப்புக்களைத் தந்து மலநீக்கத்தையும் செய்து பக்குவம் பெற்றிருக்கின்ற உயிர்களுக்கு எல்லையற்ற பேரின்பத்தைத் தருகின்ற இறைவனின் தொழிலுக்கு நன்றி என்று உமாபதி சிவம் இப்பகுதியில் குறிப்பிடுகின்றார். இப்பகுதியின் மூலம் உயிருக்கு உதவுவதற்காக உடம்பு கொடுக்கப் படுகிறது என்பது அழுத்தமாகத் தெரிவிக்கப் படுகிறது. எனவே உயிரையும் உடம்பையும் இணைத்துப் பேசிய சங்க இலக்கிய மூலக்கூறுஇ பின்னால் வந்த சைவ சமய சாததிரங்களில் உயிரின் வினைகளை நீக்குவதற்காக உயிருக்கு உடம்பு கொடுக்கப் படுகிறது என்று குறிப்பிட்டுஇ உயிருக்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பினைப் புலப்படுத்துகிறது.

<u>உயிர் நிலையானது --</u>

உயிர் உடம்போடு இணைந்து செயல் படுகின்ற ஒன்று என்று உயிர் உண்டு என்பதைக் குறிப்பிட்ட சங்க இலக்கியங்கள் உயிர் என்றும் அழியாதது என்பதை ''மன்'' என்னும் அடைமொழி கொடுத்துக் குறிப்பிடுகிறது.

''மன்னுயிர் அறியா துன்னரும் பொதியில்
சூருடைஅடுக்கத்துஆரம்கடுப்ப'' குறுந்-376
''நிலம்புடைப் பெயர்வது அன்றுகொல் இன்றுஎன
மன்னுயிர்மடிந்தமழைமாறுஅமையத்து'' அகம்31 '
''மன்னுயிர் ஏமுற மலர்ஞாழல் புரவுஈன்று

பன்னீரால் பாய்புனல் பரந்து ஊட்டி கலித் -34

‘‘ மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க்கு எஞ்சாது

ஈத்துக்கை தண்டாக் கைகடுந் துப்பின் பதிற் -15

‘‘மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும்

முரசு முழங்கு தானை மூவருள்ளும் பெரும் - 32-33

என்ற சங்க இலக்கியப் பகுதிகள் உயிரைக் குறிக்கின்ற பொழுது மன் என்ற அடைமொழியோடு குறித்திருப்பதை அறியலாம். மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் என்ற தொடரில் உலகம் நிலையாமை உடைத்து என்று குறிப்பிடுவது போல மன்னுயிர் நிலையானது என்பதன் மூலம் உயிர் நிலைத்திருக்கிறது என்பதைச் சங்க இலக்கியங்கள் வலியுறுத்துவதை அறியலாம். எனவே உயிர் என்பது என்றைக்கும் நிலையானதுஇ அழிவில்லாதது என்ற சைவ சித்தாந்த அடிப்படைக் கருத்துக்குச் சங்க இலக்கியங்கள் மூலக் கூறுகளாக அமைகின்றன. இதனை வழிமொழிந்து உயிரைத் திருமுறைகளும் சைவ சித்தாந்தமும் நிலையானது என்றே குறிப்பிடுகின்றன.

‘‘வாணிலவு தாரகையும் மண்ணும் விண்ணும்

மன்னுயிரும் என்னுயிருந் தானாய் ’’ திருநாவு -6-91-7

‘‘பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்

பதியினைப் போல் பசு பாசம் அனாதி’’ திருமந்தி- 115

‘‘எண்ணிலா மன்னுயிர்க்கும் இந்த வழக்கேஆய்’’ போற்றி - கண்ணி- 39

‘‘எண்ணரிதாய் நித்தமாய் இருள்மலத்தில் அழுந்தி’’ சிவப் - 19

என்ற பகுதிகள் உயிர் நித்தம் என்பதை விளக்கும் பகுதிகளாகும். உயிர்கள் பல என்பதைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

‘‘கரை பொருது இரங்கும் கனைஇரு முந்நீர்

திரையிடு மணலினும் பலரே உரைசெல

மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே மதுரை- 235-238

செறிதலை உடைய கரிய கடலில் பொருது ஒலிக்கும் கடல்திரை குவிக்கின்ற மணலினும் பலர் ஆவர் . உலகங்களைத் தன் கீழ் ஆண்டு,எந்தப் பயனும் இல்லாது மாண்டோர் என்பது இப்பகுதியின் பொருள். எனவே உயிர்களைப் பற்றி இப்பகுதி குறிப்பிடும் பொழுதுஇ உயர்ந்த எண்ணிக்கையைக் குறிப்பிடுவதற்காகக் கடல் மணலின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையைக் கொண்ட இறந்து பட்டோர் எனக் கூறுகிறது. இதிலிருந்து இறந்தவர்களை

எண்ண இயலாது என்பது பெறப்படுகிறது. சங்க இலக்கியம் கூறிய இப்பகுதியைப் பின்னா வந்த சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான திருவருட்பயன்

''பிறந்த நாள் போலும் பிறக்கு நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை பா. 11

என்று குறிப்பிடுகிறது. உயிர்களில் முத்தி அடைந்தோர் தொகை உயிர்கள் பிறந்து வாழ்ந்ததற்குச் சமமாகும். முத்தி அடையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் உயிர்களின் தொகை இனிப் பிறந்து வாழும் நாட்களுக்குச் சமமாகும் என்பதைக் குறிப்பிட்டுஇ உயிர்கள் எண்ணற்றவை என்பதைச் சித்தாந்தம் குறிப்பிடுகிறது. இப்பகுதியோடு,

''துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று'' திருக் -22

என்ற திருக்குறளையும் ஒப்பிட்டுக் காணலாம்.

''ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்'' திருவாச-8-7-11

என்ற திருவாசகப் பகுதியில் உய்வார்கள் என்று உயிர்களின் பன்மை கூறப் பெற்றுள்ளது.

உயிர்கள் வினைக்கு ஏற்ப உடம்புகளை எடுத்து அச்சுமாறிப் பல பிறப்புக்களில் பிறந்துவரும் என்பதைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

''தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டி' புறம் -27

''சாதலும் புதுவதன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந் தென்றும் இலமே'' புறம் -192

''சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்
பிறப்பு பிறிதாகுவது ஆயின்
மறக்குவேன் கொல் என் காதலன்'' நற்றிணை - 397

''இன்மை மாறி மறுமையாகினும் நீயாகியர் என் கணவனே'' குறுந் - 49

''யாயும் யாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும் '' குறுந் - 40

என்ற பகுதிகள் உயிர் எடுக்கும் பிறப்புக்கள் பல என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாறு சங்க இலக்கியம் கூறியதைப் பின்னால் வந்த் திருமுறைகளும் இசாத்திரங்களும் வழிமொழிந்துள்ளன.

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாகிப் பாம்பாய்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்'' திருவாச 26-31

'பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும் மறவாமை வேண்டும் '' பெரிய - காரைக் -60

என்று திருமுறைகள் உயிர்கள் பல பிறப்பெடுக்கும் என்பதை வலியுறுத்துகின்றன. சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான சிவஞான சித்தியார் இ

'' இருவினை - அநாதி ஆதி இயற்றலால் நுகர்வால் அந்தம்
வரும் மலம சார்ந்து மாயாஉருவுகள் மருவி ஆர்த்துத்
தஞ்செயல் முறைமை யாலே தான்பல பேதம் காட்டி
அருவதாய் நின்று அரன்தன் ஆணையின் அமர்ந்து செல்லும்'' பா. 130

என்று குறிப்பிடுகிறது.

இப்பாடலில் மலம் சார்ந்து மாயா உருவுகள் மருவி என்பது உயிரானது ஆணவ மலத்தோடு பல பிறப்புக்களாகிய உருவங்களை அடையும் என்பதை வலியுறுத்தும் பகுதியாகும். இருவினைக்கு ஏற்றவாறு உயிர் உடம்பெடுக்கும் என்பதை இப்பாடல் காட்டுகிறது.

சீவன் முத்தர் -- ஒழுக்கம்இ அன்பு,அருள்இ ஆசாரம்இ உபசாரம் உறவுஇ சீலம்இ வழுக்கிலாத் தவம்இ தானங்கள்இ அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆகியவற்றைக் கடமையாகக் கொண்டு

உயிர் வாழுமானால் உடம்போடு வாழுகின்ற இந்த உலகத்திலேயே இறைவனின் அருள்பெற முடியும். அவ்வாறு அருள்பெற்று வாழ்கின்றவர்களைச் சைவ சித்தாந்தம் அணைந்தோர் என்று குறிப்பிடுகின்றது. அவர்களைச் சீவன் முத்தர் என்று குறிப்பிடுவதுமுண்டு. இந்தச் சீவன் முத்தர்கள் எவ்விதக் குற்றமும் இல்லாது பிறருக்கு நன்மை ஏற்படும் வண்ணம் மனித நேயத்தோடு வாழுகின்றவர்கள் ஆவார்கள். இந்த மனித நேயர்களைச் சீவன் முத்தர்க்குரிய தகுதி உள்ளவர்களைச் சங்க இலக்கியம் பலவாறு பேசுகிறது. இவர்களுக்கு மறுபிறப்பு இல்லை.

திருமுருகாற்றுப்படையில் பண்டைக் காலத்தில் வாழ்ந்த முனிவர்களாகிய சீவன் முத்தர்கள் தோற்றம் குறிக்கப் பெற்றுள்ளது. திருவாவினன்குடியில் தேவர்களோடு முனிவர்கள் வந்தனர். அத்தகைய முனிவர்கள்

‘‘ மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் நண்பகல்
பலவுடன் கலந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவரும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம் வரம்பாகிய தலைமையர் காமமொடு
கடுஞசினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர்.’’ 126-136

என்று முனிவர்கள் குறிக்கப் பெற்றுள்ளனர். முனிவர்கள் உணவுஇ உடைஇ இவற்றில் ஆசை இன்றிக் கோபம் நீங்கிய மனத்தோடு மெய்ப்பொருளை அறிந்த அறிவுடையவராய்இ எப்பொழுதும் இறைச் சிந்தை உடையவராய் விளங்குபவர் ஆவர் என்று குறிக்கப் பெற்றுள்ளது. பிற சங்க இலக்கியங்களிலும் இச் சான்றோர்கள் குறிப்பாகக் காட்டப் பெறுகின்றனர்.

‘‘கடவுள் நண்ணிய பாலோர் போல’’ ’ குறுந்-203

‘‘அழிதவப் படிவத்து அயரியோரும்
மறுபிறப்பு இல்லெனும் மடவோரும் சேரார் நின்நிழல்’’ பரி 5-75-76

‘‘வாராச் சேண்புலம் படர்ந்தோர் அளிக்க’’ பதிற்று -61

‘‘ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர் ’’ புறம் - 191

''அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சி போல் '' கலித் -30

''இடன் விட்டு இயங்கா இமையத்து ஒருபால்

இறை கொண்டு இருந்தன்ன நல்லார்'' கலித் - 92

''உடனுறை வாழ்க்கைக்கு உதவி உறையும்

கடவுளர் கண் தங்கினேன் '' கலித் - 93

''திருக்கிளர் கோயில் ஒருசிறைத் தங்கி

தவம் செய் மாக்கள் தம்உடம்பு இடாஅது

அதன்பயம் எய்திய அளவைமான'' பொருநர்- 90-92

என்பன போன்ற பகுதிகள் தவம் செய் மாக்களையும்இ கடவுள் பேணிய அறிஞர்களையும் குறிப்பிட்டுக் காட்டுகிறது. இத்தகைய அறம்செய் மாக்களைக் கடவுள் மாட்டு நயந்த பக்கமுடைய உயிர்களைப் பின்னால் வந்த சாத்திரங்கள் அணைந்தோராகக் காட்டுகின்றன. திருமுறை பாடிய அருளாளர்கள் திருஞான சம்பந்தர்இ திருநாவுக்கரசர் உள்ளிட்ட அனைவரும் இவ்வுலகில் உலகோடு வாழுகின்ற பொழுதே இறைவனுடைய அருள் பெற்றுத் தங்கள் செயல்களை எல்லாம் இறைச் சிந்தனையோடு உரிய வாழ்க்கை உரியதாக்கி உலகப் பொருள்களில் நுகர்ச்சி இன்றிச் சமுதாயத் தொண்டினைச் செய்கின்ற பெருமக்களாக வாழ்ந்தார்கள். இவர்களைத்தான் சைவ சமயம் சீவன் முத்தர் என்று குறிப்பிடுகிறது.

சித்தாந்த சாத்திரங்கள் அனைத்திலும் இந்த அணைந்தோர் பற்றிய செய்திகள் ஞானிகள் என்ற முறையில் குறிப்பிடப்பட்டு அவர்களின் தன்மைகள் விரிவாகக் கூறப்படுகின்றன. திருவருட் பயனில் பத்தாம் அதிகாரம் அணைந்தோர் தன்மையைப் பற்றிக் கூறுவதாகும். அவர்கள், ''ஓங்குணர்வின் உள்ளடக்கி உள்ளத்துள் இங்கு ஒடுங்குபவர் '' 91 இ ''போக நுகர் எந்தொழில் மேவார் '' 92 , ஒன்று சிவன் அல்லாது அறியார்'' 03 'புலனடக்கித் தம் முதற்கண் புகுவார் 94 , ''எங்கும் இவனை சிவனை ஒளிந்து உண்டாதல் இல்'' 05 ''எள்ளும் திறமேதும் இல்'' 96 , ''ஏறும் வினை தோன்றில் அருளே சுடும்'' 98 , ''மும்மை தருவினைகள் மூளாவாம்'' 99 , ''கருணை வெள்ளத் தலைவர்'' 100 என்று சீவன் முத்தரைப் பற்றிய செய்திகளைச் சித்தாந்தம் குறிப்பிடுகிறது.

முடிவு --

இவ்வாறு சைவ சமயக் கொள்கைகளில் முப்பொருளாக விளங்குவது இரண்டாவதாக அமைந்த உயிராகும். இதனைத் தத்துவங்கள் பசு என்று குறிப்பிடும். பச் - பதிதல் என்பது பொருள். '' உ'' என்பது உடையவனைக் குறிப்பிடும். எனவே குற்றங்கள் பதிந்து இருக்கின்ற

தன்மையை உடைய உயிர்கள் பசு என்று அழைக்கப் படுகின்றன. இப்பசுவாம் உயிர்கள் உண்டு என்பது தத்துவக்காரர்களால் உறுதிப் படுத்தப் பெறுகிறது. இவை இறைவன் தோன்றிய காலத்தே தாமும் தோன்றி இறைவனைப் போல அழியாத் தன்மையில் இருப்ப்னவாம். உயிர்கள் எண்ணிக்கையை வரையறுக்க இயலாது. அவை உடம்பைச் சார்நது பிறப்பெடுத்து உலகில் வாழுகின்றன. இவ்வாறு பல பிறவிகளை எடுக்கின்றன. பல பிறப்புக்களைப் பெற்ற உயிர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சொர்க்க நரக வாழ்வைப் பெற்று வாழும். என்றாலும் ஒரு பிறவியில் இவ்வுலக வாழ்விலேயே இறையருள் பெற்ற உயிர்கள் சீவன் முத்தராக வாழவும் இயலும் என்பன உள்ளிட்ட செய்திகள் சைவ சித்தாந்த அடிப்படையில் உயிர் பற்றிய சைவக் கொள்கையாகும். இக்கொள்கைகளுககு மூலக் கூறுகளைச் சங்க இலக்கியங்கள் பெற்றிருந்தன என்பதை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

செம்மொழி இலக்கியங்களில் உழவு

முனைவர் கு.சந்திரன், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர் – 613005 9443124653

ஆடை இல்லாமல் மனிதன் வாழ்ந்தது முதல் அறிவியல் கல்வி செழித்தோங்கும் இந்த விஞ்ஞானக் காலம் வரை மனிதன் உணவைத்தேடி அலைந்த வண்ணமேயிருக்கிறான். செவ்வாய்க் கிரகத்துக்கு விண்கலம் அனுப்புகிற மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட நவீன எந்திரங்களால் மண்ணிலே விதைக்காமல் உணவைச் சுயமாகத் தரமுடியாது.

கடவுளை வேண்டுகிற அடியார்கள்கூட உணவுக்காகப் பிரார்த்திக்கின்றனர். திருமங்கை ஆழ்வார்,

“கூறைசோறு இவைதந்து எனக்கு அருளி
அடியேனைப் பேணி ஆண்டுகொள் எந்தாய்” உணவும் இருப்பிடம்
தந்து என்னை ஆட்கொள் என்று வேண்டுகிறார்.

சங்க இலக்கியத்தில் பசித்த வறியோருக்கு உணவு அளித்த மனிதனை ‘பசிப்பிணி மருத்துவன்’ எனப் புகழ்ந்துள்ளனர்.இதன் மூலம் பசிபோக்குபவன் ஒரு மருத்துவன் என்பதை இந்த உலகத்துக்கே தந்தவர்கள் சங்கத்தமிழர், உணவின் முக்கியம் அறிந்துதான் திருவள்ளுவர் “உழவு” என்ற தலைப்பில் தமது கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார்.

‘சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழுந்தும் உழவே தலை’. (1031)

பலதொழில்களைச் செய்து சுழன்றாலும் இறுதியில் ஏர்த்தொழிலின் பின்னாலேயே இந்த உலகம் நிற்கிறது. அதனால் எவ்வளவு துன்பமடைந்தாலும் உழவே தலையானது என்று சொல்கிறார்.

ஒரு மருத்துவரால் ஒரு விஞ்ஞானியால் ஓர் அரசியல் தலைவனால் ஒரு பொறியாளரால் இன்னும் பல விற்பன்னர்களால் செய்ய முடியாததை ஒரு விவசாயி உழவுத் தொழிலில் செய்கிறான். அதன்மூலமே மனிதர்களுக்கு உணவு கிடைக்கிறது. அந்த உணவுதான் மனிதனுக்கு உயிரேயாகும். உயிரைத்தாங்கும் சக்தியாகும். எனவே தான் பழந்தமிழர் ‘உண்டி கொடுத்தோர்’ (உண்டி – உணவு) உயிர்கொடுத்தோர் என்றனர். உழவு மனிதனுக்கு உணவு கொடுக்கிற

தொழில். அது நலிந்தால் மனித இனமே நலியும். எனவே அதன் உண்மையை உணர்ந்திருக்கிறார்கள் சங்கத்தமிழர்கள்.

பழந்தமிழர் வரலாற்றைப் பார்கிறபோது தமிழர், தமிழ் மன்னர்கள் உழவுத் தொழிலைப் போற்றி வந்திருக்கிறார்கள். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்ற வள்ளுவனின் குறளை ஏற்றிருக்கிறார்கள். சங்கப்புலவர்கள் "உழவுத்தொழிலுக்கு வரிபோடக்கூடாது" என்று மன்னனை வேண்டியிருக்கிறார்கள்.

உழவுத்தொழிலின் மூலமாக நெல்லைப் பெற்றனர் தமிழர்கள். பிறகு நெல்லை அரிசியாக்கினார்கள். நெல் முளைக்கும் பருவம். அரிசி முடியும் பருவம். எனவேதான் பழந்தமிழர் திருமணத்தின்போது வாழ்த்தும் நோக்கில் மணமக்கள் வாழ்வில் பதினாறு செல்வமும் முளைக்கட்டும் என்பதன் அடையாளமாக நெல்லைத் தூவினார்கள். (இன்று அரிசியை மஞ்சள் பூசித் தூவுகிறார்கள். ஒரு காலத்தில் விதைநெல் தட்டுப்பாடு வந்ததால் இந்த வழக்கம் வந்ததாக ஒரு குறிப்பு உண்டு) நெல்லில் இவ்வாறு பண்பாடு கண்டவர்கள் பழந்தமிழர்கள். இன்றைக்கும் குறிப்பிட்ட சில தமிழர்களிடையே திருமணத்தின்போது நெல் அளந்து போடுகிற வழக்கம் உண்டு. தமிழனின் நெல் நாகரீகம் உலகில் முதன்மையானது. நெல்லும் அரிசியும் தமிழரின் மங்கல அமங்கல சம்பவங்களில் தொடர்பு கொண்டது. திருமணத்தின்போது நெல்லால் வாழ்த்திய தமிழர்கள் இறப்பின்போது எல்லாம் முடிந்துவிட்டது என்பதாக இனி முளைக்காத அரிசியால் இறந்தவருக்கு வாய்க்கரிசி இட்டனர். இவற்றைக் கூர்ந்து கவனித்தால் வாழ்க்கையை (விதையால்) நெல்லால் தொடங்கி (முடிந்துபோன) அரிசியால் முடித்து வைப்பதாக அர்த்தம் வருகிறது. எனவே தமிழர் பண்பாடு நெல்லோடு தொடங்கியதாக சொல்ல முடிகிறது.

நெல்லின் பண்பாட்டைத் தொடங்கிய தமிழர் நெல்லை அரிசியாக்கி அரிசியை சோறாக்கி உணவாக்கி மகிழ்ந்தனர். இன்றைக்கும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கிற உணவே அரிசிச் சோறாகும். அது வறியவர் பசியைப் போக்கும் மருந்தும் ஆகும். பசி முதல் மனிதனுக்கு முதலில் வந்த ஒன்று. மனித வரலாற்றோடு பசி முக்கிய தொடர்புடையது. அரசுகள் மக்கள் பசியைப் போக்க ஆவன செய்தாலும் ஆங்காங்கே வள்ளல்கள் காலத்துக்கு காலம் அன்னம் இட்டு வந்திருக்கின்றனர். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் தொடங்கிய அன்னதானம் இன்றும் வடலூரில் நடக்கிறது.

சங்க காலத்தில் அறச்சோறு எனத் தொடங்கிய பணி இன்றும் தமிழ் மண்ணில் அன்னதானமாய் நடந்து வருகிறது. தமிழகமெங்கும் அன்னதான சத்திரங்கள் ஆங்காங்கே இருக்கின்றன.

இதுபோன்ற உணவு சத்திரங்கள் மேலைநாடுகளில் இல்லை. ஆனால் உணவு தேடும் வறியவர்கள் அங்கே இருக்கிறார்கள். அமெரிக்காவில் பகல் உணவு கிடைக்காத மக்கள் தொகை ஒரு நூறு ஆயிரத்தைத் தொட்டுவிட்டதாக பத்திரிகைச் செய்தி கூறுகிறது. அறிவியல் வளர்ந்தாலும் பொருள் குவிப்பு ஒரு பக்கமாய்ப் போக பட்டினி, பசி என்பன சில மக்களை சமூகத்தில் தாக்கவே செய்கின்றன. உலகெங்கும் பட்டினியால் தவிப்போர் உண்டு. எனவேதான் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் உள்ளிட்ட மேலைநாடுகளில் செஞ்சிலுவைச் சங்கம், (சுநன ஊசழளள) வின்சன்டி போல் மற்றும் தேவாலய அமைப்புகள் என்பன ஒரு நேர உணவு அல்லது உணவுப்பொருள் வழங்குகிற "தர்மத்தை" வருமானம் குறைந்தோருக்கு, வேலை இல்லாதோருக்கு வழங்குகின்றன. கிறிஸ்துமஸ் காலத்தில் ஏழைகளுக்காக உலகெங்கும் நிதி திரட்டப்படுகின்றன.

எவ்வளவுதான் வறுமை இருந்தாலும் தமிழர்கள் விருந்தோம்பல் பண்பைக் கைவிடமாட்டார்கள். தொல்காப்பியர் காலத்திலேயே விருந்தோம்பல் இருந்திருக்கிறது. அதற்குக் காரணம் தமிழரின் உழவுத்தொழில். அத்தொழில் எப்போதும் வறுமையைக் கொடுக்காது. எனவே விவசாயிகளை மன்னருக்கு இணையாகப் போற்றினார்கள் அந்தக் கால மக்கள்.

விஞ்ஞான எந்திர மயக்கத்தில் இருக்கிற நாடுகளில்கூடு விவசாயிகள் போற்றப்படுகிறார்கள். ஆஸ்திரேலியாவில் ஆண்டுதோறும் பெரிய வெள்ளிக்கிழமையோடு ஒட்டிய காலப்பகுதியில் விவசாயிகளைப் போற்ற ஈஸ்டர் ஷோ நடத்துகிறார்கள். அந்தக் கண்காட்சியில் விவசாயத்தோடு தொடர்புடைய மாடு, ஆடு, கோழி, வான்கோழி எனபனவற்றை காட்சிக்கு வைப்பார்கள்.

உலகில் வாழ்கிற மனிதனுக்கு விவசாயம் முக்கியமானது. ஒரு மனிதன் வானொலிப்பெட்டி, தொலைக்காட்சி இல்லாமல் வாழ முடியும். ஆனால் உணவு இல்லாமல் வாழ முடியாது. ஆகவே சங்க காலத்திலேயே உணவு உற்பத்திக்கு வழிமுறைகளைக் கண்டார்கள் தமிழர்கள். நாடோடி வாழ்க்கையில் இருந்து மீண்டும் ஒரு பரிணாம வளர்ச்சியில் இதனைச் செய்திருக்க முடியும். ஆனால் நாடோடி வாழ்க்கையில் இருந்து மீளாதவர்களும் உலகில் இருக்கிறார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆஸ்திரேலிய ஆதிவாசிகள். ஒரு பெரிய நாட்டுக்கே சொந்தக்காரர்கள். அவர்களின் வரலாறு 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். ஆனால் அவர்கள் உழவுத்தொழிலோ, விவசாயத்தொழிலோ அறிந்திருக்கவே இல்லை. வரலாற்றுத் தகவல்படி வெள்ளையர்கள் கால் வைத்த 1788-ம் ஆண்டுவரை எந்த நவீன வாழ்க்கையையும் அவர்கள் அறியவே இல்லை. ஆனால் நாடோடி வாழ்க்கையில் இருந்து மீண்ட சங்கத்தமிழர்

உழவுத்தொழிலில் மாடுகட்டி 'போர்" அடிக்க முடியாமல் யானை கட்டி 'போர்' அடித்திருக்கிறார்கள்.

இயற்கை வேளாண்மை

ஒரு நாளைக்கு குறைந்தது மூன்று தடவையாவது உணவைப் பற்றிச் சிந்திப்பான் மனிதன். உணவு இல்லையேல் உயிர் இல்லை. உடலும் இல்லை. உண்டியாகும் உணவை உழவுத்தொழில் மூலம்தான் கொடுக்க முடியும். விஞ்;ஞானம் விண்வெளியை கையகப்படுத்தி விட்டபோதும் மனிதன் உண்பதற்கான உணவை மண்ணில் நட்டு வளர்த்துத்தான் பெறமுடியும். மனிதரின் உணவை அடிப்படை (விதை, வேர்) இன்றி எந்திரங்களால் உற்பத்தி செய்ய முடியாது.

விவசாயி சேற்றில் கை வைக்காவிட்டால் மற்றவன் சோற்றில் கைவைக்க முடியாது. ஆயிரம் தொழில்கள் இருந்தாலும் உழுதுண்டு வாழும் வேளாண்மையே முன்னிலையானது, இதனைத்தான் திருக்குறளில்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றுஎல்லாம்
தொழுது உண்டு பின்செல்பவர்" (1033)

உழவுத்தொழிலைப் பொறுத்தவரை உழுதல், உரமிடுதல் களையெடுத்தல், நீர்ப்பாய்ச்சுதல், பயிர்பாதுகாப்பு என்ற ஐந்து கோணங்கள் மிக மிக இன்றியமையாதவை. இதனை,

"ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்று அதன்காப்பு". (1038)

அதே உழவு அதிகாரத்தில்

"தொடிப்புழுதி கஃசா உணக்கின்பிடித்து எருவும்
வேண்டாது சாலப்படும". (1037)

ஒரு பழும்புழுதி கால்பலம் வண்ணம் உழவன் நிலத்தைக் காய விடுவானானால் கைப்பிடி அளவு எருவும் இட வேண்டாம். நிலம் செழித்து வளரும் என்று உழவுத் தொழிலுக்கு ஆலோசனை கூறுகிறார்.

உழவுத்தொழிலுக்குச் சூரியஒளி, மழை, நிலம் ஆகிய மூன்றும் முக்கியமானவயாகும். இம்மூன்றும் இல்லாமல் மண்சார்ந்த தொழில் நடக்காது. ஆகவே இம்மூன்றையும் சங்ககால கவிஞர்கள் போற்றுகின்றனர், சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மங்கல வாழ்த்தில் திங்களைப்போற்றுதும் என்ற பாடலில் ஒளியைத் தருகின்ற சூரியனைப் போற்றி ஞாயிறு போற்றுதும் என்றும், மழையைப்போற்றி மாமழைப்போற்றுதும் என்றும், நிலத்தைப் போற்றும் வகையில் பூம்புகார்ப் போற்றுதும் எனப் போற்றிப் பாடியுள்ளார், விவசாயத்திற்கு நிலமும் சூரிய

ஒளியும் மழையும் வேண்டுமென்பது அறிவியலாகும்.

சங்கப்புலவர்களில் பெரும்பான்மையானோர் விவசாயம் சார்ந்த அறிவியல் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். கம்பர் இராமாயணத்தில் கழிவுப் பொருட்களைப் பயனுள்ள வகையில் வேளாண்மைக்கு ஏற்ப மாற்ற வேண்டும் என்பது அறிவியலாகும்.

"முட்டில் அட்டில் முழுங்குற வாக்கிய
நெட்டுலைக் கழநீர் நெடுநீத் தம்தான்
பட்டமென் கமுகோங்கு படப்பைபோய்
நட்டசெந்நெல்லின் நாறு வளர்க்குமே"

(பாடல் -57)

கழுநீர் வீட்டுக்கழிவுப்பொருள் அண்மையில் உள்ள வயல்நாற்றை வளர்க்கிறது என்று கம்பர் சொல்லும் செய்தி உழவுக்கு வந்தனை செய்வதாகும்.

பழந்தமிழர் வரலாற்றைச் சங்க இலக்கியங்கள் வழிப் பார்க்கிறபோது தமிழர் இயற்கையோடு ஒத்த அறிவோடு சுற்றுப்புற அறிதலோடு நிலத்தை உழுது நட்டுயிருக்கின்றனர். மண்ணுக்கு மாசுவராமல் விவசாயத்தை மேம்படுத்தியிருக்கின்றன. ஆனால், இன்று நவீன விஞ்ஞானச் சிந்தனையில் எந்திரங்கள் துணையோடு செயற்கை உரம் தூவிச் செல்கின்ற விவசாயத்தில் மண்ணும் வலுவிழந்த விதையும் தேய்ந்து விவசாயிகளின் வித்தையும் மாய்த்து தவிக்கிற காட்சியைப் பார்க்கிறோம். இம் மண்ணுக்கு ஒவ்வாத செயற்கை முறையிலான (ரசாயன உரத்தினால்) விவசாயத்தில் மண்ணின் இயற்கையும் மனிதனின் இயல்பும் மாறி க்கிடக்கிறது.
ஒன்றுக்கொன்று நேர் எதி;ரிகளாக வாழ்ந்தாலும் விவசாயிக்கு உதவுகிற பாம்பு, தவளை, வெட்டுக்கிளி, மண்புழுக்கள், சிட்டுக்குருவிகள் யாவும் நேற்றுவரை விவசாய பூமியில் தஞ்சமாய்க் கிடந்தன. ஆனால், தூவப்பட்ட செயற்கை உர நஞ்சால் அவையெல்லாம் அழிந்து குறைந்துவிட்டன.

மாடு இல்லாத எந்திரத்தைப் பயன்படுத்துகிற விவசாயத்திற்கும் இயற்கை விவசாயத்திற்கும் வேறுபாடு இருக்கின்றது.

மாடு

1. இதற்கு வைக்கோல் உணவு. இது விவசாயத்தில் கிடைக்கும்.
2. இதன் கழிவு சாணம் உரமாகிறது. எரிவாயு ஆகிறது.
3. மாட்டு மூத்திரம் பூச்சிக்கொல்லி மருந்தாகிறது.

4. மாட்டின் பால் மனிதனுக்குப் பயன்படுகிறது.

5. சுற்றுச்சூழல் கெடாது.

6. இயற்கையாகவே உற்பத்தி செய்ய முடியும்.

உழவு எந்திரம்

1. இது இயங்க எண்ணெய் ஊற்ற வேண்டும்.

2. பராமரிக்கச் செலவு செய்ய வேண்டும்.

3. இதன் கழிவு மண்ணுக்கு ஆகாது.

4. இதன் புகை சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு விளைவிக்கும்.

5. இதன் பாகங்கள் பழுதடைந்தால் விவசாயப் பூமியில் புதைக்க முடியாது.

பூமி திருத்தி உண், விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமோ? ஆடிப்பட்டம் தேடி விதை, ஆடி விதைத் தேடிப்போடு, அதிர அறுத்தால் உதிர விளையும், நெல்லுக்குப் பாய்க்கிற நீர் புல்லுக்குப்பாயும் கோரைக குடியைக் கெடுக்கும், குப்பையின்றி. அருங்காய் பிஞ்சிலே தெரியும்.

உழவுத் தொழிலின் கூறுகள்

1. உழுதல்

2. சமன்செய்தல்

3. எருவிடுதல்

4. நீர்பாசனம்

5. விதைத்தல்

6. நடுதல்

7. களையெடுத்தல்

8. பயிர்ப்பாதுகாப்பு

9. அறுவடை

10. தூய்மைசெய்தல்

1. உழுல்

“செங்சால்உழவர்”

(பெரும்பாணாற்றுப்படை, 196)

“…..உறுபெயல்தண்துளிக்கு ஏற்ற பல உழுசெஞ்செய்

மண்போல் நெகிழ்ந்து”

(அகநானுறு, 26:2326)

2. சமன் செய்தல்

"…. செறுவின்

உழாஅ நுண் தொளி நிரவிய வினைஞர்"

(பெரும்பாணாற்றுப்படை, 210,211)

3. விதைத்தல்

"….உழவர்

விதைக்குறு வட்டி போதொடு பொதுலிப்"

(குறுந்தொகை, 155)

4. நடுதல்

நீர் உறுசெறுவின் நாறு முடிஅழுத்த

நடுநரொடு சேறி ஆயின்

(நற்றிணை, 60:78)

5. நீர்ப்பாய்ச்சுதல்

"நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி."

ஔவையார்.

6. எருவிடுதல்

'ஏரினும் நன்றால் எருவிடுதல்'

திருவள்ளுவர்.

7. களையெடுத்தல்

"களைகால் கழீஇய பெரும்புன வருகின்"

(அகநானூறு, 194)

8. பயிர்பாதுகாத்தல்

"காவல் கண்ணினம் தினையே" (அகநானூறு, 92)

"சிறுதினைப் படுகிளி கடீஇயா". (அகநானூறு, 32)

9. அறுவடை

பைதுஅடி விளைந்த பெருஞ் செந்நெல்லின்

தாம்புடைத் திரள்தாள் துடித்த வினைஞர்

(பெரும்பாணாற்றுப்படை, 230,231)

“நீர்சூழ் வியன் களம் பொலிய போர்பு அழித்து

கள் ஆர் களமர் பகடுதலை மாற்று.”

(அகநானூறு, 366)

10. தூய்மை செய்தல்

தூற்றும்பொழுது எழும்பிய தூது துரும்புகள்

இருண்ட மேகம் போலத் தோன்றியது விரைந்து வீசும் காற்றில் உழவர்கள் நெல்லைத்தூற்றுவார்கள்”

“பொங்கழி முகந்த தா இல் நுண்துகள்

மங்குல்வானின் மாதிரம் மறைப்ப”

(அகநானூறு, 34:37)

திரிகடுகம் மற்றும் பழமொழி, நாலடியாரில் வேளாண்மை:

“மலைநலம் உள்ளும் குறவன் பயந்த

விளைநிலம் உள்ளும் உழவன்”

(நாலடியாh,; பா: 356)

குறவன் தான் வாழும் மலைவளத்தை நினைத்து மகிழ்வான், உழவனோ தனக்குப் பயன்தந்த விளைநிலத்தை நினைத்து உள்ளம் உவப்பான்.

“உழவின் கண் காமுற்று வாழ்தல்” (திரிகடுகம், பா: 42)

உழவர்கள் பயிர்த்தொழிலில் விருப்பம் செலுத்தி வாழவேண்டும்.

“புல்ஈரப் யாழ்தின் உழவே போல் மீதூடிச்

செல்லாவாம் நல் கூர்ந்தார் சொல்”

(நாலடியார் 65)

பயிரை நல்ல நிலத்தில் உழுது பயிரிடவேண்டும். குறைந்த ஈரத்தில் உழுது பயிரிட்டால் கற்றறிந்தவர்களாயினும் அவர்கள் வறுமை நிலையில் இருப்பார்களாயின் அவர்கள் கூறுகின்ற கருத்துக்கள் சமுதாயத்தில் சிறப்புப் பெறுவதில்லை.

உழும் எருது இல்லாத உழவர்க்கும் பதம் கழியும் ஈரம் பெரும் துன்பம் அளிப்பதாகும்.

“எருதிறுழவர்க்குப் போகீரம் இன்னா”

(இன்னா நாற்பது, பா.4)

கலித்தொகையில் உழவு

“புள்இமிழ் அகல்வயல் ஒலி செந்நெல்கிடைப்பூத்த

முள் அரைத்தாமரை முழுமுதல் சாய்த்து".

மருதநிலம் நீர் வளம் செழித்து இடுத்தது உழவர்கள் செந்நெல் விதைத்தார்கள், நெற்கதிர்கள் செழிப்பாக வளர்ந்துள்ளன. பறவைகள் வயலுக்கருகில் பல்வேறு ஒலிகளை எழுப்பிக்கொண்டிருக்கின்றன. தாமரை மலர்கள் மலர்ந்து காணப்படுகிறது. நீர்;வளம் மிகுந்து உழவுத்தொழில் சிறந்து இருந்ததை கலித்தொகை எடுத்துரைக்கிறது.

உழவர் சமூதாயத்தை இன்றைய உழைக்கும் சமுதாயமாகக் கொள்ளலாம். ஒவ்வொருவரும் கடமையை உணர்ந்து உழைக்க வேண்டும். பொறுப்பு உணர்ந்து உழைப்போரைக் காக்க வேண்டும். இது உழவர் சமுதாயத்திற்கு மட்டுமின்றி உலக சமுதாயம் அனைத்திற்கும் பொருந்தும்.

துணைநின்ற நூல் : வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்

ஆசிரியர் : மாத்தளை சோமு.

தொழில் நுட்பவியல்

பேரா. இரா. குமார், இணைப் பேராசிரியர்,

அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி.

பண்டைத் தமிழர் புவியியல், பயிரியல், உயிரியல், தொழில் நுட்பவியல் ஆகிய அறிவியல் துறைகளில் மேம்பட்டவர்களாக விளங்கியுள்ளனர். அவை குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன. அவற்றுள் தொழில் நுட்பவியல் குறித்த செய்திகள் மட்டும் ஈண்டு ஆய்வுப்பொருளாக எடுத்துக் ;கொள்ளப்படுகிறது. சங்ககாலத் தொழில் நுட்பவியலுக்கு அக்காலத்து எழுந்த கட்டிடங்கள், அரண்கள், நகரமைப்பு, கப்பல்கள், போர்கருவிகள் ஆகியன சான்றாக உள்ளன. அவைகள் குறித்த செய்திகளை ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கட்டிடக்கலை:

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது அரண்மனை திட்டமிடப்பட்டுச் சிற்பநூல் வல்லாரால் கட்டடப்பெற்றது. மன்றங்கள், நாளோலக்க மண்டபம், படைவீடு, கருவூலம், வழிபடு தெய்வங்களுக்குரிய கோட்டங்கள், அட்டிற்சாலை, இளவேனில் மண்டபம், பள்ளியறை, அரசியின் கோயில்மாடம், மாளிகைக் கூடம், கோபுரம், யானைத்தறி, குதிரைக் கொட்டில், பயிற்சிக்கூடம் முதலான அமைப்புகளுடன் அரண்மனை அமைக்கப்பட்டிருந்தது. கட்டடக்கலை வல்ல பொறியாளர் நுண்ணிய நூலைப் பிடித்து மன்னர்கேற்ப அரண்மனை அமைத்துள்ளனர். அரண்மனையைச் சுற்றி மாடங்களும், அவற்றை வளைத்து மதிலும் கட்டப்பட்டன. வாயிலருகில் கொற்றவை கோயில் கட்டப்பட்டது. வாயிற்கதவுகளிரண்டிலும் உத்திரம் என்னும் மீனின் பெயர் கொண்ட உத்திரக் கற்கவியில் இரண்டு குவளை மலர்களைப் போலச் செய்யப்பட்ட கைப்பிடிகள் செருகப்பட்டன. அவை தாழ்ப்பாளுடன் அமைத்தவை. கைவன்மை மிகுந்த கருமான் பரித்த இரும்புசிட்டியால் பிணித்துச் செவ்வரக்கிட்டு முடுக்கிச் செய்யப்பட்டதால் கதவுகள் குற்ற மற்றவையாக இருந்தன. வாயிலில் வீற்றிருக்கும் தெய்வத்திற்கு வெண்சிறுகடுகு அப்பி, நெய் பூசப்பட்டு உரிய சிறப்புச் செய்தனர்

என நெடுநல்வாடை பாண்டியனுக்கு அமைக்கப்பட்ட அரண்மனைச் சிறப்பைப் புலப்படுத்தும்.[1] சிற்ப நூல் பயின்றோரே மேற்கூறப்பட்டவை கட்டும் தகுதி பெற்றோராய் இருந்தனர். சிற்ப நூல் வல்லோரால் சிறப்புறச் செய்யப்பட்ட மாடம் என இளங்கோவடிகள் குறிப்பிடுவதால் அதனை உணரமுடியும்[2] அக்காலத்தில் கட்டடக்கலை நூல் கற்றுத் தேர்ந்த நெறியாளரே நகரங்களில் பெரிய மாடமாளிகைகளைக் கட்டியுள்ளனர் என்பது இதனால் தெற்றெனப் புலனாகிறது. கட்டடம் கட்டுவதற்குச் செம்மண்ணைச் சுட்டுப் பயன்படுத்தியுள்ளனர். அதனை "சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்"3 "சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனை"[4] என்ற அடிகள் விளக்கும். செம்மண் மட்டுமன்றிச் சுண்ணாம்பும் கட்டடம் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாவை செய்வோர் மண்ணீட்டாளர் எனப்பட்டனர்.[5] செல்வர்கள் பல கட்டுகள் அமைந்த வீட்டைக் கட்டினர்.[6] பல கட்டுகளால் மாட்சிமைப்பட்ட நல்ல வீடுகள் ஓவியம் போல் அழகாகவும், விசாலமாகவும் கட்டப்பட்டன.அதனை,

"ஓவுக்கண்டன்ன வில்" [7]

"ஓவத்தணையவினை புனை நல்லில்"[8]

"ஓவத்தன்ன விடனுடை வரைப்பின்"[9]

என்ற அடிகள் தெளிவுபடுத்தும். ஏழு அடுக்குகள் கொண்ட (எழு நிலை மாடங்கள்) மாடிவீடு கட்டி அதில் செல்வர்கள் வாழ்ந்ததினையும் அவ்வீடுகள் வலிமையாக இருந்ததையும் "இடஞ் சிறந் துயரிய வெழு நிலை மாடத்து"[10] "திண்சுவர் நல்லில்"[11] என்ற அடிகள் உணர்த்தும். அவ்வீடுகள் மலை போல் உயர்ந்திருந்ததை "விண்டோய் மாடம்[12], நான் மாடக்கூடல்[13], நீண்மாடக்கடல[14] என்ற அடைத்தொடர்கள் தெளிவுபடுத்தும்.

தெருக்கள்

தமிழர்கள் தாங்கள் வாழ்ந்த நகரங்களில் அகன்ற தெருக்களை அமைத்திருந்தனர். அந்நகரங்களைக் காவல் செய்ய காவலர்களைப் பணியமர்த்தியிருந்தனர். அதனை, "ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெருவில்"[15] "கடியுரை வியனகர்";[16] என்ற தொடர்கள் புலப்படுத்தும். நகரமைப்பைத் தாமரைப் பூப்போலவும் நந்தியாவட்டை மலர் போலவும் அமைத்திருந்தனர்.[17] மதுரை அதற்குத் தக்க சான்றாக இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளன.

அரண்

ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு இயற்கை அரணும், செயற்கை அரணும் என இருவகை அரண்கள் உண்டு. இயற்கை அரண்களாக மலையரண்.[18] நீர்; அரண், காட்டரண்,[19] நிலவரண்[20] என்பவை இருந்தன. உள்நாட்டுப் பாதுகாப்பிற்கும்,[21] ஒரு நகரத்தின் பாதுகாப்பிற்கும்,[22] ஓர்

ஊரின் பாதுகாப்பிற்கும்,[23] ஒரு கோயிலின் பாதுகாப்பிற்கும்,[24]ஓர் அரண்மனையின் பாதுகாப்பிற்கும்[25] உதவக்கூடியவை அரண்களாகும். நாட்டின் பாதுகாப்பிற்கு அரணாக காவற்காடு, அகழி, மதில் ஆகியவை விளங்கியுள்ளன. மிதிலுக்குப் புரிசை[26], இஞ்சி என்ற பெயர்கள் உண்டு. அம்புடை ஆர் எயில்[27], மண்புனை இஞ்சி மதில்[28] எனக் குறிக்கப்பட்டுள்ளன. மதில் நீளமாகவும் உயரமாகவும் பாதுகாப்பாகவும் இருந்து அம்பு எய்வதற்கு ஏற்ற அமைப்புக் கொண்டதாகக் கட்டப்பட்டிருந்தது.[28] அரைத்த செம்மண்ணினாலும் மதிலினைக் கட்டியுள்ளனர்.[29] அம்மதிற் சுவர் செம்பினால் செய்தது போன்று உறுதியாக இருந்துள்ளது.[30]இம்மதில்கள் பழங்காலத்தில் புறமதில், இடைமதில், உள்மதில் அல்லது அக மதில் என்று மூவகையாக அமைக்கப்பட்டிருந்தன.[31] மதிலை அழிக்கும் போர்முறைக்கு உழிஞை என்றும், மதிலைக் காக்கும் போர் முறை நொச்சி என்றும் தொல்காப்பியம் கூறுகிறது.

மதில் சுற்றியிருப்பதால் சுற்று என்று கூறப்பட்டது. 'சுற்றுஅமர்' என மதிற்சுவரைத் தொல்காப்பியம் குறிக்கும்.[32] அரண் என்ற சொல் அனைத்து அரண்களையும் குறிப்பதுடன் மதிலரனையும் குறிக்கும். வரைப்பு எனவும் மதிலைக் குறிப்பிடுவதுண்டு. இலக்கியங்கள் மதிலரணை நெடுமண் இஞ்சி நீள் நகர் வரைப்பு,[33] எனவும் 'சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பு'[34] 'அரும்படி வரைப்பு'[35] 'நிதியம் துஞ்சும் நிவந்து ஓங்கு வரைப்பு'[36] எனச் சுட்டுகின்றன. மதிலை இலக்கியங்கள் புரிசை, எயில், இஞ்சி, சுற்று, அரண், வரைப்பு, வேலி என்ற சொற்களில் குறிக்கின்றன. 'வேலி' என்பது முள்ளாலும், சுழி முதலியவற்றாலும் ஆன அரணைச் சுட்டும். 'பெருநீர் வேலி'[37] 'இமிழ்கடல் வேலி'[38] 'மலை வேலி'[39] 'முள் மிடைவேலி'[40] முதலானவை நீராலும் மலையாலும் முள்ளாளும் ஆன காப்பைச் சுட்டும். மதிலரண் நானிலத்திலும் இடம் பெறும். அது கதவுகள் உடையதும்,[41] மறவர்களால் காக்கப்படுவதும்[42] ஆகிய சிறப்புடையது.அக்கதவுகளில் புழை அமைத்திருந்தனர்.அதனை"வாயிலொடு புழை அமைத்து, ஞாயில் தொறும் புழைநிறீஇ"[43] என உணர்த்தும். பகைவர் தாக்காமல் தம்மைப் பாதுகாத்து மறைத்துக்கொள்ள இது மறைவிடமாக. உதவியுள்ளது.

பல்யானைச் செல்கெழு குட்டுவன் உழிஞை சூடிப் படை எடுத்துச் சென்று பகைவரின் 'அகப்பா' என்னும் அரணை அழித்தான். அந்த அரணின் வாயிலில் எந்திரவில் தொங்கும்படி கட்டப்பட்டிருந்தது. ஐயவி தூலாமும் இருந்தது.[44] இந்த 'ஐயவிதுலாம்' என்பது தன்னை நெருங்குபவர் தலையை நெருக்கித் திருகும் மரங்களாகும். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் பகைவரது ஊரினது கோட்டையில் உள்ள அம்புகளை எய்யும் எந்திரவில்லையுடைய மதில் வாயிலை அழித்து ஊருக்குள் புகுந்துள்ளான்.[45]

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பகையரசனின் ஊரில் எந்திர வில்லில் இருந்து அம்புகளை வீசும் மதிலின் அரணை அழித்தான்[46] அம்புகளை எய்யும் எந்திர வில்லும் மதிலின் வாயிலில் பொருத்தப்பட்டிருந்தது[47]. தானே வளைந்து அம்பு எய்யும் விற்பொறியும[48] கருங்குரங்கு போலிருந்து வந்தவரைக் கடிக்கும் பொறியும்[49] கல்லை எறிகின்ற கவணும்[50] கொதிக்கும் நெய்யைச் சேர்ந்தார் மேல் இறைக்கும் நெய் கொதிமிடாவும்,[51] உருகிய செம்பை மேலே இறைக்கும் செம்பு உலைப் பொறியும்,[52] கற்களை வீசும் கற்கூடைகளும்,[53] அகழி கடந்து மதில் பற்றுவோரைத் தூண்டிலில் இழுக்கும் தூண்டில் பொறியும்,[54] கழுத்தில் பூட்டி முறுக்கும் கழுக்கோல் சங்கிலிப் பொறியும்,[55] அம்புக்கட்டுகளும், ஏவு அறைகளும் மதுரை மதிலின் மேல் அமைக்கப்பட்டிருந்தமையைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அவற்றின் நுட்பம் வாய்ந்த செயல்பாடுகள் சங்ககால மக்களது தொழில்நுட்பத் திறனை நன்கு விளக்கி நிற்கும்.

அகழி

ஆழமாக அகழ்ந்து அமைக்கும் அகழியைச் சுற்றியுள்ள காவற் காட்டில் சூரிய ஒளியும் நுழையாதபடி மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கும்.[56] காவற்காடு முள் செடிகளான வேலியைச் சூழ்ந்து அமைந்திருக்கும்.[57] காவற்காட்டையும், வேலியையும் அடுத்தே ஆழமான அகழி அமைந்திருக்கும்.[58] அகழியை அடுத்து மிகவும் உயர்ந்து வாயில்களோடு கூடிய கோபுரங்களைக் கொண்ட நீண்டுயர்ந்த மதில்களிருக்கும்.[59] மதில், அகழி, மிளை என்று மூன்று உறுப்புக்களைக் கொண்ட பாதுகாப்பு அமைப்பு அரண் என்றும், அருப்பம் என்றும் குறும்பு என்றும் கூறப்படும்.

அரண் என்றால் பாதுகாப்பு என்று பொருள். நாங்கள் அம்பு எய்து போர் தொடங்கப்போவதால் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று விடுங்கள் என்று பகைவர் மக்களுக்கு அறிவித்துப் போர் தொடங்குவது சங்ககால அறப்போர் முறையாக இருந்தது.[60] அகழி நிலத்தைத் தோண்டியும், எதிர்ப்படும் பாறையை உடைத்தும் நிலத்திலிருந்து நீர் சுரக்கும் அளவிற்கு ஆழமான நீர் நிறைந்திருக்கும்.[61] மண்ணை ஆழமாக அகழ்ந்தது. நிறைந்த நீரால் நீலமாகத் தோன்றும் அகழி என்று மதுரைக்காஞ்சி கூறகிறது.[62] கல் தரையைத் தோண்டிச் செய்த சிறிதாகிய நீர் வரும் வாயை உடைய அகழி என்றும் மதுரைக்காஞ்சி கூறுகிறது.[63] கற்களை அகழ்ந்து இயற்றிய அகழி என்று மலைபடுகடாம்[64] குறிக்கின்றது. பகைவர் அகழியில் இறங்குவதைத் தடுக்க அகழியில் முதலைகள் வளர்க்கப்படும். இரையைத் தேடி உலாவும் வளைந்த காலினை உடைய முதலைகளோடு திரை உண்டாக ஆழ்ந்த கல்லை அகழ்ந்த கிடங்கு என்று மலைபடுகடாம் கூறுகிறது.[65] முதலைகளில் ஒரு வகையாகிய கராம் முதலைகள் பெருகித் திரியும்.

ஆழமான நீரையுடைய அகழி என்று புறநானூறு[66] கூறுகிறது. சங்ககாலத்தில் நகரங்களும் அகழி சூழ்ந்திருந்தன.[67]

பகைவர் கடத்தற்கரிய நீர் அரணாம் அகழியில் திரியும் முதலை, சுறா திமிங்கலம் முதலானவை உயிர்க்கு ஊறு விளைவிக்கும்.இவையனைத்தும் சங்ககால மக்கள் பல்துறையிலும் தொழில் நுட்பம் வாய்ந்த நுண்ணறிவினர் என்பதைப் புலப்படுத்தும்.

நாவாய் (கப்பல்)

மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட பண்டைத் தமிழகக் கடற் பகுதி நெய்தல் நிலம் எனப்பட்டது. கடலை நம்பி வாழ்ந்த மக்கள் கலம் செலுத்துவதிலும் வல்லவர்களாயிருந்தனர். காவிரிப் பூம்பட்டினமும், கொற்கையும், முசிறியும் தலைசிறந்த துறைமுக நகரங்களாக இருந்தன. பழங்காலத்தில் இந்திய நாட்டின் ஏனைய பகுதிகளை விடப் பழந்தமிழ் நாடே கடற்படை ஆற்றலில் சிறந்திருந்தது என்பதை நிலவியல் ஆசிரியர்கள் எடுத்தியம்பி உள்ளனர்.[68]

புழந்தமிழ் தொழில்நுட்ப ஆற்றலைப் புலப்படுத்தும் வண்ணம், அம்பிகள், முகப்பில் விலங்கு, பறவை, மனிதனின் தலைவடிவங்கள் இடம் பெற்றன. கட்டுமரம், தோணி,[69] ஓடம்,[70] பஃறி,[71] பரிசல், படகு திமில்[72] முதலியன சிறுசிறு தொழில்புரியப் பயன்பட்டன. கலங்கள் பெரும் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. நீர் விளையாடவும், பொழுது போக்கவும் சங்ககால மக்கள் புணை,[73] தெப்பம் மிதவை முதலானவைகளையும், பறவைமுக அம்பிகளையும் பயன்படுத்தினர். பெரும் அகழிகளையும் ஆறு, கடல் முதலானவற்றையும் கடப்பதற்கு போர்க் காலங்களிலும் அரிமுக அம்பி, கரிமுக அம்பி, பரிமுக அம்பி, புலிமுக அம்பி ஆகியவை பயன்படுத்தப்பட்டன.

பெரும்புலி வங்கம் கடலின் பல திசைகளிலும் சென்று வந்தது.[74] காற்றின் இயக்கத்தால் அக்கலம் ஆழ்கடலிலும் சென்றது. பாரமிறக்காது புகார்த்துறை புகுந்த கப்பலைப் பற்றிப் புறநானூறு கூறகிறது.[75] பெரும் நாவாய் காற்றைத் துணை கொண்டு கடலைப் பிளந்து, சிறந்த பொருள்களை நாட்டுக்குக் கொண்டுவந்து சேர்ப்பது, பெரும்போர் நிகழ்ந்த அனைத்து வசதிகளும் நிறைந்தது.[76] கடலோடும் நாவாய்களைக் கரைக்கழைக்க ஒளிகாட்டும் கடற்கரைத் துறைகள் இருந்தன.[77] வணிகக் கப்பல் வழி தவறாமல் கரைசேர வழிகாட்டியாகக் காணப்பட்ட கலங்கரை விளக்கத்துடன், கப்பல்களை பழுது பார்க்கும் துறையும் இருந்தன.[78] கலங்கரை விளக்கம் இருந்ததை,

" கோடுயர் திணிமணல் அகள் துறைநீரால்
மாட வொள்ளெரி மருங்கறிந்தொய்ய"[79]

" வானமூன்றிய மதலை போல

ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண் பொர நிவந்த வேயாமாடத்து
இரவின் மாட்டிய இலங்கு அடர் ஞெசிழி
உரவுநீ ரழுவந் தோடுங்கலங் கரையும்”[80]

என்ற அடிகள் தெளிவுபடுத்தும். கடலில் இயங்கும் காற்றைக் கலன் செலுத்தப் பயன்படுத்தும் அறிவினைப் பண்டைத்தமிழர் பெற்றிருந்தனர்[81] என ஔவை சு.துரைசாமி பிள்ளை குறிப்பிடுகிறார். உலகமே பெயர்ந்து வருவது போன்ற கலம் ஒன்றினை இரவும் பகலும் ஓய்வின்றி காற்று அசைத்துச் செல்ல நாவாய் ஓட்டுகிறவன் அதனைத் திறம்பட கரைசேர்த்ததை மதுரை மருதனிளநாகனார்,

“உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீரினிற் போழ
இரவும் எல்லையும் அசைவின்றாகி
விரை செலல் இயற்கை”[82]

என விளக்குவர். நாவாய் ஓட்டுகிறவன் காற்றின் வரவறிந்து கலம் செலுத்திய திறன் இதனால் புலனாகும். தமிழர்க்குப் பழங்காலத்திலேயே காற்றின் வரவறிந்து கலம் செலுத்துகிற திறன் இருந்ததை இதனால் அறிய முடிகின்றது.

கெடலரும் தாளையொடு கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என ஐந்தாம் பத்தின் பதிகமும், கடம்பு எறிந்த சேரன் கடல் வயிறு கலக்கியவன் எனச் சிலப்பதிகாரமும் குறிக்கின்றன.[83] சேரர் கலஞ் சென்ற குடகடலில் பிறர்கலம் செலுத்த அஞ்சுவர் என மாறோகத்து நப்பசலையார் அகநானூற்றில் குறிப்பர்.[84] ‘நளியிரு முந்நீர் நாவாயோட்டி வளிதொழிலாண்ட உரவோன் மருக’ எனக் கரிகால் பெருவளத்தானை வெண்ணிக் குயத்தியார் கூறுவர்.[85] கி.மு.முதல் நூற்றாண்டில் இலங்கை சோழ மன்னரால் வெல்லப்பட்டது. கடல் சூழ உலகை வளைத்து தம் புகழ் நிறுவிய உரவோர் உம்பல் எனப் பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் உணர்த்துவர்.[86] குடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடுகிறார்.[87] பாண்டியன் மாகீர்த்தி என்ற நிலந்தரு திருவிற்பாண்டியன் கடல்கடந்து சாவகநாட்டில்(சுமித்ரா) தன் ஆட்சியை நிறுவியிருந்தான்[88] இவற்றால் பாண்டியர் கடற்றாணையின் சிறப்பும் கலமாண்ட பெருமையும் புலப்படும்.[89] சோழநாட்டின் புகழ்பெற்ற துறைமுகமாகிய பூம்பகாரில் இருந்து சோழந்தி என்ற அம்பி கங்கைக்கும் பர்மாவிற்கும் சென்று மீண்டது என்று பெரிப்ருஸ் கூறியுள்ளார்.[90] தமிழகம் கடற்

பயணத்தில் சிறந்து விளங்கியதற்குக் காரணம் அக்காலத்திலிருந்த எண்ணற்ற வகைக் கப்பல்களும் போர்க் கப்பல்களும் ஆகும்.[91]

சங்க இலக்கியத்தின் வாயிலாக அக்கால மக்களும் சேர, சோழ, பாண்டியரும் பலவகை நாவாய்களைப் போர்க் கலங்களாகப் பயன்படுத்தி கடல் எல்லை காக்கவும் வாணிகம் பெருக்கவும், கடல்கடந்து புகழ்பரப்பவும் கொண்டிருந்தனர் என்பதனை அறிய முடிகின்றது. கப்பலைக் குறிக்கும் வங்கம் என்ற சொல்[92] பெருங்கலத்தைக் குறித்தது. கப்பல்களைப் பழுதுபார்க்கும் துறைகளும் கலங்கரை விளக்கமும் அற்றை நாளில் சிறப்புறத் திகழ்ந்தன.

அணை – கற்சிறை

மிகுதியாக வரும் வெள்ளத்தைக் கல்லால் கட்டப்பட்ட கல்லணை தேக்குவதால் நீர் குளம் போலத் தேங்கி நிற்கும். அந்த அணையில் மதகுகள் அமைத்து வேண்டும் போது வேண்டிய அளவு தண்ணீரைத் திறந்து விடுவதுண்டு. கல்லால் கட்டப்பட்ட அணையைக் கற்சிறை என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.[93]இதனால் தொல்காப்பியம் தோன்றிய காலத்திலேயே கற்சிறை என்னும் கல்லணைகளிருந்தன என்பதை அறிய முடிகிறது. மிக்கு வரும் ஆற்று நீரிடத்துக் கல்லணை நின்று தாங்கினாற் போல பகைவர் படையைத் தடுத்துத் தோற்று ஓடச்செய்த படைத்தலைவன் என மதுரைக்காஞ்சி கூறுகிறது.[94] இரண்டு குன்றுகளுக்கு இடையே குறுக்காக அமையுமாறு தொழில் நுட்ப வல்லுநர்கள் இக்காலத்தில் அணை அமைப்பது போலவே கல்லணையும் அமைந்துள்ளது.[95] காவிரியில் கரிகாலன் கல்லணை கட்டிய செய்தி பொருநராற்றுப் படையில் “நிரைத்தலைக் குறைப்புனல் வரைப்பகம் புகுதொறும்புனலொடு மகளிர் கதுமெனக் குடைய”[96] என இடம்பெற்றுள்ளது.

‘வரைப்பகம்’ என்னும் சொல் அணையைக் குறிக்கும். திருவாலங்காட்டுச் செப்பேடு சோழன் கரிகாலன் காவிரிக்குக் கரை கட்டியதையும் அணை கட்டிய செய்தியையும் புலப்படுத்துகிறது. நீர்தேக்கங்கள் அமைப்பதில் மணல் தளத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டிடங்கள் எழுப்புவது ஒப்பற்;ற கலையாகும். அணையின் மேல் வழிந்து செல்லும் நீர், அதன்கீழ் கசிந்து செல்லும் நீர் இரண்டாலும் பாதிக்கப்படாத வகையில் அணை அமைந்திருக்கும்.; கரிகாலனை ‘பொன்னிக்கரை கண்ட பூபதி’ எனக் கவிசக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழன் உலாவிற் புகழ்ந்துரைத்ததாக இராசமாணிக்கனார் குறிப்பர்.[97] நாட்டின் வளம் பெருக்கக் கரிகாலன் கல்லணை அமைத்தான் என்பதும் அறிவியலில் சிறந்த பொறியியல் வல்லுநர் வியக்கும் வண்ணம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் காவிரி

வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி அவ்வணை பயன் நல்குகிறது என்பதும் அக்கால மக்களின் தொழில் நுட்ப அறிவுக்குச் சான்றாகும்.

<u>போர்கருவிகள்</u>

போர்கருவிகள் பகையடும் வீரர் பயன்படுத்தும் கருவிகள் போர்க் கருவிகள் எனப்படும். "படைக்கலம், தானை, கடுமுள், சுதனம், படையே, துப்பு, துழுமுள், ஏதி, கார்த்திகை, கூர்த்திகை ஆயுதப் பொதுப் பெயர்"

"தானை படையே படைக்கலங்கருவி
யெஃகிவை யாயுதம் வேலுமியம்புவர்"

"துப்பு மேதியுஞ் சுதனமு மாகும்"

எனும் நிகண்டுப் பாக்கள் ஆயுதங்களின் பொதுப் பெயர்களைத் தொகுத்துரைக்கின்றன.[98] இவற்றுள் பழந்தமிழ் இலக்கியங்களில் பயின்றுவரும் படைக்கலம், தானை, படை, துப்பு, எஃகு, வேல் என்னும் சொற்கள் படைக்கலங்களைச் சுட்டுகின்றன என்பர் டாக்டர் தங்கங்கந்தசாமி.[99] படுக்கப் பயன்படுவன படை, பல்படைத் தொகுதி படைக்கலம் தானை எனில் ஆயுதப்பொழுது, துப்பு எனில் வலி, அறிவு, துணை, துணைக் கருவி என்னும் பொருள் உடையது. எஃகு என்பது உருக்கு, கூர்மை, வேல், ஆயுதப்பொழுது எனும் பொருள் தருவது. இரும்பாலான கூரிய கருவிகள் எஃகாகும். வெல்லத் துணையாக விளங்கும்; கருவி வேல் எனப்பட்டது. அருகில் உள்ள பகைவரைத் தாக்கும் வாளினைக் கையில் பிடித்து பகையழிப்பர் வீரர். சற்றுத் தொலைவில் உள்ள பகைவரைத் தம் கையில் உள்ள வேல் வீசியழிப்பர். நெடுந்தொலைவில் உள்ள பகைவரை அழிக்க வில்லில் இருந்து புறப்படும் அம்பு பயன்படும். போரில் இம்மூன்றும் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டன.

வாள், ஈர்வாள், கொடுவாள், உடைவாள் எனப் பல வகைப்படும். ஒந்தியின் முதுகு போல வாள் இருக்கும் எனக் குநற்தொகை கூறும்.[104] உடைவாளைச் சுரிகை என்று கூறுவர்.[100] வாளை ஒளிறு வாள் என்று புறநானூறு கூறுகிறது.[101] வெண்மையான ஒளி வீசும் கருவியாதலால் அதற்கு வாள் என்று பெயர் வந்தது. வாளால் செய்யும் போர் வாள் அமர்[102] எனப்பட்டது. வாளால் போரிடும் படை வாள் தானை[103] என்று அழைக்கப்பட்டது. வாள்படையை வீரர்கள் இடுப்பில் கச்சையில் கட்டப்பட்ட உறைகளில் செருகி வைத்திருப்பர். வாணிகச் சாத்திற்குக் காவல் புரிவோர் வெண்மையான யானை மருப்பினால் செய்யப்பட்ட கைப்பிடியை உடைவாளைப் பாதுகாப்புக் கருவியாக வைத்திருக்கின்றனர் என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.[104] திண்மையான பிடியை உடைய ஒளி பொருந்திய வாள் என்று முல்லைப்பாட்டுக் கூறும்[105]

வாளின் இடைப்பாகம் வாய் எனப்படுகின்றது. மழுங்கியும் சிதைந்தும் இருக்கும் வாள் வடுவுடைய வாளாகும்.[106] வடுவுடைய வாள் போருக்கு உதவாது வாளின் நுனிப்பாகம் வெவ்வேறு வடிவம் பெறும் முள் வளைவுடைய வாள் கொடுவாள் எனப்படும். கொடுவாள் வளைந்த அரிவாள் எனவும் பெயர் பெறும்[107] நெல் அரிவதற்கு பயன்படும் வாள் கூர்வாள்[108] எனப்படும். அரம் போன்ற வாயையுடைய வாள் மழுவாள்[109] எனப்படுகின்றது. மூவிலை வேல் 'சூலம்' எனப்படும்.[110] இது சிவனுக்குரியதாகக் கூறுவர். வைணவக் கடவுளாகிய திருமாலுக்குரிய படை திகிரி. திகிரிக்கு நேமி, ஆழி, சக்கராயுதம் என்ற வேறு பெயர்களும் உண்டு.[111] அதியமான் திகிரிப்படை கொண்டு கோவலூர் அரணை அழித்தமையைப் பரணர் பாடியதாக ஔவையார் கூறுகிறார்.[112] பகையழிக்கும் வேலைக் குறித்து எஃகம் என்ற சொல்லும,;[113] அயில் என்ற சொல்லும்,[114] உடம்படி[115] என்ற சொல்லும், பல இடங்களில் வேலும்[116] இலக்கியங்களில் வந்துள்ளன.

திரண்டு நீண்டு வளர்ந்து முகையோடு கூடித் தோன்றும் கரும்பின் கூட்டம் என்று மலைபடுகடாம்[117] கூறுகிறது. கரும்பின் வெண்முகை வேல் போலுள்ளது என நற்றிணை கூறுகிறது.[118] சுடர் போன்ற வெண்மையும் இலைபோன்ற வடிவமும் பெற்று கூரிய நுனியை உடைய நீண்ட வேல் என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது.[119]

ஈந்து இலையின் நுனியும் வேலின் கூரிய முனை போலிருக்கும் எனப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.[120] வேலின் தலைப்பகுதி இலை வடிவத்தில் எஃகால் செய்யப்படுவதால் எஃகு என்றும் எஃகம் என்றும் கூறப்பெறும்.[121] கூர்மையானது என்ற பொருளில் வேலுக்கு அயில் என்ற பெயரும் உண்டு.போரில் முனை சிதைந்த வேலையும் கொல்லன் செப்பஞ்செய்து தருவான். அது கொல்லனது உலைக் களத்தில் கிடக்கும்.[122]

வேல் படை நெய் பூசப்பட்டுக் காவல் பொருந்திய படைக் கூடத்தில் வைக்கப்பட்டிருக்கும்.[123] பகைவனுடைய உடம்பை இடித்துச் சாய்க்கவல்ல கருவி என்ற பொருளில் உடம்பிடி[124] என்ற பெயரும் வேலுக்கு வழங்கப்பட்டது. சிறிய காம்மை உடைய கைவேல் எனப்படும்.[125] கூரிய கைவேல் குந்தம் எனனப்படும்.[126] பூந்தலைக் குந்தம் குத்தி என முல்லைப்பாட்டுக் கூறும்[127] வேல் இலைப்போல் வடிவமைக்கப்படுவதால் அதன் அடிப்பாகம் காம்பு என அழைக்கப்படும். பூண் செறிக்கப்பட்ட கெட்டியான மூங்கில் குழாய்கள் வேலின் காம்பு இறுகச் செறிக்கப்படுவதும் உண்டு[128] என அகநானூறு கூறுகின்றது. வாளி,[129]கணை,[130] பகழி,[131] கோல்,[132] அம்பு[133] எனச் சங்க இலக்கியங்களில் அம்பைக் குறித்துச் சொற்கள் வழங்குகின்றன.

சிலை என்ற சொல்லுக்கு வில்லென்றும் பொருள் உண்டு.[134] வலிமை வாய்ந்த வில் சிலை எனப்படும்.[135] அம்பை கடுவிசையோடு செலுத்துதற்கு உரிய வில்லே சிலை எனப்படுகிறது.[136] சிலையின் வடிவம் இறா அல்லது இறவு எனப்படும். மீனின் வடிவாலான வடிவத்தைப் போன்றது. வில்லினுடைய இரண்டு முனைகளும் சிறுத்துச் சிறிது வெளிப்புறமாக வளைந்தும் இருக்கும். நடுப்பாகம் சிறிது அகன்றும், பருத்தும், இறவின் செதில்களைப் போல வலுவான நரம்பால் இறுக்கிக் கட்டிய பல கட்டுகளை உடையதாகவும் இருக்கும். முடங்கு இறவு பூட்டுற்றவில் ஏய்க்கும் எனத் திணைமாலை கூறுகிறது.[137] கொடுமையை உண்டாக்க வல்ல வில் என்றும் பொருள்படும் கொடுவில் என்றும் கூறப்படும்.[138] போர்க் கருவியாகப் பயன்படும் வில் படையிலட மூன்று உறுப்புகள் உண்டு.

வில், நாண், அம்பு ஆகிய மூன்றும் பயன்படும் போதே அந்த வில் படைக் கருவியாகிறது. வலிமையும் வளையும் தன்மையும் உடைய மூங்கில் பிளாச்சுகளால் ஆன வில் அமைவில்[139] எனப்படும் வலுவான வளைந்த மரக்கிளையின் கொம்பால் ஆகிய வில்லுக்குக் கொடுமரம் என்று பெயர். வில்லுக்கு சாபம்[140] என்ற பெயரும் உண்டு. வில்லில் நாண் பூட்டப்பட்டிருக்கும் நிலையில் உள்ள வில் குலைவில் எனப்படும். நாண் பூட்டப்பெற்று வில்லில் அம்பு வைத்துத் தொடுக்கப்படும் இடம் 'உடு' என அழைக்கப்படும்.[141] நாணில் அம்பின் அடிப்பாகம் பொருந்துமிடம் உடு எனப்படும். எனவே உடு என்பது அம்பின் சிறகை உடைய அடிப்பகுதியின் பெயராக வழங்குகின்றன. நாணை வேகமாக இழுத்து அம்பை எய்யும் அளவிற்கு அம்பு கடுவிசையுடன் செல்லும்.[142]

அம்பின் நுனிப் பகுதியின் அடிப்பாகத்தைக் குழாய் போல் அமைத்து அதை நீண்ட நடுக்கோலில் செறித்து அதை உறுதியாகப் பிணித்திருக்கும் அம்பும் உண்டு. அம்புகளை ஒருசேர வைத்திருக்கும் புட்டிலுக்குத் தூணி என்று பெயர். அதை அம்புப் புட்டியல் என்றும் அம்புஅறாத்தூணி என்றும் கூறுவது உண்டு.[143] மதிலரண்காக்கும் போருக்கும் விற்படை மிகவும் பயன்பட்டது.[144] மேலும் சில தாக்கும் கருவிகளை இலக்கியம் எடுத்துக்காட்டும். கணிக்கி என்பது 'மழு' என்ற ஆயுதம் என்பதையும் அது குந்தாலி என்றும் வழங்கப்பட்டது, என்பதையும்[145] புறநானூறு கூறுகின்றது. பதிற்றுப்பத்து தண்டுடைவலத்தர் என்னும் தொடரில் ;தண்டு' என்ற படைக்கருவியைச் சுட்டுகிறது.[146] வச்சிரப்படை இந்திரனுக்குரியது எனவும் கலப்பை என்று பொருள்படும் 'நாஞ்சில்' பலராமனுக்குரிய படை எனவும் புறநானூறு கூறுகின்றது.[147] திகிரி அல்லது ஆழி என்பது அரணழிக்கும் ஆற்றலுடையது எனக் குறிக்கின்றது.[148] இவையன்றித் தற்காப்புக்காக உடலில் அணியப்படும் கவசம்.[149] உலர் மரத்தால் செய்யப்பட்ட கேடமாகிய

பலகை[150] இருள் போன்ற கரிய நிறமுடைய தோல்[151] ஆகியவற்றை அக்காலத்தில் வீரர் பயன்படுத்தினர். மிக நுட்பமாக இத்தகு கருவிகளை அமைத்துப் போராற்றல் வாய்ந்தவராக அக்காலத் தமிழர் விளங்கினர் என்பதை சங்க இலக்கியம் எடுத்துக்காட்டும்.

சான்றெண் விளக்கம்

1. நெடுநல்வாடை.73-[100]
2. சிலப்பதிகாரம் 14:97-98
3. பெரும்பாணாற்.[405]
4. புறநா.378:6
5. சிலப்பதிகாரம். 14:97-98
6. நற்.71:6-8
7. மேலது,268:1
8. பதிற்றுப்பத்து.61:3,அகநா:98:1
9. புறநா.251:1,நற்.182:2.
10. முல்லைப்பாட்டு.86
11. மதுரைக்காஞ்சி.667
12. மலைபடுகடாம்.484, புறநா.32:5.
13. பரிபாடல்.6:4
14. கலித்தொகை.35:17
15. நெடுநல்வாடை.29-30.
16. நெடுநல்வாடை.49
17. புறநா.95:3
18. மலைபடுகடாம்.19
19. பதிற்றுப்பத்து.30:30-31
20. மேலது,90:22
21. திருக்குறள்.742
22. அகநா.342:5
23. மதுரைக்காஞ்சி.485
24. பட்டினப்பாலை.286-291

25. புறநா.36:10
26. புறநா.341:5
27. பதிற்றுப்பத்து.20:19,13:11.
28. பதிற்றுப்பத்து.58: 6
29. மதுரைக்காஞ்சி,352.
30. நெடுநல்வாடை.112
31. தொல்காப்பியம்,பொருளதிகாரம்,புறத்திணையியல்,சூ.36.
32. தொல்காப்பியம், பொருளதிகாரம்,புறத்திணையியல் 11:3
33. பதிற்றுப்பத்து.68:16
34. பெரும்பாணாற்றுப்படை.405.
35. நெடுநல்வாடை,107.பட்டினப்பாலை,268.
36. மலைபடுகடாம்.478.
37. குறுந்தொகை.345:7,அகநா.310:17
38. பதிற்றுப்பத்து,இரண்டாம் பத்து (பதிகம்) 5
39. புறநா.17:10
40. நற்.38:8,புறநா.116:4
41. அகநா.24:11
42. பதிற்றுப்பத்து.22:21-22
43. பட்டினப்பாலை.287:88
44. பதிற்றுப்பத்து.22:21-22
45. மேலது,20:17-20
46. மதுரைக்காஞ்சி.64-69
47. பதிற்றுப்பத்து.53:1
48. சிலப்பதிகாரம்.15:207-219
49. மேலது,15:208
50. மேலது,15:208
51. மேலது,15:209
52. மேலது,15:209
53. மேலது,15:210

54. மேலது,15:211
55. மேலது,15:211
56. புறநா.21:5
57. பெரும்பாணாற்றுப்படை.126
58. மதுரைக்காஞ்சி.64
59. மேலது,65,66.
60. புறநா..9:5
61. மேலது,14:5-6
62. மதுரைக்காஞ்சி.351
63. மேலது,730.
64. மலைபடுகடாம்.71
65. மேலது,90,91
66. புறநா,37:7
67. சிறுபாணாற்றுப்படை.180
68. மேலது,180
69. புறநா.293:3
70. அகநா.101:2
71. பட்டினப்பாலை.29:30
72. அகநானூறு.330:15,16.
73. மேலது.6:8
74. பதிற்றுப்பத்து.52:3-4
75. புறநா.400:20-22,26:1-2,30:13
76. மதுரைக்காஞ்சி.77-83
77. பெரும்பாணாற்.348-351
78. அ.இராகவன்,தமிழ் நாட்டுக் கப்பற்கலை,ப.122
79. அகநா.255:5-6
80. பெரும்பாணாற்.146-150
81. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை,புறநானூறு மூலமும் உரையும், (பாடல். 66 -இன்)ப.169.
82. அகநா.255:1-6

83. பதிற்றுப்பத்து,பதிகம்.5:21-22,சிலப்பதிகாரம்,30:12,பதிற்றுப்பத்து.48:3-4,41:27,46:11-13,5:12-14
84. அகநா.212:15-20 புறநா.126:14-16
85. புறநா.66:1-2
86. மேலது,18:1-4
87. மேலது,9:10
88. கா.அப்பாதுரை பிள்ளை,தமிழக வரலாறு,முன்னுரை,ப.26
89. தங்கங் கந்தசாமி,போரியல்-அன்றும் இன்றும்,ப.90.
90. அ.இராகவன்,தமிழ் நாட்டுக் கப்பற்கலை,ப.186.
91. மேலது,ப.103-104
92. அகநா.255:1
93. தொல்காப்பியம் பொருளதிகாரம்,புறத்திணையியல்,நூற்.7
94. மதுரைக்காஞ்சி,725:6
95. புறநா.169:4-5
96. பொருநராற்றுப்படை.240-241
97. மா.இராசமாணிக்கம்,பத்துப்பாட்டு ஆராய்ச்சி,ப.251.
98. சேந்தன் திவாகரம்,ப.140
99. தங்கங் கந்தசாமி,போரியல்-அன்றும் இன்றும்,ப.149.
100. குறுந்.140:1
101. பெரும்பாணாற்றுப்படை.73
102. புறநா.392:5
103. அகநா.78:20
104. கலித்தொகை.98:3
105. பெரும்பாணாற்றுப்படை.71
106. முல்லைப்பாட்டு.46
107. சிறுபாணாற்றுப்படை121
108. பெரும்பாணாற்றுப்படை.471
109. நற்றிணை.195:6
110. மதுரைக்காஞ்சி.455

111. பதிற்றுப்பத்து,கடவுள்வாழ்த்து,11
112. நற்றிணை, கடவுள்வாழ்த்து,7
113. புறநானூறு.99:12-14
114. மதுரைக்காஞ்சி.739,நெடுநல்வாடை.176,மலைபடுகடாம்,129,புறநா.354:2
115. பெரும்பாணாற்றுப்படை.76
116. புறநா.312:3,திருமுருகாற்றுப்படை.46,சிறுபாணாற்றுப்படை.94:102
117. மலைபடுகடாம்,116-119
118. நற்றிணை.366:1-8
119. திருமுருகாற்றுப்படை.45
120. பெரும்பாணாற்றுப்படை.87
121. குறிஞ்சிப்பாட்டு.52
122. புறநா.95:3-5
123. மேலது.95:1-3
124. பெரும்பாணாற்றுப்படை.76
125. திருக்குறள்.774
126. சேந்தன் திவாகரம்,ப.138
127. முல்லைப்பாட்டு.41
128. அகநா.119:13
129. நற்.164:6,அகநா.175:3
130. பெரும்பாணாற்றுப்படை.70
131. அகநா.159:5
132. புறநா.43:10-11,குறிஞ்சிப்பாட்டு.169-170
133. அகநா.9:1-3
134. குறுந்.385:2
135. கலித்.15:1
136. குறுந்.272:5
137. திணைமாலை நூற்றைம்பது.130
138. மலைபடுகடாம்.421
139. அகநா.182:3

140. பதிற்றுப்பத்து.24:12-14
141. குறிஞ்சிப்பாட்டு.170
142. புறநா.369:8-9
143. அகநா.282:2
144. திருமுருகாற்றுப்படை.266
145. மதுரைக்காஞ்சி.67
146. புறநா.42:22
147. பதிற்றுப்பத்து.41:12
148. புறநா.241:3,56:4
149. மேலது,99:14
150. மேலது,13:2
151. மேலது,4:5,17:34

மண்ணியல்

மெ. செயங்கொண்டான், பிஎஸ்ஸி (மண்ணியல்), பி.லிட், எம்.ஏ. பி.எட்.

ஆசிரியர், வித்யாகிரி மேல்நிலைப்பள்ளி, சாக்கோட்டை

மண்ணியல் என்பது மண்ணின் வகைபற்றிப் பழக்கும் அறிவியல் மட்டும் அன்று. மண்ணியல் என்பதை ஆங்கிலத்தில் என்பர். புவி பற்றிய அறிவியல். அறிவியல் என்னும் மரத்தின் கிளை மண்ணியல். எல்லா அறிவியல் துறையும் நிரூபித்தல் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டதாய் இருக்கும். ஆனால் மண்ணியல் மட்டும்தான் 'இப்படி இருக்கலாம்' எனக் கருத்துத் தெரிவிக்கும். மண், கல், பாறை, அதன் வகைகள், நீரியல் வானம், விண்மீன், சூரியக்குடும்பம், கோள்கள், கற்படி உருவங்கள், படிகங்கள் பற்றிப்படிப்பதும், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பு தோன்றிய உயிரினங்கள், கடல்கோள் பற்றிப்படிப்பதும் மண்ணியல் ஆகும். இயற்பியல், வேதியியல் துறைகள் அறிவு, புவி அமைப்பியல் பற்றிய கருத்துகளும் இடம்பெறும் இது குறித்து 'செம்மொழி இலக்கியங்களில்' சொல்லப்பட்டிருக்கும் கருத்துகளை ஆய்வு நோக்கில் சுருங்கக் காணலாம்.

தொல்காப்பியர் விண்வெளி விஞ்ஞானி

தொல்காப்பியம் இடைச் சங்க காலத்தில் எழுந்த முதல் இலக்கண, இலக்கிய நூலை யாத்த தொல்காப்பியர் கி.மு 711 இவ்வுலகத்தின் ஐம்பெரும் பூதங்களான சேர்க்கைத் தோற்றம் பற்றியும் , உலகிலுள்ள ஆறறிவு உயிர்களின் வளர்ச்சி பற்றியும் ஆய்ந்து, தொகுத்து மரபியலில் சூத்திரம் அமைத்த சிறப்பினையும் காண்கின்றோம். மரபியலென்பது முன்னோர் சொல் வழக்கு, அன்றுதொட்டு வழிவழியாக வரும் பழக்க வழக்கங்கள் ஆகியவை பற்றிக் கூறப்படுவதாகும்.

இவ்வுலகம் ஐம்பெரும் பூதங்களான நிலம், ஆகாயம், காற்று, தீ, நீர் என்பன கலந்தொரு மயக்கமான சூழ்நிலையில் இவ்வுலகம் தோன்றிற்று என்பது ஓர் அறிவியல் உண்மையாகும். இவ்வுண்மையைத் தொல்காப்பியர் இன்றைக்கு இரண்டாயிரத்து எழுநூறு 2700 ஆண்டுகளுக்கு முன்னால் பின்வரும் பாடல் வரிகளில் நிறுவியுள்ளமை போற்றற்குரியதாகும்.

''நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும்

கலந்த மயக்கம் உலகம் ஆதலின்

இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்

திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்''

தொல்.பொருள் . மரபியல்-635

உலகமானது நிலம், தீ, நீர் வளி, விசும்பு ஆகிய ஐம்பெரும் பூதங்கலந்த மயக்கமாதலான், மேற்கூறப்பட்ட பொருள்களைத் திணையும் காலும் வழுவுதல் இல்லாமல், திரிவுபடாத சொல்லோடு தழுவுதல் வேண்டும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இவ்வண்ணம் தொல்காப்பியர் ஒரு விண்வெளி விஞ்ஞானியாய் நிலவெளி, விண்வெளி விஞ்ஞானம் பேசுவதையும் காண்கின்றோம்.

ஐம்பூதமே உலகம்

கடைச் சங்க காலத்தில் எழுந்த எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் ஐம்பெரும் பூதங்களான 1. நிலணையும் , 2. வானையும், 3. காற்றையும், 4. நெருப்பையும், 5. நீரையும் உலகம் கொண்டுள்ளது என்று சங்ககாலப்புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் ஓர் அறிவியற் பாடலைப் பாடியுள்ளார்.

''மண் திணிந்த நிலனும்,

நிலம் ஏந்திய விசும்பும்,

விசும்பு தைவரு வளியும்,

தி முரணிய நீரும், என்றாங்கு

ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப். . . '' புறம்-2:1-6

இதில் மண் செறிந்த நிலமும், நிலத்திலிருந்து ஆகாயம் , ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும் உண்டாயின என்ற அறிவியல் பேசப்படுவதையும் காண்கின்றோம். சங்க காலப் புலவரான உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்பவர் கீழ்க்காணும் புறநானூற்றுப் பாடலில் 'செஞ்ஞாயிற்றின் வீதியும், அஞ்ஞாயிற்றின் இயக்கமும். இயக்கத்தால் சூழப்படும் மண்டிலமும், காற்றுச் செல்லும் திசையும், ஆதாரமின்றி நிற்கும் வானமும், என்றிவற்றைத் தாமே அவ்விடஞ்சென்று அளந்து அறிந்தவரை போல அவை இப்படிப்பட்டவை என உரைக்கும் அறிவுடையோரும் உளர்' என்று விண்ணியல் விஞ்ஞானம் விரிவாய்ப் பேசப்படும் இலக்கிய விந்தையைக் காண்கின்றோம்.

'செஞ்ஞா யிற்றுச் செலவும்,

அஞ்ஞா யிற்றுப் பரிப்பும்,

பரிப்புச் சூழ்ந்த மண் டிலமும்,
வளி திரிதரு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்றிவை
சென்றளந்து அறிந்தார் போல, என்றும்
இனைத்து என்போரும் உளரே. . . ‘ புறம்-30:1-7

நிலம் பற்றிய செய்திகள்

மனிதர்கள் வாழும் பூமியில் மூன்று பங்கு நீரும் ஒரு பங்கு நிலமும் இருக்கின்றது. சூழ்ந்திருக்கும் நீருக்கிடையே தான் நாடுகள் இருக்கின்றன. அந்நாடுகள் மண்ணால் ஆனவை. அம்மண்ணைத் தமிழர்கள் பூமித்தாய் என்றும் நிலமடந்தை என்றும் கூறுகின்றனர். இதனை,

‘‘நீராடுங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்’’

என்ற தமிழ்த்தாய் வாழ்த்து அடியின் வாயிலாக நாம் அறியலாம். தமிழில் முதற்பொருள் எனப்படுவது நிலமும் பொழுதுமாகும். நிலம் என்பது தோன்றுவதற்கு இடமாகிய ஐம்பெரும் பூதம் என்று தொல்காப்பியம் உரை கூறுகின்றது.

ஐவகை நிலம்: நிலப்பகுதியை ஐந்து வகையாகப் பிரிப்பர். அவை,

1. மலையும் மலைசார்ந்த நிலப்பகுதி –குறிஞ்சி
2. காடும் காடுசார்ந்த நிலப்பகுதி- முல்லை
3. வயலும் வயல்சார்ந்த நிலப்பகுதி-மருதம்
4. கடலும் கடல் சார்ந்த நிலப்பகுதி- நெய்தல்
5. சுரமும் சுரம் சார்ந்த நிலப்பகுதி-பாலை

என்று அழைக்கப்படுகின்றன இதனை,

‘‘பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்’’ குறுந்தொகை-91

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாம்.

பாலை

தொல்காப்பியர் பாலைக்கு நிலம் கூறாது, வேனிற் காலமும் நண்பகலும் கூறியுள்ளார். முல்லையும் குறிஞ்சியும் தம்முள் திரிந்ததே பாலை என்று சொல்லப்படுகிறது. இதனை,

''முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்த

நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப

பாலை என்பதோர் படிவம் கொள்ளும்'' சிலம்பு காடுகாண்:64-66

என்ற சிலப்பதிகார அடிகள் உறுதி செய்கின்றன.

மண்வகைகள்

விவசாயம் செய்யவும், குடியிருப்புகள் அமைக்கவும், பண்பாட்டு அரங்கங்கள் அமைக்கவும் மண்ணியல் தெரிந்திருக்க வேண்டும். கல்லிலே கலைவண்ணம் கண்ட தமிழன் மண்ணிலும் பலவண்ணம் கண்டிருக்கின்றான். மண்ணை மூன்று வகையாகப் பிரித்திருக்கின்றான்.

1. எளிதில் தரையில் வெட்டி எடுக்க இயலாத கடினமண்
2. சிறுமணல் கலந்தபடி எளிதில் வெட்டியெடுக்கும் வகையான மண்
3. மேற்சொன்ன இரண்டுக்கும் நடுவே நடுத்தரமாக உள்ள மண்.

கட்டிடம் கட்டுவது தொடர்பான மண்ணியல் அறிவு

இந்த மண்ணியல் நுணுக்கத்தை ஒத்ததாக அறிவு சிலப்பதிகாரத்தில் மாதவியின் நடன அரங்கேற்ற அரங்கு அமைக்க வெகுநுணுக்கமாக நிலப்பகுதியைத் தெரிவு செய்திருக்கின்ற செய்தியை

''எண்ணிய நூலோர் இயல்பினின் வழாஅது

மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு

புண்ணியநெடுவரைப் போகிய நெடுங்கழைக்

கண்ணிடை ஒருசாண் வளர்ந்து கொண்டு''

அரங்கேற்: 95-98

என்ற அடிகளின் வாயிலாக அறியலாம். எந்த நிலப்பகுதியில் வெட்டியெடுத்த மண்ணைத் திரும்ப அதே நிலப்பகுதியில் கொட்டினால் அது சரியாக அமைகிறதோ

'' மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே''

தொல். பொருள், நூற்-6

குறிஞ்சி

மைவரை மலை உலகிற்கு குறிஞ்சிப்பூ சிறந்தது, எனவே, அப்பகுதி குறிஞ்சி நிலம் எனப்பட்டது. இதனை,

''கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே''- குறுந்தொகை,3:3-4

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாம்.

முல்லை

காடும் காடுசார்ந்த உலகிற்கு முல்லைப்பூ சிறந்தது. எனவே அப்பகுதி முல்லை நிலம் எனப்பட்டது. இதனை,

''நெல்லொடு

நாழி கொண்டநறுவீ முல்லை

அரும்பவிழ் அலா தூஉய்'' முல்லைப்பாட்டு-10:13

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாம்.

மருதம்

தீம்புனல் வயல் உலகிற்கு மருது சிறந்தமையால் அப்பகுதி மருத நிலம் எனப்பட்டது. இதனை,

''இறாஅல் அருந்திய சிறுசிரல் மருதின்

தாழ்சினை உறங்குத் தண்துறை ஊர'' - அகம்.286

என்ற அடிகளின் வாயிலாக அறியலாம்.

நெய்தல்

பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்தமையால் அப்பகுதி நெய்தல் நிலம் எனப்பட்டது.

விளை நிலங்களை சீர்திருத்துதல்

பழந்தமிழர் விளைநிலங்களை சீர்திருத்தி பயிர்செய்தனர். சீர்திருத்தாத நிலம், சீர்திருத்தாத நாடு, சீர்திருத்தாத சமூகம் எதுவும் முன்னேற்றம் அடைவதில்லை. எனவே, சீரான மண்ணும் மண்ணில் சீர்திருத்தமும் தேவையானது ஆகும். இதனை,

''பூமி திருத்தியுனர்'' ஆத்திசூடி

என்ற ஔவையார் பாடலின் வழி அறியமுடிகிறது. இன்றைக்கும் கிராமங்களில் விவசாயி மண்ணைப் பார்த்தும், தொட்டும் அதன் தரம், அதில் என்ன விளையும் என்று சொல்கின்ற மண்ணியல் அறிவினைக் காணலாம்.

தமிழர் , தம் வாழிடங்களை நிலத்தின் தன்மைக்கேற்பப் பாகுபடுத்தியுள்ளனர். அவையே ஐவகை நிலங்கள் மேலும் செம்மண் நிலம். களர் நிலம், உவர் நிலம் எனவும் பகுத்துள்ளனர். நிறத்தின் அடிப்படையில் செம்மண்ண நிலம் எனவும், தன்மையின் அடிப்படையில் களர் நிலம் எனவும், சுவையின் அடிப்படையில் உவர் நிலம் எனவும், நலத்தைத் தமிழர் வகைப்படுத்தினர். தமிழர் , செம்மண் நிலத்தை அதன் பயன் கருதிப் போற்றினர். இதனைச் 'செம்புலப்பெயல் நீர்போல' என்னும் குறுந்தொகை வரி வணர்த்தும். உவர் நிலம். மிகுந்த நீரைப் பெற்றிருந்தும் பயன்தருவதில்லை. இதனை, 'அகல் வயல் பொழிந்தும் உறுமிடத்துதவா உவர்நிலம்' என்னும் புறநானூற்று வரிகள் புலப்படுத்துகின்றன. எதற்கும் பயன்படாத நிலம் களர் நிலம் . இதனைப் 'பயவாக் களரனையர் கல்லாதவர்' என்பார் திருவள்ளுவர். ஐவகை நிலங்களுக்கும் உரிய உணவு , விலங்கு, பறவை போன்றவற்றையும் தமிழர் பகுத்தும் வகுத்தும் வைத்துள்ளனர்.

எண்ணியல்

பேரா எஸ். இராமமூர்த்தி, உதவிப் பேராசிரியர், அழகப்பா மாலை நேரக்கல்லூரி, தொண்டி

முன்னுரை:

மாந்தர் குல வளர்ச்சிக்கு மொழி என்பது இன்றியமையாததாகும் என்பதை அனைவரும் அறிவோம். மொழி என்பது உடல் அசைவுகளில் செய்கையாகத் தொடங்கிஇ நாவில் ஒலியாக மாற்றுப்பெற்று பேச்சாகி இன்று நமது கைகளில் எழுத்து வடிவமாகி உலக அறிவியல் வளர்ச்சியை தன்னகத்தே கொண்டுஇ கணினியில் நுழைந்து எண்களாகவும்இ எழுத்துக்களாகவும்இ குறியீடுகளாகவும்இ மாறி இப்பேரண்டத்தையே இயக்கும் மாபெரும் ஆற்றலாகித் திகழ்ந்து வருவதை யாரும் மறுப்பதற்கில்லை.அந்த வகையில் எண்ணியல் அறிவின் அடிப்படை கூறால் கணித வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.எண்கள் மற்றும் எண்ணியில் சார்ந்த கருத்துக்கள்இ கூட்டல்இ கழித்தல்இ வகுத்தல் முதலான கணிதத்தின் அடிப்படகளையும் பதிணென்கீழ்கணக்கு நூல்களில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கீழ்க்கணக்கு நூல்கள்

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால் வருகங் கோவை பழமொழி மாமூலம்
கைந்நிலை காஞ்சியோ மேலாதியென்பவே
மெய்நிலைய வாங்கீட் கணக்கு "(பழம்பாடல்)

என்ற இப்பாடலில் கீழ்க்கணக்கு பதினெட்டு நூல்கள் எவை எவை என்று கூறப்பட்டுள்ளது.

எண் -எண்ணியல்:

எண்ணைக் கண்ணென்றும் இலக்கணமென்றுமஇ ஏலாதியும்இஎண் அறிவுடமை என்றும் நாட்கணக்கு என்றுமஇ; எண்ணம் வெற்றியென்றும்இ எண்ணன் அறிவாராய்ச்சி உடையவன் என்றும்இ எண்ணம் ஆலோசிக்குமிடமென்றும்இ எண்ணியர் பகைவரென்றும் எண்சோதிட நூல் என்றும்; அவை தெரிவிக்கின்றன.இருப்பினும் எண் தன் முதன்மைப் பொருளான எண்ணிக;க என்பதை என்றும் தலைமேல் போற்றி வந்திருப்பதை இவ்விலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. என்று எண் குறித்து கீழ்க்கணக்கு நூல்கள் கூறும் செய்தியாகக் குறிப்பிடுகிறார் மெய்.மு.தமிழப்பன்.

"எண்ணின் பெருமையை

எண்ணில்லாதவர் கண் இல்லாதவர்”

“எழுத்தில்லாதவர் கழுத்தி;லாதவர”; என்று பழமொழி எடுத்துரைக்கிறது.வாய்மொழி இலக்கியம் என்று தோன்றியதோ அன்றிலிருந்து பதிணென்கீழ்க்கணக்கு நூல்களிலும் அதன் முக்கியத்துவத்தை உணரமுடிகிறது.”

(பழனி நா.தமிழ்ப்பண்பாட்டில் எண்களின் தாக்கம் பா4)

புதிணைட்டு;கீழ்க்கணக்கு நூல்களில் பதினைந்து நூல்கள் எண்ணிக்கை அடிப்படையில் பெயர் பெற்றிருப்பது தமிழர்கள் எண்களுக்கும் எண்ணியலுக்கும் கொடுத்த இன்றியமையாமையை
வெளிப்படுத்துகிறது.

எண்கள்

ஒரு எண்ணிக்கையை குறிப்பிடக் கையாண்ட வடிவத்தை எண் என்கிறோம்.இத்தகைய எண்முறை பழங்காலத்தில் பலவித குறியீட்டு முறைகளால் உணர்த்தப்பட்டது.இம்முறையினை

ஆதியில் மக்கள் படங்கள் மூலம் எண்களை எழுதிக்காட்டினார்கள்.அமெரிக்க இந்தியர்கள் அன்மைக்காலம் வரை சித்திரங்கள் வரைந்து எண்களைக் குறிப்பட்டு வந்தார்கள்.
எனக் காந்தி தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.மேலும்

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி

“எண் என்பது எத்தனை உள்ளன என்பதை கணக்கிட்டுச் சொல்வதற்கு உதவும் கணிதக்குறியீடு “ விளக்கம் தருகிறது வாழ்வியற் களஞ்சியம்
(வாழ்வியற்களஞ்சியம் பா.154)

“எண் என்பது தொடர்ந்து நீண்டு செல்லும் ஒரு கருத்து.” என்று பொருள் தருகிறது.

(வுhந நுnஉலஉடழிநனயை pசடையைnஉயை p.டவைந)

எண் வகைகள்:

எண் கணிதத்தில் அடிப்படைக்கூறு எண்ணுவதற்கும் அளவீடுகளை ஒப்பிடுவதற்கும் எண்கள் பயன்படுத்தப்படுகின்றன.எண்கள் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.1இ2இ3இ4இ5.... என்பவை இயல் எண்களாகும்.(ஊழரவெiபெ ரெஅடிநசள)இஇயல் எண்களும் பூஜ்ஜியமும் சேர்ந்துமொத்த எண்களாகும்(றூழடந ரேஅடிநசள).1இ2இ3இ4இ5....என்பவற்றை நேர்ம எண்கள் குறிப்பிடலாம்.மொத்த எண்கள்(இயல் எண்களான நேர்ம எண்கள் பூஜ்ஜியம்)எதிர்ம எண்கள் (-1இ-2இ-3

போன்றவை)ஆகிய இரு பிரிவும் சேர்ந்து முழு எண்களால் கிடைக்கும் அனைத்து ஈவுகளும் விகிதமுறு எண்கள் விகிதமுறா எண்களும் சேர்ந்து மெய் எண்கள் என்றும் அழைக்கபடுகின்றன.

“இயல் எண்களும் விகிதமுறு எண்களும் எண்ணுவதற்கும் கணக்கிடுவதற்கும் அளப்பதற்கும் பயன்படுகின்றன.பிற எண்களோ சமன்பாடுகளைத் தீரக்கும் வகையில் தோன்றியவை “என்று பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் எண் வகைகளும் விளக்கம் தருகின்றன.

கணக்கும் கணிதமும்:

கணக்கும் கணிதமும் ஒரே பொருளில் கைளாப்பட்டதாகக் கருதப்படுகிறது.இதனை

“கண்ணுங்கால் கண்ணும் கணத்மே யாழினோடு
எண்ணுங்கால் சார்ந்தே இலைநறுக்கம் எண்ணுதல்
இட்டஇவ் ஐந்தும் அறிவான இடையாய
சிட்டமென்(று) என்னப்படும்” (சிறுபஞ்ச 87)

இவற்றுள் எண்ணிலான் செய்யுங் கணக்கு சிட்டன் என்பதற்கும் கணிதமறிந்தவர் என்று பொருள்;.

எண்ணிலான் செய்யுங் கணக்கு என்ற இடத்தும் கணிதமறிந்தவர் இடையாகிய சிட்டன் என்ற இடத்தும் இவ்விரு சொல்லும் ஒரே பொருண்மையில் உள்ளன என்பார் மெய்.மு.தமிழப்பன்

கீழ்க்கணக்கு நூல்களுள் கணக்கும் கணிதமும் ஒன்றே என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளதை இதன் முலம் அறிகின்றோம்.

“உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா
கண்ணிலொருவன் வனப்பின்னா வாங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு”(இன்னா 16)

அளவைகள்:

அளவை முறைகளாக கீழ்க்கணக்கு நூல்களும் எடுத்துக் கூறியுள்ளன.

“முந்திரிமேற் காணி மிருவ தேற் கீர்தன்னை” (நாலடி 343)

என்று முந்திரிஇ காணி ஆகிய அளவுகளை நாலடியார் குறிக்கிறது.இவை சிறிய எண் அளவையாகும்.

“வினை விளையச் செல்வம் விளைவதுபோல் நீடாப்
பனைவிளைவு நாமெண்ணப் பாத்தித் -தினைவிளைய்
மையார் தடங்கண் மயிலன்னாய் தீத்தண்டு

கையார் பிரிவித்தல் காண்" (திணை .மா.நூ.5)

என்று பேரளவினைக் குறிக்கப் பனை என்றும் அதற்கு எதிரான சிற்றளவைக் குறிக்க திணை என்றும் அறியமுடிகிறது.

திருக்குறளில் எண்கள்:

ஒன்று

எண்ணியலின் வரிசை முறையில் தொடக்கத்தை ஒன்று என்றும் எண் குறிப்பிடுகிறது.ஒன்று என்பது முதன்மையையும் தனித்து நிற்கக் கூடியதையும் சுட்டுகிறது

இரண்டு

இரண்டு என்ற எண் "தராசு போன்றது நடுநிலமை வாய்ந்தது.

நமது வினைகளைக் குறிப்பது".

இரண்டு இரண்டாக வள்ளுவர் தம் கருத்துக்களை கூறிச்செல்கிறார்.

தானம் தவம்இரண்டும் தங்கா வயன்உலகம்

வானம் வழங்காது எனின்(குறள் 18)

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு(குறள் 392)

மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்

இனம் தூய்மை தூவாவரும்(குறள் 454)

மூன்று

சமய நெறியில் மூன்றாம் எண் முதன்மை பெறுகிறது."சமயம்; சார்ந்தவற்றை மும்மூன்றாகவே காணும் போக்கு ஆரியர்களால் நிலை கொண்டதாக" மேனியர் வில்லியம்ஸ் கூறுகிறார்.

தொழில்கள் முன்று ஆக்கல்இகாத்தல்இஅழித்தல்.இத்தொழில்களைச் செய்யும் கடவுள்கள் உண்டு.உலகங்கள் முன்று மண்ணுலகம்இ விண்ணுலகம்இ பாதாளஉலகம் என்பன.எந்த தொழிலுக்கும் தொடக்கம் இநடு இமுடிவு எனக் கருதுவதும் உண்டு.

கூற்றமோ கண்ணோ மணையோ மடவரல்

நோக்கமில் மூன்றும் உடைத்து (குறள் 1085)

ஒழுக்கமும் வாய்மையும் நானும் இம்மூன்றும்

இழுக்கார் குடிப் பிறந்தார்.

மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்

வழிமுதலா எண்யிய மூன்று (குறள் 941)

மூன்று என்ற எண் இறையியல் இலக்கியம் மனித வாழ்வியல் உலகப்பொருட்கள் நான்கு

திசைகள் நான்குஇ பெண்களுக்குரிய குணங்கள் நான்குஇ என பொருட்பாகுபாடுகள் பல உள்ளன.

வள்ளுவரும்

அழுக்காறு அவா வெகுளி இன்னாசொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்(குறள் 35)

பகைபாவம் அச்சம் பழயென நான்கும
இகவாவாம் இல்இறப்பான் கண்(குறல் 146)

ஐந்து

மூன்று என்ற எண்ணிற்கு அடுத்து ஐந்து என்ற எண் இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றது.ஐம்பூதங்கள் (நிலம்இ நீர்இ காற்றுஇ தீஇ ஆகாயம்) ஐம்பொறிகள் (கண்இ காது இமூக்குஇ செவிஇ மெய்)மற்றும் பெண்களின் கூந்தலை(குழலஇ; அளகம்இ கொண்டைஇபனிச்சைஇ துஞ்சை) என எண் குறித்த கருத்துகள் இலக்கியத்தில் பெரிதும் நிறைந்துள்ளன.

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின
வகை தெரிவான் கட்டேஉலகு (குறள் 26)

ஏன்று ஐந்து உணர்வழியும் புலன்கள் குறித்தும்

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை (குறள் 43)

என்று ஐம்புலன்கள் குறித்தும் கூறியுள்ளார்.

ஆறு

ஆறு என்ற எண் ஆற்றலுடைய எண்ணாகக் கருதப்படுகிறது .அறுசுவைஇ ஆறறிவுஇ அறுவகைத் தொழில்கள் ஆறு என்ற எண் சிறப்பிடம் பெறுகிறது.

அரசனின் சிறப்பைக் கூறுமிடத்து

படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு(குறள் 381)

ஏழு

ஏழு என்ற எண் ஆதி இனக்குழு மக்களிடையே மிகுந்த செல்வாக்குடன் இருந்து வந்துள்ளது.

ஏழிசைஇ ஏழுலகம்இ ஏழு கடல்இஏழு வண்ணஙகளஇ; ஏழு மலைஇ ஏழு வள்ளல்களஇ; ஏழுநிலை மாடங்கள் இ ஏழு பிறவி போன்ற சொல்லாட்சி ஏழு என்ற எண்ணின் சிறப்பை உணரத்துவனவாக உள்ளன்

தமிழர் வாழ்விலும் வழிபாட்டிலும் ஏழு என்ற எண் மிகுந்த ஆட்சியைப் பெற்றுள்ளது.

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவருக்கு

எழுமையும் ஏமாப் புடைத்து(குறல் 398)

எட்டு

எட்டு என்பது மேலை நாட்டை பொருத்த வரையில் அமங்கல எண்ணாகவே கருதப்படுகிறது.ஆனால் தமிழகத்தில் அவ்வாரில்லை எண்பேராயம் குழு எண் திசை போன்றவற்றை எட்டு குறிக்கின்றது.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை(குறள் 9)

என்ற எட்டினை சிறப்பாகவே குறிப்பிடுவதைக் காணலாம்.

முடீவுரை:

எண் என்ற சொல்லுக்குப் பல்வேறு பொருள்பட கீழ்க்கணக்கு நூல்கள் கூறினாலும்இ எண் என்பது தன் முதன்மைப் பொருளாக எண்ணிக்கை என்பதிலிருந்து மாறுபடுவத்pல்லை என்பதையும் எண்ணியல் சார்ந்த கருத்துகள்இ கணிதத்தின் அடிப்படைகளையும் பதினெட்டு கீழ்க்கணக்கு நூல்கள் முலம் அறிந்து கொண்டோம்

தமிழ் மருத்துவம்

சித்த மருத்துவர் வி.என். பரிமளச் செல்வன், அரசு மருத்துவமனை, அருப்புக்கோட்டை

தமிழ் இலக்கியங்களில் மருத்துவக் குறிப்புகள் பல கிடைக்கின்றன. இதன் வழி தமிழர்கள் மருத்துவத்துறையிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பது தெரியவருகிறது. நூல்களுக்குப் பெயர்களே மருந்தின் பெயர்களாக வைத்துள்ளனர். திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்றன இதற்குச் சான்றுகள் ஆகும். மருந்துகளைப் பயன்படுத்தியதோடு மருத்துவ முறைகளையும் தமிழர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். இதனின்று கிளைத்ததே சித்த மருத்துவம் ஆகும். ஆயுர்வேதம், யுனானி போன்ற மருத்துவ முறைகளைப் போலத் தமிழர்கள் பயன்படுத்திய மருத்துவ முறை சித்த மருத்துவம் எனப்படுகிறது.

இயற்கையில் கிடைக்கக் கூடிய எண்ணற்ற புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வித்து முதலியவைகளைக் கொண்டும் நவரத்தின நவலோகங்களைக் கொண்டும் இரசம் கந்தகம், கற்பூரம்,தாரம் அயம், பவளம், துருசு முதலியவற்றைக்கொண்டும் திரிகடுகு,திரிசாதி, திரிபலை, அரிசி வகை, பஸ்பம், செந்தூரம், மாத்திரை, கட்டுகள், பொடிகள், குளித்தைலங்கள், கசாயங்கள் போன்றன கொண்டு செய்யப்படும் மருத்துவ முறை சித்த மருத்துவம் ஆகின்றது.

சித்த மருத்துவம் மருத்தவ முறை மட்டும் அல்ல. அது பல துறைகளுடன் தொடர்புடையதாக உள்ளது. சோதிடம், பஞ்சபட்சி சாத்திரம், சரநூல், வகார வித்தை, முனிவர்கள் இயற்றிய பாடல்கள், கன்ம காண்டம் போன்றவற்றுடன் தொடர்புடையதாக இது விளங்குகிறது.

சித்த மருத்துவத்தின் அடிப்படைகள் மூன்று ஆகும். அவை வாதம் (காற்று),பித்தம் (சூடு), சிலேத்துமம் (நீர்) என்பனவாகும். இவை மிகினும் குறையினும் நோய் செய்யும்.

உணவே மருந்து

பண்டைய தமிழர்கள் உணவே மருந்தாக உண்டனர். "உண்டி முதற்றே உணவின் பிண்டம், உணவெனப்படுவது நிலத்தொடு நீரே" (புறம் 18) என்பது இதனை மெய்ப்பிக்கும் இலக்கியச் சான்றாகும்.

சித்தமருந்து என்பது இருவகைப்படுகின்றது. அது அக மருந்து, புற மருந்து என்பனவாகும். இது அக, புற பாகுபாடுபோல அமைந்துள்ளது.

அகமருந்து

அகமருந்து என்பது உள்ளுக்குள் சாப்பிடுவது. அவை

1.சுரசம் - இஞ்சி சுரசம்

2.சாறு - கற்றாழைச்சாறு

3.குடிநீர் - ஆடாதோடைக்குடிநீர்

4.கற்கம் -கீழாநெல்லிக்கற்கம்

5.உட்களி -கடுகு உட்களி

6.அடை - துாதுவளை அடை

7.சூரணம் - அமுக்கிராச்சூரணம்

8.பிட்டு

9.வடகம் -தாளிசாதி வடகம்

10.வெண்ணெய்- குங்கிலிய வெண்ணெய்

11.மணப்பாகு - மாதுளை மணப்பாகு

12.நெய் - ஆடாதோடைநெய்

13.இரசாயனம் - இஞ்சிஇரசாயனம்

14.இளகம்- கேசரிஇளகம்

15.எண்ணெய்- பூரஎண்ணெய்

16.மாத்திரை-பாலசஞ்சீவிமாத்திரை

17.கடுகு -

18.பக்குவம்- பாவனக்கடுக்காய்

19.தேனூறல் -இஞ்சி

20.தீநீர்- ஓமம்

21.மெழுகு - கிளிஞ்சல் மெழுகு

22.குழம்பு- சாதிஜம்பீரக்குழம்பு

23.பதங்கம் -சாம்பிராணிப்பதங்கம்

24.செந்துாரம்- இரசசெந்துாரம்

25.நீறு அல்லது பற்பம்- முத்துப்பற்பம்

26.கட்டு- இரசக்கட்டு

27.உருக்கு -

28.களங்கு

29.சுண்ணம்- வெடியுப்பச்சுண்ணம்

30.கற்பம்

31.சத்து- கடுக்காய் சத்து

32.குருகுளிகை- இரசமணி

என்பனவாகும்.

புறமருந்து என்பன பின்வரும் தன்மையன.

1.கட்டு - இலைகள் அல்லது பட்டைகளை நைய இடித்தோ அரைத்தோ வதக்கியோ புளித்தநீர் முதலியவற்றில் வேகவைத்தோ கட்டுதல்

2.பற்று- சரக்குகளை நீர்மப்பொருள் விட்டு அரைத்து சுடவைத்தோ சுடவைக்காமலோ நோயுள்ள இடங்களில் அப்புதல்

3.ஒற்றடம்-சரக்குகளை சூடுபடுத்தி துணியில் முடிந்து நோயுள்ள இடங்களில் ஒற்றுதல்

4.பூச்சு-நீர்மப்பொருட்கள் மற்றும் பசை குழம்பு நிலையில் உள்ளவற்றை நோயுள்ள இடங்களில் பூசுதல்

5.வேது- சரக்குகளை எடுத்து கொதிக்க வைத்து அதனின்று எழும் ஆவியை நவதுவாரங்களில் ஏதாவது ஒன்றின் வழியாக இழுத்தல்

6.பொட்டணம்- சரக்குகளை துணியில் முடிந்து சுடவைத்த நெய்ப்புப் பொருட்களில் நனைத்து நோயுள்ள இடங்களில் ஒற்றடமிடுதல்

7.தொக்கணம்- இது மர்த்தனம் எனப்படும். இது வெறுங்கையால் பிடிப்பதும் தைலங்களை தடவிப்பிடிப்பதும் என இரு வகைப்படும்

8.புகை-சரக்குகளை நெருப்பிலிட்டு எழும் புகையைப்பிடித்தல் அல்லது குடித்தல் அல்லத புண் முதலியவற்றுக்கு தாக்கும் படி செய்தல்

9.மை- உ-ம் நீலாஞ்சனமை

10.பொடிதிமிர்தல்- உடம்பில் தேய்த்து உருட்டி உதிர்த்தல் உ-ம் மஞ்சள் பொடி

11.கலிக்கம் - சில சரக்குகளை சில சாறுகளால் அரைத்த உருட்டி மாத்திரையாக்கி தேனிலாவது வேறு சாற்றிலாவது உரைத்து கண்ணில் போடுதல்

12.நசியம்- இலைச்சாறு அல்லது தைலம் அல்லது மாத்திரைகளை தாய்ப்பாலுடன் உரைத்து மூக்கிலிடுதல்

13.ஊதல்- (ஆக்கிராணம்) சரக்குகளை வாயிலிட்டு மென்று காது முதலியவற்றில் ஊதல்

14.நாசிகாபரணம்-சரக்குகளை இடித்து மூக்கிலிடுவது

15.களிம்பு- உ-ம் வங்கவிரணக்களிம்பு வங்கக்களிம்பு

16.சீலை- குழம்பில் துணித்தண்டை தோய்த்து விரணங்களுக்கு உபயோகிப்பது

17.நீர்- விரணங்களை கழுவுவதற்கு உபயோகிக்கும் நீர்மப்பொருட்கள்

18.வர்த்தி - ஆறாத விரணங்களுக்கும் புரையோடும் விரணங்களுக்கும் வைப்பது

19.சுட்டிகை - சுடுகை எனப்படும்

20.சலாகை- கட்டிகள் புரைகள் சிலைப்புண் பவுத்திரம் போன்றவற்றின் நோய் நிலைமையை அறிய உதவும் உலோகக்கருவிகள்

21.பசை - உ-ம் கார்போகிப்பசை

22.களி - நீர் விட்டு அரைத்த சரக்குகளை கரண்டியிலிட்டு சுடவைத்தோ சுடவைக்காமலோ கட்டுதல்

23.பொடி - சரக்குகளை பொடித்து எடுத்து கொள்ளுதல்

24.முறிச்சல் - எலும்புகள் பிறழ்ந்து இருந்தால் அதனை சரியான நிலைக்கு மாற்றுதல்

25.கீறல் - கட்டி பரு கொப்புளம் ஆகியவற்றில் தங்கியுள்ள சீழ் இரத்தம் நீர் என்பவற்றை நீக்க கீறிவிடல்

26.காரம் - விரணத்தை ஆற்றுவதற்காக தோற்றவிப்பதற்காக பயன்படுத்தப்படும் சில நச்சுமருந்துகளும் அதன் கட்டுகளும்

27.அட்டை விடல்- நோயுற்று வீங்கின இடங்களில் தீய இரத்தத்தை அகற்றுவதற்காக அட்டை விடல்

28.அறுவை- தேவையில்லாதவற்றை அறுத்து நீக்கி தைத்து செம்மைப்படுத்தல்

29.கொம்பு கட்டல் - உடைந்த உறுப்புக்களை இணைத்து மீண்டும் ஒட்டும்படி மரச்சட்டம் கட்டி வடல்

30.உறிஞ்சல் - விரணங்களிலுள்ள சீழ் குருதி என்பவற்றை உறிஞ்சி எடுத்தல்

31.குருதி வாங்குதல்- இரத்தக்குழாயை கீறி இரத்தத்தை வெளிப்படுத்தல்

32.பீச்சு- மலம் வெளிப்படாவிடில் குழாய் மூலமாக நீர்மப்பொருட்களை உட்செலுத்துதல்

இவ்வாறு இன்று சித்த மருந்து பெருமளவில் வளர்ந்துள்ளது. மத்திய அரசு, மாநில அரசு ஆகியன இம்மருத்துவம் வளர வகை செய்துவருகின்றன.

<u>தொல்காப்பியத்தில் மருந்து</u>

<u>சங்க இலக்கியத்தில் மருந்து</u>

சங்க இலக்கியங்களில் மருந்து என்ற சொல் 38 இடங்களில் இடம் பெற்றுள்ளது. அனைத்தும் உடல் பிணி தீர்க்கும் மருந்து என்ற குறிப்பில் எடுத்தாளப்பெற்றுள்ளன.

வரினும் நோய் மருந்து அல்லர் வாராது - நற் 64/10

மருந்து பிறிது இல்லை யான் உற்ற நோய்க்கே - நற் 80/9

மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் போல - நற் 136/3

மருந்து பிறிது இல்லை யான் உற்ற நோய்க்கே - நற் 140/11

மருந்து பிறிது இன்மை நற்கு அறிந்தனை சென்மே - நற் 247/9

மருந்து எனப்படூஉம் மடவோளையே - நற் 384/11

மருந்து பிறிது இல்லை அவர் மணந்த மார்பே - குறு 68/4

மருந்து எனின் மருந்தே வைப்பு எனின் வைப்பே - குறு 71/1

தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து ஆகா - குறு 263/3

வெறி என உணர்ந்த வேலன் நோய் மருந்து/அறியான் ஆகுதல் அன்னை காணிய - குறு 360/1,2

நினக்கு மருந்து ஆகிய யான் இனி - ஐங் 59/3

இவட்கு மருந்து அன்மை நோம் என் நெஞ்சே - ஐங் 59/4

நோய்க்கு மருந்து ஆகிய பணை தோளோளே - ஐங் 99/4

நோய்க்கு மருந்து ஆகிய கொண்கன் தேரே - ஐங் 101/5

மருந்து_உரை இருவரும் திருந்து_நூல் எண்மரும் - பரி 8/5

மருந்து ஆகும் தீம் நீர் மலி துறை மேய - பரி 23/4

மருந்து போல் மருந்து ஆகி மனன் உவப்ப - கலி 17/20

மருந்து போல் மருந்து ஆகி மனன் உவப்ப - கலி 17/20

இன் உயிர் செய்யும் மருந்து ஆகி பின்னிய - கலி 32/15

மருந்து ஆகி செல்கம் பெரும நாம் விரைந்தே - கலி 44/21

மற்று இ நோய் தீரும் மருந்து அருளாய் ஒண்_தொடீ - கலி 60/18

மருந்து பிறிது யாதும் இல்லேல் திருந்து_இழாய் - கலி 60/21

மருந்து நீ ஆகுதலான் - கலி 63/11

மருந்து ஓவா நெஞ்சிற்கு அமிழ்தம் அயின்று அற்றா - கலி 81/14

நோய் நாம் தணிக்கும் மருந்து என பாராட்ட - கலி 81/18

மருந்து இன்று மன்னவன் சீறின் தவறு உண்டோ நீ நயந்த - கலி 89/10

நீ உற்ற நோய்க்கு மருந்து/மருந்து இன்று யான் உற்ற துயர் ஆயின் எல்லா - கலி 107/26,27

மருந்து இன்று யான் உற்ற துயர் ஆயின் எல்லா - கலி 107/27

இவள் தான் வருந்த நோய் செய்து இறப்பின் அல்லால் மருந்து அல்லள் - கலி 109/21

மருந்து அறைகோடலின் கொடிதே யாழ நின் - கலி 129/24

எல்லாரும் தேற்றர் மருந்து/வினை கொண்டு என் காம நோய் நீக்கிய ஊரீர் - கலி 145/50,51

மருந்து பிறிது இன்மையின் இருந்து வினை இலனே - அகம் 147/14

வருந்து தோள் பூசல் களையும் மருந்து என - அகம் 351/15

தணி மருந்து அறிவல் என்னும் ஆயின் - அகம் 388/21

மருந்து இல் கூற்றத்து அரும் தொழில் சாயா - புறம் 3/12

நீயே மருந்து இல் கணிச்சி வருந்த வட்டித்து - புறம் 42/22

இரு மருந்து விளைக்கும் நன் நாட்டு பொருநன் - புறம் 70/9

மருந்து கொள் மரத்தின் வாள் வடு மயங்கி - புறம் 180/5

<u>பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மருந்து</u>

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மருந்து என்ற சொல் பின்வரும் நிலைகளில் கையாளப்பெற்றுள்ளது.

மம்மர் அறுக்கும் மருந்து - நாலடி:14 2/4

வாடும் பசலை மருந்து - கார்40 4/4

நொந்த ஒருத்திக்கு நோய் தீர் மருந்து ஆகி - கார்40 40/2

இன் உயிர் தாங்கும் மருந்து - ஐந்70:1 6/4

மாலும் மாறா நோய் மருந்து - திணை150:5 142/4

மருந்து எனினும் வேண்டல்பாற்று அன்று - குறள்:9 2/2

மருந்து ஆகி தப்பா மரத்த அற்றால் செல்வம் - குறள்:22 7/1

மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது - குறள்:95 2/1

உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான் என்று - குறள்:95 10/1

அ பால் நால் கூற்றே மருந்து - குறள்:95 10/2

நோய் நோக்கு ஒன்று அ நோய் மருந்து - குறள்:110 1/2

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை - குறள்:111 2/1

தன் நோய்க்கு தானே மருந்து - குறள்:111 2/2

எவ்வ நோய் தீர்க்கும் மருந்து - குறள்:125 1/2

தீர்க்கும் மருந்து ஒன்று உடைத்து - குறள்:128 5/2

திரிகடுகம் போலும் மருந்து - திரி 1/4

மருவு நல்லாதன் மருந்து - திரி 105/4

மனை மரம் ஆய மருந்து - பழ 53/4

உடுக்கை மருந்து உறையுள் உண்டியோடு இன்ன - பழ 167/1

விண்டற்கு விண்டல் மருந்து - பழ 251/4

மருந்து ஆகி நிற்பதாம் மாட்சி மருந்தின் - பழ 355/2

தலைமகனை தாழ்க்கும் மருந்து - சிறுபஞ் 51/4

கோடல் குழவி மருந்து வெருட்டாமை - சிறுபஞ் 72/3

இவ்வகையில் செம்மொழி இலக்கிய காலத்தில் மருந்தின் பயன்பாடு அதிக அளவில் இருந்துள்ளது.

இசை மருத்துவம்

தமிழர் நோயுற்றொர்க்கு நோயின் கடுமை தெரியாது இருக்க இனிமையான இசையை இசைத்துள்ளனர். நோயாளிக்கு நோயின் கடுமையைத் தணிக்க மருந்து, சுகாதாரமான சூழல், மணந்த மணம், இனிய இசை' அன்பான பணிவிடை ஆகியன தேவைப்படும். இது வளர்ந்த நாகரிகங் கொண்ட மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பழக்க வழக்க நடைமுறைகள்.

இவ்வாறான நடைமுறைகள் ஈராயிரம் ஆண்டின் முன்பே பழந்தமிழர் இல்லற ஒழுக்கங்களில் இரண்டறக் கலந்த ஒன்றாகக் காணப்படுகின்றன.

“ தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ8

என்னும் புறநானூற்றுச் செய்யுள், விழுப்புண் கொண்ட போர்வீரன் கிடத்தப் பட்டிருக்கும் மனையின் இறைப்பில் இரவம்' வேம்பு ஆகிய இலைகளைச் செருகி, மனையெங்கும் வெண்ணிறங் கொண்ட சிறுகடுகைத் தூவி' நறுமணம் கமழும் நறும்புகை புகைத்து' யாழினால் பல்லிசை இசைத்தும் ஆம்பல் என்னும் குழலை ஊதியும் காஞ்சிப் பண்ணைப் பாடியும் மருத்துவம் செய்தனர்.

வரிப்புலி மார்பைக் கிழித்தது போல், போர்க்களத்தில் ஏற்பட்ட விழுப்புண்ணை ஆற்றுதற்குக் கொடிச்சியர் இசைப்பாடலை இசைத்தனர்9 என்று மலைபடுகடாம் உரைக்கின்றது.

இதனால்' மனையிலுள்ள நோயாளரைப் பேணும் மருத்துவர்களாகப் பெண்டிரும் இருந்துள்ளனர் என்பதும், நோயின் கடுமையைப் போக்க நோய்த் தடுப்பும் சுகாதாரமும் தேவை என்பதும், அறியப் பட்டிருந்தது. இசையால் நோயைத் தணிக்கும் இசைமருத்துவம் (Musico therapy) என்னும் முறையும் நடைமுறையில் இருந்திருப்பதும் தெரியவருகிறது.

அறுவை மருத்துவம்

போர்க் காலங்களில் போர்வீரர்களுக்கு ஏற்படுகின்ற விழுப்புண் பெரிய அளவில் இருந்தால் அப்புண்ணை மருந்துகளால் ஆற்றுவது கடினம் என்பதை உணர்ந்து' மருத்துவ வல்லார்களால் அப்புண்கள் தைக்கப்பட்டன. அதன் பின்னரே மருந்திட்டுக் கட்டுவதும் நிகழ்ந்துள்ளது. இதுவே இன்றைய நாளிலும் நடைமுறையிலுள்ளது. இவ்வாறு, விழுப்புண்ணைத் தைக்கும் முறையைப் பதிற்றுப் பத்து குறிப்பிகிறது.

“மீன்தேர் கொட்பின் பனிக்கய மூழ்கிச்

சிரல் பெயர்ந் தன்ன நெடுவெள்ளூசி

நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின் "10

நீரிலுள்ள மீனைக் கொத்துவதற்காக நீரில் பாய்ந்து, அடுத்த நொடியில் நீரைவிட்டு மேலே பறந்து செல்லும் சிரல் பறவையைப் போல, நெடிய வெள்ளூசி புண்ணுக்குள் நுழைந்து வெளியே வருகிறது என்கிறது. வெள்ளூசி என்பது வெள்ளியால் செய்யப்பட்ட தையல் ஊசியாக இருக்கலாம்.

குழந்தை மருத்துவம்

பண்டைத் தமிழர்கள் வாழ்வில் இடம் பெற்றிருந்த மருத்துவம், எல்லாவிதமான மருத்துவமாகவும் விரிவடைந்து பரிணாம நிலையில் வளர்ந்து வந்திருப்பதாகத் தெரிகிறது. அவ்வாறு வளர்ந்து வந்த மருத்துவம் குழந்தை மருத்துவத் துறையையும் தன்னகத்தே கொண்டதாகக் திகழ்ந்திருக்கிறது.

இளங்குழந்தைகளுக்குச் செய்யப் படுகின்ற மருத்துவத்தை மிகவும் தேர்ந்தநிலை பெற்றதாகவே கருத வேண்டும். குழந்தைகள், நோயையோ, நோயின் குறியையோ கூறும் நிலையில் இருப்பதில்லை. குறிப்பறிந்தும்' சோதித்தறிந்துமே மருத்துவம் பார்க்க வேண்டி யிருக்கும். அம்மாதிரியான மருத்துவத்தை மனையுறையும் பெண்டிரே செய்தனர் என்பதற்குச் சீவக சிந்தாமணி சான்றாகிறது.

"" காடி யாட்டித் தராய்ச் சாறும் கன்னன் மணியும் நறு நெய்யும்

கூடச் செம்பொன் கொளத் தேய்த்துக் கொண்டு நாளும் வாயுறீஇப்

பாடற் கினிய பகுவாயும் கண்ணும் பெருக உகிர் உறுத்தித்

தேடித் தீந்தேன் திப்பிலி தேய்த்து அண்ணா உரிஞ்சி மூக்குயர்ந்தார்"20

பிரமிச்சாறு, கண்ட சருக்கரை' தேன், நறுநெய் ஆகியவற்றுடன் காடியைக் கூட்டி, பொன்னினால் தேய்த்துக் குழந்தைகள் உண்ணுகின்ற அளவிற்குப் பக்குவப்படுத்திய மருந்தாக்கி' தினமும் வாய்வழி ஊட்டினர் என்றதனால்' குழந்தை மருத்துவத்தினை மகளிரும் அறிந்திருந்தனர் என்பது பெறப்படுகின்றது.

இவ்வாறு பல்வகை நிலையில் மருத்துவ முறைகளைத் தமிழர்கள் செய்து வந்துள்ளனர். இவை இன்று வளர்ந்து சித்த மருத்துவம் என்ற தனித்துறையாக எழுச்சி பெற்று நிற்கிறது.

எந்திரவியல் - போர்க்கருவிகள் தயாரிப்பு

முனைவர் சு. சதாசிவம், உதவிப்பேராசிரியர், கிறித்துவக் கல்லூரி, சென்னை

தமிழர் தொல்காப்பிய காலந்தொட்டே போர்க்கருவிகளைக் கையாள்வதிலும். அவற்றை வடிவமைத்துக் கொள்வதிலும் பழக்கமுடையவராக இருந்துள்ளனர், மேலும் தமிழர்களின் எயில்போர் மிகச் சிறப்பு வாய்ந்ததாக இருந்துள்ளது, எயிலிடத்து பல கருவிகளை அவர்கள் பரப்பிப் போர் செய்துள்ளனர், தமிழர் பயன்படுத்திய மரபுசார் போர்க்கருவிகளை இரண்டு வகைகளாக பகுத்துக் கொள்ள இயலும், அவை 1, இயல்புப் போரில் பயன்படுத்தப் பெறும் வாள், வேல், வில் ஆகிய முப்போர்க்கருவிகள் 2, எயிற்போர்க்கருவிகள் என்பனவாகும், இவற்றுள்

இயல்புப்போர் (அதாவது ஒருவகையில் தும்பைத் திணைப் போர்) என்பது மட்டும் இங்கு எடுத்துக் கொள்ள ப் பெற்று விளக்கப்படுகிறது,

மன்னர்களும் அவர்களின் போர்க்கருவிகளும்

மன்னன் வழித்தே மலர்தலை உலகம் என்ற அற்றை மொழிக்கு ஏற்ப மன்னர்தம் வழித்ததாக அற்றைத் தமிழக மக்கள் செயல்பட்டனர், அவர்களின் பாதுகாப்பு கருதி மன்னர்கள் போர்ப்படைகளை வைத்திருந்தனர், நால்வகைப்படைகள் - மன்னர்களால் அமைக்கப் பெற்றிருந்தன, இம்மன்னர்கள் பொன், பொருள், நிலம், பாதுகாப்பு முதலானவற்றில் ஏதேனும் ஒரு காரணம் பற்றிப் போர் தொடங்குகையில் ஊர்க்கு, வீட்டிற்கு இத்தனைபேர் என்ற நிலையில் ஆண்கள் போரில் கலந்து கொண்டனர்,

படையும் கொடியும் குடையும் முரசும், நடைநவில் புரவியும் களிறும் தேரும், தாரும் முடியும் நேர்வன பிறவும் தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய (தொல்காப்பியம், பொருளதிகாரம் 616) என்ற நூற்பாவின்வழி மன்னர்க்குரிய புறவடையாளங்கள் பெறப்படுகின்றன, இவற்றுள் படை முன்னணியில் முதலாவதாக உள்ளது, அதனுடன் களிறு, தேர், நடைநவில்புரவி ஆகியன இணைய நாற்படை கொண்டிருத்தல் அரசரின் இலக்கணமாகிறது, கொடி, குடை, முரசு, தார் (மாலை), முடி(மணிமுடி), செங்கோல் முதலியன மன்னர்க்குரிய மற்ற அடையாளச் சின்னங்களாகும், இவற்றுள் குடை, முரசு ஆகியன போர்க்கருவிகளாகவும் கொள்ளத் தக்கனவாகும்,

எனவே நாற்படை உடைய அரசன் அடப்படைகளைப் பெருக்கி, மக்களை அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ வழி செய்ய வேண்டிய கடப்பாடு உடையவனாக விளங்கவேண்டும் என்பது தொல்காப்பியர் காலத்திலேயே மன்னர்க்குரிய முறையாக இருந்தது என்பது தெரிய வருகிறது,

இந்நால்வகைப் படைகளை மன்னர்கள் பெற்றிருந்தமையைச் சங்க இலக்கியக் குறிப்புகளும் காட்டுகின்றன, நெடுநல்யானையும் தேரும் மாவும் படையமை மறவரும் உடையம் யாம் என்று (புறநானூறு, 72), வினை நவின்ற பேர்யானை சினம் சிறந்து களன் உழக்கவும் மா எடுத்த மலிகுரூஉத்துள் அகல்வானத்து வெயில் கரப்பவும் வாம்கரிய கருந்திண்தேர் காற்று என்னக் கடிது கொட்பவும் வாள்மிகு மறமைந்தர்தோள் முறையான் வீறுமுற்றதாம் (மதுரைக்காஞ்சி 47-54)

என்பன மன்னன் நால்வகைப் படையைப் பெற்றிருந்தமையைக் காட்டும் சங்க இலக்கியச் சான்றுகளாகும்,

மன்னர் பின்னோர்

மன்னர் பின்னோராக விளங்கும் ஏனைய மக்கள் வில்லும் வேலும் கழலும் கண்ணியும் தாரும் மாலையும் தேரும் மாவும் மன்பெறு மரபின் ஏனோர்க்கும் உரிய (தொல், பொரு, மரபி, 628) என்ற நூற்பாவின்படி வில், வேல், கழல், கண்ணி, தார், மாலை, தேர், குதிரை ஆகியன கொண்டு போர் புரிய, வாழ இலக்கணம் பெற்றுள்ளனர், நூற்பாவை கூர்ந்து நோக்கினால் தேர், குதிரை ஏறிப் போர் புரியும் ஏனோர் வில், வேல் ஆகியன கொண்டு போர் புரிவர் என்பது தெரியக் கிடைக்கும்,

இவ்வகையில் போர்க் கருவிகளில் முக்கிய இடம் வகிக்கும் வாள், வில், வேல் முதலியன குறித்த சிறப்புச் செய்திகள் பல தமிழிலக்கியங்கள் வாயிலாக கிடைக்கின்றன, அவை பின்வருமாறு,

தமிழரின் முப்போர்க்கருவிகள்

தொல்காப்பிய காலம் முதலாக தமிழர் மூன்று போர்க்கருவிகளை முதன்மையானதாகக் கையாண்டு வந்துள்ளனர், அவை வாள், வில், வேல் என்பனவாகும், வில்லும் வேலும் வாளுமே இவரது முந்திய ஆயுதங்கள் (கந்தையாபிள்ளை, தமிழகம் ப, 176) என்ற குறிப்பும் இக்கருத்தினை அரண் செய்யும்,

இவற்றுள் வாள் என்னும் போர்க்கருவி நெருங்கி நின்று போர் செய்கையில் பயன்படுத்தப் படுவதாக இருந்துள்ளது, வில்லும் வேலும் பகைவரை தூரத்தில் இருந்து தாக்கப் பயன்பட்டுள்ளது, இம்முப்போர்க்கருவிகள் பற்றிய பல குறிப்புகள் தொல்காப்பியத்திலும், சங்கஇலக்கியங்களிலும், அவற்றைத் தொடர்ந்த இலக்கியங்களிலும் காணப்படுகின்றன,

இம்முதன்மைக் கருவிகள் தவிர வேறு சில கருவிகளும் தமிழர்களால் பயன்படுத்தப் பட்டுள்ளன, அடார், அரம், அரிவாள், ஆயுதக்காம்பு, எஃகு, கண்ணாடி தைத்த கேடகம், கணிச்சிப்படை, கலப்பை, கழிப்பிணிப் பலகை, காழெஃகம், கிளிகடிகருவி, குந்தாலி, குறடு, கேடகம், கோடாலி, சக்கரம், சிறியிலை எஃகம், சேறுகுத்தி, தறிகை, துடுப்பு, நவியம், படைவாள், பூண்கட்டிய தண்டு, மழு, வாள், வில், வேலுறை ஆகிய கருவிகளையும் தமிழர் பயன்படுத்தியதாக புறநானூற்றின் முன்னுரையில் உ,வே, சாமிநாதையர் குறிப்பிடுகின்றார்,

மேலும் போர்க்கருவிகள் தம்மை ஊறு செய்யாவண்ணம் காக்க கரடித்தோலாற் செய்யப்பட்ட , புலித்தோலாற் செய்யப்பட்ட கேடயமென்னும் கருவிகளை பயன்படுத்தியதாக கந்தையாப்பிள்ளை குறிப்பிடுகின்றார்(தமிழகம், ப,176),

வாள்

தொல்காப்பியத்தில் வாளோர் ஆடும் அமலை (தும்பைத்திணை), ஒள்வாள் வீசிய நூழில் (தும்பைத்திணை), வாள்மங்கலம் (பாடண்திணை) ஆகிய இடங்களில் வாள் என்னும் சொல் போர்க்கருவியாக கருதுமளவிற்கு எடுத்தாளப்பட்டுள்ளது, சங்கப்பாடல்களிலும் பல இடங்களில் வாள் என்னும் போர்க்கருவி எடுத்தாளப் பெற்றுள்ளது, போர்க்கு உரைஇப் புகன்று கழிந்தவாள் உடன்றவர் காப்புடை மதில் அழித்தலன் வான்உற மூழ்கி உரு இழந்தனவே (புறநானூறு 97), ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறநானூறு 312), என்ற சங்கப்பாவடிகள் வாள் வெற்றி காட்டுவனவாகும்,

வாள் என்பது ஆண்களுக்கு மிகுதியும் பயன்படும் போர்க்கருவி என்றாலும் அதனைப் பெண்களும் கையாண்டுள்ளமை மற்றொரு புறநானூற்றுப்பாடல்வழி புலனாகின்றது, கொண்ட வாளொடு படுபுனம் பெயராச் செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய படுமகன் கிடக்கை காணுஉ ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே ((புறநானூறு 63) என்ற காக்கைப் பாடினியார் பாடலடிகள் வீரத்தாய் ஒருத்தி வாள் கொண்டு போர்க்களம் புகுந்த செய்தி பெண்களின் வாள் பயன்பாட்டிற்குச் சான்றாவதாகும்,

வேல்

வேல் - முருகக் கடவுளின் கருவியாக சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ளது, வேல் கொண்டாடும் வேலன் அகப்பாடல்களில் முக்கியப் பாத்திரமாக அமைக்கப் பெற்றுள்ளான், புறம் சாராத அகம் சார்ந்த பயன்பாடு இதுவாயினும் வேல் என்னும் கருவியை மக்கள் போற்றியமைக்குச் சான்றாக மேற்கருத்து விளங்குகிறது, தொல்காப்பியத்தில் பெரும்பகை தாங்கும் வேலினானும் என்று வேல் குறிக்கப்பட்டுள்ளது,

ஒளவையார் அதியமானைக் காட்சிப்படுத்தும்போது கையது வேலே,, காலன புனைகழல் (புறநானூறு 100) என்று வருணிக்கிறார், பூஆர் காவின் புனிற்று புலால் நெடுவேல் எழுபொறி நாட்டத்து (புறநானூறு 99), நிழல்படு நெடுவேல் ஏந்தி ஒன்னார் ஒண்படைக் களிறு பெயர்த்து

எண்ணினி விண் இவர் விசும்பின் மீனும் (புறநானூறு 302), பீலிக்கண்ணி பெருந்தகை மறவன் மேல்வரும் களிற்றொடு வேல் துறந்து (புறநானூறு 274), திறல் ஒளிறிலங்கு நெடுவேல் மழவர ி(புறநானூறு 88), சாந்தமை மார்பின் நெடுவேல் பாய்ந்தென (புறநானூறு 63) முதலான குறிப்புகளால் வேல் என்னும் போர்க்கருவி அதிக அளவில் பயன்படுத்தப்பட்டமை தெரிய வருகிறது,

சிறிய பருவத்தின்போததே வேல் என்னும் போர்க் கருவி தாயால் மகனுக்கு அறிமுகப்படுத்தப் பெற்று தரப்பெற்றமை மற்றொரு புறநானூறு பாடலால் தெரியவருகிறது, இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி வேல்கைக் கொடுத்து வெளிது விரிந்து உடாஇப் பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி (புறநானூறு 279) என்ற பாடலில் வேலின் உயரம்கூட இல்லாத சிறுவனுக்கு வேல் என்னும் கருவியைத் தந்து அதனைப் பயன்படுத்தக் கற்றுத்தரும் வீரஉணர்வு இங்கு கருதத்தக்கது,

வில்

வில், அம்பு, அம்பறாத்தூணி இவை மூன்றும் அமைந்த கூட்டுக் கருவியாக தமிழர்கள் வில்லைப் பயன்படுத்தியுள்ளனர், கணையும் வேலும் துணையுற மொய்த்தலின் (தொல்காப்பியம், புறத்திணையியல் 16) என்று இக்கருவியைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது, வினை வல் அம்பின் விழுத்தொடை மறவர் (அகநானூறு 105), எடுத்து எறி எஃகம் பாய்தலின் புண்கூர்ந்து பிடிக்கணம் பிரிந்த (முல்லைப்பாட்டு) , வைந்நுணைப் பகழி மூழ்கலின் செவி சாய்த்து உண்ணாது உயங்கும் மாசிந்தித்தும் (முல்லைப்பாட்டு) , உன்னிலன் என்னும் புண்ஒன்று அம்பு (புறநானூறு 310), எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின் என (புறநானூறு 9) முதலான அகச்சான்றுகள் சங்க காலத்தில் வில் பயன்படுத்தப் பட்டமைக்கான சான்றுகளாக விளங்குகின்றன,

இவ்வாறு இம்முக்கருவிகளும் பெரும்பான்மையும் சங்ககாலத் தமிழரால் பயன்படுத்தப் பெற்றுள்ளன, ஔவையார் பாடிய பாடல் ஒன்று இம்முக்கருவிகளையும் ஒருங்காகக் காட்டுவதாக உள்ளது, மார்புறச் சேர்ந்து ஒல்காத் தோல் செறிப்பு இல் நின் வேல் கண்டவர் தோல் கழியொடு பிடி செறிப்பவும், வாள் வாய்த்த வடுப் பரந்த நின் மற மைந்தர் மைந்து கண்டவர் புண் படு குருதி அம்பு ஒடுக்கவும், நீயே, ஐயவி புகைப்பவும் தாங்காது (புறநானூறு 98) என்ற இப்பாடலடிகள் முக்கருவிகளும் ஓரரசனிடத்தில் இருந்தமையைத் தெளுவுபடுத்துகிறது,

படைக்கலக் கொட்டில்- தொழிற்கூடம்

சங்ககாலத் தமிழர் போர்க்கருவிகளைப் பெரும்பாலும் இரும்பால் ஆக்கி கொண்டனர், அவற்றைப் புதிதாக உருவாக்கிட, சீர் செய்ய உலைக்கூடங்களை அவர்கள் அமைத்துக் கொண்டனர், வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே (புறநானூறு- 312) என்ற பொன்முடியார் பாடலின் வழியாகக் கொல்லர்கள் தம் பட்டறையில் வேல்வடித்துத் தந்துள்ளனர் என்பது தெரிய வருகின்றது, இரும்பு முகம் சிதைய நூறு ஒன்னார் இருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிதே (புறநானூறு- 309) என்பதும் ஆகுபெயரால்போர்க்கருவியைக்குறிக்கும் பாடலடியாகும்,

இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டி,

கண் திரள் நோன் காழ் திருத்தி, நெய் அணிந்து,

கடியுடை வியல் நகரவ்வே; அவ்வே,

பகைவர்க் குத்தி, கோடு, நுதி, சிதைந்து,

கொல் துறைக் குற்றில மாதோ என்றும்

உண்டாயின் பதம் கொடுத்து,

இல்லாயின் உடன் உண்ணும்,

இல்லோர் ஒக்கல் தலைவன்,

அண்ணல்எம்கோமான்,வைந்நுதி

வேலே. (புறநானூறு, 95)

என்ற பாடலில் ஔவையார் -படைக்கலன்களின் நிலையையும், படைக்கலத் தயாரிப்பையும் காட்டுகிறார்,

தொண்டைமான் படைக்கலக் கொட்டிலில் போர்க்கருவிகள் மயிற்பீலிகள் அணிவிக்கப் பெற்று, மாலைகள் சூட்டப் பெற்று, நெய் பூசப்பெற்று, அதன் கூர்மை சரி செய்யப் பெற்று தக்கவகையில் வைக்கப் பெற்றிருந்ததாக பாடலின் முற்பகுதி குறிக்கிறது,

பின்பகுதியில் அதியமான் படைக்கலக் கொட்டிலில் போர்க்கருவிகள் உடைந்து கிடக்கும் காட்சி காட்டப்பெறுகிறது, இங்கு பகைவர்களைக் குத்தியதால் வேலின் நுனி சிதைந்து கிடக்கிறது, மற்ற

போர்க்கலன்களும் உடைந்து கிடக்கின்றன, போரில் வெற்றி கொண்டபின் வெற்றியை ஏற்படுத்தித் தந்த போர்க் கருவிகளை வெற்றெள களத்தில்விட்டுவிடாது மீண்டும் உலைக்களம் சேர்த்த மாண்பை இவ்வடிகள் விளக்குகின்றன,

இப்பாடலின் இறுதியடியில் அதியமான் கையில் வைத்திருக்கும் வேல் என்றைக்கும் கூர்மை மிக்கதாய் உடையாமல் உள்ளது என்ற புகழ்க்குறிப்பு காணப்படுகிறது, இவ்வாறு போர்க் கருவிகளை உருவாக்கிக் கொள்ளவும், சரியாக்கிக் கொள்ளவும் சங்கத்தமிழர் திறம் பெற்றிருந்தனர் என்பது தெளுவாகிறது,

படைவீடு

போரில் வெற்றிபெற்றபின் வென்ற வீரர்கள் தோற்ற நாட்டில் படைவீடு அமைத்துத் தங்குவர், அந்தப் படைவீடு உறுதி ஒழிந்த, சிதைந்த போர்க்கருவிகள் கொண்டு கட்டப் பெற்றிருக்கும், முல்லைப்பாட்டில் அப்படி ஒரு படை வீடு அமைக்கப் பெற்றிருந்தது, கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான் முக்கோல் அசைநிலை கடுப்ப, நல் போர் ஓடா வல் வில் தூணி நாற்றி கூடம் குத்திக் கயிறு வாங்கு இருக்கை பூந்தலைக் குந்தம் குத்தி, கிடுகு நிரைத்து, வாங்கு வில் அரணம் அரணம் ஆக (முல்லைப் பாட்டு 37-42) என்ற முல்லைப்பாட்டின் பாடலடிகளில் பயன்படா நிலை எய்திய போர்க்கருவிகள் மாற்றுவழியில் தங்கும் பாடிவீட்டின் சுவர்களாக மாற்றப்பட்டுள்ளமை குறிக்கப்பட்டுள்ளது, உடைந்த போர்க்கருவிகளின் பகுதிகள் தூணாக மாற்றப் பெற்று, கயிற்றால் அவை இறுக பிணைக்கப் பெற்று குந்தம், கிடுகு முதலானவை தடுப்புச் சுவர்களாகவும் துணிகள் கூரைகாளகவும், அமைக்கப் பெற்றமை மேற்காண் வரிகாளல் தெரிய வருகிறது,

சங்கம் மருவிய காலத்திலும் இம்மூவகைக் கருவிகள் பெருமளவில் பயன்படுத்தப் பெற்றுள்ளன, வில் ஏர் உழவர் பகைகொளினும்(குறள் 872), பிழைத்த வேல் ஏந்தல் இனிது(கு,772) (மேலும் வேல் பற்றிய குறட்பாக்களின் எண்கள், 113,774,775,772,546,550), வாள் ஆண்மை (கு, 614), தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்(கு828), தெரிகணை எஃகம்(களவழி 5) என்றவாறு வில் வாள் வேல் ஆகிய படைக்கருவிகள் பயன்படுத்தப் பட்டுள்ளமைக்குத் தக்க சான்றுகள் உள்ளன,

குறளில் காட்டப்பெறும் தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் என்ற தொடர் வஞ்சகமாக பழிதீர்க்கும் பான்மை திருவள்ளுவர் காலத்தில் இருந்தமையை எடுத்துரைப்பதாகும், சங்க காலத்தில் நிலவிய போர்த்தூய்மை இக்காலம் முதல் திரியத் தொடங்கியது என்பதற்கு இக்குறள் சான்றாகிறது,

காப்பிய காலத்தில் வாளும் குடையும் மயிர்க்கண் முரசும் நாளொடு பெயர்த்து (சிலம்பு 5,89) என்று சிலப்பதிகாரத்துள்ளும் வாள் என்ற போர்க் கருவி சொல்லாட்சி பெற்றுள்ளது,

ஒளிறுவாள் மறவரும், தேரும் மாவும் களிறும் சூழ் தர (விழாவறைகாதை 69-70) என்று மணிமேகலையில் நாற்படைகள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது, மேலும் இந்நூலில் அம்பு ஏவுறு மஞ்சை, ஆவக்கணைக்கால் காணாயோ அம்புப்புட்டில் (துயிலெழுப்பிய காதை64), காய்வேல் வென்ற கருங்கயல்(உதய குமாரன் அம்பலம் புக்க காதை) என உவமைகள் வாயிலாகவும் இயல்பாகவும் போர்க் கருவிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன,(மன்மதனைக் குறிக்க பல இலக்கியங்களில் வில் பயன்படுத்தப் பட்டுள்ளது)

காப்பியகாலத்தின் பிற்காலத் தொடர்வாகத் தொடர்ந்த கம்பராமாயணம் மற்றும் வில்லி பாரதம் ஆகிய இலக்கியங்களில் போர்க்கருவிகள் பற்றிய பல குறிப்புகள் காணக்கிடைக்கின்றன, இராமாயணத்தில் கம்பர் அம்புகளின் பல்திறன்களை எடுத்துரைக்கிறார், அம்புகளின் வகைகள், அவற்றின் இயல்புகள் குறித்த பல செய்திகள் கம்பரின் வாயிலாகக் கிடைக்கப் பெறுகின்றன,

அதே நேரத்தில் இப்போக்கிலிருந்து வில்லி பாரதம் சற்று வேறுபட்டு படைக்கருவிகளின் வியூகங்கள், படைக் குழுக்களின் வியூகங்கள் ஆகியவை பற்றிய செய்திகளைத் தருகின்றது,

வில், அம்பு, அம்புப்புட்டில் ஆகியவை அடங்கிய இக்கூட்டுக்கருவி தமிழர் போர்வாழ்வில் பெருத்த வளர்ச்சி அடைந்துள்ளமையை மேற்கண்ட இருகாப்பியங்கள் வழியாக அறிய முடிகின்றது,

கம்பராமாயணத்தில் இடம்பெறும் வேலோடு வாள் வில் பயிற்றலின் (பாலகாண்டம் நகரப்படலம் 12) என்ற அடி தமிழர்தம் மரபு சார் முக்கருவிகளின் பயன்பாட்டைக் குறிப்பிடுவதாக உள்ளது, மேலும் சங்கரன் கொடுத்த வாளும் , அங்கதன் உடைவாள் ஏந்த ஆகிய கம்பராமாயணப் பாடல்தொடர்கள் வாள் பயன்பாட்டிற்கான அகச்சான்றுகளாகும்,

இவை தவிர வேறு கருவிகளையும் கம்பராமாயண காலத்தில் தமிழர் பயன்படுத்தியுள்ளனர். தோமரம் சக்கரம் சூலம் கோல் மழு நாம வேல் உலக்கை வாள் நாஞ்சில் தண்டு எழு வாம வில் வல்லையம் கணையம் மற்று உள சேம வெம் படை எலாம் சுமந்து சென்றவால் (கும்பகர்ணன் வதைப்படலம் 105) என்ற போர்ப்படை வரிசை காட்டும் பாடலின் மூலம் தமிழர் பயன் படுத்திய பல போர்க்கருவிகள் அறியக் கிடைக்கின்றன,

இராவணன் மூலபலம் என்ற தனது மிக வலிமை வாய்ந்த படைக் குழுமத்தை வைத்திருந்த குறிப்பு ஒரு பாடலில் காட்டப்படுகிறது, சூலம் வாங்கிடின், சுடர்மழு ஏந்திடின், சுடர் வாள் கோலும் வெஞ்சிலை பிடித்திடின், கொற்றவேல் கொள்ளின், சால வன்தண்டு தரித்திடின், சக்கரம் தாங்கின், காலன், மால், சிவன், குமரன், என்று இவரையும் கடப்பார். (மூலபல வதைப்படலம்,11) இப்பாடலில் மூலபல படைகள் வைத்திருந்த போர்க்கருவிகள் தரப்பெறுகின்றன,

இவைதவிர வில் என்ற போர்க்கருவியை மிகத் திறமை வாய்ந்ததாகக் கம்பர தன் இராமாயணத்துள் காட்டியுள்ளார், இராமனின் வில் எதிரியைத் தாக்கி விட்டு அதன்பின் கடல் சென்று தன்னைத் தூய்மை செய்து கொண்டு மீண்டும் அவனது அம்பராத்தூணியில் வந்து சேரும் பெருமையதாகக் கம்பரால் படைக்கப் பெற்றுள்ளது, மேலும் இராமனின் வில் ஏழுமராமரங்களைத் துளைத்தது, வருணனை அழைத்தது,. தாடகை, வாலி, இராவணன் ஆகியோரை அழித்தது போன்ற அருஞ்செயல்களை ஆற்றியதாகவும் இராமாயணக்கதை செல்வதால் வில் என்ற போர்க்கருவி மேலும் சிறப்புடையதாக ஆக்கப் பெற்றுள்ளமை தெரியவருகிறது,

ஆயிரக் கோடி பல்லம், ஆயிரக் கோடி நாகக்கணை, கோட்டியின் தலைய கோடி கோடி அம்பு, கங்கபத்திரம், திங்களின் பாதி கோடி, கோரையின் தலைய கோடி கொடுங்கணை அரக்கன், பாரையின் தலைய கோடி, தாமரை தலைய வாளி, வச்சிரப்பகழி கோடி, முச்சிரப்பகழி, அஞ்சலி அஞ்சுகோடி (நாகபாசப் படலம் 107 முதல் 113 வரையுள்ள பாடல்கள் தரும் போர்க்கருவிகள்) ஆகியவற்றை இந்திரசித் பயன்படுத்தியதாக கம்பர் தெரிவிக்கின்றார், மேலும் அவன் வைத்திருந்த பிரம்மாத்திரம், நாகபாசப்படை ஆகியன மிகத் திறமை வாய்ந்ததாக இராமாயணத்துள் காட்டப்படுகிறது,

இவைதவிர இக்காப்பியத்துள் நேருக்கு நேர் போர் செய்யும் காலத்து ஒரு போர்ப்படைக் கருவிக்குத் தக்க எதிரானதாக மறுபடை ஏவப்படும்போது அவை இரண்டின் செய்களை கம்பர் எடுத்துரைக்கின்றார், இதன்வழி போர்க்கருவிகளின் எதிரெதிர் செயல்பாடுகள் விளக்கம் பெறுகின்றன, கீழே இராம இராவணப்போரின் போது பயன்படுத்தப் பெற்ற போர்க்கருவிகளின் பட்டியல் தரப்பெறுகிறது,

இராவணன் ---- இராமன்

தாமதப்படை சிவன்படை

ஆசுரப்படை அக்கினிப்படை

மயன்படை காந்தர்ப்பம்

தண்டு அம்பு

மாயைக் கணை ஞானக்கணை

சூலம் உங்காரம்

நிருதிப்படை பாதிப்பிறைமுக அம்பு

மேற்காண் பட்டியல்வழி இராவணன் பலவகைப் படைகளைப் பயன்படுத்தியபோதும் இராமன் வில், அம்பு கொண்டே பதில் போர் செய்துள்ளான் என்பது தெரிய வருகிறது, மேலும் உங்காரம் என்ற மூச்கின் மூலம் சூலப்படையைத் தகர்த்துள்ளான் இராமன், எனவே மூச்சும் ஒரு வகை எதிர்கருவியாகச் செயல்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது, பாதிப் பிறைமுக அம்பு என்பது இராமனின் தனிச்சிறப்பு மிக்க அம்பு ஆகும், இது கொண்டே இராவணனின் உயிர் தொலைக்கப் பெற்றது என்பதும் கவனிக்கத்தக்கது,

கம்பராமாயணம் மூலமாக அம்பு இணையற்ற இடத்தைத் தமிழரின் போர் வாழ்வில் பெற்றுவிட்டது என்பது தெரியவருகிறது,

இதற்கு அடுத்த நிலையில் வில்லிபாரதத்தில் படைவியூகம் பற்றிய பல செய்திகள் தெரிவிக்கப் பெற்றுள்ளன, தேர் பரி ஆள் எனும் படையுடை பாஞ்சாலர் (படை எழுச்சிச் சருக்கம் 3), வாளினர், வேலினர், போர் வில்லினர் (கிருட்டிணன் தூதுச் சருக்கம் -190) எனத் தமிழர்தம் முக்கருவிகளையும் வில்லிபாரதம் குறிப்பிடுகிறது, இவைதவிர

வெங் கணையத் திரள், குந்த நிறப் படை, வெம்பும்

உலக்கைகள், போர்

பொங்கிய வச்சிரம், உந்து கலப்பைகள், புன் கழுவர்க்கம்,

அயில்,

எங்கும் மலைத்து எழு செஞ் சுரிகைத் திரள், தண்டம்,

இவற்றினொடும்

தங்கிய சக்கர பந்தி தரித்தன-தண் பல கைத்தலமே.

மேல் எழு பூங் கதிர் வாள் உறை போம்படி வீசின; வான்

புடையே,

தோல்இனம் ஏந்தின; நீள் கவண் ஏந்தின; சோரிகள்

சோர்ந்திடவே,

ஞாலம் எலாம் பொரு தோமரம் வாங்கின; நா ஒரு

மூன்றனவாம்

சூலமொடு ஓங்கின; பாசமொடு ஓங்கின;-சூழ் சில பூங்

கரமே.

(கிருட்டிணன் தூதுச் சருக்கம்202 , 203)

என்ற பாடல்களில் மகாபாரதத்தில் பயன்படுத்தப்பட்ட போர்க்கருவிகள் பட்டியல் தரப்பெற்றுள்ளது, இவை தவிர வில்லிபாரதத்தில் படை அமைப்பு பற்றிய பல குறிப்புகள் காணக்கிடைக்கின்றன, அவற்றின் பட்டியல் பின்வருமாறு,

போர்நாள்--- கௌரவர்----பாண்டவர்

3---கருட வியூகம்--- சந்திர வியூகம்

6---கிரவுஞ்ச வியூகம்---மகரவியூகம்

7---சகட வியூகம்--- பாம்புவியூகம்

8---சூசிவியூகம்---சகட வியூகம்

9---சருப்பதோபத்திரவியூகம்---பற்ப வியூகம்

11---சகட வியூகம்--- கிரவுஞ்ச வியூகம்

12---மகரவியூகம்--- மண்டல வியூகம்

13---சக்கர வியூகம்---மகர வியூகம்

இப்பட்டியல் வழியாக பாண்டவர் கௌரவர் பயன்படுத்திய படை அமைப்பு முறைகள் தெரியவருகின்றன, படை அமைப்பு முறைகள் நாளுக்கு நாள் மாறுபட்டனவாகவும், ஒருவர் பயன்படுத்திய அமைப்பு முறை மற்றவரால் வேறு ஒரு முறை பயன்படுத்தப்பட்டமை தெரியவருகிறது, சக்கர வியூகம் அபிமன்யூவை அழித்த வியூகம் ஆகும்,

இவ்வாறு பண்டைக்காலத்தில் படைக்கருவிகளாக மட்டும் இருந்த முப்படைக்கருவிகள் பிற்காலத்தில் படை அமைப்புமுறையில் பயன்படுத்தத் தக்க அளவில் வளர்ச்சி பெற்றன என்பது தெரியவருகிறது,

முடிவுகள்

தமிழரின் அடிப்படை முக்கருவிகளாக வில் வேல் அம்பு ஆகியன பண்டைக் காலம் தொட்டே அமைந்திருந்தன,அவற்றைத் தயாரிக்கவும், சரி செய்து கொள்ளவும் பல தயாரிப்பு நிலையங்களைத் தமிழர் பெற்றிருந்தனர்,திறனொழிந்த படைக்கருவிகளை அப்படியே விட்டுவிடாது மீண்டும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளத் தமிழர் கற்றிருந்தனர், முற்றிலும் பயனாகாத படைக்கருவிகள் படைவீடுகள் அமைக்கப் பயன்பெற்றுள்ளன,

சங்க இலக்கியங்கள், சங்கம் மருவிய இலக்கியங்கள், காப்பியங்கள் ஆகியவற்றில் போர்க்கருவிகள் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன, தொல்காப்பியத்திலும் பண்டைத்தமிழர் போர்க்கருவிகள் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன, இவற்றின் மூலம் படைக்கருவிகளைப் பற்றித் தெரிந்து கொள்வதோடு, அவற்றின் வளர்ச்சியையும் தெரிந்து கொள்ளமுடிகின்றது, கம்பராமாயணம், வில்லி பாரதம் ஆகியவற்றில் படைக்கருவிகள் திட்டமிடப்பட்ட அளவில் தேர்ந்த அமைப்பு முறையில் கையாளப்பட்டுள்ளன என்பது தெளுவாகின்றது,

----பயன் கொண்ட நூல்கள்

சோ, ந, கந்தசாமி, புறத்திணைவாழ்வியல்,

தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1994

இராம, தட்சிணாமூர்த்தி, சிலப்பதிகாரத்தில் புறத்திணைக் கூறுகள், தேவிபதிப்பகம், சென்னை,--

தாயம்மாள் அறவாணன், மகடூஉ முன்னிலை, பச்சைப்பசேல், சென்னை, 2004

மற்றும்

தமிழ் இணையப்பல்கலைக்கழகத்தின் மின் நூலகத்து நூல்கள்

———

திருக்குறளில் அறிவியல்,
பேரா. ஆர். சரவணன், உதவிப் பேராசிரியர், ஆங்கிலத்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை

விலங்கியல்

பேரா. கே. இரா. கமலா முருகன்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, இராணி மேரி கல்லூரி, சென்னை

சங்க இலக்கியத்தில் விலங்குகள்

உலகில் மனித இனம் தோன்றும் முன்னதாகவே தோன்றிய உயிரினம் விலங்கினம். அவ்வகையிலேயே ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகுத்து, அவற்றில் ஐந்து அறிவு வரையிலும் நாம் விலங்குகள், தாவரங்கள் குடும்பத்தினை முன்னிறுத்தி பின்னர் மனிதர்களை நிறுத்துகின்றோம். இவை தொடர்பான பல நிகழ்வுகளும் இன்றுவரை இலக்கியங்களில் தரவுகளாகவும் சான்றுகளாகவும் எடுத்துரைக்கப்பட்டு இவ்வரிசை முறையும் பொதுவான உலகியல் கூற்றான 'வாலில்லாத குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்' என்ற கருத்தினையும் நிறுவுகின்றனர் ஆய்வாளர்கள். மனிதனுக்கும் விலங்குகளுக்குமான தொடர்பில் செயல்கள், வாழ்வியல் ஒட்டி ஒத்தும், உயர்ந்தும், தாழ்ந்தும் உள்ளதான நிலைகள் இன்றுவரை ஆய்விற்கு மட்டுமின்றி எள்ளலுக்கும் உரியதாகவே காணப்படுகின்றன.

காரணம் விலங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்றாலும் விலங்கு வேறு மனிதன் வேறு என்று அறிவியல் கூறினாலும் வாழ்வியல் முறையில் மனிதர்களில் சிலர் விலங்குளாகவும் விலங்குகள் சில பண்புகள் உயர்தகுநிலை உடையனவாகவும் உள்ளன. இதனை கண்ணதாசன் முதல் வைரமுத்து வரை இன்றைய கவிஞர்களும் பதிவு செய்துள்ளனர். எனினும் சங்க இலக்கியத்துள் பயின்றுவரும் விலங்குகள் தொடர்பான பதிவுகளைப் பார்வையிடுவதாக இவ்ஆய்வு அமைகின்றது.

உயிர்களின் வரிசைமுறை

இரண்டாயிரம் ஆண்டுகட்கும் முன்பாகவே நம்முடைய இன்தமிழ் இலக்கியத்தில் தலையாய இலக்கண நூலைத் தந்த தொல்காப்பியர் மிகச் செம்மையாக வகுத்து,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இண்டரறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே

ஆறறி வதுவே அவற்றொடு மனனே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே”

என்று வகைதொகைப்படுத்தி எடுத்துரைக்கின்றார். இதன் வரிசையில் தான் இறைவனின் படைப்பினை அவதாரங்களாக்கி வைணவ சம்பரதாயத்தில் பத்து அவதாரங்களின் வரிசை முறையிலும் அதனை உணர்த்துகின்றார்கள். வைரமுத்து தன் தண்ணீர்தேசத்தில் உயிர்களின் படைப்பு பற்றிக் கூறும்போது தண்ணீர் தேசத்தில் ‘முதல் உயிர் தோன்றியது’ தண்ணீரிலிருந்து என்று நிறுவ முற்படுகின்றார்.

உயிர்களாகத் தோற்றம் பெற்ற பின்பும் ஆண், பெண் பேதம் மனிதர்களில் மட்டுமன்றி பெரும்பான்மையாய் எல்லா உயிர்களிலும் உள்ளதான இயற்கை முறையைக் காண இயலுகின்றது. அவ்வகையில் யானையில் பெண் பிடி, ஆண் களிறு, மான் - பெண் பிணை, ஆண் - இரலை, உழை; எருமை – ஆண் கடு, பெண் நாகு; ஆண் புலி – போத்து, இப்படி பல்வகையான உள்ளீடுகளை உடையனவாக அநைம்துள்ளன. இதனைக் கடந்து தொல்காப்பியர் உயிர்களின் குழந்தைப் பருவத்திற்குரிய பெயர்களை வேறுபடுத்தி உரைக்கும் அளவில் நம்முடைய அறிவியல் அறிவு எம் பாரதி,

“எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி

இருந்ததும் இந்நாடே – அதன்

முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து

முடிந்ததும் இந்நாடே – அவர்

சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் வளர்ந்து

சிறந்ததும் இந்நாடே - இதை

வந்தனை கூறி மனதில் இருத்திஎன்

வாயற வாழ்த்தேனொ - இதை

வந்தே மாதிரம் வந்தே மாதிரம் என்று

வணங்கேனோ…..”

என்று போற்றி மகிழ்கின்றார்.

விலங்குகள் பாடுபொருளாய் அமைக்கப்பட்டுள்ள பான்மை

சங்கப் பாடல்களில் பேசப்படாத கருத்துக்களே இல்லையெனலாம். அவ்வகையில் விலங்குகளும் தமக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன. காரணம் சங்கப் பாடல்களின் முதல், கரு, உரி என்பதானப் பொருள்கள் அடிப்படையில் கருப்பொருளில்

விலங்குகள் முக்கிய இடம்பெறுகின்றன. எனவே, ஒவ்வொரு புலவரின் பாடுபொருளுள்ளும் விரும்பியும் விரும்பாமலும் விலங்குகள் பற்றியக் குறிப்புகள் அமைந்துவிடுகின்ற குறிப்பாக அக இலக்கியங்களில். அவ்வகையில் அமைந்த காட்சிகளை,

1. விலங்குகளின் வாழ்வியலைக் காட்சிப்படுத்தல்
2. விலங்குகளை உவமையாகவோ குறியீடாகவோ மக்களோடு இணைத்துக் காட்சிப்படுத்தல்.
3. விலங்குகள் மக்கள் இணைந்த வாழ்வியல் சூழலைக் காட்சிப்படுத்தல்

என்பனவாக அவை அமைந்துள்ளன. அவ்வகையில் சில காட்சிகளை நாம் இங்கு கண்டுணரலாம்.

யானை

உயிர்களில் உடலால் பெரியது யானையே ஆகும். இதனை வேழம், ஆனை என்று இலக்கியம் சுட்டுகின்றது. பொதுவாக யானை மதிப்புடையதும், மகிழ்வுடையதுமாகக் காணப்படும் விலங்கு. எனவேதான்,

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன்
இறந்தாலும் ஆயிரம் பொன்"

"யானை வரும் பின்னே
மணியோசை வரும் முன்னே"

என்றெல்லாம் பல பழமொழிகள் வழங்கப்படுகின்றன. மேலும், படைகளில் யானைப் படைக்குத் தனிச் சிறப்பு. அவ்வாறே மன்னர்கள் வழங்கிய பரிசில் பொருளிலும் யானைக்குத் தனி மவுசு என்பதான சூழலைக் காண இயலுகின்றது.

நண்பனும் பகைவனும்

யானை என்பது ஒரு நண்பனாகவும் சில சூழல்களில் பகைவனாகவும் பார்க்கப்பட்டதன் சூழல்களே மிகுதி என்பதற்கு குறுந்தொகை சான்று பகர்கின்றது.

"முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற
குறியிறைப் புதல்வரொடு மறுவந்தோடி
முன்னனாள் இனிய தாகிப் பின்னாள்
ஆவர்திணை மேய்தந் தாங்குப்
பகையாகின்றது"

யானைகள் தம் கன்றுகளுடன் குறவர்களின் குடிசையின் வாயிலில் வந்து பழகுகின்றன. காலப்போக்கில் அங்குள்ள குழந்தைகளும் யானையின் கன்றுகளும் நண்பர்களாகி விளையாடி மகிழ்கின்றார்கள். ஆனால், அவை சற்று வளர்ந்த சூழலில் தினையினை மேய்ந்திட வயல்களில் புகுகின்றபோது அதனை விரட்ட முயன்று பகையாகின்றனர்.

சில நேரம் அனுமதிப்பதும் உண்டு என்பதான குறிப்பினையும் கபிலர் தம்முடைய குறுந்தொகைப் பாடலில் பதிவு செய்துள்ளார். சிறிய கன்றுகளை உடைய பிடியானது தினையினை உண்ண முயலும்போது, அதனுடன் வந்த கன்று தாயின் பாலை அருந்திக் கொண்டிருக்கிறது. இதனைப் பார்த்த மக்கள் அதனை விராட்டாது 'குழந்தையின் பாலுக்கு அது உண்கிறது. உண்ணட்டும்' என்று விட்டு வேடிக்கைப் பார்த்தனர் என்பதான சூழலை,

"கன்றுதன் பயமுலை மாந்த முன்றில்
தினைபிடி உண்ணும் பெருங்கல நாடு" (குறுந். 225)

என்ற பாடலடிகளில் உணர்த்தப்பட்டாலும் புலவரின் நோக்கம் 'கொடைத் தன்மையுடையவன் பாரி என்பதுடன் அவனது குன்றில் வாழும் மக்களும் கொடைத்தன்மையுடையவர்' என்று கூறுவதே ஆகும்.

<u>யானையும் புலியும்</u>

யானைகளைப் பற்றி பதிவுகளைச் காணும்போதே ஆங்கே புலிகளும் பெரும்பாலும் இணைத்துக் காட்சிப்படுத்தப்படுகின்றதனைக் காண இயலுகின்றது. காரணம், இரண்டின் வீரத்தின் அடிப்படையில் எழும் மோதல்கள். இவற்றுள் மாறுபட்ட பல பதிவுகளும் உண்டு. புலியைக் கொன்ற யானையும் உண்டு. யானையைக் கொன்ற புலியும் உள்ளது. இலக்கியம்தான் இலக்கணமானது என்பதற்கு இந்தப் 'புலிகொல் யானை' என்ற தொடர் இலக்கணத்தில் பயிலாதவர் இல்லை. புலியால் கொல்லப்பட்ட யானை; புலியைக் கொன்ற யானை என்று இதற்கான காட்சிகளைத் தேடுவீர்கள். அவ்வகையான காட்சிகளை பல்வேறு காரண காரியங்கள் அடிப்படையில் அதாவது உளவியல், அன்பியல், அறிவு - இயல், சூழலியல், வாழ்வியல் என்ற நோக்குகளாயினும் சரி அல்லது இலக்கியத்தின் அடிப்படையிலான உள்ளுறை, இறைச்சி என்று பெயரிட்டாலும் சரி; இச்சூழல்கள் பல்வேறு நிலைகளில் அமைந்துள்ளன.

"களிற்றிரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஓளித் தியங்கு மரபின் வயப்புலிபோல" (அகம். 22)

என்ற பாடலடிகளில் அமைந்துள்ள 'மரபின்' என்ற சொல் இன்று உயிரியல் துறையினைச் சார்ந்தவர்களாலும் நிறுவப்படும் புலியின் குணம், மறைந்து நின்று எதிர்பாராமல் தாக்குவது

வீழ்த்துவது என்பதான கருத்தை அறிவிப்பதாக இரண்டாயிரம் ஆண்டுகட்கும் முன்பாக நம் தமிழன் தெரிந்துணர்த்துகின்றான்.

இதற்கு என்ன காரணம் என்றால் மலைப்பகுதிகளில் பயணம் செய்பவனும் வாழ்பவனும் ஒருவன் தான் புலிகொல் யானை திரிகின்றது ஆங்கே என்றால், அருகாமையில் புலியினைக் கொல்லும் ஆற்றலுடைய, கொன்ற யானை உள்ளது என இரண்டாம் வேற்றுமை உருபுடன் அமைந்து யானைக்கு வலிவூட்டுகின்றது. அதே ஒருவன் புலி கொன்ற யானை என்று வேறு குறிப்புகளைக் கூறிடுவானேயாயின் ஆங்கே புலியால் கொல்லப்பட்ட யானை என்ற மூன்றாம் வேற்றுமையுடன் பொருள் மாறுபடுகின்றது. இதன் சான்றாகவே, 'புலியால் கொல்லப்பட்ட யானை புலிக்குரிய இரையாகும். ஆனால், அதனை முழுமையாக உண்ண இயலாது. அவ்வாற மீதம் உள்ள இறைச்சியை மறவன் காணில், அதனைக் கொண்டு சென்று உப்பிட்டு, உலர்த்தி உண்பர் என்பதும், காட்டு வழியில் உப்பு வணிகத்தின் பொருட்டு வந்த உமணர்கள், இதனைக் காணில் சோற்றில் கலந்து யானை பிரியாணியே உண்டுள்ளனர் என்பதான குறிப்பினை,

"புலிதொலைத்து உண்ட பெருங்களிற்று ஒழியூன்
கலிகெழு மறவர் காழ்கோத்து ஒழிந்ததை
ஞெலிகோல் சிறுதீ மாட்டி யொலிதிரைக்
கடல்விளை அமிழ்தின் கணஞ்சால் உமணர்
சுவைகொள் தீநீர்ச் சோற்றுலைக் கூட்டும்சுரம்" (அகம். 169)

என்ற பாடலில் ஆமூர்ச் சாத்தனார் சுட்டுகின்றார். இவர் ஒரு உப்பு வணிகர் என்று குறிப்பு உள்ளதால் இது கற்பனை செய்தியல்ல என உணரலாம்.

ஆனால், யானைகள் புலியினைக் கொல்வது என்பது தன்னையும் தன் குடும்ப உறுப்பினர்களான பிடி, கன்று இவைகளைக் காத்தலின் பொருட்டே நிகழ்கின்றது என்பதனை நாம் சான்றுகளால் உணர இயலுகின்றது. மேலும், பிடியின் முன் தன் வீரத்தை நிற வேண்டியது அதன் கடமை... அவ்வகையில்தான் முத்தொள்ளாயிரம் பிடி முன்பு செல்லாமை நாணி நின்ற களிற்றினை,

"கொடிமதில் பாந்திற்ற கோடும் ..."

என்ற பாடலில் சுட்டுகின்றது. அவ்வகையில், நம் சங்க இலக்கியங்களில் பிடிக்காக புலியினைக் கொன்ற யானை, பின்னர் நிம்மதியாகத் தன் துணையுடன் உறங்கிய யானை என்ற பல குறிப்புகள் உள்ளன. சான்றாக,

"முறைவளர் மூதல மூங்கில் முருக்கிச்

கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை
நீர்நசை மருங்கின் நிறம்பார்த் தொடுங்கிய
பொருமுரண் உழுவை தொலைச்சிக் கூர்நுனைக்
குருதிச் செங்கோட்டு அழிதுளி கழாஅக்
கன்முகை அடுக்கத்து மென்மெல இயலிச்
செறுபகை வாட்டிய செம்மலொடு அறுகால்
யாழிசைப் பறவை அமிரப் பிடிபுணர்ந்து
வாழையஞ் சிலம்பில் துஞ்சும்" (அக. 332)

என்ற பாடல் விளக்குகின்றன. இங்கு மேலும் பல நுட்பங்கள் யானையின் வாழ்வியல் தொடர்பாக அமைந்துள்ளன. சான்று ஐங்குநூறு 216, அகம். 78 போன்ற பாடல்களில் கருவுற்ற பிடியின் மண உணர்வு. புலியின் ஆசை, களிற்றின் துக்கம் என பல உணர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சில சமயம் புலி யானைக் கொல்லும் போராட்டத்தில் கொல்ல முடியாமல், தான் அடிபட்டும் கூட யானைகள் தன் இடம் திரும்புவதுண்டு என்பதனையும் இளங்கீரனார் 'புண்பட்ட வருத்தத்துடன் வந்து தன் பிடியுடன் மூங்கில்கள் காட்டில் சென்ற காட்சியினை,

"குயவரி இரும்போத்துப் பொருத புண்கூர்ந்து
உயங்குபிடி தழீஇய மதனழி யானை
வாங்கமைக் கழையின் நரலுமவர்
ஓங்குமலை நாட்டின் வரூஉ வோயே" (அகம். 398)

என்று காட்சிப்படுத்துகின்றார். நற்றிணையின் 279 – ஆம் பாடல் 'தப்பிப் பிழைத்து வந்த யானையின் காலில் ஏற்பட்ட காயத்தையும் வீக்கத்தையும் பட்டை உரிந்து கிடக்கும் ஓமை மரத்தின் அடிப்பகுதிக்கு உவமித்துப் பேசுகின்றது. இவ்வாறு யானைகள் பற்றி பல குறிப்புகள் சிறப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளன சங்க இலக்கியத்துள்.

காயத்துடன் காணும் காட்சிகள்

யானை பற்றிய செய்திகளில் புலியுடன் போரிட்டு தலையில் காயத்துடன் தண்ணீர் தேடி அலையும் யானை சுனையில் நீர் கிடைக்காமல் பெருமூச்சு விடும் துயரம், தலைவி தாயின் சுடுசொல்லால் மனம் வருந்தி அலரால் மனதில் புண்ணுற்றதான நிகழ்வின் ஒப்பீடாக அகம் 119 சுட்டுகின்றது.

அவ்வாறே புலியினை வென்ற யானை விட்ட பெருமூச்சில் வேங்கையின் மலர்கள் வீழ்ந்தது மின்மினப் பூச்சிகள் போலப் புதரில் காவும் என்பது தலைவன் சுரவழி இடையூறுகளைக்

கடந்து இரவுக்குறிக்கு வருவதனால் ஊரில் அலர் எழுவதனை அகம் 202 பாடல் காட்சிப்படுத்துகின்றது.

<u>யானை பிடித்தல்</u>

பழமொழிகள் நம் சொத்து. அவற்றில் விலங்குகள் தொடர்பான பலமொழிகள் மக்களின் வாழ்வில் கலந்துள்ளன.

"பாம்பின் கால் பாம்பறியும்"

"புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?"

"யானையால் யானை யாத்தற்று"

"எருதின் நோய் காக்கைக்குத் தெரியாது"

என்று அதன் பட்டியல் நீள்கின்றது. இங்கே யானையினை பிடிக்கும் தந்திரங்களில் ஒன்றாக யானையினைக் காட்டியே யானையைப் பிடித்தல் என்பதான வழக்கத்தினை நாம் காண முடிகின்றது யானை பிடிக்கும் முறைகளில் ஒன்றாக. வள்ளுவர் இதனை,

"வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று" (குறள். 678)

என்று சுட்டுகின்றார்.

யானை பிடித்தல் ஒரு முறையாக நாம் பழகிய யானையின் மீது சென்று தேவையான யானையினைத் துரத்திப் பிடித்து அதன் கால்களில் சுருக்குக் கயிற்றினை வீசிக்கட்டி அழைத்து வந்து பழக்குவது. இதற்காகப் பயன்படுத்துப்படும் யானைகளே கும்கி யானைகள் எனப்பட்டன. இதனைக் கொண்டு சமீபத்தில் ஒரு திரைப்படமும் வெற்றிகரமாக இயக்கப்பட்டது என்பது நாம் நினைவில் வருகின்றது. இங்கே, அகநானூற்றுப் புலவர் பரணர் (276) பரத்தை ஒருத்தி தான் விரும்பிய தலைவனைத் தலைவியிடமிருந்து பிரித்து அடையும் பொருட்டு 'காட்டில் பழகிய பெண் யானையின் (பிடி) உதவியால் ஆண் யானை (களிறு) எவ்வாறு கயிற்றில் கட்டி தன் வயப்படுத்துவார்களோ அவ்வாறு நானும் என்னுடைய அழகிய கூந்தலால் உன்னுடையக் கணவனை என்னுடைய மார்புடன் இணைத்தக் கொள்வேன்! என்று அறைகூவல் விடுப்பதுடன் அவ்வாறு என்னால் செய்ய இயலாமல் போனால் என்னுடைய அழகு ஈகையில்லாதவன் செல்வம் போல் அழிந்து பாழ்படட்டும் என்றும் சூளுரைக்கின்ற காட்சியினை,

"அரிவே யுண்கணவன் பெண்டிர் காணத்
தாரும் தானையும் பற்றி ஆரியர்
பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போலத்

தோள்கந் தாகக் கூந்தலில் பிணித்து அவன்
மார்புகடி கொள்ளேன் ஆயின் ஆர்வுற்று
இரந்தோர்க்கு ஈயாது ஈட்டியோன் பொருள்போல்
பரந்து வெளிப்படா தாகி
வருந்துக தில்லையாய் ஓம்பிய நலனே"

என்று காட்சிப்படுத்துகின்றதன் மூலம் வாழ்வயிலோடு தொடர்புடைய நிகழ்வுகளில் இணைக்கப்பட்ட சூழலையும் உவமையான சூழலையும் உணர முடிகின்றது.

ஆண் - வீரம் - யானை – ஒப்புமை

தன் குழந்தையைக் காண போர் முளையினின்று திரும்பிய தலைவனின் உடலியல் இயல்பை,

"விரவயம் பொருத வயக்களிறு போல
இன்னும் ஆறாது சினனே கன்மளர
உய்ந்தனர் அல்லர் இவள் உடற்றிறி யாரே
தெறுவர் நோக்கிய கண்தன்
சிறுவனை நோக்கியும் சிகப்பானாவே" (புறம். 100)

என்ற பாடலடிகள் காட்சிப்படுத்துகின்றன. பல்வேறு நுட்பமான உளவியல் சூழல்களும் இப்பாடலடிகளில் பொருந்தி வருகின்றன எனலாம்.

புலிப்பல் தாலி

வீரத்தின் மற்றுமொரு அடையாளமாக புலிப்பல் தாலி அணியும் முறை மக்களிடையே வழக்கில் இருந்துள்ளமையைக் காண இயலுகின்றது. இதனை ஒட்டியே

"புலிப்பல் தாலிப் புதல்வள் புல்லி" (குறுந். 161)

என்ற பாடலடிகள் தன் குழந்தையுடன் மகிழும் தலைவியின் மன உணர்விற்கு காட்சியாகின்றன.

இவை மட்டுமின்றி பல்வேறு காட்சிகள் யானையினை மையப்படுத்தி காட்சிகளாக அமைக்கபட்டுள்ளமையைக் காண முடிகின்றது. மேலும், விலங்குகளுடனான வாழ்வியலில் யானைக்கு முக்கிய பங்களிப்பதில் அகத்தில் தலைவன் தலைவியின் கூட்டம் நிகழ்வதனைக் களிறு தரு புணர்ச்சி என்றே போற்றுகின்றது சங்க இலக்கியம். இவ்வாறு யானையின் காட்சிகள் விரிந்து கொண்டே இருக்கின்றன.

மான்

இலக்கியத்தில் மட்டுமல்ல வாழ்விலும் நம் கருத்தைக் கவரும் மற்றுமொரு விலங்கு மானாகும். முல்லை நிலத்தின் கருப்பொருளில் பேசப்பட்டுள்ளது.

ஆண் மானைக் கலை எனவும் இரலை எனவும் பெண் மானைப் பிணை எனவும் குட்டி மானை மறி எனவும், புள்ளியினையுடைய மான் புகரி என்றம் சுட்டப்பட்டுள்ளன. பெரும்பாலும் மானின் அழகிய காதல் வாழ்க்கையே அகப்பொருளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் ஒரு அழகிய காட்சியில் 'தன் தலைவனுடன் கொடுவழியில் சென்றாலும், வறுமை வழியில் வாழ்ந்தாலும்; அதுவே தலைவிக்கு இன்பம் தரக்கூடியதாக அமைகின்றது என்பதனை

"நம்படப்பை தேன் மயங்கு
பாலினும் இனிய கவர் நாட்டு
---------- ---------- ----------
மானுண்டு எஞ்சிய கலுழி நீரே"(ஐங்.)

என்ற பாடலடிகள் அழகாக உணர்த்துகின்றன.

கார்காலத்தில் முல்லை நிலத்தில் கன்றினைத் தழுவிய பெண் மான் முறுக்குடை கொம்பு பெற்ற ஆண் மானுடன் தங்கித் திரியும் நிலையினை இடைக்காடனார்

"செந்நில மருங்கிற்
செறித்துநிறுத் தன்ன தெள;ளறல் பருகிச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடைப்பிணை
வலந்திரி மருப்பின் அண்ணல் இரலையொடு
அலங்குசினைக் குருந்தின் அலகுநிழல் வதிய"
(அகம். 304, 6-10)

என்ற பாடலடிகளில் காட்சிப்படுத்துகின்றார். மற்றுமொரு அழகிய சூழலை,

"மறியுடை மடப்பிணை தழீஇ புறவில்
திரிமரப் பிரலை பைம்பயிர் உகள
ஆர்பெயல் உதவிய கார்செய் காலை" (அகம். 314, 5-7)
(மதுரை அளக்கர் ஞாழார் மகனார் அம்மள்ளனாரும்)

என்ற பாடலில் காண இயலுகின்றது.

பாலைத் திணையில் ஆண்மான் வெள்ளிய பூவினை, தான் உண்ணாது தன் துணை உண்பதற்காகத் தனது ஆண் குரல் தோன்ற அழைக்கும் நிலையினைக் கயமனார்,

"கதிர்க்கால் அம்பினை உணீஇய புகலேறு

குதிர்க்கால் இரும்பை வெண்பூ உண்ணாது

ஆண்குரல் விளிக்கும்" (அகம். 321, 4-6)

என்ற பாடலில் எடுத்துரைத்து மானின் அன்பின் உயர்வினைச் சுட்டுகின்றார்.

மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளர், வேனிற் காலத்தில் வெவ்விய காட்டினிடையில் வருத்தமுற்று நடையுடைய பெண்மான் நீர் வேட்கையுடன் இருக்க, தான் தழை உண்பதை விட்டு, நீரற்ற குளத்தினை நோக்கிச் சென்று நீரில்லாமை கண்டு வருந்தியதைச் சுட்டுகின்றார்.

எயிந்தை மகனார் இளங்கீரனார் கலைமான் போய்த் தேலை நீரென விரும்பியோடி தனிமையுற்றதால் கலங்கிய உள்ளமுடன் மேயும் தன் பிணையை அழைக்குமாம் என்பதனை,

"வறன்மரத் தன்ன கலைமருப் பெழிற்கலை

அறவலவிர்ந்த தன்ன தேர்நசை யோடிப்

புலம்புவழிப் பட்ட உலமரல் உள்ளமொடு

மேய்ப்பிணைப் பயிரும்" (அகம். 395, 8-11)

என்ற பாடலில் காட்சிப்படுத்துகின்றார்.

மறவர் அம்பினால் இறந்த பிணையினை நினைத்து ஆண்மான் அதனை அறியாமல் விளையாடும் கன்றுமானைப் பார்த்து உணவும் நீரும் செல்லாமல் வெறுத்துத் துன்பம் மிகுந்து காணப்படும் நிலையினை,

"கணையிடக் கழிந்ததன் வீழ்துணை உள்ளிக்

குறுநெடுந் துணைய மறிபுடை யாடப்

புன்கண் கொண்ட திரிமருப் பிரலை

மேய்பதம் மறுத்த சிறுமையொடு நோய் கூர்ந்து

நெய்தலம் பருவிற் சின்னீர் உண்ணாது

எஃகுறு மாந்தரின் இணைந்துகண் படுக்கும்"

(அகம். 371, 3-8)

என்ற பாடலடிகள் மனிர்களின் வாழ்வியலில் நிகழும் சோகச் சூழலை உட்படுத்துவதாகவே அமைகின்றது. இன்பமாயினும் துன்பமாயினும் மானும் மக்களும் உடலால் வேறுபட்டாலும் உள்ளத்தால் பல சூழல்களில் ஒன்று என்பதனைக் கண்டு உணர இயலுகின்றது இக்காட்சிகள் மூலம்.

<u>கழுதை (அத்திரி)</u>

சங்க இலக்கியத்தில் கோவேறு கழுதையினை அத்திரி என்று சுட்டி, பாரம் இழுக்கும் சூழலை,

"கொடுநுகம் நுழைந்து கணைக்கால் அத்திரி
வடிமணி நெடுந்தேர் புண ஏவாது" (அகம். 350)

என்று சுட்டுகின்றது. நெய்தல் நிலத்தில் கழிகளிலும் சேற்றிலும் மலையிலும் செல்ல கழுதை உதவியதை,

"கழிச்சேறு ஆடிய கணைக்கால் அத்திரி
குளம்பினுஞ் சேயிறா ஒடுங்கின
கேர்தையும் எல்லாம் ஊதைவெண் மணலே" (நற். 278)

என்றும் வாணிபத்தின் பொருட்டு பொதி சுமக்க கழுதைகள் பயன்பட்டுள்ளன என்பதனையும் சங்க இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அணில்

அணிலின் அழகினைத் பெரும்பாணாற்றுப்படை இலவங்காயின் முதுகு விரிந்து பஞ்சு தோன்றியதனைப் போன்று வரிகளை முதுகில் தாங்கி காட்சியளிக்கின்றது என்று காட்சிப்படுத்துகின்றது. (83)

நீலமணி போன்ற கருநிறமுடைய நீரினையும் கடற்கரையினையும் உடைய தலைவனைக் காட்ட விழைந்து, அங்குள்ள முள்ளிச் செடிகளின் முள்ளை 'அணிலின் பற்களைப் போல' என்று கூறும் செய்தியினை அம்மூவனாரின் நெய்தல் திணைப்பாடல் காட்சிப்படுத்துகின்றது.

ஆடு

ஆட்டுக் கிடாயின் வருகைக்காக பெண்ணாடு ஏங்கி நிற்பதனைப் போன்று தலைவனுக்காக தலைவி காத்திருந்தாள் என்று,

"வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும்
குருமயிர்ப் புருவை நசையின் அல்கும்
மாஅல் அருவித் தண்பெருஞ் சிலம்ப
நீஇவண் வரூஉம் காலை
மேவரும் மாதோ, இவள் நலனே" (ஐங். 238)

என்ற பாடல் காட்சிப்படுத்துகின்றது.

காவிரிப்பூம்பட்டினத்தில் கடற்கரைத் துறைமுகத்தின்கண் வந்திறங்கிய பல வகையான பண்டங்களின் மீது நாய்களும் ஆட்டுக் கிடாய்களும் ஏறிக் குதித்து விளையாடிய நிகழ்வினை,

"மதிநிறைந்த மலி பண்டம்
பொதிமூடைப் போர் ஏறி
கார்உகிர் ஞமலிக் கொடுந்தாள் ஏற்றை
ஏழகத் தகரொடு உகளும்" (பட்டின. 136-139)

என்ற அடிகள் சுட்டுகின்றன.

மலைப்பகுதிகளில் வாழ்ந்த மலை ஆடுகள் பற்றி பட்டினப்பாலை (138) காட்சிப்படுத்துகின்றது.

ஆநிரை

மாடுகள் எருதுகள், பசுக்கள், எருமைகள் என்ற பல்வேறு வகையானதாய் சங்க மக்களின் வாழ்வில் கலந்து இலக்கியத்திலும் வாழ்கின்றன. மேய்ச்சலுக்குச் சென்ற தாய்ப்பசுவை நினைந்து மாலையில் பாதை பார்த்து ஏங்கும் கன்றின் மனநிலையினை,

"பல்ஆ நெடுநெறிக்கு அகன்று வந்தெனப்
பின்தலை மன்றம் நோக்கி மாலை
மடக்கண் குழவி அலம்வந் தன்ன" (குறுந். 64)

என்று காட்சிப்படுத்துகின்றது.

மற்றுமொரு மாறுபட்ட சூழலில் காத்திருந்த கன்று தாய் மீண்டும் காணாமல் வருந்தியது. காரணம் என்னவென்றால் தாய்ப்பசு கானகத்தில் மேய்ந்திருந்தபோது காந்தள் பூவின் மகரந்தப்பொடி அதன் மேனி முழுவதும் படிந்ததனால் கன்றால் அடையலாளம் காண இயலவில்லை என்கிறது நற்றிணை.

"சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா
அலங்குகுலைக் காந்தள் தீண்டத் தாதுஉசக்
கன்று தாய் மருளும்"

என்று சுட்டுகின்றது.

ஏறு

எருது என்பதில் முக்கியப்பங்கு ஏறு தழுவலுக்குச் சுட்டப்படுகின்றது.

"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்" (கலித். 113)

என்று முல்லைக்கலி சுட்டுகின்றது. ஏறுகளைத் தழுவுதலை விரும்பிய வீரர்கள் அச்சமின்றி அதனைத் தழுவியதனை,

"தகைவகை மிசைமிசைப் பாயியர் ஆர்த்துடன்
எதிரெதிர் சென்றார் பலர்;
கொலைமலி சிலைசெறி செயிரயர் சினஞ்சிறந்து
உருத்தெழுந் தோடின்று மேல் ;
எழுந்தது துகள்
எற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்புக்
கலங்கினர் பலர்"

என்று கலித்தொகை சுட்டுகின்றது.

சங்க மக்களின் வாழ்வில் எருமை ஒரு முக்கிய இடத்தை வகித்துள்ளது என்றால் மிகையில்லை. எருமையைப் பொருத்தவரை பொறுமை என்பது மட்டுமின்றி அது எப்போதும் சேற்றிலேயே கிடக்கும் என்பதும் அதுவே அதற்கு இன்பம் என்பதும் வாழ்வயிலாகிறது. ஒரு காட்சியில் 'எருமை ஒன்று இரவு முழுவதும் சேற்றில் கிடந்து பின் காலை சூரியன் சுடும் தருணத்தில் அந்தச் சேற்றில் வாழும் மீன்கள் சிதையும்படி மிதித்துக் கொண்டே எங்கோ செல்கிறது. அப்போது அதனுடைய கொம்புகளில் பகன்றைக் கொடி ஒன்று சிக்கிக் கொள்ளுகின்றது. அந்தக் கொடியிலிருந்த வெள்ளை மலர்கள் எருமையின் தலையில் அழகாகக் காட்சியளிக்கின்றன. இக்காட்சியானது போருக்குப் புறப்படும் வீரன் புதுமலர் சூடிக் கிளம்பும் காட்சியினைப் போன்றுள்ளது என்று அகநானூறு காட்சிப்படுத்துகின்றது.

"இருமருப்பு எருமை ஈன்றணிக் காரான்
உழவன் யாத்த குழவியின் அகலாது
பாஅற் பைம்பயிர் ஆரும்" (குறுந். 181)

என்ற பாடலடிகள் எருமை என்பது தலைவனுக்குரிய குறியீடாக்கி சேற்றில் உள்ளதான நிலையினை அவனுடைய பரத்தமை ஒழுக்கத்திற்கு சான்றாக்கப்படுகின்றது.

நாய்

குட்டியிட்டு அடுப்படியில் தூங்கும் நாய் பற்றி (சிறுபா. பு. 132)லும், பாய்ந்து பிடிக்கும் இயல்பு, முயல்களைப் பிடிக்கும் இயல்பு குறித்து (பெரும்பா. 112-117) லும், வேட்டையாடும்

இயல்புடைய நாய்களை வேடர்கள் தங்கள் வீட்டுத் தூணில் கட்டிவைத்த காட்சியினை (பெரும்பா. - 125) லும் காண இயலுகின்றது.

"வருந்துநாய் நாவின் பெருந்தகு சீறடி
அரக்கு உருக்கன்ன செந்நிலன் ஒதுங்கலின்"

என்று நாயின் நாக்கினைப் போல் பாடினியில் பாதங்கள் இருந்தது என்று பொருநராற்றுப்படையில் குறிப்பிடப்படுகின்றது.

சேம்பின் இலைகளுடன் கூடிய பசிய பாசி படர்ந்த நீர்ப்பரப்பில் தன் குட்டியுடன் பசியினால் தவிக்கும் தன் பெண் நீர்நாயின் வருத்தத்தைப் போக்குவதற்காகக் காலைப் பொழுதில் ஆண் நீர்நாய் வாளை மீனைப் பற்றி அதனுடன் போரிட்டதால் நீர் கலக்கமடைந்தது. ஆங்கே குடிநீர் எடுக்க வந்த பெண்கள் கலங்கிய நீரை எடுக்காமல் சென்றனர் என்ற காட்சியினை,

"குழற்கால் சேம்பின் கொடுமடல் அகல்இலைப்
பாசிப் பரப்பில் பிறழொடு வதிந்த
உண்ணாப் பிணவின் உயக்கம் சொலிய
நாள்இரை தரீஇய எழுந்த நீர்நாய்
வாளையொடு வழப்ப, துறை கலுழ்ந்தமையின்" (அகம். 336)

என்ற பாடல் சுட்டுகின்றது.

ஆண்நாய் பெண்நாயின் பசியினைப் போக்க பன்றியினைத் தாக்கிய செய்தியினை (அகம் - 21) காவன் முல்லைப் பூதனார் காட்சிப்படுத்துகின்றார்.

<u>குரங்கு</u>

குறிஞ்சி நிலத்தில் வாழும் ஆண் குரங்கு அறியாமல் பாறையின் மீதுள்ள சுனையில் தேனைக் குடித்துவிட்டு மரத்தில் ஏறாமல் சந்தன மரத்தின் நிழலில் உறங்குவதனைத் தலைவனின் களவொழுக்கத்திற்குச் சான்றாக்குகிறது.

"பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
அறியாது உண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது,
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்
குறியா இன்பம், எளிதின், நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்தும் நாட" (அகம் - 2)

என்ற பாடல் அகப்பாடல் விலங்குகள் வாழ்வியலில் இயல்பான சில போக்குகளை உணர்த்துகின்றன. மற்றொரு அகப்பாடல்,

மென்மையான தலையினையுடைய கடுவன் தனது மந்தியின் பசியினைப் போக்க பலாப்பழத்தின் சுளையைத் தோண்டி எடுத்தலால் உண்டான வாசம், தலைவியின் துன்பக் குறியீடாக அமைந்து,

"கயந்தலை மந்தி உயங்குபசி களைஇயர்
பார்ப்பின் தந்தை பழச்சுவை தொடினும்
நனிநோய் ஏய்க்கும் பனிகூர் அடுக்கத்து" (அகம். 288)

என்ற அடிகள் சுட்டுகின்றன.

கொடிய விலங்குகளுக்கு அஞ்சாமல் தன் குட்டிகளுக்குப் பால் கொடுத்துக் காக்கும் மந்தியின் மனநிலை தலைவன் பொருளீட்ட பாலைவழி செல்வதோடு ஒப்பீட்டு நற்றிணை (57) பேசுகின்றது.

குரங்குகளில் முக்கியமான ஒரு நிகழ்வு குறுந்தொகை சுட்டுகின்றது. தன் துணையை இழந்து வருந்தும் பெண் குரங்கு தற்கொலை செய்து கொண்டதான குறிப்பினை,

"கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றென
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி,
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர்செகுக்கும்" (குறுந். 69)

என்ற பாடலில் குரங்கின் உயர் பண்பு குறுந்தொகை காட்சிப்படுத்துகின்றது.

குதிரை

குதிரைப் படைக்கு மிக சிறப்பாகப் பேசப்பட்டாலும் வளர்க்கப்பட்டாலும் வேகமாக வந்த குதிரையின் காட்சிகளை,

"மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்"

குதிரை எந்த அளவிற்கு வேகமாகமோ செல்லுமோ, அதுபோல தலைவியின் காதல் வாழ்க்கை அலராகப் பரவியது என்று (அகம். 160) பேசுகின்றது ஒரு பாடல்.

பல்லி

பல்லியின் குரலைச் சகுனமாகக் கொள்வது பண்டுதொட்டு இருந்து வரும் மரபாகும். இன்றும் உடம்பின் எப்பகுதியில் விழுந்தால் என்னென்ன பலன் என்று கணிப்பர் பலர்.

தலைவனைப் பிரிந்து வாழும் தலைவி பல்லியின் நிமித்தத்தைப் போற்றித் தொழுது வாழ்ந்ததை,

"உள்ளுதொறு படூஉம் பல்லி
புள்ளுத் தொழுது உறைவி செவிமுதலானே" (அகம். 351)

ஏன்றும் பல்லி சொல் கேட்டல் என்பது சாதாரண மனிதர்கள் மட்டுமின்றி மன்னர்களும் கவனம் செலுத்தும் ஒன்று என்பதனை,

"நிரைநிலை நடுகல் பொருந்தி இமையாது
இரைநசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி
சிறிய தெற்றுவது ஆயின் பெரிய
ஓடை யானை உயர்ந்தோர் ஆயினும்
நின்றாங்குப் பெயரும் கானம்" (அகம். 387)

என்ற பாடலில் மருதன் இளநாகனார் காட்சிப்படுத்துகின்றார்.

<u>எறும்பு (முயிறு)</u>

மிகச் சிறு உயிரினமான எறும்பு கூட சங்கப் புலவர்களின் பாடல்களிலும் பார்வையிலும் விடுபடவில்லை என்பது சிறப்பு. தலைவனின் பரத்தமையால் தலைவியின் இடையூறு ஏற்படுவதை உணர்த்தும் நிலையில் எறும்பு (முயிறு) தலைவிக்கும், நாரை தலைவனுக்கும் அறிவுறுத்தல் பரத்தைக்கும் அமைத்து காட்டுகின்றது.

"பழனப் பாகல் முயிறு மூசு குடம்பைக்
கழனி நாரை உரைத்தலின் செந்நெல்
விரவுவெள் ளரிசியின் தாஅம் ஊரன்" (நற். 180)

என்ற பாடலடிகள். இதனுள் மற்றுமொரு குறிப்பும் அறிய இயலுகின்றது. எறும்பு என்று கூறாமல் முயிறு என்று கூறியதனால், இது எறும்பின் ஒரு வகையாகக் காணப்படுகின்றது. அதாவது கட்டெறும்பிலும் ஒருவகை. ஆனால் செந்நிறம். இன்றைய சூழல்களிலும் தென்னை, மா போன்ற மரங்களில் நாம் இதனைக் காண இயலும். இதனையே இங்கு சுட்டுகின்றார்.

கரடி

கரடி என்னும் பெயர் சங்க இலக்கியங்களில் இல்லை. எண்கு, உளியம்.. என்ற பெயர்களில் காட்சியாகின்றன இலக்கியங்களில் நற். 192, அகம். 201, 313 என்ற பாடலடிகளில் காண இயலுகின்றது.

வறுமையின் அடையாளமான விலங்குகள்

மக்களின் வாழ்வியலில் சிறப்பில் மட்டுமின்றி அவர்களது துன்பத்திலும் குறிப்பாக வறுமையிலும் சில விலங்குகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

"உடும்புரித் தன்ன வென்எழு மருங்கிற்
கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது" (புறம். 68)

என்று புறநானூறும்,

"புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோரர், முதுசுவர் கணச்சிதல் அரித்த" (சிறுபா. 132-133)

என்று சிறுபாணாற்றுப்படையும் காட்சிப்படுத்துகின்றன.

<u>பறவைகள்</u>

சங்க இலக்கியங்களில் பல வகையான பறவைகள் சுட்டப்படுள்ளன. அன்றில், நாரை – பெருநாரை, நந்துநாரை, செவ்வரி நாரை, செங்கால் நாரை, பூ நாரை என்ற வகைகளும், கொக்கு – வெண்குருகு, வெள்ளங்குருகு, சிறுவெள்ளங்குருகு என்ற வகைகளும், கோழி – நீர்க்கோழி, நீலக்கோழி, தாமரைக்கோழி, கானக்கோழி என்ற வகைகளும், சிறுவெண் காக்கை, புறா, முதுக்குறை குருவி, மனையுரை குருவி, மலையுரை குருவி, கழுகு, பருந்து, மயில், குயில், குக்கில், காரி, கிளி, தும்பி முதலான பறவைகள் சங்க மக்கள் வாழ்வில் முக்கிய இடம்பெற்றுள்ளன. நாம் மிகவும் அறிந்த வரிகள்,

"நாராய் நாராய் செங்கால் நாராய்"

என்பதும்,

"தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்"

என்பதும் போன்ற குறிப்புகளும், பறவைகளும் சய உயிராகப் பார்க்கப்பட்டமையைப் பதிவு செய்கின்றன. இதில் மிகு சிறப்பிற்குரிய,

"பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொ
டுடனுயிர் போகுக தில்ல கடனறிந்
திருவே மாகிய வுலகத்
தொருவே மாகிய புன்மைநா முயற்கே" (குறுந். 57)

என்ற பாடலடிகளும் மிகவும் சிறப்பான நிலையில் பல்வேறு சான்றோர்களால் சான்றுரைக்கப்படும் பறவைகள் தொடர்பான குறிப்புகளாகும்.

கோழிகள்

தன் குஞ்சுகளைப் பாதுகாக்கும் இயல்பில் மிகவும் தலைமைத்துவம் உடையவை கோழிகள் எனலாம். எனவேதான் குறுந்தொகையும், 'வீட்டில் வாழும் பெட்டைக் கோழிகள் மாலையில் வேலிப் பக்கமாகக் காட்டுப் பூனைக் கூட்டம் வருவதனைக் காண்கின்றன. அவற்றிற்கு தம் குழந்தைகள் இரையாகாமல் தப்பும் வகையில் பாதுகாப்பாக அழைத்துச் செல்கின்றன என்பதனை,

"மனையுறை கோழி குறுங்காற் பேடை
வேலி வெருகினம் மாலை உற்றெனப்
புகுமிடம் அறியாது தொகுபுஉடன் குழீஇப்
பைதல் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்கு" (குறுந். 139)

என்ற பாடல் சுட்டுகின்றது.

காகம்

ஒற்றுமையின் உயிர் பண்புடையதாகக் காணும் காக்கை 'விருந்து வரக் கரையும் காக்கை' என்று

"விருந்து வரக்கரைந்த காக்கை யதுபலியே" (குறுந். 210)

என்று சுட்டுகின்றது.

ஒரு மன்னன் மகன் அரச குலத்தைச் சார்ந்த ஒரு பெண்ணைக் கண்டு மயக்கம் கொள்கின்றான். ஆனால் அவள் கருப்பாக உள்ளாள். எனவே இவள் மேட்டுக் குடியினைச் சேர்ந்தவளாக இருப்பாளா என்ற சந்தேகம் அவனுக்கு, அவளது கண் காக்கையின் நிறத்துடன் சுட்டும் காட்சியினை,

"கானக் காக்கைக் கலிச்சிறகு ஏய்க்கும்
மயிலைக் கண்ணிப் பெருந்தோட் குறுமகள்
ஏனோர் மகள்சொல் இவள்என விருப்புற்று" (புறம். 242)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

பாரதியின் காக்கைச் சிறகிற்கான பார்வை இங்கே மாறுபடுகின்றது. தன் வரவை அறிந்த தலைவியின் குறிப்பு, 'காக்கை உணர்த்தியதாலோ' என்ற பாகனைக் கேட்கும் தலைவன் கூற்று,

"செஞ்சோற்ற பலிமாந்திய கருங்காக்கை" (பொருந. 183)

என்ற அடியில் காணலாம்.

காக்கை கரையவில்லை. ஆனால், உடன்போக்கு சென்ற தன் மகள் திரும்ப வேண்டும் என்ற நற்செய்திக்காக காகத்தினைக் கரையும்படி வேண்டும் நற்றாயின் மனநிலையை,

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை

---------- ---------- ----------

டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே" (ஐங். 139)

என்ற பாடலில் காண முடிகின்றது.

புறாக்கள்

வெப்பம் உடையதான பாலையில் இலைகள் உதிர்ந்த மரங்களில் வாழ்ந்த புறாக்களில் பெண் புறா வெப்பத்தினால் துன்பப்படுவதனைக் கண்டு ஆண்புறா தன்னுடைய சிறகினால் நிழல் கொடுத்து அதன் வருத்தத்தைத் தீர்க்கும் காட்சியினை,

"அன்புகொள் மடப்பேடை யசைஇய வருத்தத்தை

மென்சிறகால் ஆற்றும் புறவு" (கலித்.)

என்று சுட்டுகின்றது.

பறவைகளைத் தம்முடைய பாட்டில் குறிப்பிட்டக் காரணத்தால் சில புலவர்கள் தங்களுடைய இயற்பெயருடன் சிறப்புப் பெயராகப் பறவையின் பெயர் பெற்றதனைக் காண இயலுகின்றது. 'விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே' என்ற காக்கையைப் பாராட்டிய நச்செள;ளையார் 'காக்கைப் பாடினியார் நச்செள;ளையார்' என்று சுட்டப்படுகின்றார். அவ்வாறே 'மதுமரப் பொந்திற் கதுமென வியம்பும் கடகைக் கோழியாளுந் தாழிய பெருங்காடு' என்று மயானத்தில் கத்திக் கொண்டிருக்கும் கூகைக் கோழியைப் பாடிய புலவர் 'கூகைக் கோழியார்' என்றும், குப்பைக் கோழியின் சண்டையினைப் பாடிய புலவர் 'குப்பைக் கோழியார்' என்றும் தும்பியைப் பாடிய புலவர் 'தும்பிசேர் கீரனார்' என்றும் சுட்டப்படுகின்றனர்.

உணவாகப் பயன்பட்ட விலங்குகள்

முயல், உடும்பு, கோழி, ஆடு, பன்றி, மீன் வகைகள், யானை, பறவைகள், மான் வகைகள் போன்ற அனைத்தும் உணவாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சுவையான மிக உயர்ந்த வகையான உணவுகளாகவும் இவை வழங்கப்பட்டுள்ளன. சில நேரம் வயிற்றுப் பசிக்குரியதான பங்கீடாகவும் அது அமைகின்றது என்பதனையும் காண முடிகின்றது.

"இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த

அவைப்புமான் அரிசி அமலை வெண்சோறு

கலைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்” (சிறுபா. 193-195)

என்றும், ஊண் துண்டுகளை வாட்டி உண்ணும் பழக்கத்தை,

“வெண்ணெல் வல்சி

மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவீர்” (பெரும்பா. 255-256)

என்றும், பன்றிக்கறி பற்றி,

“காழிற் சுட்ட கோழூன் கொழுங்குற” (பொருந. 105)

என்றும்,

“கடல் இறவின் சூடுதின்றும்

வயல் ஆமை புழுக்கு உண்டும்” (பட்டினப். 63-64)

என்றும் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

நிறைவுரை

விலங்குகள் என்பதும் சக உயிர்கள் தான் வள்ளலார் பார்வையில். சங்க இலக்கியம் என்பது நம் முன்னோர்களால் நமக்களிக்கப்பெற்ற பெரும் புதையல்கள் ஆகும். அதனுள் அமைந்துள்ள விலங்குகள் பற்றிய தரவுகள், ஏதோ ஒரு விலங்கு தானே என்று இன்றும் பலர் காட்டும் அலட்சிய மனோபாவத்திற்கு சாவுமணி அடிக்கும் தன்மையினதாய், சக உயிராய், சக உணர்வாய், சக வாழ்வாய் பயணிப்பது என்பதனை உணர்ந்து எல்லா உயிர்களையும் தம்முயிராய் நேசிக்கச் சொன்ன வள்ளலாரின் நெறியில் நிற்க இயலவில்லை என்றாலும் குறைந்தது மனிதனாகவாவது நடந்து கொள்ள நாம் இன்றும் பெரும்பாலும் பழக வேண்டும் என்பதுவே இத்தகவல்கள் மீட்டுருவாக்கம் செய்யப்படுவதன் நோக்கம் ஆகும்.

குறிஞ்சி நிலத் தாவரங்கள்

முனைவர் ஆ. பாண்டி உதவிப் பேராசிரியர் (கௌ), மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி, சிவகங்கை.

கருவில் இருக்கும் குழந்தை நோயோடு மண்ணிற்கு வருகின்ற சூழலில் நமது வாழ்க்கை முறையுள்ளது. நம் ஆதிப்பண்பாட்டின் அழித்தொழிப்பினால், ஐம்பது வயதைக் கடந்து செல்வது இன்று அரிதாகிவிட்டது. கல்வியில் தொடங்கி உண்ணும் உணவு வரை வெள்ளையினப் பண்பாடே நம்மை ஆட்கொண்டுள்ளது. இந்தியக் கண்டத்தை ஐரோப்பியர்கள் தங்களுக்குரியதாகத் தகவமைத்துக் கொண்டதன் விளைவு சொந்த மண்ணில் சுகமற்று வாழ்ந்து வருகிறோம். உலகிற்கு நோய் நொடியின்றி நூறாண்டு காலம் வாழ்வதற்கான விதிகளைக் கற்றுக் கொடுத்த தமிழினம் சுகாதாரமற்ற விளிம்பிற்குச் சென்றுகொண்டிருக்கிற அவலநிலையின் வெளிப்பாடுதான் இயற்கையைப் புறந்தள்ளுதலின் அறியாமை. இரண்டாயிரம் ஆண்டுக்காலத் தொன்மையுடைய தமிழர்களின் சூழலியல் சார்ந்த வாழ்வியல் முறைகள் குறித்து சங்கத் திணைக்கவிதைகள் வழி அறியமுடிகின்றன. எனவேதான், இச்சங்க காலத்தை 'இயற்கை நெறிக்காலம்' என வரையறை செய்துள்ளனர். ஐவகை நிலப்பகுப்பும் நிலத்திற்கானச் சூழல் தகவமைவும், சூழல் சார்ந்;த மாந்தர் வாழ்வியலும் சார்ந்த திணைமவியல் கோட்பாட்டுச் சூழல் கட்டமைப்பில்தான் தமிழர்கள் வாழ்ந்துள்ளனர். இந்நிலம் தவிர்த்து பிறதேசத்து செல்வாக்கினை தமிழர்கள் வாழவிரும்பாத காலம்தான் திணைமவியல்காலம். தமிழ்நிலத்தை வரையறை செய்துள்ள கருத்தைத் தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரம் "வடவேங்கடம் தென்குமரி ஆஇடைத் தமிழ் கூறும் நல் உலகத்து" வழி அறியலாகிறது. "ஓர் இனத்தின் வாழ்க்கைமுறையும் நம்பிக்கைகளும், குணநலன்களும், பண்பாட்டுக்கூறுகளும், அந்த இனம் சார்ந்திருக்கும் நிலத்தன்மை, தட்பவெட்பநிலை ஆகியவற்றின் பின்னணியில்தான் அமையும் என குரோஸ் ஹோட்ஜ் (புசழளந ர்ழனபந) எனும் நிலவியல் அறிஞர் கூறுகிறார். தமிழர்களுக்கு இக்கருத்துப் பொருத்தமாக அமைந்துள்ளது. திணைமவியல் சூழலில் பயிர்விக்கப்பட்ட உணவுப் பயிர்கள்,

உழவுமுறைகள், பயிர்அறுவடை, பயிர்க்காவல் முறை ஆகியன குறித்த பதிவுகள் திணைக்கவிதைகளில் காணக்கிடைக்கின்றன. திணைக்கட்டமைப்பில் முதன்மையாக அமைந்த குறிஞ்சி நிலமே வேளாண்மையின் தோற்றுவாயாக இருந்திருக்க முடியும். நாகரிக வளர்ச்சியின் விளைவாக நீர் மேலாண்மை உருவாக்கத்தில் மருதம் உதயமாயிருக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு நிலவியல் சூழலும் மாந்தரின் தேவைக்கிணங்கவே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தவகையில், குறிஞ்சி நிலமானது இந்தியத் துணைக்கண்டத்தின் மேற்கில், அரபிக்கடலைச் சார்ந்து அமைந்திருக்கும் பகுதி. இம்மலைப் பகுதியே இன்று 'மேற்கு மலைத்தொடர்' என்று அழைக்கப்படுகிறது. இம்மலை மராட்டிய மாநிலத்தில் தபதி ஆற்றங்கரையில் தொடங்கி, குஜராத், கோவா, கர்நாடாக, கேரளா இறுதியாகத் தமிழகத்தின் கன்னியாகுமரியில் முடிவடைகிறது. சுமார் 1600 கி.மீ நீளமும் 900 -2400 வரையிலான உயரமும் கொண்ட இம்மலை, இமயமலைக்கும் மூத்த மலையாக விளங்குகிறது. இப்பெருமலையைத் தமிழர்கள் 'மலையும் மலைசார்ந்த' குறிஞ்சி நிலமாக வரையறை செய்திருக்கிறார்கள். கிழக்குத் தொடர்ச்சி மலை கிழக்குக் கடற்கரையை ஒட்டியமைந்துள்ளது. மேற்குத்தொடர்ச்சி மலைபோல் ஒரே தொடர்ச்சியாக இல்லாமல் பகுதி பகுதியாக அமைந்துள்ளது. தமிழகத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைகளாக, கொல்லிமலை, பச்சைமலை, கல்வராயன்மலை, சவ்வாதுமலை, சேர்வராயன் மலை, சிறுமலை, கரந்தமலை ஆகியன உள்ளன. கிழக்குத் தொடர்ச்சி மலை நீலகிரியில் முடிவடைகிறது. இம்மலைநிலங்களும் குறிஞ்சி நிலமாகவே கருதப்படுகின்றன. கடையேழு வள்ளல்கள் வாழ்ந்த ஆட்சி செழுத்திய மலைப்பகுதிகள் கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளாகும். மேற்குத் தொடர்ச்சி மலைகளும், கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் தமிழகத்தின் பாதுகாப்பு அரண்களாக விளங்குவதைக் காணமுடிகிறது. கர்நாடகம் தொடங்கி, கன்னியாகுமரி வரையிலான மலைப் பகுதிகளையே தமிழர்கள் பயன்படுத்தியிருக்க முடியும். இம்மலைப்பரப்பில் மக்கள் வாழ்ந்ததற்கான சான்றாதாரங்களை பழனிமலை, தாண்டிக்குடி, பொருந்தல், கொடைக்கானல், பெருமாள்மலை, அடுக்கம், பன்றிமலை, அலைக்கல்லு, தட்டக்குடிகுhடு போன்ற பகுதிகளில் கண்டறியப்பட்ட அகழ்வாய்வுகளின் அறியமுடிகின்றன. சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்ற திணைப்பாடல்களில் பொருந்தல், கொடைக்கானல், தாண்டிக்குடி ஆகிய ஊர்களில் ஆட்சி செழுத்திய குறுநில மன்னர்கள் குறித்த பதிவுகளைப் பின்வருமாறு காணலாம். பெருந்தலைச் சாத்தனார் பாடிய புறநானூற்றுப் பாடல் 205 இல், கோடைப் பொருநன் என்று குறுநில மன்னன் குறித்து பதிவு இடம்பெற்றுள்ளது. சான்று:

"முற்றிய திருவின் மூவர் ஆயினும்

பெட்பின்று ஈதல் யாம் வேண்டலமே:
விறற் சினம் தணிந்த விரை பரிப் புரவி
உறுவர் செல் சார்வு ஆவி, செறுவர்
தாள் உளம் தபுத்த வாள் மிகு தாளை
வெள் வீ வேலிக் கோடை பொருந!".

கோடை என்னும் பெயர் கொண்ட குறிஞ்சி நில குறுநில மன்னன் மூவேந்தர்களுக்கு இணையாக வாழ்ந்திருப்பதை இக்கவிதை உணர்த்துகிறது. கோடை என்னும் பெயர் பிற்காலத்தில் கொடை என்பதாக மருவி இன்று கொடைக்கானல் என்று நிலைத்துவிட்டது. அந்தவகையில், கோடை என்ற குறிஞ்சி நில மன்னன் ஆண்ட மலைப்பகுதியே இன்றைய கொடைக்கானல் மலை. அகநானூற்றுப் பாடல் 13 இல் இக்கோடைக்குத் தலைவனாகத் தென்னவன் பாண்டியன் குறிப்பிடப்படுகின்றான். இப்பதிவு குறிஞ்சி நிலத்தின் குறுநில மன்னனாக விளங்கிய கோடையை வீழ்த்தி பாண்டியன் ஆட்சி செழுத்தியதன் வெளிப்பாடாகக் கருத இடமுள்ளது. மேலும், குறிஞ்சி நிலக் குறவர்கள் முருகனுக்குப் பூசை செய்து கொண்டு வந்த சந்தனத்தைப் பெற்றுள்ளான், பாண்டியன் என்பதிலிருந்து குறிஞ்சிக் குறுநிலவேந்தன் கோடை ஆட்சி செய்த மலைப்பிரதேசம் தென்னவன் பாண்டியனால் வெற்றி கொள்ளப்பட்டு திரை செலுத்தும் நிலமாகிப் போனதன் அடையாளமாகவும் இக்கவிதை விளங்குகிறது. சான்று,

“தன் கடற் பிறந்த முத்தின் ஆரமும்
முனை திறை கொடுக்கும் துப்பின், தன் மலைத்
தெறல் அரு மரபின் கடவுட் பேணி,
குறவர் தந்த சந்தின் ஆரமும்
வரை நிலை இன்றி இரவலர்க்கு ஈயும்
வள் வாய் அம்பின், கோடைப் பொருநன்”

இதுபோல், பழனிமலைக்கு அருகில் உள்ள தாண்டிக்குடியை ஆட்சி செய்த குறுநில வேந்தனைக் குறித்த பதிவினை புறநானூற்றுப்பாடல் 399 இல் அறியமுடிகிறது. ஐயூர்முடவனார் பாடிய இப்பாடல் தாண்டிக்குடியை “வான்தோய் உயர்சிமைத் தோன்றிக்கோவே” என்று குறிப்பிடுகிறது. பொருந்தில் இளஞ்சேரலிரும்பொறை குறித்த பதிவு பொருந்தல் எனும் மலைப்பகுதியை ஆண்ட சேரமன்னனைக் குறித்து இடம்பெற்றுள்ளது. மேற்கு மலைப் பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்துள்ளதுபோல் கிழக்கு மலை நிலப்பரப்புகளிலும் கடையேழுவள்ளல்களான ஓரி, பழையன், தித்தன், அழிசி, மலையமான், பெரியன், ஆயண்டிரன், அன்னி, பாரி எனும் குறுநில மன்னர்கள்

வாழ்ந்து ஆட்சி செலுத்தியதற்கான சங்கத் திணைப்பாடல்கள் வழி அறியமுடிகின்றன. பறம்பு மலையை ஆட்சி செய்த குறுநில மன்னன் பாரியைக் குறித்து கபிலரின் பாடல் வரிகள் பறைசாற்றுகின்றன. "ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும் சிறுவரை சென்று நின்றோர்க்கும் தோன்றும்". இதுபோல், நவிரம் எனும் மலைப்பகுதியை ஆய்அண்டிரன் என்ற குறுநில மன்னன் ஆட்சி செய்ததை அகநானூற்றுப்பாடல் 198) எடுத்துரைக்கிறது. சான்று:

"தெனாஅது, ஆஅய் நன்னாட் டணங்குடைச் சிலம்பிற்
கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்"

இதுபோல், ஒய்மாநாட்டு நல்லியக்கோடனின் சிறப்புகளைக் குறித்து சிறுபாணாற்றுப் படையில் காணமுடிவதோடு கடையேழு வள்ளல்களுக்குப் பின்னால் நல்லியக்கோடன் வழங்கும் கொடைச் சிறப்பினையும் அறியமுடிவதில் இருந்து கிழக்குத் தொடர்ச்சி மலையாண்ட குறுஞ்சி நில வேளிர்களும், மேற்கு மலைத் தொடர்ச்சி குறுஞ்சி நில பொருப்பன்களும் சமவெளிப்பகுதியில் வாழ்ந்த மூவேந்தர்களால் அழித்தொழிக்கப்பட்ட செய்தியை மேற்குறித்த சான்றுகள் வழி அறியமுடிகின்றன. இன்று, மேற்கு மலைத் தொடர்ச்சி நிலப்பரப்பில் அகழ்வாய்வு நிகழ்த்திய கே.ராஜன், மற்றும் அதியமான் குழு சங்க காலத் தமிழர்கள் வாழ்ந்ததற்கான தொல்லியல் பொருட்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கே.ராஜன் எழுதிய என்ற நூல் இரும்புக் காலத்திற்கு முன்னதான தமிழர்களின் வாழ்வியல் முறைகளையும், வேளாண்மைச் செயல்பாடுகளையும், சமவெளிப்பகுதிகளில் வாழ்ந்த மக்களோடு கொண்டிருந்த வாணிப முறைகளையும், கிரேக்கரோடு கொண்டிருந்த வாணிபத்தையும் எடுத்துரைக்கிறது. பொருந்தல் பகுதியில் இறந்தவர் தாழிக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு படி நெல் கி.மு.490 ஆண்டினைச் சார்ததாகவும், இயற்கையில் விளையாமல், பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்பட்ட நெல் என்பதை அமெரிக்க ஆய்வியல் கூடம் வெளிப்படுத்தியுள்ளது. தமிழர்கள் பன்னெடுங்காலமாக வேளாண்மை உற்பத்தியில் ஈடுபட்டிருதனர் என்பதற்கு நல்லதொரு சான்றாக உள்ளது. மேலும், புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண்ணாலான புரிமனையில் தமிழ் பிராமியில் எழுதப்பட்ட 'வயிர' என்ற சொல் வயிரம் உறுதி என்ற அர்த்தம் தருவதோடு, தென்னிந்தியப் பகுதியில் அமைந்துள்ள நாவலந்தீவில் வைரங்கள் வெட்டிஎடுக்கப்பட்ட வரலாற்றினையும் இது உணர்த்துகிறது. இவை, அசோகன் காலத்திற்கு முன்னதாகவே தமிழர்கள் தமிழ் பிராமி எழுத்து வடிவங்களையும், நாகரிக வாழ்வையும் மேற்கொண்டதற்கான வரலாற்றுச் சான்றாக விளங்குவதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் பிற்காலத்திலும் குறிஞ்சி நிலத்தை ஆட்சி செய்தவர்கள் பற்றிய குறிப்புகளைக் கல்வெட்டில் காணமுடிகிறது. உதாரணமாகா, 12, 13, 16 நூற்றாண்டைச் சார்ந்த

கல்வெட்டுக்களில் சமநிலத்தில் வாழ்ந்த மக்களைக் குடியேற்றிய மன்னர்களின் செயல்பாடுகளையும், அவர்களின் அதிகாரங்களையும் அறியமுடிகின்றன. குலசேகரப் பாண்டியன் கல்வெட்டில் தான்றிக்குடி என்று இடம்பெற்றுள்ளது. தேரையூர் என்ற ஊரில் 13 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றை தொல்லியல் அறிஞர் வெ.வேதாச்சலம் கண்டுபிடித்துள்ளார். வண்ணான்குடி என்ற ஊரில் தங்கிய மன்னன் இவ்வூருக்கு நிலக்கொடை வழங்கியுள்ளான். களிங்கராயர், வேணாடு உடையார், தொண்டைமானார், செந்தமிழ்ப்பிள்ளை ஆகியோர் இதில் கையெழுத்து இட்டுள்ளனர். இதுபோல், தொல்லியலர் அறிஞர். சி.சாந்தலிங்கம் போலூர் கிராமத்து விநாயகர் கோயிலில் 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டைக் கண்டறிந்துள்ளார். கல்வெட்டின் இறுதியில் பாம்பு, யானை, காளை ஆகியவற்றின் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகப் படைக்கப்பட்டுள்ளன. மன்னனின் தூண்டுதலால் புதிய குடியிருப்பு ஒன்று இப்பகுதியில் நிறுவப்பட்டதை இக்கல்வெட்டால் அறியமுடிகிறது. மன்னனுக்கு நன்றியுடன் நடந்துகொள்வதாக இவ்வூரார் உறுதிமொழி அளித்துள்ளனர். மேலும், அடர்ந்த காட்டுப்பகுதியில் ஏற்கனவே வாழ்ந்த குடியிருப்பாளர்களுக்கும் புதிதாக அங்குக் குடியேறிவர்களுக்கும் இடையிலான முரண்பாட்டை மன்னன் தீர்த்து வைத்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. அடர்ந்த காட்டுப் பகுதியில் புதிய குடியிருப்பு உருவாக்குவதில் மன்னன் காட்டிய ஆர்வத்தை அறியமுடிகிறது. கொடைக்கானலில் இருந்து 45 கி.மீ தொலைவில் உள்ள கீழாவரையில் புதிய குடியிருப்பு ஒன்றை மன்னன் உருவாக்கியதைக் குறிப்பிடும் கல்வெட்டில் 'மன்னனுக்கு எதிராக நடந்தால் அவன் தம்மை வெட்டிப்போடலாம். என்றும், மன்னனுக்கு எதிராக நடப்போரை தாமே பிடித்து வெட்டுவதாகவும் புதியதாகக் குடியேறியவர்கள் உறுதியளிதுள்ளனர்" இவற்றிலிருந்து குறிஞ்சி நிலம் ஆதி முதல் ஐரோப்பியர் வரை வேட்டையாடப்பட்ட நிலமாகவே இருந்துள்ளதைத் தெள;ளத் தெளிவாக அறியமுடிகிறது. இன்றும் செம்மாந்து நிற்கும் இக்குறிஞ்சி நிலம் தன்னகத்தே பல்வேறு சிறப்புகளையும் கொண்டு திகழ்கிறது. அதாவது, உலகின் வளம்மிகுந்த 32 இடங்களில் மேற்குமலைத் தொடரும் ஒன்றாகும். மேலும் பல்லுயிர்களங்கள் 8 இல் ஒன்றாகவும் உள்ளது. இவற்றில் 50 அணைக்கட்டுகளும், 126 முக்கிய ஆறுகளும், 29 நீர்வீழ்ச்சிகளும் உள்ளன. இவைமட்டுமின்றி, முள்புதர்கள், காடுகள், புல்வெளிப்பிரதேசம், சோலைக்காடுகள் என வியாபித்து தென்னிந்தியாவின் அரணாக விளங்கும் இதன் நிலப்பரப்பில், 7,402 பூக்கும் தாவரங்கள், 1814 பூக்காத தாவரங்கள், மற்றும் மூலிகைச் செடிகள், 10 வகையான காட்டுத் தேனீக்கள், 6,000 வகை பூச்சியினங்கள், 508 பறவையினங்கள், 179 நீர், நில வாழ்விகள், 14 தேசியப் பூங்காக்கள், 44 வன உயிரினச் சரணாலயங்கள், 11 புலிகள்

காப்பகம், இந்தியாவில் யானைகள் அதிகமாக வாழும் மலைப்பகுதி, 35 சிகரங்கள் கொண்ட இம்மலைப் பிரதேசத்தினை 2012 ஆம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனம் 'பாரம்பரியக் களம்' என்று பெருமைப்படுத்தியுள்ளது. சங்க காலம் தொடங்கி இன்றைய நூற்றாண்டு வரை குறிஞ்சி நிலத்தின் மீது நவீனத் தாக்குதல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. தமிழர்களின் அரணாக விளங்கம் இம்மாபெரும் மலைப்பகுதி அழிந்தால் தமிழர்களின் குறைந்தபட்ச சுகாதாரமான வாழ்க்கை முறை அழியும், இந்தியாவின் தலைநகரான டெல்லியைப் போல் அனைத்து மாசுபாடுகளும் ஏற்படும் என்பதில் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த குறிஞ்சி நிலத்தில்தான் தமிழன் வேளாண்மை செய்து பயிர்களை விளைவித்திருக்கின்றான். ஆனால், இன்று பயிரிடப்படவில்லை. அவை பயிரிடப்பட்டதற்கு இலக்கியங்கள் மட்டும் ஆதாரமாக உள்ளன. நவீன உலகியல் சூழலில், புதிய பொருளாதாரக் கொள்கையில், உலகமயமாதலின் பின்னணியில் வாழ்கின்ற நமக்கு ஐரோப்பியர்கள் விட்டுச் சென்ற வேளாண்மையைக் கட்டிக்காப்பதில் மெனக்கெடுகிறோமோ தவிர தமிழர்களின் பாரம்பரிய பயிர்களான தினை, சாமை, வரகு, பனிவரகு, கேழ்வரகு, குதிரைவாலி, கம்பு, சோளம், ஐவனநெல் போன்ற பயிர்களை வேளாண்மை செய்வதில் முயற்சி மேற்கொள்வதில்லை. இவைகளை சிறுதானியங்கள் என்று சொல்லி அதன் தரத்தைக் கூட சுருக்கிக் குறிப்பிடுகிற அவலநிலையைக் காணமுடிகிறது. இவை சிறுதானியாங்கள் அல்ல, தமிழர்கள் பயன்படுத்திய பெருந்தானியங்களே. அந்த வகையில் சங்ககாலத்தில் தமிழர்கள் குறிஞ்சி நிலத்தில் பயிரிடப்பட்ட பயிர்கள், உழவுமுறைகள், நீர்ப்பாசனமுறைகள், போன்ற குறிப்புகளைப் பல்வேறு சங்;கப் பிரதிகளில் அறியமுடிகிறது. அவை ஒவ்வொன்றாகப் பின்வருமாறு எடுத்துரைக்கலாம். உலகில் எங்கும் காணப்படாத இருநூற்றி நாற்பத்தெட்டு அரியவகைத் தாவரங்கள் குறிஞ்சி நிலத்தில் மட்டும் உள்ளன. அத்தகையச் சிறப்புடைய குறிஞ்சி நிலத்தில் பயிரிடப்பட்ட பயிர்களில் முதன்மையாக விளங்குவது, தினையாகும். ஆங்கிலத்தில்; 'ஃபாக்ஸ்டெயில் மில்லட்' என்றழைக்கப்படும்., இதன் தாவரவியல் பெயர் 'எலுசின் கொரகான' என்பதாகும். தினைக்கு இறடி, ஏனல், இருவி போன்ற பிற பெயர்களும் உள்ளன. குறிஞ்சி நிலம் குறித்து அதிகமான பாடல்கள் பாடியுள்ள கபிலர் தினைப்பயிர் குறித்து அதிகமான பாடல்கள் பாடியுள்ளார். சங்க கால மக்களால் தினை உணவில் முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டது. சங்கப் பாக்களில் தினை 73 இடங்களில் பதிவாகியுள்ளது. தினையும், தினைப்பயிரும் தலைவிக்கான குறியீடுகளாக வந்துள்ளன. எப்பொழுதும் குளிர்காற்றும், மழைப்பொழிவும் சதம்பல் நிலமாக விளங்கும் குறிஞ்சி நிலத்தில் வேளாண்மை செய்வதன் பொருட்டு குறிப்பிட்ட காடுகள் அழிக்கப்பட்டு தினைப்

பயிரிடப்பட்டன. வேளாண்மையில் ஏர் பயன்படுத்தப் படவில்லை. வேளாண்மைக்கு என்று உருவாக்கப்பட்ட பகுதியைப் 'புரிய புனம்' என்றழைத்தனர். சான்று(குறுந்:5) குறிஞ்சி நிலத்தில் வன்புலம் என்பது அடர்ந்த சோலையைக் குறிக்கும். அடர்ந்த இச்சோலைகள் அழிக்கப்பட்டு குறிஞ்சி நில மக்கள் வாழும் நாடாக மாற்றியதற்குச் சான்றுகளாக, "வன்புலக் காட்டுநாட்டதுவே"(நற்:59), "வன்புல நாடன் வயமான் பிட்டன்"(புறம்:172) ஆகியவை இடம்பெற்றுள்ளன. மேற்குறித்த கருத்துக்களுக்குச் சான்றாகப் பிரதிகள் பின்வருமாறு இடம்பெறுகின்றன.

<u>உழப்படாத வேளாண்மை</u>

உலகில் கலப்பை பயன்படுத்தப்படாமல் வேளாண்மை செய்த இனம் தமிழினமாகத்தான் இருக்க முடியும் என்பதை புறநானூற்றுப் பாடல் (163) வழி அறியமுடிகிறது. சான்றாக,

"வாழ்தல் வேண்டிப்
பொய்கூறேன் மெய்கூறுவல்
ஓடாப் பூட்கை யுரவோர் மருக
உயர்சிமைய வுழாஅ நாஞ்சிற் பொருந"

உழவு செய்யாமல் தினை விதைக்கப்பட்டது. இப்பாடல் வேளாண்மையின் தொடக்கமாகவும் கருத இடமுள்ளது. அதேபோது, கானவர்கள் மரங்களை வெட்டிக் களைகளை நீக்கி, விளைநிலமாக ஆக்குவர். அந்நிலத்தில் கருந்தினை விதைக்கப் பெறும், அதன் கதிர்களைக் குறமகளிர் காவல் புரிந்த செய்தியினைக் குறுந்தொகைப் பாடல் 214 வழியாக அறியமுடிகிறது. சான்றாக.

"மரம் கொல் கானவன் புனம் துளர்ந்து வித்திய
பிறங்கு குரல் இறடி காக்கும், புறம் தாழ்
அம் சில் ஓதி, அசை இயல் கொடிச்சி
திருந்து இழை அல்குற்குப் பெருந்தழை உதவி"

இதுபோல், குறமகளிர் தினைப்புனம் காவல் காத்து நின்ற செயல்பாட்டினைக் குறித்து, நற்றிணைப் பாடல்: 393. புறநானூற்றுப்பாடல் :28-13. மற்றும் அகநானூற்றுப்பாடல் :102 இல் இடம்பெற்றுள்ளன. குறிஞ்சி நிலத்தில் கிளிகடியும் குறமகளின் இன்குரலை "இசையின் இசையா இன்பாணித்தே, கிளியவள் விளியென எழல் ஒல்லாவே" என்ற குறுந்தொகை(241) வரிகள் குறமகளின் குரலின் இனிமையைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளன. மேலும், கானவர் காட்டினை அழித்து வேளாண்மை செய்தது குறித்து, கலித்தொகை:பாடல் எண் 108.

குறுந்தொகை: 198,59,312. மலைபடுகடாம் :169, 107 .அகநானூறு: 126, 302, 209, நற்றிணை: 121, 206. ஐங்குநுறூறு:298, ஆகிய பாடல்கள் வழியாக அறியமுடிகின்றன.

உழவு வேளாண்மை

குறவன் தனது கொல்லையில் உழுது விதைத்த தினை மகசூழல் அதிகம் கண்டதை, நற்றிணைப்பாடல் (209) வெளிப்படுத்துகிறது. சான்றாக,

"மலை இடம்படுத்துக் கோட்டிய கொல்லைத்
தளி பதம் பெற்ற கான்உழு குறவர்
சில வித்து அகல இட்டென, பல விளைந்து
இறங்கு குரல் பிறங்கிய ஏனல் உள்ளாள்"

இப்பதிவு வேளாண்மையில், ஏரின் பயன்பாட்டின் வெளிப்பாடாகக் கொள்ள இடமுள்ளது. தினைகள் வெயிலில் காயவைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட செய்தியை புறநானூற்றுப் பாடல் 333 இல் அறியலாகிறது. வேளாண்மை செய்தற்கு நீர் மிகவும் அவசியம். நீpரின் இன்றியமையாமையைக் குறித்து, நற்றிணைப்பாடல் 1 இல் "நீர் இன்று அமையா உலகம் போல" என்ற கருத்து குறிப்பிடத்தக்கது. குறிஞ்சி நிலமக்கள் வேளாண்மை செய்தற்பொருட்டு மழைவேண்டி கடவுளிடம் வேண்டுகிற காட்சிகளும் பதிவாகியுள்ளன. கபிலர் இயற்றிய ஐங்குறுநூற்றுப்பாடல் 251 இல் குன்றக் குறவரர்கள் மழைவேண்டும் காட்சிப் பதிவாக,

"குன்றக் குறவன் ஆர்ப்பின்
எழிலி நுண்பல் ஆழி துளி பொழியும்
நாட நெடுவரைப் படப்பை நும் ஊர்க
கடுவரல் அருவி காணினும் அழுமே"

என்ற வரிகள் அமைந்துள்ளன. இந்தவகையில், தினைப்பயிரிடுதல் முறை குறிஞ்சி நிலத்தில் பெரும்பான்மையாகப் வேளாண்மை செய்யப்பட்டதை அறியலாம். இன்றைய நவீன வேளாண்மையில் குறிப்பாக மேற்குமலைத் தொடராகிய குறிஞ்சி நிலத்தில் இன்று பயிரிடப்படவில்லை. அன்றாட உணவில் தினை சேர்க்கப்பட்டால் உடல் ஆரோக்கியம் பெருவதற்கு அவற்றில் புரதம், வைட்டமின் பி, பாஸ்பரஸ், சுண்ணாம்புச்சத்து, இரும்புச் சத்து, நார்ச்சத்து ஆகிய சத்துக்கள் உள்ளன. மேலும், தினையை உணவில் பயன்படுத்துவதன் மூலம் குடல்புண், ரத்தசோகை, ஆகிய நோய்களில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

மலைநெல் அல்லது ஐவனநெல்

குறிஞ்சி நிலத்தின் நீராதாரமாக விளங்குவது சுனைநீரும், அருவியும் ஆகும். இவ்விரு நீராதாரங்களைக் குறித்து சங்கப்பனுவல்களில் காணமுடிகின்றன. அகநானூற்றில் களிற்றுயானை நிரையில் சுனைகள் பற்றிய குறிப்பினை எட்டு இடங்களில் காணமுடிகின்றன. இதுபோக, கலித்தொகைப்பாடல் எண் 55, மற்றும் புறநானூற்றுப் பாடல் 109, ஆகியவற்றிலும் சுனைகள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. சுனைநீரைப் பயன்படுத்தி மலைநெல்லை குறவர்கள் விளைவித்த செய்தியினைக்; காணமுடிகின்றன. குறிஞ்சி நிலத்தில் ஐவனம் என்னும் மலை நெல்லும், மூங்கில் அரிசியும் விளைவிக்கப்பட்டன. தினைக்கு அடுத்தபடியாக இவ்விரு நெல்வகைகளே குறிஞ்சி நில மக்களின் முக்கிய உணவுப் பொருளாக இடம்பெற்றுள்ளன. மருதநிலத்தில் பல்வகையான நெல்வகைகள் வேளாண்மை செய்யப்பட்டதற்குத் தமிழர்களின் நாகரிகம் முக்கிய வினையாற்றியுள்ளது. மேலும், நெல் விளைவதற்கு தண்ணீர் அதிகம் தேவையென்பதால், ஆற்றங்கரையில் தோன்றிய மருதநிலத்தில் நெல்வகைகள் பல்கிப்பெருகுவதற்கு ஏற்றதொரு களமாகவும் அமைந்தது எனலாம். (பழனிக்கு அருகில் உள்ள பொருந்தில் என்ற இடத்தில் கண்டறியப்பட்ட நெல் கி.மு 490 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்ற மேற்குறித்தக் கருத்தும் இவ்விடம் எண்ணத்தக்கது.) அருவிநீரைப் பயன்படுத்தி வேளாண்மை செய்தது குறித்து ஆய்விற்குரியது, ஆனால், அருவி குறித்த பதிவுகள் சங்கப் பனுவல்களில் இடம்பெற்றுள்ளன. அகநானூற்றுப் பாடல் 202 இல், "வயங்குவெள் அருவிய குன்றத்துக் கவாஅன்" என்ற குறிப்பு இடம்பெற்றுள்ளது. நெல்லைக் குறிக்க 'நெல், ஐவன், தோரை, அரி போன்ற சொற்கள் சங்கப் பனுல்களில் பயின்று வந்துள்ளன. சான்றாக, 'கழைவளர் நெல்லின் அரி உலை ஊழ்த்து' என்ற வரிகள் மலைபடுகடாத்தில் 188 இடம்பெற்றுள்ளது போல், மதுரைக்காஞ்சியில் (288) 'ஐவன வெண்ணெலொடு அரில் கொண்டிநீடி' என்ற தொடர் அமைந்துள்ளது. அரி என்ற சொல் பிற்காலத்தில் அரிசி என்று மருவியிருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாக புறநானூற்றுப் பாடல் 24 இல் 'அரி' என்ற சொல் பதிவாகியுள்ளது. 'ஒரைசா சாட்டைவம் இண்டிகா' என்பது இந்திய நெல்வகையைக் குறிக்கும் தாவரவியல் பெயராகும். பொருந்தில் கிடைத்த நெல்வகையும் இந்திய நெல்வகையைச் சார்ந்தது. அரிசி என்பது ஒரு புல்வகையைச் சார்ந்தது. இது தென்கிழக்காசியாவினைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும், இந்திய நெல்வகையில் இருந்து முற்றிலும் மாறுபட்டது என்பது குறிப்பிடத்தக்கது. நன்செய் நிலத்தில் விளையும் நெல்லை வெண்ணெல் என்றும், புன்செய் நிலத்தில் வானம் பார்த்த பயிராக விளைந்த நெல் ஐவன வெண்ணெல் என்றும் மேற்குறிப்பிட்ட பாடல்கள் வழி அறியமுடிகிறது. குறிஞ்சி நிலத்தில் மூங்கில் நெல் விளைவிக்கப்பட்டதை

கலித்தொகை 41 ஆம் பாடல் பதிவு செய்துள்ளது. "ஆடுகழை நெல்லை அரையுரலுட் பெய்திருவாம்". என்பதாகும். வெண்மையான நெல் அரிசிச் சோறுடன் ஆட்டிறைச்சியும் நெய்யும் கலந்த உணவினைக் குன்றக் குறவர்கள் தருவதாக நற்றிணைப்பாடல் (83) ஒன்றில் "மை ஊன் தெரிந்த நெய் வெண் புழுக்கல்" என்ற குறிப்பு உள்ளதை அறியமுடிகிறது. மேலும், குறிஞ்சி நிலத்தைச் சேர்ந்த கானகர் எனப்பட்ட வேடுவர் வீட்டில் இறைச்சி வகைகளோடு புளி சேர்த்து மூங்கில் அரிசிச் சோறு படைக்கப்பட்டதை கூத்தராற்றுப் படை வரிகள் வெளிப்படுத்துகின்றன. சான்றாக,

"வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை
முழவுமாத் தொலைச்சியபைந்நிணப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய தடியொடுவிரைஇ
வெண்புடைக் கொண்ட துய்தலைப் பழனின்
இன்புளிக் கலந்து மாமோ ராகக்
கழைவளர் நெல்லின் அரியுலை ஊழ்த்து"

சிறுதானிய உணவு வகைகளையும் தேவைக்கேற்ப அரிசிச் சோறையும் உண்டு வந்த தமிழர்களின் உணவுப் பழக்க முறையில் இன்று அரிசிச் சோறுதான் தமிழர்களின் முதன்மையான உணவாக மாறியுள்ளது. தமிழர்கள் விளைவித்த அரிசி சுகாதாரமானது, பெரும்பாலும் பல வண்ணங்களில் வெளிப்பட்டிருக்கும் தன்மையுடைத்து. தெற்காசியாவில் இருந்து, ஐரோப்பியர்கள் வழி வந்த புதிய ரக அரிசியினால், வயிற்றுப் பசியைப் போக்குமே தவிர நலமான வாழ்விற்கு உகந்தது அல்ல என்பதை மருத்துவ அறிவியல் கண்டறிந்துள்ளது. குறிப்பாக பெருநோயாகக் கருதப்படும் நீரிழிவு நோய் வருவதற்கு அரிசிச் சோறுதான் முதன்மைக் காரணியாக உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். குறிஞ்சி நிலத்தில் இயற்கையோடு வாழ்ந்திருந்த தமிழினம் அந்நிலத்தில் இருந்த அனைத்தையும் பயன்படுத்தி நல்வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். தாவரங்களில் இருந்து, காய் கனி, மருத்துவப் பொருட்கள் என ஏராளமானவற்றை அன்றாட வாழ்வில் பயன்படுத்தினர். ஆனால், இன்றைய காலகட்டத்தில் குறிஞ்சி நிலத்தில் இருக்கும் மருத்துவத் தாவரங்கள் பற்றிய அறிவின்மையோடு நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஐரோப்பியர்கள் தங்களின் வசதிக்காக குறிஞ்சி நிலம் எங்கும் தேயிலைத் தோட்டங்களையும், காப்பித் தோட்டங்களையும் அமைத்துக் கொண்டதோடு, அவர்களது கலாச்சார உணவுப் பயிர்களான, கேரட், முள்ளங்கி, டர்னிப், முட்டைக்கோஷ், உருளைக்கிழங்கு ப்ராக்கோலி, காலிப்ப்ளவர், போன்ற உணவுப் பயிர்களையும், ஆரஞ்சு, பிளம்ஸ், பிட்சீஸ், பட்டர்பபுருட், கனிவகைகளும் யூகலிப்டஸ், சின்கோன போன்ற

மரவகைகளையும் நட்டுவைத்து குறிஞ்சி நிலத்தை அவர்களுக்குரியதாக மாற்றிவிட்டனர். தமிழர்கள் தங்களின் உணவுப் பயிர்களையும் மரவகைகளையும், உணவு முறைகளையும் மறந்து ஐரோப்பியர்கள் பயிரிட்ட வேளாண்மையை நமக்குரியதாக எண்ணிக் கொண்டு மேற்குறிப்பிட்ட ஐரோப்பிய உணவுப் பயிர்வகைகளைக் குறிஞ்சி நிலமெங்கும் பயிர்செய்து வருகின்றோம். தமிழர்களின் பாரம்பரிய உணவுப் பயிர்களை அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் எந்தவிதமான பக்க விளைவுகளும் இல்லை. மேலும் தமிழர்களின் உணவுப் பயிர்களான, தினை, வரகு, சாமை, குதிரைவாலி, சோளம், பனிவரகு, மலைநெல் ஆகியன இயற்கையாக விளையக்கூடியவை. அவற்றிற்கு எந்தவிதமான பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்படுவதில்லை: ஏனெனில் இவ்வகைப் பயிர்கள் இம்மண்ணிற்கும், தட்பவெடப் சூழ்நிலைக்கும் ஏற்றவைகள். மேலும் நமது உணவுப் பயிர்களுக்கு காய், கனி என்ற பெயர் கொண்டு முடியும், காலத்திற்கு ஏற்ற வகையில்தான் நம் உணவுப் பயிர்களைப் பயிர் செய்யமுயும். இதுவே தமிழ் உணவுப் பயிர்களின் சிறப்பாகும். ஆனால், ஐரோப்பிய உணவுப் பயிர்கள் மேற்கத்திய மண்ணிற்கு மட்டும் உகந்தவைகள். மென்மையானவைகள், எந்தக் காலத்திலும் வேளாண்மை செய்யலாம். தமிழர்களின் மருதம், முல்லை நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் பின்வருமாறு.

குதிரைவாலி

குதரைவாலி நார்ச்சத்து, மாவு, சுண்ணாம்பு, பாஸ்பரஸ் போன்றவை நிறைந்து ஆண்டி ஆக்சிடன்ட் ஆகவும் வேலை செய்கிறது. கோதுமையைவிட ஆறுமடங்கு அதிகளவு நார்ச்சத்து கொண்ட குதிரைவாலியின் சிறப்பு நீரிழிவு நோய் வரவிடாமல் தடுப்பதும் குறைப்பதும் ஆகும்.

வரகு

வரகுப் பயிர் முல்லைநிலத்தில் பயிரிடப்பட்டதற்கு சான்றாக நற்றிணைப்பாடல் நூற்றி இருபத்தொன்றாவது பாடல் அமைந்துள்ளது. வரகு சிறுதானியங்களில் முக்கியமானதாகும். இவற்றில், மாவுச்சத்து மிகவும் குறைவாக இருப்பதால், விரைவில் செறிமானம் அடையக்கூடியதாகும். உடலுக்குச் சக்தியைக் கொடுக்கக்கூடியதாகவும் உள்ளது. மேலும், புரதச்சத்து, தாது உப்புகளைக் கொண்டிருப்பதால், மாதவிடாய் கோளாறு கொண்ட பெண்கள் வரகைச் சமைத்து சாப்பிட்டு வந்தால் மாதவிடாய்ப் பிரச்சனையில் இருந்து விடுபடாலம். இது சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துவதோடு, குறைக்கவும் செய்கிறது. மூட்டுவலிக்கு சிறந்த மருந்தாகவும் பய்னபடுகிறது.

சாமை

நெல்லரிசியைக் காட்டிலும் ஏழுமடங்கு நார்ச்சத்து கொண்ட உணவுப் பயிர் சாமையாகும். இரத்தசோகை, நீரிழிவு நோய் கட்டுப்பாடு, நோய்களுக்கெல்லாம் மூலமாக அமைந்திருக்கும் மலச்சிக்கல், வயிற்றுக்கோளாறு, போன்ற பல்வேறு பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் சாமையை இளம்பெண்கள் அதிகமாக எடுத்துக் கொண்டால் குழந்தைப்பேறு, கற்பபையின் வலிமை அதிகரித்தல் போன்றவைகளைப் பெறலாம். மேலும், மிகுதியான தாதுப் பொருட்களைப் பெற்றுள்ள சாமையை உணவில் சேர்க்கின்றபோது, உயிரணுக்களின் எண்ணிக்கை உயர்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சோளம்

சோளம் பலவகைப்படும். புரதம், கொழுப்பு, கால்சியம், இரும்பு, பி.கரோட்டின். 47 மி.கி. தயமின், ரிபோப்ளோவின், நியாசின் போன்ற தாதுப்பொருட்கள் அடங்கியுள்ள சோளமானது, நமது உணவில் பயன்படுத்தப்பட்டால், இரத்தசோகை, சிறுநீரை அதிகப்படுத்தல், கண்குறைபாடு ஆகியன நீங்கும்.

<u>பனிவரகு</u>

பனிவரகு என்பது வரகின் மற்றொரு வகையாகும். இவற்றில், கார்ப்போஹைட்ரேட், நார்., கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, பி.காம்ளக்ஸ், நியாசின், கோலின், மக்னீசியம், சோடியம், பொட்டாசியம், தாமிரம், துத்தநாகம், குரோமியம், சல்பர் குளோரைடு போன்ற வேதிப்பொருள் தாதுக்கள் அடங்கியுள்ளன. இவை உணவாகப் பயன்படுத்தும் போது, நரம்பு மண்டலம் பாதுகாக்கப்படுவதோடு சுறுசுறுப்பு அடையும். உடலின் தோல் மினுமினுப்பைப் பெறுவதோடு எலும்பு அடர்த்தி பெறும். இதயம் பலமாகும், நீரிழிவு கட்டுப்படுத்தப்படும், மரபணு குறைபாடு நீக்கப்படும். அலர்ஜி கட்டுப்படுத்துவதோடு நோய் எதிர்ப்பாற்றலைத் தரும். குழந்தையின் மூளை வளர்ச்சிக்கும் பெரியோர்களின் ஞாபக மறதிக்கும் சிறந்ததொரு உணவாகும். தமிழர்கள் உணவையே மருந்தாக உட்கொண்டதற்குச் சான்றாக மேற்குறிப்பிட்ட தமிழினப் பயிர்கள் அடையாளமாக உள்ளன. இப்பயிர் வகை உணவுகளை நாம் மீண்டும் பயிரிட்டு தமிழர்களின் உணவுமுறையே சாலச்சிறந்து என்பதை உலகறியச் செய்யவேண்டும். இதனைத்தான்; வள்ளுவப் பெருந்தகை மருந்து எனும் அதிகாரத்தில் உணவையே மருந்தாகக் கொண்டு வாழ்ந்த தமிழனின் அறிவினைப் பதிவு செய்கின்றார்.

“மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்”. (குறள் -942).

மேலும், நமது சூழலியல் சார்ந்த உணவுப்பொருட்களைத் தவிர்த்து பிறதேசத்து உணவுப் பொருட்களை மிகுதியாக உட்கொண்டால் உயிருக்கு ஆபத்து உண்டாகும் என்பதை,

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு".(குறள்:945)

என்று குறிப்பிடுகிறது. இக்குறள் குறிஞ்சி நிலப் பயிர்கள் அழித்தொழிக்கப்பட்டு, இன்று பயிரிடப்படும் ஐரோப்பிய நிலப் பயிர்களின் பக்கவிளைவிற்குச் சரியாகப் பொருந்தும். கி.பி.13 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்குள் நுழைந்த கேரட்டின் பிறப்பிடம் துருக்கியாகும். கேரட் பல நிறங்களில் இன்று மரபணு சோதனையில் மாற்றம் பெற்றுள்ளது. மலைகளின் இளவரசியாக விளங்கும் கொடைக்கானல், நீலகிரி, குன்னூர் போன்ற குறிஞ்சி நிலப்பகுதிகளில் கேரட் வேளாண்மை செய்யப்படுகிறது.

<u>உருளைக் கிழங்கு</u>

மாவுப் பொருளாக விளங்கும் உருளைக் கிழங்கின் பிறப்பிடம் ஸ்பெயின் நாடாகும். அமெரிக்க ஆப்பிரிக்க நாடுகள் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்த உருளைக் கிழங்கு வடஇந்தியர்களின் முக்கிய உணவுப் பொருளாக மாறியுள்ளது. குறிஞ்சி நிலப்பகுதியான, கொடைக்கானல், தாண்டிக்குடி, பெருமாள்மலை, கிளாவரை, பூம்பாறை ஊட்டி, குன்னூர் போன்ற பகுதிகளில் அதிமான அளவிற்கு விளைவிக்கப்படுகிறது. இதனை அதிகமாக உட்கொண்டால், வாயு தொந்தரவு ஏற்படுவதோடு, தலைவலி, வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, தாகம், சோர்வின்மை, ஆகிய உபாதைகள் தோன்றும். உருளைக் கிழங்கிற்குப் பதிலாக குறிஞ்சி நிலத்தில் விளைகின்ற கிழங்கு வகைகளை உட்கொள்ளலாம். குறிப்பாக மரவள்ளிக்கிழங்கு, சேம்பைக்கிழங்கு, கருணைக் கிழங்கு ஆகியவை உடல் சூட்டையும், மலச்சிக்கலையும் தீர்க்கக் கூடியனவாகும்.

<u>முட்டைக்கோஸ்</u>

ஐரோப்பியத்தைத் தாயகமாகக் கொண்ட முட்டைக்கோஸ் ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாகவே ஐரோப்பிய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. முட்டைக்கோஸ் குறிஞ்சி நிலம் தாண்டி இன்று மருதநிலங்களில் பயிரிடப்படுகின்ற அவலநிலையைக் காணமுடிகிறது. முட்டைக் கோஸ் அதிகமாகவும் தொடர்ச்சியாகவும் உட்கொண்டால், வாயு தொல்லை ஏற்படுவதோடு, புற்றுநோய், இருதய சம்பந்தமான நோய்கள் உருவாவதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. முட்டைக்கோஸிற்குப் பதிலாக, நமது உணவுப் பொருட்களான,

பீர்க்கங்காய், அதலைக்காய், வெண்டைக்காய், பூசணிக்காய், கொத்தவரங்காய், புடலங்காய், ஆகியவற்றை உணவில் மிகுதியாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

ஃப்ரோக்கோளி

கிழக்கு ஆசியாவைத் தாயகமாகக் கொண்ட ஃப்ரோக்கோளி காலிப்ப்ளவரின் மற்றொரு வகையாகும். இதனை அதிகமாக உட்கொள்ளும்போது, உடலில் எரிச்சல் ஏற்படுகிறது.

டர்னிப்

டர்னிப் எனப்படும் கிழங்கு வகை கிழக்கு ஆசியாவைத் தாயகமாகக் கொண்டதாகும். இவற்றைச் சாதரணமாகப் பயன்படுத்தினால் கூட பல்வேறு நோய்களைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இவை உணவாகப் பயன்படுத்துகிறபோது ஏற்படும் பக்கவிளைவுகள் :

1. Not so good for Diabetic Patients.
2. May increase the Rise of hypertension.
3. To much dietary Fiber is Bad for Stomuch.
4. Not so good for Pregnant and Nursing mothers.
5. Some individuals might be Allergic to Turnips.

இவற்றின் பாதங்களை அறிந்த பிறகும் நாம் பயன்படுத்தினால், மேற்குறிப்பிட்ட நோய்களுக்குக் கண்டிப்பாக ஆளாகுவது திண்ணமாகும். இக்கிழங்கு வகை நமது குறிஞ்சி நிலப்பகுதிகளில் தாராளமாகவே பயிரிடப்படுகிறது.

காலிப்ப்ளவர்

வடஆசியப் பகுதியைத் தாயகமாகக் கொண்ட காலிப்ப்ளவர் குறிஞ்சி நிலத்திலும், சமவெளிப்பகுதிகளான ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் பகுதிகளிலும் பயிர்செய்யப்படுகிறது. இவை அளவிற்கு அதிகமாக எடுத்துக் கொள்ளும் போது, ஏற்படும் பக்கவிளைவுகள் பின்வருமாறு.

1. May not be good for Pregnant wowmen.
2. The Antioxidonts present in the cauliflower protects the Uterus lining from the oxidative damage caused by the free Radicals

ஆகியனவாகும். மேற்குறிப்பிட்ட ஐரோப்பிய நிலப் பயிர்களினால் பல்வேறு தீமைகளும், பக்க விளைவுகளும் உண்டாவதை அறியமுடிந்தன.

மரங்கள் அழிப்பு

குறிஞ்சி நிலப்பரப்பில் வானுயர்ந்த மரங்கள் பற்றிய குறிப்புகளைச் சங்கப் பனுவல்களில் காணமுடிகின்றன. ஆனால், அம்மரங்கள் அரிதாகி வருவதோடு அழிந்துபட்டன. ஆங்கிலேயர்களும், சேசு சபையினரும் கொண்டு வந்த வாட்டில், பைன். கோனிபீர், யூக்களிப்டஸ், சின்கோன போன்ற ஐரோப்பிய மரங்களே நம் குறிஞ்சி நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வானுயர வளர்ந்து வருகின்றன. இவ்ஐரோப்பிய நில மரங்கள் நிலத்தடி நீரை உறிஞ்சி மண்ணின் வளத்தைக் குன்றச் செய்துள்ளன. குறிஞ்சி நில மரங்களான வேங்கை, மலவேம்பு, தேக்கு, சந்தனம் போன்ற மரங்கள் குறைந்துபோனதற்கு யூக்களிப்டஸ் மரங்களின் அதீத வளர்ச்சியே காரணமாகும்.

<u>வாசனைத் திரவியங்கள்</u>

குறிஞ்சி நிலத்தில் விளைந்த வாசனைத் திரவியங்களான, ஏலம், மிளகு மற்றும் மருந்துச் செடிகள் அருகிப்போய்விட்டன. இவைகளுக்குப் பதிலாக குறிஞ்சி நிலப்பகுதியில் காப்பியும், தேயிலையும் பயிரிடப்படுகிறது. மிளகு குறித்த பதிவுகள் சங்கப் பனுல்களில் காணக்கிடைக்கின்றன. மிளகுக் கொடியின் பிறப்பிடம் குறிஞ்சி மலையாகும். மிளகு பலவகைப்படும் அவை,கருமிளகு, வெண்மிளகு, சிவப்பு மிளகு, பச்சை மிளகு. அகநானூற்றுப் பாடல் எண் 149 இல் இடம்பெற்றுள்ள வரிகள் மிளகின் சிறப்பினை எடுத்துகை;கின்றன. அவை,

“சுள்ளி அம் பேரியாற்று வெண் நுரை கலங்க
யவனர் தந்த வினை மாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியோடு பெயரும்
வளம் கெழு முசிறி”

கிரேக்கர்களையும், ரோமானியர்களையும் யவனர் என்ற பெயரிட்டு அழைத்துள்ளனர் தமிழர்கள். குறுஞ்சி நில மிளகினைப் பெற்றுச் செல்வதற்கு மாற்றுப் பொருளாக யவனர்கள் கப்பல்களில் பொன்னைக் கொண்டுவந்துள்ள செய்தியில் இருந்து தமிழர்களின் வாணிபத்தை அறிதலோடு, மிளகின் சிறப்பினை அறியமுடியும். ஐங்குறுநூற்றில் இடம்பெறும் தாமன் ஆட்சி செய்த தான்றிக்குடி மலையே முசிறி துறைமுகத்திற்கும் கொற்கைத் துறைமுகத்திற்கும் வழிப்பாதையாக இருந்துள்ளதை அறியமுடிகிறது. இம்மலைப்பகுதியில் இருந்துதான் இவ்விரு துறைமுகங்களுக்கும் குறிஞ்சி நிலப் பொருட்களின் வாணிபம் நடந்திருக்க வேண்டும். இன்றும் தாண்டிக்குடிக்கு இரண்டு வழிப்பாதைகள் உள்ளன. ஒன்று அடுக்கம் வழியாக முசிறிக்குச் செல்லும் பாதை, பண்ணைக்காடு மற்றும் பட்டிவீரன்பட்டி பன்றிமலை வழியாக கொற்கைக்குச் செல்லும் பாதை. இவ்விரு பாதைகளும் இன்றுபயன்பாட்டில் உள்ளன. இந்தவகையில், சேயோன்

குடியிருக்கும் குறிஞ்சி நிலத்தில் தமிழரின் பாரம்பரிய உணவுப் பயிர்களும், மரங்களும், அழித்தொழிக்கப்பட்டு குறிஞ்சி நிலப் பயிர்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. ஐரோப்பியர்களின் பயிர்களும் மரங்களும் குறிஞ்சி நிலத்தில் வளர்ச்சி பெற்றுள்ளன.

முடிவுகள்

சங்கப் பனுவல்களை வாசிப்பிற்கு உட்படுத்தி குறிஞ்சி நிலம் போன்று மருதம், முல்லை, நெய்தல் நிலங்களில் பயிரிடப்பட்ட தமிழர்களின் உணவுப் பயிர்களைக் கண்டறிந்து, அவற்றை வேளாண்மை செய்வதற்கு அரசு எந்திரங்கள் முன்வரவேண்டும்.

தமிழர்களின் பாரம்பரியமிக்க உணவுப் பயிர்கள் குறித்த விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் கல்வி ரீதியாகப் பாடங்களாக்க முனையவேண்டும்.

தமிழர்களுக்குப் பாதுகாப்பு அரணாக விளங்கும் குறிஞ்சி நிலப்பகுதிகள் சுற்றுலாத் தலங்கள் என்ற பெயரில், உயரமான அடுக்கு மாடிக் குடியிருப்புகளும், சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்கான சொகுசு அறைகளும் (ரிசார்ட்) கட்டப்படுவதற்கு விளைநிலங்களும், சோலைகளும், அரிய வகையான தாவரங்களும் அழிந்து கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்துவதற்குக் கருத்தரங்குகள், கட்டுரைகள், மாநாடுகள் வழியாக மக்களை விழிப்படையச் செய்யவேண்டும்.

வனஉயிர்க்கோளமாக விளங்கும் குறிஞ்சி நிலம் இன்று வறட்சி கண்டு வருவதற்கு மக்களின் புதிய குடியேற்றத்தைத் தடைசெய்யவேண்டும்.

மேற்குமலைத் தொடரைப் போன்று கிழக்குத் தொடர்ச்சி மலைகளையும், அவற்றில் உள்ள தாவரங்களையும், உணவுப் பயிர்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு தமிழர்களின் நலம் காத்தல் வேண்டும்.

தமிழர்களின் உணவுப் பயிர்களின் எந்தவிதமான பக்கவிளைவுகளும் இல்லை. இன்று குறிஞ்சி நிலப்பகுதியில் பயிரிடப்படும் அனைத்து வகையான ஐரோப்பிய உணவுப் பயிர்களில் விஷமே கலந்துள்ளதை அறியமுடிகிறது.

தமிழர்களின் பாரம்பரியமிக்க பயிர்வகைகளை இலக்கியங்களில் இருந்து எடுத்தாண்டு, வேளாண்மை செய்தவற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

குறிஞ்சி நிலத்தைப் போன்றே மருதம், முல்லை, நெய்தல் நிலங்களிலும் நமது பாரம்பரியம் மிக்க தாவரங்களும், நெல்வகைகளும், மாடுகளும், மீன்வகைகளும் இன்று அழிந்து கொண்டு வருகின்றன. இவ்வகையான அழித்தொழிப்பு ஐரோப்பியர்களின் உலகமயமதாலின் வெளிப்பாட்டுச் சூழலாகவே கருதமுடிகிறது.

ஐரோப்பியர்கள் தமிழரின் நிலத்தையும், தமிழரை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் இன்றளவும் மறைமுகமாக ஆட்சி செய்து கொண்டிருப்பதன் வெளிப்பாடுதான் மரபணு மாற்றத்தில் விளைவிக்கப்படும் உணவுப் பயிர்கள் என்பதை மறுக்கவியலாது. காலனியவாதிகளின் ஆதிக்கம் உலகமாயமாதல் என்ற போர்வையில் நடந்துகொண்டிருப்பதை எதிர்த்து நிற்பதற்குத் தமிழரின் பண்பாட்டையும், சூழலியலையும் பேணவேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

துணைநின்ற நூற்கள்:

1. அகநானூறு,
2. புறநானூறு,
3. ஐங்குறுநூறு,
4. கலித்தொகை,
5. நற்றிணை,
6. குறுந்தொகை,
7. தொல்காப்பியம்.
8. திருக்குறள் உரை
9. பதிற்றுப் பத்து

வலைதளங்கள்:

கீற்று

விக்கிப்பீடியா,

தமிழ் விக்கிப்பீடியா, மற்றும் கூகுள் வலைதளம்.

மருத்துவ அறிவியல்

பேரா. ஆ. ஜோசப் சார்லி ஆதாஸ்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அருளானந்தர் கல்லூரி, கருமாத்தூர், மதுரை.

ஒவ்வொரு மனித சமுதாயமும் நலவாழ்வைக் கொண்டியங்குவதில் ஒரு மேம்பட்ட அறிவியல் பூர்வமான செயல்முறைகளைக் கொண்டிருக்கின்றன என அறிகிறோம். மனித சமூகத்தில் ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து, நோய்களைத் தீர்ப்பதற்கான மருத்துவ முறைகளைப் பார்க்கும்பொழுது நோயும் மருத்துவமும் மனித இனப் பண்பாட்டு வரலாற்றில் பிரிக்க முடியாது.

ஐரோப்பியர்கள் வந்த பிறகு அலோபதி மருத்துவமுறைகள் தமிழர்களின் வாழ்வில் இரண்டறக்கலந்துள்ளது என்றாலும், தமிழர்கள் காலங்காலமாகத் தனித்துவமான மருத்துவ முறைகளைக்கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை கலை, இலக்கியம், வரலாறு, கல்வெட்டுகள், செப்பேடுகள், வாய்மொழி வழக்காறுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், போன்றவற்றில் காணமுடிகிறது. இத்தகைய மருத்துவத்தை தமிழர் மருத்துவம் அல்லது தமிழ்மருத்துவம் என்று குறிப்பிடுகின்றனர்.

கிராமப்புற மக்கள் குறித்த வாழ்வியல் வழக்காறுகளை ஆய்வுசெய்யும் அறிஞர்கள், தமிழ் மருத்துவத்தை நாட்டுப்புற மக்களே பெரும்பான்மையாக கையாளுவதால் இதனை நாட்டுப்புற மருத்துவம் என்பர். அதாவது குழடம ஆநனiஉiநெஇ நுவாழெ ஆநனiஉiநெஇ Pழிரடயச ஆநனiஉiநெஇ Pழிரடயச hநயடவா உரடவரசந நுவாழெயைசலஇ நுவாழெயைவசiஉள என்றும், தமிழகக் கிராமப்புறங்களில் நாட்டு வைத்தியம், கைமருத்துவம், பாட்டி வைத்தியம், மூலிகை மருத்துவம் என்றும் கூறுகின்றனர்.

இன்று வரை அலோபதி மருத்துவர்கள் நோய்க்கு மட்டுமே மருந்து கொடுத்துவருகின்றனர். உள்ளம் மற்றும் உடலுக்கு அவர்கள் மருந்து கொடுப்பதில்லை. ஆனால் தமிழ் மருத்துவம் நோயின் தன்மையையும், உள,உடலின் தன்மையையும், இந்நோய் தோன்றுவதற்கான அகம், குடும்பம், சமூகம் ஆகிய காரணிகளையும் அறிவினால் ஆராய்ந்து அறிந்து, நோயின் மூலத்தை அழித்து பூரண நலவாழ்வை அளிப்பதே தமிழ்மருத்துவமாகும்.

தமிழ் மருத்துவம் பண்டிதர்களின் ஓலைச்சுவடிகளிலும், மக்களின் வாய்மொழி வழக்காறுகளிலும் இருந்துவந்தன. தமிழர்களின் பல்துறை சார்ந்த அறிவுப்புலமைகள் அனைத்;தும் ஓலைச்சுவடிகளிலே இருந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் எழுத்துருக்கள் வடிவம் பெற்ற பிறகு, ஓலைச்சுவடிகளைத் தேடும் முயற்சியும், கண்டுபிடித்து பதிப்பிக்கும் முயற்சியும்

நடைபெற்றது. கர்னல் காலின் மெக்கன்சி அவர்கள் 192 ஓலைச்சுவடிகளை கண்டறிந்தார். அவற்றில் 10 சுவடிகள் மருத்துவ சுவடிகள் ஆகும். இத்தகைய மருத்துவச் சுவடிகளைப் படித்தறிந்த ரெவரெண்ட் டபிள்யூடெய்லர் அவர்கள் சுவடிகளில் இருந்த அறிவியல் செய்திகள் அனைத்தும் பாடல்களாகவே இருந்தன என்று குறிப்பிடுகிறார். தமிழர்களின் மருத்துவ அறிவியல் சிந்தனையைப் படித்தறிந்து, தமிழகத்தில் நிலவி வந்த அதன் மருத்துவ அறிவியல் செயல்முறைகள் குறித்து அருள்திரு சீகன்பால் அவர்கள் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார். "மருத்துவப் பயிற்சியில் சுதேசிகள் நல்லமுறையில் பயிற்சியுடையவர்களாயிருக்கிறார்கள்... அவர்களின் மற்ற நூல்களைவிட மருத்துவ நூல்களே சிறப்புத்தன்மையுடையனவாக இருந்தன... மருத்துவ நூல்களில் இடம்பெற்ற முக்கியக் கருத்துகள் பயன்பாட்டு நிலையில் அமைந்திருந்தன.. தாயின் வயிற்றில் உள்ளபோதே மனிதர்களுக்கு மூன்று வகையான நோய்கள் வரக்கூடும் என்றும், மற்ற அனைத்துவகை நோய்களும் இதன் வகையிலே அடங்கும் என்றும் நம்பினர். நோய்களைக் கண்டறிய மூன்று விதமான நாடிமுறைகளை அறிந்திருந்தனர். இதைப்பற்றிய தகவல்களை பகுதசாஸ்திரம் என்ற நூலில் எழுதியிருந்தனர். இந்த வகையான நாடித் துடிப்புகள் மணிக்கட்டு, கழுத்து, விரல்மூட்டு ஆகிய மூன்று இடங்களிலிருந்து கண்டறியப்பட்டன. பெண்களுக்கு இடது மணிக்கட்டிலிருந்தும், ஆண்களுக்கு வலது மணிகட்டிலிருந்தும் நாடித்துடிப்புகள் கண்டறியப்பட்டன. வாதநாடி தவளை மாதிரியும் பித்தநாடி கோழிமாதிரியும் மயில் மாதிரியும் துடிக்கின்றன... வாதநாடியும் பித்தநாடியும் ஒரே மாதிரி துடித்தால் நோயாளிக்கு தொண்டைப்புண், இருமல், ஜலதோஷம் மற்றும் உடல்சூடு இருப்பதாகக் கருதப்பட்டது. ஐரோப்பியர்களிடம் வழக்கில் இருந்த மாதிரியான சிறுநீர் சோதனையும் இவர்களிடம் வழக்கில் இருந்தது... பாத்திரத்தில் உள்ள சிறுநீரில் வைக்கோலின் உதவியால் எண்ணையைத் தெளிக்கும்போது எண்ணெய் மிதந்தால் நோயாளியை காப்பாற்றமுடியும் எனவும் எண்ணெய் மிதக்காவிட்டால் காப்பாற்ற முடியாது எனவும் கருதப்பட்டது"

சீகன்பால்குவின் குறிப்புகள் மூலம் ஓலைச்சுவடிகளில் இருந்து தமிழர்களிடம் இருந்த மரபு சார்ந்த மருத்துவத் தொழில் நுட்பக் குறிப்புகளை சீகன்பால்குவின் கூற்று எடுத்துரைக்கின்றது. தமிழகத்தில் கிடைக்கும் மூலிகைகளைப் பற்றிய விவரங்களையும், அவைகளின் மருத்துவப் பயன்பாட்டையும் முழுமையாக அறிந்து கொண்ட அவர், 1711ஆம் ஆண்டு மலபார் மருந்துகள் பற்றிய குறிப்புகளை ஜெர்மானிய மொழியில் எழுதியதோடு மட்டுமல்லாமல் அவைகளின் மாதிரிகளையும் ஹாலே நகரத்துக்கு அனுப்பி வைத்தார். தமிழர்களின் மருத்துவமுறைகளைப் பற்றி அதிக ஆர்வம் காட்டிய ஜெர்மானியர்கள் 1712ஆம்

ஆண்டு கோப்பன் ஹெகனில் தமிழ்மருத்துவத்தைக் கற்பிக்க ஏற்பாடுசெய்தார்(இரா.பாவேந்தன்,தமிழில் அறிவியல் இதழ்கள், பக்-30-31).

மேலைநாட்டார் வருகைக்குப்பிறகு அவர்கள் ஆங்கிலக் கல்வியையும், ஆங்கில மருத்துவத்தையும் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தினர். அவர்கள் அறிமுகப்படுத்திய காலத்தில் காலரா நோய் தமிழகத்தில் பரவியிருந்தது. ஆயிரக்கணக்கில் மக்கள் இறந்தனர். ஆகவே மக்களிடத்தில் காலரா நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, 1818ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் காலாரா நோயின் தன்மையையும், இந்நோயிலிருந்து மக்கள் தங்களை எவ்வாறு காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்பது குறித்த செய்திகளையும் துண்டறிக்கைகளில் வெளியிட்டனர். இந்நோய்க்கான மருந்தை ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து மக்களுக்கு கொடுத்து மக்களைக் காப்பாற்றினர். இதனால் மக்களுக்கு பாரம்பரிய தமிழ் மருத்துவத்திலிருந்து நம்பிக்கை குறைந்து ஆங்கில மருத்துவத்தின் மீது, இயல்பான தற்பாதுகாப்பு நம்பிக்கை ஏற்பட்டது. இச்சூழலில் ஐரோப்பியர்களும் சரி, தமிழக ஆட்சியாளர்களும் சரி தமிழ் மருத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஆங்கில மருத்துவத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்தனர். மேலும் ஆங்கில மருத்துவக்கல்;வியைக் கற்பித்தனர். இலங்கையில் மேலைநாட்டு மருத்துவர் ஃபிஷ்றின் அவர்கள் ஆங்கிலத்தில் இருந்த உடலியல் குறித்த மருத்துவ முறைகளை தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தார். மேலும் கண், காது, கை, கால், தோல், வாய், வாந்தி, பேதி மற்றும் காலரா நோய்களுக்கான உதவிக்குறிப்புகள் கொண்ட துண்டறிக்கைகள், சிறுநூல்கள் போன்றவற்றை தமிழில் வெளியிட்டார். அதன் பிறகு ஆங்கிலமருத்துவமே தமிழ்நாட்டில் நிலைநிறுத்தப்பட்டு அதிகாரம் செலுத்தி வருகின்;றது. ஆங்கில மருத்துவத்தின் இந்த அதிகாரம் நாளடைவில் தமிழ்மருத்துவத்தை நம்பிக்கை சார்ந்த ஒன்;றாகவும், மூடநம்பிக்கை சார்ந்த ஒன்றாகவும் மக்களிடத்தில் கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

<u>வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துகள்</u>

தமிழர் உலகத்தின் ஆதிமக்கள் என்றும் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருந்திய நாகரீகமும் செவ்விய ஆட்சிமுறையும் கொண்ட மக்களாக இருந்தனர் என வரலற்று ஆசிரியர்கள் பி.டி.சீனிவாச ஐயங்கார் அவர்களும், எஸ்.லியாங் அவர்களும் குறிப்பிடுகின்றனர்.

படைப்பின் வரலாறு என்ற நூலில் 'லெமூரியா மனித இனத்தின் தொட்டில்' என ஹெகல் அவர்களும், உலக வரலாறு என்று நூலில் 'பெருவெள்ளத்துக்குப்பின் இந்தியாவில் மனித இனம் முதன் முதலாகத் தோன்றியது' என ராலே அவர்களும், 'தென்னாசியாவின் மிகப்பழமையான பகுதி தென்னிந்தியாதான்' என டோபினார்டு அவர்;களும், 'மனிதன் தென்னிந்தியாவில்தான்

தனது தோற்றத்தையும் வளர்ச்சியையும் பெற்றான்' என சர்ஜான் எட்வன்ஸ் அவர்களும், மறைந்த லெமூரியா என்னும் நூலிலும் 'மனிதனின் மிக மிகப் பழமையான நாகரீகம் தென்னிந்தியாவில்தான் இருந்தது. அதன் விரிவான நிலப்பகுதிதான் கடலினுள் மூழ்கிய லெமூரியா' என ஸ்காட் எலியாட் அவர்களும், பெரிய இந்தியாவின் மக்கள் என்னும் நூலில் 'இந்தியாவின் தீபகற்பப் பகுதியில் தென்னகத்தில் திகழ்ந்த நாகரீகம் மிகப் பழைமையானதும், பெருமைபெற்றதும்' என சர்.டி.டபிள்யூ ஹோல்டர்னெஸ் அவர்களும் தமிழர்களின் வாழ்விடத்தையும் அதன் தொன்மை நாகரீகத்தையும் சுட்டிக்காட்டியுள்ளனர்(கோ.செல்வமூர்த்தி, அறியப்படாத தமிழ்மருத்துவ வரலாறு,பக்.55-56). மேலும் சிந்துசமவெளி அகழாய்வுகள் சிந்துசமவெளி நாகரீகம் திராவிட நாகரீகம் என்று மெய்பித்துள்ளது. அன்று முதல் தமிழர்களின் கணிதம், தாவரவியல், விலங்கியல்;, வேதியியல் மருந்தியல் தொடர்பான தொழில் நுட்பத்தில் தேர்ந்த அறிவும், பயிற்சியும் கொண்டிருந்ததை அறியமுடிகிறது. குறிப்பாக நோயைக் கண்டறிவதிலும், நோயக்;கான மருந்தைக் கண்டறிவதிலும் சிறந்து விளங்கியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஹிப்போகிரட்ஸ் ஆவார். இவர் கிரேக்கத்தில் புகழ்பெற்ற மருத்துவர் என்றும், நவீன மருத்துவத்தின் தந்தை என்றும் போற்றப்படுபவர். இவர் இந்திய மருத்துவ முறைகளையும், மருந்து வகைகளையும் பயன்படுத்திவந்தார் என்றும், மிளகை இந்திய மருத்துவம் என்றே குறிப்பிட்டார் என்றும் பேராசிரியர் கே.கே.பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார். பண்டைய தமிழர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த பொருள்களில் இலவங்கம், மிளகு முக்கியப்பொருள்களில் ஒன்றாக இருந்துள்ளது என மருத்துவர் கோமான் பதிவுசெய்கிறார். தமிழர்களின் சித்த மருத்துவம் நலவாழ்வுக்கு அதிகத் திறன்மிக்க மருத்துவ முறையாகும் என சர்.தாமஸ் புரோவ்னி என்ற வரலாற்றாசிரியர் எடுத்துரைக்கின்றார். இந்திய மருத்துவர்கள் உற்றறிதலாலும், நீண்ட அனுபவத்தினாலும், வெளிநாட்டு மருத்துவர்களைவிட சிறப்பாக மருத்துவம் செய்து வந்துள்ளனர் என்றும், அவர்கள் தட்ப வெப்பத்திற்கு ஏற்ப மருத்துவ முறைகளை செய்துவந்துள்ளனர் என பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த சார்லஸ் டெல்லான் குறிப்பிடுகின்றார்(கோ.செல்வமூர்த்தி,அறியப்படாத தமிழ்மருத்துவ வரலாறு,பக்.56).

தமிழ் இலக்கியங்களில் மருத்துவ சிந்தனைகள்

தமிழர்களின் பாரம்பரிய மருத்துவமுறைகள் பற்றிய ஓலைச் சுவடிகள், கல்வெட்டுகள் இல்லை. அதேசமயத்தில் தமிழர்களின் வாய்மொழி வழக்காறுகளில் தமிழர்களின் மருத்துவ குறிப்புகள் தலைமுறை தலைமுறையாக கடத்தப்பட்டு வந்துள்ளதை அறியமுடிகிறது. திருமூலரின் மருத்துவ

குறிப்புகள் அவர் எழுதிய திருமந்திரத்தில் கிடைக்கின்றது. சித்தர்களின் மருத்துவ குறிப்புகள் கி.பி. 11ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்ட ஓலைச்சுவடிகளில் கிடைக்கின்றன. கி.பி.11ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழர்களின் மருத்துவமுறைகள் எப்படிப்பட்டதாக இருந்தது என்;று அறியவேண்டுமானால் நமக்கு சங்கஇலக்கியங்கள், அறஇலக்கியங்கள், காப்பியங்கள், பக்திஇலக்கியங்கள் போன்றவைகளே சான்றுகளாக உள்ளன.

தமிழர்களின் நலவாழ்வுக்கு அடிப்படையாக அமைவது உணவும், உணவு பழக்கவழக்கமும், தனிமனித ஒழுக்கமும் ஆகும். தமிழர்களின் பாரம்பரிய உணவு பழக்கவழக்கங்கள் குறித்து மருத்துவர் கோ.செல்வமூர்த்தி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "நம் உடலானது பஞ்சபூதங்களின் கூட்டுறவால் 7உடற் தாதுகளான சாரம். செந்;நீர், ஊண், கொழுப்பு, என்பு, மூளை, சுக்கிலம்-நாதம், இவைகளால் ஆக்கப்பெற்றதாகும். ஏழு உடல் தாதுகளில் ஏற்படும் நோய்கள் மூன்று உயிர்த்தாதுகளில் மாறுபாட்டை ஏற்படுத்தி குற்றங்களாக மாறி வாதம், பித்தம், கபம் ஆகிய நாடிகளின் வாயிலாகப் பிரதிபலிக்கும். இவ்வாறாக உடலில் உள்ள ஏழு உடற்தாதுக்களையும் மூன்று உயிர்த் தாதுக்களையும் போசித்து வளர்ப்பது உணவேயாகும்"(கோ.செல்வமூர்த்தி, அறியப்படாத தமிழ்மருத்துவ வரலாறு,பக்.99) எனக்குறிப்பிடுகிறார்.

உணவு அதிகமாக உண்ணுவதாலும் குறைவாக உண்ணுவதாலும் ஏற்படும் விளைவுகளை திருக்குறள் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று (941)

வாதம், பித்தம், கபம் ஆகியவை உடலில் எவை மிகுந்திருந்தாலும், குறைந்தாலும் நோய் ஏற்படும். சம உணவான மாவுப்பொருள்(ஊயசடிழாலனசயவந)இ புரதம்(Pசழவநin)இ கொழுப்பு(குயவ) ஆகிய தாது உப்புகளும், நீரும் தன்மையிலும் அளவிலும் மிகாமலும் குறையாமலும் அமைந்திருக்கவேண்டும். இன்றைய அலோபதி மருத்;துவர்கள் கூறுகின்ற மருத்துவ ஆலோசனைகளை அன்றே திருவள்ளுவர் கூறியிருப்பது, பண்டைய தமிழர்களின் மருத்துவத் தொழில்நுட்ப அறிவை வெளிப்படுத்துவதாக உள்ளது. மேலும் வள்ளுவர் அளவோடு உண்ணவேண்டும் என்றும், செரித்தபின் உண்ணவேண்டும் என்றும், பசிக்கும்போது உண்ணவேண்டும் என்றும், நல்ல உணவுகளை தேர்ந்தெடுத்து உண்ணவேண்டும் என்றும், குறைவாக உண்ணவேண்டும் என்றும், பசியின் அளவு அறிந்து உண்ணவேண்டும் என்றும்

சுட்டிக்காட்டுவதோடு வள்ளுவர், நோய் ஏற்படுவதற்கும், நோய் ஏற்படாமல் இருப்பதற்கும் உணவும், உணவு பழக்கவழக்கங்களுமே காரணம் என்று குறிப்பிடுகின்றார்.

மேலும் பிணியுற்றவரின் உடலை என்ன நோய் தாக்கியுள்ளது? நோய் ஏற்படுவதற்கான காரணம் என்ன? அந்நோய்க்கான மருந்து எது? என்று ஆராய்ந்து அறிந்து பிழையின்றி செய்யவேண்டும் என்றும், நோயின் தன்மையையும், நோயின் நிலையையும், மருத்துவம் செய்வதற்கான ஏற்ற காலத்தையும் அறிந்து நோயாளிக்கு மருத்துவம் மேற்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். மேலும்

உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச் செல்வான் என்று
அப்பால் நாற்கூற்றே மருந்து(950)

அதாவது மருத்துவர் நோயாளியின் உடல் நிலையை கண்டறியவேண்டும். நோயின் தன்மையை அறிந்து அதற்கேற்றார் போல் மருந்து கொடுக்கவேண்டும். மருத்துவன் நோயைப்பற்றிய நுண்ணறிவும், அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும். கொடுக்கும் மருந்து நோயைக் குணமாக்காவிட்டாலும் சரி, பாதிப்பை ஏற்படுத்திவிடக் கூடாது. நோயாளியின் பிணிஅறிந்து கவனித்துகொள்ளும் உதவியாளர் இருக்கவேண்டும் என்பன போன்றனவற்றை மருத்துவச் செயல்முறைகளாக வள்;ளுவர் குறிப்பிடுகின்றார். பண்டைய மருத்துவர்கள் நோய்க்கு மருந்து மட்டும் தரவில்லை. மேலாக உள, உடல்நோய்க்கு மருந்து கொடுப்பவர்களாகவே இருந்துள்ளனர் என அறியமுடிகிறது.

வாயுறை வாழ்த்து என்னும் அறிவுரை பற்றி எடுத்தியம்பும்; தொல்காப்பியர் கசப்பான மூலிகைகளான வேம்பும், கடுவும் முதலில் வெறுக்கப்பட்டாலும் முடிவில் நலம் பயப்பதால் பெரிதும் விரும்பப்படும் என்பர். இதனை வேம்பும் கடுவும் போல (தொல்காப்பியம்;, பொருள்-417) என்ற நூற்பாவின் மூலமாகத் தொல்காப்பியர் காலத்தில் வேம்பும் கடுகும் மருந்தாகப் பயன்பட்டிருந்தன என்பதையும,; நோயும் அதற்கான மருந்தும் வகுக்கப்பட்டிருந்தன என்பதையும் அறிய முடிகிறது. இச்செய்தி தொல்காப்பியரின் மருத்துவ அறிவை விளங்கிக் கொள்ள முடிகிறது. எழூஉப் பன்றி நாகன் குமரனார்(138) அவர்கள் எழுதிய அகநானூற்றுப் பாடலில் தலைமகள் களவொழுக்கத்தால் உடல் மெலிவதைக் கண்ட செவிலித்தாய் வேலனை அழைத்து வெறியாட்டு எடுத்தாள். அதாவது

---------- வேம்பின்

வெறிகொள் பாசிலை நீலமொடு சூடி (அகநானூறு-138)

ஐயுற்றவள் வேலனையும் கட்டுவிச்சியையும் வரவழைத்தாள். அவர்களும் (கட்டினானும் கழங்கினானும்;) குறிபார்த்து வேம்பினது மணக்கும் பசிய இலைகளை நீலோற்பல மலர்களுடன் சூடிக்கொண்டனர். இப்பாடலில் வேம்புமர இலை மருந்துவக் குணம் கொண்டதாக அறியமுடிகிறது. அதனால் அவர்;கள் தலையில் சூடிக்கொண்டனர். வேப்ப இலை தீயசக்திகளை விரட்டும் என்னும் நம்பிக்கை மக்களிடம் உள்ளது. தீய சக்தி என்று சொன்னால் நோய் என்ற பொருளில் நாம் புரிந்துகொள்ளவேண்டும். வேம்;பு பற்றி மக்களுக்கு மூட நம்பிக்கை இருந்தாலும், வேம்பு ஒரு அறிவியல் பூர்வமான மருந்துபொருள் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

கலித்தொகைப் பாடலில் முகையின் மலர்ச்சிக்கும் அழிவுக்கும் காலம் காரணமானது போல், இவளுடைய மலர்ச்சிக்கும் அழிவுக்கும் நீயே கூற்றுவன் போன்ற அறிவுரைகள் தலைவனின் மனமாற்றத்திற்குக் காரணமாயின. மருத்துவன் ஊட்டிய மருந்துபோல தோழியின் அறிவுரை தலைவனிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்துபோல் மருந்து ஆகி மனன் உவப்ப (கலித்தொகை 17:18-19)

குறிப்பாக தலைவனுக்கு ஏற்பட்ட மனக்குழப்பத்தையும், மனகுழப்பத்திற்கான காரணத்தையும் கண்டறிந்து ஆற்றுப்படுத்துவது தலைவனுக்கு மருத்துவன் ஊட்டிய மருந்துபோல ஆறுதல் அளிப்பதாக எனஅறியமுடிகிறது.

பிணியுற்றோரது தன்மையையும் பிணியின் இயல்புகளையும் நன்கு ஆராய்ந்து உரிய மருந்துகளைத் தெரிந்து கொடுத்தனர் என நற்றிணைப்பாடல்வழி அறிகின்றோம்.

அரும்பிணி உறுநாக்குவேட்டது கொடாஅது
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் போல (நற்றிணை, நற்றங்கொற்றனார் -136:2-3)

என மருத்துவனின் இயல்பு வெளிப்படுத்தப்படுகிறது.

தோள் வளையை யான் விரும்பினேன். அது கிடைக்கப் பெறாமையால் நான் அழுதேன். என் தந்தை தீர்த்தற்கரிய நோயையடைந்தவர். விரும்பியதைக் கொடாமல் ஆராய்ந்து நோயக்குத் தக்கவாறு மருந்து தரும் அறமுடைய மருத்துவனை ஒப்பவர் என தலைவி கூறுகிறாள். மருத்துவன் நோயின் தன்மைகளைக் கண்டு நோய்க்கு ஏற்ற மருந்தினை ஆராய்ந்து கொடுக்கவேண்டும். நோயாளியின் விருப்பப்படி மருந்து கொடுக்காமல், மருந்தை ஆராய்ந்து கொடுக்கும் அறவோன் மருத்துவன் ஆவான்.

மரஞ்செடி கொடி முதலியன மக்களுக்கு உணவளித்து உதவியதோடு மருந்தாகவும் பயன்பட்டன. மருந்துப் பொருள்களை எடுக்கும்போது செடிகளுக்கு ஊறு நேராவண்ணம் எடுத்து மேலும் பலருக்கு பயன்பட அவற்றை அழிக்காது விட்டு வைப்பர். (மரம் சாமருந்தும் கொள்ளார் - நற்றிணை -226-1) நல்ல நெற்றியையுடையவளே! மாந்தர் மருந்து தந்துதவும் மரத்தினின்று மருந்து எடுக்கும்போது அது பட்டுப்போகும் படி முழுவதும் கொள்ளார் எனக் குறிப்பிடுவதன் மூலம் மருந்தின் முக்கியதுவத்தையும், மருத்துக்கான தாவரங்களின் முக்கியத்துவத்தையும் உணரமுடிகிறது.

மருத்துவம் என்பது மக்கள் வாழ்வோடும், வளத்தோடும் இணைத்துக் காணப்பட்டதால் அத்தொழில் செய்யும் மருத்துவர்களைப் பண்டைக்காலந்தொட்டு இன்றுவரைக்கும் சமுதாயம் மதிப்புடனே ஏற்றுக்கொண்டது எனலாம். இச்சான்றோர்களை அறவோன் என்றும், வைத்தியன் என்றும், மருத்துவன் என்றும் குறி;ப்பிடுகின்றனர். இக்கருத்துகள் நற்றிணை, கலித்தொகைப் பாடல்களில் காணப்படுகின்றன. மக்கள் பெற்ற பிணியைப்போக்க உரிய முறையில் ஆராய்ந்து மருந்தளித்தமையால் அறவோன் எனப்பெயர் பெற்றனர். “அருந்துயர் அவலம் தீர்க்கும் மருந்து” (நற்றிணை – பா.140). என்னும் நற்றிணைப்பாடலின் வாயிலாக உயிர் காப்பது மருந்து அறிய முடிகின்றது.

<u>நோய்கள் குறித்த செய்திகள்</u>

தமிழர்கள் நோய் என்பதை இரண்டு நிலைகளில் பகுத்து அதற்கேற்றார்போல் மருந்து உண்டு நல வாழ்வைப் பேணியுள்ளனர். ஒன்று: மன நோய் இரண்டு: புண் ஆகும். நோய் உடல் மற்றும் உள்ளம் இரண்டையும் சார்ந்து பாதிப்பிற்கு உள்ளாக்குவதே என கண்டறிந்துள்ளனர். தொல்காப்பியர் “பையுளும் சிறுமையும் நோயின் பொருள்” என்று குறிப்பிடும் தொல்காப்பியர்,

நோய் என்பது முதலில் உள்ளத்தையும் உடலையும் பாதிக்கும் என்றும், இத்தகைய பாதிப்பைத்தான் பையுள் என்றும் சிறுமை என்றும் சுட்டி இதனை புத்திதடுமாற்றம் என்று குறிப்பிடுகின்றார். மேலும் உடல்பிணி பற்றி நற்றிணை 136வது பாடலும், கலித்தொகை நெய்தற்கலியின் 22வது பாடலும் மனநோய் பற்றிக் குறிப்பிடுகிறது.

சிறுபஞ்சமூலம் என்பது சிறுமை + பஞ்சம் + மூலம். பஞ்சம் என்றால் ஐந்து@ மூலம் என்றால் ஐந்து வேர்களால் ஆன ஒரு மருந்திற்குப் பஞ்சமூலம் என்பது பெயர். சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், சிறுவழுதுணைவேர், கண்டங்கத்திரிவேர், நெருஞ்சில்வேர் இவற்றால் ஆன மருந்து உடல் நோயைப்போக்கும்;. அதுபோல இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடல்களிலும் கூறப்படும் ஐந்து ஐந்து கருத்துகள் படிப்பவர் உள்ளத்தில் உள்ள அறியாமையைப் போக்கும் என்பது உவமையாகக் கூறப்பட்டுள்ளது. சிறுபஞ்சமூலத்தில் தலைவலி, பைத்தியம், காசநோய், மூலம் போன்ற பிணிகளை பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன. சிறுபாணாற்றுப்படை “சிக்கர் சிதடர் சிதலை போல வாயுடையார்”(சிறுபாணாற்றுப்படை, பாடல் -74) என்னும் பாடல் வரி வாய்ப்புண் பற்றிக் குறிப்பிடுகிறது.

ஏலாதி ஏலம் + ஆதி ஏலம் முதலான பொருள்;களால் ஆகிய மருந்து என்பது இந்தொடரின் பொருள். ஏலம், இலவங்கப்பட்டை, நாகசேகரம், சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் ஆறு பொருள்களால் ஆகிய மருந்து உடல் நோயை போக்கும் அதுபோல இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலிலும் கூறப்படும் ஆறு கருத்துகள் கற்பவர் உள்ளத்தில் அறியாமையைப் போக்கும் என்பதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. ஏலாதி பாடல் ஒன்றில் கருஞ்சிரங்கு, சிறுநீரகக்கல் வலி, கழலைக்கட்;டி வாதம் போன்ற பிணிகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உடன்படான் கொல்லானுடன்றார் நோய் தீர்ந்து
மடம்படான் மாண்டார்நூன் மாண்ட - இடம்பட
நோக்கும்வாய் நோக்கி நுழைவானேன் மற்றவனை
யாக்குமவர் யாக்கு மணைந்து(ஏலாதி-8)

பிறர் கொலை செய்தற்கு உடன்படாமல் தானும் ஓருயிரைக் கொல்லாமல், பிணிபட்டு வருந்துகின்றவர்களின் நோயை, மருந்து முதலியன உதவி நீக்கி அறியாமையில் மயங்கானாய் செயல்படுதல்.

பிணிபிறப்பு மூப்பொடு சாக்காடு துன்பம்

தணிவி னிரப்பிவை தாழா -அணியின்

அரங்கின்மே லாடுநர்போ லாகாம னன்றாம்

நிரம்புமேல் வீட்டு நெறி (ஏலாதி-24)

கருஞ்சிரங்கு வெண்டொழுநோய் கல்வழி சயம் (ஏலாதி-56)

சங்க இலக்கியங்கள் பலவகையான உடலில் பட்ட புண்களை பற்றி குறிப்பிடுகின்றது. நற்றிணைப்பாடல் "இரும்பான் ஒக்கல் தலைவன் பெரும்புண்(300) என்று இரத்தம் வடிந்துகொண்டிருக்கும் புண் பற்றியும், புறநானூறு மிடற்றுப்புண் பற்றியும், கலித்தொகை நெய்தற்கலி பாடல்(20) தீப்புண் பற்றியும், பதிவுசெய்துள்ளது. மேலும் கலித்தொகை குறிஞ்சிக்கலி 29வது பாடலில் தொழுநோயால் கைவிரல்கள், கால்விரல்கள் கருகி குறைந்துள்ளமையைச் சுட்டுகிறது. இதன் மூலம் சங்ககாலச் மருத்துவர்கள் உடலில் ஏற்படும் புண்களைப் பற்றியும், அதற்கான மருத்துவ முறைகளைப் பற்றியும் ஆழ்ந்த அறிவு கொண்டிருந்தனர் என்பதையும் அறியமுடிகிறது.

அறுவை மருத்துவம்

தமிழர்கள் போர்க்கருவிகளாக வாள், வேல், ஈட்டி போன்ற இரும்பாலான ஆயுதங்களைக் கொண்டிருந்த பழக்கத்தால் போரில் ஏற்பட்ட ரணங்களையும்(புண்) எலும்பு முறிவுகளையும் அறுவைச் சிகிச்சையின் மூலம் மருத்துவம் செய்துள்ளனர் என அறியமுடிகிறது.

இரும்புச் சுவை கொண்ட விழுப்புண் நோய்த் தீர்த்து

மருந்துகொல் மரத்தின் வாள்மடு மயங்கி(புறநானூறு-180)

உடம்பில் பட்ட புண்களை ஊசி கொண்டு தைத்துக் குணப்படுத்தும் முறையும் இருந்தது. ஒரு வீரனது மார்பின் புண்ணை ஆற்றுவதற்குத் தைத்த தழும்பைப் பதிற்றுப்;பத்துப் பாடலில் குறிப்பிடுகிறது.

……..முன்நாள்

கூறி வந்த மாமுது வேந்தர்க்கு

……..

…….. உழக்கிக் குருதி ஓட்டி

கதுவாய் போகிய துதிவாய் எஃகமொடு

பஞ்சியும் களையாப் புண்ணர்

அஞ்சுதகவு உடையர் இவள் தன்னை மாரே (புறநானூறு- 353,10-17)

இதற்கு முன்நாட்களில் மகட்கொடை வேண்டி வந்த பெரிய முதிய வேந்தர்க்கு…….. மிதித்து, குருதியை ஆறாக ஓடச்செய்து, வாய்மடித்து வடுப்பட்ட கூரிய வாயை உடைய வேலுடனே, நெய்த்துணி நீக்கப் பெறாத புண்ணை உடையராய் அஞ்சத்தக்க தகுதிப் பாட்டினை உடையராய் நிற்போர், இவளுடைய தமையன்மார். மேற்குறித்த கூற்றில் அறுவை மருத்துவம் பழைய காலத்தில் இருந்திருக்கின்றது என்றும். அடிக்கடிப்போர் நடந்ததால் புண்பட்டோருக்கு அறுவை மருத்துவம் நடந்திருக்கிறது என்றும், புண்பட்ட பகுதியில் மருந்திட்டுப் பஞ்சு போட்டு கட்டும் வழக்கம் இருந்திருக்கின்றது எனறும் அறியலாம்.

போர் நடைபெறும் காலங்களில் மார்பில் ஏற்பட்ட விழுப்புண்ணை ஊசிகொண்டு தைத்துள்ளனர் என்ற குறிப்பும் காணப்படுகிறது. இரத்தத்தின் உள்ளாக ஊசியை நுழைத்து வாங்குதலை மீன்கொத்தி நீரில் மூழ்கி எழுதலுக்கு ஒப்புக் கூறுகிறார்.

இரும்பனம் புடையில் ஈகை வான்கழல்

மீன் தேர் கொட்பின் பனிக்காயம் மூழ்கிச்

சிரல் பெயர்ந்தனன் நெடுவாள் ஊhசி

நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின் (பதிற்று- 42:1-4)

அறுவை வைத்தியம் இருந்ததைக் குறிப்பிடுகிறது. நின் படை வீரர் இரையின் பொருட்டு மீனை ஆராயும் சுழற்சியால் குளிர்ச்சியை உடைய குளத்தில் மூழ்கி மீன் கொத்திப் பறவை மேலே எழுந்தாற் போன்று நெடிய வெள்ளிய ஊசியானது நீண்ட கூர்மை தைத்ததனால் பரவிய தழும்பு மார்பினையும் உடைய செங்குட்டுவனே! என்று பரணர் குறிப்பிடுகின்றார். மேற்கண்ட கூற்றில் பண்டைய மருத்துவர்கள் வெட்டுப் புண்களை ஊசிகொண்டு தைத்துள்ளனர் என அறியமுடிகிறது.

<u>முடிவுரை</u>

மனித சமூகத்தில் ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து, நோய்களைத் தீர்ப்பதற்கான மருத்துவ முறைகளைப் பார்க்கும்பொழுது நோயும் மருத்துவமும் மனித இனப் பண்பாட்டு வரலாற்றில் பிரிக்க முடியாது.

பண்டைய மருத்துவர்கள் நோய்க்கு மருந்து மட்டும் தரவில்லை. மேலாக உள, உடல்நோய்க்கு மருந்து கொடுப்பவர்களாகவே இருந்துள்ளனர் என அறியமுடிகிறது.

தொல்காப்பியர் கசப்பான மூலிகைகளான வேம்பும், கடுவும் முதலில் வெறுக்கப்பட்டாலும் முடிவில் நலம் பயப்பதால் பெரிதும் விரும்பப்படும் என்பர்.

மருத்துவம் என்பது மக்கள் வாழ்வோடும், வளத்தோடும் இணைத்துக் காணப்பட்டதால் அத்தொழில் செய்யும் மருத்துவர்களைப் பண்டைக்காலந்தொட்டு இன்றுவரைக்கும் சமுதாயம் மதிப்புடனே ஏற்றுக்கொண்டது எனலாம். இச்சான்றோர்களை அறவோன் என்றும், வைத்தியன் என்றும், மருத்துவன் என்றும் குறி;ப்பிடுகின்றனர்.

தமிழர்கள் நோய் என்பதை இரண்டு நிலைகளில் பகுத்து அதற்கேற்றார்போல் மருந்து உண்டு நல வாழ்வைப் பேணியுள்ளனர். ஒன்று: மன நோய் இரண்டு: புண் ஆகும். நோய் உடல் மற்றும் உள்ளம் இரண்டையும் சார்ந்து பாதிப்பிற்கு உள்ளாக்குவதே நோய் என கண்டறிந்துள்ளனர்.;; தொல்காப்பியர், நோய் என்பது முதலில் உள்ளத்தையும் உடலையும் பாதிப்பதைப் புத்திதடுமாற்றம் என்று குறிப்பிடுகின்றார்.

சங்க இலக்கியங்கள் பலவகையான உடலில் பட்ட புண்களை பற்றி குறிப்பிடுகின்றது. சங்ககால மருத்துவர்கள் உடல் ஏற்படும் புண்களைப் பற்றியும், அதற்கான மருத்துவ முறைகளையும் பற்றி ஆழ்ந்த அறிவு கொண்டிருந்தனர் என்பதையும் அறியமுடிகிறது.

தமிழர்கள் போர்க்கருவிகளாக வாள், வேல், ஈட்டி போன்ற இரும்பாலான ஆயுதங்களைக் கொண்டிருந்த பழக்கத்தால் போரில் ஏற்பட்ட ரணங்களையும்(புண்) எலும்பு முறிவுகளையும் அறுவைச் சிகிச்சையின் மூலம் மருத்துவம் செய்துள்ளனர் என அறியமுடிகிறது.

செம்மொழித் தமிழைக் காப்பது மாணவர்கள் கடமை
தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் உரையின் சுருக்கம்

இன்று (10.2.18) செம்மொழிப் பயிலரங்கின் நிறைவு விழா திருவாடனை அரசு கலை மறறும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. ஆங்கிலேய ஆட்சிகாலத்தில் மாநிலங்களுக்கு உரிய மொழிகளைப் பாட மொழியாக அமைக்கலாமா என்ற விவாதம் நடைபெற்றது. பரிதிமால்கலைஞர், பூரணலிங்கம் பிள்ளை ஆகிய அறிஞர்களைக் கொண்ட குழுவிடம் இவ்விவாதம் வைக்கப்பெற்றது. இக்குழு தமிழைத் தமிழ்நாட்டில் பாடமொழியாக ஆக்கலாம் என்று அறிவித்தது. அவ்வகையில் தமிழ் பாடமொழியாக ஆக்கப்பெற்றது. அதனைத்தொடர்ந்து

அது செம்மொழித் தகுதி பெறுகிறது. இந்தச் செம்மொழித் தகுதியை மாணவர்கள் மட்டுமே பேணிப் பாதுகாக்கமுடியும் என்று தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தெரிவித்தார்.

திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பிப். 1 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் சார்பில் செம்மொழி இலக்கியங்களில் பல்துறை அறிவியல் சிந்தனைகள் என்ற தலைப்பில் மாணவ மாணவியருக்கான பயிலரங்கம் நடைபெற்றுவருகிறது. இதன் நிறைவு விழா கல்லூரி முதல்வர் முனைவர் மொ.கி. ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பயிலரங்கில் கலந்து கொண்ட மாணவ மாணவியருக்குச் சான்றிதழை வழங்கி உரையாற்றினார் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்.

காந்தியடிகள் தமிழைக் கற்றவர். காந்தியடிகளுக்கு மிகவும் பிடித்த் குறள் கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக என்பதுதான். காந்திக்குத்தமிழ் சொல்லித்தந்தவர் தில்லையாடி வள்ளியம்மை ஆவார். அவரால் காந்திக்குத் தமிழ் மீதுப் பற்று வந்தது. தமிழ் மகாத்மாவைக் கற்கத் தூண்டிய மொழி. அது நம் தாய் மொழி. நம்தாய்மொழியை நாம் தான் வளர்க்க முடியும். தீபாவளி,பொங்கல் அன்று புத்தாடை அணிய ஆசைப்படும் இளையோர்கள் கலைமகள் விழா அன்று புத்தகங்களை வாங்க ஆசைப்பட வேண்டும். மார்ட்டின் லூதர் கிங் சொல்வது ஒன்றுதான். யாராலும் செய்ய முடியாத செய்ய இயலாத ஒன்றைச் செய்தால் மட்டுமே வரலாற்றில் இடம் பிடிக்க முடியும். அதனைச் செய்ய முயலுங்கள். செம்மொழித்தமிழுக்கும் ஆக்கம் செய்யுங்கள் என்று குறிப்பிட்டார் குன்றக்குடி அடிகளார்.